




கோமோரா

கொமோரா

லஷ்மி சரவணகுமார்

Gomorrah – A Novel in Tamil by
Lakshmi Saravanakumar

Copyright © 2020 by Lakshmi Saravanakumar

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, including photocopying, recording, or other electronic or mechanical methods, without the prior written permission of the author, except in the case of brief quotations embodied in critical reviews and certain other noncommercial uses permitted by copyright law.

Email: lachudreams@gmail.com

கார்கி என்னும் தேவதைக்கு.

ஆல்ஃபெர் காம்யூ, ஹெர்மன் ஹெஸ்ஸே, ரூமி.

இயக்குனர்.ஷங்கர், இயக்குனர்.வசந்தபாலன், கோணங்கி, பாலசுப்ரமணியம் பொன்ராஜ், சாரு நிவேதிதா, தமிழச்சி தங்கப்பாண்டியன், மனோ.மோகன் & சசி, கலாப்ரியா, நஞ்சில் நாடன், நா.முருகேச பாண்டியன், குமரேசன்.

முகமது இம்தாத், ஷாஜகான், அனார், லஃபிஸ்.

கொந்தளிப்பான நேரங்களில் ஆற்றுப்படுத்தும் அனார் & ஸ்ரீ நேசன் இருவரின் கவிதைகளுக்கும். யானியின் இசைக்கும்.

Books

'Survival in the killing fields' by haing ngor & voices from s21 by david.p.chandler.

லஷ்மி சரவணகுமார் (34) மதுரை திருமங்கலத்தைச் சேர்ந்தவர். பத்து வருடங்களாக சென்னை வாசி. சிறுகதைகள், நாவல், கவிதைகள் என வெவ்வேறு தளங்களில் தொடர்ந்து இயங்கி வருபவர். சாகித்ய அகதெமியின் 'யுவபுரஸ்கார் விருது, சிறந்த நாவலுக்கான சுஜாதா விருது, இலக்கிய சிந்தனை, நற்றிணை பதிப்பகத்தின் பா.சிங்காரம் விருது, ஆனந்த விகடன் விருது என ஏராளமான விருதுகள் இவரது வெவ்வேறு படைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஊர் சுற்றுவதை பிரதானமான வேலையாகக் கொண்ட இவர் சில திரைப்படங்களின் திரைக்கதை உருவாக்கத்தில் வேலை செய்திருக்கிறார். இவர் இயக்கிய மயானத் தங்கம் என்னும் குறும்படம் நைரோபியில் நடந்த திரைப்பட விழாவிலும், லண்டன் திரைப்பட விழாவிலும் சிறப்பான கவனம் பெற்றது. தனது முதல் படம் இயக்கு

வதற்கான வேலைகளில் இருக்கும் இவரின் நான்காவது நாவல் இது.

பிற நூல்கள்.

சிறுகதைகள்

நீலநதி , யாக்கை , வசுந்தரா என்னும் நீலவர்ணப் பறவை

மச்சம், மயான காண்டம், மஹ்ராஜின் மைதானம்

யானை.

கவிதை

மோக்லியை தொலைத்த சிறுத்தை

நாவல்

உப்பு நாய்கள்

கானகன்

நீலப்படம்

ரூஹ்

அ-புனைவு

தை எழுச்சி – சில சாட்சியங்கள் (மெரினா போராட்டம் குறித்த வெவ்வேறு ஆளுமைகளின் கட்டுரை தொகுப்பு.)

நிச்சயமின்மைகளுக்கு அப்பாலும் ஜீவித்திருக்கும் சொற்கள்.

"மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வருகிற ஒரு மனிதனுக்கு கதைகள் எழுத மன அமைதி எப்படி கிடைக்கும்? அதிருஷ்டவசமாக கலை தாரளமாகவும் கருணையோடும் இருக்கிறது. பிரச்சனைகளற்ற சந்தோசங்களை மட்டும் கலை ஆகர்ஷிப்பதில்லை, துன்பத்தில் உழல்பவர்களை அது நிராகரித்து ஒதுக்குவதுமில்லை. அவரவர் நெஞ்சிற்குள் பொங்கும் உணர்வுகளை அவர்களுக்கே உரித்தானதொரு தனிமுறையில் வெளிப்படுத்திக் கொள்ள கலை அனுமதிக்கிறது."

- தனது நோபல் பரிசு ஏற்புரையில் 'நாகிப் மாஃபஸ்.

கதைகளை கேட்பதைப் போல் வாசிப்பதைப் போல் எழுதுவதும் மகத் தான ஆறுதலைத் தருவதால்தான் எழுத்தின் மீதான வசீகரமும் மயக்கமும் குறையாமல் இருக்கிறது. 'கதை சொல் அல்லது செத்து மடி' என அரேபிய இரவுகளில் வேதாளம் கேட் பதுபோல் யாரேனும் நம் தலையை உலுக் கிக் கொண்டே இருந்தால் அதை ஆசிர்வாத மென்பேன். கதைகள் ஒரு சமூகத்தின் அக வுலகிற்குள் நுழைந்து பார்க்க உதவும் கத வுகள். அதனால்தான் வாழ்வின் மூலம் நாம் கண்டடையும் உண்மைகளை விடவும் எழுத் தின் வழி கண்டடையும் உண்மைகள் காலம் கடந்து நிற்கின்றன. இங்கே எல்லாம் சரி யாய் இருக்கிறதென்கிற மாயைகளை, அன் பின் வழியாகத்தான் உலகம் இயங்குகிறதென் கிற பொய் நம்பிக்கைகளை உடைத்து துரோகமும், சூதும் தான் மனித பரிணாம வளர்ச்சியின் ஆதாரம் என்பதை ஜப்பானின் ஆதி காவியமான கெஞ்சிக் கதை துவங்கி இலியட், மஹாபாரதமென எல்லா பெருங் காவியங்களும் குறுங்காவியங்களும் வலியுறுத் துகின்றன. நமக்குள்ளிருக்கும் சக மனிதர் களின் மீதான வெறுப்பை வெளிப்படையாக பகிர்ந்துகொள்வதில் இருக்கும் தயக்கம் தான்

காலம் முழுக்க வெறுப்பை சுமந்து கொண்டு அலைய காரணமாகிவிடுகிறது. அன்பைப் போலவே வெறுப்பையும் வெளிப்படுத்திதான் ஆக வேண்டும், அதன் பொருட்டு நாம் எத் தனை இழிவானவர்களாய்ப் பார்க்கப்பட்டா லும்.

எல்லோரையும் நேசிக்கச் சொல்லித் தான் கற்றுக் கொடுக்கிறார்கள். நம்மால் அப்படி இருக்க முடிவதில்லை என்பதுதான் வெறுப்பின் தனித்துவம். வெறுப்பின் சுவை யைக் கதையாகச் சொல்ல வேண்டுமென உள்ளூர நீண்டகாலமாய் முயற்சித்ததுண்டு. முன்பு சில கதைகளில் கையாண்டபோது அது முழுமையைக் கொடுத்திருக்கவில்லை. அந்த வெறுப்பு மனதின் ஆழத்திலிருந்து எழுதப்பட்டதாய் இல்லாமல் மேலோட்டமாக இருந்ததால் முழுமையாக ஒரு நாவலை எழு தும் எண்ணம் வந்தது. இரண்டு வருடங் களுக்கு முன்பு நண்பர் செந்திலுடன் திருவ ணந்தபுரத்திலிருந்து கண்ணூர் வரையிலான நீண்ட சாலைப் பயணத்தில் இந்த கதைக் கான முழு வடிவமும் சற்றேறக்குறைய தயா ராகி இருந்தது. ஆனால் உடனடியாக எழுது வதற்கு தயக்கம். அன்பின் கதையை வாசித்து கண்ணீர் மல்க நாள் தவறாமல் தன் ஆதர்ஷ எழுத்தாளர்களுக்கு கடிதம் எழுதி, அது மட் டுமே இலக்கியமென கிலேசமடையும் ஒரு

சமூகம் வெறுப்பை எழுதுகிறவனை என்ன வாய்ப் பார்க்கும்? இதற்குப் பின்னாலிருக் கும் நியாயங்களுக்கு அவர்கள் உடன்படுவார் களா? இப்படி ஏராளமான குழப்பங்கள். அரு வருப்பும் வெறுப்பும் நீங்கள் நம்பும் அன்பைப் போலவே அசாத்தியமான நிஜம், தவிர்க்க முடியாத சுவை என்பதை உரக்க சொல்லவே னும் இதை எழுத வேண்டுமென்கிற உறுதி யோடுதான் துவங்கினேன்.

ஒவ்வொரு நாவலும் வாசிக்கிறவர்க ளுக்கு கற்றுத்தருவதைவிட எழுதுகிறவர்க ளுக்கு கற்றுத்தருவது ஏராளம். இந்த நாவல் அனேகம் கற்றுக் கொடுத்ததோடல்லாமல் மனதளவிலும் சில மாற்றங்களைத் தந்தி ருக்கிறது. உள்ளிருந்த வெறுப்பை எல்லாம் கொட்டித் தீர்த்தபின் இப்பொழுது மனம் இல குவாகியிருக்கிறது. கொமோரா வெறுப்பைத் தான் பேசுகிறது. உங்களுக்கு உடன்பாடில் லாமல் போகலாம், நீங்கள் இதை வெறுக்க லாம். ஆனால் இந்த உண்மைகளை நீங்கள் ஒவ்வொரு நாளும் கடந்து போய்க் கொண்டி ருக்கிறீர்கள் என்பதை மட்டும் புரிந்து கொண் டால் போதும்.

சிக்கலான கடந்த காலங்களில் இருந்து இலக்கியம் எத்தனை லாவக மாய் காப்பாற்றி வந்திருக்கிறதெனப் புரிந்து கொண்டு வாசிக்கக் கற்றுக் கொடுத்த எல்

லோரையும் இந்த நேரத்தில் நன்றியோடு நினைத்துப் பார்த்துக் கொள்கிறேன். நண்பர்கள், பகைவர்கள், உறவினர் எல்லாமே இலக்கியம் சார்ந்தவர்களாக மட்டுமே மாறிப் போன சூழலில் தப்பித்துச் செல்ல விரும்பினாலும் இந்த பிணைப்பு விடுவதில்லை. ஒரு புதிய கதையை எழுதச் சொல்லி நண்பர்கள் கேட்கிற நேரங்களில் எல்லாம் தயக்கத்திற்குப் பதிலாக உற்சாகம் வந்துவிடுகிறது. எத்தனை வேலைகள் இருந்தாலும் தவிர்த்துவிட்டு மீண்டும் மீண்டும் எழுத்தின் பக்கமாய் ஓடிவந்துவிடுவது என்னளவில் எனக்கு ஆரோக்கியமான விளையாட்டு. இந்த நாவல் எழுதின காலகட்டங்களில் பயணங்கள் வழியாய் அறிமுகமான ஏராளமான நண்பர்களுக்கு எனது அன்பு. இந்த நாவல் பயணங்களாலும், பயணங்களில் சந்தித்த மனிதர்களாலும் மட்டுமே முழுமையடைந்தது. பயணங்களின் போது பொருளாதார ரீதியிலும், உபசரித்தும் உதவிய அத்தனை நண்பர்களுக்கும் நன்றி. உப்புநாய்கள் நாவல் எழுதும் போது எழுத்தாளர் சோபா சக்தி தான் கொமோரா என்ற தலைப்பை முதலி பரிந்துரைத்தார், அப்போது அந்த நாவலுக்கு அது பொருந்தாமல் போனதால் வைக்க முடியவில்லை. கதை வந்த போதே தலைப்பையும் உடனடியாக முடிவு செய்துவிட்டேன். அந்த வகையில் அவருக்கு நன்றி. என் வேலை சார்ந்து, தனிப்

பட்ட வாழ்க்கை சார்ந்து எப்போதும் அக் கறை கொண்டிருக்கும் நண்பர்களுக்கு அன் பும் முத்தங்களும். மற்றபடி இந்தக் கதையைத் தவிர இப்போதைக்கு உங்களுக்குச் சொல்ல என்னிடம் எதுவுமில்லை.

லஷ்மி சரவணகுமார்.

சென்னை.

ஊதாப் பூக்கள்

நீலப்புத்தகம்.

“அநித்தம், துக்கம், அநான்மை, அசுசிஎனத்

தனித்துப் பார்த்துப் பற்றறுத்திடுதல்...”

- மணிமேகலை.

”துக்கம் உளது, துக்கிப்பவன் இல்லை;

செயல் உளது, செய்பவன் இல்லை;

நிருவாணம் உளது, நிருவாணமடைபவன் இல்லை;

மார்க்கம் உளது, அதில் சொல்வோன் இல்லை.”

- புத்தர்.

1.புதிய ஏற்பாடு.

ஊர்ச்சாமிகள் பலி கேட்டு ஆயிரம் நாவு களோடு சொரக்காபட்டியின் ஆகாயமெங்கும் அலைந்து கொண்டிருக்கின்றன. திருவிழாவின் ரத்த வாடைக்கும் கோடாங்கியின் உடுக்கை சத் தத்திற்கும் நரம்புகள் முறுக்கேறி அங்கிருந்த ஆட் களும் சாமியோடு சேர்ந்து ஆடினர். கோவிலை ஒட்டியிருந்த வேப்ப மரத்தில் காப்பு கட்டியிருந் தவர்கள் பிரார்த்தனை முடிந்து தங்களின் மஞ் சள் காப்பை அவிழ்த்து கட்டிவிட்டனர். நல் லது கெட்டதுகளை சாமி பார்த்துக் கொள்ளும் என்னும் அந்த எளிய மனிதர்களின் நம்பிக் கைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் பாறைச்சாமி சலிக்காமல் செவி சாய்த்தது. உடலின் இன் னொரு அங்கமென குளிர் சேரத் துவங்கிய போது நேர்த்திக்கடனாக விடப்பட்ட அத்தனை ஆட்டுக் கெடாய்களையும் கோவில் காரியகாரர்கள் தேடிப் பிடித்து கொண்டு வந்திருந்தார்கள். பூசைக்குத் தயாராகிக் கொண்டிருந்த கோவிலில் வரிசை யாக மஞ்சள் தண்ணீர் தெளித்து நிறுத்தப்பட்டி ருந்த ஆடுகளின் குரலில் பலியாகக் காத்திருப்ப தின் மிரட்சி. சொரக்காபட்டி பஞ்சாயத்துக்காரரின் ஆடு முதல் பலிக்காக கொண்டு வந்து நிறுத்

தப்பட்டது. அவ்வளவு நேரமும் இயல்பாக பூசை வேலைகளை செய்து கொண்டிருந்த பூசாரியின் உடலில் கரும்பாறை முத்தையா இறங்க, கூந்தல் அவிழ்ந்து முரட்டுக் குரலில் அலறத்துவங்கினார். மைக் செட்டில் ஓடிக் கொண்டிருந்த பாடல்கள் நிறுத்தப்பட்டதும், அந்தப் பெருங்கூட்டத்தின் மத்தியில் வழிபாட்டிற்கான அதிர்வுகள் பரவத் துவங்கியபோது, காற்றின் பேரோசைக்கு இசைந்து ஆடிக் கொண்டிருந்த மரங்கள் கூட மூச்சடங்கி நிசப்தமாகின. முத்தையா சாமிக்கு சிலையோ, கூரையோ, சின்னதொரு பூடமோ கூட இல்லை. ஒரேயொரு பாறை. அதை ஒட்டி நான்கடிக்கு அப்பால் புதிதாக போடப்பட்டிருக்கும் ஒரு மின்விளக்கு. பூசைக்காக வேண்டி கதம்ப மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த பாறைக்கு முன்னால் பூ,பழம்,தேங்காயென சகல சாமான்களும் பரவிக் கிடக்க, கடும் தாகத்திலிருக்கும் அவர் அருந்த குருதி வேண்டுமென்பதால் முதல் ஆட்டை வெட்டுவதற்காக விபூதி குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்ட நீண்ட அருவாளைக் கொண்டு வந்தார்கள். பூசாரி கைகளாலேயே ஆட்டின் கழுத்தைத் திருகி, குருதி குடிக்கும் மூர்க்கத்திலிருந்தார். கூட்டத்தினர் ஸதம்பித்துப் போய் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஆட்டின் கழுத்து நறுச்சென வெட்டப்பட்டு குருதி பாறைக்கு முன்பும் பூசை சாமான்களின் மீதும் கூடவே பாறையின் மீதும் தெறித்தது. எல்லோரும் 'முத்தையா எங்க பூமிக்கும், மனுஷ மக்க எல்லாத்துக்கும் நீதான் காவலா இருந்து பாத்துக்கனும்' என சத்தம் வராமல் கையெடுத்துக் கும்பிட்டனர், தனக்கு எதிரிலிருந்த நூற்றுக்கணக்கான முரட்டு

மனிதர்களின் உருவங்களை கடைசி முறையாகப் பார்த்துக் கொண்டிருந்த கழுத்தறுபட்ட ஆட்டின் கண்களில் இன்னும் மிச்சமாய் சிறிது உயிர் இருந்தது. உடலில் இருந்து துண்டாக அறுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த அதன் கழுத்திலிருந்து குருதி உயிர்ச் சூட்டோடு நிதானமாய் கசிந்தபடி இருக்க, சுற்றி இருந்த ஆண்களில் சிலர் சாமி இறங்கி ஆடினர்.

அடுத்தடுத்து எழுபத்தைந்து ஆடுகள். உடலில் வேறெங்கும் எந்த நிறமும் கலப்பில்லாமல் தூய கறுப்பு நிறத்தில். நேர்த்திக்கடன் விடப்பட்டவை என்பதற்கு அடையாளமாக காதுகளில் பித்தளை வளையங்கள். தலை வெட்டப்பட்ட ஆட்டை சமைக்கும் முன்பு ஆட்டின் கொம்புகளையும் இந்த பித்தளை வளையங்களையும் தவிர்த்து எல்லாவற்றையும் சமைத்துவிடுவார்கள். நேர்ந்து விடப்பட்ட ஆட்டின் காதுகளிலிருந்த பித்தளை வளையத்தை வீட்டில் பாதுகாத்தால் நினைத்த காரியங்கள் கைகூடுமென்னும் நம்பிக்கை ஊர்க்காரர்களுக்கு. ஒவ்வொரு வருடமும் பூசையின் போது நேர்ந்துவிடப்படும் ஆடுகள் வருடம் முழுக்க சுற்றி இருக்கும் எந்த ஊர்களில் வேண்டுமானாலும் திரியும். கோவில் ஆடுகளென்பதால் யாரும் அவற்றைத் தொடுவதில்லை. எந்தத் தோட்டத்தில் வேண்டுமானாலும் மேயலாம், ஒருவரும் அதைத் துரத்துவதில்லை. சரியாக அடுத்த வருட பூசைக்கு முதல் நாள் ஊர்க்காரர்கள் எல்லா ஆடுகளையும் தேடிப்பிடித்து தூக்கி வந்துவிடுவார்கள். இத்தனை காலத்தில் ஒரு ஆடுகூட படையலில் இருந்து தப்பித்ததில்லை.

நேர்ந்துவிடப்பட்ட எழுபத்தைந்து ஆடுக ளும் அடுத்தடுத்து வெட்டப்பட்டு கொதித்துக் கொண்டிருந்த நிலத்தில் ஆடுகளின் குருதி வேக மாய் பொங்கி வழிந்தது. பிரார்த்தனை செய்து கொண்டிருந்த ஆண்களின் குலவைச் சத்தத்தில் ஆடுகள் அச்சம் குறையாமல் அதிர்ந்தன. தாகம் தணிந்த முத்தையா ஆடுகளின் கருணை மிக்க கண்கள் வழியாய் எல்லோரையும் ஆசிர்வதித்துக் கொண்டிருந்தார்.

கதிரின் ஆடு நன்கு மேய்ந்து பெருத் திருந்தது. வெட்டும் போது பெரிதாக அலற வில்லை. பலி கொடுக்கப்பட்டதை ஒரு கௌ ரவமாக எடுத்துக் கொண்ட நிறைவு அதன் இறப்பில். கதிரோடு வந்திருந்த பெரியவர் "நீ என்ன நேந்துக்கிட்டியோ அது நல்லபடியா நடக் குமப்பா, முத்தையா வழிவிடுவாரு." என சந்தோச மாகச் சொல்ல, நேர்ந்து கொண்டதை வெளியில் சொல்ல முடியாத உணர்வில் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். குரூரத்தின் நிழல் நிரம்பிய வாழ்வின் எல்லா வலிகளில் இருந்தும் தன்னை நிரந்தரமாக காக்கமுடியும் என்னும் நம்பிக்கையை கதிருக்குத் தந்தது கரும்பாறை முத்தையாதான். பால்யகாலத்திலிருந்து துரத்திக் கொண்டிருக்கும் துயரின் நிழலில் இருந்து இன்றுவரையிலும் அவன் மீண்டிருக்கவில்லை. ஒவ்வொரு காலகட்டத்தி லும் வெவ்வேறு நம்பிக்கைகளோடு வாழ்ந்திருக் கிறான், ஆனால் எதிலும் அவனுக்கு நிரந்தர மான தீர்வோ, விடுதலையையோ கிடைத்திருக்

கவில்லை. ஏமாற்றப்பட்ட மிருகமென தனக்கான விடுதலையைத் தேடி எங்கெங்கோ அலைந்தான். வன்மத்தின் பலனாய் விதைக்கப்படும் ரௌத்திரத்திலிருந்து மீள அமைதியாய் எல்லாவற்றையும் கடந்துபோகாமல் அதனினும் மேலான வன்மத்திற்கு பழகுதல் என்னும் வழியை வழிபாட்டில் கண்டுகொண்டான். மன்னிக்க தகுதியற்ற மனிதனை சகித்துக் கொண்டு வாழ்வது மாதிரியான மன அவஸ்தையில் புழுங்கிச் சாகத்தேவையில்லை என்னும் எண்ணமே அவனை முழுமையானவனாய் உணரச் செய்தது. சின்னஞ்சிறிய விதையாய் எப்போதோ அப்பாவின் மீது விழுந்த வன்மம், இந்த ஒரு வருடத்தில் குன்றென வளந்திருக்கிறது. சமூகத்தின் முன்பாக அந்த மனிதரை மன்னித்து அவரோடு இணங்கிப் போவதான உடன்படிக்கைக்கு வந்தாலும் அது தனக்குத்தானே பொய்யுரைப்பது போலத்தான் என்பது அவனுக்குத் தெரியும். பொய்யுரைத்தலின் துவக்கத்தை நாம் நம் ஆன்மாவிற்கு செய்யும் துரோகங்களில் இருந்து தான் பழகிக் கொள்கிறோம். வீழ்ச்சியின் இறுதி கனத்தில் நம்மிடம் மிஞ்சப் போவது பொய்களின் தீ நாக்குகள் வருடியதால் உண்டான ஆறாவடுக்கள் மட்டுமே. நாம் மறுக்கும் நமது நிஜம் சற்று அருவருப்பானதுதான், மோசமில்லை. அருவருப்பும் ஓர் உணர்ச்சி. பகையும், வன்மமும், அருவருப்புமாய் நிறைந்திருக்கும் மனிதன் பொருட்படுத்த தகுதியற்றவன் அல்ல. வலிந்து யோக்கியனாக்கி திரிக்கும் நமது சொற்களால் உடலின் ஒவ்வொரு

செல்லும் அந்த கனத்திலேயே அழுகத் துவங்கி விடுகிறன. இன்னும் கொஞ்சம் அயோக்கியனாய் இருந்திருக்கலாமோவென ஏங்கும் தருணத்தில் நம் கடந்த காலம் நம்மோடு இருப்பதுமில்லை நம் மிடம் திரும்பி வரப்போவதில்லை.

வெட்டப்பட்ட ஆடுகளை எல்லோருமாக சேர்ந்து உரிக்கத் துவங்கினார்கள். வளைந்து கூராக சின்னதொரு கறுப்பு வானவில் போலிருக் கும் தோலுரிக்கும் கத்தியின் கூர்மை ஆடுகளின் தோலுக்குள் புகுந்து சின்ன சத்தம் கூட இல்லாமல் உடலிலிருந்து தோலைப் பிரித்தெடுத்துக் கொண் டிருந்தது. கால்களை ஒட்டி உரிக்கும் போது மட்டும் சின்னதாய் துளைகளிட்டு முழுமையாய் உரிக்க ஏதுவாக்கினார்கள். அந்த வேலையைச் செய் யவே பழக்கப்படுத்தப்பட்ட கைகள் அவை. குருதி யின் சூட்டையும் நறுமணத்தையும் வேறு எல்லோ ரையும் விட தீவிரமாய் அறிந்து வைத்திருந்த அந்த மனிதர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் பாத்திரத்தில் உறையத் துவங்கியிருக்கும் ஆட்டுக்குருதியின் வாசனையில் லயித்திருந்தனர். மெயின் ரோட்டி லிருந்து ஊருக்கு வரும் வழியெங்கும் இருபுறங்க ளிலும் விளைந்த சோளக் கதிர். அறுவடைக்குத் தயாராகி இருந்த சோளக் காட்டிற்குள் திருவிழா சத்தம் கேட்டு மிரண்ட முயல்களும் கீரிகளும் சலசலப்போடு ஓடிக் கொண்டிருந்தன. ஆட்கள் வருவதும் போவதுமாய் இருந்ததால் சாலைகளின் இருபுறமும் ஆங்காங்கே ட்யூப் லைட்டுகளை கட் டியிருந்தார்கள். சிலர் மண்பானையில் பானக்கரம் வைத்து வழியில் வருகிறவர்களுக்குக் கொடுத் தார்கள். இரவு தாகத்தை பெருக்கியபடியே இருந்

தது. தினமும் மதுவருந்திப் பழக்கப்பட்ட மனிதர் களுக்கு இந்தத்திருவிழா நாட்களில் பானக்கரம் தான் ஆறுதல்.

ஊர் எல்லை வரைக்குமான கண்ணில் படும் தூரம் முழுக்க ஆண்கள் மட்டுமே, இந் தக் கோவிலும் இந்தத் திருவிழாவும் ஆண்களுக்கு மட்டுமேயானது. திருவிழா முடிகிற மூன்று நாட்க ளுக்கு ஊரில் யாரும் மதுவருந்தக் கூடாது என் னும் கட்டுப்பாடு இருப்பதால் இத்தனை வருடங் களில் ஒருமுறைகூட திருவிழாவில் எந்த அசம் பாவிதமோ சண்டைகளோ வந்ததில்லை. இறைச் சியின் காட்டமான மணம் வயல்வெளியெங்கும் நிறைந்தது. ஆட்டின் கொம்பையும் வாலையும் தவிர்த்து உடலின் எல்லா பாகத்தையும் தனித் தனியாகப் பிரித்து குழம்பு வைக்கத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு இரண்டு ஆட் டிற்கும் பத்து பேர் வீதமாக ஆட்கள் பிரிந்து வேலை செய்து கொண்டிருக்க, ஊர் காரியக்கா ரர்கள் அங்குமிங்குமாக அலைந்து மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்கள். ஓய்ந்திருந்த மைக்ச் செட்டின் சத்தம் மீண்டும் துவங்கிய போது "போற் றிப்பாடடி பொண்ணே." என எல்லா வருடமும் அவர்கள் வழக்கமாய் கேட்கும் ஒரு வரிசையில் பாடல்கள் தொடர்ந்தன. அடர்ந்த இருளில் கொதிக்கும் குழம்பின் மணமும் சாப்பாட்டின் மண மும் அந்தப் பகுதி முழுக்க நிறைந்தத். பெரிய சொரக்காப்பட்டியில் இருக்கும் மோகன் க்ரஷ ருக்கு லோட் ஏத்தச் செல்லும் லாரிகள் எல்லாம் வரிசையாய் வந்து நின்றன. விடிகாலை கறிச் சோற் றுக்கு ஆட்கள் பெருங்கூட்டமாய் சேர்ந்துவிட்டி

ருந்தார்கள். கொஞ்சம் சமையல் சாமான்களை எடுக்க பக்கத்து ஊருக்குச் சென்றிருந்த இரண்டு பேர் பதட்டத்தோடு திரும்பி வந்தார்கள். ஆட்டின் குருதி படர்ந்த புது வேஷ்டி மட்டும் அணிந்திருந்த ஊர்ப்பெரியவரிடம் "அப்புச்சி அங்க கம்மா மடைல..." என அவர்கள் காதில் கிசுகிசுக்க அவர் முகம் மாறியது. "ஒரு பத்து பேர கூட்டிட்டுப் போயி உடனே என்னன்னு பாருங்க." என அவர் காட்டமாக சொல்ல சமையல் வேலை செய்து கொண்டிருந்த இளவட்டங்கள் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு கிளம்பிச் சென்றனர்.

ஒரு முன் கதை.

சின்ன சொரிநாயக்கன்பட்டி, பெரிய சொரிநாயக்கன்பட்டி என்றிருந்த ஊர்கள் சொரக்காபட்டி ஆனது சமீபமாகத்தான். நூறு வருடங்களுக்கு முன்புவரை இந்த ஊரில் வாழ்ந்தது முழுக்க நாயக்கர் சமூகம் மட்டுமே. சோளமும், எள்ளும், ராகியும் சமயத்தில் பருத்தியும் விளைந்து கொண்டிருந்த வளமான ஊர். பசித்து வரும் யாரையும் வெறுமையாக திருப்பி அனுப்பி வழக்கமில்லாத அவ்வூருக்கு முதலில் எழுமலை பக்கமிருந்து கொஞ்சம் வேற்று ஆட்கள் பஞ்சம் பிழைக்க வந்தார்கள். வருடத்தின் எல்லா காலநிலைக்கும் ஏற்ற பயிர்கள் இயல்பாக ஊரைச் சுற்றி விளைந்தன. இப்பொழுதும் விளைகின்றன. வெயிலின் கடுமைக்கு இணங்கும் கரிசல் மண் ஒரு பக்

கமும் இன்னொரு பக்கம் வளமான செம்மண் ணும் இயற்கையிலேயே அமைந்திருந்தது வரம். பசித்த மனிதர்களுக்கு மனமுவந்து விளைவித்துக் கொடுத்த அந்த நிலத்திற்கு வரும் எல்லோருமே அதனோடு ஆழமாக ஒரு உறவாக பிணைந்து கொண்டார்கள். தொலைவில் விட்டுவந்து தங்க ளின் குலசாமிகளையும் கைவிடப்பட்ட அச்சாமிக ளின் ஓலங்களையும் கூட பொருட்படுத்தாத இந்த மனிதர்கள் இந்த மண்ணின் ஆதாரமான கரும் பாறை முத்தையாவை வணங்கத் துவங்கினார்கள். பின்பு செக்கானூரனியைச் சுற்றி இருந்த கிராமங்க ளில் சோறுக்குப் பஞ்சம் ஏற்படும் காலங்களில் கள் ளர் சமூகத்து ஆட்கள் இரவுகளில் களவெடுக்க இந்த ஊருக்குள் வந்து போக, வெளியாட்களின் இடப்பெயர்ச்சி ஊருக்குள் அதிகமானது. வெவ் வேறு சமூகங்கள் அந்த ஊருக்குள் பிழைக்க வந்த பிறகு அவ்வப்போது ஏற்பட்ட சண்டைகளில் பல காலமாக அங்கு வாழ்ந்து கொண்டிருந்த நாயக் கர் சமூகம் கொஞ்சம் கொஞ்சமாக இடம் பெய ரத் துவங்கினர். மிச்சமாயிருந்த சில குடும்பங்களை புதிதாக அங்கு வந்தவர்கள் துரத்தியடிக்க அதன் பிறகு ஊரும் சாமியும் இவர்களுக்கானதாய் ஆகிப் போனது.

ஊரை மறந்தாலும் சாமியை மறக்காத அந்த சமூகத்தினர் இரண்டு தலைமுறைக் காலம் முடிந்த பிறகும் கூட ஒவ்வொரு வருடமும் கரும் பாறை முத்தையாவின் திருவிழா நடக்கும் தினத் திற்கு தவறாமல் வந்துவிடுகிறார்கள். வெவ்வேறு ஊர்களில் இருந்து ஏராளமான மனிதர்கள் வரும் அந்தக் கோவிலுக்கு பல நூற்றாண்டு உரிமை

யானவர்கள் வர இயலாமல் ஊருக்கு வெளியில் இருக்கும் கண்மாய் மடையில் யாரும் பார்க்காதபடி பின்னிரவில் பூசை எல்லாம் செய்துவிட்டு பூசை சாமான்களை மட்டும் முத்தையாவின் மீதான தங் களின் அன்பாய் விட்டுச் செல்கிறார்கள்.

கன்மாய்க்கரை மடையில் பூசை சாமான் கள் மட்டுமே இப்போது இருந்தன. வாழைத் தோட்டங்கள் வழியாக செல்லம்பட்டி செல்லும் ஒற்றையடிப் பாதையில் அவர்கள் எப்போது போவ் யிட்டிருந்தார்கள். ஊர்க்காரர்கள் வந்து தடுக் கும் வரையிலான அவகாசமெதும் தராமல் அவர் கள் கிளம்பிவிட்டிருந்ததால் தடுப்பதற்காக சென்ற இளைஞர்கள் ஏமாற்றத்தோடு திரும்பி வந்தனர். விடிய விடிய சாமியாடியதில் களைத்துப் போன பூசாரி ஓய்ந்து போய் சாலையை ஒட்டின வேப் பமரத்தினடியில் உடல் வியர்க்க அமர்ந்திருந்தார். ஊர் ஆட்களோடு கதிரும் சேர்ந்து சமைத்துக் கொண்டிருந்தான். பொழுது புலரத் துவங்குவதற் கான அறிகுறியாய் வெளிச்சத்தின் மிக மெல் லிய கீற்று வானில் செந்நிறமாய் எழத்துவங்கிய போது சமைத்து முடித்த உணவை படையலுக்காக எடுத்து வைத்தார்கள். கோவிலை ஒட்டிப் போடப் பட்டிருந்த நீண்ட பந்தலுக்கடியில் பத்தாயிரத்துக் குப் பக்கமான ஆட்கள் அவ்வளவு பேரும் ஒரே பந்தியில் உட்கார, நூற்றுக்கணக்கான ஆட்கள் இரவு முழுக்க உழைத்த களைப்பையும் பொருட் படுத்தாமல் எல்லோருக்கும் பரிமாறத் தயாரா னார்கள். புதிய நாளுக்கான காற்றும் வெளிச்ச மும் சொரக்காபட்டியையும், கரும்பாறை முத்தை யாவை வணங்க வந்த அந்த பெரும் மக்கள்

கூட்டத்தையும் ஆசிர்வதித்த படி மெதுவாக படரத் துவங்கியது.

CHILDREN VILLAGE - 1

எல்லாம் இங்கிருந்து துவங்கியதுதான். வன்மம், ஏமாற்றம், பசியென எல்லாவற்றுக்கும் பால்யத்திலேயே பழக்கப்படுத்தின சூன்யப்பேழை அந்த விடுதி. இன்னொரு வயிற்றுக்குக் கூடுதலாக உணவைத் தேடுவதன் சிரமத்திலிருந்த கதிரின் அம்மா தனக்குத் தெரிந்தவர்களின் மூலமாய் இந்த விடுதியில் கொண்டு வந்து சேர்த்தாள். கதிர் அப்பாவை வெறுக்கத்துவங்கியதும் இங்கிருந்துதான். வீட்டிற்கு பொறுப்பாய் அந்த மனிதர் இருந்திருந்தால் இவன் சபிக்கப்பட்ட இந்த விடுதிக்கு வந்திருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது. சுற்றிலும் ஐந்தாறு கிலோமீட்டர்களுக்கு பரந்த பனங்காடு. இன்னொரு புறம் சவுக்கு மரங்களும் அடர்ந்த கருவேலங்காடுகளும் நிறைந்திருக்க, காட்டின் நடுவில் பதிமூன்று வீடுகள் தான் விடுதி. வீடற்ற குழந்தைகளின் தனிமை எத்தனை துயரமானதென்பதை இங்கு வருவதற்கு முன்பாக கதிர் அறிந்திருக்கவில்லை. உலகின் அத்தனை சந்தோசங்களையும் தன்னிடமிருந்து யாரோ பறித்துக் கொண்டதுபோல் மாறிப்போனான். ஒவ்வொரு

வீட்டிற்கும் பதினைந்து குழந்தைகள், ஒரு பெண் பொறுப்பாளர். பல காலத்திற்கு முன்பு கட்டப் பட்ட உயரமான கல்வீடுகள், ஓட்டுக்கூரை. நீண்ட தாழ்வாரத்தின் இடது புற அறை ஆண் குழந்தை களுக்கும் வலதுபுற அறை பெண் குழந்தைகளுக் குமாய் ஒதுக்கப்பட்டிருக்கும். வெகுதூரங்களில் இருக்கும் தங்கள் வீடுகளையும் உறவுகளையும் நினைத்து ஏங்கும் குழந்தைகள் அதைத் தவிர்த்து வேறு எல்லாவற்றைக் குறித்தும் சிந்திக்கவும் பேச வும் அனுமதிகப்பட்டிருந்தார்கள். நீண்ட பகல்க ளும் அதைவிட நீண்ட இரவுகளும் சூழ்ந்த அந்த தனி உலகத்தில் எல்லோருக்கும் பாதுகாவலனாய் இயேசு கிறிஸ்து இருந்தார். பிரார்த்தனைகளின் வழியாக மட்டுமே கர்த்தரைக் கண்டடைய முடி யுமென்று நம்பவைக்கப்பட்ட குழந்தைகள் ஒவ் வொரு வேளை உணவுக்கு முன்பாகவும் "இயேசு தேவனே, என் ஜீவனே, ஏழைப் பிள்ளைகள் எங் கள் வாழ்வை காத்திடுவாய். ஆமென்" என பிரார்த் தனை செய்யத் தவறுவதில்லை. கிடைத்தற்கரிய எல்லாமே அவர்களுக்கு கர்த்தரின் ஆசிர்வதிக் கப்பட்ட உணவுதான்.

கதிர் அங்கு வந்த நாளில் கோடை மழை பெய்தது. சாலையிலிருந்த முக்கியக் கதவிலிருந்து விடுதிக்குள் செல்லும் நீண்ட மண்சாலயின் இருபு றமும் அடர்ந்திருக்கும் வேப்ப மரங்கள் மழை நீரில் நனைந்ததில் அடர்த்தியான பச்சை வாசனையை பரப்பியிருந்தது. ஐந்தாவது வீட்டில் இவனுக்கு இடம் ஒதுக்கியிருந்தார்கள். "என் பாடே பெரும் பாடா இருக்கு சிஸ்டர். இவன வெச்சு எந்த வேலைக்கும் போக முடியல. இவன் பொறந்தப்போ

கூட இவங்கப்பன் வந்து எட்டிப் பாக்கல. ஒத்த ஆளா ராட்டக் கம்பெனி ல நூல் நூத்துக்கிட்டு பொழப்ப ஓட்டிக்கிட்டு இருக்கேன். இங்க இருந் தான்னா இவன் வயித்துக்காச்சும் பிரச்சன இல்லா மப் போகும். நீங்கதான் பாத்துக்கனும்." என ரோஸி ஆண்ட்டியின் கைகளில் இவனை ஒப்ப டைத்தபோது கதிர் அம்மாவை மட்டுமல்ல உல கையே வெறுத்தான். "தேவ்டியா மகனுகளா என் னய வீட்டுக்கு விடுங்கடா.. அடியேய் கறுத்த அவு சாரி முண்டா என்னய ஏண்டி பூட்டி வெச்சிருக்க வெளிய விட்றி. தேவுடியா..." என கதிர், அந்த சின்ன காலத்திற்குள் தான் பழகியிருந்த எல்லா கெட்ட வார்த்தைகளையும் அங்கிருந்தர்களை நோக்கி கத்திக் கொண்டிருந்தான். வளரத் துவங் கும் பூனையொன்று பசியில் கரையும் பாவனை அவன் அழுகுரலில். மண்ணில் விளையாடி அழுக் கான பிஞ்சுக்கரங்களால் வலுவான மரக்கதவு களை பலங்கொண்டு மட்டும் ஓங்கி ஓங்கி தட்டிப் பார்த்தான். அவனுக்கான எந்தப் பதில்களையும் தராமல் அமைதியாய் சாத்தப்பட்டிருந்த கதவிற்குப் பின்னால் அதைவிடவும் அமைதியாய் ரோஸி ஆண்ட்டி இவன் தானே சாமாதானம் ஆகிவிட காத்திருந்தாள். களைத்து அழுத முகத்தோடு ஓய்ந்து அவன் உறங்கியபோது படுக்கையில் தனது ட்ரவுசரிலேயே சிறுநீர் கழித்திருந்தான். மாலை பள்ளி முடிந்து திரும்பிய அந்த வீட்டின் மற்ற சிறுவர் கள் முதல் நாளிலேயே அவனுக்கு மூத்திரக்குண்டி எனப் பெயர் வைத்தார்கள். ரோஸி ஆண்ட்டிதான் அவனைக் குளிப்பாட்டி சுத்தம் செய்தாள். அன் றைய இரவு முதல் முறையாக சாப்பாட்டிற்கு முன்

பிரார்த்தனையில் உட்கார்ந்தபோது அவனைத்த விர எல்லோரும் பிரார்த்தனை செய்தார்கள். விட் டுச் சென்ற அம்மாவின் ஏக்கமும், வீட்டின் நினைவு களுமாய் ஏங்கிப்போய் சாப்பாட்டுத் தட்டைஇப் பார்த்துக் கொண்டிருந்த கதிருக்கு ரோஸி ஆண்ட்டி ஊட்டிவிட்டாள். மலிவுவிலை அரிசிச் சோறு. சூடு குறைந்துபோனால் இரண்டு வாய் கூட சாப்பிட முடியாத அந்த சாப்பாட்டை குழந்தைகள் ருசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். பகல் முழுக்க சாப்பிடாததின் பசியில் அவன் பெரிய பெரிய உருண்டைகளாக அவள் ஊட்டிவிடுவதை விழுங்கிக் கொண்டான். அவனுக்கென உறங்க கதவை ஒட்டி சின்னதாய் இடம் ஒதுக்கியிருந்தார் கள். வெறுமனே விரிக்கப்பட்ட பாயில் உட்கார்ந்தி ருந்தான். அம்மா வாங்கி தந்துவிட்டுப்போயிருந்த புதிய பாயின் நறுமணம் அறையெங்கும் நிரம்பியி ருந்தது வீட்டைச் சுற்றிலுமிருந்த வேப்பமரங்கள் பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்ததால் அச்சுறுத்து வதாய் இருந்தது காற்றின் சத்தம். உறங்காமல் எங் கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த வனை அழைத்து ரோஸி ஆண்ட்டி தன்னுடன் உறங்க வைத்தாள். உறக்கமே இல்லாமல் ஜன்னல் வழியாய் இருள் சூழ்ந்திருந்த அந்த நீண்ட காட் டைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த இரவை இரவென்று சொல்ல முடியாது, ஏனென்றால் அங்கே நட்சத்திரங்கள் இல்லை. நிலவு இல்லை. வானம் இல்லை. அவனே இரவாகியிருந்தான். இர வில் நடுமாடும் பூச்சிகளாகவும், மிருகங்களாகவும், பறவைகளாகவும் ஆகியிருந்தான். அந்த கொடுமை மிக்க நினைவுகளில் இருந்து அவனை

மீட்கும் விதமாய் ரோஸி ஆண்ட்டி தேவதைக் கதைகளை சொல்லத் துவங்கினாள். அப்போது அவனுக்கோ அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப் பில்லை அந்த சிறுவன் அவன் வாழ்க்கை முழுக்க கேட்கும் எல்லா தேவதைக் கதைகளிலும் இனி அவளை மட்டுமே தேவதையாய் பார்க்கப் போகி றான் என்று. கர்த்தர் நிஜமா பொய்யா என்பதெல் லாம் தெரியாது, ஆனால் ரோஸி ஆண்ட்டி நிஜம். அன்பின் முழுமையான, ஆத்மார்த்தமான வடிவம் அவள். கர்த்தரை விடவும் உயிர்ப்பான நிஜம்.

கதிர் விடுதிக்கு அனுப்பப்பட காரணமான சம்ப வம் - 1

மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத் தினடியில் மானூத்து சங்கிலி கருப்பு கோவிலுக் குச் செல்லும் வழியில் இருக்கும் சின்னஞ்சிறிய கிராமம் ராசக்காபட்டி. கதிர் பிறந்ததில் இருந்து வளரும் வரையிலுமான சில காலம் தாய்வீட்டில் வைத்துப் பார்த்துக்கொள்வதைத் தவிர வேறு வழி யில்லையென அம்மா தனது சொந்த ஊருக்கே கூட்டிப்போனாள். அய்யா நாடக்காரர் என்பதால் பெரும்பாலும் வீடு வருவதில்லை. மதுரையும் சுண்ணாம்புக்காரத் தெருவும்தான் அவருக்கு எல் லாம். வீட்டில் அண்ணனும் அம்மாவும் இருந்தார் கள். சாத்தூரில் ஒரு அக்காவும் அழகர்கோவிலில் இன்னொரு அக்காவும் வாக்கப்பட்டு போய்விட்ட தால் வீடு அம்மாவுக்கும் இவனுக்கும் கொஞ்சம் தாராளமாகவே இடம் தந்திருந்தது. அம்மாவும் வயல் வேலைக்குப் போய்விடுவதால் அவனை பெரும்பாலும் பார்த்துக் கொண்டது பாட்டிதான். சாத்தூரிலிருக்கும் மகளின் வீட்டிற்கும் குழுளியிலி

ருந்த தனது தம்பி வீட்டிற்குமாய் மாறி மாறி சுற் றிக்கொண்டிருந்த பாட்டி இவனையும் தன்னோடு கூட்டிக்கொண்டு சுற்றியது. தாத்தா நாடகத்துக் காக ஒரு பக்கம் ஊர் சுற்ற, பாட்டி தம்பி வீட்டுக் கும் மகள் வீட்டுக்குமாய் சுற்றியதால் ஊரில் இவர் களை கூத்தாடிக் குடும்பமென்றார்கள்.

நான்கு வயதுவரையிலும் அவனை அந்த ஊர் எந்தக் குறையுமில்லாமல் பார்த் துக் கொள்ள, எங்கும் நெல் வயல்களும் கரும் பும் நிறைந்த அந்த பூமியே தனது நிலம், அங் கிருப்பவர்களே தனது உறவுகளென கதிரும் கொண்டாட்டமாய் வளர்ந்தான். அத்திபட்டி திரு விழா நெருங்கிக்கொண்டிருந்த நேரம், ஊரில் பெரிய வீடுகளுக்கு வெள்ளையடித்துக் கொண் டிருந்தார்கள். பேருந்து நிற்கும் விளக்கிலிருந்து ஊருக்குள் இரண்டு மைல்கள் நடந்தால் முதலில் வருவது காவக்காரக் குடும்பத்தின் வீடு. சாலை யின் இருமறுங்கிலும் முதிர்ந்த புளிய மரங்கள். எல்லாக் காலத்திலும் பழங்கள் கொத்துக் கொத் தாய்த் தொங்கும் அந்த மரங்களுக்கு ஒருபோதும் வயதாவதே இல்லை. அந்த மரங்களிலும் மரங்க ளில் சுற்றும் அணில்களிலும் காலை நேரத்தில் ஊரையே மயக்கத்திலிருந்து எழுப்பும் மயில்களி லும் தான் அவனுக்கு பால்யத்தின் விடுபடாத எல்லா ரகசியங்களும் இருந்தன. காவக்கார மாமா வின் வீட்டிற்குப் பின்னால் பெரிய பெரிய குழிகளில் வெள்ளையடிப்பதற்காக சுண்ணாம்பை கொட்டி ஊற வைத்திருந்தார்கள். கொதிக்கும் சுண்ணாம்பு உடலில் பட்டால் நிகழும் விபரீதங்கள் குறித்து எதையும் அறிந்திராத கதிரும் அவன் வயதை ஒத்த

உறவுக்கார சிறுவர் சிறுமியிரும் அங்கு நிறுத்தப் பட்டிருந்த மாட்டு வண்டிகளில் இருந்து குதித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். இவனிலும் மூன்று மாதங்கள் மூத்தவளான அழகுத்தாய் தான் அந்தப் போட்டியை முதலில் அறிவித்தாள். "இந்த சுண்ணாம்புக் குழிக்குள்ள யார் குதிக்கிறாங்களோ அவன்களத்தான் நான் பெரியவளானதும் கட்டிக் குவேன்." அவள் வாக்கு அந்த நேரத்தில் அங்கி ருந்த பருவமடையாத அந்த சிறுவர்களுக்கு வேத வாக்கு. மூக்கம்மாள் அத்தையின் மூன்று குமாரத் திகளான அழகுத்தாய், சண்முகத்தாய்,மீனுத்தாய் என முவரிலும் அழகுத்தாயே மூத்தவள். அழகான வளும் கூட. மற்ற சிறுவர்களுக்கு ஆசை இருந்தா லும் சுண்ணாம்பின் பின்விளைவுகள் குறித்த அச் சத்தில் பின்வாங்க, "ஏய் அழகு நான் குதிக்கிறேன். ஆனா நீ மட்டுமல்ல உன் தங்கச்சிங்களும் என் னயத்தான் கட்டிக்கனும். சரியா?" என பேரார்வத் தோடு இவன் கேட்டான். அழகுத்தாயும் சண்முகத் தாயும் சரியென்று சத்தியம் செய்தார்கள். மீனுத்தா யிக்கு அப்போதுதான் நடை பழகும் பருவமென் பதால் அவள் அன்று அங்கிருந்திருக்கவில்லை. சத்தியம் செய்து கொடுத்த மறுகனமே யோசிக்கா மல் குழிக்குள் குதித்தவன் உயிர் போகும் வலியில் அலற, விளையாடிக் கொண்டிருந்த எல்லா சிறுவர் களும் அங்கிருந்து ஓடிப்போனார்கள்.

வெள்ளையடிக்கும் வேலைக்காக வந்திருந்த மானூத்து ஆட்கள் அவனைத் தூக்கிய போது கால்களில் இருந்து தோலும் சதையும் சுண் ணாம்போடு சேர்ந்து உருகி வழிந்தது. கிடைத்த வண்டியில் வைத்து அவனைத் தூக்கிக் கொண்டு

போய் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்த நேரத்திற்கெல்லாம் மயங்கிப்போய்விட்டிருந்தான். மருத்துவமனையின் வீச்சமும், கசப்பு மிக்க மருந்துகளும் சிகிச்சையும் ஒரு நோயாளியை மேலும் நோயாளியாய் ஆக்குவதாகவே பெரும்பாலும் இருக்கிறது. பத்து நாட்களுக்குப் பிறகும் அவன் காயங்கள் குணமாவதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியாமல் அங்கிருந்து கூட்டிப் போகச் சொல்லிவிட்டார்கள். காயத்திலிருந்து பரவும் நோய்க்கிருமிகள் சக குழந்தைகளுக்கு தொற்றிக்கொள்ளுமென்கிற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட போது இனி ஒருநாளும் இந்தச் சிறுவன் எழுந்து நடமாட வாய்ப்பில்லையென எல்லோரும் நம்பிக்கை இழந்திருந்தனர். அரசு மருத்துவமனை கைவிட்டாலும் அத்திபட்டி சண்முகம் வைத்தியர் கைவிடவில்லை. அழுகி எப்பொழுதும் நாற்றமடிக்கும் அவன் காயங்களில் புழு வைக்கத் துவங்கிவிட்டது. அவர் எந்த முகச்சுளிப்பும் இல்லாமல் அவனுக்கு சிகிச்சையளித்தார். தினமும் ஒரு பாண்ட்ஸ் பவுடர் டப்பா காலியாகும் படி காயத்தில் பவுடர் போட்டுவிட்டாலும்கூட காயத்திலிருது வரும் வீச்சத்தைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. அவனைத் தன் வீட்டிலேயே தங்க வைத்து மருத்துவம் வைத்தியம் பார்க்கத் துவங்கிய பிறகு அவன் காயங்களில் மாற்றம் ஏற்படத் துவங்கியது. அத்திபட்டியில் அவரின் சித்த வைத்தியக் கூடமும் வீடும் சரியாக சாவடிக்கு எதிரிலிருந்ததால் அவரிடம் சிகிச்சைக்கு வருகிற பெரும்பாலானவர்கள் ஓய்வெடுக்கும் இடமாக அந்த சாவடிதான் மாறிப்போயிருந்தது. தனக்கு

ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அங்கு வருகிறவர்க ளிடம் கதை பேசுவதும் சாவடியில் கிடப்பவர்களை வேடிக்கை பார்ப்பதும் தான் கதிரின் பொழுது போக்கு. அவன் காயங்கள் கொஞ்சம் குணமாகிய பிறகு வீட்டிற்குக் கூட்டிச் செல்ல அம்மா வந்தாள். "இவென் இவங்க அப்பனாட்டாம் தான் மயினி வரப்போறான் எனக்குப் பயமா இருக்கு" என அம்மா உடன் வந்த மூக்கம்மாள் அத்தையிடம் புலம்பிக் கொண்டிருந்தாள். கதிர் அம்மாவையும் அத்தையையும் விட்டுவிட்டு அவர்களோடு வந்தி ருந்த அழகுத்தாயையே பார்த்தான். நீண்ட நேரம் அழுதிருந்ததால் அவளின் முகம் வீங்கிப் போயிருந் தது. இவனுக்கு பிடிக்குமேயென வீட்டிலிருந்து பனியாரம் செய்து எடுத்து வந்திருந்தாள். வீட்டிற் குத் திரும்புகையில் "இவன இங்கியே வெச்சு இனி யும் பாத்துக்க முடியுமான்னு தெரியல மயினி. நான் திருமங்கலம் போறேன். எங்கூட்டுக்காரருக்கு சொந்தக்காரங்க எல்லாம் அங்கதான் இருக் காங்க. எனக்காக இல்லாட்டியும் என் பிள்ளைக்கா கவாச்சும் வரட்டுமே" ɛன அம்மா மூக்கம்மாள் அத் தையிடம் அழுதபோது கதிருக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அவன் கைவிரல்களை இறுகப் பற்றியிருந்த அழகுத்தாய் "யார் கிட்டயும் சொல் லாத. எத்தன வருஷம் ஆனாலும் யார் என்ன சொன்னாலும் நான் சத்தியமா உன்னயத்தான் கட் டிக்குவேன்." என கண் கலங்கினாள்.

சம்பவம் - 2

அம்மாவின் நம்பிக்கையை கட வுள் உட்பட எல்லோரும் பொய்யாக்கி இருந்த

னர். கடவுளின் கருணைக்கும் வக்கற்றவர்களாய்ப் போன அவர்களுக்கு சொந்தக்காரர்கள் பெரிதாக ஆதரவு தரவில்லை. உறவு முறையிலிருந்த ஒருவர் தனது மரக்கடையை ஒட்டி சின்னதாக குடிசை போட்டுக்கொள்ள இடம் கொடுத்திருந்தார். புளிய மரங்களும் மயில்களும் இல்லாத இந்தப் புதிய இடம் அவனுக்கு எரிச்சலூட்டியது. எப்போதும் ஊருக்குப் போவதைக் குறித்து கேட்டே அம்மாவிடம் அழுது அடம் பிடித்தான். எல்லோராலும் கைவிடப்பட்ட ஆத்திரத்தை யாரிடம் காட்டுவதெனத் தெரியாமல் கோவம் தீரும் மட்டும் இவனை அடித்துத் தீர்ப்பாள். அம்மாவின் உருவம் அவனுக்கு இரண்டு விதங்களில் மனப்பதிவாகியிருந்தது. ஒன்று எப்போதும் அழுது கொண்டிருப்பவள், அல்லது எப்போதும் கையில் கிடைக்கும் எதை வைத்தாவது தன்னை அடித்துக் கொண்டிருப்பவள். அவள் தன்னை அந்த வயதிற்குள் வதைத்ததற்கு பதிலாக அவளை வதைக்க வேண்டுமானால் கதிருக்கு இந்த ஒரு ஜென்மம் போதாது. அம்மா வேலைக்குப் போகையில் அவனை வீட்டிற்கு முன்னால் இருந்த ஒரு பட்டியக்கல்லில் கயிற்றோடு சேர்த்து கட்டிவிட்டுப் போய்விடுவாள். விறகுக்கடை வைத்திருந்த சிவனாண்டி மாமாவின் தங்கை சுமதி அத்தை அவனுக்கு பசிக்கிற நேரம் சோறூட்டி விடுவாள். மற்ற நேரங்களில் எல்லாம் பாவம் போல் போகிற வருகிறவர்களைப் பார்க்கும் அவனை சில நாட்களிலேயே எல்லோருக்கும் பிடித்துப் போனது. உலகின் சந்தோசங்களை காண கண்கள் முழுக்க கனவுகளோடு தவிக்கும் சிறுவனை யாருக்குத்தான் பிடிக்காமல்

போகும்? சிவனாண்டி மாமாவின் மகன்களான செபாஸ்டியனும், சந்திரனும், மகள் சகாயமும் புதிய நண்பர்களானார்கள். ஆனால் அவர்கள் யாரும் அழகுத்தாயைப் போலில்லை. அவளிடம் பார்க்க முடிந்த சிரிப்பையோ தொடும் போது ஏற்பட்ட பரவ சத்தையோ இவர்கள் தந்திருக்கவில்லை. ஆனா லும் அவனைக் கட்டியிருந்த கயிற்றிலிருந்து அவர் கள் விடுவித்தார்கள். அவர்களை நம்பி அம்மா இயல்பாக விட்டுச்செல்லத் துவங்கினாள்.

மரக்கடையின் இரும்பு படிகற்களை தராசின் ஒரு பக்கமும் இவனை இன்னொரு பக்க மும் வைத்து எடை பார்த்து விளையாடுவது அவர் களுக்குப் பிடித்தமான விளையாட்டாய் இருந்தது. போதாக்குறைக்கு அங்கிருக்கும் டேப் ரிக்கார்டில் ஓயாமல் மோகன் பாடிக்கொண்டிருந்தார். அந்த கடைக்கு மட்டுமில்லாமல் அந்த வீதிக்கும், ஊருக் கும் சேர்த்து பாடும் தவிப்போடும் அக்கறையோ டும் ஒருபோதும் ஓயாமல் பாடியபடியே இருப்பார். சகாயமும் செபஸ்டியனும் டேப் ரிக்கார்டை பின் தொடர்ந்து பாடுவதில் வல்லவர்கள். "நீ மட்டும் எப்பிடி மாமா இவ்ளோ சூப்பரா பாடற?" ஆர்வத் தில் செபஸ்டியனிடம் கதிர் ஒருமுறை கேட்டான். சகாயம், "கதிரு எங்கப்பா சின்ன வயசுல இருக்கை யில எங்களுக்கு கழுதப்பால் குடிக்கக் குடுத்தாரு. அதனால தான் நாங்க நல்லா பாடறோம்." என்று சொல்ல சந்திரனிடம் அடம் பிடித்து தனக்கும் கழுதைப்பால் வேண்டுமென்றான். கழுதைப் பால் கிடைக்காமல் போனால் அன்றே உலகம் அழிந்து விடக்கூடும் என்னும் ஏக்கத்தோடு பகல் முழுக்க

அழுதவனுக்கு எல்லோருமாக சமாதானம் சொன்னார்கள்.

அண்ணாநகரில் தான் ஊருக்குப் பொதுவான வண்ணாந்துறை இருந்தது. அன்று மாலை சந்திரனும், சகாயமும் கதிரோடு கழுதைப் பால் வேட்டைக்காக கிளம்பிச் சென்றனர். வீட்டிலிருந்து பதினைந்து நிமிட தூரம். சரோஜா தோட்டத்திற்குள்ளாக புகுந்து அண்ணாநகரை அடைந்து போது சலவை செய்யப்பட்ட துணிகள் நீண்ட கொடிகளில் காய்ந்து கொண்டிருந்தன. சில கழுதைகள் குப்பை மேய்ந்து கொண்டிருக்க, இன்னும் சில கழுதைகள் சலவை செய்யும் இடத்திற்கு பக்கத்திலிருந்தன. பால் கறந்து எடுக்க மூன்று பேரும் வீட்டிலிருந்து ஆளுக்கொரு சொம்பு எடுத்து வந்திருந்தார்கள். "டேய் எல்லாரும் ஒரே பக்கமா போக வேணாம். ஆளொக்கொரு பக்கமா போகலாம். யார் முதல்ல பால் கறக்கறாங்களோ ஓடி வந்து தகவல் சொல்லனும்." என சந்திரன் மாமா பொதுவான ஒப்பந்தம் போட்டுக்கொள்ள மற்ற இருவரும் சரியெனத் தலையாட்டிவிட்டு கழுதைகளைத் தேடி சென்றார்கள். கதிர் சற்றுத் தூரத்திலிருந்த இரண்டு கழுதைகளை நெருங்கியபோது இரண்டில் ஒன்று அவனைப் பார்த்ததும் ஓடிப்போனது. பழுப்பு நிறமான குட்டிக்கழுதை. அதன் கண்களில் இவனைக் கண்ட அச்சம். பெரிய கழுதையின் பின்னங்கால்கள் கட்டப்பட்டிருந்ததால் அது இவனைத் திரும்பிப் பார்த்த பின்னாலும் பொருட்படுத்தாமல் மீண்டும் குப்பை மேய்ந்தது. கையிலிருந்த சொம்போடு கழுதைக்கு எங்கிருந்து பால் வரக்கூடுமென தீவிரமாக ஆராய்ந்தான். அதன் பின்னங்

கால்களுக்கு நடுவில் மடி நீண்டிருக்க உற்சாகமாகி அருகில் சென்று உட்கார்ந்தான். சொம்பை கீழே வைத்துவிட்டு மடியில் கைவைத்து இழுத்தவனின் மாரில் கழுதை ஓங்கி உதைத்தது. அவனால் மூச் சுவிடவும் முடியவில்லை. அங்கிருந்து தப்பியோட வும் முடியவில்லை. அப்படியே கிடந்தவனை இன் னொருமுறை உதைத்தது. அதன் பிறகுதான் வலி யில் கத்தினான். "மாமா ... மாமா கழுத உதைக்குது மாமா.." என அவன் கத்திய சத்தம் கேட்டு சகாயம் தான் முதலில் ஓடிவந்தாள். அவனை பிடித்து கழு தையிடமிருந்து நகர்த்திப் போட்ட போதே நடந் ததைப் புரிந்துகொண்டவள் சத்தமாக சிரித்தாள். சந்திரனும் அதற்குள் ஓடிவர "எண்ணே இவன் பொம்பளக் கழுதைய விட்டுட்டு ஆம்பளக் கழுத குஞ்ச புடிச்சு பால் கறக்கப் போயிருக்காண்ணே." என சிரிக்க, சந்திரனும் சிரித்துவிட்டான். "கிறுக் குக் கூதியானே... வலிக்கிதாடா." என அவனைத் தோளில் தூக்கி வைக்க "வலிக்கிதாவா? உயிர் போகுதுடா அவுசாரி மவனே..." என கதறியழு தான். கழுதை உதைத்த இடம் சிவந்து நான்கு இஞ்ச் உயரத்திற்கு வீங்கிப் போனது.

ஆஸ்பத்திரிக்கு தூக்கி வந்தபின் எல்லோரும் அவனை ஒரு வேடிக்கைப் பொரு ளாய் பார்த்துவிட்டுச் சென்றார்கள். இவன் இன் னும் என்னென்ன கிறுக்கத்தனங்களை எல்லாம் செய்யப்போகிறானோ என்னும் கலக்கம் அம்மா விற்கு. வாயை மூடி சத்தமில்லாமல் அழுதாள். இருபது நாட்கள் திருமங்கலம் அரசு மருத்துவம னையின் சுவர்களும் மூத்திர நாற்றமடித்த படுக் கையும் அவனின் சுவாசம் முழுக்க இடைவெளி

யின்றி சூழ்ந்தது. உடல் குணமாக வேண்டி சிவ னாண்டி மாமாதான் தினமும் குட்டிப் புறாக்களாக பிடித்து அதிலிருந்து சூப் எடுத்துக் கொடுத்தார். புறாக்களின் தியாகத்தால் வீக்கம் குறைந்து அவன் குணமானபோதும் கூட அழுவதை நிறுத்தவே இல்லை. "எலேய் அதான் வீக்கம்லாம் குறஞ்சி ருச்சுல்ல இன்னும் எதுக்கு அழுதுட்டே இருக்க." என அம்மா அப்பொழுதும் அவன் தலையில் அடித்தாள். "எனக்கு கழுதப்பால் வேணும்" என சத்தமாக கத்தினான். சுற்றி இருந்த மற்ற நோயா ளிகளும் அவர்களின் உறவினர்களும் சத்தமாக சிரிக்க, அம்மா அவனை ஓங்கி அறைந்து "பொச்சப் பொத்திக்கிடு படு. கழுதப்பாலு வேணுமாம்." எனத் திட்டினாள். அடுத்த நாள் சிவனாண்டி மாமா சிர மப்பட்டு கழுதைப்பால் வாங்கிக் கொடுத்த பிறகு தான் அவனுக்கு மனமும் உடலும் சரியானது.

சம்பவம் - 3

விளையாட்டுத்தனத்தில் ருசி கண்ட குழந் தைகள் அதிலிருந்து அத்தனை எளிதில் தன் னைத் துண்டித்துக் கொள்வதில்லை. தன்னைச் சுற்றியிருக்கும் எல்லாமே சுவாரஸ்யமானவை என்ற எண்ணம் வந்தபிறகு எப்போதும் புதிதாக ஏதாவதொன்றைச் செய்து பார்க்கும் ஆர்வம் மட் டுமே அவர்களிடமிருக்கும். கதிர் அந்த வயதிலி ருந்த மற்ற குழந்தைகளை விடவும் முட்டாளாய் இருந்தான், அப்படி இருந்ததாலேயே புதிய சாகசங் களை செய்ய தயங்காதவனாக இருந்தான். அவ னுக்கு சொல்லப்பட்ட கதைகள் எல்லாமே சாகச மாய் இருந்ததால் தன்னை எப்போதும் சாகசக்கா

ரனாகவே உணர்ந்தான். வெங்கடாத்திரி தெருவில் புஷ்பா அத்தை வீட்டில் குதிரை வண்டி வைத்திருந்தார்கள். ஊரிலிருந்த ஐந்தாறு குதிரை வண்டிகளில் இந்த வண்டிதான் கொஞ்சம் ஒய்யாரமானது. இரண்டு கண்களும் மூடியிருக்கிற குதிரை எப்படி சரியாக சாலையை அடையாளம் கண்டு கொண்டு செல்கிறதென எப்பொழுதும் ஆச்சர்யமாய் இருக்கும். புஷ்பா அத்தையின் மகன் தான் தொடர்ந்து இரண்டு மூன்று வருடங்களாக அனுமன் ஜிம்மில் நடக்கும் திருமங்கலத்திற்கான ஆணழகன் போட்டியில் பட்டம் வென்றவர். உருண்டு திரண்ட அவர் தோற்றத்திற்கு குதிரை வண்டி ஓட்டுவதைப் பார்க்க சிலிர்ப்பாக இருக்கும். அவருக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு மெதுவாக ஓடும் குதிரையில் வால் சிலிர்த்து அதிர்வதையே பார்த்துக் கொண்டிருப்பான். உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள அடிக்கடி பூண்டு சாப்பிடும் அவரின் உடலில் இருந்து எப்போதும் பூண்டின் மணம் கசிந்துகொண்டே இருக்கும். குதிரை வாலாட்டாமல் சாதாரணமாக இருக்கிற நேரமெல்லாம் பின்னாலிருந்து காலால் குதிரையின் குண்டியில் உதைப்பான். அது பர்ர்ர்ரென கத்திவிட்டு மீண்டும் வாலை சிலிர்த்து ஆட்டும். "உனக்கு மட்டும் எப்பிடி மாமா கை கால்லாம் நல்லா அம்மிக் கல்லாட்டம் உருண்டு பெருசா இருக்கு.?" சவ்வாரி இல்லாத நேரங்களில் அவரின் கையில் தொங்கிக் கொண்டு கேப்பான். எல்லாவற்றைக் குறித்தும் கேள்வி கேட்கும் இவனை அவருக்குப் பிடிக்குமென்பதால் தினமும் ஜிம்மிற்கு செல்கிற நேரங்களில் அவனையும் கூட்டிச் செல்வார். அவர் உடற்

பயிற்சி செய்யும் எல்லாவற்றையும் எடுத்து பயன்ப டுத்த முயற்சிப்பான், எதையுமே அவனால் தூக்க முடியாது. "நல்லா கறி மீனுன்னு திண்ணு உடம்புல சத்து வெச்சாதாண்டா இதெல்லாம் தூக்கி விளை யாட முடியும்" அந்த மாமா சிரிப்பார்.

ஒரு நாள் மாலை ஜிம்மில் அவர் விளையா டிக் கொண்டிருந்த நேரத்தில் குதிரை வண்டிக்கு காவலாக இருந்த கதிர் 'இந்தக் குதிர கண்ணு இல்லாம எப்பிடி ரோட்டப் பாக்குது?' என சந்தே கத்தோடு அதன் முன்னால் சென்று மூஞ்சியை நெருங்கிப் பார்த்தான். அதன் கண்களை மறைத் திருந்த தோல் கடிவாளத்தை பிரித்துப் பார்க்கலா மென்றால் எட்டவில்லை. கொஞ்சம் கால்களை எக்கி அதைப் பிரித்துப் பார்க்கப் போனவனை பின் னாலிருந்து ஒரு கை பிடித்து இழுத்து கீழே தள் ளியது. பணியாரக்கார பாட்டி. "ஏலேய் கூறுகெட் டவனே கழுதகிட்ட உத வாங்குனது பத்தாதா?" என அவள் கோவமாக கேட்க, கீழே விழுந்தவன் எழுந்து "இதுக்கு கண்ணே இல்ல எப்பிடி ரோட்டப் பாக்குதுன்னு தெரிஞ்சுக்கனும் எனக்கு, அதான் பாக்கப் போனேன்." என அழுதான். "குதிர பொச்ச தொறந்து பாரு, கிறுக்கு பயலே. பேசாம வாடா." என இழுத்துக் கொண்டுபோனாள்.

சரோஜா தோட்டத்திலிருந்த பத்து வீட் டுக்காரர்களுக்குமாக சேர்த்து உணவுத் தேவை களுக்காக ஆறு மாதத்திற்கு ஒருமுறை பெரிய பெரிய அண்டாக்களில் நெல் அவிப்பது வழக்கம். எல்லோருமே பங்காளி முறையில் உள்ளவர்கள். இரண்டு மூன்று நாட்கள் தொடர்ச்சியாக இருக் கும் அந்த வேலையை அம்மாவும் வேறு சிலரும்

தான் கவனித்துக் கொண்டார்கள். ஜகன் மோகினி படம் வந்திருந்த நேரமது. கதிருக்கு வெள்ளை உடையனிந்த பேய்கள் எரியும் அடுப்பில் விற குகளுக்குப் பதிலாக தமது கால்களை வைத்து எரித்துக் கொண்டிருந்தது பெரிய சாகசமாகப்பட என்றாவது ஒருநாள் செய்து பார்த்துவிட நினைத் தான். அந்தமுறை நெல் அவித்துக் கொண்டி ருந்த நாளில் மாலை நேரம் அடுப்பில் எரிந்து முடிந்த விறகுகள் கங்குகளாக தணலாகி இருந் தது. வேலை செய்தி கொண்டிருந்த எல்லோரும் தேநீர் குடிப்பதற்காக சென்றிருந்தனர். தோட் டத்தில் விளையாடிக் கொண்டிருந்த கதிர் யாரும் கவனிக்காமல் கல் அடுப்பின் பக்கமாய் ஓடிவந் தான். தனது சாகசத்தை செய்து பார்க்க சரியான நேரமென்பதை உறுதிசெய்து கொண்டு அண்டா விற்கு எதிரில் உட்கார்ந்து கால்களை அடுப்பிற் குள் நுழைத்தான். சில நொடிகள் தான் "அய்யோ அம்மா எரியுதே" என அவன் அலறல் சத்தம் அந் தப் பகுதி முழுக்க எதிரொலிக்க தேநீர் குடிக்க சென்றிருந்த எல்லோரும் ஓடிவந்தனர். ஏற்கனவே வெந்து தோல்கள் அழுகிப்போனதின் தடயங்களி ருந்த கால்கள் மீண்டும் வெந்து போயின. அம்மா விற்கு வந்த ஆத்திரத்தில் அவன் அழுகையையும் பொருட்படுத்தாமல் அடித்துத் துவைத்தாள். "இவ ஒரு வெளங்காத சிறுக்கி, பிள்ள கால் வெந்து போயி கெடக்கான், அடிச்சிட்டு இருக்கா பாரு." என உடனிருந்தவர்கள் தாமதிக்காமல் மருத்துவ மனைக்கு தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.

அரசு மருத்துமனையின் வினோதமான நோயாளிகளின் பட்டியலில் அந்த சின்னவயதி

லேயே அவனும் சேர்ந்துவிடக் கூடாதென பயந்த அம்மா என்ன செய்வதெனத் தெரியாமல் குழம் பிப் போயிருக்கையில் தான் தெருவிலிருந்த ஒரு டீச்சர் சொல்லி இந்த ஆதரவற்றோர்களுக்கான விடுதி குறித்து அறிந்துகொண்டாள். கால் சரி யான சில நாட்களில் யோசிக்காமல் அவனை அங்கு சேர்த்துவிட்டாள். சில பிரிவுகள் அவனை பக்குவப்படுத்துமென பக்குவப்பட தேவையே இல் லாத வயதில் அவள் சேர்த்துவிட்டபோது இவ னுக்கு ஆதரவாக பேச ஒருவருமில்லை. கண்டித்து வளார்க்கப்படும் குழந்தைகள் தான் இந்த உல கத்திற்கு லாயக்கானவர்களாய் இருப்பவர்களென அவனைச் சுற்றியிருந்த எல்லோரும் நினைக்க முக்கியமான காரணம், அவர்களில் பெரும்பால னவர்களின் மண்டையை கதிர் கல்லால் அடித்து உடைத்திருக்கிறான். “இவங்கப்பனாட்டம் தாண்டி வரப்போறான். இவன கண்டிச்சு வளக்கனும்.” என அந்தத் தெருவில் சாபமிடாதவர்கள் இல்லை. விளையாட்டுத்தனம், கண்கள் மறைக்கப்பட்ட குதிரை, அனுமன் ஜிம், தினமும் நான்கு பனி யாரங்கள் திருடினாலும் அதைப் பொருட்படுத் தாத பாட்டி, நாளின் பாதி நேரம் விளையாடித் திரிந்த சிவனாண்டி மாமாவின் விறகுக்கடை எல் லாமும் ஒருநாள் சடாரென அவனிடமிருந்து வில கியபோது இந்த உலகத்தால் கைவிடப்பட்டவன் போல ஆகிப்போனான்.

CHILDREN VILLAGE. - 2

பால்யம் என்பதே நினைவின் வலி கள் தான் அவனுக்கு, தனிமையின் அர்த் தம் புரிய சாத்தியமில்லாத வயதில் தனிமைப்படும் குழந்தை இந்த உலகை அச்சத்தோடு மட்டுமே பார்க்கும். அச்சம் தான் எல்லா வன்முறைகளுக்கு மான துவக்கம். அம்மா எதற்காக தன்னை இந்த தன்னந்தனிக் காட்டில் விட்டுப்போனாள் என யோசிக்கிற நாளில் எல்லாம் உலகின் அத்தனை அம்மாக்கள் மீதும் வெறுப்பு உண்டானது. தாய் மையின் ஆழமான வெற்றிடத்தை ரோஸி ஆண்ட் டியின் அன்பு மட்டுமே நிரப்பியது. ஆனாலும் அந்த அன்பு அவனுக்கு மட்டுமேயான பிரத்யே கமானதல்ல, அந்த வீட்டிலிருந்த எல்லாக் குழந் தைகளுக்கும் பொதுவானது. பிரபஞ்சமே தனக்கு வேண்டுமென பேராசைக் கொண்ட குழந்தைக்கு அதன் ஒரு துளியிலும் குறைவாய்க் கிடைப்பது எப்படி போதுமானதாய் இருக்கும்? முதல் வார இறுதியில் சர்ச்சில் ஞாயிற்றுக்கிழமை பிரார்த்த

னையின் போது ஞானஸ்தானம் செய்யாமலேயே ரோஸி ஆண்ட்டி அவனுக்கு கிருபாகரன் எனப் பெயரிட்டாள். "கிருபா. உனக்கு ஆண்ட்டிய புடிக் கும் தான?" கதிர் இப்பொழுது தான் யார் என்று தெரியாத குழப்பத்தோடு அவளைப் பார்த்தாலும் அவளைப் பிடிக்குமா என்று கேள்விக்கு இல்லை யென்று பதில் சொல்ல சாத்தியமற்றவனாய் இருந் தான். "பிடிக்கும்." என்று தலையாட்ட, "சரி அப் டின்னா இனிமே உன் பேரு கிருபா தான். சரியா? நம்மள மாதிரி எல்லாரலயும் கைவிடப்பட்டவங்க ளுக்கு கர்த்தர் தான் ஆதரவு. உன்னோட எல்லா கஷ்டங்களையும் பாவங்களையும் கர்த்தர் தன் னோட சிலுவையா சுமந்துக்குவாரு. நீ அவர நம் பனும். அவர முழுசா நம்பனும்." என்று தலையை வருடிவிட்டபடி சொன்னாள். அவள் கைகளின் சூடும் அவள் குரலில் இருந்த அதீதமான அன்பும் அவனை வசீகரித்தது. "சரி ஆண்ட்டி" என சந்தோ சமாகச் சொன்னான். அந்த பழைய கல் கட்டிடம் இருந்த சர்ச்சில் புது வெளிச்சம் பரவத் துவங்கிய போது கண்களை மூடிக் கொண்டு கதிர் என்ற கிரு பாவும் கர்த்தரை முழுமையான நம்பிக்கையோடு பிரார்த்திக்கத் துவங்கினான்.

விடுதியிலிருந்து மூன்று மைல் நடை தூரத்திலிருந்தது அவர்களுக்கான பள்ளி. கட்ராம் பட்டி அரசு நடுநிலைப்பள்ளியில் உள்ளூர்க் குழந் தைகளை விடவும் விடுதியிலிருந்து செல்லும் இவர்கள் தான் சரிபாதிக்கும் மேல் இருந்தனர்.

விடுதியிலிருந்து பள்ளிக்கு செல்லும் சாலை பகல் நேரத்திலும் கூட அடர்ந்த மர்மங்கள் நிறைந்ததாகவே இருக்கும். வலது எல்லை முழுக்க பனை மரங்கள், இன்னொரு புறம் கருவேலங்காடுகள். அவ்வளவும் நாட்டுக்கருவேல மரங்கள். சரியாக ஊர் எல்லையில் மிகப்பெரிய ஊருணி. எப்போதும் எருமைகள் குளிக்கும் அந்த ஊருணிதான் ஊர்க்காரர்களின் பிரதான நீர் ஆதாரம். ஊருணியைச் சுற்றிலும் அடர்ந்திருக்கும் ஆலமரத்தின் நிழல் அபூர்வமான ஓர் அழகைக் கொடுக்கும். பகல் நேரத்தில் மாடு மேய்க்கிறவர்கள் துண்டை விரித்துப் படுத்திருப்பார்கள். உலகத்தின் சகல துக்கங்களும் அந்த மரத்தடியில் படுத்துக் கொண்ட சில நிமிடங்களில் மாயமாய் மறைந்துபோகும் அபூர்வமான சக்தி அந்த மரங்களின் நிழலுக்குண்டு. அந்த சின்னஞ்சிறிய ஊர்காரர்களுக்கு வற்றவே வற்றாத கஞ்சத்தனம் மட்டுமே நிறைந்து கிடந்தது. ஒவ்வொரு துளி தண்ணீரையும் தங்களுக்காக மட்டுமே சேமித்துக் கொண்டார்களே ஒழிய, எவர் ஒருவருக்கும் தருவதில்லை. பள்ளிக்கூடத்திற்கு வரும் பிள்ளைகள் சாப்பிடும் போது குடிப்பதற்கும் தாகத்திற்கும் நம்பியிருந்தது ஊர் பொதுக் கிணற்றைதான். அந்தக் கிணற்றில் நீர் இரைப்பதற்கும் ஏராளமான கட்டுப்பாடுகள் இருந்ததால் காலை விடுதியிலிருந்து கிளம்பி பள்ளி வந்து திரும்ப மாலை விடுதி திரும்பும் நேரம் வரை குறைந்த நீர் அருந்தவும் தாகத்தைப் பொறுத்துக் கொள்ளவும்

அந்தக் குழந்தைகள் யாரும் கற்றுக் கொடுக்கா மலேயே பழகிவிட்டிருந்தனர். "கரிசக்காட்டு கட் ராம்பட்டி, குடிக்க தண்ணி தராத கஞ்சாம் பட்டி. கரிசக்காட்டு கட்ராம்பட்டி குண்டி கழுவ தண்ணி தராத கஞ்சாம்பட்டி" என்ற பாடல் விடுதி மாணவர் களிடம் பிரபலமான ஒன்று.

மதிய நேரத்தில் கிடைக்கும் சுடு சோறும், வருடம் தவறாமல் கிடைத்த இலவச உடைகளும் பள்ளிக்கூடத்தை விருப்பத்திற்குரிய இடமாக மாற்றியிருந்தது. பள்ளிக்கூடத்து வேலை களுக்கும் ஊர்ப்பொது வேலைகளுக்கும் விடுதி குழந்தைகள் சமபளம் வாங்காத கூலிக்காரர்க ளாக பலநேரங்களில் நடத்தப்பட்டார்கள். பதி லாக திருவிழாக்காலங்களில் சர்க்கரை பொங்க லும் ஒருவேளைச் சோறும் தரப்பட்டதை தங்களுக் கான பெரும் பேறாக நினைத்து குழந்தைகளும் சந்தோசப்பட்டனர். எல்லாரிலும் குள்ளமானவன் என்ற வகையில் கதிர் தான் பள்ளிக்கூடத்திற்கு செல்லும் வரிசையில் முதலாவதாக நிற்பான். அவ னுக்கு அடுத்தபடியாய் வேம்படியான். அவர்களுக் குப் பின் காமாட்சி நிற்பாள். காலை விடுதியிலி ருந்து கிளம்பும் அந்த மனித ரயில் வண்டி சின்ன சிதறல் கூட இல்லாமல் சல சலவென பேசியபடியே மூன்று மைல்களும் நடந்து செல்லும். விடுதியில் ஆண் பொறுப்பாளர்களாக இருந்த ராகவனும், முத்துவும் யாரும் தப்பித்து ஓடிவிடாமல் பார்த்துக் கொள்ள பள்ளிக்கூடம் வரை உடன் வருவார்கள்.

காலை ஏழு மணிக்கு கேப்பைக் கூழோ அல்லது கம்மங் கூழோ உணவு, பிறகு நண்பகல் 12 மணிக்கு பள்ளிக்கூடத்து சோறு, பிறகு மீண்டும் இரவு எட்டு மணிக்கு விடுதியில் உணவு. வளரும் வயதில் இந்த சின்னஞ்சிறிய உணவு அவர்களுக்குப் போதுமானதாய் இல்லை. அதிகாலை நான்கரை மணிக்கு எழும் அவர்கள் இரவு பத்து மணிக்கு உறங்குவது வரை அடிவயிற்றில் எப்போதும் ஒருவித பசியை உணர்ந்தபடியே இருந்தார்கள். சாலையில் விழுந்து கிடக்கும் பனம் பழம், உணவு இடைவேளையில் பள்ளிக்கூடத்திற்குப் பின்னாலிருக்கும் காட்டிலிருந்து பறித்து வரும் இலந்தைப் பழம், மஞ்சணத்திப் பழம் இவையெல்லாம் அந்தந்த சீசனின் பெரும் வரம் அவர்களுக்கு. வெறும் வாய்க்கு மஞ்சணத்திப் பழங்களை மென்று சுவைப்பதே ஆறுதலாய் இருக்கும். வேலிப்பழங்கள் மட்டுமே அவர்களுக்கு கிடைத்த ஆகப்பெரிய ஊட்டச்சத்து. பள்ளிக்கூடத்தை ஒட்டியிருந்த ஓடையில் எப்போதும் நீர் ஓடியதில்லை, கட்ராம் பட்டியிலிருந்து செங்கப்படைக்கு விறகு வெட்டிச்செல்லும் மாட்டு வண்டிகள் குறுக்குப்பாதையாக பயன்படுத்தி வந்ததால் அதன் பயன்பாடு இன்னும் அழியாமலிருந்தது. வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் பெருமாள் கோவில் திருவிழாவிற்கு சின்னதாய் பொருட்காட்சி போடவும் அந்த ஓடையின் பயன்பாடு முக்கியம். நீர் வரத்து இல்லாமல் போனாலும் இலந்தைச் செடிகள் நிறைந்த அந்த

ஓடை ஒரு அமுதசுரபி. "இந்த பாய்ஸ் டவுன் பயலுக எந்த நேரம் பாத்தாலும் ஓடையிலயே கெடயா கெடக்கறீங்களே என்னதாண்டா இருக்கு அங்க?" என தையல் வாத்தியார் கேட்டால், பையன்கள் ட்ரவுசர் பையிலிருக்கும் இலந்தைப் பழங்களைப் பிதுக்கிக் காட்டுவார்கள். "எது கெடச்சாலும் திண்ணுக்கிட்டே இருக்கீங்க, இதென்ன வயிறா? வண்ணாந்தாழியாடா?" என சிரிப்பார். அது சிறுவர்களின் பசியறியாத சிரிப்பு.

பழங்கள் எதுவும் கிடைக்காத நாட்களில் ஆவாரம் பூக்களும் துவரங்காயுமே துணை. ஆவாரம் பூக்களை அள்ளி ட்ரவுசர் பைகளில் நிறைத்துக் கொண்டால் வகுப்பு நடக்கும் நேரங்களில் புத்தகங்களுக்குள் வைத்து கொஞ்சம் கொஞ்சமாய் சாப்பிடலாம்; முழுதாக பசியற்றாத போதும் தற்காலிக ஆறுதலுண்டு. சகலத்தையும் மறக்கச் செய்யும் வல்லமை பசிக்கு மட்டுமேயுண்டு. அதனால் தான் பசித்த உயிர் எல்லா விதமான யுத்தத்திற்கும் எப்போதும் தயாராக இருக்கிறது. வார இறுதி நாட்களை அந்தச் சிறுவர்கள் பறவை வேட்டைக்கானதாய் மாற்றிக் கொண்டார்கள். விடுதியின் மைதானம் பெரியது, சொல்லப் போனால் விடுதியை விடவும் மைதானம் பெரியது. அயர்லாந்திலிருந்த சில கிறிஸ்தவ அமைப்புகளும் இங்கிலாந்தின் மான்செஸ்டாரிலிருந்த வேறு சில கிறிஸ்துவ அமைப்புகளும் இணைந்து நடத்தும் அந்த விடுதியில் அவர்கள் துவங்கும் போதே குழந்

தைகள் விளையாட முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென யோசித்திருந்தனர். அவ்வப்போது வெளிநாட்டிலிருந்து வரும் அவர்களோடு பேஸ் பாலும், கிரிக்கெட்டும் விளையாடுவது உற்சாக மாக இருக்கும். உற்சாகம் விளையாட்டை ஒட் டியல்ல, அன்று நிச்சயமாக இரைச்சி உண்டு. மைதானத்திலிருந்த மரங்களை நோக்கி ஏராள மான பறவைகள் வந்து சேர்வது வழக்கம். முக் கியமாக கொக்குகள். எத்தனை தூரத்திலிருந்தா லும் கொக்குகளை மிகச் சரியாக வேட்டையாடக் கூடிய திறமைசாலிகள் அங்கிருந்தார்கள். மூன்றா வது ரூமிலிருந்த ரமேஷ் அந்த விடுதியின் பிர தான வேட்டைக்காரன். சனிக்கிழைகளில் அவன் வேட்டையாடும் கொக்குகளுக்கு சப்புகொட்டிய படி காத்திருப்போரின் பட்டியல் நீளம். இத்தனை வயிறுகளுக்கு எத்தனை கொக்குகளை வேட்டை யாடுவது?

ரோஸி ஆண்ட்டி பறவைகளை நேசித்தாள், தூரத்திலிருந்து பறவைகளின் இயக் கத்தை ரசிக்கும் யார் ஒருவரும் அவற்றை உண்ண விரும்புவதில்லை. நிலத்திலிருந்து இறக் கைகளை விரித்துப் பறக்கையில் அந்தப் பறவை நிலத்தின் ஒரு பாதியையும் தன்னோடு தூக் கிக் கொண்டு செல்கிறது. ஒரு நிலத்திலிருந்து இன்னொரு நிலத்திற்கு துயரங்களை, அன்பை, பிரிவின் செய்தியை கடத்திச் செல்லும் தூதுவர் கள் பறவைகள். எங்கோ வெகு தொலைவிலிருக்

கும் உறவுகளுக்கு ப்ரியத்தின் நிமித்தமாய் அவள் சொல்ல விரும்பிய செய்திகளை எல்லாம் மௌனமாய் பறவைகளை கவனிப்பதன் வழியாகத் தான் கடத்திக் கொண்டிருந்தாள். தனது வீட்டில் தன் பொறுப்பிலிருக்கும் குழந்தைகளிடம் "பசிச்சா வேலிப் பழங்கள் என்ன கெடச்சாலும் சாப்டுங்க, செங்கப்படக்காரங்க வர்றப்போ அவங்க கிட்ட சொல்லி முயல் வாங்கித் தர்றேன். ஆனா எந்தப் பறவையையும் யாரும் சாப்பிடக் கூடாது, சரியா?" என கோரிக்கை வைப்பாள். அவள் அன்பிற்காக சாப்பிடமாட்டோமென சத்தியம் செய்தாலும் அந்தக் குழந்தைகள் தங்களுக்கு கிடைக்கும் ஒரு துண்டு பறவை இறைச்சியை இழக்க விரும்பவில்லை. கொக்கோ, மைனாவோ, காடையோ எதுவாயினும் சுட்டு மசாலா தடவிய அந்த இரைச்சி அவர்களுக்குத் தந்த ஆறுதல் மகத்தானது. மற்றவர்கள் ரோஸி ஆண்ட்டியின் பேச்சைக் கேட்காத போதிலும் கதிர் அவள் சொற்களை உறுதியாக கடைபிடித்தான். "டேய் குட்டையா ஒருக்கா கொக்கு கறி திண்ணு பார்றா, அதுக்கப்பறம் நீயும் வேட்டைக்கு வருவ?" என ரமேஷ் அவனைப் பார்க்க வைத்தே சாப்பிடுவான். எதற்குமே மசிந்ததில்லை.

கதிர் அவர்கள் யாரும் செய்யாத ஒரு யுக்தியைக் கண்டுபிடித்தான். எல்லோரையும் விட குள்ளமாகவும் அப்பாவியாகவும் இருக்கும் அவன் மீது ஒருவரும் சந்தேகப்பட முடியாதபடி

யான செயல் அது. வெள்ளிக்கிழமை பள்ளி முடி வதற்கு முன்பாகவே எதாவது காரணம் சொல்லி பையைத் தூக்கிக் கொண்டு ஓடையை ஒட்டிய ஊரின் வீதிகளுக்குள் நடந்து சென்று எங்காவது கோழிகள் கண்ணில் படுகிறதாவெனத் தேடுவது. வேம்படியான் அவனுக்கு இதில் கூட்டு. கண்ணில் பட்ட சில நிமிடங்களில் கோழியைப் பிடித்து தலை யைத் திருகி பைக்குள் போட்டுக் கொண்டு அங் கிருந்து தப்பித்து ஓடிவந்து விடுதிக்கு திரும்பும் மற்றவர்களோடு சேர்ந்து கொள்வது. கதிர் மிகச் சிறந்த கோழி திருடனாய் அந்த சின்ன வயதிலேயே மாறிப்போயிருந்தான். முதல் சில முறை திருடும் போது சின்னதொரு அச்சம் இருந்த போதும் மற்ற சிறுவர்களைப் போல் இரைச்சி திண்ண வேண்டு மென்கிற ஏக்கம் அவனைத் துணிந்து செய்யச் சொன்னது. சனிக்கிழமை பகலில் எல்லோரும் பறவை வேடைக்குச் செல்லும் இடைவெளியில் கதிரும், வேம்படியானும், காமாட்சியும், கற்பகமும் விடுதியிலிருந்து தூரமாகச் சென்று கோழியை வாட்டித் திண்பார்கள். அந்த சின்னஞ்சிறிய புரு ஷர்களுக்கு காமாட்சியும் கற்பகமும் பொண்டாட்டி வேஷம் கட்டியிருந்தார்கள். "திருடறதுதான் திரு டறீங்க, ரெண்டு மூணு கோழியா திருட வேண்டி தானடா? ஒரு கோழி நம்ம நாலு பேருக்கு எப் படி பத்தும்?" நெருப்பில் கோழியை வாட்டிய படியே கற்பகம் கேட்பாள். "ஒரு கோழிய கள வாங்கறதுக்குள்ளயே எப்ப மாட்டிக்குவமோன்னு

பயமா இருக்கு. ரெண்டு மூணு வேணுமாம் ல?" என வேம்படியான் முறைப்பான். "இந்தா, உனக்கு இஷ்டம்னா எங்க கூட வா. இல்ல நான் வேற பொண்டாட்டி பாத்துக்கறேன்." என கதிர் சிரிப் பான். அருகிலிருக்கும் கரம்பை மண்ணை அள்ளி கற்பகம் அவன் மீது எரிவாள். அரைகுறையாய் வெந்த கோழியை சூடு ஆறும் முன்பாகவே பிய்த்து திண்பார்கள். "டேய் குட்டையா மெதுவா திண் ணுடா, யாரும் பிடிங்கிட்டு ஓடிர மாட்டாங்க" என வேம்படியான் தலையில் அடிப்பான். "ஆமா நான் குட்டையன் இவரு வளத்தி, போடா சுண்ணி." என பொத்துப் போன நாக்குடன் கதிர் சிரிப்பான். கற் பகம் கதிருக்கும், காமாட்சி வேம்படியானுக்குமாய் மனைவியாய் இருப்பதென உடன்பாடு. வார இறுதி நாட்களில் கருவேலங்காட்டிற்குள் கோழி தின்று குடும்பம் நடத்திக் கொண்டிருந்தார்கள் அந்தக் குட்டித் தம்பதிகள். சரியாக வேகாத அந்தக் கோழி இரைச்சியைத் திண்ணும் நாட்களில் எல்லாம் இர வுகளில் அவனுக்கு ஆய் வரும். துணைக்கு யாரை யாவது எழுப்பலாமென்றால் திட்டுவார்களோ என் கிற யோசனையிலேயே மெதுவாக எழுந்து போய் வீட்டிற்கு அருகிலேயே ஆய் போய்விட்டு வருவான். சில இரவுகளில் ஒருமுறையோடு முடிந்துவிடும், இன்னும் சில இரவுகளில் இரண்டு மூன்று முறை போகும்படியாகிவிடும். வீட்டைச் சுற்றி அவன் பேண்டு வைத்ததாலேயே விடுதியிலிருந்த எல்

லோரும் அவனை 'பேண்ட குண்டி' என கூப்பிடத் துவங்கினார்கள்.

சில மாதங்களுக்குப் பின் வழக்கம் போல் கோழி திருடுகையில் கதிர் மாடிக் கொண்டு விட, வேம்பு தப்பி ஓடிவிட்டான். வயர் மேன் வெங் கட் வீட்டுக் கோழி அது. எப்போதுமே கோழியை நெருங்கும் முன் யாராவது தன்னை கவனிக் கிறார்களா என ஒருமுறைக்கு பலமுறை கதிர் பார்த்துக் கொள்வான். அன்று கவனமாகத்தான் கோழியை நெருங்கினான். ஆனால் இதற்கு முன் அவன் பிடித்ததை விட பெரிய கோழி, நெருங்கி அவன் காலைப் பிடிக்கும் போதே அது திமிறி ஓடியது. மீண்டும் துரத்தி ஓட, கோழியின் சத்தம் கேட்டு வெங்கட்டின் மனைவி ஓடிவந்துவிட்டார். அவர் வருவதற்கும் அவன் கோழியைப் பிடிப்பதற் கும் சரியாக இருந்தது. யாரையும் உதவிக்குக் கூப் பிட வேண்டிய தேவை கூட ஏற்பட்டிருக்கவில்லை. தாட்டியாய் இருந்த அந்தப் பெண்ணைப் பார்த்த அச்சத்தில் கதிர் அப்படியே நின்றுவிட்டான். அவன் கையிலிருந்த கோழி 'கெக் கெக்க் கெக்கன' கத்தி யபடியே இருந்தது. வந்த வேகத்தில் ஓங்கி அறைந் தவள் "திர்ட்டுத் தாயோளி, காப்படி ஒலக்கு சைஸ் கூட இல்ல, கோழி திருடற." என அவன் சட்டை யைப் பிடித்து இழுத்தாள். அழுதபடியே கதிர் ட்ரவு சரில் மூத்திரம் போனான். சுற்றி இருந்த வீட்டுக்கா ரர்களும் திரண்டுவிட, "இதி நின்ன நேண்டு ரேது, நிண்ட தினாளுமிஞ்சி தோண்டோ கோடி தொங்க

ளிச்சேண்டுனி வெத்துகுத்தா உண்டாவு, கடாசட்ட சூத்தே வீண்டு. மனிசினி மூத்தினி." என அவள் தன் சொந்தக்காரர்களிடம் காட்டமாகச் சொன்னாள்.

ஆளாளுக்கு அவனை தலையில் கொட்டினர். ஒரேயொரு கிழவி மட்டும், "ஏண்டி கைத்தண்டி பய, ஏதோ பசிக்கிதுன்னு திருடியிருக்கான். சரி இனிமே திருடாதடான்னு கண்டிச்சு விடுவீங்களா, போட்டு அடிச்சிக்கிருக்கீங்க?" என அவனுக்காக மனம் இரங்கினாள். "இந்தாக் கெழவி நீ உன் பொச்சப் பொத்திக்கிட்டுப் போ. இதையெல்லாம் இப்பிடியே விட்டா நாளைக்கு என்ன காரியம் வேணும்னாலும் செய்யும். கம்பிய காய வெச்சு நல்லா சூடு போடனும்." என சொன்னதோடு வெங்கட்டின் மனைவி விடவில்லை. தான் தலை கோத பயன்படுத்தும் சினுக்கொலியை நெருப்பில் வைத்து இவன் வலது கை மணிக்கட்டில் சூடு போட்டாள். அந்த சின்னஞ்சிறிய கையில் தோலோடு கொஞ்சமே கொஞ்சமாய் சேர்ந்திருந்த சதையும் நெருப்பு பட்டு வெந்து போனது. கதிர் வலி பொறுக்க முடியாமல் அலறினான். "இப்பிடியே போ, அப்பத்தான் நாளப்பின்ன எதையும் திருடக் கூடாதுன்னு ஒரு பயம் வரும்." முதுகில் அடித்து துரத்திவிட குருதி வழிந்த கையைத் தூக்கிக் கொண்டு பெருங்குரலெடுத்து அழுதபடியே கதிர் விடுதி நோக்கி நடந்தான்.

ரோஸி ஆண்டிக்கு சூடு வைத்தவர் களை விடவும் இவன் மீது தான் கோவம் அதிகமி ருந்தது. இத்தனை பிரியமாக பார்த்துக் கொண்டும் இவனுக்கு எங்கிருந்து திருட்டுப் பழக்கம் வந்தது என கவலைப்பட்டாள். அவனோடு ஒரு வார்த் தையும் பேசவில்லை. ஆறாவது வீட்டிலிருந்த சுப் புலாபுரம் பாட்டிதான் வேப்பிலையை அரைத்து கையில் பத்து போட்டுவிட்டாள். "சின்னப்பயன்னு கூட பாக்காம இப்பிடி சூடு போட்டு விட்றுக்கா தேவிடியா முண்ட. நம்ம ஆஸ்டலத் தாண்டி தான மெயின் ரோட்டுக்குப் போகனும், என்னிக்காச்சும் அவள இந்தப் பக்கம் பாத்தா ஒன்னு அவ மூக்க அறுப்பேன் இல்ல மொலைய அறுப்பேன்." என அந்தப் பாட்டி ஆவேசமாகக் கத்தினாள். ரோஸி ஆண்ட்டி எதுவும் பேசவில்லை. ராகவன் எல் லோருக்கும் பொதுவாக "நாம ஊர்ககாரனுங்கள பகைச்சுக்கிட்டு எதும் செய்ய முடியாது, இத அப் பிடியே விடுங்க." என கூடியிருந்த எல்லோரையும் கலைத்துவிட்டார். காயம் பட்ட வலியை விடவும் ரோஸி ஆண்ட்டி எதும் பேசாமலிருந்த இறுக்கம் அவனை ரொம்பவே வருத்தியது. அந்த ஞாயிற் றுக்கிழமை நடந்த பைபிள் வகுப்பில் மனப்பா டம் செய்து வைத்திருந்த மத்தேயுவின் ஒன்பதாம் அதிகாரத்தை ரோஸி ஆண்ட்டி சொல்லும் அதே தொனியில் கண்ணை மூடிக் கொண்டு சொல்லத் துவங்கினான்.

1 அப்பொழுது, அவர் படவில் ஏறி, இக்கரைப்பட்டுத் தம்முடைய பட்டணத்திற்கு வந்தார்.

2 அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

3 அப்பொழுது, வேதபாரகரில் சிலர்: இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக்கொண்டார்கள்.

4 இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?

5 உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ எது எளிது?

6 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்.

7 உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப்போனான்.

8 ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்த

வராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

9 இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகை யில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக்கண்டு: எனக்குப் பின் சென்றுவா என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான்.

10 பின்பு அவர் வீட்டிலே போஜனபந்தியிருக்கை யில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியி ருந்தார்கள்.

11 பரிசேயர் அதைக்கண்டு, அவருடைய சீஷர் களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்காரரோ டும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென் னவென்று கேட்டார்கள்.

12 இயேசு அதைக்கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ள வர்களுக்கு வேண்டியதில்லை.

13 பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற் றுகொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிக ளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

வேத வசனத்தை ஒப்புவிக்கும் மனப் போகிலிருந்து நகர்ந்து அவன் பிரார்த்தனைக்குள் கரைந்து போவது போலிருந்தது. மொத்த அதிகா ரத்தையும் சொல்லி முடித்த நேரத்தில். எல்லோ

ரும் ஆச்சரயமாகப் பார்த்துக் கொண்டிருக்கையி லேயே ரோஸி ஆண்ட்டி அவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள். அந்த பிரார்த்தனை தனக்கானதென்பது புரிந்த அவளின் கண்கள் கசிந்து போயிருந்தன. நெற்றியி முத்தமிட்டவள் "நீ பசிக்காக தாண்டா திருடின, அது பாவம் இல்ல. விடு. அழாத. ஆண்ட்டிக்கு உன்மேல கோவ மில்ல." கண்ணீர் வழிய நின்ற அவனது கன்னங்க ளைத் துடைத்துவிட்டாள். பைபிள் வகுப்பில் சிறப் பாக வேத வசனங்களை ஒப்புவிக்கும் குழந்தை களுக்கு வழங்கப்படும் அன்பளிப்பான க்ரீம் பன் அந்த வாரம் முதல்முறையாக கதிருக்கு கிடைத் தது. தேவ அப்பத்தின் சுவை இந்த க்ரீம் பன்னோடு ஒப்பிடும்போது பெரிதாக ஒன்றும் இருக்கப்போவ தில்லையென அதைத் தின்று முடித்த நிமிடத்தில் கதிர் நம்பினான். எல்லா பைபிள் வகுப்பிலும் இனி தனக்கே க்ரீம் பன் கிடைக்கவேண்டுமென உறுதி எடுத்துக் கொண்ட அவன் பாடப்புத்தகத்தை முழு வதுமாக தவிர்த்து பைபிளை வாசிக்கத் துவங்கி னான். "இயேசு அவனை நோக்கி, நீ விசுவாசிக்க வேண்டுமானால் ஆகும், விசுவாசுக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்." – மாற்கு 93. தனது புத் தகத்தில் எழுதிக் கொண்ட நாளில் இனி தான் கதிர் இல்லை கிருபா என பரிபூர்ணமாய் தன்னை கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுத்தான்.

CHILDREN VILLAGE - 3

ஃபவுண்டர்ஸ் டே கொண்டாட்டம் எல்லா வருடங்களையும் போல் வெகு விமரிசை யாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. கதிர் அந்த விடுதியில் சேர்ந்து மூன்று வருடங்களான நிலையில் இங்கு எல்லாமும் அவனுக்குப் பழக்கமாகி இருந்தன. புதிதாக வரும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் அளவிற்கு பக்குவடைந்திருந்தான். ஃபவுண்டஃர்ஸ் டேவும், பேரண்ட்ஸ் டேவும் அந்த விடுதியின் இருபெ ரும் கொண்டாட்டங்கள். விளையாட்டுப் போட்டி கள் பரிசுகள் அற்புதமான விருந்து என எல்லாமும் கிடைக்கும். சில மாதங்களுக்கு முன்பாகத்தான் ரோஸி ஆண்ட்டி அங்கிருந்து கொடைக்கானலில் இருக்கும் வேறு ஒரு விடுதிக்கு மாற்றலாகிச் சென் றாள். “எதுக்கு ஆண்ட்டி அங்க போறீங்க? என அவள் பராமரிப்பில் இருந்த குழந்தைகள் எவ்வ ளவு கேட்டும் யாருக்கும் அவள் பதில் சொல்லி இருக்கவில்லை. ”கிருபா, நான் இருந்தாலும் இல் லாட்டியும் நீ கர்த்தருக்கு விசுவாசமா இருக்கனும்

சரியா? அவர முழுசா நம்பு. அவர் தன்ன நம்பற யாரையும் கைவிட்றதில்ல. உனக்காக மட்டுமில்லாம எல்லாருக்காகவும் ப்ரே பண்ணு." கிளம்புவதற்கு முந்தைய இரவு இவனிடம் மட்டும் அவள் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தாள். இந்தக் குழந்தைகளை இனி யார் பார்த்துக் கொள்ளுவார்களென்கிற கவலை அவளுக்கு. மழை, வெயில், காற்று என வெவ்வேறு சீசன் உள்ளதைப் போல் விடுதியில் நோய்களுக்கும் சீசன் உண்டு. முக்கியமான இரண்டு அம்மை சீசனும், சிரங்கு சீசனும். ரோஸி ஆண்ட்டி தன் பொறுப்பிலிருந்த குழந்தைகளை யாரோ ஒருவரின் பிள்ளைகளாய்ப் பார்ப்பதில்லை.

"ரோஸி, இதெல்லாம் என்ன உன் பிள்ளைகளா? எதுக்கு இவ்ளோ அக்கற எடுக்கற? அப்டியே விட வேண்டிதான?" என மற்ற பெண்கள் கேட்பார்கள். ரோஸி ஆண்ட்டிக்கு உடனே கோவம் வரும்.

"இவங்க எல்லோருமே கர்த்தரோட பிள்ளைங்க. நான் அவருக்கு எப்பிடி விசுவாசமா இருக்கனோ, அதே மாதிரி இந்தப் பிள்ளைகளுக்கும் விசுவாசமா இருக்கனும்ல" என்பாள். அதனாலேயே அவர்களை சரியாக குளிக்க வைப்பது, நகம் வெட்டி சுத்தமாக இருக்க வைப்பதென எல்லாவற்றையும் பார்த்து பார்த்துச் செய்வாள். மற்ற வீட்டுக் குழந்தைகள் வார விடுமுறை நாட்களில் பெரும்பாலும் குளிப்பதில்லை. பகல் முழுக்க மைதானத்திலும் சுற்றியிருக்கும் காடுகளிலும் அலைந்து

திரிந்த அழுக்குகளோடு சுற்றுவார்கள். வெயில் அலைந்து திரிந்து எல்லோருமே வெயிலின் மனி தப் பிரதிகளாகவே சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

கோடை காலம் துவங்கும் போதே நோய்கள் அதற்காகவென காத்திருந்தது போல் குழந்தைகளைத் தேடி வரும். கை கால்களில் சிரங்கு வத்திப் போன பிள்ளைகளுக்கு அருகில் செல்லவே அருவருப்பாய் இருக்கும். பள்ளிக்கூடத் தில் தனியாக உட்கார வைத்துவிடுவார்கள். விடுதி யிலும் தனிப் படுக்கைதான், ஆனாலும் ஒரு வீட் டில் ஒருவருக்கு வந்துவிட்டால் அடுத்தடுத்த நாட களில் வேகமாய் மற்றவர்களுக்கும் பரவுவதை கட் டுப்படுத்த முடியாது. சிரங்கு வந்த கையோடு சாப் பிட முடியாது, ஒரே வீட்டில் மூன்று நான்கு பேருக்கு சிரங்கு வந்தால் பொறுப்பாளர் எல்லோருக்கும் ஊட்டி விடவும் முடியாது. இதனாலேயே பெரும்பா லும் சிரங்கு வந்தவர்களின் பெற்றோர்களை வரச் சொல்லி அவர்களின் வீட்டிற்கு அனுப்பி விடுவார் கள். யாருமே இல்லாத ஆதரவற்றக் குழந்தைக ளுக்கு விடுதியிலிருந்த சர்ச்சும், விளையாட்டுப் பொருட்கள் வைத்திருக்கும் வீடும் தான் கெதி. வெக்கை உடல் முழுக்க ஊர்ந்து அரிக்கும் போது சிரங்குக் கைகளால் சொரியவும் முடியாமல் சொரி யாமல் இருக்கவும் முடியாமல் குழந்தைகள் தவிப் பார்கள். குப்பை மேனிச் செடிகள் குறைவில்லா மல் கிடைத்ததால் ராகவனும், முத்துவும் தேடிப் போய் பறித்துக் கொண்டு வந்து அரைத்து சிரங்கு

வந்தவர்களுக்கு பத்துப் போட்டுவிடுவார்கள். திரு விழா நேரங்களிலும், நோய் வரும் நேரங்களிலும் மட்டுமே ப்ரதர் ஆண்டர்சன் அங்கு வருவது வழக் கம். ஆறரை அடி உயரம். முறுக்கின மீசை. வெளே ரேன வெயில் பட்டு மிளிரும் ப்ரிட்டிஷ் தோல். ஆனாலும் தன்னை சந்தனப் பாண்டியன் என்று தமிழ்ப் பெயர் சொல்லி கூப்பிடுவதையே விரும்புவார். இந்த மூன்று விடுதிகளுக்குமான பொறுப்பாளர். அவருக்கென குடும்பம் உறவுகள் எல்லாம் இங்கி லாந்தில் இருந்தாலும் அவர் இங்கிருக்கும் கர்த்த ரின் பிள்ளைகளுக்காகவே தனது வாழ்வை அர்ப்ப ணித்துக் கொண்டவர். சிரங்கு வந்த பிள்ளை களை பொறுப்பாளர்கள் கூட தயக்கத்தொடு தொடுவார்கள். பிரதர் ஆண்டர்சன் எந்த முகச்சுளி வும் இல்லாமல் தொட்டுப் பேசி பத்துப் போட்டுவிடு வார். சிரங்கு வத்திகளுக்கு ப்ரதரை பார்க்கும் போது உற்சாகம் வருவதற்கு இன்னொரு முக்கியக் காரணம் எல்லோருக்கும் கை நிறைய வெளி நாட்டு சாக்லெட்டுகளைக் குடுப்பார். ரோஸி ஆண்ட்டி இந்தக் காலங்களில் மட்டும் தனது குழந் தைகளை யாரோடும் சேர விடுவதில்லை. தனி யாக பள்ளிக்கூடம் கூட்டிச் சென்று மீண்டும் தனியா கவே திரும்ப அழைத்து வருவாள். மற்ற வீட்டுப் பொறுப்பாளர்களுக்கு பார்க்க எரிச்சலாக வரும். சிரங்கிலிருந்து தப்பித்தாலும் அம்மை அந்த வீட் டுக் குழந்தைகளை விட்டு வைப்பதில்லை. அம்மை வந்த மற்ற பிள்ளைகளுக்கு தலைமாட்

டில் வேப்பிலையை வைத்து அப்படியே படுக்க வைத்துவிடுவார்கள். ரோஸி ஆண்ட்டி ஆஸ்டின் பட்டி மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்று அங் கேயே உள்நோயாளியாக அனுமதித்து விட்டு வரு வாள். உடல்நிலை சரியாகி வரும் வரை அவர்க ளுக்காக தினமும் கர்த்தரிடம் பிரார்த்திப்பாள். தான் செய்யும் எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கையும் அக்கறையையும் கொண்டிருந்த அவள் அந்தக் குழந்தைகளை விட்டுச் சென்றபோது அந்தக் குழந்தைகள் விடுதியிலிருந்த மற்ற குழந்தைக ளைப் போல் மாறினர்.

கதிரை எல்லோரும் கிருபாவென் றுதான் கூப்பிடுகிறார்கள். அவனுக்கே அவனது நிஜப்பெயர் மறந்து போயிருந்தது. ரோஸிக்குப் பிறகு அந்தக் குழந்தைகள் பைபிளையும், பிரார்த் தனைகளையும் மறந்து போயிருந்தனர். கதிர் மட் டும் விடாப்பிடியாய் கர்த்தரை வழிபட்டான். 'கர்த் தரே அவனது மீட்பர்' என ஆழமாக அவனுக் குள் ரோஸி ஆண்ட்டி விதைத்திருந்த நம்பிக்கை விருட்சமாய் வளர்ந்தபடியே இருந்தது. ஞாயிற் றுக்கிழமை பிரார்த்தனையில் குழந்தைகள் முன்பு போல் ஆர்வம் காட்டுவதில்லை என்கிற வருத் தம் ஃபாதருக்கு இருந்தாலும் கதிரின் விசுவாசம் அவரை ஆறுதல்படுத்தியது.

"தெய்வ ஆசீர்வாதத்தோடே

அடியாரை அனுப்பும்

வார்த்தையென்னும் அப்பத்தாலே

போஷித்து வளர்ப்பியும்
இப்போதும்மை தேடி வந்து
மனதாரப்போற்றினோம்
மோட்சலோகத்தில் களித்து
உம்மை வாழ்த்தி தொழுவோம்”

என அவன் மனமுருக பாடுவதைக் கேட்கையில் கர்த்தரும் கரைந்து போவார். நம்பிக்கை கொண்டவன் கைவிடப்படுவதில்லை என்னும் மந்திரத்தை முழுதாக நம்ப அவன் குழந்தைத்தனம் போதுமானதாய் இருந்தது. பரிசுத்த நம்பிக்கையின் பலனாய் அவன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புனித அப்பமான க்ரீம் பன்னை அன்பளிப்பாய் பெற்றான் என்றாலும் பைபிள் வாசிப்பது அவனுக்கு அலாதியான மயக்கத்தையும் சந்தோசத்தை யும் தந்தது. பசிக்கு உணவும் நீரும் உடன் மனம் திரும்பு தலுக்கான ஆறுதலும் அவரின்றி வேறு யாரால் தர முடி யும்?

“ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங் கள்; நாளையதினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.”

மத்தேயு 6:34

இந்த வேத வசனத்தை வாசிக்கிற போதெல் லாம் எதிர்காலம் குறித்து அவனுக்கிருந்த அச் சங்கள் யாவும் நொடிப்பொழுதில் கரைந்துபோ கும். எல்லா உதயங்களையும், அஸ்தமனங்களை யும் கர்த்தர் மனித ஜீவன்களின் நலனுக்காக வென்றே படைத்திருக்கிறார். அவரது பிள்ளைக

ளுக்கு என்ன செய்யவேண்டுமென்பது அவருக்கு நன்றாகவே தெரியும்னெ ஆறுதல் கொள்ளுவான்.

ஃபவுண்டர்ஸ் டே நாளில் எல்லா வருடங்களை யும் போல் ஏராளமான வெள்ளைக்காரர்கள் வந் திருந்தார்கள். மைதானம் முழுவதும் சுற்றிலும் சவுக்கு கம்புகள் வேலிகளாக அடிக்கப்பட்டு கலர் காகிதங்கள் ஒட்டப்பட்டிருந்தன. குழந்தைகளுக்கு கிடைத்திருந்த அளவில் பெரியதான புதிய உடை களை உற்சாக அணிந்தபடி விளையாட்டுப் போட் டிகளில் கலந்து கொண்டார்கள். கதிர் எல்லாப் போட்டிகளையும் வேடிக்கை மைதானத்திற்கு வெளியில் நின்று வேடிக்கை பார்த்தான். எதிலும் கலந்து கொள்ள மனம் ஒப்பவில்லை. நீண்ட நாட் களுக்குப் பின் வயிறு முட்ட சாப்பிட்ட உணவு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வெளியேறக் காத்துக் கொண்டிருந்ததால் போட்டிகளில் கலந்து கொள்ள தயக்கமாய் இருந்தது. ப்ரதர் ஆண்டர்சன் இவனைக் கூப்பிட்டார்.

“கிருபா ஏன் எதுலயும் கலந்துக்கல.?” என அக்க றையாகக் கேட்டார்.

“எனக்கு காச்ச பிரதர்? விளையாட முடியாது” என் றான்.

“நோ. நோ. நீ ஓட்டப்பந்தயத்துல கலந்துக்க. மத்த பசங்க எல்லாம் ப்ரைஸ் வாங்கறாங்க, நீ வாங்க வேணாமா? கம் கம்...”

என வம்படியாக கூட்டிக் கொண்டு போய் ஓட் டப்பந்தய வரிசையில் நிற்க வைத்தார். இவனுக்கு முன்பே வயிறு கலக்கிக் கொண்டிருந்ததால் அந்த வரிசயில் நின்று ஓடுவதா அல்லது தப்பித்து ஓடு

வதா என குழம்பிக் கொண்டிருந்தான். வந்திருந்த விருந்தினர்கள் எல்லாம் உற்சாகமாய் கைதட்ட ஓடுவதற்கான விசில் அடிக்கப்பட்டது. கறி சோறும் தண்ணீரும் நிறைந்த தனது வயிறோடு எல்லோ ரிலும் குள்ளமான கதிர் வேக வேகமாய் எல் லோருக்கும் முன்பாக ஓடிக் கொண்டிருக்க, பாதி வழியில் அவன் இடையிலிருந்த ட்ரவுசர் அவிழத் துவங்கியது. ஒரு கையால் ட்ரவுசரை இறுக பிடித் தபடியே மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடியவனின் கால்களை மனிதக் கால்களென்று சொல்ல முடி யாது, குதிரைக்குட்டியின் கால்கள் என்று சொல்ல லாம். இயல்பிலேயே அவன் பாதங்கள் ஓட்டப்பந் தய வீரர்களுக்கான அமைப்பிலிருக்கும். முதலா வதாக அவன் இலக்கை அடைந்த அதே நேரத் தில் உடல் வியர்த்து நின்ற நிலையிலேயே கால் வழியாய் ஆய் போய்விட்டான். அவன் வெற்றி பெற் றதற்காக கை தட்டிய எல்லோரும் இந்த நிலை யில் பார்த்து சத்தமாக சிரித்துவிட்டனர். ட்ரவு சரை அவிழ்த்து கையில் பிடித்துக் கொண்டு தனது வீடு நோக்கி ஓடியவனின் பின்னால் கற்பகமும் தொடர்ந்து வந்தாள்.

“கிருபா இருடா நானும் வரேன்.”

எனக் கத்தியவளிடம் “ஒன்னும் வேணாம் போடி. எல்லாரும் சிரிக்கிறாங்க. நீயும் சிரிக்கிற. போ வராத.” என திட்டியவன் நிற்காமலேயே வீட்டை நெருங்கினான். கை கால்களைக் கழுவிக் கொண்டு வீட்டின் அறைக்குள் போய் கதவடைத் துக் கொண்டான்.

“டேய் நான் சிரிக்கலடா. வந்து கதவ தொற. போய் உன் பரிச மட்டும் வாங்கிட்டு வந்திரலாம். வாடா.” என அவனுக்காக வாசலிலேயே நின்றாள்.

“பரிசும் வேணாம். ஒரு புண்டையும் வேணாம். நீயே போயி வாங்கு, அங்க போனா எல்லாரும் என்னயப் பாத்து சிரிப்பாய்ங்க.” அவன் குரல் அழுவது போலி ருக்க, கெட்ட வார்த்தை சொன்ன மறுநிமிடமே “ஏசப்பா கெட்ட வார்த்த பேசிட்டேன். மன்னிச் சுக்கோ.” என கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டான். கற் பகம் எவ்வளவு தட்டியும் அவன் கதவு திறக்காத தால் அவனுக்குப் பதிலாக அவளே போய் பரிசை வாங்கினாள். வீட்டிற்குள்ளேயே இருந்துவிடலா மென நினைத்தால் மதிய நேரத்தின் பசியை பொறுத்துக் கொள்ள முடியவில்லை, போதாக்கு றைக்கு கொதிக்கும் ஆட்டுக்கறியின் வாசனை யும் அவனை சுண்டி இழுத்தது. எல்லோரும் தன் னையே பார்க்கிறார்களோ எனத் தயக்கத்தோடு வெளியே வந்தவனை கற்பகமும், காமாட்சியும் ஓடி வந்து கைகளைப் பிடித்துக் கொண்டார்கள்.

“ஏண்டா வரவே இல்ல. எல்லாரும் உன்னய கூப்ட் டுக்கிட்டே இருந்தாங்க. இந்தா உன் ப்ரைஸ். “ அவனுக்காக அவள் வாங்கியிருந்த டிஃபன் பாக்ஸை நீட்டினாள். கோழி முட்டை வடிவிலான அந்த எவர்சில்வர் பாத்திரம் அவனுக்குத் தந்த சந் தோசம் அளவில்லாதது. உற்சாகமாக மதிய உண வுக்கு சென்றபோது ப்ரதர் அவனை தன்னோடு அமர வைத்துக் கொண்டார். அவரிலும் வெள் ளையாக இருந்து அவரின் மனைவி அவன் தலை யைக் கோதிவிட்டு அவன் பெயரைக் கேட்டாள். ‘கிருபா’ என்றான். தன் பையிலிருந்து கொஞ்சம்

சாக்லெட்டுகளை எடுத்துக் கொடுத்தாள். விடுதியிலிருந்த எல்லாக் குழந்தைகளும் ஒரே இடத்தில் அமர்ந்து சாப்பிட வசதியாக போடப்பட்டிருந்த கொட்டகையின் கீழ் வந்திருந்த விருந்தினர்களும் குழந்தைகளுமாய் உற்சாக சாப்பிட மதியத்திற்குப் பின் மற்ற போட்டிகள் துவங்கின. பிற்பகலுக்குப் பின் எல்லாப் போட்டிகளிலும் அவன் கலந்து கொண்டாலும் பரிசு ஒன்றும் கிடைத்திருக்கவில்லை. கற்பகம் வெவ்வேறு வர்ணங்களில் ஒரு மீனை வரைந்து இரண்டாவது பரிசைப் பெற்றிருந்தால். அவளது மீன் மிக அழகாக இருப்பதாகச் சொல்லி ஒரு வெள்ளைக்காரர் ஐம்பது ரூபாய்க் கொடுத்ததோடு அவளைத் தூக்கி கழுத்திலும் கன்னத்திலுமாய் முத்தமிட்டதை காமாட்சியும், கதிரும் மட்டுமே பார்த்தனர்.

மாலை வேத வசனங்களை ஒப்புவிக்கும் போட்டியில் பெரும்பாலான குழந்தைகள் அதில் கலந்து கொள்ளவே இல்லை. ஏதேனுமொரு பகுதியின் இரண்டு அதிகாரங்களை தெளிவாக ஒப்புவிக்க வேண்டும். வெறுமனே ஒப்புவித்தலாக இல்லாமல் பைபிளை உள்வாங்கிக் கொண்ட ஈடுபாட்டையும் பொறுத்தே பரிசு வழங்கப்படும். கதிர் தனக்கு விருப்பமான பிரசங்கியின் மூன்று அதிகாரங்களை ஒப்புவித்தான். மற்றக் குழந்தைகள் ஏனோதானோவென வேத வசனங்களை ஒப்புவிக்க, பைபிள் வாசிக்க வென்றே ரோஸி ஆண்ட்டியால் பழக்கப்பட்ட கதிர் பிரார்த்தனையின் முழு ஈடுபாட்டோடு முதல் அதிகாரத்தைத் துவங்கினான்.

1. தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கியின் வாக்கியங்கள்.

2. மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.

3. சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?

4. ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது.

5. சூரியன் உதிக்கிறது, சூரியன் அஸ்தமிக்கிறது; தான் உதித்த இடத்திற்கு அது திரும்பவும் தீவிரிக்கிறது.

6. காற்று தெற்கே போய், வடக்கேயுஞ்சுற்றி, சுழன்று சுழன்று அடித்து, தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வரும்.

7. எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்.

8. எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது; அது மனுஷரால் சொல்லிமுடியாது; காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை.

9. முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை.

10. இதைப் பார், இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே.

11. முன் இருந்தவைகளைப்பற்றி ஞாபகம் இல்லை; அப்படியே பின்வரும் காரியங்களைப்பற்றியும் இனிமேலிருப்பவர்களுக்கு ஞாபகம் இராது.

12. பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்தேன்.

13. வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம்பண்ணினேன், மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்.

14. சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

15. கோணலானதை நேராக்கக் கூடாது, குறை வானதை எண்ணிமுடியாது.

16. இதோ, நான் பெரியவனாயிருந்து, எனக் குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கி லும் ஞானமடைந்து தேறினேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந் தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக் கொண்டேன்.

17. ஞானத்தை அறிகிறதற்கும், பைத்தியத்தை யும் மதியீனத்தையும் அறிகிறதற்கும், நான் என் மனதைப் பிரயோகம்பண்ணினேன்; இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண் டேன்.

18. அதிக ஞானத்திலே அதிக சலிப்புணடு; அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன்.

சின்ன தடுமாற்றம் கூட இல்லாமல் அவன் பிரசங்கி யின் மூன்று அதிகாரங்களையும் ஒப்புவித்து முடித் தபோது அங்கிருந்த எல்லோரும் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிரதர் ஆண்டர் சன் அவனைத் தன் தோளில் தூக்கி வைத்துக் கொண்டார். எல்லோரும் அவனுக்காக கை தட்டி யபோது அவனுக்கு கூச்சமாய் இருந்தது. பிரதரின் மனைவி இவன் நெற்றியில் முத்தமிட்டு சிலுவைக் குறி போட்டாள். எல்லோரும் அவனைப் பாராட்டிப்

பேசுவதைப் பார்க்க கற்பகத்திற்கு சந்தோசமாக இருந்தது.

CHILDREN VILLAGE – 4

வறக்காட்டின் குளிருக்கு அசாத்தி யமான அடர்த்தியுண்டு. கார்த்திகை மாதத்தில் துவங்கும் இந்தக் குளிர் அதிகாலை சூரிய வெளிச் சத்திற்குப் பின்பும் கூட தயக்கத்தோடு தான் நகர்ந்து செல்லும். வெளிச்சத்தை கண்களின் வழியாய் உணர்கையிலேயே குளிர் தொடையிடுக் கிலும் பல்லிடுக்கிலும் ஊடுருவி நடுக்கமெடுக் கும். பெரிய கார்த்திகை கொண்டாட்டத்திற்காக விடுதியில் எல்லா வீடுகளிலும் விளக்குகள் ஏற்றப் பட்டிருந்தன. அதோடு பனை ஓலைகளால் வேயப் பட்ட உயரமான கோபுரமும் தயாராய் இருந்தது. பழைய துணிகளை மட்டுமே உடமையாக வைத் திருந்த அங்கிருந்த குழந்தைகள் தங்களிடமிருந்த கிழிந்த இதற்குமேல் பயன்படுத்தவே முடியாதென ஆகிப்போன நைந்து துணிகளையும் வெவ்வேறு இடங்களில் பொறுக்கி எடுத்து வந்த டயர்களை யும் கொண்டு வந்து சேர்த்திருந்தார்கள். பதி னைந்து அடி உயரத்தில் பிரம்மாண்டமாய் இருந்த

அந்த பனையோலை கோபுரம் எரிவதைப் பார்க்க பனங்காட்டில் இருந்தும் வந்திருந்தார்கள். அவர் களை கட்ராம்பட்டி ஆட்கள் ஊரோடு சேர்த்துக் கொள்வதில்லை, கள்ளு குடிக்கிறவர்கள் காட் டிற்குள் போய் வருவதுண்டு. கருப்பட்டி, நுங்கு, பதனீர் கொண்டு வரும் பனையேறி மாமாக்கள் வழியில் விடுதியின் குழந்தைகள் யாரைப் பார்த் தாலும் நிறுத்தி நுங்கோ பதனீரோ தராமல் போவ தில்லை. வருடம் தவறாமல் கார்த்திகை திரு நாளில் இங்கு எரியும் பனையோல கோபுரம் பார்க்க அற்புதமாக இருக்குமென்பதால் அவர்க ளும் வந்துவிடுவார்கள். முதல் நெருப்பை ப்ரதர் ஆண்டர்சன் தான் வைத்துத் துவக்குவார். அவர் வராத நேரங்களில் ராகவனோ முத்துவோ நெருப்பு வைப்பார்கள். பின்பு எல்லோரும் தங்களிடமிருக் கும் துணிகள், டயர்களை தூக்கிப் போடுவார்கள். முழுவதுமாக அந்தக் கோபுரம் எரிந்து அடங்க நீண்ட நேரம் பிடிக்கும். வெறி கொண்ட பேய்கள் நெருப்பில் ருத்ர தாண்டவமாடுவதைப் பார்க்கும் ஒருவரால் ஆடாமல் இருக்க முடியாது. அக்னி எப் படி ஒரு மனிதனை அச்சுறுத்துகிறதோ அப்படியே கொண்டாடவும் தூண்டுகிறது. சிதறல் இல்லாமல் எரியும் நெருப்பின் முன்னால் இயல்பாக ஆட வராத கால்கள் என்ன கால்கள். ஆட விரும்பாத மனிதன் என்ன மனிதன்?

பனையோலைக் கோபுரம் எரியத் தயாராய் இருந்த போது விடுதியிலிருந்த எல்லா

சிறுவர்களும் அதன் முன்னால் கூடிவிட்டனர். கதிர் தன்னிடம் துணி எதுவுமில்லாததால் சைக்கிள் டயர்களை எடுத்து வந்திருந்தான். கண் முன்னால் வரப்போகும் நெருப்பு நடனத்தைக் காண கண்கள் ஆர்வமாய் விரிந்திருந்தன. ராகவன் தான் அந்த வருடம் முதல் பந்தத்தை எரிந்தது. சீமண்ணை நனைக்கப்பட்ட துணிகள், டயர்கள், பழைய துணி கள் எல்லாம் சேர்ந்து எரியத் துவங்க இரவு அவர் களோடு சேர்ந்து அந்த மகோன்னதமான தருணத் தைக் கொண்டாடத் துவங்கியது. நெருப்புக் கோபு ரத்தைச் சுற்றியிருந்த கூட்டம் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க மெதுவாக பின்னால் நகர்ந்து வந் தது. எல்லா சிறுவர்களும் சந்தோசமாக ஆடினார் கள். பனையேறிகள் தாங்கள் கொண்டு வந்திருந்த கருப்பட்டிகளை உடைத்து எல்லோருக்கும் சாப் பிடுவதற்கு பிய்த்துக் கொடுத்தார்கள். பனையோ லையில் படர்ந்த நெருப்பு காற்றின் வேகத்தில் அரூப ஓவியங்களாய் இடம் மாறி இடம் மாறி சூழத் துவங்கியது. குளிருக்கு இதமாக இருக்கட்டுமென கதிர் சட்டையை அவிழ்த்து எறிந்துவிட்டு வெற்று மேலோடு உற்சாகமாய் ஆடினான். வேம்படியானும் கற்பகமும் அவன் தலைக்குள் பிசாசுகள் இறங்கி விட்டதாக கேலி செய்தார்கள். “நெருப்புல எப்டிடா பேய் வரும்?” என கதிர் புரியாமல் கேட்டான். கற் பகம் “எல்லா பேயும் நெருப்புல இருந்துதாண்டா வரும். கோபுரத்துல இருந்து நெருப்பு அங்கி யும் இங்கியுமா அலையுதே அதெல்லாம் என்ன

தெரியுமா?" என அவனை பயமுறுத்தும் படியாகக் கேட்டாள். "என்னாது அதெல்லாம்?" கதிர் கண் களில் மிக மெதுவாக படரத் துவங்கிய அச்சத் தோடு கேட்க அவள் அதே உணர்ச்சியோடும் முக பாவனையோடும் "அதெல்லாமே பேயிங்க தான். பஸ்ல அடிபட்ட பேயி, தூக்குப் போட்டு செத்த பேயி, கெணத்துல விழுந்த பேயி இப்பிடி எல்லா மாதிரியான பேயிங்களும் நெருப்போட சேந்து எரி யும். யாரு அதையே பாத்துட்டு இருக்காங்களோ அவங்க பின்னாலயே தொரத்திட்டு வந்துரும்." என கண்கள் நிறைய பயத்தோடு சொன்னாள். அவ னுக்கு அச்சத்தில் உள்ளங்கால்கள் வியர்த்தன. திரும்பி நெருப்புக் கோபுரத்தைப் பார்த்தான். அக் னிப் பேய்கள் இவனையே தொடர்ந்து வருவது போல் ஆர்வமாய் தீண்ட விரிந்து தம் கைகளை விரித்துக்கொண்டிருந்தன.

உறக்க மயக்கத்தில் ஆட்கள் வீடுக ளுக்குத் திரும்ப கதிரும் இன்னும் சில சிறுவர் களும் மட்டும் தொடர்ந்து விளையாடிக் கொண் டிருந்தார்கள். நெருப்புக் கோபுரத்தைப் பார்த்த படி தூரமாக ராகவனும், முத்துவும் கள்ளு குடித் துக் கொண்டிருந்தார்கள். பாதிக்கும் மேல் எரிந்து போன கோபுரத்திலிருந்து நெருப்புத் துண்டுகள் கொஞ்சமாய் கருவேலங்காட்டிற்குள்ளும் பறந்து சென்றது. உடலில் சாம்பலின் கருப்பு படர சிறுவர் கள் களைத்துப் போயிருந்தனர். தனது வீட்டிற் குப் பின்னால் இருந்த குளிக்குமிடத்தில் உடலில்

இருந்த சாம்பலைக் கழுவிக் கொண்டு கதிர் உறங்கச் சென்றான். நெருப்பிலிருந்து நீங்கிய பிறகு குளிரின் தீவிரம் புரிந்தது. திருவிழா நாட்களில் குழந்தைகள் இந்த வீடென்று இல்லாமல் தங்களுக்குப் பிடித்த இடங்களில் உறங்குவார்கள். கதிருக்கு கற்பகத்தைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவள் மூன்றாவது வீட்டிலிருந்தாள். உறங்கியிருக்கலாம். ஆனாலும் எழுப்பி இந்த இரவின் கதைகளை அவள் பாதியில் விட்டுப்போன அச்சத்தின் கதைகளைக் கேட்கலாமென விரும்பினான். ஆனால் அவளை எப்படி எழுப்புவதென்கிற குழப்பத்திற்கு மட்டும் விடை கிடைக்கவில்லை.

பனியில் ஆழ்ந்த நிசப்தத்திற்குள்ளிருந்த வீட்டில் குழந்தைகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். கதிர் பெண் குழந்தைகள் உறங்கும் பகுதியை எட்டிப் பார்த்தான். இருட்டில் கற்பகத்தை அடையாளங்காண முடியவில்லை. சில நிமிடங்கள் கண்களை இருட்டிற்குப் பழக்கப்படுத்தியபின் கவனமாகப் பார்த்தபோது படுத்திருந்த குழந்தைகளில் கற்பகத்தை அடையாளம் கண்டு கொண்டான். குட்டி குட்டியாய் கற்களை எடுத்து அவள் மீது தூக்கிப் போட, பக்கத்திலிருந்த சிறுமியின் மீது கல் விழுந்து அவள் எழுந்து கொண்டாள். பயந்து போன கதிர் வேகமாக ஓடிவந்து அந்த வீட்டின் வறாந்தாவில் படுத்துக் கொண்டான். வேறு யாரும் இல்லாத வறாந்தாவில் படுத்தபோது குளிர் உடலின் நரம்பெங்கும் வேகமாய்

ஊடுருவியது, சில நிமிடங்களுக்குப்பின் வீட்டின் பின்புறத்தில் உலர்ந்து கொண்டிருந்த கோணிச் சாக்குகளை எடுத்துக் கொண்டு வந்து விரித்துப் படுத்துக் கொண்டவனை உறக்கம் மிக வேகமாய் சூழ்ந்து கொண்டது.

அது அந்த இரவு தானா? வேறு இரவா? நெருப்பு பேய்கள் தொடர்ந்து வருமென கற்பகம் சொன்னது கதையா ? நிஜமா? அவனையும் நெருப்புப் பேய்கள் தொடர்ந்து வந்திருந்தன. அவன் படுத்திருந்த கோணி சாக்கில் ஊடுருவிய முரட்டு உருவம் ரகவனுடையது என்று தெரிந்த போது அவன் குறி கதிரின் உடலெங்கும் ஊர்ந்து கொண்டிருந்தது. அவன் சத்தம் போட்டு கத்துவதற்கு முன்பாகவே முத்து அவன் வாயைப் பொத்திக் கொண்டான். காட்டமான பனங்கள்ளின் நெடி சூழ அவர்கள் இருவரும் மயிர்கள் மழிக்கப் படாத அழுக்கடைந்த தங்கள் குறிகளை இவனின் வாய்க்குள் செலுத்தி உறவு கொள்ள வலுக்கட்டாயமாக முயன்றனர். அவனால் அலறவே முடிய வில்லை. ராகவன் முரட்டுத்தனமாக அவனோடு உறவு கொள்ள கதிருக்கு வலியிலும் வேதனையிலும் கண்ணீர் பெருகியது. ஆதரவற்ற நிலையில் ஒரு குழந்தையின் மீது செலுத்தப்படும் வன்முறைக்கு இணையான துயரம் இந்த உலகில் வேறென்ன இருக்க முடியும்? அவன் தன்னைச் சூழ்ந்த நெருப்புப் பேய்களிடமிருந்து மீள முடியாமல் தவித்தான். வலியில் புழுங்கி புழுவாகி உருக்

குலைய ராகவனுக்குப் பிறகு முத்துவும் அவன் மீது படர்ந்தான். கதிரின் சின்னஞ்சிறு உடலும் மனமும் ரணத்தின் கோர சுழலுக்குள் வழியின்றி கசங்க, ஒருபோதும் மீளமுடியாத துயருக்குள் அவனின் குரல் கலந்து போனது.

அடுத்த நாள் காலையில் பிரார்த்தனைக்கும், உணவுக்கும் கூட எழாமல் படுத்திருந்தவனை கற்பகம் தான் தேடி வந்து எழுப்பினாள். பேய்கள் மீண்டும் வந்து தன்னை இழுத்துக் கொண்டு விட்டதோ என்னும் அச்சத்தில் அவன் பதறி எழுந்தான். "என்னடா ஆச்சு சாப்பிடக் கூட வராம படுத்துக் கெடக்க?"

என கழுத்தில் கை வைத்துப் பார்த்தாள். உடல் கொதித்தது. "அச்சசோ காச்சலாடா?" என கேட்ட படியே அவனுக்கு அருகில் உட்கார்ந்தாள். அவள் கைகளில் இருந்த சூடு ஆறுதலாய் இருந்தாலும் முந்தைய இரவின் அச்சத்திலிருந்து முழுவதுமாய் மீளாத அவன் என்ன பேசுவதெனத் தெரியாத குழப்பத்தில் அவளைப் பார்த்தான். "ஏண்டா பேய பாத்து பயந்த மாதிரி இருக்க? என்னாச்சு?" அவள் தன் தோளில் சாய்த்துக் கொண்டு கேட்டும் அவன் பேசமுடியாமல் வெறுமனே அழ மட்டுமே செய்தான். அவளுக்கு ஏதோ புரிந்தது போலவும் புரியாதது போலவும் இருக்க வீட்டில் வேறு யார் இருக்கிறார்களென பார்த்தாள். ஒருவருமில்லை என்பதை உறுதி செய்து கொண்டபின், "அந்த ராகவனும் முத்தும் உன்னய எதும் செஞ்சாங்களா?" அவள்

சத்தம் வெளியில் கேட்காதபடி கேட்க, மருண்ட கண்களோடு கதிர் அவளையேப் பார்த்தான். தன்னுடலில் இன்னும் மிச்சமிருக்கும் அந்த இரண்டு மிருகங்களின் உடல் நாற்றத்தை அவள் புரிந்து கொண்டிருக்கக் கூடும். ஆமெனத் தலையாட்டினான். "நீ ஏண்டா அவங்க கிட்ட தனியா சிக்கின?" என அவள் கோவமாய்க் கேட்க, "ராத்திரி உன்னயப் பாக்க வந்தேன், எழுப்பப் பாத்தேன். ஆனா நீ எந்திரிக்கல. அப்பறம் அங்கியே தூங்கிட்டேன்." தொண்டையை மீறி வரத்துடித்த அழுகையை அடக்கியபடியே அவன் சொல்ல அவன் கண்களைத் துடைத்துவிட்டவள் "அவங்க ரொம்ப நாளா இப்பிடித்தாண்டா. என்னயல்லாம் எத்தன வாட்டி தெரியுமா? நம்மளுக்கு ஒரு பிரச்சனைன்னு சொன்னா கேக்க யார் இருக்கா? இந்த இடமே வேணாம்னு வீட்டுக்குப் போக முடியுமா? அங்க நம்ம அம்மா அப்பா எவ்ளோ கஷ்டப்படறாங்க. எதுவுமே இல்லாமதான இங்க விட்டுட்டுப் போயிருக்காங்க. நாமதாண்டா சூதானமா இருக்கனும்." என்று ஆறுதலாகப் பேசினாள். கதிருக்கு ஆத்திரத்தில் உடம்பு துடித்தது. "நாம பிரதர் கிட்ட சொல்லுவமா?" என்றான். அவள் பதறிப்போய் அவன் வாயைப் பொத்தினாள். "நாம சொல்லப் போறோம்னு தெரிஞ்சா அடிச்சே கொன்னுருவாங்கடா. அப்டி எதும் செஞ்சிராத." என அமைதிப்படுத்தினாள். "கொஞ்ச நாள் அமைதியா இரு, அவங்க கிட்ட தனியா சிக்கிடாத. சரியா?" வேறு

யாரும் வருவதற்கு முன்பாக அவனை சரிப்படுத்திவிட வேண்டுமென்கிற அக்கறையில் எழுந்து குளிக்கப் போகச் சொன்னாள்.

துர் கனவுகள் நம்ப முடியாத நிஜங்களாக மாறத்துவங்கிய அந்த நாளில் இருந்து கதிர் அடிக்கடி அச்சத்தின் காரணமாய் நோய்வாய்ப்பட்டுப் போனான். அவன் உடலில் எப்போதும் ஒரு நடுகம் சேரத் துவங்கியதோடு அந்தப் பின்னிரவு பேய்கள் அவ்வப்போது அவனை இரவுகளிலும் விடுமுறை நாட்களின் பகல்களிலும் துரத்தத் துவங்கின. அவன் பிடிவாதமாக மறுக்கும் நாட்களில் கிச்சனிலிருந்து திருடிவிட்டான் என்று காரணம் காட்டி கடுமையாகத் தண்டிக்கபட்டான். அடிக்கடி அவனுக்கான உணவு நிறுத்தப்பட்ட போது மாற்று வழியாக ஒன்றை கண்டுபிடித்து வைத்தான். மதிய உணவு இடைவெளியில் சத்துணவு ஆயாவிடம் கொஞ்சம் உப்பை வாங்கி வைத்துக் கொண்டு, அதோடு பனையேறிகள் தரும் கருப்பட்டியை உடைத்து கலந்து வைத்தால் தற்காலிகமாக பசியடங்கும். ஆனாலும் எல்லா நாட்களிலும் இந்த யுக்திகள் அவனுக்கு பலன் அளித்திருக்கவில்லை. ராகவனோ முத்துவோ அவனையும் அவனைப் போல் இன்னும் சில குழந்தைகளையும் பலவந்தப்படுத்துவதை நிறுத்தியிருக்கவில்லை, அவர்களுக்கும் அதை யாரிடமும் சொல்லும் தைர்யமும் வந்திருக்கவில்லை. ரோஸி ஆண்ட்டி தான் இருந்த காலம் வரை குழந்தைகளை எந்த பிரச்

சனைகளில் இருந்து காத்து வந்தாள் என்பதும் அவள் எதனால் இடம் மாற்றப்பட்டிருக்கக் கூடும் என்பதும் கதிருக்கு மெதுவாக புரிந்தது. தன் மீது அத்துமீறும் அந்த அரக்கர்களை எதிர்கொள்ளும் எத்தனையோ முறை கர்த்தரை மனமுருகி அவன் பிரார்த்தித்தான். அவர் ஒருபோதும் அவனுக்காக மனமிறங்கவில்லை. எந்தக் கடவுளும் வலிமையற்றவர்களுக்காக மனமிரங்க மாட்டார்கள் போல.

கதிருக்கு திடீரென உடல் வீக்கம் எடுத்தது. நான்காம் வகுப்பு காலாண்டுத் தேர்வு நேரம். அவன் இயல்பிலிருந்து மிக அதிகமாக எடை கூடியபோது எதுவும் செய்யாமலேயே மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் குருதி கசிந்ததால் மதுரை அரசு மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தார்கள். அவனுடலில் அளவுக்கதிகமாக உப்பு சேர்ந்திருப்பதோடு அவனது குதத்தில் தொடர்ந்து பலமுறை புணர்ந்ததால் கடுமையான ரத்தக் கசிவும் ஏற்பட்டிருந்தது. அந்தக் காயங்களைக் கண்ட மருத்துவர்கள் காவல் துறையில் புகார் செய்தார்கள். அதன் பிறகான மூன்று முழு மாதங்களை அந்த மருத்துவமனைச் சுவர்கள் அவனிடம் எடுத்துக் கொண்டன. குழதைகள் வார்டில் ஒவ்வொரு நாளும் தனக்கருகில் மரணமுறும் குழந்தைகள் தானும் மிக விரைவில் ஒருநாள் இறந்து போவோமென்கிற அச்சத்தை அவனுக்குள் தொடர்ந்து ஏற்படுத்தியபடியே இருந்ததால் எப்போதும் கர்த்தரை துதித்தபடியே இருப்பான்.

அவன் இயேசு கிறிஸ்துவை துதிப்பதைப் பார்க்கும் போதெல்லாம் அம்மா அவன் வாயிலேயே அடிப்பாள். அம்மாவும், அத்தையும் மாறி மாறி அவனோடு இருந்து பார்த்துக் கொண்டார்கள். இதன் பிறகு விடுதிக்குப் போக வேண்டாமென அம்மா சொன்னது ஆழ்ந்த நிம்மதியைத் தந்தாலும், கற்பகம், வேம்பு, காமாட்சி மற்ற நண்பர்கள் பிரதர் ஆண்டர்சன் என மனதுக்கு நெருக்கமான எவ்வளவோ விஷயங்கள் தன்னிடமிருந்து நிரந்தரமாகப் பிரியப் போகிறதென கவலை கொண்டான். ஏன் தனக்குப் பிரியமான எவரும் தன்னோடு நிரந்தரமாக இருப்பதில்லை? என்கிற ஏக்கம் அந்த சின்னஞ்சிறிய வயதில் அவனுக்கு ஆழமான ஏக்கமாக இருந்தது. இந்த மருத்துவமனையிலிருந்து தன்னால் ஒருபோதும் குணமாகிச் செல்ல முடியாதோ என்னும் அச்சத்தை நேரங்காலம் பார்க்காமல் கசியும் குருதி ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. அவனை வழக்கமாக சோதிக்கும் மருத்துவர் ஜாகீர் பைபிளின் மீது அவனுக்கு இருக்கும் ஆர்வத்தைக் கேள்விப்பட்டு படிக்கட்டுமேயென காமிக்ஸ் புத்தகங்களை வாங்கி வந்து கொடுத்தார். தற்காலிகமான ஆறுதலையும் நிம்மதியையும் தந்த அந்தப் புத்தகங்கள் அவனை மரணம் குறித்த அச்சத்திலிருந்து விடுவித்ததோடு வேகமாக குணப்படுத்தவும் செய்தது. மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு கூட்டிச் செல்லும் நாளில் உயர்ந்த முரட்டுத்தனமான ஒரு ஆளைக் காட்டிய

அம்மா “இதுதாண்டா உங்கப்பா.” என்றாள். அவன் அந்த புதிய மனிதரை வினோதமாகவும் அச்சத் தோடும் பார்த்தபோது அவனுக்கு வயது பத்து.

கம்போடிய டயரி - 1

"The bright red blood
Was spilled over the towns and over the plain of Kampuchea, our motherland,
The blood of our good workers and farmers and of
Our revolutionary combatants, of both men and women. T
heir blood produced a great anger and the courage
To contend with heroism.
On the 17th of April, under the revolutionary banner,
Their blood freed us from the state of slavery.

Hurrah for the glorious 17th of April!
That wonderful victory had greater significance
Than the Angkor period!
We are uniting To construct a Kampuchea with a new and better society,
Democratic, egalitarian and just.
We follow the road to a firmly-based Independence.
We absolutely guarantee to defend our motherland,
Our fine territory, our Magnificent revolution!
Hurrah for the new Kampuchea,
A splendid, democratic land of plenty!
We guarantee to raise aloft and wave the red banner of the revolution.
We shall make our motherland prosperous beyond all others,
Magnificent, wonderful!"

Khmer rouge anthem.

நோம்ப் பென் – மார்ச் 1975.

எப்போதும் துப்பாக்கிகள் வெடிக்கக் காத்திருக்கும் நகரத்தில் எல்லோரும் பாதுகாப் பின்மையையே உணர்ந்தார்கள். உயிர் வாழ்தலின் நிச்சயத்தன்மை எந்த கனத்திலிருந்து வேண்டுமா னாலும் அவர்களிடமிருந்து பிரிக்கப்படலாம் என்ற நிலையில் கம்போடிய தேசத்தின் வெவ்வேறு எல் லைகளில் இருந்து மக்கள் தொடர்ந்து நோம்ப் பென் நோக்கி இடம் பெயர்ந்து கொண்டிருந்தார் கள். பரந்து விரிந்த செண்ட்ரல் மார்க்கெட்டை ஒட்டிய வீதிகளில் தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொண்ட ஏராளமான மக்களைப் பார்க்க முடிந்தது. ஸ்ட்ரீட் 126 இன்னொரு வகை யில் செட்டி தெரு என்றழைக்கப்பட்ட அந்த நாளில் நோம்ப் பென் நகரிலிருந்த ஒன்றிரண்டு இந்திய உணவகங்களில் முக்கியமானது கோவிந்தசாமியி னுடையது. புரட்சி படைக்கும் ராணுவத்தினருக் குமான யுத்தம் தீவிரமாகத் துவங்கிய இந்த சில மாதங்களில் நிறைய இந்தியர்கள் நாடு திரும்பி விட்டார்கள். செட்டி தெருவே கூட முன்பு போல் இல்லாமல் சோபையிழந்து போனாலும் கோவிந் தசாமியின் 'ஹோட்டல் இந்தியா' மட்டும் இன்னும் தப்பிப் பிழைத்துக் கொண்டிருந்தது. வெவ்வேறு இன மக்கள் தங்களிடமிருக்கும் கொஞ்ச நஞ்ச பணத்தில் கிடைத்ததை வாங்கி பசியாறிக் கொண்

டிருந்ததால் மலிவான விலையில் அவர்களுக்கு வேக வைத்த அரிசியை பீங்கான் கின்னங்க ளில் சோறாகக் கொடுத்தார். மரணத்திற்கு வெகு அருகில் நகரும் இந்த யுத்த நிலத்தின் குருதிக் கவுச்சியில்தான் கடந்தவாரம் அவரின் மனைவி இரண்டாவது மகனை பெற்றுப் போட்டாள். ஏதோ வொரு வகையில் தன்னை இன்னும் தற்காத்து வைத்திருக்கும் நன்றியுணர்ச்சியில் கோவிந்தசாமி எந்தவித தயக்கமும் காட்டாமல் குறைந்த விலை யில் எல்லோருக்கும் உணவைப் பகிர்ந்து கொண் டிருந்ததில் சேர்க்கும் பணத்தை சரியான நேரத்தில் பயன்படுத்தி ஊருக்குச் சென்றுவிடும் உள்நோக் கமும் இருந்தது. புதிதாக பிறந்திருக்கும் குழந்தை யோடு சேர்த்து குடும்பத்தில் நான்கு பேரும் ஊரி லிருந்த சமையல் வேலைக்கு வந்த மாரிமுத்து ஒரு ஆளுமாய் ஐந்து பேர் அங்கிருந்து ஊர் திரும்பு வது இந்தச் சூழலில் அசாதாரண காரியம். தேசத் தின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து வந்து சேரும் பேருந்துகளுக்கு நிறுத்தம் சென்ரல் மார்க்கெட் அருகில்தான் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மீகாங் எக்ஸ்பிரஸ் பேருந்துகளில் ஒவ்வொரு நாளும் உடலில் காயங்களோடும் பசியோடும் வந்த மக்க ளுக்கு உணவளிக்க இந்தப் பகுதியில் போதுமான உணவகங்கள் இல்லை. மருத்துவ மனையிலி ருந்த மனைவியைப் பார்த்துக் கொள்ள அடிக்கடி அவர் வெளியில் போக வேண்டியிருந்ததால் பத்து

வயதேயான அவரின் மூத்த மகன் அழகர்சாமிதான் கடையைப் பார்த்துக் கொண்டான்.

கப்பித்தன் (கேப்டன்) நாரித்தன் னின் வீடு கோவிந்தசாமியின் வீட்டிற்கு அடுத்த தாக இருந்ததால் இவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் இந்த இக்கட்டான வேளையில் அவர்கள் தான் செய்தார்கள். கப்பித் தன் அவரது மனைவி, மூத்த மகன், மகள் ஜெரோனி, கடைசி மகன் நிமோல் என பெரிய குடும்பம். எப்போதும் உற்சாகம் நிரம்பி வழியும் அந்த வீடு தன்னைச் சுற்றி இருந்த எல்லோருக்கும் அன்பு செய்யவும் அரவணைக்கவும் தயங்கதாது. செட்டித்தெருவிலிருந்த ஊர் ஆட்கள் அவ்வளவு பேரும் சென்ற பிறகும் இவர்களின் பாதுகாப்பு கப் பித்தன் நாரித்தன் மட்டுமே. அழகர்சாமி பெரும்பா லான நேரமும் அங்குதான் இருப்பான். நிமோலுக் கும் அவனுக்கும் சமவயது. வீடு முழுக்க நிறைந்தி ருக்கும் கலைத்தன்மை மயக்கக் கூடிய ஒன்று. அப் சரஸ் நடன ஓவியங்கள், பாரம்பர்ய இசைக்கருவி

கள் ஜெரோனியின் அண்ணன் இசைக்கும் கிதார், அங்கோர்வாட்டின் பிரம்மாண்ட ஓவியங்களென எல்லாமும் சேர்ந்தது. ஜெரோனி பிரபஞ்ச அழகின் சாட்சியம். அப்சரஸ் நடனமாடும் பெண்களுக்கு மட்டுமேயான பிரத்யேகமான அசைவுகளும் நளினமும் வாய்க்கப்பெற்றவள். சில வருடங்களுக்குப் பின் இளவரசி அரண்மனையில் ரொபெம் தெப் அப்சரா நடனமாடியபோது இளவரசியோடு ஆடின குழுவில் இவளும் முக்கியமானவள். நீண்ட காலம் அடையாளமில்லாமல் போயிருந்த இந்த நடனக் கலையை மீட்டெடுத்தது இளவரசியின் அம்மாவும் இளவரசியும் தான். அவர்கள் ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்து நடனப் பயிற்சியளித்து அரங்கேற்றம் செய்தபோது அரண்மனையில் வசந்த காலத்திற்கான துவக்கத்தைச் சொல்லும் ஈரக் காற்று. மீகாங் நதியைப் பார்த்தபடி கட்டப்பட்டிருந்த அந்த அரண்மனையை மையமாக வைத்துதான் நோம்ப் பென் நகரம் உருவானது. அரண்மனையைச் சுற்றின ஒவ்

வொரு வீதியும் ஏதொவொரு வகையில் அரண்ம
னையோடு தொடர்பு கொள்வது போலிருக்கும்.
மின் விளக்கு அலங்காரங்கள், நடனமாடும் இளவர
சியின் பிரமாண்ட ஓவியங்களென அரண்மனை
திருவிழாக் கோலம் பூண்டிருந்த நாளில் முதலில்
பாரம்பர்ய நடனங்கள் துவங்கின. கோவிந்தசாமி
கடையைப் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்த
தால் மனைவியையும், அழகர்சாமியையும் அனுப்பி
வைத்திருந்தார். செட்டித் தெருவிலிருந்த பாதி
ஆட்கள் அங்கு குழுமியிருந்தார்கள். அரச விவகா
ரங்களில் இது மாதிரியான நேரங்களில் வந்து
போனால் தான் இங்கு தொடர்ந்து தொழில் செய்ய
முடியுமென்கிற தெளிவு. கம்போடிய ராமாயணக்
கதையை மையப்படுத்திய நடனம். கதையும் பாடல்
களுமாய் விரிந்த அந்தக் காட்சியின் பின்னனி
முழுக்க அங்கோர்வாட்டின் அழகான ஓவியங்கள்.
கம்போடியாவின் பாரம்பர்யமான பனைமர அடை
யாளம். கெமெர் மொழியில் பாடலும் இசையும்

துவங்க குறைந்த ஒளி கொண்ட மேடையில் துவங்குகிறது மீனுக்கும் அனுமானுக்குமான போட்டி நடனம். கடலைக் கடந்து சீதையை மீட்கப் போராடும் இராமரின் பாலத்துக்கு வானரங்கள் உதவுகின்றன . கடல் கொந்தளிப்பை மேடையில் நடனமாகவும் இசையாகவும் அலையும் பட்டுத் துணியின் அசைவின் வழியாகவும் காட்டுகிறார்கள். வானரங்கள் அமைக்கும் பாலத்தை தடுத்துப் அடிக்கடி உடைக்க வருகின்றது ஒரு பெண் மீன். இடையூறு செய்யும் அந்த மீனின் மனதை மாற்ற அனுமார் முயல்கின்றார். என்ன செய்தும் எல்லாமே பயனற்றுப் போக, இறுதியாக அந்த மீனையே தன் காதல் வலையில் வீழ்த்தி அனுமார் மணம் முடித்து, இராமர் பாலம் கட்டும் திட்டத்தை நிறைவேற்றுக்கின்றார். அதையே பாடலும், காட்சியுமாக அழகாகக் காட்டுகிறார்கள், மீன் வடிவம் கொண்ட ஜோடனையில் பெண்ணும், அனுமார் முகவுருவில் வரும் ஆணும். ஆரம்பத்தில் அணையைத் தடுக்கும்

மீனின் சேஷ்டைகளையும், பின்னர் அனுமான் வந்து மீனை மயக்குவதையும் அழகாக ஆடிக்காட்டினார்கள். நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்த செட்டித்தெரு ஆட்கள் "என்னப்பு இது? நம்மூருல அனுமாரு பிரம்மச்சாரின்னு தான கத, இங்க கதையே புதுசா இருக்கு?" என வானா ரூனாவிடம் கேட்க, "எல்லாம் கத தானய்யா. ரொம்ப காலத்துக்கு முன்ன இங்க வந்து கத சொன்னவன் என்ன சொல்லிட்டுப் போனான்னு தெரியல. இவங்களுக்கு இதான் ராமாயணம்." என சிரித்தார். அந்த நடனம் முடிந்த சில நிமிடங்களுக்குப் பின் அப்ரசஸ் நடனம் துவங்கியது. தேவதைகளின் அசைவை நடனமென்று சுருக்கிச் சொல்லிவிடமுடியுமா? அப்படித்தான் அந்த நடனமும். அரங்கம் நிசப்தத்தில் உறைந்து போய்க் கிடக்க நாற்பத்தைந்து நிமிடங்கள் அந்த நிகழ்ச்சி நடந்து முடிந்தது. பட்டாடையும், ஒப்பனையும் மிளிர, தாளத்திற்கும் கதை பாடல் குரலுக்கும் இசைந்த அப்சரஸ்கள் எல்லோரின் மன

தையும் கொள்ளை கொண்டிருந்தனர். இளவரசிக் குப் பின்னால் ஆடிக் கொண்டிருந்த ஜெரோனியை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அழ கர் கப்பித்தன் வீட்டில் பார்த்த எல்லா அப்சரஸும் அவளேதான் என நினைத்தான்.

கடந்த சில மாதங்களாக சூழ்ந்திருந்த குழப்பத்தில் எங்கும் வெளியேற முடியாத கப்பித்த னின் பிள்ளைகள் அந்த வீதிக்குள்ளயே முடங்கி சோர்ந்து போயிருந்தார்கள், கப்பித்தன் ஒரு நாள் காலையில் தன் மூத்த மகனை தாய்லாந்திற்கு அனுப்பி வைத்துவிட்டார். 'தான் கூப்பிடும் வரை வரக்கூடாதென.' வீட்டில் அந்தத் தனிமையில் எப் போதும் ஆட பரபரக்கும் கால்களைக் கட்டுப்படுத் திக் கொண்டு ஜெரோனி ஏக்கம் நிறைந்த கண்க ளோடு பால்கனி வழியாய் சாலையை வெறித்துப் பார்த்தபடியே இருப்பாள். நிமோலுக்கு ஹோட்டல் இந்தியாவும் அழகருமே பொழுதுபோக்கு.

ஸ்ட்ரீட் 51 ல் முந்தைய தினத்தின் காலையில் ஒரு உணவகத்தின் வாசலில் நின்று கொண்டிருந்த ஹோண்டா மோட்டார் பைக் வெடித்ததில் பதிமூன்று பேருக்கும் மேல் இறந்து போயிருந்ததோடு, பாதுகாப்பிற்கு இருந்த ராணுவத்தினர் உட்பட முப்பதுக்கும் மேற்பட்டோர் காயம்பட்டிருந்தனர். இது மாதிரியான சின்ன தாக்குதல்களில் காயம்பட்டோருக்குக் கூட சிகிச்சையளிக்கும் அளவிற்குத் தேவையான மருந்துகளும், மருத்துவர்களும் மருத்துவமனையில் இல்லாததால் காயம் சரிவரக் குணமாவதற்கு முன்பாகவே நோயாளிகளை மருத்துவமனையிலிருந்து வெளியேற்றிக் கொண்டிருந்தனர். பிரே சியாத்த வாங்கிலிருந்த கந்தா போப்பா மருத்துவமனையில் கோவிந்தசாமியின் மனைவியும் அவரது இரண்டாவது மகனும் ஓரளவு ஆரோக்கியத்துடன் இருந்ததால் அங்கிருந்து மருத்துவர் அவர்களை நேற்றைய தினமே வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போகச் சொல்லிவிட்டார். மயக்க மருந்துகள் கொடுக்காமல் சிகிச்சையளிக்கப்படும் சிறுவர்களின் ஓலம் ஒருநாளின் முக்கால்வாசி நேரமும் எதிரொலித்துக் கொண்டிருக்கும் அந்த இடத்திலிருந்து எப்போது தப்பித்துச் செல்வோமென்று தான் அவரின் மனைவியும் தவித்துக் கொண்டிருந்தாள். உடல் இடுங்கி எலும்புகள் துருத்திய அந்தக் குழந்தைகளைக் காணும் எவர் ஒருவருக்

கும் வாழ்க்கை ஏன் இத்தனை துயரகரனமானதாய் இருக்கவேண்டுமென்றுதான் நினைக்கத் தோன்றும். யுத்தம் எல்லா நிலங்களையும் போல் இங்கும் அப்பாவி மக்களையே கருணையின்றி தின்று கொண்டிருந்தது. எல்லா மட்டத்திலும் மறைமுகமாக அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்த அமெரிக்கர்களின் கட்டுப்பாட்டில்தான் இந்த மருத்துவமனையும் இருந்தது. 250 பேருக்கு மட்டுமே படுக்கை வசதி இருந்த அந்த மருத்துவமனையில் மூவாயிரத்திற்கும் அதிகமான காயம்பட்ட குழந்தைகள் இருந்தனர்.

உணவகத்திற்கு மேலேயே இருந்த வீட்டிற்கு தனது பழைய டொயட்டோ காரில் கோவிந்தசாமி மனைவியையும் குழந்தையையும் அழைத்து வந்தார். அழகர்சாமி அப்பொழுதுதான் முதல்முறையாக தனது தம்பியைப் பார்த்தான். உணவும், நீருமின்றி குழந்தைகள் மரணமுறும் இந்த தேசத்தின் எந்தவித துயரையும் அறியாத அந்த சின்னஞ்சிறியக் குழந்தை செழிப்பாகவே பிறந்திருந்தான். அந்தக் குட்டிக் குழந்தையின் குண்டுக் கண்களை இங்கு வேறு யாரும் கொண்டிருக்கவில்லை, அத்தனை அழகு. சிலைகளில் மட்டுமே பார்க்க முடிந்த அபூர்வமான மலர்ந்த கண்கள். பேருந்துகளிலும் சைக்ளோக்களிலும் அந்த உணவகத்தைத் தேடிவருகிறவர்களின் எண்ணிக்கை அதிகமானபடியே இருந்ததால் அழகர்சாமிக்கு தம்பியோடு விளையாட நேரம்

கிடைத்திருக்கவில்லை. பசியோடு அங்கு வரும் மனிதர்களின் கண்களுக்குள் நன்றி உணர்ச்சியையும் வேற்று நிலத்து மனிதர்கள் வளமாக இருப்பதில் மறைமுகமாக எழும் பகையுணர்ச்சியையும் ஒருசேரப் பார்த்தான். கைவிடப்பட்ட பட்டம் போல் ஊர் திரும்புவதற்கான நம்பிக்கை அந்தக் குடும்பத்தினருக்கு நிலையின்றி அலைந்து கொண்டிருந்தது. அந்த வீதியிலிருந்த ஊர்க்காரர்கள் அவ்வளவு பேரும் பேங்காக் வழியாக சொந்த நாட்டிற்குத் திரும்பிவிட்டனர். இருக்கிற கடையை விற்றுவிடலாமென யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் கோவிந்தசாமியின் மனைவிக்கு பிரசவமும் நெருங்கிவிட்டதால் அவரால் உடனடியாக அங்கிருந்து தப்பித்துச் செல்ல முடியவில்லை.

ஆறேழு வருடங்களுக்கு முன்பு மேலூர் ராவுத்தரிடம் வீட்டையும் நிலத்தையும் அடமானத்திற்கு கொடுத்துவிட்டு கம்போடியாவிற்கு விமானம் ஏறியபோது கோவிந்தசாமிக்கு துணையாய் இருந்தது தன் தொழிலின் மீதிருந்த நம்பிக்கையும் அவரின் மனைவியும் தான். மேலூர், சிவகங்கை, காரைக்குடி பக்கத்து ஆட்கள் கொஞ்சம் பேர் நோம்ப் பென்னில் வட்டிக்கடையும் நகைக்கடையும் வைத்திருக்கிறார்கள் என்றும் இந்திய உணவுகளுக்கென்று அங்கு நல்ல உணவகம் இல்லையென்றும் ராவுத்தர் தான் முதலில் தகவல் சொன்னார். நோம்ப் பென்னிலிருந்த வட்டிக்கடை ஆட்களோடு அவருக்கு

கடிதப்போக்குவரத்து இருந்தது. விவரம் தெரிந்த நாளில் இருந்தே ஹோட்டல் தொழில் மட்டுமே பழக்கப்பட்டுப் போயிருந்த கோவிந்தசாமிக்கு திருமணத்திற்குப் பிறகு துவங்கின இரண்டு கடைகளும் கடும் நஷ்டத்திலேயே முடிந்து போனதால் சில காலம் கடையை மூடிவிட்டு என்ன செய்வதெனத் தெரியாமல் இருந்தார். புதிய நிலம் புதிய மனிதர்கள் என்று யோசித்தபோதே ராவுத்தர் சொன்ன யோசனை பிடித்துப் போனதால் கையிலிருந்த இருப்பையெல்லாம் சேர்த்து மிச்சம் மீதிக்கு சொத்து பத்துகளை அடமானம் வைத்து விட்டு மனைவி மற்றும் மகனோடும் சமையலுக்கு ஒரு ஆள் துணையோடும் கிளம்பினார். செட்டித் தெருவிலேயே அங்கிருந்த தமிழ் ஆட்கள் அவருக்கு கடை பார்த்துக் கொடுத்தனர். அரிசியும் காய்கறிகளும் கம்போடியாவிலேயே எங்கெல்லாம் மலிவாகக் கிடைக்குமென அவர்கள் அடையாளம் காட்டி இருந்ததால் கடையைத் துவங்கி நடத்துவதில் இவருக்கு பெரிய சிரமம் இருந்திருக்கவில்லை. செட்டித் தெருவிற்கு வரும் எல்லா பெரிய ஆட்களுக்கும் இந்த புதிய உணவகத்தின் உணவுகள் மீது ஒரு விருப்பம் ஏற்பட்டது. ஊரிலிருந்து மசாலா எடுத்து வருவதில் கடும் சிரமம் இருந்ததால் கிடைத்த பொருட்களைக் கொண்டு அவரின் மனைவி இங்கேயே மசாலாவைத் தயார் செய்தாள். இந்திய உணவுகளுக்கு மட்டுமேயான பிரத்யேகமான நறுமணம் அந்தப் பகுதியில் வெகு

பிரசித்தமான சில நாட்களில் இனி இங்கேயே நல்லபடியாய் வாழலாம் என கோவிந்தசாமி நம்பிக்கையோடு இருந்தார். அந்த நம்பிக்கை நீண்ட காலம் தொடரவில்லை.

கருணையை, அன்பை ஒருபோதும் அறிந்திராத துப்பாக்கிகள் நோக்கமற்று வெடித்துக் கொண்டிருந்த ஒவ்வொரு முறையும் அங்கிருந்தவர்கள் நம்பிக்கை இழந்து தப்பிச்செல்லவே நினைத்தனர். வானா ரூனா தங்கப்பன் செட்டியாரின் கடைதான் அந்த வீதியில் சற்று பெரியது. வேறு யாரிடமும் கிடைக்காத அசல் வைரம் அங்கு கிடைத்ததால் அவருக்கு தனி மவுசு. அரசாங்கத்திலிருந்த முக்கியமான ஆட்கள் கூட அவரிடம் நகை வாங்கிக் கொண்டிருந்ததால் அங்கு எப்போதும் முக்கியஸ்தர்களின் போக்குவரத்து இருக்கும். அவர்கள் பாதுகாப்பு இருக்கும் என்கிற நம்பிக்கையில் தான் வானா ரூனாவும் பிற செட்டிகளும் கடைகளை கூடுமான வரை காலிசெய்யாமல் இருந்தனர். கெமெர் ரோஜ் ஆட்கள் அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்டவர்களின் மீது தேடித் தேடி தாக்குதல் நடத்துவது அதிகரித்தபோது அந்த தாக்குதல்கள் எல்லாம் ஒருவகையில் தங்களுக்கும் சேர்த்தே வழங்கப்பட்ட எச்சரிக்கை என்னும் அச்சத்தில் அவசரமாக கடைகளை மூடினர். மனைவி மற்றும் கடையின் நிமித்தம் மாட்டிக்கொண்ட கோவிந்த சாமிக்காக மற்றவர்களால் இரக்கப்பட முடிந்ததே

ஒழிய அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்கிற துணிச்சல் ஒருவருக்குமில்லை.

கம்போடிய டயரி – 2

சாத்தான்கள் பெரும் பசியோடு சூழ்ந்தி ருக்க, கடந்த சில நாட்களாகவே கோவிந்தசா மிக்கு கடையைத் தொடர்ந்து நடத்துவது சிக்க லானதாய் மாறிக் கொண்டிருந்தது. கெமெர் படை நோம்ப் பென் நகருக்கு வெளியில் எல்லாப் பகுதி களில் இருந்தும் தாக்கிக் கொண்டிருந்தது. பசிக்கு நிரந்தரமாகப் பழக்கப்பட்ட மக்கள் உயிர் வாழ்ந் தால் போதுமென்கிற அச்சத்திற்குத் தள்ளப்பட்ட னர். வீதியில் சில குழந்தைகளோடு விளையா டிக் கொண்டிருந்த அழகரை கோவிந்தசாமி இரவு உணவிற்காக அழைத்துக் கொண்டு சென்றார். நிமோலும் அவர்களோடு வந்தான். "என்னய கேக் காம எங்கியும் போக் கூடாது சரியா?"

"சரிங்கய்யா."

பிற்பகலோடு கடையை தற்காலிகமாக சாத்தியி ருந்தார். அவ்வளவு நாட்களும் அவருக்கு மறைமு கமாக உதவிக் கொண்டிருந்த கப்பித்தன் அன்று

காலையில் “எந்த நேரத்துல வேணாலும் கெமெர் உள்ள வந்திருவாங்க. எதாச்சும் பிரச்சனை ஆனா உடனடியா ஃப்ரஞ்ச் எம்பஸிக்குப் போயிடுங்க. எல்லா ஃபாரினர்ஸுக்கும் அங்க தான் தற்காலி கமான கேம்ப் இருக்கும். கோவிந்தசாமி எனக்கு என்ன வேணாலும் ஆகலாம். என் ஃபேமிலிய நீதான் பாத்துக்கனும்.” என கண் கலங்கினார். இத்தனை நாட்கள் தங்களை ஆதரித்த அந்தக் குடும்பத்தை விட்டுக் கொடுக்க இவருக்கு மட் டும் எப்படி மனம் வரும்? என்னவானாலும் அவர் களுக்குத் துணையாய் இருப்பதாக வாக்களித் தார். நகரில் அமெரிக்கர்களின் நடமாட்டம் குறைந்திருந்தது. அந்த இரவிலும் சில பத்திரிக் கைக் காரர்கள் யுத்தத்திற்கு செல்லும் ராணுவ வாகனங்களை படம் எடுத்துக் கொண்டிருந்தனர். ராணுவ வாகனம் ஒன்று பாதி எரிந்த நிலையில் கிடந்தது. ஸ்ட்ரீட் 123 அதன் பழைய சோபையை இழந்து போயிருந்தது. இருட்டத் துவங்கியிருந்த போது அந்தப் பகுதி முழுக்க மின்சாரம் நிறுத்தப் பட்டதால் வழக்கத்திற்கு முன்பாகவே மக்கள் வீடு களுக்குள் தஞ்சம் புகுந்து கொண்டார்கள். பேருந் துகள் எந்த ஊர்களுக்கும் செல்லாமல் செண்ட் ரல் மார்க்கெட்டை சுற்றி நிறுத்தப்பட்டிருந்தன. சைக்ளோ வண்டிக்காரர்களைக் கூட வெளியில் பார்க்க முடியவில்லை. வியல் ரென்லிருந்து நோம்ப் பென் வரும் தேசிய நெடுஞ்சாலை மூன்றின் வழி யாய் கெமெர் ரோஜ் படை மிக வேகமாய் முன்

னேறிக் கொண்டிருந்தது. நகரிலிருந்து வெளியே றுவதற்கான முக்கியமான எல்லா சாலைகளும் எதிர்ப் படையினரின் வசமிருந்தது. அடர்ந்த பனை மரங்களுக்குப் பின்னாலிருந்து கெமெர் படையி னர் ராக்கெட் லாஞ்ச்சர்களால் தாக்க, பதிலுக்கு ராணுவத்தினர் அட்லறி குண்டுகள் அடித்தனர். குண்டுகள் வெடித்து எழுந்து நெருப்புப் பிழம்பில் பனை மரங்கள் பற்றி எரிய அந்த கோரயுத்தத்தின் சாட்சியங்களாய் மக்கள் உறக்கமின்றி பார்த்துக் கொண்டிருந்தனர். இடைவிடமால் எங்கும் புகை சூழ்ந்திருந்ததால் அந்த இரவில் வானத்தில் எதை யும் பார்த்திருக்க முடியவில்லை.

கப்பித்தன் தன் மனைவியோடு ராணுவ அலுவலகத்தில் இருந்தார். பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பேச கூடிய அந்தக் கூட்டம் நிலைமை கைமிறீப் போனால் சரண்டர் ஆகித்தான் வேண் மென கசப்போடு ஏற்றுக்கொண்டனர். ஜெரோ ணியும், நிமோலும் கோவிந்தசாமியின் வீட்டிற்கு வந்துவிட்டிருந்தனர். உணவு மேசையின் முன்னா லிருந்த ஒவ்வொருவரிடமும் அந்த இரவைக் கடப் பதற்கான அச்சம். பசித்து அழுத குழந்தைக்கு கோவிந்தசாமியின் மனைவி பாலூட்டிக் கொண் டிருந்தாள். நிமோலுக்கும் ஜொரானிக்கும் இந்திய உணவுகள் இப்பொழுது நன்கு பரீட்சயமாகி இருந் ததால் அவர்கள் கோவிந்தசாமியின் வீட்டில் அந்நி யத்தன்மையை உணரவில்லை. உடலில் இருந்த நடுக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் “எதுக்கும்

பயப்படாதிங்க. நாம எல்லோருமே பத்திரமா ஃப்ரஞ்ச் எம்பசிக்குப் போயிரலாம். என்ன ஆனாலும் தனியா பிரிஞ்சு போயிராமா கவனமா மட்டும் இருக்கனும்." கோவிந்தசாமி குரல் கம்ம சொன்னார். மற்றவர்கள் ஆமோதித்து தலையசைத்தார்கள். சப்பாத்தியும் குருமாவும் உடன் அரிசி சாதமும் நீண்ட நேரப் பசி மறக்கச் செய்தது. நகருக்கு வெகு அருகில் யுத்தம் நடப்பதற்கான அறிகுறியாய் தொடர்ந்து துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அழகர் இந்த சில மாதங்கள் கொல்லப்பட்டவர்களையும் காயம்பட்டவர்களையும் கண்டிருந்த அச்சத்தில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் தங்கள் வீட்டின் மேலும் குண்டு விழலாமென பயந்து கொண்டிருந்தான். ஒவ்வொரு முறை வெடிச்சத்தம் கேட்கும் போதும் அவன் கைகள் நடுங்கின. அவனருகில் அமர்ந்து சாப்பிடுக் கொண்டிருந்த ஜெரோனி நடுங்கிய அவன் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டு அழ வேண்டாமென சொல்லி சிரித்தாள். எத்தனை அச்சத்திலும் ஜீவன் நிரம்பிய அந்தக் கண்கள் அவனுக்குத் தந்த ஆறுதல் அலாதியானது. அக்கா என இவன் கூப்பிடுவதற்கான அர்த்தத்தை அவளால் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் இருவரையும் கவனித்த கோவிந்தசாமி "ஒன்னும் ஆகாதுய்யா அழகரு. சீக்கிரமா சாப்ட்டு படுத்துக்கோ." என ஆதூரமாய்ப் பேசினார். கடும் பசியை மரணத்தின் மீதான அச்சம் மீறிச் செல்ல சாப்பிடும் போதே அவனுக்கு வயிற்றில் பூச்சிகள்

பறந்தன. இந்தச் சாவு ஒரேயொருமுறை தன் னைக் கடந்துவிட்டால் போதும், ஏன் வராமல் இப் படித் தொடர்ந்து அச்சுறுத்துகிறதென்கிற கவலை யோடு உணவை அரைகுறையாய் சாப்பிட்டுவிட்டு எழுந்து கொண்டான். அவன் ட்ரவுசரின் பின்பகுதி வியர்த்து ஈரமாகியிருந்தது.

உறக்கம் பிடிக்காதவர்களாய் கோவிந்தசாமியும் அவரின் மனைவியும் வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். "அண்ணே செத்த நேரம் படுங்க ரெண்டு பேரும். முழிச்சிருந்து ஒன்னும் ஆகப் போறதில்ல." மாரி முத்து உறக்கம் பிடிக்காத கண்களோடு அவர் களை நெருங்கி வந்தார். பதில் சொல்ல முடி யாமல் திரும்பிப் பார்த்த இருவருக்கும் அவனை யும் இந்த சிக்கலில் மாட்ட வைத்துவிட்டோமே என உள்ளூற குற்றவுணர்ச்சி. "இந்த கலக்கத் துல எப்பிடி முத்து தூக்கம் வரும்?" கோவிந்த சாமியின் மனைவி தோளில் உறங்கிக் கொண்டி ருந்த இரண்டாவது மகனை அணைத்தபடி சொன் னாள். " மயினி. நம்ம இப்பிடி இருக்கறதப் பாத்து அவன் இன்னும் பயப்படுவான்." உடலில் தேங் கியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்தபடி அவர் சொன்னார். அவள் மௌனமாக இருவரை யும் பார்த்துவிட்டு அழகரை நோக்கிச் சென்றாள். வீட்டில் ஆங்காங்கே எரிந்து கொண்டிருந்த மெழு குவர்த்திகளின் வெளிச்சமும் வேகமாக கரைந்து கொண்டிருந்ததில் இருள் உறக்கத்திற்குப் பதில்

பயத்தையே அவர்களிடம் கொண்டு வந்து சேர்த்தது. உறக்கம் பிடிக்காதவர்களாய் அழகரும், ஜொரானியும் நிமோலும் வெடித்துக் கொண்டிருந்த குண்டுகளின் சத்தத்தைக் கேட்டபடி படுத்துக் கிடந்தனர். அப்சரஸ் நடனத்தில் வரும் பாடலொன்றை ஜொரானி மயான அமைதி சூழ்ந்த அந்த இரவில் மெல்லிய குரலில் பாடத்துவங்கினாள். அவள் குரல் அவர்களைச் சூழ்ந்திருந்த அச்சத்திலிருந்து தற்காலிகமாய் விடுவித்தது.

ஏப்ரல் 17 அதிகாலை நோம்ப் பென்னின் மேகங்கள் துப்பாக்கிக் குண்டுகளின் கரும் புகை நிரம்பி யுத்தத்தின் உக்ரமான கடைசி நிமிடங்களை அச்சத்தோடு கடந்து கொண்டிருந்தது. கடந்த சில மாதங்களாக தம்மிடமிருந்த எல்லாவற்றையும் இழந்து நோம்ப்பென்னில் சொந்த தேசத்திலேயே அகதிகளாக்கப்பட்டிருந்த லட்சக் கணக்கான மக்கள் சாலைகளில் அச்சத்தோடு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தனர். முதல் படை முப்பத்தி ஆறாவது சாலையின் வழியாக ராணுவத்தை வீழ்த்தி வெற்றிகரமாக நகருக்குள் நுழைந்த போது ராணுவ டாங்கிகளில் இருந்த படையணி வீரர்கள் உற்சாகமாக மக்களைப் பார்த்து கையசைத்தனர். சிறுவர்களை டாங்கிகளில் ஏற்றி உட்கார வைத்துக் கொண்டபோது மக்கள் நீண்ட துயரம் முடிந்து புதிய விடிவு கிடைத்துவிட்ட சந்தோசத்தில் உற்சாக வரவேற்புக் கொடுத்தனர். டாங்கிகளில் வெள்ளைக்

கொடியும் கெமெர் ரோஜ் கொடியும் பறந்து கொண்டிருந்தன. "மக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை. தொடர்ந்து வெவ்வேறு சாலை களின் வழியாக நமது 'அங்க்கார்' சகோதரர்கள் முன்னேறி வருகிறார்கள். அவர்களுக்கு நாம் உற் சாக வரவேற்பு கொடுக்க வேண்டும்" என ஒரு அதிகாரி தொடர்ந்து ரேடியோவில் அறிவித்தப டியே வந்தான். சரணடைந்த ராணுவத்தினரிடம் இருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட்டு அவர்கள் எல் லோரும் கைது செய்யப்பட்டு அந்தந்த சாலையோ ரத்திலேயே வாகனங்களில் கட்டி வைக்கப்பட்ட னர்.

சென்றல் மார்க்கெட்டை சுற்றிய எல்லா வீதிகளிலும் இப்பொழுது கெமெர் ராணு வத்தின் முதல் படை அணியினரும் இரண்டா வது படை அணியினரும் சூழத் துவங்கினர். "மக் கள் யாரும் பயப்படத் தேவையில்லை. நமது சகோதரர்களுக்கு உற்சாக வரவேற்பு கொடுங் கள்" என்னும் அவர்களின் கோஷம் ரேடியோவின் வழியாய் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந் தது. துப்பாக்கிகளின் சத்தம் சற்று ஓய்ந்திருந் தது. இரவு முழுக்க அச்சத்தில் உறங்காது விழித் திருந்த மக்கள் தங்களின் பழைய இயல்பிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். கோவிந்தசாமி வீடு முழுக்க எரிந்து போயிருந்த மெழுகுவர்த்திகளை அகற்றியபடியே "இனி எந்தப் பிரச்சனையும் இருக் காது. கம்யூனிஸ்ட் பட வந்திருச்சு. எல்லாத்தையும்

அவங்க பாத்துக்குவாங்க. ஒரு வாரம் போனா நாம திரும்பவும் கடைய ஆரம்பிச்சிரலாம்." என உற்சாகமாக மாரிமுத்துவிடம் சொல்ல, அவரின் மனைவி குழப்பமான முகத்தோடு சாலையையே வெறித்துக் கொண்டிருந்தாள். அலைகள் உள்வாங்கிய கடலென இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த தற்காலிக அமைதிக்குப் பின்னால் விபரீதமிருக்கக் கூடுமென ஆழ்மன அச்சம் தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டே இருந்தது. "இஞ்ச, இது எதும் எனக்கு சரியாப்படல. பேசாம நாம கப்பித்தன் சொன்ன இடத்துக்குப் போறதுதான் நல்லதுன்னு நினைக்கிறேன்." அச்சத்தோடு சொன்னாள். நம்பிக்கையற்ற அவள் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளமுடியாமல்

"நீ சும்மா கெடந்து பயப்படாத. இத்தன வருஷம் மக்களுக்காக சண்ட போட்டது இவங்கதான். இவங்க நம்மள என்ன செய்யப் போறாங்க. செத்த பொறுமையா இருப்போம்." அவர் கடுகடுத்தார். அவரளவில் பிரச்சனைகள் முடிந்து இயல்பிற்குத் திரும்பும் சாத்தியங்களை மட்டுமே அவரது மனம் யோசித்தது. 'வேறு வழியே இல்லை, இனி ஊர் தான் என்ற நிலையை சில நாட்களுக்கு நினைத்தபோது குடும்பத்திற்காக எதுவும் சேர்க்கவில்லை என்கிற அச்சமும், ஊரில் பிழைக்கு வழியும் இல்லை என்கிற குழப்பமும் அவரை தூங்கவிடாமல் அலைக்கழித்திருந்தது.' கடல் தாண்டி

பிழைக்கச் செல்லும் எல்லோருக்கும் எல்லாம் விதிக்கப்பட்டுவிடுவதில்லை.

எல்லா வீதிகளிலும் திரண்டிருந்த மக்கள் அன்றைய தினத்தின் இளவெயிலில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தைக் உற்சாகமாகக் கொண்டாடியபடி இருக்க, சில மணி நேரங்களுக்குப் பின்பாக கெமெர் ரோஜின் கருப்பு உடை அணியினர் நகருக்குள் நுழையத் துவங்கினர். இத்தனை வருட யுத்தவெறி குறைந்திராத அவர்களில் பாதிக்கும் மேல் பதினைந்து வயதைக்கூட தாண்டாதவர்கள். புதிய தேசிய உருவாக்கம் குறித்த லட்சிய வேட்கையில் உந்தெழப்பட்டிருந்த அவர்கள் ஒவ்வொவருக்குள்ளும் அழிவின் குரூரத்திற்குப் பழக்கப்பட்டுப் போன வெறி ஆழமாய் கனன்றது. மீண்டும் வீதிகளில் துப்பாக்கி வெடிக்கிற சத்தம் கேட்டபோது கோவிந்தசாமி உட்பட எல்லோரும் பயந்து போயினர். ஜொரானியும், நிமோலும் அவசரமாய் தங்கள் வீட்டிற்கு ஓடிப்போய் தயாராக வைத்திருந்த தங்கள் உடமைகளை எடுத்துக் கொண்டனர். கப்பித்தனை தொலைபேசியில் அழைத்து என்ன செய்யலாமென கேட்க நினைத்த ஜெரோனிக்கு வேலை செய்யாத அந்த டெலிஃபோன் ஏமாற்றம் தந்தது. தம்பியை மட்டுமாவது பாதுகாக்க வேண்டுமென தன்னோடு இழுத்துக் கொண்டு மீண்டும் கோவிந்தசாமி வீட்டுக்கு ஓடி வந்தார். அவர் அவசரமாக வெளியே ஓடிவந்து பக்கத்து வீடுகளை எட்டிப்பார்த்தார். அங்கிருந்

தவர்கள் எல்லோரும் வீட்டைவிட்டு வலுக்கட் டாயமாக வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். தனது நம்பிக்கைகள் பொய்யாகிப் போன ஏமாற் றமும் மீண்டும் உயிர் வாழ்தலுக்கான அச்சமும் அவருக்குள் படர, "தேவையான சாமான மட்டும் எடுத்துக்கங்க. உடனே இங்க இருந்து கிளம்பி ருவோம்." படபடப்போடு சொன்னார். ஏற்கனவே தயாராய் இருந்த தனது உடமைகளை சரிபார்த் துக் கொண்டவர் தன்னிடம் கடைசியாய் சேர்ந்தி ருந்த 750 அமெரிக்க டாலர்களை மூன்று பங்காய் பிரித்து தன் மனைவியிடம் கொஞ்சமும் மாரி முத்துவிடம் கொஞ்சமுமாய் கொடுத்தார். "பணத்த பிரிச்சு வெச்சுக்கறதுதான் பாதுகாப்பு. பத்து நிமி சத்துல இங்க இருந்து கிளம்பிருவொம். மறக்காம பாஸ்போர்ட் எடுத்து வெச்சுக்கோங்க." அச்சத் தில் நடுங்கின விரல்களை அவர்களுக்குக் காட் டாமல் அவசரமாக தனது வாகனத்தை எடுக்க கீழே இறங்கி ஓடினார். அழகர் தான் விளையா டிய பொம்மைகள், சேமித்து வைத்திருந்த கதைப் புத்தகங்கள் இவற்றையெல்லாம் எடுப்பதா வேண் டாமா என அம்மாவைப் பார்க்க அவனுக்குப் பதில் சொல்லும் அவகாசமின்றி அவள் உடை களையும் வீட்டில் சேமித்திருந்த பிஸ்கட்களை யும் எடுத்து பையில் வைத்துக் கொண்டிருந் தாள். அவன் பொம்மைகளை உருட்டுவதை கவ னித்து "அதெல்லாம் வேணாம்யா. உன் துணிய மட்டும் எடுத்து வெச்சுக்கோ" என்றாள். அவன்

தனது உடைகளை எடுத்துக் கொண்டிருக்கை யிலேயே மாரிமுத்து வீட்டில் மிச்சமிருந்த சாப் பாட்டை எடுத்து வைத்தார். "இருக்கற நெல மைக்கு திரும்ப எப்ப சாப்பிட முடியும்னு தெரியல. ஆளுக்கு ஒரு வாயி சாப்பிடுங்க." அவர் கைகள் இருந்த உணவை பகிர்ந்து வைப்பதில் பரபரப்பாக இருந்தன. அழகர், நிமோல், ஜெரோனி மூவருக் கும் பசிக்கவில்லை. ஆனாலும் அந்த வேளை யில் உணவை மறுப்பது முட்டாள்த்தனம் என்பது தெளிவாகப் புரிந்தது.

அதுவரையிலும் அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக தங்கி இருந்த மக்கள் எல்லோ ரும் இப்பொழுது அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட் டனர். "எல்லாரும் நோம்ப் பென் விட்டு வெளி யேறுங்க. அமெரிக்கா எந்த நேரத்தில வேணும் னாலும் குண்டு போடுவாங்க. ஒரு மூணு நாள் ஊருக்கு வெளில இருந்துட்டு திரும்ப வந்துரலாம். பொதுமக்கள் யாரும் பயப்பட வேணாம். அங்க்கார் உங்களுக்கு பாதுகாப்பா இருக்கும். அத்தியவசிய மான பொருட்கள மட்டும் எடுத்துக்கிட்டு மத்தத எல்லாம் விட்டுட்டுப் போங்க." கருப்பு சீருடையும் கழுத்தில் ரோஸ் நிறத்தில் வெள்ளைக் கட்டம் போட்ட ஸ்கார்ஃபும் அணிந்த கெமெர் இளை ஞன் ஒருவன் பணிவான குரலில் கூட்டத்தினரைப் பார்த்து பேசிக் கொண்டிருந்தான். தங்கள் வீடு களில் இருந்து வெளியேற மறுத்தவர்களை துப் பாக்கி முனையில் மிரட்டி வெளியேற்றினர். வீதிக

ளின் இரண்டு ஓரங்களிலும் வரிசையாக கெமெர் வீரர்கள் அணிவகுத்திருக்க, ராணுவ டாங்கிகளும் ஜீப்புகளும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. இத்தனை ராணுவ வீரர்களை ஒரே இடத்தில் கண்ட அச்சம் பொதுமக்கள் ஒவ்வொருவருக்குள் ளும் இருந்தது. ஜொரானியும், நிமோலும் தங்க ளோடு காரில் பயணிப்பது பாதுகாப்பில்லை என் பது தெரிந்ததால் கோவிந்தசாமி அவர்களை கார் டிக்கியில் ஏறிக் கொள்ளச் சொன்னார். அந்த சின் னஞ்சிறிய இடத்தில் மூச்சு முட்ட காற்றும் வெளிச் சமும் இல்லாத அவஸ்தையும் அவர்கள் ஒளிந்து கொண்டனர். கோவிந்தசாமி வண்டியை ஸ்டார்ட் செய்தபோது ஒரு அங்க்கார் வீரன் வண்டியை மறைத்து "பாஸ்போர்ட்" எனக் கேட்டான். இவர் தனது நடுக்கத்தை மறைத்துக் கொண்டு பாஸ் போர்ட்டை எடுத்துக் காட்ட "ரிபப்ளிக் ஆஃப் இந் தியா"என்று இருப்பதைப் பார்த்து ஆச்சர்யமாகி "y u still in Cambodia?" எனக் கேட்டான்.

"my hotel sir. This is my hotel." இனி ஒரு போதும் திறக்க வாய்ப்பில்லாத ஹோட்டல் இந் தியாவின் போர்டைக் காட்டினார். அவன் போகச் சொல்லி சைகை செய்துவிட்டு அவர் கையிலி ருந்த வாட்ச்சை கவனித்தான். "ankaar need your watch." எனக் கையை நீட்ட அவர் யோசிக்காமல் அதைக் கழற்றிக் கொடுத்தார். வண்டியில் அமர்ந் திருந்த கோவிந்தசாமியின் குடும்பத்தை ஒரு

முறை கவனமாகப் பார்த்துவிட்டு போகச் சொல்லி விட்டான்.

சாலையில் எங்கும் போக முடியாதபடி மக்கள் நெருக்கம். அவனோடு நேற்றைய தினம் வரை வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் எங்கு செல்கிறோம் எனத் தெரியாமலேயே நோம்ப் பென்னை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். ஒருவன் காருக்குள்ளிருந்த அழகரைப் பார்த்து கையசைத்தான். பதிலுக்கு இவனும் கையசைக்க இரண்டு பேருக்கும் நடுவில் துப்பாக்கியோடு நின்றிருந்த அவர்கள் வயதையொத்த கெமெர் சிறுவன் ஒருவன் துப்பாக்கியை நீட்டி போகச் சொல்லி பயமுறுத்தினான். ஃப்ரஞ்ச் எம்பஸிக்கு செல்லும் வழி முழுக்க ஏராளமான வாகனங்கள். மாடர்ன் பார்பர் ஷாப் வாசலில் நீண்ட முடி வளர்த்திருந்த, கண்ணாடி அணிந்திருந்த இளைஞர்கள் கைகள் கட்டப்பட்டு சுவற்றோடு ஒட்டி நிற்கவைக்கப்பட்டிருந்தனர். ஒரு படைவீரன் தனது கையிலிருந்த துப்பாக்கியால் அவர்களின் தலையில் ஓங்கி அடித்தான். அவர்கள் பல்கலைக்கழக மாணவர்களாக இருக்க வேண்டும். அழகருக்கு அடிவாங்கியவன் அலறிய சத்தம் கேட்டு சிறுநீர் முட்டியது. "சுத்தி எதையும் வேடிக்க பாக்காம வாங்க." என மாரிமுத்து அவன் கண்களை மறைத்துக் கொண்டார். இன்னும் நாட்டை விட்டு வெளியேறி இருக்காத பத்திரிக்கையாளர்களில் சிலர் பரபரப்பாக புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த

னர். "கேமரா... நோ ஃபோட்டோ.. கேமரா." என ஒரு ராணுவ வீரன் பத்திரிக்கையாளனின் கையி லிருந்த கேமராவை வலுக்கட்டாயமாக பிடுங்கிக் கொள்ள மற்ற பத்திரிக்கையாளர்கள் அவசரமாக அவனைக் காப்பாற்றிக் கூட்டிச் சென்றனர்.

அவர்கள் அந்த வீதியைக் கடக்கும் முன்பாகவே துப்பாக்கிகள் தொடர்ந்து வெடிக்கும் சத்தம் கேட்கத்துவங்கியது. ஒரு புத்த மடத்திலி ருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்ட புத்த பிக்கு கள் எங்கு செல்வதெனத் தெரியாமல் படையினரி டம் கெஞ்சிக் கொண்டிருக்க ஒருவன் முதிய புக்கு வின் நெற்றியில் துப்பாக்கியால் ஓங்கி அடித்தான். நெற்றியில் ரத்தம் கொப்பளித்துக் கிளம்ப, சுற் றிலுமிருந்த மக்கள் அதிர்ச்சியில் அலறினார்கள். அவருக்கு உதவி செய்ய ஓடிய மக்களை வலுக் கட்டாயமாக துரத்தி விட்டனர். ராணுவ அலு வலகத்திலிருந்து கைது செய்யப்பட்டு அழைத்து வரப்பட்ட கப்பித்தனையும் அவர் மனைவியையும் பார்த்து பயந்து போன கோவிந்தசாமி வண்டியை ஒரு நிமிடம் நிறுத்தினார். ஒரு அங்க்கார் வீரன் பின்னாலிருந்து தட்டி போகச் சொன்னான். அதிக சத்தமில்லாமல் கோவிந்தசாமி "இத யாரும் அந்தப் பிள்ளைக கிட்ட சொல்லாதிய." என தன் குடும் பத்தினருக்குப் பொதுவாகச் சொன்னார். கைகள் பிணைக்கப்பட்ட கப்பித்தனின் முகத்தைப் பார்க்க அழகருக்கு பாவமாக இருந்தது. "மூன்று நாட் களுக்கு பொதுமக்கள் நோம்ப்பென்னை விட்டு

வெளியேறவும். அமெரிக்க விமானங்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் குண்டு போடுவார்கள்" என படைவீரர்கள் ஆங்காங்கே ரேடியோவில் அலறிக் கொண்டிருக்க, பொதுமக்கள் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அமெரிக்க ராணுவம் எப்போதோ அங்கிருந்து வெளியேறிவிட்டதென. பொழுது சாய கொஞ்ச நேரத்திற்கு முன்பாக அவர்கள் ஃப்ரஞ்ச் எம்பஸியை அடைந்தபோது அங்கு தஞ்சம் கேட்டு நீண்ட கூட்டம் காத்திருந்தது. மாரிமுத்து ஓடிப்போய் தங்கள் பாஸ்போர்ட்களை காட்டினார். வாசலில் காவலுக்கு இருந்தவன் தயங்கியபடி கதவைத் திறந்துவிட இவர்கள் கார் மட்டும் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டது. பாதிக்கும் மேல் ஃப்ரஞ்ச்காரர்களும், வேறு சில நாட்டு பத்திரிக்கையாளர்களும் மட்டுமே இருந்த அந்த கட்டிடத்தில் ஒரேயொரு இந்தியக் குடும்பம் இவர்கள் மட்டுந்தான். காரை பின்னால் சென்று நிறுத்தி நிமோலையும், ஜோரானியையும் வெளியே அழைத்தபோது இருவரும் பாதி மயக்கத்தில் இருந்தனர். அவர்களுக்கு அருந்த தண்ணீர் குடுத்து அழைத்து வந்தார்கள். ஜோரானியை எம்பஸியிலிருந்த ஃப்ரஞ்ச்க்காரர்கள் சிலருக்குத் தெரிந்திருந்ததது. கப்பித்தனின் மகள் என்ற வகையிலும் அப்சரஸ் நடனமாடும் பெண் என்ற வகையிலும். அந்த பதட்டத்திலும் கூட அங்கிருந்தவர்களின் கண்கள் இவளைக் கவனிக்கத் தவறுவதில்லை. இப்படி இவர்களை பாதுகாக்கப் போகி

றோமெனத் தெரியாத குழப்பத்தோடு கோவிந்த சாமி மற்றவர்களோடு கலந்து கொள்ளவும் முடியாமல் ஒதுங்கி இருக்கவும் முடியாமல் தயங்கி வளாகத்தில் தங்களுக்கென தற்காலிகமாக ஒரு இடம் தேடிக் கொண்டார். நடக்கும் விபரீதங்கள் எதையும் அறியாத அவரின் இரண்டாவது குழந்தை ஆழ்ந்த உறக்கத்திலிருந்தது.

பட்டுநூல்காரன் பேட்டை.

அந்த வீதிக்கு முன்பு இப்படியானதொரு பெயர் இருந்ததை இப்பொழுது அங்கிருப்பவர் களே மறந்துபோய்விட்டனர். டோபி தெரு, முனிச் சாமி தெரு என வெவ்வேறான பெயர்களோடு கஞ்சா வீதி என்றொரு காரணப் பெயரும் சேர்ந் திருக்கிறது. தோராயமாக எழுபது வருடங்களுக்கு முன்பு இந்த வீதியிலும் இதைச் சுற்றின வீதிக ளிலும் தறிபோட்டிருந்த சௌராஷ்ட்ராக்காரர்கள் இடம் மாறத்துவங்கியது இங்கு முக்குலத்தோர் சமூகம் குடிவந்த பின்பாகத்தான், அவர்கள் முத லில் இவர்களின் வீடுகளில் அடைக்கலம் புகுந் தனர், தறிகளில் வேலை கற்றுக்கொள்வதாகச் சொல்லி வேலைகளை ஆக்ரமித்தனர், தயாரான ஆடைகளை வியாபாரத்திற்கு எடுத்துச் செல்லும் ஆண்கள் வீடு திரும்பும் இடைவெளியில் அவர்க ளின் மனைவிமார்களிடம் அத்துமீறத் துவங்கினர். அத்தனை காலம் துரோகத்திற்கும் வன்முறைக் கும் பழகியிராத அந்த எளிய மனிதர்கள் இந்த

புதிய சிக்கல்களை எதிர்கொள்ளத் திராணியின்றி கொஞ்சம் கொஞ்சமாய் வேறு இடங்களுக்கு இடம்பெயரத் துவங்கினர். இரவு பகலென ஓயாது ஒலித்துக் கொண்டிருந்த தறிச்சத்தம் குறையத் துவங்கின பொழுது அந்தப் பகுதி முழுக்க வேற்று மனிதர்களால் நிரம்பத்துவங்கியது. மிச்சமிருந்த சிலரிடமிருந்து நிலமும் பொருட்களும் வலுக்கட் டாயமாக பிடுங்கப்பட கடைசியாய் தாக்குப்பிடித் திருந்த இரண்டு குடும்பத்தினர் என்னவானாலும் போராடிப் பார்ப்பதென உறுதியாய் இருந்தனர். அந்தப் பகுதியில் அதுவரையிலும் இல்லாதபடி எல்லோருடைய வீடுகளிலும் களவுபோகத் துவங் கியது. பெண்களின் உள்ளாடை வரை மிச்சம் வைக்காமல் திருடின திருடர்கள் உடல் நரம்புக ளெங்கும் நடுக்கத்தை உணரவைத்தனர். சாமி யாடியிடம் குறிகேட்கலாமென்னும் யோசனையை பாலுச்சாமி சொன்னபோது மறுக்காமல் எல்லோ ரும் ஏற்றுக்கொண்டனர். சாமியாடி துடியான மனி தர். செக்கானூரணியிலிருந்து ஒரு வெளிக்கிழமை மாலை நடந்தே வந்து சேர்ந்தார். வரும் போதே இருளின் அரூபத்தையும், ஊர்ச்சாமிகளின் துடி நரம்புகளையும் தனது கபாலத்திற்குள் சுருட்டி வைத்திருக்கும் இறுக்கமான பாவனை அவரிடம். உடுக்கையடித்து அவர் சீலக்காரியம்மனையும் பேய்க்காமனையும் இறக்கியபோது ஊர் அரண் டது. சனங்கள் வீட்டிற்குள் அச்சத்தோடு தஞ்சம் புகுந்தனர். விரிந்த கூந்தலோடு வீதியில் அங்கு

மிங்குமாய் ஓடிய சாமியாடி இந்தப் பகுதிக்கு காவல் தெய்வமே இல்லையென்னும் குறையை கண்டுபிடித்துச் சொன்னார். முன்னிரவு கடந்து துன்னூறு வாங்கிக் கொள்ள ஊர்க்காரர்கள் வரிசையில் வந்தபோது அருந்ததியர் வீதிக்கும் பட்டுநூல்காரன் பேட்டைக்கும் மையமாய் இருந்த இடத்தில் சுற்றிலும் இருக்கும் எட்டுவீதிகளுக்கும் சேர்த்து முத்தாலம்மன் கோவில் கட்டினால் எல்லாம் சரியாகிப் போய்விடுமென பரிகாரம் கூறினார். சரியாக மிச்சமிருந்த இரண்டு செளராஷ்ட்ரா குடும்பங்களும் தறி போட்டிருந்த இடமது. இதற்கும் மேல் இவர்களைப் பகைத்துக் கொண்டு இங்கு வாழமுடியாதென மனம் நொந்து ஆந்தைகள் உறங்காத ஓர் அம்மாவாசை இரவில் 'இந்த வீதியில சொந்தமா வீடுகட்டி வாழ நினைக்கிற எவனும் வெளங்கமாட்டான்' என சாபமிட்டுச் சென்றனர்.

வாழ்வின் துயரத்தை கடந்து செல்ல நகரின் ஒரு எல்லையிலிருந்து இன்னொரு எல்லையான இந்த வீதிக்கு கதிரின் குடும்பம் குடிவந்தபோது பதிமூன்று வயதுதான் அவனுக்கு. வீதியின் கடைசியில் ரயில்பாதையை ஒட்டிய சின்னஞ் சிறிய வீடென்பதால் ரயில்கள் கடந்து செல்லும் போதெல்லாம் வீட்டை இரண்டாகப் பிளந்து ரயில் செல்வதுபோல் அதிரும். முற்றிலும் புதிய மனிதர்கள் நிரம்பிய அந்த வீதியில் அவனுக்கு அறிமுகமான ஒரே ஆள், மாரி தான். இருவரும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். ஆனால் , படிப்பதை விட

வும் குடும்பத்தொழிலை கவனிப்பது சாலச்சிறந்த தென மாரி பள்ளிக்கூடம் வருவதை நிறுத்திவிட் டான். காளப்பநாயக்கன் பட்டியில் காய்ச்சப்படும் சாராயம் இந்த வீதியின் முதல் வீடாய் இருக்கும் மாரியின் வீட்டிற்கு வந்த பிறகுதான் வேறு இடங் களுக்கு எடுத்துச் செல்லப்படும். எந்தக் கலப்ப டமும் இல்லாத சுத்தமான சாராயம் இங்கு மட் டுமே கிடைக்குமென்பதால் இந்த வீதிக்கு இரவு பகலென நேரங்காலந் தெரியாமல் புதிய மனிதர் கள் வந்துபோவதுண்டு.

வகுப்பறை தராத நெருக்கத்தை இந்த வீதிதான் கதிருக்கு மாரியிடம் ஏற்படுத்தித் தந்தது. வீட்டில் சில்லறையாக சாராயம் விற்றா லும் அவர்களின் முக்கியமான விற்பனை மையம் இரண்டு தெரு தள்ளியிருந்த கருவேலங்காடு தான். சரியாக தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி மூன்று பெட்ரொல் பங்குகள், அதற்குப் பின்னால் பரந்து விரிந்த கருவேலங்காடு. ஒரு எல்லையாக அங்காள ஈஸ்வரி நகரும், இன்னொரு எல்லை யாக சங்கையா கோவிலும், இன்னொரு எல்லை யாக ரயில் பாதையும் இருந்ததால் அந்த நிலம் முழுக்க இவர்களின் கோட்டையாய் இருந்தது. சனிக்கிழமை மாலைகளில் பன்றி பிடிக்க வருகிற வர்களைத் தவிர்த்து வேறு யாரும் அத்தனை எளி தில் அந்தக் காட்டிற்குள் உள்ளே வந்து வெளி யேறி விடமுடியாது. ஞாயிற்றுக்கிழமை இறைச்சிக் காக சனிக்கிழமை பிற்பகலே வேட்டைக்கு வரு

வது போல் ஸ்வீப்பர்ஸ் காலனியிலிருந்து முத்துவும் அவன் தம்பியும் வருவார்கள். முத்துவுக்கு இடுப்பி லிருந்து கழுத்து வரை ஒரே மாதிரியான செதுக் கின உடலமைப்பு. முறுக்கேறிய நாணென நரம்பு கள் கைகளிலும் கெண்டைக்கால் சதைகளிலும் திமிறும். பன்றியைத் துரத்தி ஓடும்போது ஒரு வேட் டைக்காரனின் தீவிரமிருக்கும் அவரின் உடலில். நீண்ட கழியில் இரும்பு வளையத்தை சுருக்கு போல் வைத்து அவர்கள் பன்றி பிடிப்பது கதிருக்கு அற்புதமான வேட்டைக் காட்சியென்றால் அடுத்த நாளின் பிற்பகலில் மாரியோடு அந்த பன்றிக் கறியை உண்பதுதான் ஆகெப்பெரிய சந்தோசம். பின்னிரவில் தோல் உரிக்கப்பட்டு, பெரிய பெரிய துண்டுகளாக வெட்டப்பட்ட பன்றியின் மேல் மஞ் சள் தடவி ஞாயிறு காலை வியாபாரத்திற்கு வைத் திருப்பார்கள். சமைக்கப்படாத இரைச்சியில் மஞ் சள் பூசப்பட்ட பச்சை மணம் ஸ்வீப்பர்ஸ் காலனி எங்கும் நிறைந்திருக்கும். மாரி பிரமாதமாக பன்றி இரைச்சியை சமைப்பான். அந்த சாராய நெடிக்கு குடிக்காமலேயே இந்த பன்றி இரைச்சியின் காரம் போதையேற்றும். பன்றி இரைச்சி செய்வதற்கு மிக முக்கியமான பக்குவம் சமைக்கிறவனின் பொறு மைதான். மாரிக்கு இயல்பியே அது நிறைய இருந் ததால், அவனது கை பக்குவம்போல் வேறு எவருக் கும் வாயத்திடவில்லை.

சாராயம் விற்கும் இடத்திலேயே அவித்த முட்டை, பன்றி இறைச்சி, கோழிக்கறி, ஊறுகாய்,

சுண்ட வத்தலென எப்போதும் ஏராளமான உணவு கள் அங்கு ஈ மொய்த்தபடி இருக்கும். ஒரு க்ளாஸ் சாராயம் பத்து ரூபாய்க்கு குடிக்க வருகிறவர்களில் பெரும்பானவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் ஊறுகாய் தான் ஏதுவானது. கோழியோ, பன்றி இறைச்சியோ வாங்கி சாபிடுமளவிற்கு அவர்க ளின் பையில் பணமிருக்காது. சிலருக்கு இரண்டு க்ளாஸ் சாராய போதை போதுமானது, சிலருக்கு ஐந்திலிருந்து ஆறு இன்னும் சிலருக்கு பத் துப் பதினைந்து குடித்தாலும் காணாது. குடித்து பன்றி இரைச்சி தின்றுவிட்டு அங்கேயே அடிவயிற் றுக் குடலைத் தவிர்த்து அவ்வளவையும் வாந்தி யெடுத்து மட்டையாகிறவர்களும் உண்டு. யாரிட மும் முகம் சுளிக்க மாட்டான். மாரியின் அப்பா, சித்தப்பா, பிரபு, அவன் அப்பத்தா என இந்த வியாபாரத்தை அந்தக் குடும்பம் முழு அர்ப்பணிப் புடன் செய்தனர். இங்கிருந்து வெளியூர்களுக்கு எடுத்துச் செல்லப்படும் சாராயங்களில் கலப்படம் சேரும். வாங்கி விற்கிறவர்களுக்கு லாபம் போதாது என்பதால் இந்த சரக்கோடு சொந்த சரக்கையும் சேர்த்துவிடுவார்கள். நல்ல சாராயத்திற்கு அழுகத் துவங்கும் வாழைப்பழத்தின் நெடியிருக்கும். குடிக் கும் போது காட்டமாக இருக்குமே தவிர உடலைத் தொந்தரவு செய்யாது. அத்தனை சுத்தமான சாரா யத்தை இவர்கள் மட்டுமே விற்பனை செய்தனர்.

யார் வருகையையும் மறுக்கத் தெரி யாத குணம் இந்த வீதிக்கு ஆதியிலிருந்தே இருந்

ததால் நாடோடிகளின் கூடாரமாகவே பெரும்பாலும் இருந்தது. காலை போலிஸ் ஸ்டேஷனில் கையெழுத்துப் போட்ட கையோடு மாமூல் வாங்க வரும் போலிஸ்காரர்களுக்கு வருடம் தவறாமல் தீபாவளி போனஸ் குடுப்பது மாரியின் அப்பா மட்டுந்தான் என்பதால் இவர்களிடம் போலிஸ்காரர்களுக்கு நல்ல விசுவாசமுண்டு. விசுவாசிக்கிறவன் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை. அப்பாவின் தொழில் சூட்சுமங்களை மாரியும் சின்ன வயதிலேயே கற்றுக் கொண்டிருந்ததால் காளப்பநாயக்கன்பட்டியிலிருந்து டிவிஎஸ் எக்ஸலில் சாராயம் எடுத்து வருவதில் அவனுக்கு பெரிய சிக்கல்கள் எதுவும் இருந்திருக்கவில்லை. இதுமாதிரி வேலைகளில் மாரி தன் தம்பி பிரபுவைத் தவிர யாரையும் நம்பி உடன் வைத்துக் கொள்வதில்லை. பிரபுவுக்குப் பிறகு மாரி கதிரிடம் தான் நெருக்கமாய் இருந்தான். அவனோடு பழக்கம் வைத்துக் கொண்டாலும் தனது தொழிலுக்காக அவனை பயன்படுத்திக் கொள்வதில்லை. எப்போதும் பசித்துக் கொண்டிருக்கும் கதிரின் வயிறுக்கு தயங்காமல் தீணி போடுவது மாரிதான். அதற்குப் பதிலாக அவனிடமிருந்து எதையும் அவன் எதிர்ப் பார்ப்பதுமில்லை. அவனைச் சூழ்ந்திருந்த எல்லோரும் சாராயம் குடிப்பவர்கள் அல்லது வியாபாரிகள். தன் சமவயதில் ஒரு நட்பு வேண்டியிருந்தது மாரிக்கு. தனக்குத் தேவையான எல்லாவற்றையும் யாரோ ஒருவரின் வழியாய்ப் பெற்றுக்

கொள்வதையே மாரி எப்போதும் விரும்புவான், தன்னிடமிருக்கும் எல்லாவற்றையும் விட தன் னைச் சுற்றி இருப்பவர்களிடம் எல்லாம் சரியாய் இருப்பதாகத் தோன்றும் அவனுக்கு. அணிந்து கொள்ளும் சட்டையிலிருந்து பயன்படுத்தும் வாக னம் வரை. அதனாலேயே அவனது பெரும் பாலான சமாச்சாரங்களை வாங்கித்தரும் ஆளாய் கதிர் மாறியிருந்தான். மாரியுடனான இவனின் பழக்கத்தை முதலில் கண்டித்த அம்மா, அடித்தும் பார்த்தாள். "பசிக்கிறப்போ எல்லாம் அவந்தான் எதாச்சும் வாங்கித் தாரான். வீட்ல கெடக்கற கா வயித்துக் கஞ்சியக் குடிச்சு என்னய சாகச் சொல் றியா? " என ஒருநாள் கோவமாகக் கேட்டான். அதி லிருந்து அவனோடு பேசுவதை அம்மா சிலநாட்க ளுக்கு நிறுத்திக் கொண்டாள்.

முனிச்சாமியிடம் குறி கேட்க வெகுதூ ரத்திலிருந்து எல்லாம் ஆட்கள் வருவார்கள். ஓடிப் போன மனைவியைத் தேடித் தரச்சொல்லியும், காணாமல் போன ஆடு மாடுகளை கண்டுபிடிக்கக் கேட்டும் பொதுவாக நிறையபேர் வந்தாலும் அவ்வ போது பேய் ஓட்டக் கேட்டு வருகிறவர்களும் உண்டு. ஆறரை அடிக்கு குறையாத சாமிக்கு அடர்ந்த கூந்தல். தின்று கொழுத்த உடலில் எப் போதும் ஜவ்வாது பூசுவதால் ஏற்பட்ட நறுமணம் என்று சொல்லமுடியாத நாற்றம். பத்து விரல்களி லும் விரலொன்றுக்கு ஒரு பவுனுக்குக் குறையா மல் மோதிரம். போதாக்குறைக்கு கழுத்தில் இருபத்

தைந்து பவுனுக்கு தங்கச் சங்கிலிகள். கண்களில் நரிகளுக்கு இருப்பதைப் போன்ற சாம்பல் நிற விழிகள். உறங்கவே உறங்காதோ என அச்சங்கொள்ளச் செய்யும் குரூரமும், வன்மமுக்க மிக்க அது போன்ற விழிகளைக் காண்பது அரிது. சௌராஷ்ட்ரா குடும்பங்கள் மொத்தமாக அங்கிருந்து நகர்ந்து சென்றபின் சின்ன சின்னதாய் கட்டப்பட்ட வீடுகளுக்கு மத்தியில் சாமியின் வீடுதான் பிரம்மாண்டமானது. இரண்டு மாடிக் கட்டிடத்தில் அவரின் பெரிய குடும்பம் வசித்து வந்தது. சாமியாடி என்பதால் அவர் திருமணம் செய்துகொள்ளவில்லை. அவரின் தம்பி, தங்கை அவர்களின் குடும்பமென எப்போதும் கலகலவென்றிருந்த வீடு. வீடு கட்டப்பட்ட சில வருடங்களுக்குப்பிறகு ஒரு நள்ளிரவில் பாண்டிச்சாமியின் தம்பி மகள் இரண்டாவது மாடியில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டாள். பதினேழு வயதுகூட முடிந்திருக்கவில்லை. இன்ன காரணமென்று தெரிந்துகொள்ள முடியாமல் துடித்தது குடும்பம். தெருக்காரர்கள் எல்லோருமே மனம் நொந்துபோயிருந்தார்கள். மூன்று நாட்களுக்கும் மேலாக ஒப்பாரி கேட்டுக் கொண்டிருக்க, அழுகையினூடாக ஒரு கிழவி பட்டுநூல்க்காரன் குடும்பம் குடுத்துட்டுப்போன சாபம் இன்னும் என்ன எத்தன பேர காவு வாங்குமோ சங்கிலி கருப்பா..” என கதறியபோதுதான். மறந்து போன ஏதோவொரு விபரீதத்தின் அச்சம் அங்கிருந்த எல்லோருக்குள்ளும் இறங்கியது. சாமி

யைத் தவிர்த்து அந்த வீட்டிலிருந்த எல்லோரும் வேறு வீட்டிற்கு குடிபெயர்ந்தார்கள். ஏற்கனவே புதிரான அந்த மனிதர் அந்தச் சிறுமி இறந்தபின் முன்னைவிடவும் புதிரானவரானார். பெரும்பாலும் கழிப்பறைகள் இல்லாத அந்த வீதிக்காரர்கள் சாராய வியாபாரம் நடக்கும் முள்ளுக்காட்டின் தெற்குப் பகுதியைத்தான் பயன்படுத்தி வந்தார்கள். வயது வித்தியாசமில்லாமல், சாதி வித்தியாசமில்லாமல் எல்லோருக்குமான இடம் அந்த பீக்காடுதான். கதிர் அங்கு குடிவந்த முதல் நாள் பாதி இரவிற்கு மேல் வயிறு சரியில்லாமல் போய் முள்ளுக்காட்டுப் பக்கமாக ஓடினான். இருட்டில் ரொம்ப தூரம் போக முடியாமல் சாலையை ஒட்டியே முள்ளுக்காட்டில் ஒதுங்கி உட்கார்ந்தவனுக்குப் பின்னால் மிக அருகில் ஆட்கள் முனகும் சத்தம் கேட்க, இடுப்பிலிருந்த லுங்கியை சரியாகக் கட்டிக் கொண்டு இரண்டு அடி நடந்து சென்று எட்டிப்பார்த்தான். ஒரு லாரி ஓட்டுநர் ஒரு பெண்ணைப் புணர்ந்து கொண்டிருக்க, அவருக்கு அடுத்ததாகச் செல்ல இரண்டு மூன்று பேர் வரிசையில் காத்திருந்தனர். அவன் சட்டையைப் பின்னாலிருந்து ஒரு முரட்டுக் கை பிடித்து இழுத்தது. திரும்பிப் பார்த்தான், குரூரமான நரியின் கண்கள். “ராத்திரில இந்தப் பக்கம்லாம் வரக்கூடாதுரா தம்பி.” உடலெல்லாம் தங்க நகைகளோடு அந்த பீக்காட்டு நாற்றத்தையும் மீறின ஜவ்வாது வாசம். கதிர் அச்சத்தோடு அவரைப் பார்க்க, “நீங்கதான இன்னிக்கி புதுசா குடி வந்

தது?" அவர் சட்டையை விட்டார். ஆமென்று தலை யாட்டினான். "சரி இந்தப் பக்கம் சுத்தாம வீட்டுக் குப் போ." என்று சொல்லிவிட்டு அவனுக்கு முன் பாக வேகமாக நடந்தார். வயல்கள்களுக்குள் நுழைந்து சோளத்தட்டைகளை வாரிச் சுருட்டிச் செல்லும் யானை போன்ற நடை. பாதியிலேயே இவனும் அங்கிருந்து வெளியேறி சாலைக்கு வந் தான். சாலையின் இரண்டு ஓரங்களிலும் வெவ் வேறு மாநில லாரிகள். நாற்கரச் சாலைகள் வருவ தற்கு முன்பான தேசிய நெடுஞ்சாலைகளில் வாழ்ந்த மனிதர்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள். இந்தியாவின் அத்தனை மாநிலத்துக்காரனோடும் பழக சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தது அந்த நெடுஞ்சாலை.

ஒவ்வொருநாளும் அந்த வீதியை எழுப்புவது அவரின் உடுக்கை சத்தம் தான். அதி காலை நான்கு மணிக்குத் தனியாளாக எழுந்து நெடுந்தொலைவு நடந்து சென்று வருவார். அந்த நேரத்தில் அவரைப் பார்த்தால் சினேகமாக ஒரு புன்னகை கூட இருக்காது. இரவு முழுக்க யுத்தக ளத்திலிருந்து திரும்பியவரைப் போல் இறுக்கமாக நடப்பார். அவரின் இந்த அதிகாலைச் சடங்கு குறித்து ஏராளமான வதந்திகள் உண்டு. "ஏண்டா அந்தாளு காலங்காத்தால மூஞ்சிய உர்ருன்னு வெச்சுக்கிட்டு ரொம்ப தூரம் நடந்து போயிட்டு வர் றாரு?" என மாரியிடம் ஒருநாள் கதிர் கேட்டதற்கு, சிரித்தபடியே அவன், "அவரு தினமும் காலைல

எந்திரிச்சதும் தான் போற முதல் மூத்திரத்துல கொஞ்சத்த கையில புடிச்சு குடிப்பாரு, அதுமட்டுமில்லாம ஆயி இருக்காரில்லையா, அதுலயும் கொஞ்சத்த எடுத்துத் திம்பாரு." என்றான். கதிருக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. "போடா கேணப் புண்ட, எவனாச்சும் தான் பேண்ட பீய எடுத்துத் திம்பானா?" கதிர் நம்பாமல் கேட்டான். "ஆமாடா. அப்பிடி செஞ்சாதான் அவராள குறி சொல்ல முடியுமாம்? அதனாலதான் யார் கண்லயும் படக்கூடாதுன்னு விடிகாலைல ரொம்ப தூரம் போறாரு." என்று மாரி சொன்னதை நம்புவதா வேண்டாமா என்னும் குழப்பத்தோடே அவரைக் குறித்து சில நொடிகள் யோசித்தபோது, காரணமின்றி அந்த ஜவ்வாது வாசனை வந்து தொந்தரவு செய்தது.

இந்த வீதியும், இங்கிருப்பவர்களும் ரொம்பவே பழக்கமானபின் ஒவ்வொரு வீட்டின் ரகசியமும் அவனுக்கு அத்துப்படியானது. நள்ளிரவுகளில் மொட்டை மாடி நகர்வுகள், பகல் நேரத்தின் வெக்கையில் வேலைக்குச் செல்லும் புருஷன்மார்கள் இல்லாத வீடுகளில் மாயாவிகளைப் போல் புகுந்து வெளியேறும் இளைஞர்கள். எந்த நேரத்திலும் துரோகம் செய்யக் காத்திருக்கும் மனைவிகளையும், அதற்குக் கொஞ்சமும் குறையின்றி துரோகமிழைக்கும் கணவன்மார்களையும் குறைவின்றி அந்த வீதி பெற்றிருந்தது ஆச்சர்யம்தான். கதிரின் குடும்பமென்பது அவனும் அம்மாவும் தான். கதிரின் அப்பா அழகர்சாமி எப்போதேனும் வருவார்.

இரண்டு நாட்களோ மூன்று நாட்களோ வீடு, பின் மீண்டும் மனம் போன போக்கில் கிளம்பிவிடுவார். அவர் வீட்டிலிருக்கும் நாட்களில் மட்டும் இவனையும் இவன் அம்மாவையும் பார்க்கும் தெருக்காரர்களிடம் ஒரு அச்சமிருக்கும். அவரின் மீது இரண்டு கொலை வழக்குகளும், சில அடிதடி வழக்குகளும் இருந்ததால்தான் பழைய வீட்டிலிருந்து இங்கு மாறி வந்தார்கள். அவரில்லாத நாட்கள் அம்மாவுக்கும் அவனுக்கும் எப்போதும் சூன்யமே. பக்கத்திலிருந்த ரைஸ் மில்லில் நெல் அவிக்க வேலைக்குப் போகும் அம்மாவிற்கு வெயிலிலும், நெல்லின் வெக்கையிலும் உடல் வெந்து புண்ணாகும். ஆனாலும் அந்த ஐம்பது ரூபாய்க் கூலி முக்கியமானதாய் இருந்தது. அப்பா தன் வாழ்க்கையை தனக்காக மட்டுமே வாழ்ந்தார். பல சமயங்களில் எதற்காக வீட்டிற்கு வருகிறாரென்றுகூட கதிருக்கு சந்தேகமாக இருக்கும். வீட்டில் தங்கியிருக்கும் நாட்களில் சாப்பிட்டு ஓய்வெடுத்து உடலைத் தேற்றிக் கொண்டு செல்லும் ஓய்விடமாகவே அவர் நினைத்திருக்க வேண்டும். குரோதங்கள், பகைமை, எல்லாவற்றையும் தாண்டி எல்லாவற்றையும் எல்லோரோடும் பகிர்ந்து கொள்ளும் பரந்த மனம் தெருவிலிருந்தவர்களுக்கு இருந்தது. கதிர் பல நாட்கள் அந்த வீதியின் ஏதாவதொரு மொட்டை மாடியில் தான் உறங்குவான். மாரியின் அப்பாவை மதுவிலக்கு போலிஸ்காரர்கள் கைது செய்து போயிருந்ததால் தற்காலிகமாக சில நாட்கள் வியாபாரத்தை

நிறுத்தியிருந்தார்கள். இரண்டு வாரத்திற்கு மட்டும். பொழுது போகாததால் இரண்டு வாரங்களும் தினமும் மாரியும் கதிரும் இரவுக் காட்சி சினிமாவிற்குப் போவதை வழக்கமாகக் கொண்டார்கள். அன்று படம் முடிந்து திரும்பும் போது இரண்டு மணியை நெருங்கியிருக்கும், பரோட்டா கடைகளின் கரண்டி சத்தம் இருவருக்கும் பசியைக் கிளப்பியது. "வாடா புரோட்டா திம்போம்." எப்போதும்போல் மாரிதான் கூப்பிட்டான். நன்றாக சாப்பிட வேண்டுமானால் வயிறைக் கொஞ்சம் காலி செய்யவேண்டுமென நினைத்து கதிர், "நீ முன்னாடி போடா மாப்ள. நான் பத்து நிமிசத்துல வந்துடறேன்" என முள்ளுக்காட்டிற்குள் ஒதுங்கினான். சாலையின் வெளிச்சத்திலிருந்து முள்ளுக்காட்டின் இருளுக்குள் நுழையும் பொதே லுங்கியை உருவிக் கொண்டவன் ஏற்கனவே அங்கு சிலர் உட்கார்ந்திருந்ததால் கொஞ்சம் தள்ளி உள்ளே சென்றான். அவன் இடம் கண்டு உட்காரும் போது சற்றுத் தள்ளி பிரம்மாண்டமான ஒரு உருவத்தின் நிழலைப் பார்த்தான். மறைத்திருந்த முள் செடியை லேசாக விலக்கிப் பார்த்தபோது இடுப்பிற்குக் கீழ் ஆடையில்லாத முனிச்சாமி குனிந்து நின்றிருக்க ஒரு இளைஞன் அவரின் குதத்தில் ஆவேசமாக புணர்ந்து கொண்டிருந்தான்.

2

பட்டுநூல்காரன் பேட்டையிலிருந்த பெரும்பாலானவர்களுக்கு கப்பலூரின் தொழிற் பேட்டை தான் வாழ்வாதரமாய் இருந்தது. இரநூ றுக்கும் மேல் சிறிய தொழிற்சாலைகள் நிறைந்தி ருந்த அந்த ஒரேயொரு தொழிற்பேட்டை திருமங் கலத்தைச் சுற்றியிருந்த ஏராளமான கிராம மக் களுக்கு உணவளித்துக் கொண்டிருந்தது. பெண் கள் ஸ்பின்னிங் மில்லிற்கும் ஆண்கள் வீவிங் மில்லிற்குமாய் வேலைக்குச் சென்றனர். உப்பு நீரும், தொழிற்சாலைக் கூரைகளின் வெக்கை யும், பசிக்கும் போது சாப்பிடக் கூட அவகாச மில்லாத வேலை நெருக்கடியும் கதிருக்கு விருப் பமில்லாமல் போனதால் அவன் அந்த தொழிற் பேட்டைக்குள் செல்வதை வெறுத்தான். ஆனா லும் விதி அவனுக்கு கருணை காட்டியிருக்க வில்லை. கொலை வழக்கில் அவன் அப்பாவிற்கு ஆயுள் தண்டனை என்று தீர்ப்பான நாளில் அத் தனை காலம் வழக்கிற்கு வாங்கின கடன் முந் தைய கடன்களோடு சேர்ந்து அந்த இவர்களின் மீது மொத்தமாக விழுந்தது. வாழ்வின் சரிபாதி யாய் உழைத்துக் கடக்க வேண்டிய கடன் அது. கதிர் கணபதி மில்ஸில் தறி பழக அனுப்பப்பட்ட போது பதினைந்து வயது. பகல் நேரத்தில் பள் ளிக்கூடம் முடித்துவிட்டு இரண்டாவது ஷிஃப்டிற்கு வேலைக்குச் செல்ல வேண்டும். குடும்ப வறு

மையின் காரணமாக அவனுக்கு நேரத்தை ஒட்டி சில சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. எத்தனை மணி நேரம் வேலை செய்கிறானோ அத்தனை மணி நேரத்திற்கு சம்பளம். மாரியோடு சேர்ந்து சாராய வியாபாரத்திற்கு போகாமல் எப்படியாவது அவனுக்கு உழைப்பின் அருமையை புரிய வைக்க அம்மா எடுத்துக் கொண்ட ஏராளமான முயற்சி களில் இதுவும் ஒன்று. ஒரு மணி நேரத்திற்கு ஐந்து ரூபாய் வீதம் அவனுக்கு சம்பளம். வைண்டிங் ஓட்டத்தான் அனுப்பினார்கள். முதல் முறையாக தறி குடோனுக்கு வேலைக்குச் செல்லும் ஒரு வன் எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சம் தறிக ளின் பேரிரைச்சல். நாற்பது லூட்டிக் தறிகள் ஓடிக் கொண்டிருந்த கணபதி மில்ஸில் ஒரு ஷிஃப்டில் எழுபது பேருக்குக் குறையாமல் வேலை செய்து வந்தனர். வானமே இடி இடித்து தலை மேல் விழு வது போன்ற இரைச்சல்.

"வைண்டிங் ஓட்டும் போது சூதானமா இருக்கனும் தம்பி, நூல இழுத்து நாட் போடறேன்னு விரல மெஷினுக்குள்ள குடுத்துற கூடாது" என முதல் நாள் ஷிஃப்டிலிருந்த ஒரு அக்கா அவனுக்கு எவ் வாறு லாவகமாக முடிச்சுப் போடுவதென சொல் லிக் கொடுத்தாள். தறி ஓட்ட விரும்புகிற ஒருவன் அடிப்படையில் கற்றுக்கொள்ள வேண்டியது எத் தனை மென்மையாக முடிச்சுப் போட வேண்டு மென்பதைத்தான். இரண்டொரு நாட்களிலேயே கதிர் அதை சாமர்த்தியமாக கற்றுக் கொண்டான்.

அவனைத் தவிர்த்து ஷிஃப்டில் வெண்டிங் ஓட்டும் எல்லோருமே அகதிகள் முகாமில் இருந்து வரும் பெண்கள். மற்ற எல்லோரையும் விட அவர்களுக்கு ஊதியம் குறைவு. எவ்வளவு நேரமென்றாலும் உழைக்கத் தயாராய் இருந்த அவர்களில் பெரும் பாலனவர்களும் உழைப்பு ரீதியாகவும் உடல் ரீதியா கவும் சுரண்டப்பட்டார்கள்.

நடுக்கோட்டையிலிருந்து கூத்தியார் குண்டு வரை செல்லும் இரண்டு மினி பஸ்க ளும் இந்த கம்பெனிகளில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்காகவே பிரத்யேகமானவை. உலகத் தின் சகலவிதமான காதல் கதைகளையும் பார்க்க முடிகிற ஊர்தி அது. தீவிர காதல், அவசரக் காதல், உரசல் காதல், உடலுறவுக்கான காதலென ஏராளமான காதலுண்டு. கதிருக்கு மினி பஸ்ஸில் செல்கிறவர்களின் சகவாசமெல்லாம் சனி ஞாயி றுகளில் தான். மஞ்சள் தேய்த்து குளித்த உட லில் குட்டிக்குரா பவுடர் சேரும் போது உருவாகும் வாசனை சேர்மத்தை வேறு எந்த வேதிப் பொருட் களும் உருவாக்கிவிட முடியாது. பேருந்து செல்லும் வழி முழுக்க அந்தப் பெண்கள் விட்டுச் செல்லும் மஞ்சள் வாசனையும் கசிந்தபடியே வரும். கதிர் தன்னால் எந்தப் பெண்ணையும் அணுக முடியா தென்பதை உறுதியாக தெரிந்து வைத்திருந்ததால் உரசல் காதலைத் தான் ஒரே வாய்ப்பாக பயன்ப டுத்திக் கொண்டான். எந்தவிதமான உடன்பாடுக ளுக்கும் அவசியமில்லாமல் தினமும் ஒருவரோடு

கூடிக் களித்துப் பிரிய முடிகிற அந்த சில நிமிட சந்தோசம் ஆறுதலாய் இருந்தது. மேலக்கோட்டையைத் தாண்டும் போதே பேருந்து முழுக்க ஆட்கள் நிரம்பி விடுவார்கள், ஆனாலும் அந்த வண்டியில் ஏறும் எல்லோருக்கும் சின்னதொரு மூலையில் இடமிருக்கும். இந்தக் கூட்டத்தில் யார் யாரை உரசுகிறார்கள் என்பதையெல்லாம் பார்க்க ஒருவருக்கும் அவகாசம் இருந்திருக்கவில்லை. அரசுப் பேருந்துகள் நிறைய இருந்தாலும் அவை எதுவும் தொழிற்பேட்டைக்குள் செல்வதில்லை. மினி பஸ்கள் மட்டுந்தான் எல்லா கம்பெணிகள் இருக்கும் வீதிகளுக்கும் பொதுவாக உள்ளே சென்று வந்தன. பகல் நேரத்தில் கூட அணையாமல் பளிச்சிடும் சீரியல் விளக்குகள், எப்போதும் அலறும் டேப் ரெக்கார்டர். இதில் நேயர் விருப்பப் பாடல்களும் உண்டு. அந்தப் பாடல் ஒலிக்கும் போதெல்லாம் பேருந்திலிருக்கும் சரி பாதி ஆட்கள் அந்தப் பாடலுக்குரிய பெண்ணை ஒரு நொடி பார்த்துக் கொள்ளத் தவறுவதில்லை. உடலின் கடைசித் துளி ரத்தம் வரை உறிஞ்சும் அவர்களின் உழைப்பிற்கு ஆறுதலாய் இருந்தது இந்த சின்னஞ்சிறிய பேருந்துப் பயணம்தான்.

கதிருக்கு மில்லின் இரைச்சலும் அங்கிருந்தவர்களின் கடுகடுப்பும் எரிச்சலூட்டியதோடு, பேட்டரி ஃபில்லரான ராமராசு அவ்வப்போது லுங்கியோடு சேர்த்து இவன் குஞ்சைப் பிடித்து அமுக்

குவது உச்சகட்ட வெறுப்பை உண்டாக்கியிருந்தது. பகுதி நேரமாக வேறு எந்தக் கம்பெனியிலும் அவனைச் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள் என்பதால் வேறு வழி இல்லாமல் வேலைக்கு வந்து கொண்டிருந்தான். தறி சத்தத்திற்குள் பேசுவதற்கு அசாத்தியமான உடல் பலம் வேண்டும். அடி வயிற்றிலிருந்து கத்தினால் குளத்தின் அடியிலிருந்து பேசுவது போல் கொஞ்சம் மென்மையாக கேட்கும். ராமராசுவோடு இருந்த இன்னொரு பேட்டரி ஃபில்லரான சித்ராவிடம் அழாத குறையாய் "எக்கா எப்பப் பாத்தாலும் அந்த ஆளு என் குஞ்சப் புடிச்சு அமுக்கிட்டே இருக்கான்." என புலம்பினான். தன் வரிசைத் தறியில் பேட்டரியில் நூல் கண்டுகளை நிரப்பிக் கொண்டிருந்த சித்ரா சிரித்தபடியே "அவன் இன்னும் உனக்கு ஊம்பி விடலையா?" என சாதாரணமாகக் கேட்டாள்.

"அவன் கேட்டான்னா ஊம்பக் குடுடா. என்ன கொறையப் போகுது. காசு குடுப்பான்." என அவள் அடுத்த தறிக்கு நகர்ந்தாள். சித்ராவும் ராமராசுவும் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் அவள் கண்டித்து வைக்கக் கூடுமென்றுதான் அவளிடம் சொன்னான். அவளது கேலி அருவருப்பூட்ட

"ச்சை எனக்கெதுக்கு அந்த பொழப்பு.?" என முகத்தை சுளித்தான்.

"அடேயப்பா யோக்கிய சிகாமணி. மினி பஸ் ல பொம்பளைங்க பொச்சுல தடவிட்டு வர்றதுக்கு உனக்கு இனிக்கிது. இவனுக்கு ஊம்பக் குடுக்க

னும்னா மட்டும் கசக்குமோ?" என காலியான நூல் கண்டால் அவன் தலையில் அடித்தாள். தனது சின்னஞ்சிறிய ரகசியம் அவளுக்குத் தெரிந்து போன சங்கடத்தில்

"சும்மா எதையாச்சும் சொல்லாத. நான் ஒன்னும் அந்த மாதிரி லாம் இல்ல." என சமாளித்தான். தறி ஓட்டிக் கொண்டிருந்த பால்ச்சாமி இவர்கள் இரண்டு பேரும் நீண்ட நேரமாக பேசிக் கொண்டி ருப்பதைப் பார்த்து

"என்னடா கதிரு, சித்ராவ தடவிட்டு இருக்கியா?" என சத்தமாகக் கேட்டார். அவளுக்கு அருகில் நின்றிருந்த கதிர் விலகி "அண்ணே அசிங்கமா பேசாதண்ணே." என முறைத்தான். சித்ரா பால்ச் சாமியை விடவும் சத்தமாக

"அவனுக்கு சாமான் எந்திரிக்கிது தடவறான். உனக்கு எங்க வலிக்கிது. நான் உங்கிட்ட வந்து பஞ்சாயத்து வெச்சனா? நீ பொத்திக்கிட்டு இரு." எனக் கத்த பக்கத்து வரிசையில் தறி ஓட்டிக் கொண்டிருந்த வீவரும் கண்டு வைத்துக் கொண் டிருந்த பேட்டரி ஃபில்லரும் சிரித்தார்கள். தறியிலி ருந்து தெறித்துப் பறந்து கீழே விழுந்த நாடாவை எடுக்கும் சாக்கில் பால்ச்சாமி அவசரமாக வேறு பக்கம் சென்றார்.

அவளிடமிருந்து தப்பித்து ஓட முயன்ற கதிரின் சட்டையைப் பிடித்துக் கொண்டவள், "இரு மயிரு. எதுக்கு ஓடற? உன்னய சொல்லி என்ன செய்ய.

இந்த சிட்கோ தண்ணி குடிச்சிட்ட ல. இனி எல் லாம் அப்பிடித்தான். எல்லா பொம்பளையும் நம்ம கூட படுக்கறதுக்குன்னே இருக்காளுங்கன்னு தான நெனப்பு போகும். என்னிக்காச்சும் ஒருத்தி செருப்பக் கழட்டிக்கிட்டு அடிக்கப் போறா, அன் னிக்கித் தெரியும் உனக்கு." தன் கைகளில் இருந்த அவன் சட்டையை நழுவ விட்டாள். அவன் அவ சரமாக வைண்டிங் ஓட்டும் இடத்திற்கு ஓடிப்போ னான்.

தியாகராஜர் மில்ஸ், மெப்கோ மெட்டல் பவுடர் கம்பெனி, பெங்குயின் கார்மெண்ட்ஸ் என வேறு சில தொழிற்சாலைகளும் பிரிட்டா னியா பிஸ்கட் கம்பெனியும் வேறு மாநிலத்திலி ருந்து குறைந்த கூலிக்கு ஆட்களை இந்த பகுதி நோக்கி இழுத்தபடியே இருந்தது. கப்பலூரைச் சுற் றிலுமிருந்த கிராமங்களான உச்சபட்டி, தோப்பூர், கூத்தியார் குண்டு என எல்லா ஊர்களிலும் பீகா ரில் இருந்தும் மத்திய பிரதேசத்திலிருந்தும் ஏரா ளமான இளைஞர்கள் கூலி வேலைக்கென வந் திருந்தனர். சாப்பிடுவதற்கு கிடைகும் அரைமணி நேர இடைவெளியைத் தவிர்த்து ஓய்வாக உட்கார அவகாசமே இல்லாமல் எப்போதும் ஓடியபடியே இருக்கும் அவர்கள் ஷிஃப்ட் முடிந்து வெளியேறு கையில் உடல் முழுக்க பஞ்சுகள் சூழ இருப்பார் கள். பஞ்சுத் துகள்கள் காதுகள், மூக்கு கண் வழியாக உடலுக்குள் புகுவதால் நாற்பது வயதிற்கு மேல் சுவாசப் பிரச்சனை வருவதிலிருந்து தப்பிக்க

வும் முடியாது. ஒரு கம்பெனியிலிருந்து இன்னொரு கம்பெனிக்கென ஊதிய நிமித்தம் அவர்கள் மாறினாலும் தொழிற்பேட்டையை விட்டு வெளியேறுகிறவர்கள் வெகு சொற்பம். வாழ்க்கை முழுக்க தறிகளுக்குள் வாழும் ஒரு மனிதனுக்கு உலகின் எல்லா சத்தங்களும் தறி சத்தங்களாகவே கேட்கும். பசித்து சாப்பிடும் நேரத்தில் பஞ்சடைந்த கண்களுக்கு சாப்பாடும் பஞ்சாகவே தெரியும். கதிர் அங்கு வேலை செய்த சில மாதகாலத்திலேயே இந்த வினோதத்தை உணரத் துவங்கினான்.

வைண்டிங் மெஷினுக்கு வேகமாக பழகிக் கொண்ட அவன், பேட்டரி ஃபில்லர்களோடு சேர்ந்து கண்டு வைக்க கற்றுக்கொண்டான். தறிகளில் ஏதாவது பழுது ஏற்பட்டு வேலை இருந்தால் பகல் ஷிஃப்ட்டில் இருக்கும் நான்கு ஃபிட்டர்களும் சேர்ந்து சரி செய்து விடுவார்கள், மற்ற இரண்டு ஷிஃப்டுகளிலும் ஒரேயொரு ஃபிட்டர் தான். தறி ஓடும் ஒவ்வொரு மீட்டருக்கும் வீவருக்கு கூடுதல் தொகை வழங்கப்படுமென்பதால் முடிந்தவரை நிறுத்தாமல் ஓட்டவே முயற்சிப்பார்கள். இரண்டாவது ஷிஃப்டிலும் மூன்றாவது ஷிஃப்டிலும் கால்களை கழற்றி வைக்குமளவிற்கு வேலை இருக்கும். சித்ராவிற்கு உதவி செய்யும் விதமாகத் தான் கதிர் முதலில் கன்று வைக்கப் பழகினான். ஒரு பேட்டரியை நிறைக்க பதிணெட்டு கண்டுகள் வைக்க வேண்டியிருக்கும். தனித்தனியாக ஒவ்வொன்றாக வைத்தால் நேரமெடுக்கும் என்பதால்

மொத்தமாக ஒரே நேரத்தில் வைக்கத்தான் சித்ரா சொல்லிக் கொடுத்தாள். ஒவ்வொரு கண்டிலிருந்தும் நூலை தனியாக எடுத்து கையில் வைத்துக் கொண்ட பின், பேட்டரியில் வரிசையாக அடுக்கி மொத்தமாக நூலை எடுத்து பேட்டரியின் இன்னொரு முனையில் சுற்ற வேண்டும். அதிகபட்சம் 30 விநாடிகள். கைகளில் இருந்து கண்டு நழுவியும் விடாமல் நாடாவுக்குள் கையையும் விட்டுவிடாமல் சாமர்த்தியமாக வைப்பதற்குத்தான் பயிற்சி தேவை. இந்த வேலைக்கு பழகினால் கூடுதலாக பத்து ரூபாய் சம்பளம் கிடைக்கும். தறியில் ஓடும் நாடாவைப் போல் உடல் மெலிந்த அவனால் வைண்டிங் ஓட்டியபடி பேட்டரி ஃபில்லிங் கற்றுக்கொள்ள உடல் ஒத்துழைக்க மறுத்தது. இங்கும் அங்குமாக ஓடும்போது மயக்கத்தில் கண்கள் சொருகும். கூடுதலான பத்து ரூபாயின் மீதான ஆசையில் கால்கள் பரபரப்பாக ஓடினாலும் பகல் முழுக்க பள்ளிக்கூடம், இரவில் கம்பெனி வேலை யென இரண்டு உலகிற்குள்ளும் சுற்றி வரமுடியாத அவன் பெரும்பாலான நேரங்களில் எது தன்னுடைய நிஜமெனப் புரியாமல் குழம்பிப் போவான். பாடப்புத்தகங்களின் மீதான விருப்பம் இரவு வேலைகளின் காரணமாக வெறுப்பாய் மாறத் துவங்கியது. ஷிஃப்ட் முடிந்து ஒரு மணிக்கு கம்பெனியின் ஓய்வறையிலேயே உறங்கி, காலை ஆறு மணிக்கு கிளம்பி வீட்டிற்குப் போய்விட்டு மீண்டும் எட்டு மணிக்கு பள்ளிக்கூடம் வர வேண்டும். தன்

வயதையொத்த சக நண்பர்களுக்கு கிடைத்த எந்த சந்தோசமும் தனக்கு கிடைக்கவில்லை என்கிற ஏக்கத்தை அவன் வெளிப்படுத்துவதற்கு கூட ஒரு வரும் இருந்திருக்கவில்லை. அவன் மீது பரிதாபப் பட்டவர்கள் கூட சினேகத்தை பகிர்ந்து கொண்டி ருக்கவில்லை.

தொடர்ச்சியான அலைச்சல், உறக்க மின்மை காரணமாகவும் சரியான உணவின்றியும் நொடிந்த அவனுக்கு மலேரியா வந்தபோது மொத் தமாக உடல் நசிந்து போனான். அரசு மருத்து வமனையின் மருந்து நாற்றமெடுக்கும் படுக்கை யில் சில நாட்கள் ஓய்வுக்குப்பின் அவனுக் கும் பள்ளிக்கூடத்திற்குமான நிரந்தரமான இடை வெளி ஏற்பட்டது. "அவனும் படிக்கப் போயிட்டா இந்தக் குடும்பத்த யார் காப்பத்தறது?" என அம்மா பிடிவாதமாய் அவன் படிக்க எதிராய் இருந்தாள். எதிர்காலம் குறித்த அவனது கனவுகள் முன்பே நொறுங்கிப் போயிருந்தாலும் இந்தமுறை மொத்த மாய் சிதைந்து போய்விட்டது. மனித உறவுகளை வெறுத்தான், வாழ்வின் நிச்சயமின்மை, தனக் கென இந்த அகன்ற பிரபஞ்சத்தில் எதுவுமில்லை என்கிற வெறுமை எல்லாம் அவனை தொந்தர விற்குள்ளாக்கியது. வேறு எந்த வேலையென்றா லும் பரவாயில்லை திரும்பவும் அந்த தொழிற் பேட்டைக்குள் போகவே கூடாதென நினைத்துக் கொண்டான். தனது எல்லாக் கனவுகளையும் பறித்துக் கொண்ட சூன்யமிக்க இடமாகவே அந்தக்

கம்பெனியை நினைத்தான். பசித்தவனின் குருதி உறிஞ்சிக் கொள்ள வேலைகளுக்கா பஞ்சம். அதி கபட்ச உழைப்பையும் குறைந்த பட்ச கூலியை யும் மட்டுமே வாழ்க்கை முழுவதற்குமான ஆதா ரமாய் பற்றிக்கொண்டு ஓடும் லட்சகணக்கானவர் களில் ஒருவனாய் அவன் மாறிய நாளில் பணத் தின் மீதான பெரும் ஏக்கம் உருவானது. தான் வசிக்கும் ஊரில் தினமும் ஒருவேளை இரைச்சி உண்பவனையும், புதிய இரு சக்கர வாகனத்தில் செல்பவனையும், புதிய ஷூக்கள் அணிபவனை யும், சுத்தமான ஆடைகள் வைத்திருப்பவனையும் தனது மிக்ப்பெரிய எதிரியாக பார்க்கத் துவங்கி னான். மாரியோடு சேர்ந்து தொழில் செய்யலா மென மனம் பரபரத்தது. "பங்காளி நானும் தொழி லுக்கு வர்றண்டா, எந்த வேலைக்குப் போனாலும் நாயாக் கூட மதிக்க மாட்டேங்கறானுக. நானும் நாலு காசு பாக்கனும்டா." ஏக்கத்தோடு கதிர் அவ னிடம் கேட்க, மாரி பிடிவாதமாய் மறுத்தான். "வேற வேலக்கிப் போடா பங்காளி. இந்தத் தொழில் வேணாம். நீ வீட்ல கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் ல படிக்கிறதுக்கு ஆகற செலவ நான் பாத்துக்கறேன். படிப்ப விடாத. இந்தத் தொழிலுக்கும் வராதடா. கோர்ட்டு கேசு போலிஸ்காரன் இந்த உலகத்துக் குள்ள வந்து நீ சீரழிய வேணாம்டா." என அக்க றையோடு சொல்லி விலக்கினான். கதிர் படிப்பைத் தொடர வேண்டுமென எல்லாவற்றின் பின்னும் விரும்பியது மாரி மட்டுமே. தானே மறந்து போன

ஒன்றின மீது மாரி இன்னும் நம்பிக்கை கொண்டி
ருப்பதில் கதிர் ஆறுதல் அடைந்தான். உயிர் வாழ்
தலுக்கான சின்னஞ்சிறு நம்பிக்கையை, ப்ரியங்
களை யாரோ ஒருவர் நமக்காக பகிர்ந்து கொள்
ளும் போது அந்த வெளிச்சத்தைத் தொடர்ந்து
செல்வது முக்கியமானது. மாரி அவனுக்களித்த
வெளிச்சத்தைத் தொடர்ந்து சென்றான் கதிர்.

கம்போ டிய டயரிக் குறிப்பு – 3

ஒரு சின்னஞ்சிறிய தேசத்தின் மனி தப் படுகொலையை பெரும் இடப்பெயர்ச்சியை உலகம் மிகத் தாமதமாகவே தெரிந்து கொண்டி ருந்தது. எல்லா நிஜங்களும் செய்திகளாகும் போது அதன் வீரியமும் வேதனையும் உலகிற்கு முழுமை யாய் புரிவதில்லை. மனிதர்களற்ற நோம்ப் பென் னின் காலியான கட்டிடங்களுக்குள் பூச்சிகளும் எலிகளும் அச்சத்தோடு நடமாடின. துரத்தப்பட்ட மனிதர்களின் கதைகளை பெருங்குரலில் ஒப் பாரிக் கதைகளாக்கின வீட்டுச் சுவர்களெங்கும் மரண வாடை. குப்பைகள் போல் சாலைகளெங் கும் சிதறிக் கிடந்த மனிதத் தசைகள் இன்னும் சுத்தம் செய்யப்படாமல் யுத்தத்தின் கோரத்தை சொல்லிக் கொண்டிருந்தது. கெமெர் ரோஜ் அந்த நகருக்குள் நுழைந்த போது எடுத்த புகைப்படங் களுக்குப் பின் இங்கு நடப்பதை உலகம் இன்

னும் தெரிந்து கொண்டிருக்கவில்லை. விசாரணை என்கிற பெயரில் கொல்லப்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்பட்டவர்கள் குறித்த தகவல்கள் எல்லாம் மர்மமாக இருந்தன.

மேலூர் ராவுத்தருக்கு விஷயம் தெரிந்த போது கோவிந்தசாமியின் வீட்டில் அவரது தம்பியிடமும் அக்காவிடமும் பதறிப்போய்ச் சொன்னார். "யார போயி பாத்து நாம அவங்கள மீட்டுட்டு வர்ற துன்னு தெரியலையே வாப்பா. பக்கத்துல இருக்க ஊரா? பேசாம இங்கியே தாயா பிள்ளயா இருக்கலாம்னு சொன்னோம் கேக்கல. இப்ப பாருங்க?" கோவிந்தசாமியின் அக்கா அழுதார். "அதெல்லாம் பேசற நேரமா ஆச்சி இது? நம்ம கோட்டையூர் தங்கப்பன் செட்டியாரப் புடிச்சம்னா எப்படியும் ஒரு வழி சொல்லுவாப்ள. நீங்க எல்லாரும் கூட வந்திங்கன்னா நல்லா இருக்கும்." ராவுத்தருக்கு தன் பேச்சைக் கேட்டு அவன் கம்போடியா சென்று மாட்டிக் கொண்டானோ என்ற குற்றவுணர்ச்சி. ஏதாவதொரு வகையில் உதவி கோவிந்தசாமியின் குடும்பத்தை மீட்டுவிடத் துடித்தார். ஒரு தேசத்தின் அரசியல் இழிவுகளுக்கு அந்த தேசத்திற்கு சம்பந்தமே இல்லாத தனிமனிதன் குற்றவுணர்வு கொண்டு என்ன ஆகப் போகிறது? ராவுத்தர் தன் வேதனைகளின் குமுறலை அவர் மட்டுமே அறிவார். கோவிந்தசாமியின் அக்காவும், தம்பியும் அவரோடு கோட்டையூர் வர சம்மதித்தனர். கூட்

டுக் குடும்பத்தில் தனது எல்லாக் காலத்திலும் தோற்றுக்கொண்டே இருக்கும் ஒரு மனிதன் எப் போதும் இருப்பான், அந்தக் குடும்பத்தில் எல் லோரின் அன்பையும் கசப்பையும் ஒருசேர சம்பா திக்கும் அவனை அவர்களால் கைவிடவும் முடி யாது, நேசிக்கவும் முடியாது. இந்தக் குடும்பத்திற்கு கோவிந்தசாமி அப்படித்தான். நளச்சக்கரவர்த்தி யாய் ஊரில் வாழ வேண்டியவனுக்கு இத்தனை சிக்கல்கள் தேவை தானா? என அக்கா எப்போ தும் அழுவாள்.

செம்மண் சாலையின் ஒரு எல்லை யில் துவங்கி இரண்டு வீதி தாண்டி முடியும் அடுத்த எல்லை வரை நீண்டிருந்தது வானா ரூனாவின் வீடு. அரையாள் அளவில் பெரிய பெரிய கற்களால் கட்டப்பட்ட கட்டிடம். நேற்றுக் கட்டியது போல் மினுங்கும் அந்த வீட்டிற்கு எண்பது தொண்ணூறு வயதாவது இருக்கும். வானா ரூனாவின் தத்தா பினாங்கில் சம்பாதித்த காசில் கட்டிய வீடு. இங்கு தங்கள் அடையாளத்தை நிலைநாட்டிக் கொள்ள வும், ஆரோக்கியமான ஒரு எதிர்காலத்திற்காகவும் உலகின் ஏதேதோ மூலைகளில் வியாபாரத்திற் காக அலைந்த சமூகம் இது. வெளியிலிருந்த வெயில் தாக்கம் எதையும் உள்வாங்காத வீட்டிற் குள் அசாத்தியமான குளிர்ச்சி. நோம்ப் பென்னிலி ருந்து திரும்பிய தங்கப்பன் செட்டி இந்த சில நாட்க ளில் ஊரில் புதிய கோவில் கட்டுவது, காரைக்குடி யில் சாலை போடுவதற்கான டெண்டர் எடுப்ப

தென ஓய்வில்லாமல் சுற்றிக் கொண்டிருந்தார். எத் தனை ஓட்டங்கள் இருந்த போதும் ஓரத்தில் கம் போடிய நிலவரங்களைத் தெரிந்து கொள்ளவும் அவர் தவறவில்லை. ரேடியோவில் வந்த செய்தி கள் ஒவ்வொரு நாளும் அவரைக் கவலை கொள்ள வைத்தது. ஒருபோதும் இனி தன்னால் திரும்பவே முடியாமல் போய்விடுமோ என வருத் தப்பட்டார். ராவுத்தர் வருவதாகச் சொன்னபோது தான் இன்னும் கோவிந்தசாமி ஊரிலிருந்து திரும்ப வில்லை என்கிற செய்தி இவருக்கும் தெரிந்தது. அந்த வீட்டில் நீண்ட முன் வாசலில் ராவுத்தரும், கோவிந்தசாமியின் உறவினர்களும் மௌனமாக அமர்ந்திருக்க அவர்களுக்கு அருந்த ஒரு ஆச்சி மோர் கொடுத்துவிட்டுச் சென்றார். பருகுவதற்கு அளிக்கப்பட்ட மோர்க் குவளைகளை வெறித்தபடி அமர்ந்திருந்த எல்லோருக்கும் எங்கிருந்து துவங் குவதெனத் தெரியவில்லை. "அவென் ஊருக்கு வந்திருப்பானில்ல நெனச்சேன் நான். எல்லாரும் கெளம்பறப்பயே கெளம்பி வந்திருக்கலாம். இப்ப அங்க யாரப் புடிச்சு நாம விசாரிக்கிறது? கடைசியா உங்க கிட்ட எப்போ பேசினான்?" வானா ரூனா கேட்ட போது, கோவிந்தசாமியின் தம்பி "வீட்டுக்கா ரம்மாவுக்கு பேறுகாலம் ஆன அன்னிக்கி பேசுனா ருங்கய்யா. அதுக்குப் பிறகு இப்பவர எந்தத் தகவ லும் இல்ல." அடக்கியிருந்த அழுகையைக் காட் டிக் கொள்ளாமல் சொன்னார். " முந்தைய ஆட்சி யாளர்களின் நிலையை ரேடியோவில் கேட்டிருந்த

தால் அவர்கள் யாரையும் தொடர்பு கொள்ள முடி யாதென வானா ரூனா தெளிவாகவே தெரிந்து வைத்திருந்தார். எல்லா பிரச்சனைகளுக்கும் தீர் வாய் ஒரு மார்க்கமிருக்கக் கூடுமென யோசித்தவர் "நீங்க எதுக்கும் பயப்படாதிகய்யா. நாம இங்க இருக்க மினிஸ்டர் மூலமா ஏதாச்சும் செய்ய முடியு மானு பாப்போம். இல்லைன்னா தாய்லாந்து மலே சியாவுல இருக்க நம்மாளுங்க கிட்ட பேசி என்ன நெலம எப்பிடி ஆள மீக்கறதுன்னு பேசுவோம். ஒரே தெருவுல ஒன்னா தொழில் பண்ணி இருக் கோம். நான் விட்டுக் குடுக்க மாட்டேன். நீங்க தைர் யமா போங்க." அவர் நம்பிக்கையளித்து அவர் களை அனுப்பி வைத்தார். இந்த சில வருடங்க ளில் கோவிந்தசாமியின் முகஜாடை கூட அவரின் குடும்பத்தினருக்கு மறந்து போய்விட்டிருந்தது. அந்த மனிதன் தன் குடும்பத்தோடு திரும்பி வரு வது இன்னொரு பிறப்பென்றுதான் ராவுத்தரும் அவரின் குடும்பமும் நினைத்தனர்.

ஃப்ரஞ்ச் எம்பஸியைச் சுற்றி கெமர் ரோஜின் இளம் வீரர்கள் காவலுக்கு நின்றனர். கடும் மழை யைக் கூட பொருட்படுத்தாமல் நாள் முழுக்க ஒரே யிடத்தில் நின்ற அந்த வீரர்களின் மன உறுதியும் அவர்களின் கண்களில் தெரிந்த வெறுப்பும் எல் லோரையும் அச்சப்படுத்தியது. நகரின் வெவ்வேறு இடங்களில் இருந்த வெளிநாட்டவர்கள் ஒருவர் பின் ஒருவராக கிடைத்த வாகனத்தில் அங்கு வந்து

சேர, அங்கிருந்த கம்போடிய ஆட்களின் எண்ணிக் கையும் வேகமாகக் குறைந்து கொண்டிருந்தது. பாதுகாப்பிற்காக அந்த வளாகத்திற்குள் தஞ்சம் புகுந்திருந்த கம்போடியர்கள் தாய்லாந்து வழியாக தப்பிச் செல்ல நினைத்தனர். கனத்த மழையுடன் வானம் திறந்தது. நடந்த, நடக்கப்போகிற வன்மு றைகளின் எந்த தீவிரங்களையும் அறியாமல் தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. எம்பஸியைச் சுற்றி இருந்த தெப்பரோவ் மரங்களில் பச்சை மணத்திற்குப் பதிலாக கொல்லப்பட்டவர்களின் குருதி மணம். வீதியெங்கும் உதிர்ந்து கிடந்த அதன் இலைகள் சகதியில் ஊறிப்போயிருந்தன. வளாகத்தில் ஒதுங்கி இருந்த கம்போடியர்களோடு ஒரு ஓரமாய் கோவிந்தசாமியின் குடும்பமும் சேர்ந் திருந்தார்கள். ஜெரோனி கப்பித்தனின் மகள் என் பதால் அவளை எம்பஸிக்குள் பாதுகாக்க நினைத் தார்கள். அவளையும் நிமோலையும் எப்படியாவது நாட்டை விட்டு பாதுகாப்பாக அனுப்பி வைக்க வேண்டும். கோவிந்தசாமி தாய்லாந்தில் இருக்கும் அவர்களின் சகோதரனிடம் அனுப்பி வைத்துவிடச் சொல்லி ஃப்ரஞ்ச் அதிகாரிகளிடம் மன்றாடினார். சமையற்காரர்கள் என்ற வகையில் கோவிந்தசாமி யும், மாரிமுத்துவும் எல்லோருக்கும் அறிமுகமான தோடு சமையல் பொறுப்பின் பெரும் பகுதியை ஏற் றுக் கொண்டனர். இவர்களுக்குத் தனியாகவும் அங்கிருந்த வெளிநாட்டவர்களுக்கு தனியாகவு மாக உணவு கொடுக்கப்பட்டது. வேக வைத்த

சோறும் கொஞ்சம் சூப்பும் மட்டுமே நாளின் இரண்டு வேளை உணவு. தாமரை இலைகளில் வைக்கப்படும் அந்த சோறு இலையின் வாடை யோடு சேர்ந்து உள்ளே செல்லும் போது ஒருவித நெடி அடிக்கும். அழகர்சாமிக்கு இரண்டாவது நாள் காலையிலேயே கடுமையான வயிற்றுப்போக்கு ஏற் பட்டது. வளாகத்திலிருந்த எல்லோரும் கழிப்பிட வசதி இல்லாமல் தற்காலிகமாக கட்டிடத்தின் பின் னால் சற்றுத் தள்ளி திறந்த வெளியில் மலம் கழித் தார்கள். கொஞ்சம் தாமரை இலைகளை தலை யில் வைத்து மறைத்துக் கொண்டபடி பின்னால் மலம் கழிக்க ஓடி போய்விட்டு வரும் அவனைப் பார்க்க எல்லோருக்கும் பாவமாக இருந்தது. மின் சாரம் நிறுத்தப்பட்டிருந்ததோடு தண்ணீரும் வரா மல் போனதால் எல்லாவற்றுக்கும் துடைத்துக் கொள்ள மட்டுமே செய்தனர். அழகர் அடிக்கடி மலம் கழித்ததில் களைத்துப் போயிருந்தான். கோவிந்தசாமி அங்கிருந்த ஒரு மருத்துவரைத் தேடிச் சென்று மாத்திரை வாங்கி வந்து கொடுத் தார். அவன் அசைய முடியாமல் பெரும்பாலும் படுத்தபடியே இருந்தான். உணவு ஒத்துக் கொள்ள வில்லை என்பதோடு சாவு குறித்தான பயம் தான் அழகர்சாமியை ரொம்பவே வருத்தியிருதது. எல் லோராலும் கைவிடப்பட்ட நிலையில் ஜெரோனி யும், நிமோலும் திக்கற்று இருந்தனர். அவர்களைச் சூழ்ந்திருந்த எல்லோரும் அந்நியர்கள், ஒரே இனத் தவர்கள் இவர்களைத் துரோகிகளாகப் பார்த்த

தால் அந்நியர்களோடு பிணையவும் முடியாமல் துரோகிகளாக வெளியேறவும் முடியாத நிலை. உடல் நலிந்து போன அழகர்சாமியைப் பார்க்க நிமோலுக்கு பாவமாய் இருந்தது. அச்சம் அவ னைக் கொன்று கொண்டிருக்கிறதென நினைத் தான்.

"இஞ்ச யார் கிட்டயாச்சும் பேசி நாம ஊருக்குப் போறதுக்கு என்ன வழின்னு பாருங்க?" கோவிந்தசாமியின் மனைவி நொடிந்து போய் கிடக்கும் அழகரை காணச் சகிக்காமல் புலம்பி னார். "இங்க எல்லாருமே நம்மள மாதிரி தான் மாட் டிக்கிட்டு இருக்காங்க. இப்ப எதுவும் செய்ய முடி யாது. எதாச்சும் ஏற்பாடு பண்ணுவாங்க பொறு மையா இருப்போம். மொதல்ல இந்தப் பிள்ளைங் கள எப்பிடியாச்சும் பாதுகாப்பா அவுக அண்ணன் கிட்ட அனுப்பி வைக்கனும்." தப்பித்துச் செல்வதற் கான மார்க்கம் தெரியாமல் அவரும் தவித்தார். மரண பயம் கவிழ்ந்த ஒவ்வொருவரும் பிறிதொரு வரை அச்சத்தோடு பார்த்தார்கள். எம்பஸியில் இருந்த ஒரு ஃப்ரஞ்ச் அதிகாரி "உங்களோட பாஸ் போர்ட் எல்லாம் எடுத்துட்டு வந்து தாங்க. இங்க இருந்து தாய்லாந்து போற வரைக்கும் எல்லாரும் ஒன்னாதான் போகப்போறோம். அதுக்கப்பறம் நீங்க ஊருக்குப் போறதுக்கு வேற ஏற்பாடு பண் ணிக்கலாம்." எனக் கேட்டார். கோவிந்தசாமிக்கு சூழ்ந்திருந்த கருமேகங்கள் எல்லாம் விலகிப் போன சந்தோசம். " தாங்க்யூ ஸார். தாங்க் யு.." என

கண்கள் பொங்கி வழிய அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டார். யாருக்கும் தெரியாமல் ஓடிப் போய் தங்கள் பாஸ்போர்ட்டுகளை எடுத்துக் கொண்டு வந்தவர் மறைத்து வைத்திருந்த காசிலிருந்து ஒரு ஐம்பது டாலரை எடுத்து ரகசியமாக அவரிடம் நீட்டினார். ஃபரஞ்ச்காரர் சிரித்தபடியே அந்தக் காசை வாங்க மறுத்துவிட்டார். "ஸார் கப்பித்தன்ஸ் சில்ரன். ப்ளீஸ் செண்ட் தெம் டூ பேங்காக்." என கோவிந்தசாமி அவரிடம் கேட்க, அவர் எந்த நம்பிக்கைகளும் தர முடியாமல் கை விரித்தார். கோவிந்தசாமிக்கு தாங்கள் அங்கிருந்து தப்பித்து விடலாம் என்னும் நம்பிக்கை வந்திருந்தது. சமையலுக்குக் கிளம்பும் போது "எல்லாம் சரியாகிடும். நாளைக்கு எம்பசில இருக்க எல்லாரையும் கூட்டிட்டுப் போக ஒரு ட்ரக் வருது. தாய்லாந்துல கூட்டிட்டுப் போயி விட்றுவாங்க. அதுக்கப்பறம் நாம இந்திய எம்பசிக்குப் போயிட்டம்னா பத்திரமா ஊருக்குப் போயிரலாம்." கோவிந்தசாமி தன் மனைவியிடம் நம்பிக்கையாகச் சொல்லிவிட்டுப் போனார். தங்களை மீட்க வரும் அந்த வாகனத்தை எதிர்நோக்கி அங்கிருந்த எல்லோரையும் போல் அவளும் காத்திருக்கத் துவங்கினாள். அழகர்சாமியும், நிமோலும் ஜெரோனி தந்த ஒரேயொரு அப்சரஸ் பொம்மையை வைத்துக் கொண்டு அழகரின் தம்பியோடு சோர்வும் களைப்பும் மிகுந்த முகத்தோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் அங்கிருந்து கிளம்பப் போகிறோமென்கிற ஆறு

தல் கிடைத்ததால் ரேடியோவில் சுரத்தின்றி பாடலை ஒலிக்கவிட்டனர். தரை தளத்தில் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து ஜெரோனி கெமெர் இனத்தவரின் பழங்குடியினப் பாடலைப் பாடினாள். மயக்கும் அவள் குரல் கட்டிடத்தை தாண்டி வாச லில் இருந்த கெமெர் வீரர்களுக்கும் கேட்ட போது அவர்கள் ஆச்சர்யமாக உள்ளே பார்த்தனர். வீரர்க ளில் ஒருவன் கட்டிடத்திற்குள் வந்து சுற்றிப் பார்த் தான். அழகரும் நிமோலும் ஓடிப்போய் பாடிக் கொண்டிருந்த அக்காவை அமைதிபடுத்தினார் கள். தேடி வந்தவன் பாடியவரை கண்டுபிடிக்க முடி யாமல் மாற்றத்தோடும் சந்தேகத்தோடும் திரும்பிப் போனான்.

குடிப்பதற்கென சேகரித்திருந்த மழை நீர் கூட குறைந்து போயிருந்தது. பசியைப் பொறுத்துக் கொள்ள முடிந்தவர்களால் புகையும், மதுவும் இல்லாத வெறுமையை சகித்துக் கொள்ள முடியவில்லை. ரேடியோவில் செய்தி கேட்பது சலித்துப் போனது. வேலை செய்யாத டெலிஃ போனை சபித்தார்கள். யாரோடும் தொடர்பு கொள்ள முடியாத இந்த தனிமை அவர்களை ஒவ் வொரு மணி நேரமும் சுயநலமிக்கவர்களாய் மாற் றிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வேளை உண வையும் பங்கு போட்ட மனிதர்களை கருணை யின்றி காட்டிக் கொடுக்க எம்பஸியில் இருந்தவர் கள் எந்த நேரத்திலும் தயாராய் இருந்தார்கள். முன்

னால் அரசாங்கத்தின் ஆதரவாளர்களைத் தேடி தேடி வேட்டையாடிக் கொண்டிருந்த கெமெர், எம் பசியில் இருந்த அரசாங்க அதிகாரிகளை ஒருவர் பின் ஒருவராக கைது செய்து கொண்டு சென்றார் கள். கெமெர் ரோஜின் வாகனம் அங்கு வரும் போது எல்லோருக்குள்ளும் யாரோ ஒருவர் கொல் லப்படப் போகிற அச்சம் எழும். அவர்கள் அங்கி ருந்து திரும்பச் செல்லும் வரை உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருப்பார்கள். அரசதுரோகி களை ஒப்படைத்தால் மட்டுமே இங்கிருக்கும் வெளிநாட்டவர்களை அனுப்புவோமென போல் பாட்டின் கெமர் ரோஜ் உறுதியாக இருந்ததால் அவர்களை அனுப்பி வைப்பதைத் தவிர வேறு வழி யில்லை. வளாகத்திலிருந்த கம்போடியர்கள் பெரும்பகுதி அங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட்டி ருந்தனர். எல்லை கடந்து தாய்லாந்திற்கோ, வியட் நாமிற்கோ சென்றுவிடலாமென்னும் நம்பிக்கை யோடு சென்றவர்களில் எவருக்கும் அது சாத்தியப் பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு சோதனைச் சாவடி யிலும் இருந்த கெமெர் படையினரால் கைது செய் யப்பட்டவர்கள் முழுமையான விசாரணைக்குப் பிறகு வெவ்வேறு கிராமங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டார்கள். உடைமையென அவர்களிடம் இருந்த எல்லாமும் பறிக்கப்பட்டது. எம்பஸியிலி ருந்த ஆட்கள் தாங்கள் வெளியேறும் தருணத்திற் காக காத்திருந்த வேளையில் அன்று மாலை ராணுவ வாகனங்கள் அங்கு வந்தன. எம்பஸியில்

நிறுத்தப்பட்டிருந்த கார்களை எல்லாம் எடுத்துக் கொண்டு சென்றார்கள். கார்கள் நிறுத்தப்பட்டி ருந்த பெரிய வளாகம் இப்பொழுது காலியாய்க் கிடந்தது. பறவைகள் அச்சத்தோடு எல்லாவற்றை யும் பார்த்தன. நோம்ப் பென் என்னும் பெரும் கூடு முழு முற்றாய் காலியான பின் மனித நடமாட்டமே இல்லாத இந்நிலத்தில் தாங்கள் யாருக்காக இருக்க வேண்டுமென்கிற ஏக்கம் அவைகளுக்கு. அங்கு இருந்த மிச்ச மீதி கம்போடியர்களை தங்கள் ட்ரக்கில் ஏற்றிக் கொண்டிருந்த ராணுவ வீரர்களில் ஒரு இளைஞனிடம் கைது செய்யப்பட்ட பெண் மாரி முத்துவை அடையாளம் காட்டி எதோ சொன் னாள். கெமெர் வீரன் மாரித்துவைப் பார்த்து "யூ கம் ஹியர்" எனக் கூப்பிட்டான். மாரி முத்து அச்சத் தோடு அவனை நோக்கி ஓட "இந்தியா ஹோட்டல் ரைட்?" எனக் கேட்டான் அந்த இளைஞன். இவர் ஆமென்று தலையாட்ட, பக்கத்திலிருந்த இன் னொருவரிடம் ரகசியமாகப் பேசினான். அவர்கள் இருவரும் இப்பொழுது மாரிமுத்துவையும் அவ னோடு இருந்த கோவிந்தசாமியின் குடும்பத்தை யும் பார்த்து தங்களோடு வரும் படி கூறினார்கள். "என்கொயரி கம் வித் அஸ்.." என அவர்கள் சொன் னதை கோவிந்தசாமியாலும், மாரி முத்துவாலும் புரிந்து கொள்ள முடியவில்லை, "ஸார் வீ இந்தி யன்ஸ். நாட் கம்போடியன்." என கோவிந்தசாமி திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார். அங்கி ருந்த சில பத்திரிக்கை காரர்கள் இவர்களுக்கு

ஆதரவாக வந்து பேச "ட்ரெய்ட்டர்ஸ். ட்ரெய்ட் டர்ஸ்." என ராணுவ வீரர்கள் பிடிவாதமாய் இவர் களை அழைத்துக் கொண்டு போவதில் இருந்த னர். "they are with army. We want names " என முதலில் கூப்பிட்டவன் தெளிவாக சொன்னான். "no no we don't know anything. I not with army." என கோவிந்தசாமி மறுத்துப் பார்த்தும் அவர் குரல் எடுபடவில்லை. அங்கிருந்த எல்லோரிடமும் உத விக்காக கெஞ்சின கோவிந்தசாமியின் குடும்பத் திற்கு ஒருவராலும் உதவ முடியவில்லை. உடல் நல மில்லாமல் நசுங்கிப் போயிருந்த அழகர்சாமி பயத் தில் சிறுநீர் கழித்துவிட்டான். அவன் உடல் தானா கவே வெடவெடக்கத் துவங்கியது. உதவி கேட்டு மன்றாடிய கோவிந்தசாமியின் தலையில் ஒருவன் பின்னாலிருந்து துப்பாக்கியால் அடித்தான். "where is capitan's children.?" என கோவமாக கேட்ட போது தான் மாட்டிக் கொண்டோமென கோவிந்த சாமி புரிந்து கொண்டார். மற்றவர்கள் தடுக்க வந்த போது துப்பாக்கி முனையில் மிரட்டத்துவங்கிய அவர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் எல்லோ ரும் அமைதியானார்கள். தன்னிடமிருந்த எல்லா பணத்தையும் எடுத்து கொடுத்து தங்களை விட்டு விடுமாறு கால்களில் விழுந்து அழுதார். வாங்கிய பணத்தை கிழித்துப் போட்ட ஒருவன் அவரை ஓங்கி வயிற்றில் உதைத்தான். வலி தாள முடியாமல் சுருண்டு விழுந்தார். அவர் குடும்பத்தினர் எதிர்க் கும் திராணியின்றி அமைதியாக இணங்கிப்

போனார்கள். கோவிந்தசாமி அடி வாங்குவதைப் பார்த்து சகிக்கமுடியாமல் ஜெரோனி தன் தம்பி யோடு அங்கு வந்தாள். பருவத்தின் வனப்பு நிரம் பிய அவளைக் கண்டு மிரட்சியான கெமெர் வீரர் கள் அவர்கள் எல்லோரையும் தங்களோடு வரச் சொன்னார்கள். எம்பஸியின் வளாகத்தில் வைத் திருருந்த தங்கள் பொருட்களை எடுத்துக் கொண்டு கிளம்பியவர்களில் நிமோலையும், அழக ரையும் தவிர்த்து மற்ற எல்லோரையும் ஒரு வாக னத்தில் ஏற்றிக் கொண்டனர். தாங்கள் தனித்து விடப்பட்ட அச்சத்தில் கத்திய அழகரையும், நிமோ லையும் கெமெர் வீரர்கள் இழுத்துக் கொண்டு போய் இன்னொரு வண்டியில் ஏற்றினார்கள். கோவிந்தசாமியின் குழந்தையைத் தவிர்த்து எல் லோரின் கண்களையும் கட்டியவர்கள் கைகளை யும் பின்னால் கட்டி எல்லோரையும் ஒரே கயிற்றில் பிணைத்திருந்தார்கள். கழுத்தில் இன்னொரு கயி றால் கட்டி ஒன்றாக நான்கு பேரையும் பிணைத்தி ருந்தார்கள். ட்ரக் அங்கிருந்து கிளம்பியபோது "sir my children." என தங்களைக் கைது செய்த வீரனி டம் கோவிந்தசாமி கெஞ்சிக் கொண்டே இருந் தார். அவர் அழுகுரலை சகிக்க முடியாமல் ஓங்கி நெஞ்சில் மிதித்து அமைதிபடுத்தினான். ஜெரோ னியின் மருண்ட முகத்தைக் கண்ட கெமெர் வீரர் கள் சிரித்தார்கள். அந்த சிரிப்பின் பின்னாலிருந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டதில் அவளுக்கு உடல் நடுங்கியது. தன் கால்களை முழுமையாக

மறைக்காத அவளின் பாவாடை நேற்று ஒரு ஃப்ரஞ்ச்காரப் பெண் தந்தது. இந்த தேசத்தின் மீதான கனவுகள் எல்லாம் நொறுக்கப்பட்ட பின் இனி தனக்கு என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்கிற அச்சத்தில் கால்கள் நடுங்கின. ஒருவன் தன் காலால் அவள் காலை வருட, அவள் பதறிப்போய் வேகமாக பின்னால் இழுத்துக் கொண்டாள்., பின்னாலிருந்த இன்னொருவன் துப்பாக்கியால் அவள் சட்டையை விலக்கி தோள் பட்டையை வருடினான். அவள் கதறினாள். கோவிந்தசாமி அவர்களிடம் மன்றாடினார். ஒருவன் அவளை ஓங்கி மிதிக்க அவள் கோவிந்தசாமியின் மீது மயங்கிச் சாய்ந்தாள். தன்னை நம்பி கப்பித்தன் கொடுத்த வேலையை சரியாய்ச் செய்ய முடியாத வேதனையில் கோவிந்தசாமி அந்த திறந்த ட்ரக்கில் அலறும் சத்தம் ஆளற்ற நோம்ப்பென் வீதிகளெங்கும் எதிரொலித்தது.

கம்போடிய டயரிக் குறிப்பு – 4

"Long live the revolutionary army of Kampuchea

The courages an glorious army
Long live the glorious revolution

Long live the new Kampuchean society
Without rich or poor !"

அங்கோரை உருவாக்கிய மக்களால் எந்தவொன்றையும் உருவாக்கிவிட முடியுமென் னும் மனவுறுதி போல் பாட்டிற்கு இருந்தது. கம் போடியாவின் தீரம் மிக்க வரலாற்றை மீட்டெடுக்க உறுதி கொண்டிருந்த அவரின் செம்படை முதலா வதாக செய்தது எதிரானவர்கள் எல்லோரையும் ஒழிப்பதைத்தான். சிந்திக்க அனுமதிக்கப்படாத ஒரு தலைமுறை அவருக்குக் கீழ் திரண்டிருந்த னர். நீண்ட காலமாய் மன்னராலும் அமெரிக்க படையாலும் துன்புறுத்தப்பட்ட இளைஞர்களுக்கு போல்பாட்டின் புதிய தேசியம் குறித்த லட்சியங்க ளின் மீது பெரும் நம்பிக்கை இருந்தது. கொலை யைத் தியாகமென நம்பினார்கள். நகரங்களில் இருந்து எல்லோரும் தங்களின் சொந்த கிரா

மங்கள் நோக்கி அனுப்பப்பட்டார்கள், உடைந்த பாலங்களை சீரமைக்கவும், சாலைகள் அமைக்க வும், பாலம் கட்டவும் நாளொன்றுக்கு பதினைந்து மணி நேரம் வரை உழைக்க அந்த மக்கள் நிர்ப் பந்திக்கப்பட்டார்கள். விவசாயம் செய்யப்படாமல் காலியாய்க் கிடந்த நிலங்களை சீரமைத்து விவ சாயம் செய்யும் உறுதியோடு அந்த தேசத்தின் சரி பாதிக்கும் மேலான குடிமக்கள் காய்ந்த வயிறுக ளோடு சிறு சிறு குடிசைகளில் கிராமப்புறங்களில் ஒதுங்கியிருந்தார்கள்.

ஒரு வாரத்திற்குப் பின் தங்கள் வயதை யொத்த ஏராளமான சிறுவர்களோடு அழகரும், நிமோலும் பட்டபாங் பகுதி நோக்கி ஒரு இரவு முழுக்க அங்க்காரின் ட்ரக்கில் பயணித்தார்கள். பெற்றோர்களையும், கனவுகளையும் பிடுங்கிக் கொண்டு ஒரு போதும் மாற்றத்தை விதைக்க வாய்ப்பில்லாத போலி லட்சியத்தை அவர்களுக் குத் தந்தார்கள். தூய்மையான கம்போடியாவை உருவாக்கும் புதிய தலைமுறையான அந்த சிறுவர் கள் பசியில் வதங்கி உட்காரக்கூட இடமில்லாமல் ஒருவர் மேல் ஒருவர் இடித்துக் கொண்டு குறிப் பிட்ட முகாம் வந்தபோது அவர்களால் எழுந்து நிற் கக்கூட முடியவில்லை. இடுப்பிற்குக் கீழ்ப் பகுதி முழுக்க செயலிழந்தது போல் அழகர் உணர்ந் தான். குளிரில் நடுங்கிய அந்த புதிய சிறுவர்களை அவர்களை விட கொஞ்சமே வயதில் மூத்த கெமெர் சிறுவர்கள் துப்பாக்கி முனையில் தள்ளி

நகர்த்தினார்கள். மஞ்சள் நிற விளக்குகளின் வெளிச்சம் ஓரிரு இடத்தில் நிரம்பிய அந்தப் பகுதியில் நிறைய புதிய குடிசைகள் இருப்பதை இருளின் நிழல் உணர்த்தியது. சகதியில் கால்கள் புதைய அச்சத்தோடு நடந்த அழகருக்கு கெமெர் மொழி பேசத் தெரியாதென்பதால் நிமோல் அவனைத் தன்னோடு இறுகப் பற்றிக் கொண்டான். விளக்கெரிந்த ஒரு பெரிய குடிசையின் வாசலில் சில தோழர்கள் காத்திருந்தார்கள். கொண்டு வரப்பட்ட சிறுவர்கள் அந்த வாசலில் வரிசையாக நிற்கப்பட்டார்கள். அங்கிருந்த தோழர்களில் தலைமை பொறுப்பிலிருந்தவன் இந்த சிறுவர்களைக் கவனமாகப் பார்த்தான். ஒவ்வொருவராக அழைத்து விவரங்கள் சேகரிக்கப்பட்டபின் அனுப்பப் பட்டார்கள். அழகரைப் பார்த்த குறிப்பெழுதியவன் "பெயர் என்ன ?" என்று கெமெரில் கேட்ட போது அவன் திரும்பி நிமோலைப் பார்த்தான். நிமோல் இரண்டு அடிகள் முன்னால் வந்து "அவன் பேர் அளகர் காம்ரேட்." என பதில் அளிக்க, தங்கள் நிலத்திற்கு சம்பந்தமில்லாத அழகரின் பையிலிருந்து அவனது பாஸ் போர்ட்டை எடுத்து பிற விவரங்களை எல்லாம் குறித்துக் கொண்டு மீண்டும் கொடுத்தான். போகச் சொல்லி கையசைத்த பின் நிமோல் வந்தான். ராப் பூச்சிகளின் சத்தம் நிறைந்திருந்தது. இரவு முழுக்க மழை பெய்து ஓய்திருந்ததால் அசாத்தியமான குளிர்ச்சி. பற்கள் அடித்துக் கொண்டன. நிமோல் நிதானமாக தன்னைக் குறித்த விவரங்களை

சொல்லிவிட்டு அழகரோடு சேர்ந்து நின்று கொண்டான். வருடத்தில் ஆறு மாதங்கள் பெரு மழை பொழியும் நிலம். இந்த மழையை வேறெங்கும் பார்க்க முடியாது. ஆவேசமும் ஆர்ப்பரிப்புமாய் விழும் ஒவ்வொரு துளியிலும் மூர்க்கம். பெரும் மரங்கள் உடைந்து விழுவது போல் மழை பொழியும் அந்த பெரும் சப்த்தம் உறக்கத்திலும் அச்சுறுத்தும். சூரியன் உதிக்கத் துவங்கியிருக்காத அந்த அதிகாலையில் கொண்டு வரப்பட்ட சிறுவர்கள் எல்லோரும் பெயர்கள் சரிபார்க்கப்பட்டு ஒவ்வொரு குடிசைக்கும் ஐந்து பேராக பிரித்து அனுப்பப்பட்டார்கள். ஒவ்வொரு குடிசையிலும் தனது உறவுகளைத் தொலைத்த சிறுவர்களும் பெற்றோர்களும் தனித்தனியாய் இருந்தார்கள். பெயர்கள் இரண்டாம் பட்சமாகி எல்லோரும் காம்ரேட் என அழைக்கப்பட்டதால் அந்த மொத்த முகாமும் இப்போது ஒரு குடும்பம் தான். நிமோல் அழகர் இருவருக்கும் ஒதுக்கப்பட்ட குடிசையில் நாற்பது வயதில் ஒரு ஆளும் அவரின் ஒரேயொரு மகளான சிறுமியும் இருந்தார்கள். எல்லோரும் படுத்து உறங்குவதற்கான சின்ன இடம் அந்தக் குடிசை. உணவையும் பிற தேவைகளையும் அங்கார் தருமென்பதால் யாரும் எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது. எல்லோரிடமிருந்தும் எல்லாமும் பிடுங்கப்பட்டிருந்தது.

அதிகாலையில் அங்க்கார் வீரன் ஒருவன் எல்லோரையும் எழுந்து வேலைக்கு வரச் சொல்லி ரேடியோவில் சத்தமாக அழைத்தபோது

சூரிய உதயத்தின் முதல் கதிர்கள் செவ்வானத்தில் பரவியிருந்தது. நீண்ட பயணக் களைப்பில் உறங்கிய இவர்களை ஒருவன் அடித்து எழுப்பினான். "வேலைக்கான நேரம் காம்ரேட். எழுந்திருங்க." கெமெர் மொழியில் அவன் சொல்ல நிமோல் அழ கரையும் கூட்டிக் கொண்டு எழுந்தான். உறக்கம் களையாத முகங்களோடு சகதி நிறைந்த நிலத்தில் மக்கள் உறக்கச் சடவோடு நடந்து சென்றார்கள். கம்போடியர்கள் மட்டுமே நிறைந்திருந்த அந்த பெரும் கூட்டத்தில் கருத்த உருவமும், அந்நிலத் திற்கு பொறுத்தமில்லாத தோற்றத்திலும் இருந்த அழகர் எல்லோரையும் சில நொடிகள் தன் பக்கம் கவனிக்க வைத்தான். அவன் மீது விழுந்த பார் வைகளில் இருந்த எந்த பரிதாபமும் அவனைக் காப்பாற்றப் போவதில்லை. ஆங்காங்கே அங்க் கார் வீரர்கள் மக்களுக்கு வேலையைப் பிரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். சைக்கிளில் இரண்டு பேர் அந்தப் பகுதி முழுக்க சுற்றி வந்து யாரும் அங்கிருந்து தப்பித்து விடாதபடி கண்கா னித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் விவசா யம் செய்ய இருக்கும் நிலத்தை நோக்கி நீர் வழிப் பாதை அமைக்க நிமோலும் அழகரும் மண்வெட் டிகளோடு அனுப்பப்பட்டார்கள். முந்தைய தினம் வெட்டப்பட்டு பாதியில் இருந்த இடத்தில் ஏராள மானோர் தங்கள் வேலைகளைத் துவங்கியிருக்க அவர்களோடு சேர்ந்து கொண்டு மண்ணை வெட் டத் துவங்கினர். ஈரத்தில் குழைந்து போயிருந்த

செம்மண் உருகி வழிய அதை வெட்டி வெட்டி இரு வரும் குவிக்கத் துவங்கினார்கள். மிகத் தாமதமாக வெளிவரத் துவங்கிய சூரிய வெளிச்சம் உடலில் இருந்த சக்தியை முழுவதுமாக உறிஞ்சிக் கொண் டிருந்தது. ஒருபோதும் கடுமையான வேலைகள் செய்து பழக்கப்பட்டிருக்காத அழகரும் நிமோலும் உடல் நோவு தாங்காமல் தளர்ந்து நின்ற போதெல் லாம் கண்காணிப்பில் இருந்த கெமெர் ரோஜ் சிறுமி முதுகில் அடித்தாள். பசியும் உடல் நோவும் இந்த வலியை எல்லாம் மறத்துப் போகச் செய்திருந்தா லும் அடிபட்டதும் சுளீரென நரம்புகள் இழுத்துக் கொண்டபோது மயக்கம் வந்தது.

லேசாக மழை தூரத் துவங்கியிருந் தது. தாங்கள் வெட்டிக் கொண்டிருக்கும் இந்த மணல் பள்ளம் இன்னும் எத்தனை தூரம் நீளுமென்பது அவர்களில் ஒருவருக்கும் தெரி யாது. அந்தப் பள்ளத்தின் இன்னொரு பக்கத் தில் நிலத்தை சமன்படுத்த பெரும் மக்கள் கூட் டம் உழைத்துக் கொண்டிருந்தது. தோண்டப்பட்ட மண்ணை அள்ளிக் கொண்டுபோய் தூரமாகக் கொட்டி வைத்ததால், மண் கொட்டி வைக்கப்பட்ட இடம் குன்றைப் போலிருந்தது. நீண்ட நேரத்திற்குப் பின் உணவு இடைவெளிக்கான அறிவிப்பை ஒரு வன் ரேடியோவில் அறிவிக்க, உணவு வைக்கப் பட்ட இடம் நோக்கி எல்லோரும் ஓடினார்கள். அழ கருக்கும் நிமோலுக்கும் கைகளில் தோலுரிந்து குருதி கசிந்தது. நீண்ட வரிசையில் உணவுக்காக

நின்ற அவர்களிடம் ஒருவன் அழுக்காகிப்போன பழைய பீங்கான் பாத்திரத்தைக் கொடுத்துவிட்டுப் போனான். இரக்கமின்றி மழை அவர்களை நனைத்துக் கொண்டிருந்ததால் உடல் சோர்ந்து சூடான அரிசிக் கஞ்சிக்கு காத்திருந்தன அவர்களின் நாவுகள். பாத்திரத்தில் பாதிக்கும் குறைவாக தரப்பட்டிருந்த உணவை ஏமாற்றத்தோடு பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் அதனை சாப்பிட்டு முடிக்கும் முன்பாகவே மீண்டும் வேலை செய்ய அழைக்கப்பட்டனர். ஹோட்டல் இந்தியாவில் அப்பாவின் சுவை மிக்க உணவுகளை சாப்பிட்டு பழக்கப்பட்ட அழகரின் நாக்கு இந்த சில நாட்களில் பசிக்கு என்ன கிடைத்தாலும் காணும் என எண்ண வைத்திருந்தது. சூட்டையும் பொருட்படுத்தாமல் அவசரமாகக் கஞ்சியைக் குடித்துவிட்டு அவர்கள் எழுந்து ஓடினார்கள்.

யோல் ஸ்லோங்கிலிருந்த அந்த பள்ளிக்கூடம் மட்டுமில்லாமல் கம்போடியாவிலிருந்த பள்ளிகள் முழுக்கவே மூட்டப்பட்டிருந்தன. கெமெர் ரோஜின் முக்கிய விசாரணைப் பிரிவான எஸ்21 கட்டுப்பாட்டில் வந்திருந்த அந்தப் பள்ளிக்கூடம் மூன்று பிளோக்குகள் கொண்டது. ஒவ்வொரு பிளாக்கிலும் மூன்று தளங்கள், ஒவ்வொரு தளத்திலும் ஏராளமான அறைகளென வதைத்தலுக்கான பெரும் பசியோடு அந்த இடம் தயாராகியிருந்

தது. விசாரணைக்கென கொண்டுவரப்படும் எவ ரும் மீண்டும் அங்கிருந்து திரும்புவதில்லை. எதிரி களென நம்பப்படுகிறவர்கள் எல்லோரும் கொல் லப்பட வேண்டும். அப்படி கொல்வதற்கு அவர்க ளுக்கு ஒரு காரணமோ கதையோ தேவை என் னும் அடிப்படையில் விசாரிக்கப்பட்டார்கள். சந் தேகத்தின் அடிப்படையில் எவரையும் விசாரிக்கத் தயாராய் இருந்தவர்களுக்கு கருணையோ மன் னிப்போ எதுவும் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்க வில்லை. ஒவ்வொரு நாளும் விசாரிக்கப்பட்டவர் கள் குறித்த தகவல்களை மேலிடத்திற்கு அனுப்ப வேண்டுமென்பது கட்டளை. யாராவது இறந்து போனால் எவ்வாறு இறந்தார்கள் என்கிற கார ணத்தைக் குறிப்பிட்டு தனி அறிக்கையாக அனுப்ப வேண்டும். விசாரிக்க, காவல் காக்க, வதைக்க வென வெவ்வேறு வேலைகளுக்காக அந்த வளா கத்தில் மட்டும் ஐநூருக்கும் பக்கமான கெமெர் ரோஜ் வீரர்கள் இருந்தனர்.

எம்பஸியிலிருந்து அழைத்து வரப்பட்ட கோவிந்தசாமியின் குடும்பத்தினரோடு வேறு சில ரும் இப்பொழுது அந்த ட்ரக்கில் கைதிக ளாக பிடிக்கப்பட்டிருந்தார்கள். நோம்ப்பென்னின் வெவ்வேறு பகுதிகளுக்கு சுற்றிய வாகனத்திற்குள் அழுக்கின் நாற்றம் எல்லோரின் உடலிலும் நிரம் பியிருந்தது. சுவாசிக்க முடியாத அவஸ்தையில் ஜெரோனி தடுமாறினாள். அவளது கழுத்தெலும் புகள் கயிறுகள் இறுக்கியதால் நொறுங்கும் அள

விற்கு வலித்தன. வாகனம் வேகம் குறைந்து ஒரு கட்டிடத்திற்குள் நுழைவதை உணர்ந்து கொண்ட கைதிகள் தூக்கத்திலிருந்து விழித்தார்கள். வேத னையினால் உருவான அசதி. நரம்புகள் சுருண்டு வலித்த கால்களை அசைக்க முடியாதபடி எல் லோருக்கும் மரத்துப் போயிருந்தது. வாகனம் ஓரி டத்தில் நின்றதும் கெமெர் வீரர்கள் அவசரமாக கீழே குதித்து இறங்கினார்கள். அவ்வளவு நேர மும் இருந்த அமைதி விலகி ரேடியோவில் செம் படையின் புரட்சி பாடல் ஒலிக்கும் சத்தம் அகோ ரமாய் எதிரொலித்தது. அந்த வாகனத்திற்கு அரு கில் யாரோ ஒருவன் அடிபட்டு வலியில் அல றும் சத்தம் ரேடியோவில் ஒலிக்கும் பாடலையும் மீறி கேட்டது. அந்தக் குரலில் இருந்த வலியை உணர்ந்த எல்லோருக்குள்ளும் மரண பயம். கண் கள் திறக்கப்படாமல், கைகளும் கழுத்தும் கட் டப்பட்ட அதே நிலையில் கைதிகள் வரிசை யாக இறக்கி விடப்பட்டார்கள். கோவிந்தசாமியின் மனைவி கையில் குழந்தையோடு இறங்க சிரமப் பட்டாள். அவள் கால்கள் முன்னாலிருந்த மாரி முத்துவின் கால்களில் இடித்து விழப்போன போது, அவளோடு சேர்ந்து ஜெரோனியும் கீழே விழுந் தாள். கயிறு பிணைக்கப்பட்டிருந்ததால் கோவிந் தசாமியும், மாரிமுத்துவும் சுதாரித்து அவர்களைத் தூக்கினார்கள். கோவிந்தசாமியின் குழந்தை அந் தப் பதட்டமான சூழ்நிலையை எதிர்கொள்ள முடி யாமல் கதறியழுதபோது அதன் அழுகுரலும் இப்

பொழுது சேர்ந்து கொண்டது. மனித அவலங்களுக்கும், அலறல்களுக்கும் பழக்கப்பட்ட கெமெர் இளைஞர்கள் இயல்பாய் இவர்களை நகர்த்திக் கொண்டு சென்றார்கள். கூட்டத்திலிருந்த ஒருவன் சத்தமாய் இன்னொருவனின் பெயரைச் சொல்லிக் கத்தினான். அழுத்தி கட்டப்பட்டிருந்த தொண்டை வலித்தாலும் மீண்டும் மீண்டும் கத்த அவன் பெயர் சொல்லி அழைத்தவன் பலகீனமான குரலில் பதில் எழுப்பினான். கயிற்றை இழுத்துக் கொண்டு சென்ற கெமெர் வீரன் கத்தியவனை ஓங்கி அடிக்க, வலியைப் பொறுத்துக் கொண்டு, அவன் பாதுகாப்பாய் இருப்பதில் தற்காலிகமாய் ஆறுதலடைந்தான்.

இரும்புக் கம்பிகளால் மறைக்கப்பட்ட ஜன்னல் வழியாய் மெல்லிய வெளிச்சம் வந்த நீண்ட அறையில் அவர்கள் மூன்று வரிசைகளாக உட்கார வைக்கப்பட்டார்கள். தங்களின் கடைசி நாளாக இருக்கலாம் என்னும் அச்சம் அவர்கள் ஒவ்வொருவருக்கும். ஒரு கெமெர் வீரன் முரட்டுத்தனமாக எல்லோரின் கண்கட்டுகளையும் அவிழ்த்துவிட்ட போது பிரகாசமான மஞ்சள் நிற விளக்கு வெளிச்சம் அவர்களைச் சூழ்ந்திருந்தது. கோவிந்தசாமி விளக்கின் வெளிச்சத்தை எதிர் கொள்ள முடியாமல் கண்களை சுருக்கினார். அவரின் குழந்தை இன்னும் அழுது கொண்டிருந்தது. கண்களைத் திறந்து பார்த்த எவருக்கும் தாங்கள் எங்கிருக்கிறோம் எனத் தெரியவில்லை. கைக் கட்டுகளை

அவிழ்த்து இரண்டு பேர் சேர்ந்து கோவிந்தசா மியை இழுத்துக் கொண்டு போய் விளக்கின் முன் னால் நிற்க வைக்க, ஒருவன் இப்பொழுது தன் னிடமிருந்த கேமராவால் படம் எடுத்தான். வெவ் வேறு நிலைகளில் நிற்கவைக்கப்பட்டு படம் எடுத் துக் கொண்ட பின் அவருக்குப் பின், மாரி முத்து இழுத்துச் செல்லப்பட்டார். அந்த அறையிலிருந்த பதினைந்து பேரும் படமெடுத்துக் கொண்டபின் அவர்களைக் குறித்த விவரங்களை ஒருவன் எழு திக் கொள்ளத் துவங்கினான். கோவிந்தசாமியின் குடும்பத்தை ஒரு ஓரமாக உட்கார வைத்தனர். கைது செய்து கொண்டுவரப்பட்ட இன்னொருவன் அழைக்கப்பட்டான். அந்த அறையின் மூலையில் ஒரு மேசையும் நாற்காலியும் மட்டுமே ஒதுக்கப்பட் டிருந்தது. மேசையில் அமர்ந்திருந்தவனுக்கு முன் பாக நிறுத்தப்பட்ட கைதியிடம் அவன் பெயர் என் னவென்று விசாரிக்க "சேரெக்" என்றான்.

"எந்த ரீஜின்?"

"இதற்கு முன் என்ன செய்து கொண்டிருந் தாய்?"

"முந்தைய அரசாளர்களோடு உனக்கு தொடர்பு உண்டா?"

சி.ஐ.ஏ? கே.ஜி.பி? வியட்நாமிய ஆர்மியோடு உனக்குத் தொடர்புண்டா?"

என அடுத்தடுத்த கேள்விகள். சோர்விலும் களைப்பிலுமிருந்த கைதி தடுமாறி தடுமாறி பதில்

சொல்ல எல்லாவற்றையும் வேகமாகக் எழுதிக் கொண்டவன் அவனுக்குப் பின்னாலிருந்த அங்க் கார் வீரனைப் பார்த்தான். அவன் மீண்டும் அந்தக் கைதியின் கண்களைக் கட்டி இழுத்துக் கொண்டு சென்றான். அவனுக்குப் பின்னால் எல்லோரிடமும் அதே கேள்வி. வெவ்வேறான பதில்கள். ஒருபோ தும் தாங்கள் கேள்விப்பட்டிராத சி.ஐ.ஏ, கே.ஜி.பி போன்ற சொற்கள் எல்லாம் ஏற்படுத்திய அச் சத்தில் பதில் சொல்லத் தடுமாறிய எல்லோரை யுமே சந்தேகத்தின் அடிப்படையில் மீண்டும் கண் களைக் கட்டி இழுத்துக் கொண்டு சென்றார்கள். எல்லோரும் சென்ற பின் கோவிந்தசாமி அழைக் கப்பட்டார்.

"யுவர் நேம் காம்ரேட்?"

"கோவிந்தசாமி. "

"இந்தியன்?"

"எஸ். காம்ரேட்."

" r u with CIA?"

"No comrade."

"KGB?"

"No comrade."

"u with capitan narithon? "

ஜெரோனியைப் பார்த்தபடி அவன் கேட்க, பதில் சொல்ல முடியாமல் கோவிந்தசாமி அமைதியா னார். அவரின் பாஸ்போர்ட்டை வாங்கிக் கொண் டபின் அடுத்தடுத்து மாரி முத்துவிடமும் கோவிந்த

சாமியின் மனைவியிடமும் அதே கேள்விகளைக் கேட்டார்கள். எல்லோரின் பாஸ்போர்ட்டையும் வாங்கி வைத்துக்கொண்டு கடைசியாக ஜெரோனியை அழைத்தார்கள். இளவரசியோடு அவள் அப்சரஸ் நடனம் ஆடியவள் என்ற குறிப்பு முக்கியமானதாக சேர்க்கப்பட்டது. கப்பித்தனின் மகள் என்பதோடு அவளது மற்ற குறிப்புகளும் முக்கியமானதாய் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கோவிந்த சாமியும் மாரிமுத்துவும் கண்கள் கட்டப்பட்டு மற்றவர்களோடு இழுத்துச் செல்லப்பட்டனர். முதல் பிளோக்கில் மூன்றாவது தளத்தில் கடைசி அறைக்கு அவர்கள் சென்று சேர நாற்பது நிமிடங்களானது. ஒவ்வொரு தப்படியைக் கடக்கவும் இடித்துக் கொண்டு சிரமப்பட்ட அவர்களை ஒருவன் முன்பு போலவே கயிற்றில் கட்டி இழுத்துக் கொண்டு சென்றான். படுகொலை செய்ய இழுத்துச் செல்லும் மிருகங்களிடம் காட்டும் கருணையைக் கூட இவர்களிடம் காட்ட அவர்கள் தயாராய் இல்லை. மாடிப்படிகளில் ஏற முடியாமல் தடுமாறி விழுந்தவர்களின் மீது சராமாரியாய் அடிகள் விழுந்தன. சிறிது நேரம் ஓய்ந்திருந்த மரண ஓலம் இப்பொழுது புதிய மனிதனின் குரலாய் எதிரொலிக்கத் துவங்கியது. மூன்றாவது தளத்தை அவர்கள் அடைந்தபோது மரணத்தின் முகடுகளில் இருப்பதாகவே நினைத்துக் கொண்டார்கள். “நஞ்சு மரங்களின் குன்று” என்னும் காரணப்பெயருக்கு ஆகப் பொறுத்தமான இடமது. ஒரு அறை

யின் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டார்கள். இதற்கு மேல் நடக்க வேண்டியதில்லை என்னும் இளைப் பாறுதலில் அவர்கள் எல்லோருக்கும் மூச்சு சீரா கியது. கண்கள் திறக்கப்பட்டு உள்ளே அனுப் பட்டவர்களின் கட்டுகளை ஒருவன் அவிழ்த்து விட்டான்., அந்த அறையில் அவர்களுக்கு முன் பாகவே பத்திற்கும் மேற்பட்டோர் வரிசையாக படுக்க வைக்கப்பட்டிருந்தார்கள். சுவற்றில் ஒன்று இரண்டு என எண்கள் வரிசையாய் இருக்க ஒவ் வொரு எண்ணுக்கும் கீழ் ஒவ்வொருவர் படுக்க வைக்கப்பட்டார்கள். பாதி மயக்கத்திலிருந்த சிலர் புதிதாக வந்தவர்களில் தங்களுக்குத் தெரிந்தவர் கள் எவரும் இருக்கிறார்களா என ஏக்கத்தோடு பார்த்தார்கள். அந்த பரந்த அறை முழுக்க நிண நீரும், காயங்களில் இருந்து கசியும் குருதியின் நாற் றமும் நிரம்பிக் கிடந்தது. திடீரென எதிர்கொண்ட காட்டமான நெடியில் மாரிமுத்துவுக்கு குமட்டிக் கொண்டு வர அவர் குடலைப் புரட்டி எடுத்த ஓங் காரிப்பை சிரமங்கொண்டு அடக்கிக் கொண்டார். அந்த அறைக்குக் காவலாக நின்றிருந்தவன் கத வுகளை சாத்திவிட்டு சன்னல்களின் வழியாய் எல் லோரையும் கண்காணிக்கத் துவங்கினான்.

விசாரணை அறையில் கண்கள் கட்டப் பட்ட நிலையில் நின்று கொண்டிருந்த கோவிந்தசா மியின் மனைவியையும், ஜெரோனியையும் இரண்டு கெமெர் வீரர்கள் பரிசோதிக்க நெருங்கி

னார்கள். சொந்த ஊர், குடும்பம் எல்லாவற்றையும் பிரிந்த அவர்களுக்கு இந்த வெற்றி அடங்கிக் கிடந்த காமத்தையும் தவிப்பையும் கிளறிவிட்டது. பருவத்தின் துவக்கத்திலிருந்த அந்த இளைஞர் கள் லட்சியத்தின் பொருட்டு எந்த விருப்பங்களை யும் தொடர்ந்து செல்ல முடியாதபடி நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தார்கள். கோவிந்தசாமியின் மனைவி தன் கழுத்தின் வழியாக ஒரு ஆணின் முரட்டு கைகள் தன் மாரை தழுவிச் செல்வதை உணர்ந்து கத்தத் துவங்கியபோது ஒருவன் ஓங்கி அவள் தலையில் அடித்தான். இத்தனை துயரில் வதங்கிப்போன அவர்கள் இரண்டு பேரின் உடலில் இருந்தும் கசிந்த வியர்வை நெடியில் கிளர்ந்த அந்த வீரர்கள் உடல் கொதிப்போடு தடவத் துவங்கினார்கள். தன் உடலில் இதற்கு முன் இல்லாதபடி புழுக்கம் ஊரத் துவங்கியதை உணர்ந்த ஜெரோனி எந்த எதிர்ப் பையும் காட்ட முடியாமல் பற்களை இறுகக் கடித் துக் கொண்டாள். அவள் மார்புகளை கசக்கியவ னுக்கு இருபது வயதுகள் கூட இருக்காது. அந்த உடலை பிய்த்துத் திண்ணும் மூர்க்கம் அந்த விரல் களில். சோதனை அவர்களின் இடைகளுக்குக் கீழ் இறங்கி அந்தரங்க பாகங்களுக்குள் புகுந்து மயிர் நிரம்பிய உறுப்புகளின் உப்பு மணத்தைத் தடவி மீண்ட போது கட்டுப்படுத்த முடியாமல் கோவிந்தசாமியின் மனைவி மீண்டும் கதறினாள். அவள் அழுததில் அதிர்ந்து குழந்தையும் அழ, ஒரு வன் அவளின் கையிலிருந்து குழந்தையைப்

பிடுங்க முயற்சித்தான். அவள் விடாமல் இறுகப் பற்றிக் கொண்டாள். தன் உடலின் மீது நிகழும் பெரும் வன்முறையைப் பொறுத்துக் கொள்ளும் மன உறுதியோடு தசைகளை இறுக்கிக் கொண்டவளை கருணையின்றி இப்பொழுது இன்னொருவனின் கைகள் தடவின. அந்த சில நிமிட அவஸ்தை முடிந்து இருவரும் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர். பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த கடைசி பிளோக்கின் அறைக்குள் அவர்கள் விடப்பட்ட போது அவர்களைப் போலவே சிதைத்து அனுப்பப்பட்ட பெண்கள் அங்கிருந்ததால் அச்சம் சிறிது விலகியது. உறங்க முடியாத வேதனையோடு அந்த அறையிலிருந்த பெண்கள் புதிதாக வந்த இவர்களைப் பரிதாபமாய்ப் பார்த்தனர். உடல் நடுங்க ஆடைகள் கசங்கிப் போயிருந்த ஜெரோனியின் உடையை அவளுக்கு அருகிலிருந்த ஒரு பெண் சரி செய்து விட்டாள். அழுது கொண்டிருந்த கோவிந்தசாமியின் குழந்தையை கெமெர் வீரன் ஒருவன் அவரின் மனைவியிடமிருந்து கேட்டான். தர மறுத்தவளிடம் “குழந்தைக்கு சிகிச்சையளிக்கப் போகிறோமென” சொல்ல, ஜெரோனி குழந்தையைத் தரச் சொல்லி இவளிடம் சொன்னாள். தொடர் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் அமைதியாகக் கிடக்க, அரை மனதோடு குழந்தையை அவர்களிடம் கொடுத்தாள். அந்த அறைக் கதவு சாத்தப்பட்ட போது கடும் இருள் சூழ்ந்த அறையில் அப்பெண்கள் தனித்து

விடப்பட்டார்கள். தன் தாயிடமிருந்து பிடுங்கிச் செல்லப்பட்டக் குழந்தை அடுத்த சில நிமிடங்களில் அந்தக் கட்டிடத்தின் பின்னால் கழுத்தை நெறித்து கொல்லப்பட்டு புதைக்கப்படப் போகிறதென்பதை அதன் தாயோ ஜெரோனியோ ஒருபோதும் அறிந்து கொள்ளப் போவதில்லை.

உ – லாபம்.

அவர்கள் யாரும் எதிர்பாராத ஒரு நாளில் சமூகத்தால் கைவிடப்படுகிறார்கள். வாழ்க்கை குறித்த நம்பிக்கைகள் பறிக்கப்பட்டு நிராதரவாக்கப்படும் அவர்களின் மனங்களில் அவநம்பிக்கையின் தீவிர நஞ்சுக்கொடி படர்கிறது. வாழ்வின் மீதான அச்சம் எந்தவொன்றைக் குறித்தும் சிந்திக்கவிடாமல் செய்வதில் தங்களைத் தாங்களே முடமாக்கிக் கொள்கிறார்கள். ஆழ்ந்த கனவுகளில் இருந்து அடித்து உசுப்பப்பட்ட இந்தக் குழந்தைகள் அனாதரவாக நிற்கையில் யாரோ சில மீட்பர்கள் அவர்களுக்கு தஞ்சமளிக்கக் கூடும். அப்படியான மீட்பர்களில் ஒருவர் செல்வராஜ். தந்தைகளின் குற்றங்கள் மகன்களையும் தொடர்கின்றன. பாவத்தின் எல்லா தடங்களையும் தங்கள் பிள்ளைகளுக்கு அன்பளிப்பாக்கித் தரும் தகப்பன்களுக்குத் தெரிவதில்லை தனக்குப் பின்னால் அந்தக் குழந்தைகள் இந்த சமூகத்தால் எத்தனை கொடூரமாக காயடிக்கப்படுகிறார்களென. தண்டனை சிறைவாசிகளின் ஏழைக் குடும்பங்களுக்கு உதவவும் அவர்களின் பிள்ளைகள் படித்து வாழ்வில் நல்ல நிலைக்கு வரவேண்டுமென்னும் உன்னதமான எண்ணத்திலும் செல்வராஜ் தொண்டுநிறு

வனம் ஒன்றை நடத்தி வருகிறார். பழைய சைக் கிளும், தன் வீட்டு மொட்டை மாடியில் கூரை வேய்ந்த மாலை நேர ட்யூசன் செண்டருமாய் தொடங்கிய அந்த தொண்டு நிறுவனம் இன்று பிரம்மாண்டமான கட்டிடமும், இரண்டு மூன்று கார் களோடும் விருட்சமாய் வளர்ந்திருக்கிறது.

அந்த பிரம்மாண்டமான கட்டிடத்திற்கு மாத வாடகை பத்து ரூபாய் மட்டுமே என்றால் எவருக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். தனி வீடு. இருபதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் அங்கு தங் கியிருந்தனர். ஷெனாய் நகரின் மரங்களடர்ந்த பகுதியில் வெளிப்பார்வைக்கு பகட்டாகத் தோன் றும் அந்தக் கட்டிடத்திற்குள் எப்போதும் ஆட்கள் போக்குவரத்து இருக்கும். செல்வராஜ் ஒரு முன் னாள் ஆசிரியர். சேவையை தன் வாழ்நாள் லட் சியமாய்க் கொண்ட அவருக்கு இந்த தொண்டு நிறுவனம் துவங்கிய ஏழெட்டு வருடங்களில் கோடி ரூபாய் பக்கமாய் சொத்து சேர்ந்திருப்பதை கட வுளின் கிருபை என்றுதான் சொல்லவேண்டும். எல்லா நாட்களிலும் கைதிகளை சந்திப்பதற்கான சிறப்பு அனுமதியைப் பெற்றிருந்த அவர், வசதி யில்லாத கைதிகளுக்கு வழக்கை எடுத்து நடத்த இலவச வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்து தரு வது, சிறையிலிருந்தபடியே வேலைகள் செய்ய தொழில் வாய்ப்புகளை உருவாக்கித் தர சிறை கண்காணிப்பாளரிடம் பேசுவது என தன்னாலான எல்லா உதவிகளையும் செய்துவந்தார். அதற்காக யாரிடமும் ஒரு ரூபாய் கூட பெற்றுக்கொள்வ தில்லை. ஒருபோதும் கோவப்படத் தெரியாத அவர் புன்னகையை காணும் எவர் ஒருவருக்கும் அவ

ரின் மீது முழு நம்பிக்கையே வரும். அவரே எம் மீட் பரென கண்ணை மூடி நம்புவர்.

கதிர் பள்ளிப்படிப்பைத் தொடர முடியா மல் கைவிட்ட நாளில் கண்காணிப்பாளர் ஆள் அனுப்பி அவனை சிறைக்கு வரச் சொல்லியிருந் தார். அத்தனை நாட்கள் கச்சேரியோடு திரும்பிப் போனவனுக்கு முதல் முறையாக கண்காணிப்பாள ரின் அறை வரை சென்றதில் உடல் வியர்த்தது. அவனை எதிர்கொண்ட எல்லோருமே அச்சுறுத் துவதாய் இருந்தனர். போலிஸ்காரர்கள் சிரிக்கும் போதுகூட அதில் ஒரு கடுமை இருந்தது போல் பட் டது அவனுக்கு. கண்காணிப்பாளர் வர சில நிமிடங் கள் ஆகுமெனச் சொல்லி அந்த அறையின் வாச லில் இருந்த இருக்கையில் அவனை காத்திருக்க வைத்தனர். வாசலெங்கும் படர்ந்திருந்த குரோட் டன்ஸ் செடிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவ னின் நினைவுகளை

"இந்தா தம்பி, டீ எடுத்துக்க." என ஒரு கன் விக்ட் வார்ட்டரின் குரல் கலைத்தது. வியர்த்த உள் ளங்கையை துடைத்துக் கொண்டபடி வாங்கிக் கொண்டவன் அவரைப் பார்த்து சினேகமாக சிரித் தான். "அழகர்சாமி மகனாய்யா?" ஆதூரத்தோடு கேட்டார்.

"ஆமாண்ணே." தேநீரின் சூடு நாவில் பரவ அவ ரைப் பார்த்துச் சொன்னான்.

"சூப்பரண்ட் நல்ல மனுஷன்யா. உனக்கு உதவி பண்ணனும்னு நெனைக்கிறாப்ள. அவர் சொல்ற மாதிரி கேளு சரியா?" வேறு யாரும் வருவதற்கு முன்னால் மனப்பூர்வமாக அவனுக்கு நல்ல வார்த்

தைகளைச் சொல்லி உற்சாகமூட்டிவிட்டுச் சென்றார்.

தனித்துவிடப்பட்டவனின் நினைவுகளெங்கும் விருப்பங்கள் பூச்சிகளின் குன்றென அலை பாய்ந்து நிறைந்தன. ஏற்றுக்கொள்ள முடியாத ஒவ்வொன்றின் மீதும் என்றென்றைக்குமான விருப்பங்கள் நிலைபெற்றுவிடுகின்றன. கண்காணிப்பாளர் வந்தபோது அவ்வளவு நேரமும் இருந்த தயக்கமெல்லாம் அவனிடமிருந்து விலகியிருந்தது. மிக சாந்தமான் மனிதராய் இருந்தார். வலுவேறிய இந்த இரும்புக்கோட்டைக்கு பொறுப்பாளரென நம்பும்படியான தோற்றமில்லை. கறுத்த முகத்தில் அழுத்தமாய் மாற்றமுடியாதபடி பதிந்து போயிருந்த புன்னகை. போலிஸ்காரர்களுக்கு ஒருபோதும் வாய்த்திராத ஆச்சர்யமான முகவெட்டு. அவரோடு செல்வராஜும் வந்திருந்தார். அவருக்கு அனுபவமிக்க போலிஸ்காரரின் முகம். இயற்கை பெரும்பாலும் ஓரவஞ்சனை மிக்க முரண்களோடுதான் இருக்கிறது.

“உன்னோட மார்க்ஸெல்லாம் பார்த்தேன் தம்பி. நல்லா படிக்கிற பையன். ஏன் படிப்ப பாதில விடனும்? நீ தொடர்ந்து படிக்கிறியா? தண்டனைக் கைதிகளோட பிள்ளைங்க படிக்கறதுக்குன்னே செங்கல்பட்டுல இன்ஷ்டிடியூட் இருக்கு. டிப்ளமோவர செலவே இல்லாம நீ படிக்க முடியும்.” அவர் எப்படியும் அவனை அன்றே செங்கல்பட்டிற்கு அனுப்பிவிடும் ஆர்வத்தில் இருந்தார். கைதிகளின் பாதுகாப்பு ஒரு சிறைக் கண்காணிப்பாளருக்கு எத்தனை முக்கியமோ அதேயளவு அவர்களின்

குடும்பமும் முக்கியமென்பதை அவரின் அக்கறை வெளிப்படுத்தியது.

“நீ எதுக்கும் யோசிக்காத தம்பி. எல்லாம் இல்லா தபட்ட பசங்க தான். நீ அங்க போனா உனக்கே வாழ்க்கை ல ஒரு பிடிப்பு வரும்.” செல்வராஜும் கண்கானிப்பாளரின் வார்த்தைகளுக்கு கூடுதல் வலு சேர்த்துக் கொண்டிருந்தார். கதிருக்கு மனம் குமுறி அழுகை முட்டியது. தனது சூழலை எப்படி இவர்களுக்கு விளங்க வைப்பது? படிக்க விருப்பம் இல்லாமலா? அல்லது கனவுகள் இல்லாமலா?

“ஸார். வீட்டுக்கு ஒரு பையன் நான். அம்மா தனியா இருக்காங்க. அப்பா ஏகப்பட்ட கடன் வெச்சிட்டுப் போயிருக்காரு. வேலைக்கு போயி கடன அடைக் கனும் ஸார்.” கதிரின் குரல் கம்மியது. அவன் கண் கள் அழாமலேயே சிவந்து போயிருந்தன. கண்கா னிப்பாளருக்கு அவனைப் புரிந்து கொள்ள முடி யவில்லை. ஏன் மறுக்கிறான். அந்த அறையின் பழைய குளிர்சாதனப் பெட்டியிலிருந்து பொறுத்த மில்லாத சத்தம் வேறு அவரை எரிச்சலூட்டியது. “என்னய்யா பெரிய கடன். படிச்சு நல்ல வேலைக் குப் போக வேணாமா?”

“எனக்கும் அந்த ஆச இருக்கு ஸார். ஆனா ஒழுங்கா கடன அடைக்காட்டி உங்காத்தால பிராத் தலுக்கு இழுத்துட்டுப் போவேன்னு கடன் காரன் மிரட்டிட்டுப் போறப்போ தெருவே பாத்து காறித் துப்பறாங்க ஸார். எதிர்காலம் எனக்கு நல்லா இருக்கனும் தான். ஆனா அதுக்கு முதல்ல என் னோட நிகழ் காலம் கொஞ்சமாச்சும் சரியா இருக் கனுமே ஸார்.” அவ்வளவு நேரமும் அவனை

அழுத்திக்கிடந்த கண்ணீர் அழுகையாய் கொப்பளித்தது. சத்தமே வராமல் தேம்பினான். செல்வராஜ் அவன் தோள்களைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் சொன்னார்.

"அழாதய்யா தம்பி. உன் வாழ்க்க நல்லா இருக்கனும்னு தான இவ்ளோ பிரயத்தனப்படறோம்."

"எனக்கும் புரியுது ஸார். அதான் அழுகைய அடக்க முடியல. நீ எப்பிடி போனா என்னன்னு எங்கப்பன் நான் பொறந்ததுல இருந்தே கிரிமினலா சுத்திட்டு இருக்காரு, இன்னிக்கே நீங்க என்னய செங்கல்பட்டுக்கு படிக்க அனுப்பிருவீங்களோன்னு நேத்து ராத்திரி முழுக்க எங்கம்மா நீ மட்டும் படிக்கப் போன நான் மருந்த குடிச்சு செத்துருவேன்னு ஒப்பாரி வெக்கிது. பெத்தவங்களுக்கு அவங்க வாழ்க்க, சந்தோசம் முக்கியம். எல்லாரும் இருந்து அனாதையா கெடக்கமேன்னு தவிச்சுக்கிட்டு இருந்தேன். ஆறுதலா நீங்க நாலு வார்த்த பேசறீங்க. சரின்னு ஒரு வார்த்த சொல்ல முடியலயே ஸார்." இடைவிடாமல் தேம்பி அழுதபடியே இருந்தவன் இடது கை சட்டையால் கண்ணையும் முகத்தையும் துடைத்துக் கொண்டான். அவர்கள் இருவருக்கும் அவனது இயலாமை சங்கடத்தை உண்டாக்க கண்கானிப்பாளர் டீ கொண்டு வரச் சொன்னார். ஒரு தலைமுறையின் தவறுகள் அடுத்த தலைமுறையையும் காவு கொள்ளும் இதுமாதிரியான சூழல்களை எதிர்கொள்ளும் போது அதை யாரும் மற்றவரின் பிரச்சனையாய்ப் பார்ப்பதில்லை.

"பத்து பிள்ளைங்க இருக்க வீட்ல கூட பொறந்திரலாம் ஸார். ஆனா ஒத்தப் புள்ளையா பொறக்

கக் கூடாது. சந்தோசம் வலி எதுவா இருந்தா லும் அத ஒரே ஆளா தாங்கிக்கனும். ஒவ்வொரு நாளும் செத்துரலாமான்னு தான் ஸார் இருக்கு. நீங்க பள்ளிக் கூடத்துக்குப் போறப்போ இவங்கப்பா கொல பண்ணி இருக்காராம்டான்னு மத்த பசங்க உங்களப் பாத்து ஒதுங்கிப் போற வலிய எல்லாம் அனுபவிச்சாதான் ஸார் தெரியும்." கதிரின் குரல் இப்பொழுது அந்த அறை முழுக்க அசாத்தியமான நிசப்த்தத்தை உருவாக்கிவிட்டிருந்தது. அவர்கள் இருவரும் எதும் பேசமுடியாமல் இருக்க, நிதான மாக தேநீரை எடுத்துக் குடித்தனர்.

"சரிப்பா கதிர். இனி உன் இஷ்டம். உனக்கு என்ன உதவி வேணும்னாலும் நீ செல்வராஜ் ஸார் கிட்ட கேளு சரியா?" அவனுக்கு எந்தவிதமான தீர்வுக ளையும் தரமுடியவில்லை என்னும் ஏமாற்றம் கண் கானிப்பாளரின் குரலில். அவரிடம் விடைபெற்று வெளியே வந்த கதிரை செல்வராஜ் தனது அலுவ லகத்திற்குக் கூட்டிச் சென்றார். குழந்தைகள் உற் சாகமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"இருந்து இன்னிக்கி எங்களோட மதியச் சாப் பாட்ட முடிச்சிச்சுட்டுதான் தம்பி போகனும்." என்று சொல்லிவிட்டு தன்னைச் சந்திக்க வந்திருந்த வட நாட்டவர் ஒருவரோடு பேச செல்வராஜ் சென்று விட்டார். அந்த இடத்திலிருந்து ஒவ்வொரு குழந் தைக்குப் பின்னாலும் ஏராளமான கதைகள் இருந் தன. யாரும் அறிமுகப்படுத்திக் கொள்ளாமலேயே கதிரின் தோற்றம் அவனைத் தங்களில் ஒரு வன் என அவர்களுக்கு அடையாளப்படுத்தியது. ஒரு சிறுவன் தண்ணீர் கொண்டு வந்து கொடுத் தான். அந்த வீடு முழுக்க செய்யப்பட்டிருந்த வச

திகள், குழந்தைகளுக்கான பாதுகாப்பு எல்லாமே மலைப்பாய் இருந்தது. தான் சின்ன வயதில் பார்த்த விடுதியைப் போல் இல்லை இது என கதிர் நினைத்துக்கொண்டான். அன்றைய தினமே செல் வராஜ் அவனுக்கு விருப்பமான மனிதராய் மாறியி ருந்தார். மதிய உணவின் போது எல்லோரும் ஒன் றாக அமர்ந்து சாப்பிட, செல்வராஜ் உற்சாகமாக பரிமாறினார். எத்தனை கனிவான மனிதர்?

அந்த அலுவலகம் அவன் அடிக் கடி வந்து போகும் இடமாக மாறியபோது தனக் கான சிறு சிறுவேலைகளை அவனுக்கும் பிரித்துக் கொடுத்ததோடு செலவுக்கு பணம் தரவும் செல்வ ராஜ் மறப்பதில்லை. அது பெரிய வருமானமில்லை என்றாலும் அந்தக் காலகட்டத்தில் தான் பார்த்த மற்ற வேலைகளில் இல்லாத ஓர் ஆத்ம திருப்தி இருந்தது. அந்த விடுதியில் தங்கியிருந்த குழந்தை கள் அவனோடு வெகு சீக்கிரத்தில் நெருக்கமா கியிருந்தனர். துணி வியாபாரமும் இப்போதில்லை என கதிர் மீண்டும் உதிரியான வேலைகளை செய்து கொண்டிருந்த நாட்கள் அவை.மாரியின் வீட்டிற்குத்தான் செல்வராஜ் ஸார் ஃபோன் செய் திருந்தார். "தம்பி ஒரு முக்கியமான வேலையா நத்தம் வரைக்கும் போறண்டா. எங்கூட வரியா?" என அவருக்கே உரித்தான பரிவான குரல். எப் போதுமே எல்லாவற்றையுமே பணிவோடு கேட்ப தற்கு ஒரு பக்குவமும் பெரிய மனதும் வேண்டும் தானே. அது அபூர்வமாய் வாய்க்கப்பெற்ற மனி தர். "என்ன ஸார். வாடான்னு சொன்னா வரப்போ றேன். எத்தன மணிக்குன்னு சொல்லுங்க.?" ஒரு பதினோறு மணிக்கு பெரியார் வந்துடறியா?" அவர்

குரலில் இப்போது நிறைவு. அவர் தன்மீது வைத்திருக்கும் அன்பின் காரணமாகவே தனக்கு இதுமாதிரி சிறு சிறு வேலைகளின் வழியாய் உதவுகிறார் என நினைத்து சந்தோசப்பட்டான்.

பெரியார் பேருந்து நிலையத்தை அடுத்து இருந்த சர்ச் வாசலைக் கடக்கையில் அந்தக் காலை நேரத்திலும் இரண்டு பெண்கள் கர்த்தரிடம் ரகசியமாக பிரார்த்திக் கொண்டிருப்பதை கதிர் பார்த்தான். சாலையின் எதிரில் இருந்த பழமுதிர்ச்சோலையில் கையில் லெதர் பையுடன் செல்வராஜ் ஸார் இவனுக்காக காத்துக் கொண்டிருந்தார். "மன்னிச்சுக்கங்க ஸார் லேட்டாகிடுச்சு." அவர் சிரித்தபடி "அட இருக்கட்டும்யா. இதுக்குப் போயி மன்னிபெல்லாம் கேட்டுக்கிட்டு இருக்க. ஜூஸ் எதும் சாப்டறியா?" எனக் கேட்டார். "இல்ல ஸார் பரவால்ல." இருவரும் பேசிக் கொண்டே ரயில்வே ஸ்டேஷன் நோக்கி ப்ளாட் ஃபார்மில் நடக்க அவரின் நடையில் வேகம் கூடியது. கையிலிருந்த பையை இறுக்கமாக பற்றிக்கொண்டார். ரீகல் தியேட்டரை ஒட்டியிருந்த ஹோட்டலுக்குள் நுழைந்தவர் திரும்பிப் பார்த்து வா என்று சைகை செய்தார். மதிய உணவிற்கு தயாராகிக் கொண்டிருந்த கடையில் ஆள் நடமாட்டமில்லை. கல்லாவிலிருந்த முதலாளி இருவரையும் மரியாதையாகப் பார்த்து சிரித்தார். செல்வராஜ் இவனிடம் பையைக் கொடுத்து, கூடவே கையில் வைத்திருந்த ஒரு செல்ஃபோனையும் கொடுத்தார். "கதிரு, இந்தப் பைய நத்தத்துல நான் சொல்ற ஆளுகிட்ட போயி குடுக்கனும். ஃபோன கைல வெச்சுக்க. எதுவா இருந்தாலும் எனக்கு உடனே

கூப்டு சரியா?" அவரின் உடலில் ஒருவித பரபரப்பு தொற்றியிருந்தது. "சரிங்க ஸார்." செல்ஃபோனை பேண்ட் பையில் போட்டுக் கொண்ட கதிர் வெளியே வந்தபோது, "என்ன செல்வராஜ். தம்பி புதுசா இருக்காப்ள? நம்பிக்கையான பயதானா?" என கடை முதலாளி கேட்க அவர் சிரித்தப டியே ஆமெனத் தலையாட்டினார். சாலையெங்கும் வரிசை கட்டியிருந்த வாகனநெரிசலுக்குள் புகுந்து நடந்து கதிர் ஆரப்பாளையும் செல்லும் ஷேர் ஆட் டோவில் ஏறிக்கொண்டான்.

வழியெங்கும் இந்தப் பைக்குள் அப் படி என்ன இருக்குமென்கிற குறுகுறுப்பு. பிரித் துப் பார்க்கலாமென்றாலும் அவனுக்கு அச்சமாய் இருந்தது. பையை மடியில் சேர்த்து அணைத்தி ருந்தவன் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்தி ருந்தான். பாதி தொலைவு வரையிலும் இருந்த ஆட்கள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைய பையைக் கொஞ்சமாய்த் திறந்து பார்த்தான். நியூஸ் பேப்பர்கள் சுற்றப்பட்டு காகிதக்கட்டுகள் இருப்பது தெரிய அதன் அளவைக் கொண்டு எல்லாம் ரூபாய்த் தாள்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. தன்னை நம்பி எப்படி இவ் வளவு பணத்தை கொடுத்தனுப்பினார் என அவ னுக்கு ஆச்சர்யமாக இருந்தே அதே வேளை யில் இதை அப்படியே தூக்கிக் கொண்டு ஓடிவிட லாமா என யோசித்தான். எல்லாக் கடன்களையும் அடைத்துவிடலாம். மிச்சமிருக்கும் காசில் எங்கா வது சென்ற சின்னதாக பெட்டிக்கடை ஆரம்பித் தால் கூட பிழைத்துக் கொள்ளமுடியும். என்ன செய்யலாமென மனம் படபடக்க, பேருந்தில் சுற்

றும் முற்றும் பார்த்தான். இயல்பாகவே இருந்தபோ தும் மனம் எல்லோரும் தன்னையே பார்ப்பதாக நினைத்து அச்சம் கொண்டது. முன்னைவிடவும் இறுக்கமாக பையை அணைத்துக் கொண்டான். ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் பஸ் ஏறி யதில் இருந்து இதுவரை நான்கு முறை அவர் இவனுக்கு ஃபோன் செய்துவிட்டார். அவன் பயண நேரம் தோராயமாக அவருக்குத் தெரியும். குறித்த நேரத்தில் அவன் வேலையை செய்து முடித்து விடுவானா என்கிற பதட்டம் அவருக்கு. கடன் காரர்களின் சுடு சொல்லைத் தாங்கமுடியாமல் படிப்பையே விட்டுவிட்டு வேலைக்குப் போகிறவன் என்பதால் பண விஷயத்தில் அவன் மீது அசாத் தியமான நம்பிக்கை அவருக்கு. இறங்கும் நிமிடம் வரையிலும் அந்த பணத்தோடு அப்படியே ஓடி விடலாமா என்றுதான் அவன் மனம் படபடத்தது. பேருந்தை விட்டு இறங்கியபோதே அவனைக் கூட் டிக் கொண்டு போக வந்திருந்தவர் அவனுக்காக காத்திருப்பதைப் பார்த்தான். செல்வராஜிடமிருந்த பதட்டமெல்லாம் அவரிடமில்லை. தனது செட்டக் ஸ்கூட்டரில் அவனை ஏற்றிக் கொண்டு சென்ற வர் ஒரு ஐஸ் ஃபேக்டரியின் முன்னால் வண்டியை நிறுத்திவிட்டு அவனோடு நடந்தார்.

“ஏதாச்சும் சாப்டறியா தம்பி?”

”இல்ல ஸார் வேணாம்.”

அந்த இடம் முழுக்க சினிமா போஸ்டர்களாக ஒட் டப்பட்டிருக்க, கதிர் ஆர்வமாய்ப் பார்த்தான்.

“என்னய்யா அப்டி பாக்கற? இந்தப் படங்களுக்கு எல்லாம் நாமதான் இங்க டிஸ்டிரிப்யூட்டர்.”

“அப்டின்னா ஸார்?”

“இப்ப ஒரு படம் ரிலீஸ் ஆகுதுன்னா ஒவ்வொரு ஏரியாவா பிரிச்சு ஏரியாவுக்கு ஏத்த மாதிரி வெல வெச்சு வித்துருவாங்க. வாங்கற ஆளுங்க ஒரு பிரிண்ட் இவ்ளோன்னு ரேட் வெச்சு தியேட்டருக்கு பிரிண்ட் குடுப்போம்.”

“ஓ. நீங்களும் சினிமா எடுக்கறீங்களா ஸார்.?”

“இதுவரைக்கும் இல்லய்யா. இனிமேதான்.” அவர் கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே ஒரு பெண் மோர் கொண்டு வந்து கொடுத்தாள். அவனிடம் வாங்கின பையை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றவர் சில நிமிடங்களுக்குப் பின் திரும்பி வந் தார்.

“சரி தம்பி ஸார் கிட்ட நான் பேசிக்கறேன். நீ பாத்துப் போயிட்டு வா.” அவன் எழுந்து நடக்க, “இருப்பா ஒரு நிமிஷம். இந்தா இத வெச்சுக்க.” இரண்டு நூறு ரூபாய்த் தாள்களை அவனிடம் நீட்டினார். கதிர் சிரித்தான்.

“பரவால்ல ஸார் இருக்கட்டும்.” பிடிவாதமாக மறுத் தவனின் கைகளைப் பிடித்து இழுத்தவர் “காசு யார் குடுத்தாலும் எப்பவும் வேணாம்னு சொல் லாத.” வம்படியாக அவன் கைகளில் திணித்து அனுப்பினார். மதுரை திரும்பும் வரை அவனுக்கு எல்லாம் குழப்பமாக இருந்தது. இவருக்கும் செல் வராஜ் ஸாருக்கும் என்ன தொடர்பு? ஏன் இவ்வ ளவு பணம்? அவரிடம் கேட்பதா வேண்டாமா? இத் தனை குழப்பங்களுக்கும் மத்தியில் தன்னை பண விஷயத்தில் அவர் இவ்வளவு நம்புகிறாரே என அவனுக்கு ஆச்சர்யமாகவும் இருந்தது. அலுவல

கத்தில் சென்று அவரின் மொபைலை கொடுத்த போது அவர் சிறைக்கு கைதிகளை பார்க்க சென் றிருப்பதாக அவரின் உதவியாளர் தகவல் சொன் னார்.

தனது எல்லாக் குழப்பங்களையும் மாரியிடம் கேட் டான்." மாரிக்கு அவன் சொன்னதைக் கேட்டதும் எரிச்சல் வந்தது.

"நீ இவ்வளவு கேணையனாடா?"

"ஏண்டா பங்காளி?"

"அந்தாளு உன்னய நம்பல, உன்னய யூஸ் பண் ணிக்கிறான். கைல இருக்க கள்ள பணத்த ஃபை னான்ஸுக்கு விட்றான். அத நேரடியா கொடுத்தா நாலு பேர் கவனிப்பாங்களேன்னு உன்ன மாதிரி ஆளுங்கள பயன்படுத்திக்கறான்."

"ச்ச அப்பிடிலாம் இருக்காதுடா. அவர் சமூக சேவ பன்றவருடா."

"மயிரப் புடுங்கினாரு. ஊர் ஊரா எயிட்ஸ ஒழிப் போம்னு தொண்டு நிறுவனத்துக்காரன் சுத்து ரானே அவன் என்ன சமூக சேவையா செய்றான்?"

"ஆமாடா. அதான நெஜம்."

"எல்லாம் ஏமாத்து வேல. நம்ம ஆறுகண் பாலத் துல தொழிலுக்கு வருதுங்களே அந்த அக்காக் கள எல்லாம் மாசம் மாசம் காசு குடுத்து மீட் டிங் கூப்ட்டுப் போறாங்க. ஃபோட்டோ வீடியோலாம் எடுத்துக்கிட்டு நல்ல சப்பாட்டு போட்டு இவங் கள அனுப்பிட்டு நாங்க எயிட்ஸ ஒழிக்க உயிரக் கொடுத்துப் போராடறோம்னு வெளிநாட்டுக்கா

ரன் கிட்ட கோடி கோடியா வாங்கி இவனுக மஞ்சக் குளிக்கிறானுக. அந்த மாதிரிதான் இந்தாளும்."

கதிருக்கு அவன் சொன்னதை நம்பமுடியவில்லை. இப்படியும் நடக்குமா? யாரோ சிலரின் பிரச்சனைகளை வேதனைகளை வாழ்க்கை நிலையை பயன்படுத்தி யாரோ சிலர் பணம் சம்பாதிக்க முடியுமா? கருணையின் விலையை வியாபாரமாக மாற்றும் இவர்களை ஏன் யாரும் எதும் செய்யமுடிவதில்லை. அப்படியானால் மகளிர் சுய உதவிக்குழு, இளைஞர் சுய உதவிக்குழு, தெருவெங்கும் இடைவெளியின்றி நிரைந்து கிடக்கும் தொண்டு நிறுவனங்கள் எல்லாமே இப்படித்தானா? விடை காணமுடியாத கேள்விகள் தந்த குழப்பங்கள் முதல்முறையாக செல்வராஜ் ஸாரின் மீது இருந்த மரியாதையை ஒரே நேரத்தில் குறைத்தது. இனி அவரை ஒருபோதும் சந்திக்கக் கூடாதென நினைத்துக் கொண்டான்.

கதிர் என்னும் நாடோடி.

சாலைகள் மனிதர்களைக் கைவிடு வதில்லை. ஒதுங்குவதற்கான நிழலை மட்டுமல்ல எல்லா திசையிலும் ஒரு மனிதனுக்கான கதவு கள் அடைக்கப்பட்ட பின்னாலும் கூட நம்பிக்க யோடு தேர்ந்தேடுக்கும் ஏதாவதொரு சாலையின் பயணம் வாழ்வை மாற்றப் போதுமானதாய் மாறி விடுகிறது. வாழ்க்கை கதிருக்கு தந்ததை விடவும் அவனிடமிருந்து எடுத்துக் கொண்டது அதிகம். தறிகளின் பேரோசையிலிருந்து தப்பித்து விருப் பமானதொரு வேலையையும், கொஞ்சம் கூடுத லான வருமானத்தையும் அவன் விரும்பின நாளில் சிவகுமாரின் பழக்கம் ஏற்பட்டது. டி.கல்லுப்பட்டி பக்கம் குன்னத்தூரில் அவருக்கு வீடு. குன்னத் தூர், புதுப்பட்டி ஆட்கள் தமிழ்நாடு, கேரளா என

இரண்டு மாநிலங்களிலும் போய் வராத ஊர்கள் இல்லை. டிவிஎஸ் எக்ஸல் வாகனத்தில் பெரிய பெரிய துணி மூட்டைகளோடு கிளம்பினால் வியாபாரம் முடிந்து திரும்ப இருபது நாட்கள் ஆகும். லுங்கி, ட்ரவுசர், பனியன், துண்டு என எல்லா மனிதர்களுக்குமான அத்தியாவசியாமன துணிகளை அவர்கள் வியாபாரம் செய்து வந்ததால் எப்போதும் அவர்களுக்கான தேவை இருந்தபடியே இருக்கும். புதுப்பட்டியின் முனியாண்டி கோவில் திருவிழாவில் கதிர் பலூன் வியாபாரத்திற்காக சென்றிருந்தான். இந்தப் பக்கத்து ஊர்க்காரர்கள் தொழிலுக்காக வெவ்வேறு ஊர்களுக்குச் சென்றாலும் திருவிழா நாட்களில் ஊர் திரும்ப மறப்பதில்லை. மற்ற நாட்களில் பகல் நேரத்தின் வேப்ப மர அசைவு கூட அச்சமூட்டும் இந்த ஊரின் வீதிகளில் திருவிழா நடக்கும் இரண்டு நாட்களும் ஏராளமான மனிதக் கூட்டமிருக்கும். இரண்டாவது நாள் சாமி ஊர்வலம் வருகையில் பெண்கள் எல்லாம் வீட்டு மொட்டை மாடிகளில் இருப்பார்கள், ஆண்கள் மட்டும் சாமி ஊர்வலத்தில் சுற்றிவர, திருமணமாகாத இளம் பெண்கள் தங்களுக்குப் பிடித்த ஆண்களின் மீது வாழைப்பழம் எரிந்து விளையாடுவதைப் பார்க்க உற்சாகமாக இருக்கும். இந்த சின்னஞ்சிறிய கிராமத்தில் இத்தனை அழகான பெண்களா என பக்கத்து ஊர்க்காரர்கள் எல்லாம் ஆச்சர்யமாகப் பார்ப்பார்கள். அதனாலேயே புதுப்பட்டி, கோபாலபுரம் முனியாணி கோவில்களில் சாமி ஊர்வலம் என்றால் ஊர் கொள்ளாத கூட்டமிருக்கும். இந்தத் திருவிழாக்களில் கடை போடுவது உபயோகமான காரியம் என்

பதைப் புரிந்து கொண்டிருந்த கதிருக்கு அவன் வாயும் சொற்களும் கூடுதலாக கைக் கொடுத்தன. "பாப்பா பலூன் வாங்கிக்கடா, அப்பாகிட்ட சொல்லி ரெண்டு பலூன் வாங்கு, மாமா உனக்கு ஒன்னு ஓசியா தரேன்." என அவன் கூவி கூவி விற்றதை திருவிழாவிற்கு வந்த எல்லோரும் அத்தனை கூட்டத்திலும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். சிலருக்கு மட்டுந்தான் எதைக் கொடுத்தாலும் விற்றுவிடும் சாமர்த்தியம் வாய்க்கும். கதிரின் குரலிலும் பேச்சிலும் அந்த சாமர்த்தியம் இருப்பதைப் புரிந்து கொண்ட சிவகுமார் தன் குழந்தைக்கு இரண்டு பலூன் வாங்கிக் கொடுத்துவிட்டு, "ஏப்பா தம்பி சிறு வயசுப் பயலா இருக்க. வேற வேலக்கிப் போனா நல்ல காசு கெடைக்கும்ல. எதுக்கு இந்த சீசன் பொழப்பு?" என கேட்க, அவரின் மகளுக்கு பலூனைக் கொடுத்தபடியே கதிர்

"என்னண்ணே செய்றது. மத்த வேலைக்குப் போனா நாள் முழுக்க உழச்சாலும் அம்பது ரூவா தர்றதுக்கு மூக்கால அழுகறாய்ங்க. வேலக்காரன்னு இளக்காரம் வேற. இது சீசன் யாவாரம்னாலும் நானே முதலாளி. யாரும் என்னய கேள்வி கேட்க முடியாது. தெனம் ஒரு ஊருன்னு நிம்மதியா சுத்த முடியுது." என்று சிரித்தான்.

"ஆக ஊர் சுத்தறதுன்னா தம்பிக்கு பிடிக்கும் போல?" என சிவகுமார் பதிலுக்குக் கேட்க,

"ஆமாண்ணே. இந்த வயசுல ஒரு இடத்துல வேல பாத்தா ஏதோ வயசனா மாதிரி தோணுது. நாலு புது எடத்தப் பாக்கனும். புது மனுசங்களோட பழகனும்.

அப்பத்தானண்ணே உலகம் தெரியும்." என்று கதிர் உற்சாகமாக பதில் சொன்னான்.

"சரி எங்கூட துணி யாவாரத்துக்கு வரியா? ஊர் ஊரா சுத்தலாம்? நல்ல காசு கெடைக்கும். உன்னய யாரும் எதும் கேக்கவும் மாட்டோம். என்ன சொல்ற?" அவன் என்ன பதில் சொல் லக் கூடுமென தெரிந்தே அவர் கேட்ட கேள் விக்கு அவன் மறுப்பேதும் சொல்லாமல் சம்மதித் தான். தன்னைப் பற்றின எல்லா விவரங்களையும் சொல்லி ஊரில் வந்து பார்க்கும்படி சொல்லிவிட்டு சிவகுமார் அவன் கையில் செலவுக்கு முன்பண மாக ஐநூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு கூட்டத் தில் கலந்து போனார்.

திருவிழா முடிந்து ஆறு நாட்களுக்குப்பின் குன் னத்தூரிலிருந்து ஆறு துணி வியாபாரிகளோடு கதிரும் டிவிஎஸ் எக்ஸலில் வியாபாரத்திற் குக் கிளம்பினான். அவனுக்கான துணிகளைக் கொள்முதல் செய்யவும், வண்டிக்கும் சிவகுமாரே செலவு செய்திருந்தார். திருமங்கலத்திலிருந்து சோழவந்தான் செல்லும் சாலையில் அவர்களின் வாகனங்கள் துணி மூட்டைகளோடு சென்று கொண்டிருந்த மாலை வேளையில் சூரியன் வழக் கத்திற்கு முன்பாகவே அஸ்தமனமாகியது. செக் கனூரணியை தாண்டியிருந்த குளத்தில் அஸ்த மன வெளிச்சம் பட்டு ஜொலித்துக் கொண்டிருந்த நீரள்ளி யாவாரிகள் தாகம் தணித்துக் கொண்டு சில நிமிடங்கள் ஓய்வெடுத்தனர். நெடுஞ்சாலை யில் விரைந்த வாகனங்களின் சத்தம் பூதாகரமாய் இருந்தது. புதிதாக வியாபாரத்திற்கு வந்திருக்கும் இவனின் மீது ஒருவருக்கும் பெரிய நம்பிக்கை வந்

திருக்கவில்லை. சிவகுமார் அவனைத் தனியாகக் கூட்டிக் கொண்டு போனார்.

“கதிரு, நம்ம கூட இருக்க யாருக்கும் உம்மேல நம் பிக்க இல்ல. யாவாரி அப்படித்தான் எப்பவும் யார யும் நம்ப மாட்டான். நீ நடந்துக்கறதுல இருந்து தான் உம்மேல அவங்களுக்கு நம்பிக்க வரும்.” என அக்கறையாக அவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென சொல்லிக் கொடுத்தார்.

“நான் பாத்துக்கறண்ணே. என்னய நம்பி யாவா ரத்துக்கு கூட்டியாந்துருக்கீங்க. உங்க நம்பிக்கைய கெடுப்பனா?” என கதிரும் நம்பிக்கையாகப் பேசி னான். வியாபாரிகள் ஒவ்வொரு முறையும் ஒரு குறிப்பிட்ட ஊர்களைத் தேர்வு செய்து தனித்த னியாக வெவ்வேறு ஊர்களுக்குள் செல்வார்கள். ஒரே ஊருக்கு இரண்டு மூன்று வியாபாரிகள் சென்றால் வியாபாரம் பாதிக்குமென்பதால் இந்த ஏற்பாடு.

இரவு முடிந்து வியாபாரத்திற்கான முதல் வெளிச்சம் துவங்கிய நாளில் அவர்கள் ஒட் டன்சத்திரத்தை ஒட்டிய கிராமங்களுக்குள் ஆளுக் கொரு பக்கமாய் பிரிந்து பயணித்தனர். வியா பாரத்தை முடித்துவிட்டு இரவு எட்டு மணிக்கு பக்கமாய் ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையத்தில் திரும்ப சந்திப்பதாக அவர்களுக்குள் பேச்சு. கதிர் பொடுவார்பட்டி நோக்கி தன் டிவிஎஸ் எக்ஸ லைத் திருப்பினான். இன்னும் குளிர் விலகாத அதிகாலையில் நாய்கள் உடல் சூட்டில் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டிருந்தன. தனக்கு முன் பின் அறிமுகமில்லாத ஊரில், பழக்கமில்லாத ஒரு

தொழிலை வெற்றிகரமாக செய்துவிடும் நம்பிக் கையோடு சென்றவனின் முதுகுக்குப் பின்னாலி ருந்த துணி மூட்டையை விடவும் இவனை நம்பி தனியாக தொழிலுக்கு அனுப்பின சிவகுமாரின் நம்பிக்கை பெரும் பாரமாய் இருந்தது. ஒரு டீக் கடையில் வண்டியை ஒதுக்கி தேநீர் குடித்தான், குளிருக்கு இதமாக இருந்தது. ஒட்டன் சத்திரத் திலிருந்து வந்த ஆளே இல்லாத அரசு பேருந்து ஒன்று அவனைக் கடந்து சென்றது. பள்ளிக்கூ டத்திற்கு செல்லும் பிள்ளைகள் காலை நேர பர பரப்போடு ஓடிக் கொண்டிருக்க ஊர்ச்சாவடியில் வண்டியை நிறுத்திவிட்டு அமைதியாக எல்லோ ரையும் கவனித்தான். கொஞ்சம் பெரிய கிரா மம். வேலைக்குச் செல்லும் அவசரத்திலிருக்கும் ஆண்களோ பெண்களோ இவனிடம் துணி வாங்க நேரம் ஒதுக்கப்போவதில்லை என்பதால் இன்னும் கொஞ்சம் நேரம் கடந்த பின்னால் ஊருக்குள் துணிகளை எடுத்துச் செல்லலாமென முடிவுசெய் தான். அந்தச் சூழல் அந்த மனிதர்கள் புதுவிதமான உற்சாகத்தைக் கொடுத்தார்கள்.

துணி மூட்டையோடு ஊருக்குள் வந்த புதிய மனிதனை நாய்கள் விடாமல் துரத் திச் சென்றன. ஒரு வீதியை இரண்டாக வகிந்து சென்ற சாக்கடை இன்னொரு வீதியின் சாக்கடை யோடு இணைந்து ஓரிடத்தில் பெரிய சாக்கடை யாக ஓடிக் கொண்டிருக்க, அதன் ஒரு எல்லையில் வண்டியை ஏற்றியவன் உருட்டியபடியே ஒவ்வொரு வீடாக சென்றான். “எக்கா துணி வாங்கறீங்களா? லுங்கி, துண்டு, ஜாக்கெட் பிட்டு, உள்பாவாட எல் லாம் இருக்கு.” என ஒரு இரண்டு வீட்டு எல்

லைகளுக்குள் மட்டுமே கேட்கும் சத்தத்தில் கேட்டுக்கொண்டே போனான். உள்பாவாடையும் ஜாக்கெட்டும் விற்க வரும் ஒரு இளைஞனை கிராமத்துப் பெண்கள் என்னவாய்ப் பார்ப்பார்களென்கிற கூச்சம் அவனுக்கு. கொஞ்சம் தண்ணீர் குடிக்கலாம் போலிருந்தாலும் யாரிடமும் கேட்கத் தயக்கம். வாசலில் வேர்க்கடலையை பெரிய பிளாஸ்டிக் சாக்கு விரித்து காயப்போட்டுக் கொண்டிருந்த நாற்பதை நெருங்கிய பெண் ஒருத்தி இவனைப் பார்த்துச் சிரித்தாள். "எந்தூருப்பா?" என பழக்கப்பட்டவனிடம் விசாரிப்பது போல் விசாரிக்க, "குன்னத்தூருக்கா." என்றான். வியாபாரத்திற்கு வருகிறவனுக்கு வியாபாரிகளின் ஊர் தான் சொந்த ஊர். அந்தப் பெண் வேர்க்கடலையின் மண்ணும் தூசியும் நிரம்பிய தன் கைகளை உதற தூசி காற்றில் பறந்து அவன் கண்ணில் விழுந்தது. அவன் வண்டியை ஓரமாக சாய்த்துநிறுத்தி தூசி எடுக்க முயல, அவளே பதறிப்போய் வந்தாள். "அச்சச்சோ கண்ணுல தூசி விழுந்திருச்சா. இரு வாரேன்." என ஓடி வந்து அவன் கண்களை ஊதிவிட்டாள். அவன் மூச்சுக்காற்றும் ஊதிய காற்றும் கண்களை சூடாக்கி தூசியை வெளியேற்றியிருந்தது. சிவந்து கண்ணீரோடு நின்றவனுக்கு குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

"இப்ப சரியாப்போச்சுல்லப்பா. கண்ணு உறுத்தல இல்ல." என பாவமாக அவள் கேட்க, இவன் "சரியாப் போச்சுக்கா. விடுங்க." என சமாதானம் சொன்னான். அந்த வீதியில் ஒருவரும் அவனிடம் துணி வாங்கவில்லை. வெயில் மெதுவாக ஏற, அவன் சட்டையும் லுங்கியும் வியர்வையால் ஈர

மானது. உடலின் ஈரத்தை உறிஞ்சும் கசகசப்பில் சோர்வான போதும் அவன் ஓய்ந்து அமரவில்லை. அடுத்தடுத்த வீதிகளில் உற்சாகமாக சென்றவன் முதலாவதாக ஒரு ஜாக்கெட் பிட்டை விற்றான். அந்த பிட் விற்ற நாற்பது ரூபாய் அவனுக்குத் தந்த நம்பிக்கையும் சந்தோசமும் அளவில்லாதது. முகம் தெரியாத புதிய மனிதர்களிடம் கூட சிரித்த முகத்தோடு பேசவும் தற்காலிகமானதொரு அன்பைப் பகிர்ந்து கொள்ளவும் மனிதர்கள் இருக்கிறார்களென்கிற ஆச்சர்யமான உண்மையை வாழ்வில் முதல் முறையாக உணர்ந்து கொண்டான். பொருளை வாங்கும் போது முடிந்தவரை பேரம் பேசும் பெண்கள் வியாபாரம் முடிந்ததும் நீச்சத் தண்ணீரோ மோரோ தந்து உபசரிக்கும் அன்பு ஒரு வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான தல்ல. இதற்கு முன் அவன் பார்த்த வேலைகளில் இப்படியான நிறைவில்லை. அந்த நாள் அவனை தயக்கமின்றி ஆசிர்வதித்திருந்தது.

ஜாக்கெட் பிட்டுகள், லுங்கி, உள்பாவாடை என முதல் நாள் வியாபாரம் அவனுக்கு ஐநூற்றி எழுபது ரூபாய். சூரிய அஸ்தமனத்தைத் தொடர்ந்து வேகமாக ஓட்டன் சத்திரம் பேருந்து நிலையம் வந்து சேர்ந்த போது எட்டு மணிக்கு இன்னும் சில நிமிடங்கள் மிச்சமிருந்தன. பழனி வழியாக பொள்ளாச்சி செல்கிறவர்களும், கள்ளிமந்தயம் வழியாக திருப்பூர் செல்கிறவர்களுமாய் ஆட்கள் நிறைய வந்துபோன அந்த இடம் இரைச்சலாக இருந்தது. சக வியாபாரிகள் அவனுக்கு முன்பாகவே அங்கு வந்திருந்தனர். இவன் வந்ததைக் கவனித்த சிவகுமார் இவனுக்கும் சேர்த்து தேநீர்

சொன்னார். "என்னப்பா யாவாரம் புடிச்சிருக்கா?" என உடன் இருந்த இன்னொரு வியாபாரி கேட்க, கதிர் சிரித்தபடியே "யாவாரம் லாம் புடிச்சிருக் குண்ணே. ஆனா நேக்கு போக்கு புடிபட இன்னும் கொஞ்ச நாள் ஆகும் போல." என்று சொன்னப டியே பையிலிருந்த பணத்தை சரியாக எண்ணிக் கொடுத்தான்.

"மொத நாளுக்கு இது நல்ல யாவரம்டா தம்பி. உன் பேச்சுத் திறம தான் உன் பலம். வேணும்னா பாரு. இன்னும் கொஞ்ச நாள்லயே நல்ல யாவாரியா வருவ." என சிவகுமார் அவன் தோள்களில் தட்டிக் கொடுத்தார்.

முதல் முறை வியாபாரம் முடிந்து பதி னைந்து நாட்களுக்குப் பின் ஊர் திரும்பியபோது நாளொன்றுக்கு முன்னூறு ரூபாய் வீதம் நாலாயி ரத்து ஐநூறு ரூபாயை அவனுக்கு ஊதியமாக சிவ குமார் கொடுத்தார். முந்தைய வேலைகளில் இந் தப் பணத்திற்கு இரண்டு மாதங்களாவது அவன் மாடாய் உழைக்க வேண்டும். அம்மாவுக்கு அவன் கூடிய சீக்கிரமே மிகப்பெரிய வியாபாரியாகி பஜா ரில் பெரிய துணிக்கடை போட்டுவிடுவான் என்று நம்பிக்கை வந்தது. யாவாரிகளோடு சுற்றி அவர்க ளுக்கான மொழியும் நடவடிக்கைகளும் அவனுக் குள் வந்துவிட்டாலும் குடியை விடமுடியவில்லை. தொழிலுக்குப் போகும் நாட்களில் குடிக்கக் கூடா தென்கிற கட்டுபாடு இருப்பதால் இந்த விடுமுறை நாட்கள் முழுக்க குடித்தே தீர்த்தான். மாரி தான் பரணி ஒயின்ஸ் கூட்டிப்போய் நெப்போலியன் விஸ்கி வாங்கிக் கொடுத்தான். "ஏண்டா பங்காளி ஊருக்கே சாராயம் விக்கிறவன் நீ, என்னயக் கூட்

டியாந்து ஓயின்ஷாப் ல வாங்கிக் குடுக்கற." என கதிர் போதையில் உளறினான். "நீ சாராயம் குடிச்சு சாகக் கூடாதுன்னு தான் நாயே ஓயின் ஷாப் கூட் டியாந்தேன். தொழிலுக்குப் போறப்போ குடிக்காம இருக்க முடியுது, வீட்டுக்கு வந்ததா இருக்க முடி யலையா? என மாரி அவன் முதுகில் அடித்தான். கதிருக்கு மூன்றாவது சுற்றின் போதே போதை யில் கண்கள் சொருகிக் கொண்டாலும் குடிப்பதை நிறுத்தவில்லை. மிச்ச விஸ்கியையும் ஊற்றிக் கொடுத்து மாரி அவனை குடிக்கச் சொன்னான்.

"தொழிலுக்குப் போறப்போ குடிக்கறது தப்புடா பங் காளி. நம்மள நம்பி மொதல் போட்றுக்க ஆளுக பாவமில்ல." என பிளாஸ்டிக் தம்ளரில் இருந்த சரக்கை குடித்துவிட்டு, கதிர் அதைத் தூக்கி எறிந் தான். மாரி அவனைக் கைத் தாங்கலாக பிடித் துக் கொண்டு தாஜ் ஹோட்டலுக்கு அழைத்துப் போனான். கதிருக்குப் போதையில் பரோட்டா எங் கிருக்கிறது என்பது கூடத் தெரியாமல் பக்கத்திலி ருந்த மாரியின் இலையிலிருந்து பிய்த்துத் திண்ண, தாஜ் ஹோட்டல் முதலாளி தீன் மாமா, "என்ன மாப்ள இந்த டேபிளோட விட்டுவைப்பியா இல்ல பரோட்டா கல்லு வரைக்கும் போவியா?" என சிரித்தார். கதிரின் முகம் சட்டை எல்லாம் சிக்கன் சால்னா தெறித்திருந்தது. "மாமா இனிமே ஜட்டி, பனியன், லுங்கி எல்லாம் நம்மகிட்டதான் வாங்க னும் சரியா?" கையிலிருந்த சால்னா தெறிக்க அவ ரிடம் கேட்க, "அது மட்டுந்தானா இல்ல குஞ்சா மணியையும் உங்கிட்டயே வாங்கனுமாடா?" என அவர் கூடுதலாக அவனுக்கு இரண்டு பரோட்டாக்

களை வைத்தபடியே கேட்டார். கடையிலிருந்த எல்லோரும் சிரித்தார்கள்.

நீல பூதம்.

அவன் தனியாக வியாபாரத்திற்கு போகு மளவிற்கு தயாராக நீண்ட காலம் பிடிக்க வில்லை. வாழ்வின் தேவைகள் வியாபாரத்தின் நுட்பங்களை சொல்லிக் கொடுத்ததோடு ஒவ் வொரு நாளும் சந்திக்க முடிந்த புதிய மனிதர்கள் அவனுக்கு தங்களின் ரகசியமிக்க பக்கங்களை அணுகக் கற்றுக் கொடுத்தனர். பள்ளிக்கூடம் கற் றுத்தராத ஞானத்தை அலைச்சல் இந்தக் குறுகிய காலத்தில் கற்றுக்கொடுத்திருந்தது. ஒவ்வொரு நிலத்திலும் மனிதன் ஒவ்வொரு தேவையை பிர தானமாகக் கொண்டிருக்கிறான். அந்தத் தேவை யைப் புரிந்து கொள்கிறவன் தான் நல்ல வியா பாரி. சிவகுமாருக்கு இவன் மீது அலாதியான ப்ரி யங்களும் நம்பிக்கையும் வந்திருந்தது. கடுமையாக உழைக்ககூடியவனாகவும் அசாத்தியமான பொறு மைசாலியாகவும் தெரிந்த அவனை அவன் விருப் பத்திற்கு பயணிக்க அனுமதித்தார். வறண்ட நிலத்

தில் பிறந்த கதிருக்கு மலைகளும் குளிரும் பரவ சமிக்க அனுபவங்களாய்த் தோன்றியதால் அவன் தொடர்ந்து மலைப்பகுதிகளில் வியாபாரம் செய்ய விரும்பினான். மேற்குத் தொடர்ச்சி மலைக் கிரா மங்களில் பகல் நேரத்திலும் குளிர் ஆக்கிரமித்தி ருக்கும் மகோன்னதமான சூழலில் துணி மூட்டை களை சுமந்து அலைவது சிரமத்திற்குரிய காரி யமாக இருந்திருக்கவில்லை. சமவெளிப்பகுதிக ளில் இருப்பது போல் உணவு தங்குமிடம் இவை யெல்லாம் மலைப்பகுதிகளில் இருப்பதில்லை. குளிர் நிலங்களில் வாழும் மனிதர்களுக்கு இயல் பாகவே தங்களிடமிருக்கும் உணவையும் உடமை யையும் பகிர்ந்து தரும் வழக்கமிருந்தது.

கொடைரோட்டில் இருந்து தாண்டிக்குடி செல்லும் அரசுப் பேருந்திற்காக காத்திருந்த அதி காலையில் மழை தூறிக் கொண்டிருந்தது. குளிர் காலத்தின் மழை என்பதால் சன்னமான அதன் தூறலே உடலை ஊடுருவும் பெருங்குளிராகத் தோன்றியது, தலையிலிருந்த பனிக்குல்லாவை இறுக்கமாகக் கட்டிக் கொண்ட கதிர் கையிலிருந்த தேநீர்க் கோப்பையை சூட்டுக்காக இறுகப்பற்றி னான். இதே மாதிரியானதொரு பயணத்தில் தான் அவளை முதல்முறையாகப் பார்த்தான். காமனூர் கிராமத்தைச் சேர்ந்த பழங்குடிப்பெண். அந்த அதி காலை இருளில் மெதுவாக நகர்ந்து கொண்டி ருந்த பேருந்தை பாதி வழியில் மறித்து அவளும் அவளோடு அவளின் கணவன் என மதிப்பிடத்

தக்க ஒரு ஆளும் வந்து ஏறிக்கொண்டார்கள். பேருந்தில் எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்த தால் துணி மூட்டையோடு இவன் அமர்ந்திருந்த கடைசி இருக்கையில் வந்து அமர்ந்து கொண்ட னர். அவன் டிக்கட் எடுத்துவிட்டு முன் சீட்டின் கம் பியில் கைவைத்துத் தூங்க, யாருக்கும் கேட்காமல் அழுதபடியே வந்த அவளை கதிர் அவ்வப்போது திரும்பி கவனித்தான். இன்னும் வெளிச்சம் துவங் கியிருக்காத அந்தக் காலையிலும் அவள் உடலின் வனப்பை மட்டும் தெளிவாக இவனால் பார்க்க முடிந்தது. பேசவும் தயக்கம். ஒவ்வொரு நிறுத்தத்தி லும் ஆட்கள் ஏறியபோது அவள் அழுவதை குறைத்துக் கொண்டு ஜன்னல் வழியாய் வேடிக்கை பார்த்தபடி வந்தாள். தன்னை ஒருவன் நீண்ட நேரமாய் கவனிக்கிறான் என்கிற குறுகுறுப்பு அவளுக்குள் எழ, திரும்பி இவனைப் பார்த்தாள். பல் வரிசை தெரியாமல் சிரித்தான். அவளுக்கு அச் சத்தில் உடம்பு வியர்க்க அவசரமாக வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள். படபடப்பில் துடிக்கும் அவள் மார்புகளை கவனித்தபோது அதிகாலை வெயிலில் உடல் சூடாகி அவளின் மார்புகளில் வியர்த்திருந்ததின் அடையாளமாய் ஜாக்கெட் ஈர மாகியிருந்தது. அந்த அபூர்வ பகுதிகளுக்குள் பார் வையைத் தொலைத்து மீளமுடியாமல் மயங்கிப் போயிருந்தவனுக்கு அருகில் நின்றிருந்த ஒரு பெரி யவர் குனிந்து இவனிடம் "தம்பி அவங்க செய் வென வெக்கற ஆளுங்க, அப்பிடிப் பாக்காதிங்க.

ஒரு நேரம் மாதிரி ஒரு நேரம் இருக்காது." என எச் சரித்தார். பரிபூர்ணமாய் கரைந்து போன தன் நினைவுகளை சிரமங்கொண்டு மீட்டெடுக்க முயன்றும் மனம் அவளையே நாடியது. காமனூரில் அவர்கள் இறங்கியபோது தொடர்ந்து இறங்கிச் செல்ல மனம் பரபரத்தாலும் சூழல் கருதி கட்டுப்ப டுத்திக் கொண்டான். அதன் பிறகு இரண்டு நாட்க ளுக்குப் பிறகு மற்ற ஊர்களில் வியாபாரம் முடித்து விட்டு மலையை விட்டு இறங்குவதற்கு முன்பாக அந்த ஊருக்குள் செல்லலாமென அங்கு வந்து சேர்ந்தான். புதிதாக கட்டப்பட்ட சில கல் கட்டிடங் கள், கொஞ்சம் ஓட்டுவீடுகள். சரிவுகளில் ஒரே வரி சையில் அமைந்த தகரக் கூரை போட்ட பழங்குடி மக்களின் வீடுகள். காடோடு இணைந்த ஊராக இருந்தது. பகல் நேர வெளிச்சத்தில் முகடுகளில் இருந்து அந்த ஊரைப் பார்க்க ரம்மியமாய் இருந் தது. அவள் வீட்டைக் கண்டுபிடிப்பதே நோக்க மென்றாலும் அவன் அதற்காக அவசரப்பட வில்லை. இடது தோளில் இருந்த துணி மூட்டை யோடு ஊருக்குள் சென்ற அவன் தான் அந்த ஊருக்குள் இத்தனை நாட்களில் சென்ற முதல் வியாபாரி. அந்தப் பகுதிகளில் நிறைய பேர் வியாபா ரத்திற்காக வந்தாலும் இந்த ஊர் குறித்து சொல்லப் பட்ட கதைகள் காரணமாக எழுந்த அச்சத்தில் இங்கு வரத் தயங்கினார்கள். இவனிடம் லுங்கி வாங் கிய ஒரு பெரியவர் "தம்பி புதுசா வியாபாரத்துக்கு வந்திருக்கீங்களோ?" என அக்கறையோடு கேட்

டார். "அவர் வீட்டு சின்னஞ் சிறிய திண்ணையில் அவர் கொடுத்த கறுப்புக் காப்பியைக் குடித்தபடி இவன் "இல்லைங்கய்யா ஆறேழு மாசம் ஆகப் போகுது." என்றான். அவர் புரிந்து கொண்டு சிரித் தார். "ரொம்ப சந்தோசம் தம்பி. நீ யாவாரத்த கவனி. எறக்கத்துல பழங்குடி ஆளுங்க வீட்டுப் பக்கம் போறப்போ மட்டும் கொஞ்சம் சூதானமாப் போய் வா." தன் லுங்கியை எடுத்துக் கொண்டு அவர் வீட் டிற்குள் செல்ல, கதிர் மரங்களும் புல் மேடுகளும் சூழ மறைந்திருந்த அந்த வீடுகளை ஒருமுறை எட் டிப் பார்த்தான்.

மலையின் நான்கு பகுதிகளிலும் வெவ் வேறு இடங்களில் வீடுகள் சிதறிக் கிடந்தன. ஒவ் வொரு பகுதியாக வியாபாரம் முடித்து அவன் மீண் டும் பழைய இடத்திற்கு திரும்புவதற்குமுன் நன்றா கவே இருட்டிப் போக, காலையில் சந்தித்த பெரி யவரின் வீட்டுக்கு வந்தான். "அய்யா இன்னைக்கு ரவைக்கி மட்டும் ஊர் பள்ளிக்கூடத்துல படுத்துக் கறேன். ஊர்க்காரவுக கிட்ட ஒரு வார்த்த சொல்லி டறீங்களா?" எனக் கேட்டான்.

"இதுல என்ன தம்பி இருக்கு. ஆனா ஒத்தைல பய மில்லாம இருந்துக்குவிங்களா?"

"அதெல்லாம் இருந்துக்குவேங்க. ஊர் ஊரா சுத் திப் பழக்கந்தான இதெல்லாம்."

"ம்ம். சரி . அப்ப நம்ம வீட்லயே சாப்ட்டுப் போயிருங்க. ஊர்க்காரவுக கேட்டா நான் சொல்

லிக்கறேன். ராத்திரில வெளில எங்கியும் போக வேணாம், இந்தப் பக்கம் காட்டு மாடு அதிகம். சரியா?"

"சரிங்கய்யா."

அந்த இரவை அந்த ஊரில் கழிக்கப் போவதை நினைத்து குதூகலித்தான். பெரியவரின் மனைவி சூடான கேழ்வரகு ரொட்டியும் கருவாட்டுக் குழம் பும் எடுத்து வர, அவன் "மீனு கருவாடு சாப்பிட மாட்டேங்கம்மா எனக்கு ஒத்துக்கராது. வெல்லம் இருந்தா குடுங்க அது போதும்." என்றான்.

"இதென்னப்பா ஊர் நாடு சுத்தற ஆளு மீனு திங்க மாட்டியா? ஆச்சர்யமாதான் இருக்கு." என அவள் சிரித்துவிட்டு உள்ளிருந்து வெல்லம் எடுத்து வந்து தந்தாள். குளிர் தாங்கவென உயரம் குறைவா கப் போடப்பட்ட வீட்டின் கூரை, புதிதாக பறிக் கப்பட்டு வீட்டுக்குள் அடுக்கப்பட்டிருந்த ஆரஞ்சுப் பழங்களின் பெட்டிகளில் இருந்து வாசனை அந் தப் பகுதி முழுக்க நிறைந்தது. நான்கைந்து கேழ் வரகு ரொட்டிகளை சாப்பிட்டு முடித்தவனுக்கு ஒரு சொம்பில் நீரும், இரண்டு ஆரஞ்சு பழங்களும் தந்து அவர்கள் அனுப்பி வைத்தனர்.

இரவுப் பூச்சிகள் அந்த பிரதேசத்தை ஆக்ரமித்திருந்தன. அது மிகச்சிறிய ஆரம்பப் பள்ளி. கட்டிடம் மரங்கள் சூழ ஆழ்ந்த அமைதியில் பனி குடித்துக் கிடந்தது. மஞ்சள் நிற விளக்கெரிந்த ஒரு அறையில் தனக்கான படுக்கையை தயார்

செய்து கொண்டவன் ஊர் அடங்க பொறுமை யாய்க் காத்திருந்தான். பள்ளிக்கூட சுவர்கள் பல வருடங்களுக்கு முன்பாக வர்ணமடிக்கப்பட்டிருக்க வேண்டும், காரை உதிர்ந்து சகிக்க முடியாத நிலை யில் கவலைக்கிடமாய் இருந்தது. தரையில் ஆங் காங்கே சிமெண்ட் உதிர்ந்து பள்ளமாய் இருக்க, குளிர் தெரியாதபடி தனக்கு ஏதுவான இட மொன்றை தேர்ந்தெடுத்திருந்தான். தூரத்தில் ஏதோ ஒரு வாகனம் செல்லும் சத்தத்தைக் கேட்க முடிந்த போது தனது கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான். பதினொன்றைத் தாண்டியிருந்தது. அழுக்கேறிய தனது சால்வையை உடலில் போர்த் திக் கொண்டு அவள் வீடிருப்பதாக அறிந்த கொண்ட குடில்களை நோக்கி நடந்தான். இருட் டுக்குப் பழக்கப்பட கண்கள் முதலில் தடுமாறினா லும் சுதாரிப்பாக அவன் தன்னை அதற்குப் பழக் கிக் கொண்டான். தேவையற்ற சலசலப்பு தன்னை பிரச்சனையில் கொண்டு சென்றுவிடுமென்கிற அக்கறையில் அந்தக் குடில்களை நெருங்கியவ னுக்கு இதில் எது அவளுடைய வீடாயிருக்குமென் கிற தயக்கம். எல்லா குடிசைகளிலும் விளக்குகள் அணைக்கப்பட்டு இருள் சூழ்ந்திருந்தது. வீதியின் இரண்டு முடில் திசைக்கொன்றாக தெருவிளக்கு கள் பனியில் அதிக வெளிச்சமின்றி மங்கலாய் ஒளிர்ந்து கொண்டிருந்தன. சகதி படிந்த ரப்பர் செருப்புகள் இப்பொழுது ஒவ்வொரு தப்படியிலும் சப்தமெழுப்பியதால் அதனை கழற்றிக் கையில்

வைத்துக் கொண்டான். முன் வாசல்களைத் தவிர்த்து பின்பக்கமாக நடந்து சென்றவன் ஒவ் வொரு வீட்டின் சுவர்களின் வழியாகவும் அவளது இருப்பை உணர முயற்சித்தான். வெளிச்சத்திற் காக வைக்கப்பட்ட சின்ன துளைகள் ஜன்னல்கள் என அவளையோ அவளது உடலின் சின்னதொரு பாகத்தையோ பார்த்துவிட்டால் கூட போதுமென் கிற வேட்கை இப்பொழுது அவனை அதீதமாய் தொந்தரவு செய்தது. எந்த வீட்டிலும் அவள் இருப் பதற்கான அடையாளத்தை அவனால் கண்டு கொள்ள முடியவில்லை. வீதியின் ஒரு பக்கம் முடிந்து அடுத்த பக்கத்து வீடுகளுக்குத் திரும்பிய போது வீடுகளில் இருந்து சற்றுத் தள்ளியிருந்த ஒரு மரத்திற்கு அருகில் ஒரு பெண் சிறுநீர் கழித் துக் கொண்டிருப்பதைக் கவனித்தான். பாவாடை ரவிக்கையில் அந்த இருளிலும் அது அவளாகத் தான் இருக்கக்கூடும் என்பதை உறுதி செய்து கொண்ட கதிருக்கு உடல் நடுங்கத் துவங்கியது. குறி விரைக்கத் துவங்க, அவளை நெருங்கிச் செல் வதா மைதுனம் செய்வதா என குழப்பமானது. அவளை நெருங்கிச் செல்ல நினைத்தவன் அவள் நின்ற இடத்தில் அவளோடு துணைக்கு நின்ற ஒரு ஆணைக் கவனித்து அப்படியே நின்றுவிட்டான். அவர்கள் இருவரும் தங்கள் வீட்டிற்குள் செல்ல, ஓடிப்போய் அவள் சிறுநீர் கழித்த இடத்தைப் பார்த் தான். மரமும் மண்ணும் அவளின் உப்பு நீரில் ஈர மாகி மகரந்தத்திற்கு காத்திருக்கும் நீர்ப்பூக்க

ளைப் போல் கிடந்தது. கதிருக்கு உடல் நடுக்கம் முன்னைவிடவும் அதிகமாக அவள் சென்று உறங்கிய வீட்டை நெருங்கினான். ஜன்னல் வழியாக கவனித்தபோது அவள் உறங்கச் சென்றுவிட்டிருந்தது தெரிந்தது. நீண்ட நேரமாக தன் குறியை உருவிக் கொண்டிருந்தவன், இருளில் ஒரு கோடாய்த் தெரிந்த அவளுடலின் வளைவுகள் தந்த அபரிமிதமான தூண்டுதலில் உடல் சிலிர்க்க ஆவேசமாக மைதுனம் செய்தான். உடலின் நரம்புகள் முறுக்கேறி சிந்தனை, உணர்ச்சி எல்லாம் கொப்பளிக்க கொதிப்பு வெளியேறி சுவற்றில் நீர் தெளித்தது. அப்படியே சாய்ந்து ஜன்னல் வழியாய்ப் பார்த்தான். 'ஏன் இந்தப் பெண் இத்தனை தூண்டுகிறாள்? இதுவும் ஒருவித பித்துநிலையா?" அவன் அங்கிருந்து நகர மனமில்லாமல் அவளைப் பார்த்தபடியே நின்றிருந்தான். அவனோடு அந்த இரவில் அவனைச் சூழ்ந்திருந்த மோகினிகளும் சேர்ந்து கொள்ள, பருவத்தின் திமிறலில் செழித்திருந்த அவனது ஆண்மையை அந்த மோகினிகள் மீண்டும் மீண்டும் தூண்டினர். தாபத்தில் நீல உரு கொண்ட மோகினிகள் ஒருவர் பின் ஒருவராய் அவனைச் சூழ்ந்தபடியே இருந்தனர். இருளில் உறங்கிக் கிடக்கும் பெயர் கூடத் தெரியாத பெண்ணின் நிழலில் மூழ்கிப்போன இவன் தனது இளமையின் அகங்காரத்தினுள் நிரந்தரமாக ஊடுருவி கிளை பரப்பிக் கொண்டிருக்கும் மோகினிகள் செய்யும் விபரீதம் புரியாமல் நின்றிருந்தான். விடிவதற்கு கொஞ்சம்

முன்னால் அவன் மீண்டும் பள்ளிக்கூடத்திற்குத் திரும்பியபோது பேச முடியாதபடி தொண்டை அடைத்திருந்தது. தன்னை யாரோ இறுக்கமாக கழுத்தை நெறிப்பதுபோல் வேதனை அவனுக்கு. அவள் சிறுநீரை மிதித்து அதில் மோகித்த இவன் கால்களெங்கும் வனமரங்களின் வேர்கள் கிளை விடத் துவங்கின. உடல் ஆதிவனமாய் உருக் கொள்ளத் துவங்கியதால் கடும் சுரம் கண்டு விழுந் தான்.

"இந்த மழ காலத்துல ஏண்டா தாண் டிக்குடி பக்கம் போற? எங்களோடயே வரலாம் ல?" என சிவகுமார் எவ்வளவு சொல்லிப் பார்த் தும் அவன் கேட்பதாய் இல்லை. "இந்த சீசன் ல யாவாரிங்க பெரும்பாலும் அந்தப் பக்கம் போக மாட்டாங்கண்ணே. இப்ப போனா மத்த நேரத்த விட நல்ல யாவாரம் இருக்கும்." என்று சிரித்தான். "சரி சொன்னா கேக்கவா போற? பாத்து பத்திரமா போய்ட்டு வா." சற்று முன்பாகத்தான் அவனுக்கு விடை கொடுத்துவிட்டு சிவகுமாரும் மற்ற வியா பாரிகளும் கிளம்பிச் சென்றார்கள். மலைப்பகுதி வியாபாரத்திற்கு இரு சக்கர வாகனம் தோதுப் படாது என்பதால் அவன் சமீபமாய் பேருந்து களில் தான் பயணிக்கிறான். எந்த நேரத்திலும் உடைந்து நொறுங்கிப் போகலாமென்கிற பரிதாப நிலையிலிருந்த பழைய அரசுப் பேருந்தொன்று பேருந்து நிலையத்திற்குள்ளிருந்து வந்து நின்றது. அவனோடு சேர்ந்து இன்னும் சிலர் ஏறிக்கொள்ள

அவளைக் காணப்போகும் ஆர்வ மிகுதியில் உட லினுள் உறங்கிக் கொண்டிருந்த ஆதிமிருகமும் வனமும் விழித்துக்கொள்ளத் துவங்கியது. இந்த முறை எந்தக் குழப்பமோ தயக்கமோ இல்லாமல் காமனூருக்கு பயணச்சீட்டு எடுத்துக் கொண்டான்.

விட்டுவிட்டுப் பெய்து கொண்டிருந்த மழையை பெரிதுபடுத்தாமல் தோட்டங்களில் மக் கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். பேருந்து அவனை அங்கு விட்டுச்சென்ற பிறகு தான் செல்ல வேண்டிய திசையில் உறுதியான முடி வோடு அவள் இருக்கும் குடில் நோக்கி நடந்தான். மழைக்குப் புதிதாக நீல மலர்கள் வழியெங்கும் பூத் திருந்ததைப் பார்க்க வசீகரமாய் இருந்தது. ஆண் கள் வேலைகளுக்குச் சென்றுவிட்டிருந்ததால் அந்த வீதி அதிக நடமாட்டமின்றி இருந்தது. முதிய பெண் ஒருத்தி "துணி யாவாரியாப்பா?" என ஆச் சர்யமாய்க் கேட்டாள். "ஆமாங்க ம்மா.." களைப் பும் வியர்வையும் மேலிட ஒரு பெரிய கல்லில் இறக்கி வைத்தான். இன்ன நிறமெனத் தெரியாமல் மங்கிப் போயிருந்த தன் ரவிக்கைத்துணிக்கு மாற் றாய் ஒன்றைத் தேடும் ஆர்வம் அவளுக்கு. அவள் அங்கிருந்த வேறு சில பெண்களையும் வரச் சொன் னபோது அவர்களில் அவளைத் தேடத் துவங்கின அவன் கண்கள். அவன் நம்பிக்கை வீண் போகா தபடி தன் வீட்டிலிருந்து அவளும் வெளியேறி வந் தாள். நெருங்கி வரும் போதே இவனை அடை யாளம் கண்டு கொண்டவளுக்கு தயக்கம் மேலிட

வருவதா திரும்பிச் செல்வதா என்கிற தயக்கம். "ஏண்டி நிக்கிற? வா." என அவளோடு வந்தவள் இழுத்து வர, கதிருக்கு அன்றைய நாளின் படப டப்பு மீண்டும் அதிகமானது. ஓநாயின் ஆர்வமிக்க கண்களால் அவளைப் பார்க்க, அவள் இவன் பக் கமே திரும்பாமல் தவிர்த்தாள். ஒவ்வொரு துணி யாக எடுத்து விலை சொல்லியபடியே அவர்களை சுற்றி வந்தவன் சரியாக அவளுக்கு பின்னால் வந்து நின்றான். அவளுக்கு அச்சத்திலும் கோவத்திலும் மூச்சு வாங்கியது. தன் நடுங்கின கையை அவ ளின் பின்புறத்தில் வைத்த தடவியவனை திரும்பி முறைத்தாள். அவன் என்ன ஆனாலும் கையை எடுப்பதில்லை என்கிற முடிவோடு தொடர்ந்து அவளைத் தடவினான். அவன் கையிலிருந்த சூட் டின் வழி அவன் தகிப்பைப் புரிந்து கொண்ட வள் அவசரமாக விலகி வேறு இடத்தில் நின்றாள். அவனுக்கு வியாபாரத்திலிருந்த கவனம் சிதற அவளையே கவனிக்கத் துவங்கினான். ஜாக்கெட் பிட், துண்டு, ஸ்வெட்டர் என அந்தப் பெண்கள் நிறைய வாங்கினார்கள். அவள் எதையுமே எடுக்க வில்லை. அவன் மீண்டும் அவள் நின்ற இடத்தை நோக்கி நகர, "நீ பாத்து எடுக்கா, எனக்கு ஒரு வ்டியா வருது நான் போறேன்." திரும்பி அவசரமாக தன் குடிசைக்கு நடந்தாள்.

அங்கு வியாபாரம் முடிந்து பெண்கள் தங் கள் வீடுகளுக்குத் திரும்ப தாகத்திற்கு ஒரு பெண் ணிடம் நீர் கேட்டான். அவள் நீரோடு கொஞ்

சம் மலை வாழைப்பழங்களையும் தந்தாள். சாப் பிட்டு முடித்து தண்ணீர் கொடுத்தவன் மூட் டையை மீண்டும் கட்டி அங்கேயே வைத்துவிட்டு குடிசைகள் இருந்த இடத்தை விட்டு வெறுமனே நடந்து சுற்றினான். இந்த இடத்திற்கு வந்த அந்த புதிய மனிதனைத் துரத்த அவர்களுக்கும் விருப்பமில்லாததால் அவனை அவன் போக்கில் விட்டுவிட்டு எல்லோரும் தங்கள் வேலைகளைக் கவனித்தனர். இத்தனை மூர்க்கமான பெண்மை யைக் கொண்டிருக்கும் உண்மையில் இவள் மனி தப் பிறவிதானா? அல்லது அன்றைய இரவில் தன்னை இம்சித்த மோகினிகளில் ஒருத்தியா?' அவன் மனம் அவள் குறித்தான கேள்விகளுக் குள் அலைந்து கொண்டிருந்தது. அடர்ந்த காட் டுப்பூக்களின் வசீகர மணம் அவனை இடைவிடா மல் தூண்டியபடியே இருக்க, பின்பக்கமாக அவள் வீட்டை நோக்கி நடந்தான். அன்றைய இரவில் அவளைப் பார்த்த அதே ஜன்னலின் வழியாய் பார்த்த போது பகலின் வெளிச்சம் நிரம்பியிருக்க, அவள் அங்கு இருந்திருக்கவில்லை. கண்கள் பரி தவிப்போடு தேடித் திரும்பின. நகர்ந்து சற்றுத் தள்ளி பார்த்தபோது அவள் காட்டை நோக்கிச் செல்லும் பாதையில் உலர்ந்து சுள்ளிகளைத் தேடி பொறுக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிசெய்து கொண்டு அவளை நோக்கி நடந்தான்.

ரகசிய சப்தங்களுக்குப் பழகிய அந்தப் பெண் தன்னை நோக்கி நெருங்கி வருவது மிருகமல்ல மனிதன் என்று புரிந்து கொண்டு எதிர் வினை புரிவதற்குள் அவளை அவன் சூழந்திருந்தான். பல நூற்றாண்டு காத்திருந்த வெறி காமமாய் அவனுக்குள் விரிய அவள்மீது ஆக்ரோஷமாக இயங்க முயன்றான். தன்னிலும் உயரம் குறைவான மெலிந்த அவளின் வலுவேறிய உடலை இறுக்கி தனக்குள் அமர்த்துவது அத்தனை எளிதான காரியமாய் அவனுக்கு இருந்திருக்கவில்லை. அவள் ரவிக்கையைக் கிழித்து தன்னை இத்தனை தூரம் அலைக்கழித்த அந்த திமிறிய முலைகளக் கண்டதும் திடீரென அவள் கால்களில் விழுந்து அழத் துவங்கினான். அந்த அழுகுரல் கொஞ்சம் கொஞ்சமாய் ஒரு மிருகத்தின் ஓலமாகி மீண்டும் அவனைத் தூண்ட, கால்களை இறுக்கி அவள் மீது படர முயன்றான். அவன் விதைகளில் ஓங்கி இரண்டு மூன்று முறை மிதித்தும் அவன் அவளை விலக்கவில்லை. இடைக்குக் கீழ் கொஞ்சத்தை மட்டும் அவளது துணி இப்பொழுது மறைத்திருந்தது. தன் குடிசை நோக்கி உதவி வேண்டி அவள் கத்த மற்ற பெண்களும் அங்கு வேகமாய் ஓடிவந்தனர். விடாமல் ஓலமிட்ட கதிர் என்ன செய்தும் அவளைத் தன்னிடமிருந்து விலக்கியிருக்கவில்லை. ஆளுக்கொரு பக்கமாய் அவனை இழுத்துக் கொண்டு போய் மின்விளக்குக் கம்பத்தில் கட்டி வைத்தனர். அவன் அப்பொழுதும் அரற்றிக் கொண்டே

இருந்தான். காமனூர் பெரியவர்கள் காவல் துறை யோடு வந்தபோது அவர்களில் கடந்தமுறை இடம் கொடுத்த பெரியவர் இவனை நெருங்கி வந்தார் "நான் அன்னிக்கே சொன்னேன். இந்தப் பக்கம் வராதன்னு. இப்ப புரியுதா ஏன் சொன்னேன்னு?" அவர் குரலில் அவனுக்காக மனம் இரங்கியது தெரிந்தது.

தாண்டிக்குடி காவல் நிலையத்தில் முழு வதுமாக விசாரிக்கப்பட்டு அடைத்து வைப்பட்டி ருந்த கதிரை மீட்க சிவகுமார் வந்தது அடுத்த நாள் தான். எந்த பிரச்சனைகளுக்குள்ளும் போக விரும்பாத அந்த எளிய வியாபாரி முதல் முறை யாய் காவல் நிலையம் வந்த அச்சத்தில் "ஸார் தம்பி நல்ல பையன். அவங்க ஏதோ தப்பா சொல்றாங்க." என தடுமாறி தடுமாறிச் சொன் னார். "நல்ல பையனா? ஒரு பொம்பளையே ரேப் பண்ணப் போயிருக்கான். பாவம் பழங்குடி ஆளுக பிள்ள. நல்ல வேள விஷயம் கேள்விப்பட்டு ஊர் ஆளுக வெரசா போனாங்க. இல்லாட்டி அடிச் சுக் கொன்றுப்பாங்க." போலிஸ்காரரின் குரலில் ஆவேசம். சிவகுமார் சமாதானல் சொல்ல முடியா தவராய் தலையைக் குனிந்து கொண்டார். "இவன நம்பி எப்பிடிய்யா தொழிலுக்கு அனுப்பி விட்டீங்க?" சிவகுமாருக்கு என்ன பதில் சொல்வதெனத் தெரி யவில்லை. "நம்பிக்கையான பையன் ஸார். இந்த மாதிரி ஆகும்னு நாங்க எதிர்பாக்கல. மன்னிச்சு விட்றுங்க ஸார்." கையெடுத்துக் கும்பிட்டார். "மன்

னிச்சு விட்றதா? அவங்க புகார் குடுத்திருக்காங்க. என்ன பதில் சொல்றது? அத்தன ஆளுங்க சாட்சி வேற. கேஸ் போட்டுத்தான் ஆகனும்." போலிஸ் காரர் விடாப்பிடியாய்ச் சொல்ல, "நான் அவங்க எல்லார் கிட்டயும் ஊர்ப்பொதுவுல மன்னிப்பு கேக் கறேன் ஸார், சின்னப் பையன். அதோட நாளப் பின்ன எங்க தொழிலையும் இது பாதிக்கும்." அவருக்கு குரல் தழுதழுத்தது. போலிஸ்காரருக்கு அவர் மீது மனம் இறங்க, "சரி நான் அவங்க ஆளுக தலைவர வரச் சொல்றேன். ரெண்டு பேரும் மன் னிப்புக் கேட்டுட்டு சமாதானமா போங்க." என்று சொல்லிவிட்டு தான் அமர்ந்திருந்த இருக்கையிலி ருந்து எழுந்து சென்றார்.

கதிருக்காக யாரோ சில மனிதர்களிடம் மன்னிப்புக் கேட்டதில் எல்லாம் சிவகுமாருக்கு வருத்தமில்லை. தான் அவன் மீது வைத்திருந்த நம்பிக்கை அவ்வளவையும் அவன் வீணடித்து விட்ட வேதனை தாங்கமுடியாததாய் இருந்தது. கொடைரோடு வரும் வரை இருவரும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை. அவனிடமிருந்த துணி மூட்டையை வாங்கிக் கொண்டவர் செலவுக்கு அஞ்சாயிரம் ரூபாயைக் கொடுத்தார். "உனக்கு இந்தத் தொழில் வேணாம்டா தம்பி. நீ ஊருக்குப் போ. இனி என்னய வந்து பாக்காத." உள்ளெழுந்த ஏமாற்றத்தையும் கோவத்தையும் காட்டிக் கொள்ள முடியாமல் அவர் அவனை அப்படியே விட்டுவிட் டுச் சென்றார். கசங்கிப் போன ரூபாய்த் தாள்க

ளோடு எங்கு செல்வதெனத் தெரியாமல் குழம்பி நின்ற கதிர் பட்டுநூல்காரன் பேட்டையின் இரவுக ளும் மாரியும் தான் மீண்டும் தனக்கு ஆதரவு என நினைத்துக் கொண்டான்.

கம்போடிய டயரி – 5

யோல் ஸ்லோங்கில் விசாரணைக்கு அழைத்து வரப்படும் எல்லோரின் கதைகளும் பாதுகாக்கப்பட்டன. புரட்சியை கவிழ்க்க சதி செய்ய சாத்தியமுள்ளதாய் படையணியில் இல்லாத எல்லோரின் மீதும் சந்தேகம் கொண்டார்கள். விசாரணையின் நோக்கம், விசாரணை முறை, எவ்வாறு வதைக்க வேண்டுமென்பது குறித்து தெளிவான குறிப்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை அப்படியே தொடர ஒருவருக்கும் விருப்பமில்லை. “the aim of torture is to get a response,

We do not do it for fun

We must make the prisoner suffer

In order to get a quick answer “

என்ன பதில் சொல்வதெனத் தெரியாத பலர் விசாரணையின் போதான தாக்குதலை தாங்க முடியாமல் தங்களுக்குத் தெரிந்த பதில்களை எல்லாம் சொன்னார்கள். ஒவ்வொரு நாளும் அங்கு கொண்டு வரப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் அதிகமான போது விசாரணை முறையும் மாறத் துவங்கியது. விசாரணைக்கு முன்பாக கைதியின் உடல்நிலையை பரிசோதித்து சரி பார்க்கும் விதிகளைக் கூட கடைபிடிக்கத் தவறினார்கள். புரட்சிக்காக காடுகளிலும், நீர் நிலைகளிலும் பல மாதங்கள் பசியோடு தனித்துக் கிடந்த அங்க்கார் இளைஞர்களுக்கு வதைத்தலின் போது ஏற்பட்ட குரூரமான நிறைவு அலாதியானது. பலவீனமான மிருகங்களை வைத்து விளையாடும் வித்தையாக மாறியிருந்தது அந்த விசாரணைக் கூடம்.

கோவிந்தசாமியும், மாரிமுத்துவும் மொழி காரணமாய் முழுமையாய் விசாரணை செய்யப்படாமல் வேறு தளத்திற்கு மாற்றப்பட்டார்கள். ஆங்கிலமும், கெமெரும் தெரியாத அவர்களை முழுமையாக விசாரிக்க முடியாத கோவத்தை அடித்துத் தீர்த்துக் கொண்டார்கள். அந்தப் புதிய அறையின் ஒரு பகுதியில் உயிரோடு பிணமாய் இருக்கும் கோவிந்தசாமி மாதிரியான ஆட்கள் கிடத்தப்பட்டிருக்க, இன்னொரு பகுதியில், தினமும் இரவு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகிறவர்களில் கொல்லப்பட்டவர்களின் உடல் கிடத்தப்பட்டது. வாழ்வும் மரணமும் அரு

கருகே பிணைந்திருந்தது. அங்கு கொண்டுவரப் பட்ட முதல் நாள் கண்கள் கட்டப்பட்டிருந்ததால் தனக்குக் கீழிருப்பவரைத் தெரியாமல் மிதித்து விட்ட மாரிமுத்து பதறி விலகி நின்று. "ஸம்த் தவ்" என மன்னிப்புக் கேட்டான். எந்த எதிர்ப் பையும் காட்டாத அந்த மனிதன் இறந்து போய் பல மணி நேரங்களாகிப் போனதை கண் கட் டுகள் அவிழ்த்த பிறகுதான் மாரிமுத்து தெரிந்து கொண்டான். முன் வரிசையில் படுத்திருந்த பத்து பேரும் அதே நிலையில் இருந்ததைப் பார்த்த கோவிந்தசாமிக்கும் மாரிமுத்துவுக்கும் வயிற்றைக் கலக்கியது. அவர்களோடு வந்தவர்கள் தங்க ளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் படுத்துக் கொள்ள, கதவடைக்கும் முன்பாக கோவிந்தசாமி "காம் ரேட் ஒன் மினிட்." என கூப்பிட்டார். "லிமோக்" என அவர் முகமும் உடலும் வியர்த்துப் போய்க் கேட்க காவலுக்கு இருந்தவன் அந்த அறையின் வாசலில் இருந்த அழுக்கேறிய இரும்புப் பெட்டி யைக் கொண்டு வந்தான். ஆட்கள் படுத்திருக்க, கோவிந்தசாமியின் இடத்தில் வைத்தபோது அவர் அவசரமாக தன் பேண்ட்டை தளர்த்திக் கொண்டு அந்த இரும்புப் பெட்டியில் உட்கார்ந்து மலம் கழித் தார். சரியான உணவில்லாமல் வறண்டு போன உடலில் இருந்து வெளியேறிய மலத்தின் நாற்றத் திற்கு எல்லோரும் பழகிப் போயிருந்ததால் ஒரு வரும் முகம் சுளித்திருக்கவில்லை. பதட்டம் மல மாகிக் கழிந்தபின், மலத்துவாரத்தைத் துடைத்

துக் கொள்ள காகிதம் கூட இல்லாமல் அப்ப டியே பேண்ட்டை மீண்டும் அணிந்து கொண்டார். இரும்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு செல்ல விருந்த இளைஞனிடம் மாரிமுத்துவும் "லிமோக்" எனக் கேட்டான். கோவிந்தசாமி கழித்த மலம் பாதி பெட்டியைக் கூட நிரைத்திருக்கவில்லை என்ப தால் அதுவே தான் மாரிமுத்துவுக்கும் வந்தது. அவன் அந்தப் பெட்டியை ஆக்ரமித்து மலம் கழிப் பதை பார்க்க முடியாமல் கோவிந்தசாமி வேறு பக் கம் திரும்பிக் கொண்டார்.

அந்த அறைக்குக் கொண்டு வரப்ப டும் பிணங்கள் சில சமயம் ஒரே நாளில் எடுத்துச் செல்லப்படும். வேறு சில சமயம் இரண்டு மூன்று நாட்களுக்கும் அவர்களோடு இருந்து அவர்க ளில் ஒருவராய் மாறிப்போகும். பிணங்கள் இல்லா நாட்களில் ஜன்னல் வழியாய் பிளாஸ்டிக் ஹோஸ் களைப் பொறுத்தி பதினைந்து நிமிடம் தண்ணீ ரைப் பீய்ச்சி அடிப்பார்கள். உடலின் நவதுவாரங் களையும் தூய்மைப்படுத்திக் கொள்ள கிடைக் கும் இந்த வாய்ப்பு பத்து நாட்களுக்கு ஒருமுறை தான். இரண்டு நாட்களுக்கு முறை இரவு பத்து மணிக்கு மேல் மாரிமுத்துவும் கோவிந்தசாமியும் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படுவார் கள். ஒவ்வொரு முறையும் விசாரிக்கும் ஆட்கள் மாறினார்களே ஒழிய கேள்விகள் ஒன்றேதான். எந்தக் கேள்விகளையும் புரிந்து கொள்ள முடியாத இவர்கள் இரண்டு பேரும்

“ச்சியங் தெங் { எதுவும் தெரியாது } காம்ரேட்” என்ற ஒரே பதிலை சலிக்காமல் சொல்லிக் கொண்டிருந் தார்கள். சில நாட்களுக்குப்பின் அந்த விசாரணை முறை மாறிய போது, கோவிந்தசாமி ஒரு மூலை யில் உட்கார வைக்கப்பட்டு மாரிமுத்துவை இரும் புக் கட்டிலில் படுக்க வைத்து சங்கிலியில் பிணைத் தார்கள். ஒரு காலில் இரும்புக் கம்பியால் துளை யிட்டு இழுத்தபோது உடலில் நரம்புகள் அவ்வ ளவும் சுண்டி இழுக்கப்பட்ட வலியில் மாரிமுத்து அலறினான். சதைகளே இல்லாத அவன் கெண் டைக்காலில் மிச்சமிருந்த குருதியும் கசிந்து தயக் கத்தோடு வெளியேறியது. தன் கண்களின் முன் னால் அவன் வதை படுவதைப் பார்க்க முடியாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ள முயன்ற கோவிந் தசாமியை ஒருவன் வலுக்கட்டாயமாகப் பார்க்கச் செய்தான். அவர்களை விசாரிக்க வைப்பதற்கான எல்லா வதைகளையும் மாரி முத்து மட்டுமே எதிர் கொண்டான். கோவிந்தசாமி பாதுகாக்கப்பட்டதற் குப் பின்னால் அவரின் குருதித் தேவை அங்க்கார் வீரர்களுக்கு இருந்தது. சண்டையில் காயம்பட்ட அங்க்கார் வீரர்களின் சிகிச்சைக்கு ஏராளமாய் குருதி தேவைப்பட்டதால் அந்த தேவைகளை நிவர்த்தி செய்யும் பொறுப்பும் கைதிகளின் மேல் விழுந்தது. கோவிந்தசாமிக்கு ஓ பாசிட்டிவ் வகைக் குருதி என்பதால் இருபது நாட்களுக்கு ஒரு முறை அவரிடமிருந்து முடிந்தவரை குருதி எடுத் துக் கொண்டனர். உடல் மெலிந்து நடக்க முடியா

தபடி கூன் விழுந்த போதும் அவருக்கு மரணம் சமீபித்திருக்கவில்லை.

இரண்டாவது ப்ளோக்கின் முதல் செக்சனில் செல் நம்பர் 2 ற்கு கோவிந்தசாமி மாற்றப்பட்டார். ஒரு நீண்ட அறையில் குட்டி குட்டியாய் சுவர்கள் எழுப்பி கட்டப்பட்ட தனிச்சிறை. காற்றும் வெளிச்சமும் இல்லாத அந்த கூண்டுக்குள் ஒரு ஆள் கால் நீட்டி படுக்கச் சிரமம். நாளொன்றுக்கு ஒரு வேளை உணவு மட்டுமே அனுமதி. பசியின் வழியாகவேனும் மரணம் தன்னை தழுவிக் கொள்ளட்டுமென தவிப்போடு காத்திருந்தார். ஒரே அறையில் முப்பதுக்கும் மேற்பட்ட சின்னஞ்சிறிய சிறை. செங்கல் சுவரைத் தவிர எதையும் பார்க்க முடியாது. வெளிச்சத்தைப் பார்க்காத கண்கள் பார்வையிழக்கத் துவங்கியிருக்கும். அருகில் இருக்கும் எவரோடும் பேசவும் அனுமதி மறுக்கப்பட்டிருந்ததால் அந்தக் கொடூரத் தனிமையில் அவரைப் போலவே அங்கிருந்த ஒவ்வொருவரும் புழுங்கிப் புழுவானார்கள். மனித வாசனையை அருகில் உணர மாட்டோமாவென நாசி ஏங்கித் தவிக்கும். உயிரோடு இருக்கையிலேயே தனக்கான சவக்குழியில் படுத்திருப்பதாக கோவிந்தசாமி நினைத்துக் கொள்வார். சொந்த ஊர் மனைவி மக்கள் எல்லாம் மறந்து உயிர் வாழ்கிறோமென்கிற நினைப்பு மட்டுமே அவருக்குள் மிச்சமிருந்தது.

மாரி முத்துவை பின் ஒருபோதும் கோவிந்த சாமி பார்த்திருக்கவில்லை. அவனுக்கு என்ன

வாகி இருக்கக் கூடுமென்பதை யோசித்தபோது இதற்கு முன் இருந்த அறையில் தங்களுக்கு அருகில் இருந்த பிணங்கள் எல்லாம் நினைவிற்கு வந்து போனது. தன்னைச் சார்ந்த ஒருவரும் அருகில் இல்லாமல் மரணத்தின் நாவுகள் தன்னைத் தழுவிக் கொள்ள மட்டுமே முழுதாக அவர் காத்திருந்தார்.

யோல் ஸ்லங்கிலிருந்து தலைமை முகாமிற்கு அனுப்பப்பட்ட ஜெரோனியின் முன்னால் இப்பொழுது ஒரேயொரு வாய்ப்பு மட்டும் இருந்தது. பெரும் மக்கள் கூட்டத்தை தன் பக்கம் நோக்கி வசீகரிக்கும் குரல் கொண்ட அவளை தக்கவைத்துக் கொள்வதன் மூலம் தங்களுக்கு பயனிருப்பதாய் நினைத்தார்கள். புரட்சிப் பாடல்களை கெமெர் ரோஜ் குழுவோடு இணைந்து பாட வேண்டுமென அவர்கள் நிர்ப்பந்தித்த போது அவள் உடன்பட மறுத்தாள். உடலின் கடைசித் துளி உயிர் இருக்கும் வரை அவர்கள் தனது குடும்பத்திற்கும் தேசத்திற்கும் செய்து கொண்டிருக்கும் துரோகங்களை மன்னிக்கத் தயாரில்லை. தனது வாழ்வை சிதைத்துப் போட்ட கெமெரின் பெருமைகளைத் தன்னால் ஒருபோதும் பாடமுடியாதென மறுத்து விடாப்பிடியாய் இருந்தவளை அவர்கள் யோல் ஸ்லங்கிற்கு திரும்பவும் அனுப்பவில்லை. கம்போடியாவிலிருந்து மறைந்து போன ஏராளமான இசைக்கலைஞர்கள், ஓவியக் கலை

ஞர்களைப் போல் அவளும் ஒருநாள் எந்தத் தட யங்களும் இல்லாமல் போனாள்.

தனது குழந்தைத் திரும்ப வராமல் போன தில் ஏங்கியே உடல் மெலிந்து போன கோவிந் தசாமியின் மனைவிக்கு விசாரணையை எதிர் கொள்ளும் திராணியில்லை. முதுகிலும் உடலின் பிற பாகங்களிலும் விழுந்த அடிகளுக்கு தோலும் சதையும் பியந்து தனது அச்சத்தை வெளிப்படுத் தின. ஒடுங்கின அவள் உடலில் தங்களுக்குத் தேவையான எதுவுமில்லையென்பதைத் தெரிந்து கொண்ட அங்க்கார், புதிய விசாரணைக் கைதி களுக்கு இடமளிக்க வேண்டிய நெருக்கடியில் இருந்தது. "புதிய வீட்டிற்கு அழைத்துச் செல்கி றோம்' என்னும் வாக்குறுதியோடு தங்களது வழக் கமான நடைமுறைகளின் படி அவளையும் வேறு சிலரையும் கண்களையும் கைகளையும் கட்டிக் கொண்டு ஒரு ட்ரக்கில் ஏற்றிச் சென்றனர். இந்த சில மாதங்களில் நோம்ப் பென்னில் நிகழ்ந்த எந்த மாற்றத்தையும் பார்க்க அவர்கள் அனுமதிக்கப்பட் டிருக்கவில்லை. உண்மையில் தாங்கள் எங்கிருக் கிறோம் என்பது அவர்களில் ஒருவருக்கும் தெரிந் திருக்கவில்லை. எப்போதும் இருள் மட்டுமே சூழ்ந் திருப்பதால் இந்த உலகின் எல்லா நினைவுகளும் அவர்களுக்கு இருளாகவே மாறிப்போயிருந்தது, வெளிச்சம் மறுக்கப்படும் கண்களுக்கு நம்பிக்கை இருப்பதில்லை. அவர்கள் ஒரு இருள் வெளியிலி ருந்து இன்னொரு இருள் வெளிக்கு அழைத்துச்

செல்லப்பட்டார்கள். நட்சத்திரங்களோ நிலவோ வானமோ சூரிய வெளிச்சமோ மனதை இலகு வாக்கும் இயற்கையின் எந்த் தடயமும் இல்லாத ஜடங்களாய் சிரமத்தோடு சுவாசித்துக் கொண்டி ருந்த ஜீவன்கள். யோல் ஸ்லங்கிலிருந்து சில மைல்கள் தூரத்திலிருந்த கொலை களத்தில் ஓர் அதிகாலை அந்த ட்ரக் நின்ற போது பெரும் சத் தத்தில் போல் பாட்டின் புரட்சிப் புகழ் பாடும் பாடல் சத்தமாய் ஒலித்துக் கொண்டிருந்தது. அவர்களை இறக்கி விட்ட ட்ரக் அங்கிருந்து நகர்ந்த போது கண்கள் அவிழ்க்கப்படாமலேயே அவர்கள் நடந்து செல்ல பணிக்கப்பட்டார்கள். உடலில் இருந்த சக் தியெல்லாம் வடிந்து போய், செல்கள் அழுகத் துவங்கியிருக்கும் அந்த உடல்கள் தடுமாறும் பாழ் பட்ட ஓவியங்களைப் போல் அந்த இருளில் நடந்து சென்றனர். செருப்புகள் இல்லாத கால்களோடு நடந்ததால் பனி விழுந்த புல்வின் சில்லிப்பை உணர முடிந்தது. நீண்ட காலத்திற்குப்பின் இயற் கையோடு நிகழ்ந்த அந்த சின்னஞ்சிறிய உறவு தந்த ஆறுதலை அவர்கள் அனுபவிக்கும் முன்பா கவே ஒரு மேட்டில் வரிசையாக நிறுத்தப்பட்டனர். அவர்களில் சிலரின் உடைகள் உருவப்பட்ட பின் இரும்புக் கம்பியால் ஒருவன் தாக்கப்பட்டு கீழே விழுந்தான். அங்க்கார் வீரன் குறுங்கத்தி ஒன்றால் அவனது கழுத்தை அறுத்து கீழே இருந்த சின் னஞ்சிறிய நீர்ப்பள்ளத்திற்குள் தள்ளியதை மங்க லான வெளிச்சத்தில் மற்றவர்கள் பார்த்தார்கள்.

அடுத்தடுத்து மற்றவர்களும் அதே போல் கொலை செய்யப்பட்டு அந்த பள்ளத்திற்குள் தள்ளிவிடப் பட்ட பின் அந்த நீரில் குருதியின் செந்நிறம் வேக மாய் கலந்து சேர்ந்தது.

கம்போடிய டயரி - 6

அவர்கள் வரும் போது இருந்த நில மில்லை. நூற்றுக்கணக்கான மக்களின் உழைப் பில் எங்கும் விளைச்சல். விளைந்த தானியங் களை இயக்கம் எடுத்துக் கொண்டு எப்போதும் போல் இவர்களுக்கான கஞ்சியை மட்டும் தந்து கொண்டிருந்தது. காய்கறிகள், இரைச்சி எல்லாம் மறுக்கப்பட்டு யுத்தகளத்தில் இருக்கும் தோழர்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. உழைப்பு, குருதி எல்லாம் இயக்கத்திற்கே என்னும் முழக்கத்தின் கீழ் ஒவ்வொரு மனிதனும் சுரண்டப்பட்டான். தின மும் இரவுகளில் நடக்கும் புரட்சிகர வகுப்புக ளில் எல்லோரும் தவறாமல் கலந்துகொள்ள நிர்ப் பந்திக்கப்பட்டார்கள். குடும்பம் உறவுகள் எல்லா வற்றையும் துறந்து இயக்கத்திற்காகவும் தேசத்தின் எதிர்காலத்திற்காகவும் எல்லாவற்றையும் அர்ப்ப ணிக்க அங்கிருந்த சிறுவர்கள் பழக்கப்பட்டார்கள். உழைக்க மறுக்கிறவர்களுக்கும், சோம்பேறிகளுக் கும் கடுமையான தண்டனைகள் நிறைவேற்றப் பட்டன. சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகிறவர்கள் கொலை செய்யப்பட்டு நீர்வெளிகளில் எறியப்பட்டார்கள். மொத்த தேசத்தையும் ஒரு திறந்து சுடுகா டாக மாற்றிவிடும் தீவிரத்தில் அங்க்கார் வேட்

டையாடிக் கொண்டிருந்ததால் இயக்கத்திற்குள் ளேயே நிறைய சிறு சிறு குழுக்கள் உருவாகிவிட் டிருந்தனர். நம்பிக்கையளிக்கப்பட்ட எந்த மாற் றங்களும், இலக்குகளும் நிறைவேற்றப்படவில்லை என்பதால் போராளிகள் சோர்ந்து போயிருந்தார் கள். லட்சியங்களுக்காக தொலைத்துவிட்ட வாழ் வின் சந்தோசங்கள் தலைமையின் மீதான வெறுப் பாய் நிறைய பேருக்கு வளர்ந்திருந்ததால் நிறைய முகாம்களில் தன்னிச்சையாக முடிவுகளை எடுக் கத் துவங்கினார்கள். வெளியிலிருந்த எதிர்க ளோடு இப்பொழுது கெமெர் ரோஜின் உள்ளே யும் நிறைய எதிரிகள் உருவாகி இருந்ததால் புதி தாக இயக்கத்தில் சேரும் பலருக்கு யாரை எதிர்த்து சண்டையிடுகிறோம் என்பதே குழப்பமாகி இருந் தது.

எல்லா முகாமிலும் சிறுவர்கள் உடல் மெலிந்து அசையும் எலும்புக்கூடுகளாய் மாறிப்போயிருந் தார்கள். முகத்திலும் உடலிலும் தோல் உரிந்து காயங்கள் நிறைந்திருந்தன. காயத்தில் ஈ மொய்த்து கூசவும் எரியவும் செய்தது. அழகருக்கு உள்ளாடை அணியாமல் எப்போதும் நீரிலும் சக தியிலுமாய் நின்று விதைகள் புண்களாகி இருந் தன. கால்களிலும் முதுகிலும் நிறைய காயங்கள். எல்லா ஆங்கில மருந்துகளையும் அங்கார் தடை செய்திருந்ததால் அந்தக் காயங்கள் குணமாவதற் காக மாற்று வழிகளை யோசித்தனர். தற்காலிக

மருத்துவ பயிற்சிகள் எடுத்துக் கொள்ளச் சென்ற போராளிகளுக்கு காயங்களில் உப்பு நீர் ஊற்றி சுத்தம் செய்ய கற்றுத் தரப்பட்டது. காயம்பட்ட இடங்களில் உப்பு நீரை ஊற்றிக் கழுவும் போது ஏற்படும் எரிச்சல் அவஸ்தைகளைப் பற்றி யாருக்கும் அக்கறை இருந்திருக்கவில்லை. மருந்தே இல்லாமல் அவதிப்படுவதற்கு இது தேவலை என யாரும் எதும் கேட்பதில்லை. அஸ்தமனத்தையும், சூரிய உதயத்தையும் தவிர்த்து ஒரு நாளைக் கடப்பதற்கான எந்த சுவடுகளையும் நினைவுகளாக சேகரித்து வைத்துக் கொள்ள அவர்களால் முடிந்திருக்கவில்லை. உத்தரவுகளுக்கு கீழ்ப் படிந்து பழக்கப்பட்ட மாடுகளைப் போல் எல்லோரும் இயக்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு கீழ்ப்படிந்தனர். உறவுகளை மட்டுமல்லாமல் அடையாளத்தையும் திருவிழாக்களையும் இயக்கம் மறக்கடிக்கச் செய்திருந்தது. தங்களது பாரம்பர்ய நடனம், முன்னோர், திருவிழாக்கள் எல்லாமே மறந்து இப்பொழுது செங்கொடியின் பிரச்சார பாடல்கள் மட்டுமே நினைவில் இருந்தது. நாள் தவறாமல் கற்றுக் கொடுக்கப்பட்ட புதிய பாடல்களும் உறுதி மொழிகளும் கெமெர் வாக்களித்த முன்னேறிய ஒரு சோசலிச தேசத்தை உருவாக்கிவிடும் தீர்மானத்தோடு இருந்தது. அழகர் பாடல்களைத் தொடர்ந்து பாடுமளவிற்கு மொழியை வளர்த்துக் கொண்டிருந்தான். ஆபத்து நேரங்களில் தன்னை

சாமர்த்தியமாக பாதுகாத்துக் கொள்ளும் சாதுர் யத்தை அச்சம் கற்றுக் கொடுத்திருந்தது.

மழைக்காலம் முடிந்து ச்சோம் பென் திரு விழா துவங்க இருந்த நேரம். கம்போடியர்கள் தங்கள் முன்னோர்களை வழிபடும் இந்த திருவி ழாவைக் கூட அனுசரிக்க தடை விதிக்கப்பட்டிருந் ததால் பெரும்பாலனவர்கள் தோராயமாக ஒருநா ளில் தான் கொண்டாடினார்கள். எளிய படையல் களைத் தயார் செய்து இரவுகளில் தங்கள் முன் னோர்களுக்கு படைப்பதன் மூலம் என்றென்றைக் குமாய் அவர்களின் ஆசிகளைப் பெறமுடியுமென் பது அவர்களின் நம்பிக்கை. தேவைக்கு அதிக மாய் யாரும் தானியங்களை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. வழிபாடு செய்வ தும் தடை செய்யப்பட்டிருந்ததால் கிராமவாசிகள் திருட்டுத்தனமாகவே தங்கள் முன்னோர்களுக்கு படையல் வைத்தார்கள். நிமோல் மறந்தி ருந்த போதும் திருவிழாவை அழகர் மறந்திருக்க வில்லை. கடந்த வருடம் தன் முன்னோருக்கு படையல் வைத்ததற்காக ஒரு விவசாயி தண் டிக்கப்பட்டதை அவன் நினைவு வைத்திருந்தான். தாமரை மலர்கள் நிரம்பிய குளத்தின் கரையில் இரண்டு சோற்று உருண்டைகளும், கொஞ்சம் வேக வைத்த காய்கறிகளும், பனங்கள்ளும் தான் அவர்கள் வைத்த படையல். அதற்காக அந்த விவ சாயி இரவு முழுக்க பனை மரத்தில் கட்டிவைக் கப்பட்டு அடிக்கப்பட்டார். உடல் துவண்டு குருதி

கசிந்த அவர் நினைவு தப்பும் வரை எல்லோரிட மும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார். அதி காலையில் மயங்கிக் கிடந்த அவரை வேலைக்குச் சென்ற எல்லோரும் பரிதாபமாய்ப் பார்த்தார்கள். அழகருக்கு அவரின் வேதனையான முகத்தையும் உடலையும் விட படையல் வைத்திருந்த இரண்டு சோற்று உருண்டைகளும், வேகவைத்த காய்கறி களும் தெளிவாக நினைவில் இருந்ததால் அந்த நாளை அவன் மறந்திருக்கவில்லை.

இரவில் வகுப்பு முடிந்து எல்லோரும் தங் கள் குடிசைகளுக்குத் திரும்பி இருந்தனர், பாது காப்பிற்கு சுற்றிக் கொண்டிருந்த தோழர்களின் சைக்கிள் சத்தம் கூட இப்பொழுது இல்லை. நிரந் தரமாக உடலில் நிலை கொண்டிருந்த பசி உறங் கும் நேரத்தை குறைத்திருந்தது. சத்தம் வராமல் எழுந்து கொண்ட அழகர் அந்தப் பகுதி முழுக்க கவ னமாகப் பார்த்தான். மனித நடமாட்டமே இல்லா மல் அமைதி சூழ்ந்திருந்தது. மெதுவாக வெளி யேறி வயல் வழியாய் அருகிலிருந்து கிராமத்தை நோக்கி நடந்தான். இந்த சின்னஞ்சிறிய உணவு அவனுக்கு அளிக்கப் போகும் பரவசம் மகத்தா னது. பசி எளிய உணவுகளைக் கூட கொண்டாட இந்த நாட்களில் பழக்கி இருந்ததால் எப்படியும் அதை அடைந்து தீர்வதென்கிற உறுதியோடு இரு ளில் நடந்தான். வயலுக்காக வெட்டி வைத்த நீர்ப் பாதையைத் தொடர்ந்து சென்றவன் எந்த வெளிச் சமும் இல்லாத கிராமத்தின் இருளைக் கண்டு

ஏமாற்றமடைந்தான். மூன்றோ நான்கோ மாடுகள். யார் வீட்டிலும் அந்த நாளை அனுஷ்டிக்கும் அறிகுறிகள் தென்படவில்லை. இருள் சூழ்ந்த அந்த வெளி தந்த ஏமாற்றம் சகிக்காமல் திரும்பிவிட நினைத்தவன் அப்படியே உட்கார்ந்தான். ராப்பூச்சிகளின் சத்தம் எங்கும் நிறைந்திருக்க, முகாமிற்கு திரும்பாமல் இப்படியே எங்காவது ஓடிவிடலாமா வென மனம் யோசித்தது. ஆனால் எங்கு செல்வது? தான் இந்த அந்நிய தேசத்தில் யார்? சொந்த ஊரும் மனிதர்களும் மொழியும் மறந்து போகத் துவங்கி இருந்தார்கள். பூமியில் அடையாளமில்லாமல் வாழும் மிருகங்களோடு மிருகமாய் தன்னை நினைத்துக் கொண்டான். எல்லா அடையாளங்களையும் மறந்துபோன மிருகம். எதுவும் கிடைக்காத ஏமாற்றத்தை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. திரும்பிப் போவதற்கு முன்னால் இன்னும் கொஞ்சம் கிராமத்தை நெருங்கிச் செல்லலாமென நினைத்துக் கொண்டு சென்றான். சற்றுத் தள்ளி தள்ளி வயல்களுக்குள்ளிருந்த நான்கு வீடுகளும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தன. ஏதோவொரு நம்பிக்கையில் ஒவ்வொரு வீட்டின் பின் பக்கமாய் சென்றவன் ஒரு வயல் ஓரத்தில் தாமரை இலையில் இரண்டு சோற்று உருண்டைகள் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தான். இருளில் அது நிஜமானதுதான என உறுதி செய்ய வேகவேகமாய் சோற்று உருண்டையை நோக்கி ஓடினான். ஒரு கைப்பிடி அளவுள்ள இரண்டு உருண்டைகள்.

எந்த கடவுளுக்கு நன்றி சொல்வதெனத் தெரியாமல் அதை எடுத்து சாப்பிட்டான். சற்றுத்தள்ளியிருந்த வீட்டிலிருந்து ஒரு பெரியவரும் அவரின் இள வயது பேரனும் இவனை பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர்கள் பக்கமாய் குனிந்து நன்றி சொன்னவனுக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நீண்ட நாட்களுக்குப்பின் கிடைத்த சோற்று உருண்டைகள் குடலுக்குள் அடங்க மறுத்தது. திடீரென பசி அதிகமானது போல் உணர்ந்தவன் கூடுதலாக எதுவும் கிடைக்கிறதாவெனப் பார்க்க அடுத்த வீட்டை நோக்கி நடந்தான். சோர்வில் கண்கள் சொருகிக் கொள்ளத் துவங்கின. திரும்பிச் சென்றுவிடலாமென நினைத்த நேரத்தில் வயல்களுக்குள் மாட்டி தப்பிக்க போராடிக் கொண்டிருந்த கொழுத்த பூனை ஒன்றைக் கவனித்தான். காட்டுப்பூனை அந்த இருளில் தன் துணை தேடி சென்றிருக்க வேண்டும். சத்தம் போட்டுக் கத்தும் திராணியின்றி முனகிக் கொண்டிருந்த அதைப் பார்த்த அழகருக்கு அது இன்னொரு உயிர் என்பதை விடவும் பசிக்கான இரையாக மட்டுமே தெரிந்தது. அவன் கண்களில் இருந்த பசியையும் வெறியையும் கண்டு கொண்ட பூனை தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உயிரின் ஆதாரத்தை எல்லாம் திரட்டி அலற மணல் மேட்டில் தேடி ஒரு பெரிய கல்லை எடுத்தவன் ஓங்கி அதன் தலையில் அடித்துக் கொன்றான். எதிர்க்க வலுவில்லாமல் இறந்து போன

பூனையின் உடலைத் தூக்கிக் கொண்டு தான் வந்த பாதையிலிருந்து வேறு திசை நோக்கி நடந்த வன் எங்காவது தனக்கு ஒரு பொறி நெருப்பு கிடைத்துவிடாதாவென ஓடினான். வயல்வெளி கள் முடிந்து பனை மரங்கள் அடர்ந்திருந்த சமவெ ளிப்பகுதி வந்தபோது அவனுக்கு எங்கு செல்வதெ னத் தெரியவில்லை. விடிவதற்கு இன்னும் கொஞ் சமே நேரமிருந்தது. அந்தப் பூனையை அறுத்து எடுக்க கத்தியோ, சுட்டுத் திண்ண நெருப்போ கிடைக்காமல் பனை மரங்களுக்கு நடுவில் எதா வது கிடைக்குமாவெனத் தேடிப்பார்த்தான். ஒரு துண்டு இரைச்சி கிடைத்தாலும் போதும். இந்த நீண்ட காலப் பசிக்கு அது எத்தனை பெரிய ஆறு தல்? கால தாமதத்தால் மாட்டிக் கொண்டால் கிடைக்கும் தண்டனை என்னவாக வேண்டுமானா லும் இருக்கலாம். இயற்கை அவனை ஆறுதல் படுத்தும் தேவைகள் எதுவுமின்றி அமைதியாய் இருக்க, எதுவும் கிடைக்காத வெறுப்பில் பூனையை ஓங்கி ஒரு பனை மரத்தில் அடித்தான். எப்போதோ இறந்து போன அந்த வாயில்லா ஜீவன் எந்த எதிர்ப்புமில்லாமல் காயம்பட்டு உடல் சிதறி யது. அதன் உடலில் இருந்து பிய்ந்த பச்சை மாமி சத்தை தோலோடு கடித்துத் திண்ணத் துவங்கி னான். குருதியின் நெடியோ, வேக வைக்கப்படாத மாமிசத்தின் பச்சை நெடியோ அவன் பசியைத் தொந்தரவு செய்யவில்லை. முடிந்தமட்டும் கடித்து மென்று முழுங்கினான். கையில் வழிந்த குருதி சட்

டையிலும் வழிந்து ஈரமானது. இரைச்சியை மெல்ல முடியாமல் மென்று விழுங்கியவன் பாதி உடலோடு இருந்த அந்தப் பூனையைத் தூக்கி எறிய மனசில் லாமல் மீண்டும் முகாம் நோக்கி நடந்தான்.

இருளில் எல்லாப் பாதைகளும் குழம் பிப் போயிருந்ததோடு பூனையின் பச்சை மாமி சம் உடலைத் தொந்தரவு செய்யத் துவங்கியது. தொண்டைகும் கீழ் உணவுக்குழாயில் அடைத்துக் கொண்டது போல் வேகமாக நடக்கையில் மூச்சு விட சிரமப்பட்டான். உள்ளே இருப்பதை வாந்தி யெடுத்துவிடலாமென நினைத்தலாம் முடியாமல் அவதியுற, உடல் வியர்க்கத் துவங்கியது. கையி லிருந்த இன்னொரு பாதி பூனையை என்னவா னாலும் விட்டுவிவதில்லை என்கிற உறுதியோடு நடந்தவனின் கால்களில் எதுவோ இடற தடுமாறி கீழே விழுந்தான். அவன் விழுந்த இடம் முழுக்க மனித எலும்புகள். இவ்வளவு நேரமும் தன்னி டமிருந்த பூனையின் நாற்றமென நினைத்திருந்த அவன் இப்பொழுது தன்னைச் சுற்றிக் கிடந்த எலும்புக் குவியலைக் கண்டு உடல் அதிர வாந் தியெடுத்தான். அரைகுறையாய் அவன் மென்று விழுங்கிய இரைச்சித் துண்டுகள் வெளியே வந்து விழுந்தபோது அதேயிடத்தில் மயங்கிப் போனான். கொலை செய்யப்பட்ட மனிதர்களின் மண்டை ஓடுகள் சூழ மயங்கிக் கிடந்தவனின் மீது காலை நேர வெளிச்சம் பரவ, பறவைகள் தாழப் பறந்து நோட்டமிட்டுச் சென்றன. சைக்கிளில் ரோந்து

வந்து கெமெர் காம்ரேட் ஒருத்தி பிணக்குவியலுக் குள் கிடக்கும் அழகரைக் கவனித்தாள். அப்போ தும் தன் கையில் பாதி உடல் சிதைந்த பூனையை அவன் இறுகப் பற்றியிருந்தான்.

உடல் சிதைந்து போன அவனுக்கு உட னடியாக எந்த தண்டனைகளும் வழங்கப்பட வில்லை. கண்விழித்துப் பார்த்தபோதெல்லாம் சுற்றிலும் பிணங்களை மட்டுமே உணர்ந்த அழகர் அச்சத்தில் அலறினான். குணமாக வேண்டி ஒருவேளை உணவு கூடுதலாக கொடுக்கப்பட்ட தோடு உப்பும் சர்க்கரையும் கலந்த நீரை அருந் தக் கொடுத்த அவன் குடலை சுத்தம் செய் தார்கள். ஒரு வாரத்திற்குப்பின் எழுந்து நடமாட முடிகிற அளவிற்கு குணமாகி இருந்த அழகர் எப் போதும் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென் பதால் தோழர்களுக்கான உணவை சமைக்க வும், பிற வேலைகளுக்காகவும் அமர்த்தப்பட் டான். முன்னை விடவும் கூடுதல் வேலை. யாரோ டும் பேசவும் அனுமதிக்கப்படவில்லை. இந்த உல கில் இனி தனக்கென ஒருவருமில்லை என்கிற சூன்ய நிலைக்குத் தள்ளப்பட்டான். சமைக்கவும், காயம்பட்ட போராளிகளை சுத்தப்படுத்தி உடை மாற்றி விடவும் இரவு பகல் என்றில்லாமல் வேலை இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக எப்போதும் தொடர்ந்த கண்காணிப்பு. சின்ன தவறுகளைக்கூட அவர்கள் இனி அனுமதிக்கப் போவதில்லை என்

பதால் எப்போதும் விழிப்போடு இருக்க முயன்று சோர்ந்து போனான்.

நிமோல் ஆயுதப் பயிற்சிக்காக ப்ரெக் தொனாட் முகாமிற்கு அனுப்பப் பட முடிவா னது. வியட்நாம் ராணுவத்துடன் துவங்கியிருந்த புதிய சண்டையில் நிறைய பேர் கொல்லப்பட்ட னர். களத்திற்கு போராளிகளின் தேவை இருந் ததால் எல்லா முகாமிலிருந்தும் புதிய தோழர் கள் ஆயுத பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்பட் டார்கள். கெமெர் அல்லாத அழகரை யுத்த களத்திற்கு அனுப்ப விரும்பாததால் அவன் எப் போதும் போல் முகாமிலேயே இருந்தான். நிமொல் கடைசியாக அழகரிடமிருந்து விடைபெற்ற போது அக்கா தந்த அப்சரஸ் பொம்மை, தான் பாது காத்து வைத்த ஒரேயொரு உடை எல்லாவற்றை யும் இவனுக்கே தந்துவிட்டுப் போனான். கெமெர் இனத்திற்காக சண்டை போடுவது கௌரவமானது என்னும் எண்ணத்தை இந்த முகாமும் இரவு நேர வகுப்புகளும் ஏற்படுத்தி இருந்தன. போராட்டமே விடுதலைக்கான பாதை என்பதை திடமாய் நம் பிய அவன் எந்த பந்தங்களோடும் பிணைத்துக் கொள்ள விருப்பமில்லாததால் அழகரிடமிருந்து எளிதில் துண்டித்துக் கொண்டான். ஒரு அதிகா லையில் அவர்களை ஏற்றிக் கொண்ட ட்ரக் அங்கி ருந்து கிளம்பிய போது அந்த விடியல் அழகருக்கு துயர் மிக்கதாய் இருந்தது.

போபானாவின் காதல்.

துயர்களும், சிறைச்சாலை சுவர்க ளும் கனவுகளை முழு முற்றாக அழித்துவிட முடிவ தில்லை. ஜீவிதத்தின் அற்புதமே நிர்ப்பந்தங்களை மீறி முகிழ்க்கும் நேசம் தான். யோல் சிலோங்கின் இறுக்கமான அந்த கட்டிடங்களுக்குள் அடைபட்ட ஏராளமானோருக்குள் நேசம் இருந்தாலும் அவர் கள் அதனைக் காட்டிக் கொள்ளவோ வெளிப் படுத்திக் கொள்ளவோ முடிவதில்லை. தத்து வத்தை நேசிக்க அனுமதிக்கப்பட்ட மனிதர்கள் சக மனிதர்களை நேசிக்க அனுமதிக்கப்பட வில்லை. மறக்கப்பட்ட எத்தனையோ மனிதர்க ளின் கதையை வைத்திருக்கும் யோல் ஸ்லோங் கின் என்றும் மறக்கவே முடியாத கதை போபானா வினுடையது.

வட கம்போடியாவின் சிறிய கிராமம் ஒன்றில் பிறந்த போபான்னா தனது 16 வது வய

தில் தூரத்து உறவினர் ஒருவரான லெஃப்டினட் சிதாவிற்கு திருமணம் முடிக்க நிச்சயிக்கப்படுகி றாள். சுடரென மிளிரும் பேரழகுடைய அவள் வாழ்க்கை குறித்த ஓராயிரம் கனவுகளோடு காத் திருக்கையில் எதிர்பாராத அரசியல் குழப்பங்களில் கம்போடிய மன்னர் ஆட்சியிலிருந்து தூக்கி எறியப் பட்டபின் நேரும் குழப்பத்தில் அவர்கள் எல்லோ ரும் பிரிய நேரிடுகிறது. எதிரிகளிடமிருந்து தப் பித்து கொள்ள வேண்டி சிதா புத்த துறவியாகி விடுகிறான். சொந்த ஊரிலிருந்து துரத்தப்பட்ட தன் சகோதரிகளுடன் வேறு நகரத்தில் போபானா தஞ்சமடைகிறாள். கடந்த காலத்தின் எல்லா சந் தோசங்களும் பிடுங்கப்பட்ட அவர்களை சூன்யம் சூழ்ந்து கொள்கிறது. வேலை வாய்ப்புகள் அருகிப் போன அந்த சின்னஞ்சிறிய தேசத்தில் கிடைத்த வேலைகளைக் கொண்டு வாழ்வைத் தொடரும் அவளை சில மாதங்களுக்குப் பின் கம்போடிய ராணுவ வீரன் ஒருவன் கற்பழித்துவிடுகிறான். தன் விருப்பங்களுக்கு எதிராக மட்டுமே எல்லாவற்றை யும் தரும் இயற்கையை சபித்தபடி அதிலிருந்து தப் பிக்கவும் முடியாமல் சகோதரிகளுக்காக வாழ்கி றாள். கற்பழித்தவன் மூலமாய் கருவுறும் போபானா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுக் கொள்கிறாள்.

கெமெர் ரோஜ் ஆட்சியைக் கைப்பற் றிய பிறகு மீண்டும் அவளை இருள் சூழ்கிறது. ஆங் கிலம் ஃப்ரஞ்ச் கெமெர் என மூன்று மொழிகளில் புலைமை கொண்ட அவளை நகரத்திலிருந்து

கிராமங்களை நோக்கி துரத்தினார்கள். அறிவுள் ளவர்கள் தேசத்தின் வளர்ச்சிக்கு ஆபத்தானவர் கள் என்கிற அச்சம் கெமெர் ரோஜிற்கு வந்தது வர லாற்றில் விளங்கிக் கொள்ள முடியாத குழப்பம். நக ரத்திலிருந்து எல்லோரும் கட்டாய உடல் உழைப் பிற்காக கிராமங்களை நோக்கி துரத்தப்பட்ட போது ஆங்கில மருத்துவம் தடை செய்யப்பட்டது. மருத் துவர்கள் ஒழிக்கப்பட்டார்கள். போபானா தன் குடும்பத்தினரை இந்த முறை மொத்தமாக பிரிந் தாள். ஒவ்வொருவரும் வெவ்வேறு பகுதிகளுக்கு அனுப்பபட வெகு தூரத்தில் ஒரு கிராமத் தில் ஏராளமான மக்களோடு பகல் இரவு பாராமல் உழைக்க நிர்ப்பந்திக்கப்பட்டாள். பசியிலும் நோய் மையிலும் அவள் மெலிந்து மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் அவளது பருவத்தில் நிச்சயக்கப்பட்ட லெஃப்டினண்ட்டைத் திரும்பப் பார்க்கிறாள். ஆட்சி கவிழ்ப்பிற்குப் பின் புத்த துற வியாகி இருந்தவன் இப்பொழுது கெமெர் ரோஜின் தீவிரமான போராளியாய் இருந்தான். காம்ரேட் டெத் என அழைக்கப்பட்ட அவனது எல்லா ஆக் ரோஷங்களும் தவிப்பும் இவளை மீண்டும் பார்த்த நாளில் தணிந்து போக யாருக்கும் தெரியா மல் மீண்டும் அவர்களின் காதல் மலரத் துவங் கியது. எதிரியைக் காதலிக்க அனுமதி இல்லை என்பதோடு இவன் தனக்கு படிப்பறிவு இருக்கி றதென்பதையும் சொல்லாமல் மறைத்திருந்ததால் அவர்கள் தங்கள் காதலை நேரடியாக வெளிப்ப

டுத்திக் கொள்ள முடியாத சூழலில் இருந்தார்கள். அவளிருந்த பகுதியில் இருந்த தனக்கு நம்பிக்கை யான கிராம விவசாயிகளிடம் அவளைத் தனது மனைவியென அறிமுகப்படுத்தியவன் அவளுக் குத் தேவையான உணவும் மருத்துவ உதவிகளும் கிடைக்க வழி செய்தான்.

இயக்கத்தின் பணிகளுக்காக அவன் நோம்ப் பென் திரும்பிவிட அதன் பிறகு அவர் களுக்குள் ரகசிய கடிதங்கள் வழியாக காதல் தொடர்ந்தது. காலம் கடந்து வந்து சேர்ந்திருக்கும் வாழ்வின் இந்த அளப்பெரிய சந்தோசத்தை விட் டுவிட இருவருக்கும் விருப்பமில்லை. நீண்ட பிரி விற்குப் பிறகான இந்த உறவும் ஆறுதலும் அவளை அவளின் இளமை காலத்திற்கு மீட்டெடுத்தது. வசந்தத்தின் எல்லா சொரூபங்களையும் இழந்து போன அந்த தேசத்தில் அபூர்வமாய் இவர்களின் காதல் மகத்தான ஒளியாய் நிரம்பியது. அவனுக்கு எழுதின கடிதங்களில் சிலவற்றில் தன் பெயருக்குப் பதிலாக அவள் 'ஆபத்தான காதலின் மலர்' என கையெழுத்திட்டு அனுப்பினாள். அந்தக் கடிதங் கள் அவர்களுக்கு மகத்தான ஆறுதலைத் தந்தது. அதனாலேயே இந்தக் கடிதங்களுக்குப் பின்னால் இருக்கும் ஆபத்துகளைத் தெரிந்திருந்தும் அவர் களால் தங்களைக் கட்டுபடுத்திக் கொள்ள முடிய வில்லை. காம்ரேட் டெத் கடிதங்களோடு பிடிபட்ட போது அவனுக்கு எழுதப்படிக்கத் தெரிந்ததை மறைத்த குற்றத்திற்காகவும் எதிரியோடு காதல்

கொண்டதற்காகவும் அவன் கொலை செய்யப்பட்டான்.

அவன் கொலை செய்யப்பட்டதற்குப் பின்னால் கைது செய்யப்பட்டு யோல் ஸ்லங் கொண்டு வரப்பட்ட போபானா விசாரணையின் பெயரில் வதைக்கப்பட்டாள். யுத்தத்திற்குப் பின்னால் தான் கண்டுகொண்ட வாழ்வின் தற்காலிக ஒளி தன்னிலிருந்து நிரந்தரமாக பிரிந்து போன ஏமாற்றத்தில் வதங்கிப் போன அவள் ஒருநாள் கூட்டமாக இழுத்துச் செல்லப்பட்ட ஏராளமான கைதிகளோடு சேர்த்து கொல்லப்பட்டாள்.

சக்தியும் முருகனும்.

சக்தியை திருமணம் செய்துகொள்வதற்கு முன்பு மட்டுமல்ல, இப்பொழுதும்கூட முருகன் கதிரைத்தான் காதலித்துக் கொண்டிருக்கிறான். இந்தக் காதலை மற்றவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களென்கிற எந்தக் கவலைகளுமில்லாமல் இவன் மீது காதல்வயப்பட்டது ஆறு வருடங்களுக்கு முன்பு. தேசிய நெடுஞ்சாலை 7 ல் இவன் தெருவிற்கு எதிரிலிருந்த பசும்பொன் தெருவில் அவனுக்கு வீடு. கேட்டரிங் முடித்து மதுரை ராயல் கோர்ட்டில் செஃபாக வேலை செய்து கொண்டிருந்தான். கதிரோடு பழகநேர்ந்தது முருகனுக்கு தற்செயலானதல்ல, அவனே ஏற்படுத்திக் கொண்டது. முன்பு கதிர் பார்த்த ஏராளமான வேலைகளில் முக்கியமானது ஊர் ஊராக ரெக்ஸின் பையில் கியாஸ் ஸ்டவ்வின் உதரி பாகங்களை எடுத்துக் கொண்டுபோய் வியாபாரம் செய்வது. என்னதான் நாயாய் அலைந்து உருண்டு புரண்டாலும் நாளொன்றுக்கு லாபமாக இரநூறு

ரூபாய் பார்த்துவிட்டால் ஆச்சர்யம். வீட்டிலிருந்து காலை உணவை முடித்துக் கொண்டு மதியத்திற்கு கொஞ்சம் கஞ்சியையோ தயிர் சோற்றையோ எடுத்துக் கொண்டால் பெருமாலும் ஊறுகாய் அல்லது ஐம்பது பைசா முறுக்குதான் தொட்டுக் கொள்ள இருக்கும். வயிற்றின் கால்வாசிப் பகுதிக்குக்கூட காணாத அந்த மதிய உணவை வெளியில் சாப்பிடுமளவிற்கெல்லாம் வருமானம் இருந்திருக்கவில்லை. பையில் பதினைந்து கிலோவுக்கும் குறையாமல் பொருட்கள் இருக்கும். அதைத் தூக்கிக் கொண்டு ஒரு ஊரில் இறங்கினால் ஒவ்வொரு வீதியாக சுற்றி மாலை மீண்டும் பேருந்து பிடித்து வீடு திரும்புகையில் உடலில் தசைகள் எல்லாம் களைத்து அடித்துப்போட்டது போல் இருக்கும். ஒவ்வொரு வேலையும் இப்படியான ஏமாற்றங்களால்தான் அவனுக்கு சலித்துப்போனதே தவிர அவன் ஒருபோதும் உழைக்கத் தவறியிருக்கவில்லை. கடைசித் துளி குருதி கசிந்து வியர்வையாகும் வரை உழைக்கத் தயாராகவே இருந்தான். ஆனால் அதற்கான பலன் எப்பொழுதும் கவலைக்குரியதாகவே இருந்தது.

மதுரையைச் சுற்றின சிறுநகரங்கள் தான் அவனது இலக்கு. பெரும்பாலான ஊர்களில் சுற்றி அவனுக்கு நிறைய வாடிக்கையாளர்கள் இருந்தாலும் ஒவ்வொரு வாரமும் புதிய உதிரி பாகங்கள் வாங்கும் தேவை அவர்களுக்கு இருந்திருக்கவில்லை. நிராசைகளின் சகிக்கவியலாத தனிமை

யிலிருந்து தப்பித்து ஓட நினைத்தவன் இந்த தொழிலில் இருந்தும் துண்டித்துக்கொண்டு புதிய தொழிலை நோக்கி நகரலாமாவென யோசித்துக் கொண்டிருக்கையில் மாரியின் மூலமாக முருகன் அறிமுகம் கிடைத்தது. முருகன் சின்னதாக ஒரு இரவு நேர உணவகம் துவங்க விரும்பினான். அவன் வேலைக்கு செல்வதால் கடையை முழுவ துமாக பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு கதி ரினுடையது. அதுவரையிலும் பழகாத புதிய வேலை. பரோட்டா போடவும் தோசை ஊற்றவும் முருகன் சொல்லிக் கொடுத்தபோது கதிருக்கு சுவாரஸ்யமாகவே இருந்தது. பை நைட் என கடைக்கு பெயர் வைத்திருந்தனர். மாரிக்கு இதன் பிறகு இவன் பிழைத்துக்கொள்வான் என்னும் நம் பிக்கை பிறந்தது. இரவு கடையென்றாலும் இரண்டு மணி வரைதான் வியாபாரம். கடையை ஒட்டிய அடுத்த சந்தில் முருகனின் வீடிருந்ததால் பெரும் பாலான நாட்கள் கதிர் அவன் வீட்டில்தான் இரவுக ளில் உறங்க வேண்டியிருக்கும். முருகன், அவன் தங்கை தனலட்சுமி, அவன் அப்பா என எல்லோ ரும் வீட்டிற்குள் உறங்க, இவனுக்கு எப்போதும் மாடியில் நட்சத்திரங்களைப் பார்த்தபடி உறங்க வசதி செய்து தந்திருந்தனர். சில நாட்களுக்குப் பின் முருகனும் அவனோடே மாடியில் படுத்துக் கொள்ளத் துவங்கினான். வீட்டில் ஆள் இல்லாத நேரங்களில் நீலப்படம் பார்க்க இருவரும் பழகிய நாளில் புதிவிதமானதொரு நெருக்கம் அவர்களுக்

குள் வளர்ந்தது. உடலுறவில் இவனுக்கு விருப்ப மான எல்லாவற்றையும் இவன் சொல்லாமலேயே அவன் தெரிந்து கொண்டிருந்தான். எந்தவொரு காட்சியையும் வேகமாக நகர்த்திப் பார்க்க கதிருக் குப் பிடிக்காது. முருகனுக்கு ஆச்சர்யமாகக் கூட இருக்கும். 'ஒரு பெண்ணின் யோனியைச் சுவைப் பதை இத்தனை நிதானமாக இவனால் இவ்வளவு நேரம் பார்க்கமுடிகிறதென?' கேட்டுக் கொள்ள மாட்டான். பல்வேறு மொழிகள் பல்வேறு உடல்க ளென ரகசியங்களற்ற நண்பர்களாய் அவர்கள் உருக்கொண்டனர். கடையும் அவன் வீடும் இன் னொரு அங்கமாக மாறினபோது கதிரின் அம்மா வுக்கும் சந்தோசம். 'பிரச்சனை இல்லாத வழியில் மகன் சம்பாதிக்க பழகிவிட்டான்' என. மாரியுடன் கதிருக்கு ஏற்பட்ட இடைவெளியை முருகன் நிரப் பத் துவங்கிய நாளில் அவனுக்கு திருமண பேச்சு வார்த்தைத் துவங்கியது. அவன் யார் பேச்சுக்கும் பிடிகொடுப்பதாய் இல்லை. ஒருநாள் கடையை எடுத்து வைக்கையில் தனலட்சுமி "எண்ணே, முரு கன் யார் சொன்னாலும் கேக்க மாட்டேங்குது. நீயாச்சும் சொல்லுண்ணே. நாலு கழுத வயசாகி ருச்சு. இதுக்குமேல யாரு அவனுக்கு பொண்ணு கொடுப்பா.? எப்ப கேட்டாலும் கொஞ்ச நா போகட் டும்னு அதே பாட்டத்தான் பாடறான். நீ சொன்னா கேப்பான்ண்ணே. சொல்றியா?" என கதிரிடம் புலம் பினாள். கதிரும் சிரித்தபடி "அண்ணன் எப்படா போவான் திண்ண எப்படா காலியாகும்னு

இருக்க?" என்றான். அவளது நடவடிக்கைகளில் இருந்து அவளைப் புரிந்து கொள்ள முடிந்தது.

அன்றிரவு கதிர் முருகனுக்கும் சேர்த்து நான்கு பியர்கள் வாங்கி வைத்திருந்தான். இரண்டு மணிக்கு மேல் பியர்களோடு வந்தவனை ஆச்சர்ய மாகப் பார்த்த முருகன்,

"இந்த நேரத்துல என்னடா குடி? நான் காலை ல வேலைக்குப் போகனும்." என சிரித்தபடியே பிய ரைத் திறந்து அவனுக்குக் கொடுத்தான்.

"ஆமா வேலக்கிப் போற வெண்ணதான் நீ. ஒருநா லீவு போடு ஒன்னும் கொறஞ்சிராது." என இன்னொரு பாட்டிலைத் திறந்து அவனுக் குக் கொடுத்து குடிக்கச் சொன்னான். முதலில் மறுத்தாலும் பின்பு இயலாமல் முருகன் வாங்கிக் கொண்டு குடித்தான். பேச்சு உடல்களைப் பற்றி பேசுவதில் தான் துவங்கியது. எதிர் வீட்டிலிருந்த மிலிட்டரிகாரரின் மனைவி அன்று காலை குளிக் கையில் பார்த்ததை முருகன் ரசித்துச் சொல்லத் துவங்கினான்.

"பின்னால எவ்ளோ பெருசுடா? அப்டியே கல்லு மாதிரி இருக்கு. நான் பாத்துட்டு இருக்கேன், அவளும் என்னயப் பாத்துட்டு கண்டுக்காதமா திரி ஒவ்வொன்னா எடுத்து மாட்றா. உடம்புல ஒரு மயிர் இல்ல. பாக்க எப்பிடி இருந்துச்சுங் கற?.." கேட்கும்போதே கதிருக்கு விரைக்க, அவன் இவனது தோளில் அடித்து அமைதிபடுத்தினான்.

“தாயோளி செக்ஸ் கதைய மட்டும் ரசிச்சு ரசிச்சு சொல்லு, கல்யாணம் பண்ணிக்கறதுக்கு என்னடா உனக்கு?” என்று சிரித்தான். அவ்வளவு நேரமும் இருந்த உற்சாகம் குறைந்து முருகன் தலையை தொங்கப்போட்டுக் கொண்டான்.

”ஏண்டா மாப்ள? நல்ல வேலை ல இருக்க, சம்பாதிக்கிற, கல்யாணம் பண்ணிக்க என்னடா?” கதிர் ஆதரவாக முருகனின் தோளைத் தொட்டு இழுக்க, அவன் அமைதியாக எழுந்து போய்விட்டான். “என்ன பிரச்சனைன்னு சொன்னாதானடா தெரியும்?” கதிர் விடாமல் கேட்க, முருகன் தனக்கான இன்னொரு பியரையும் எடுத்துக் கொண்டு கீழே போனான். பியர் உடலில் ஏற்படுத்தியிருந்த சூடெல்லாம் கரைய எரிச்சலோடு கதிரும் மிச்சமிருந்த பியரைக் குடித்துவிட்டு படுத்து கொண்டான். எப்போதுமில்லாத அமைதி சூழ்ந்திருந்தது. விடிய இன்னும் நிறைய நேரமிருப்பது போல் ஆழமான அமைதி. தூரத்தில் எங்கோ ஒரு உணவகத்தில் சத்தமாக ஒலித்துக் கொண்டிருந்த டேப் ரெக்கார்டரின் பாடல் சத்தம் தனித்திருந்தவனுக்கு துணையாய் இருந்தது. கதிர் அப்படியே உறங்கிப்போனான்.

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தவனின் குறி விரைப்பேற, அதை யாரோ நிதானமாக சுவைக்கத் துவங்குவதை உணர்ந்து கதிர் அவசரமாக விழித்தான். முருகன் இவன் விழித்ததைக் கூட பொருட்படுத்தாமல் நிதானமாக தனது

வேகத்தைக் கூட்ட அந்த நிமிடத்தில் அவனை விலக்க முடியாத சங்கடத்தோடு "டேய் மாப்ள என் னடா செய்ற? விட்றா." என சத்தம் வராமல் சொன் னான். முருகன் அவன் வார்த்தைகளை பொருட் படுத்தும் பொறுமையில்லாமல் இப்பொழுது வேக வேகமாகய் சுவைக்க கதிர் அவனைத் தவிர்ப்பதை விட்டுவிட்டு அப்படியே இருந்தான். சில நிமிடங்க ளுக்குள்ளாகவே அந்த கொதிப்பு அடங்கி கதிர் மீண்டும் தரையில் சாய, கதிரின் லுங்கியால் அவன் குறியைத் துடைத்துவிட்ட முருகன் வாயை சுத்தம் செய்து கொண்டு வந்து அவனருகில் அமர்ந்தான். முதல் முறையாக அந்த அதிகாலையின் வெளிச் சத்தில் அவனிடம் பெண் தன்மையைக் கண்டு கொண்ட கதிருக்கு அந்நியமானவனாய்த் தெரியத் துவங்கினான். அங்கு உறங்குவதை மனம் ஏற்க வில்லை. எழுந்து உடையை சரிசெய்து கொண்டு கிளம்பிய கதிரை, கலங்கிய கண்களோடு முரு கன் அணைத்துக் கொண்டான். மகத்தான தொரு தருணத்திற்கு காத்திருந்தவன் போல் கதி ரின் கழுத்திலும் முகத்திலும் தாபத்தோடு முத்த மிட்டான். பெரும்பசியில் காத்திருந்த மிருகமொன் றின் தவிப்போடு கதிரை தன்னோடு சேர்த்துக் கொண்ட முருகன் முதன் முதலாக தனக்குள்ளி ருந்த காதலை அடக்கிக் கொள்ளமுடியாமல் அவ னுடலில் வெளிப்படுத்தினான். எதிர்பாராத இந்த செய்கையில் தடுமாறிப்போன கதிருக்கு இவ்வ ளவு நாட்களும் முருகன் உடல்களைக் குறித்து

பேசியதும், ஏராளமான படங்களை சேர்ந்து பார்த்ததும் தன்னைக் கிளர்த்துவதற்குத்தான் என்பது புரிய சங்கடமாகிப் போனது.

“எனக்கு உன்னயத்தாண்டா புடிச்சிருக்கு கதிரு. நீ என் பக்கத்துல வர்றப்பல்லாம் என் உடம்புல ஒரு சூடு தானா கிளம்பும். நீ தொடறப்போ பேச றப்போ எல்லாம் இவன் எனக்கானவன்னு உம் மேல வெறித்தனமான அன்பு வரும். ராத்திரி நாம தூங்கறப்போ எவ்வளவோ தடவ விடிகாலை ல உன் உடம்புல பல இடங்கள் ல வலிக்காம முத்தம் குடுத்திருக்கேன். தயவு செஞ்சு உன் சாமான சப்பறதுக்கும் உன்னோட படுக்கறதுக்குமான பச்சையான உறவா நெனச்சிராதடா. அதெல்லாம் வேணும்தான். ஆனா உம்மேல இருக்கறது அதுக்கும் மேலான அன்பு.” குடித்திருந்த பியரின் எதுக்களிப்பில் முருகன் இத்தனை நாட்கள் சொல்லத் தவித்ததை எல்லாம் கொட்டித் தீர்த்தான். அவனிடமிருந்து தன்னுடலை பிரித்துக் கொள்ள முடியாமல் தவித்த கதிர்,

“லூசுக்கூதியாட்டம் உளறாத. பேசாம படு.” என வலுக்கட்டாயமாக அவனைத் தன்னிலிருந்து கதிர் விலக்கினான்.

“இல்லடா இதெல்லாம் சத்தியம். எனக்கு நீ தாண்டா வேணும். உன்னய என் பக்கத்துலயே வெச்சுக்கனும்னு தான் கடைய ஆரம்பிச்சேன். நம்புடா!” அந்த இரவில் கண்ணீர் வழிந்த முகத்தோடு முருகனைப் பார்க்க, இவனுக்குப் பாவ

மாய் இருந்தது. கையிலிருந்த பியரோடு படியிறங்கி சென்றுவிட்டான்.

நேசத்திற்குரியவர்களிடம் பாதுகாக்கும் ரகசியம் எத்தனை பாரமென்பதை முருகன் கதி ரிடம் பேசியபிறகுதான் உணர்ந்தான். அவன் தன்னை வெறுத்தாலும் அதன் பிறகு பேசாம லேயே போனாலும் கூட தன்னைப் புரிந்துகொள் ளக்கூடுமென ஆசுவாசமாய் இருந்தது. இன்னொ ருமுறை முருகனை எப்படி எதிர்கொள்வதென்கிற தயக்கமிருந்தாலும் தன்னை நம்பி கடையைத் தந் திருக்கிறான் என்பதால் அடுத்த நாள் எப்போதும் போல் கடை திறக்க வந்தான். தனலட்சுமியும் முரு கனும் அவனுக்கு முன்பாகவே எல்லாவற்றையும் எடுத்து வைத்திருந்தார்கள். வேலைக்கு சேர்ந்தி ருந்த புதிய பரோட்டா மாஸ்டருக்கு தனத்தின் மீது மையலிருப்பதை சில நாட்களாகவே கதிர் கவ னித்திருந்ததால் அவளை கடைக்கு வரவேண்டா மெனச் சொல்லி இருந்தான். இன்று அவளது பார் வையும் அவன் பக்கமாக செல்வதைப் பார்த்து எரிச்சலானது. முந்தைய தினம் முருகனிடம் காட்ட முடியாத கோவமும் இதுவும் ஒருசேர அவள் கைகளைப் பிடித்து இழுத்தவன் "நான் கூப்டாம கடைக்கு வரக்கூடாதுன்னு சொல்லி இருக்கன்ல, எதுக்குடி வந்த? குடிகாரனுகளும் கஞ்சக் குடிக் கிகளும் சாப்ட வர்ற கட, இங்க உனக்கென்ன வேல?" கேட்டபடியே யாரும் எதிர்பாராதவிதமாய் ஓங்கி அறைந்தான். பரோட்டா மாஸ்டர் அது தனக்

கான அறை எனப் புரிந்து கொள்ள, இன்னொரு புறம் முருகன் தன் மீதான கோவம் என்று யோசித் தான். ஏன் எதற்கென்று எதுவும் புரியாமல் தனலட் சுமி அழுதபடி வீட்டிற்குக் கிளம்பினாள்.

முருகனை முன்புபோல் இயல்பாக அணுக முடியாமல் அடுத்தடுத்த நாட்கள் கடையை எடுத் துவைத்துவிட்டு கதிர் வீட்டிற்குப் போகத் துவங் கினான். தன்னை அவன் ஒதுக்குகிறான் என் பதில் முருகனுக்கு வருத்தமென்றால் பேசாம லேயே போய்விடுவானோ என பயம் வேறு. இத் தனை காலத்தில் வேறு எந்த ஆணின் மீதும் இத்தனை கிளர்ச்சி அவனுக்கு வந்ததில்லை. யாரோடும் காலம் முழுக்க கூடிக் களிக்க மனம் விரும்பியதில்லை. கதிர் என்ன வசியம் செய் தானென்பது புரியாமல் எப்போதும் அவனைக் குறித்தே நினைத்துக் கொண்டிருந்தான். தனலட் சுமிக்கு இவர்கள் இருவரும் இப்படி இருப்பது வினோதமாயிருக்க முதலில் முருகனிடம் "எதுக்கு கதிரண்ணே ராத்திரி இங்க படுக்காம வீட்டுக்குப் போகுது. நீ எதும் சொன்னியா?" என கோவமாய்க் கேட்டாள்.

"நான் ஒன்னும் சொல்லலடி, அவனுக்கு யார்மேல கோவமோ வெடச்சிட்டுத் திரியிறான்." என அடக் கியிருந்த தாபத்தை விழுங்கிக்கொண்டு சொன் னான். கடையைத் திறக்க சாவி வாங்க வந்தபோது கதிரையும் அவள் விடவில்லை.

“ஏய், உனக்கென்ன கிறுக்கா, என்னய அறஞ் சதுக்கு நாந்தான் கோவப்படனும். நீ எதுக்கு மொறச்சுக்கிட்டு இருக்க. வீட்லயும் படுக்கற தில்ல. எங்கிட்டயும் ஒழுங்கா பேசறதில்ல. என் னாச்சு உனக்கு?” என அக்கறையாக கோவப்பட் டாள். தொடுவதற்கு முன்பு வரையிலுமான அன்பு தொடுதலுக்குப் பிறகு வேறொன்றாகத்தான் மாறி விடும் போல். எந்த உறவாயிருந்தாலும் எதன் கார ணமாய்த் தொட்டாலும். அவளது இந்தப் புதிய நெருக்கம் கூடுதலான சகோதரப் பாசத்தை அவ னுக்கு உணர்த்தியது. “கோவம்லாம் ஒன்னுமில் லடி. கொஞ்சம் வீட்டு பிரச்சன. சரியாகட்டும் அப் பறம் சொல்றேன்.” என்றபடி கடைக்குப் போய்விட் டான்.

கதிரை இயல்பிற்குக் கொண்டு வர தன் னால் உடன்படவே முடியாத ஒன்றைச் செய்வது தான் ஒரே வழி என்பது புரிந்து முருகன் தனத்திடம் கல்யாணத்திற்கு சம்மதம் சொன்னான். அவளுக்கு நம்பமுடியாத ஆச்சர்யம்.

”நெசமாத்தான் சொல்றியாண்ணே?” எனத் திரும் பத் திரும்பக் கேட்டாள். வலிய வரவழைத்துக் கொண்ட வெட்கத்தோடு முருகன் அங்கிருந்து நகர்ந்துவிட்டான். தனம் கதிரிடமும் மற்றவர்களி டமும் சொல்லிவிட்டு ஏற்கனவே பார்த்து வைத்த பெண்களில் இவனுக்கானவனை தேர்வு செய்யும் வேலைகளில் இறங்கிவிட்டாள். இனி தன்னை தொந்தரவு செய்யமாட்டான் என்னும் நிம்மதியில்

கதிர் முன்பைப் போல் அந்த வீட்டிற்குள் உரிமை யோடு சுற்றிவரத் துவங்கினான்.

2

தன் வாழ்வின் புதிய சந்தோசங்கள் குறித்த கனவுகளுடன் முருகனைத் திருமணம் செய்து கொள்ள இணங்கிய சக்திக்குத் தெரியாது வாழ் வின் இரண்டாவது பகுதி நிஜமென அவள் நம்பி தேர்ந்தெடுத்திருப்பது சற்றே அலங்கரித்த பொய் யென. கனிவும், நிதானமும் நிரம்பிய அவன் கண் களில் தனக்கான இழைப்பாறுதலை நேசத்தை நிறையவே கண்டுகொண்டாள். அவனிடம் எந்த தயக்கமும் இல்லாமல் அவளுக்கு வந்தது. திரும ணத்திற்கு முன்பாக பார்த்துப் பேச முடிந்தபோது கூட கண்ணியமாக நடந்து கொண்டான். இரண்டு கண்களையும் இணைக்கும் அடர்த்தியான புரு வம், எப்போதும் தன்னை நோக்கி வசீகரித்து இழுக்கும் கண்கள். சக்தி எப்போதும் அவன் நினைவாகவே இருந்தாள். அவனுக்கான சொற் களைத் தேவைக்கதிகமாக சேர்த்து வைத்தாள். திருமணம் அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் வேகமாக நெருங்கி வந்தது. கதிரும், முருகனின் அப்பாவுமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்தார் கள். திருமணம் குறித்து கதிர் தன்னிடம் ஏதாவது பேசக்கூடுமென முருகன் ரொம்பவே எதிர்பார்த்து ஏமாந்தான். யாருக்கோ திருமணம் என்பது போல் எந்த அக்கறைகளும் இல்லாமல் தினமும் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தவனை தனம் தான் வற்புறுத்தி விடுமுறை எடுக்க வைத்தாள். "ஏண்ணே உனக்கு அவங்கள பிடிக்கலையா?

ஃபோன்ல பேசறதில்ல. போய்ப் பாக்கனும்னு கூட நெனைக்க மாட்ற?" தனம் சந்தேகத்தோடு கேட்க, முருகன் சிரித்தான். "லூசு, ஒரு பொண்ணப் பத்தி என்னெல்லாம் தோணுதோ அத நான் இன்னொரு ஆம்பள கிட்ட தாண்டி சொல்ல முடியும். இன்னொரு பொண்ணுகிட்ட சொல்லக் கூடாது. முக்கியமா தங்கச்சி கிட்ட சொல்லக் கூடாது." அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது புரிந்தும் புரியாமலும் இருந்தது அவளுக்கு.

திருமணத்தின் போதுதான் முருகன் சக்தியை தெளிவாகப் பார்த்தான். அலங்கரித்த அம்மன் சிலை போலிருந்தாள். நாணத்தில் குழைந்த முகம். பெண்மையின் அதீத விளைச்சலில் செழித்த உடல். கண்களுக்குள் எப்போதும் அலைபாயும் கருவிழிகள். ரகசியமாக தன்னை அவ்வப்போது பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்து யாரும் பார்க்காதபடி அவள் தொடையில் கிள்ளினான். அவளும் யாரும் பார்க்காதபடி மென்மையாய் சிரித்துக் கொண்டாள். கதிர் தனக்கே கல்யாணம் என்பது போல் முன்னின்று எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தான். முருகனை எல்லோருக்கும் பிடித்திருந்தது. அவன் தனது வாழ்வை சரியாக அமைத்துக் கொண்ட சாதாரண மனிதன், ஆனால் யாருக்கும் எந்தவிதத்திலும் தொந்தரவாக இருந்திடாதவன். சாதாரண மனிதர்களாக இருப்பதுதான் இந்த உலகில் ஆக சிரமமான காரியமாய் இருக்கிறது. மனிதன் விருப்பங்களுக்காக அவற்றைத் தொடர்ந்து ஓடும் பொழுதுகளில் எல்லா சுயநலங்களையும் கற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவ

தால் சாதாரணமானவனாக இருப்பது பிரயத்தனம் தான். கொண்டாட்டமாக முடிந்த அந்த திருமணம் எல்லோரையும் விட கதிரைத்தான் கூடுதலாய் சந் தோசப்படுத்தியது.

தன் நடவடிக்கைகளில் ஒதுக்கமா னவனாகவும், தேர்வுகளில் நளினமானவனாகவும் இருந்த முருகனோடு நெருங்கி இருந்த பொழு துகளில் சக்தி மனப்பூர்வமாய் நேசித்தாள். அவ ளுக்கென தேர்வு செய்யும் எல்லாவற்றிலும் அசாத் தியமான நேர்த்தியும் ஒழுங்கும் கொண்டிருப்பான். தேவதையின் அம்சங்களுடன் கூடிய அந்த மனி தனுக்கு ஆக ப்ரியமான தேவதையாய் தன்னை மாற்றிக் கொள்ள அவள் ஒப்புக் கொடுத்தாள். அவளுக்கான அன்பில் தேவைகளில் அவன் எந் தக் குறையும் வைத்திருக்கவில்லை. முருகன் மீண்டும் வேலைக்குப் போகத் துவங்கினபின் கடைக்குத் தேவையான சிறு சிறு உதவிகளை சக்தி செய்து தரத் துவங்கினாள். வீட்டில் பெரும் பாலும் அவளுக்கும் சேர்த்து முருகனே சமைப்ப தால் கடைக்குத் தேவையானவற்றை சமைப்பதை விரும்பி செய்தாள். சட்னியும், சாம்பாரும் ஒரு பெண்ணின் கைப்பக்குவத்தில் புதிய சுவை கூடி யபோது கதிருக்கும் சந்தோசம். எப்போதும் முகத் திலிருக்கும் புன்னகை சக்திக்கு. அவளைப் பார்க் கும் எவருக்கும் இயல்பாக அன்பு பூக்கும். முருக னுக்கு சரியானவளென கதிர் சந்தோசப்பட்டான்.

ஆயுத பூஜைக்காக கடையை சுத்தம் செய்ய இரண்டு நாட்கள் விடுமுறை விட்டிருந் தார்கள். சரியான உறக்கமும், உணவும் முரு கனை முன்னைவிடவும் கொஞ்சம் எடை கூட்

டியிருந்தது. முகத்தில் கன்னக் கதுப்புகளில் ஒரு மலர்ச்சி. கடையை சுத்தம் செய்துவிட்டு நீண்ட நாட்களுக்குப்பின் இருவரும் சேர்ந்து மதுவருந்தச் சென்றார்கள். பாண்டியன் நகரின் புதிய குடியிருப்புகள் அடுத்தடுத்த ஊர்களை நெருங்கிச் சென்று கொண்டிருந்ததால் மாலை நேரங்களில் மதுவருந்துகிறவர்களுக்கான திறந்த வெளி மதுக்கூடமாய் அந்தப் பகுதி மாறிப்போயிருந்தது. பெரும்பாலும் வேஷ்டி அணியப்பழகிவிட்ட முருகனிடம் எல்லாவற்றிலும் ஒரு பெரிய மனிதத்தனம் தெரிந்தது. இதற்கு முன் தன்னை மோகித்த எந்த அடையாளத்தையும் காட்டிக் கொள்ளாமல் எப்படி இவனால் இருக்க முடிகிறது? எத்தனையோ பெண்களின் நிர்வாணங்களைக் குறித்தும் உடலுறவைக் குறித்தும் வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்த முருகன் இயல்பாக கடையைக் குறித்து மட்டும் கதிரோடு பேசினான். இருட்டுவதற்கும் முன்பாகவே நிறையபேர் அந்த பகுதியில் குடித்துக் கொண்டிருந்ததால் அன்றைய தினம் எங்கும் மனிதத் தலைகள். “நல்ல க்ரவுண்டா இருந்த இடம்டா மாப்ள. பாராவே மாத்திடானுக இப்ப.” முருகன் முதல் சுற்றி விஸ்கியை குடித்தபடி கதிரிடம் சொல்ல, “நீ இந்த க்ரவுண்ட் ல விளையாடினத பாத்ததே இல்லயேடா.” கதிர் ஆச்சர்யமாக சிரித்தான்.

“முதல்ல இங்கதாண்டா ஆரம்பிச்சோம். ஆனா நம்ம ஏரியாப் பசங்க நிறைய பேர் கிரிக்கெட் விளையாட வந்ததால ஸ்கூல் க்ரவுண்ட் ல இருந்த ஃபுட் பால் டீமோட சேந்து விளையாட ஆரம்பிச்சுட்டோம்.”

“நீ ஃபுட் பால் ப்ளேயரா?” தொண்டையிலிருந்த விஸ்கியை அவசரமாக் விழுங்கியபடி கதிர் அவனி டம் கேட்டான்.

“ஏண்டா தெரியாதா? டவுன் டீமுக்கு நிறைய மேட்ச் ஆடியிருக்கேன்.” முருகனிடம் பேசுவதற்கு எத்த னையோ விஷயங்கள் குறித்தும் தவறவிட்டுவிட் டோமென கதிருக்கு வருத்தமாய் இருந்தது.

“எனக்கு இப்ப நீ சொல்லித்தாண்ட தெரியுது.” முரு கன் சிரித்தபடியே இருவருக்கும் அடுத்து சுற்று சரக்கை ஊற்றினான்.

“உன்னய நான் மொத மொதல்ல பாத்ததே ஸ்போர்ட்ஸ் மீட்ல தாண்டா. காந்தி நிகேதன் ஸ்கூல்ல ஸோனல் நடந்துச்சு நியாபகம் இருக்கா?”

கதிர் யோசித்து உடனே ஆமென்றான்.

“நீ ஜூனியர்ஸ் ல ஓடின 100 ஸ் இன்னும் எனக்கு நினைவுல இருக்கு. யார்றா இவன் நம்மூர்ல இப்பிடி ஒருத்தனான்னு ஆச்சர்யமாப் பாத்தப்போ தான் நீ நம்ம ஏரியான்னு தெரிஞ்சுக்கிட்டேன். ஆனா அப் பல்லாம் பேச முடியல.”

கதிர் சந்தோசமான நினைவுகளுக்குள் நுழைந்து திக்குமுக்காடினான். ஆம், எத்தனை அற்புதங் களை இந்த வாழ்க்கை தன்னிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டது. பொருளாதாரத் தேவைகளின் பொருட்டு தியாகம் செய்யப்பட்ட விருப்பங்களை எல்லாம் ஒரு மனிதன் எந்தக் காலத்தில் மீட்டுக் கொள்ளமுடியும்?

“நீ நல்ல ஸ்போர்ட்ஸ்மேனா வருவேன்னு நெனச் சேன். ப்ச். நான் ஸ்போர்ட்ஸ் கோட்டாவுலதாண்டா

கேட்டரிங் முடிச்சேன். நீ இன்னும் கொஞ்சம் பல்லக் கடிச்சிட்டு சமாளிச்சிருந்தா நீயும் சரியா வந்திருக்கலாம்." கதிர் தவற விட்ட தருணங்களை மீட்டெடுத்துக் கொடுத்த முருகனின் சொற்களில் அவன் மீதான அலாதியான அன்பிருந்தது. அங்கிருந்த எல்லோரும் அந்த நிமிடம் மறந்து போய் அந்த மைதானம் பழைய மைதானமாய்த் தோன்ற, வெறிகொண்டு ஓட வேண்டுமென கதிரின் கால்கள் பரபரத்தன. எத்தனையோ நாட்களில் ஆளற்ற மைதானங்களில் தனியாக பயிற்சி எடுத்திருகிறான். மொத்த மைதானமும் தனக்கே சொந்தம் என்பதைப் போல் பெருமிதமிருக்கும். இப்பொழுது மைதானத்தை வேடிக்கை பார்க்கக் கூட தனக்குப் பொறுமையில்லை என்கிற நிலை அவனைக் கூசச் செய்தது.

"விட்றா, இனி எதும் திரும்பக் கெடைக்காது. எல்லா ஆசையும் இருந்துச்சு. ஆனா நல்ல குடும்பத்துல பொறக்கலையே. எங்க கிருஷ்ணன் ஸார் கடைசியா படிப்ப நான் நிறுத்தப் போறேன்னு தெரிஞ்சு சொன்ன வார்த்த எனக்கு இன்னும் நியாபகம் இருகுடா. 'இமைத்த பொழுதும் இனிய கனவும் இனி வாரா.' அது எனக்காகவே சொன்ன மாதிரி இருக்கும். படிச்சு வாழ்க்கை ல முன்னுக்கு வர்ற அதிர்ஸ்டத்த கடவுள் எனக்குக் கொடுக்கலைன்னு நெனச்சுக்கறேன்." கதிர் ஒரு போதும் இல்லாதவனாய் நிறைய குடிக்கும் தவிப்பிலிருந்தான். இந்த சின்னஞ்சிறிய வாழ்க்கை ஏன் இத்தனை பெரிய சுழலாய் அவனை இழுத்துக் கொண்டே செல்கிறது. சரியான பால்யம் அமையாமல், வளர் பருவமும் அமையாமல் எதற்

கிந்த துயர்மிக்க வாழ்க்கை. அப்பா விட்டுப்போன கடன்களுக்காக உழைக்கத் துவங்கி, பணத்தின் தேவைக்கு எப்போதும் பழக்கப்பட்டு இப்பொழுது முழுக்க அதைத் தேடியே ஓடும் இந்த சலிப்பான வாழ்க்கை. வாழ்வின் முற்பகுதியை எதுவுமே இல்லாமல் கழிக்கிறவனுக்கு ஒருநாளும் தனது தேவை இதுதான் என்கிற தெளிவு இருக்காது போல. கதிர் தனது தேவைகள் தெரியாத குழப்பத்தில் இருந்தான். கடன்களை எல்லாம் அடைத்தாகிவிட்டது. இறந்த கடந்தகாலத்தின் சந்தோசம்? ஆன்மாவின் ஆழத்தில் தன்னைச் சூழ வாழும் எல்லோரின் மீதான வெறுப்போடும் கர்ஜித்தான். அந்த கர்ஜனை மேலெழும்பால் பார்த்துக் கொள்ள வேண்டிதான் இத்தனை காலமும் சின்னத்தனங்களின் வழியாய் தன்னைத் தானே தண்டித்துக் கொண்டிருக்கிறான். தனக்குத் தானே இரக்கமின்றி துரோகமிழைக்கும் குரூர மனிதன் அவன்.

“என்னடா பேசக்கூடாத எதையும் பேசிட்டனா? ஏன் ஒருமாதிரி ஆகிட்ட?” முருகன் கண்ணீரின் வழியாய் உறங்கிக் கிடக்கும் அவன் மனதையும் அவனையும் எழுப்ப தீவிரமாய் முயன்றான். அவன் விழித்து தன்னைத் தானே பார்த்துக் கொள்ள வேண்டும்.

“இல்லடா அப்பிடி லாம் இல்ல. என்னோட இயலாம. ஒவ்வொரு தடவையும் யாரோ ஒருத்தரால கைவிடறப்போ எல்லாம் ஏன் எனக்கு எதுவும் நிரந்தரமா இருக்கறதில்லைன்னு வலிக்கும். அதனாலேயே எது மேலயும் ஆசப்படாம இருக்க பழகினேன். ஆனா அப்பிடி இருந்து இருந்து இப்ப எல்

லார் மேலயும் வெறுப்பு மட்டுந்தான் வருது. என் னத் தவிர யாருக்கும் எதுவும் கெடைக்கக் கூடா துன்னு யோசிக்கிறேன். பயமா இருக்குடா." கண் ணீருக்கும் அழுகைக்கும் நடுவிலிருந்த அவன் குரலில் ஆறுதல் தேடும் தவிப்பு. முருகன் அவன் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான். கதிருக்கு முதல் முறையாக அவன் மீது அலாதியான அன்பு பிறந்தது. இருவரும் நீண்ட நேரம் மௌனமாகவே இருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்து காலியா கியபோது அங்கிருந்து கூட்டமும் முக்கால்வாசிக் கும் மேல் குறைந்து போயிருந்தது. இரண்டொரு முறை சக்தி முருகனுக்கு ஃபோன் பண்ணியிருந் தாள். அவர்களுக்கு அங்கிருந்து கிளம்பவே மன மில்லை. இந்த இரவு ஏன் கடந்த காலத்தை இத் தனை தீவிரமாய் நினைவுபடுத்த வேண்டும். ஆறா வடுக்களை கிளறி என்ன கிடைக்கப் போகிறது? நான்காவது முறை சக்தி ஃபோன் செய்தபோது முருகன் சலிப்போடு அந்த அழைப்பைத் துண்டித் தான். கதிருக்கு முருகன் நிஜமாகவே அவளோடு சந்தோசமாகத்தான் இருக்கிறானா என முதல் முறையாக சந்தேகம் வந்தது. நடவடிக்கைகளைக் கொண்டு எந்த மதிப்பீடுகளையும் உருவாக்கிக் கொள்ளமுடியவில்லை.

"முருகா."

"சொல்றா?"

"நெசமாவே நீ அந்தப் புள்ளைய நல்லா வெச்சுக்க றியா?"

முருகன் திரும்பி இவனை முறைத்தான். "நேராவே கேக்க வேண்டிதானடா, அவகூட படுக்கறியா

தனியா படுக்கறியான்னு?" அவன் குரலில் வெளிக் காட்டிக் கொள்ள முடியாத கோவமிருந்ததைப் புரிந்து கொண்டு கதிர் அமைதியானேன்.

"எனக்கு அவகூட படுக்கறதில்ல எந்த பிரச்சனை யும் இல்லடா. ஆனா எல்லாம் முடிஞ்ச பிறகு வேற எதுவோ ஒன்னு தேவைன்னு எப்பவும் மனசு அலையுது. அவ உடம்பு மேல இயங்கறப்போ எல் லாம் நீ எப்ப இந்த மாதிரில்லாம் என்னய செய் வன்னு மனசு யோசிக்கிதுடா. பேசாம தூரமா எங்கி யாச்சும் போயிரலாமான்னு இருக்கேன்." முருகன் கண் கலங்கினான்.

"என்னடா மறுபடியும் பைத்தியக்காரன் மாதிரி பேசற. அந்தப் புள்ளகூட சந்தோசமா இருக்க. அவ உன்ன சந்தோசமா வெச்சுக்கறா. வேற என்ன மயிரு வேணும் உனக்கு? நெஜமாவே என்னால உன்னய புரிஞ்சுக்க முடியல."

"நான் அவளோட படுக்கறப்போ சந்தோசப்படறது எவ்வளவு நெஜமோ அதேயளவு நெஜம் உனக்காக ஏங்கறது. அந்த ரெண்டும் சேந்ததுதாண்டா நான். நீயா புரிஞ்சுக்குவன்னு இனி எதிர்பாத்து என்னடா ஆகப் போகுது. விடு. வா போகலாம். "

டூ வீலரின் பெட்ரோல் டாங்கில் இருந்த பிளாஸ் டிக் தம்ளர்கள், காலியான மதுபோத்தல் எல்லா வற்றையும் ஒரு பாலித்தீன் பையில் சுற்றி தூரமாய் எரிந்துவிட்டு முருகன் வண்டியை ஸ்டார்ட் செய் தான். அவனுக்கு என்ன பதில் சொல்வதெனத் தெரியாமல் கதிர் எங்கோ பார்த்தபடி நின்றான். அவனோடு கூடுவதை நினைக்கும் போதே இனம் புரியாத கூச்சம் உடலில் அலைமோதியது. இரண்டு

பாறைகள் மோதிக் கொண்டு உருளும் வினோதக் காட்சியெல்லாம் நினைவுக்கு வர, அவனுடலின் எந்த மையத்தில் பெண்மைக்கான குழைவிருக்கு மென யோசித்தான்.

"என்னடா உனக்கு? நான் உன்னய செஞ்சா உனக்கு எல்லாம் சரியாகிடுமா?" இவனைத் திரும் பிப் பார்க்காமலேயே கதிர் கேட்க, தன்னைப் புரிந்து கொள்கிற பக்குவம் அவனுக்கு ஒருபோதும் வரப்போவதில்லையென்கிற வெறுப்பில் முருகன்

"புண்டமவனே, எனக்கு ஓலுதான் வேணும்னா ஊர்ல ஆம்பளையாடா இல்ல. உனக்கு என்ன சொன்னாலும் புரியாதுடா. வந்து உக்காரு." கதி ருக்கு சப்பென்று ஆகிவிட அமைதியாக அவனுக் குப் பின்னால் அமர்ந்து கொண்டான்.

இருவருக்கும் நடுவில் குளிர்காற்று நிரம்பியபோது திறந்திருந்த சட்டையின் வழியாக ஊடுருவி முரு கனுக்கு மார்பு சிலிர்த்தது. இப்படியான அருகா மையில் கதிர் தன்னோடு இருக்கிறான் என்கிற உணர்ச்சி இனம் புரியாத பூரிப்பைத் தர கண் மூடி சில நொடிகள் அனுபவித்தான். போதையில் கண்கள் சொருக கதிர் அவன் தோளில் சாய்ந்து கொண்டான். வீடு இத்தனை சீக்கிரமாய் நெருங்கி வரும் தொலைவில் இருந்திருக்கக் கூடாதென முருகன் வருத்தப்பட்டான். திருமணத்திற்குப் பிறகு முருகனின் அப்பாவும் தனமும் அடுத்த தெருவிலி ருந்த இன்னொரு வீட்டிற்கு குடிபோய் விட்டிருந் தனர். அவர்களுக்கான சுதந்திரம் இருக்கவேண் டுமென தனம் தான் விடாப்பிடியாய் அப்பாவிடம் சண்டை போட்டு புதுவீட்டிற்கு குடிபோனார்கள்.

முருகனுக்கு அதில் கொஞ்சமும் உடன்பாடில் லையென்றாலும் சக்தியைப் புரிந்து கொள்ள இந்த தனிமை அவசியமானதென நம்பினான்.

வீட்டிற்குப் போகிறேனென தூங்கி வழிந்த முகத்தோடு நின்ற கதிரை சக்திதான் விடாப்பி டியாய் பிடித்து சாப்பிட நிறுத்தினாள். "ஏண்ணே இப்பிடி குடிச்சிட்டு வெறும் வயித்தோட போயி படுப்பியா? வந்து ரெண்டு வாயி சாப்பிட்டுப் போ." கையோடு இழுத்துக் கொண்டு போய் இருவ ருக்குமாக உணவைப் பரிமாறத் துவங்கினாள். அந்த வீடு அவள் வந்தபிறகு நளினமும் எழி லும் கூடிப்போயிருந்தது. அவளது ஒளியை வீட் டிலிருந்த ஒவ்வொரு சுவரும் பிரதிபலித்தது. கதி ருக்கு இருவரையும் ஒருசேரப் பார்த்து சந்தோ சத்தில் சிரிப்பு வந்தது. சிரித்தபடியே சாப்பிட்டான். அவள் சமைத்த ஒவ்வொரு பதார்த்தையும் நிதா னமாக அள்ளி ருசித்து சாப்பிட்டவனை சக்தி சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தை யொன்று ஆர்வமாக சாப்பிடுவதைப் போலிருந் தது. கை நிறைய மூன்று நான்கு முறை ரசம் வாங்கிக் குடித்தவனை தோளில் தட்டிய முருகன் "டேய் போதும்டா ஏற்கனவே குடிச்சிருக்க. ரசம் ஒத்துக்காம போயிரும்." என கையைப் பிடித்து நிறுத்தினான். "சரிங்க ஸார்." என தலையைத் தொங்கப் போட்டுக் கொண்ட கதிர் அருகில் வைத்திருந்த மெது வடைகளை எடுத்து மொத்த மாக ரசம் வைத்திருந்த பாத்திரத்திற்குள் போட்டு ஒவ்வொன்றாக எடுத்து சாப்பிட்டான். சக்தி சத்த மாக சிரித்துவிட்டாள். கதிர் நிதானமாக வடையை சாப்பிட்டபடி "உன் வூட்டுக்காரன் தான் ரசம் குடிக்

கக் கூடாதுன்னான். ரசவட திங்கலாம்ல." என அவளைப் பார்த்து சிரித்தான். முருகனுக்கும் அவனைப் பார்க்க சிரிப்பு வந்தது. மனம் இலகுவாகி மிதந்து கொண்டிருந்த கதிரை அப்படியே தன்னோடு வைத்துக் கொள்ள வேண்டுமென தோன்றும் இந்த துடிப்பை காதலென்று சொல்லலாமா? இதுதான் காதலா? முருகன் உணவை மறந்ந்து அவனையே நினைத்துக் கொண்டிருந்தான். வீட்டில் மூன்று பேருமாக சேர்ந்து முதல் முறையாக உணவருந்திய அந்த தருணம் சக்திக்கு அற்புதமாகத் தோன்றியது.

யாரும் பொருட்படுத்தாமல் தனியாக பாடிக் கொண்டிருந்த தொலைக்காட்சியில் இன்னிசை இரவு கழிந்து கொண்டிருக்க, முருகனின் அனுமதி எதிர்பாராமல் சக்தி கதிருக்கான படுக்கையை தயார் செய்திருந்தாள். "கதிர் அண்ணே இங்கியே தூங்கட்டும். இதுக்கு மேல வீட்டுக்கு போகச் சொல்லாத" அவ்வளவு நேரமும் தன்னைச் சுற்றியிருந்த சேலையிலிருந்து விடுபட்டு நைட்டிக்கு மாறியிருந்தாள். தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருந்த சின்னக்குயில் பாடும் பாட்டு கேக்குதா பாடலை பின் தொடர்ந்து கதிர் ஆர்வமாகப் பாடிக் கொண்டிருந்தான். சக்திக்கு அவனைப் பார்க்க ஆச்சர்யமாகவே இருந்தது, மற்ற நேரங்களில் எல்லாம் கண்களைக் கூட பார்த்துப் பேசக் கூச்சப்படும் ஆள். சேர்ந்த மாதிரி இவளிடம் நாலு வார்த்தைகள் கூட பேசாமல் ஓடிவிடுவான். இன்று செய்கிற சேட்டைகளை எல்லாம் கவனித்தவள் எது அவன் நிஜமென புரியாமல் பார்த்தாள். "இதப் பாரேன், சின்னப் பிள்ளைக மாதிரி மண்ட மண்டய

ஆட்டி பாடிக்கிட்டு இருக்கறத?" என முருகனின் அணைப்பிற்குள் தன்னைப் புகுத்திக் கொண்ட படி சிரித்தாள். "அவன ஒருக்கா கிருபான்னு கூப் டேன்." முருகன் அவளைத் தூண்டினான்.

"ஏன் ? கிருபா யாரு?"

"நீ கூப்டு சொல்றேன்."

ஆர்வம் மின்னும் கண்களோடு சக்தி "கிருபா" என கொஞ்சம் சத்தமாகவே கூப்பிட்டாள். லயித்துப் போய் பாடலைத் தொடர்ந்திருந்த கதிர் திரும்பி இருவரையும் பார்த்தான். அவனை முறைத்தான். "ஏய் குட்டச்சி அப்டி கூப்டாதடி." பொய்யான கோபத்தோடு சொன்ன போது அவன் தன்னி டம் எடுத்துக்கொண்ட அந்த உரிமை அவளுக்கு பிடித்திருந்தது. "ஆமா இவரு பெரிய பன மரம். மூஞ்சியப் பாரு. யாரு கிருபா உன் ஆளா?" விடா மல் அவனைச் சீண்டினாள். முருகன் சிரித்தபடி "ஆளா? அவன் பேருதான் கிருபா. ஆனா யாரும் கூப்ட்டா பிடிக்காது."

"ஏன் பிடிக்காது? நான் அப்டித்தான் கூப்டுவேன். கிருபா கிருபா கிருபா..."

அவள் சின்னக் குழந்தைகளைப் போல் விடாமல் கத்தியபடியே இருக்க, கதிர் தன் கையிலிருந்த ரிமோட்டை அவளை நோக்கி எறிந்தான். அவள் பதிலுக்கு தன் மார்பையும் வயிற்றையும் மறைத்து வைத்திருந்த தலையனையை அவன் மீது எறிந் தாள். அவர்கள் வயதிற்கு பொறுத்தமில்லாத பால்ய விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த முருகனுக்கு தான் நேசிக்கும் இந்த இருவ ரோடும் ஒரே நேரத்தில் கூடும் ஆசை முன்னெப்

போதையும் விட தீவிரமாய் தலைதூக்கியது. அவள் தன்னை என்ன நினைத்துக் கொள்வாள்? அவன் சம்மதிப்பானா? என சந்தேகங்கள் எதையும் அல சிப்பார்க்கும் பொறுமையில்லாத தாபம். அவனும் அவர்களோடு சேர்ந்து விளையாடினான்.

நள்ளிரவிற்கு மேல் சக்தி எழுந்து உறங்கச் செல்ல முருகனும் கதிரும் ஆளுக் கொரு தலையனையை முதுகில் சாய்த்து வைத் துக் கொண்டு செஸ் விளையாடிக்கொண்டிருந் தார்கள். கதிர் இருக்கிறானென்கிற கூச்சமெல் லாம் இல்லாமலேயே சக்தி முருகனின் தோளில் ஆழமாக முத்தமிட்டுவிட்டுப் போனாள். "சீக்கிரம் படுத்து தூங்குங்க பன்னிங்களா? நைட்டுல முழிச்சு முழிச்சு ஆந்தையாவே ஆகப் போறீங்க ரெண்டு பேரும்." போகிற போக்கில் ஒரு காலால் கதிரை வலிக்காமல் எட்டி உதைத்தாள். அவன் அவன் பின்புறங்களில் பதிலுக்கு அடித்துவிட்டு "நீ நைட் டுல தூங்காமயே ஆந்த மாதிரிதான் இருக்க போ." என்று சொல்லிவிட்டு மீண்டும் விளையாட்டின் பக் கமாய்த் திரும்பினான். இன்னும் கொஞ்சம் குடிக் கலாம் போலிருந்தது கதிருக்கு. சந்தோசம் தந்த நிறைவு. ஒரே நாளில் கலவையான உணர்வுகள். குடும்பத்திற்கு வெளியே அன்பான மனிதர்கள்.

இப்படி ஒன்று கிடைப்பதற்காகத்தானே அவன் ஏங்குவதும். இப்படியான ஒரு துணையை, இப் படியான ஒரு வாழ்வை. அவன் தன்னிலிருந்தே துண்டித்துக் கொள்ள முடியாத குழப்பத்தில் இன் னும் எத்தனை காலத்தை கழிப்பது? விளை யாட்டில் மனம் லயிக்காமல் வெறுமனே படுத்துக் கொண்டான். அவனுக்கு அருகில் முருகனும்

படுத்துக் கொள்ள தன்னை ஒரேயொரு முறை காதலோடு தீண்டமாட்டானா என முருகனின் உடலும் மனமும் ஆயிரம் கண்களால் அவனை விழுங்கிக் கொண்டிருந்தது. கதிர் விளையாட்டாக தன் காலை முருகனின் மீது தூக்கிப் போட, அவன் கால் கட்டை விரலில் முருகன் முத்தமிட்டான். கதிர் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அந்த விரலை மெதுவாக சுவைக்கத் துவங்கினான். இந்தமுறை அவனை மறுக்கவோ ஒதுக்கவோ இல்லாமல் கதிர் அமைதியாக கவனித்தான். முருகனின் கண்களுக்குள்ளும் உடல் அசைவுகளிலும் இந்த முறை சக்தியின் பிரதிபலிப்பைப் பார்க்க முடிந்தது. சற்று முன்னர் வரையிலும் திருட்டுத்தனமாக எத்தனை மோகித்தோமென்பதை இவன் அறிந்திருக்கக் கூடுமா? அவன் சிந்தனையை மீறி தன் நாவின் சூட்டால் முருகன் தீவிரமாய்த் தூண்டினான். அவனை இழுத்து தன்னோடு அணைத்துக் கொண்ட கதிர் அவன் இதழ்களில் ஆழமாய் முத்தமிடத் துவங்கியபோது முருகனுக்கு சந்தோசத்தில் கண் கலங்கியது. இந்த நிமிடத்திற்காகத் தானே இத்தனைவருட காத்திருப்பு. தன்னை முழுமையாக அவனிடம் குழையக் கொடுத்தவனை சங்கடமே இல்லாமல் கதிர் எடுத்துக் கொண்டான். நூறு யானைகளின் மூர்க்கத்தில் தன் மீது இயங்கத் துவங்கிய கதிரிடமிருந்து சீராக வெளியேறும் மூச்சில் கிறங்கிப் போன முருகன் சன்னமான குரலில் “லவ் யூ டா.. லவ் யூ..” என புலம்பிக் கொண்டே இருந்தான். முதல் பார்வைக்கு எளிதில் அடையாளம் காண முடியாத தனக்குள்ளிருந்த பெண்மையை முருகன் கதிருக்கு இப்பொழுது முழுவ

துமாக காட்டியிருக்க அவன் உடலெங்கும் கதிர் தன் குறியை அலையவிட்டான். கழிவறை செல்ல வேண்டிக் கதவைத் திறந்த சக்தி இருவரின் கூடலையும் பார்த்து சகிக்க முடியாமல் மீண்டும் கதை சாத்திக் கொண்டாள். அவள் தங்களைக் கவனித்துவிட்டதைக் கூட தெரிந்து கொள்ளாமல் இருவரும் அந்த நீண்ட புணர்ச்சியில் லயித்துக் கரைந்திருந்தனர்.

3

வெறுப்பின் எந்த சுவடுகளையும் காட்டிக் கொள்ளாமலேயே சக்தி தன் தாய் வீட்டிற்கு கிளம் பிப்போயிருந்தாள். ஏமாற்றப்பட்ட அன்பின் ரணம். யாரோடும் எதும் பேசியிருக்கவில்லை. "என்னடி எதும் பிரச்சனையா? சொல்லாம கொள்ளாம வந் திருக்க? என அம்மா எவ்வளவு கேட்டும் பதில் சொல்லவில்லை. வெறுமனே அழுது கொண்டி ருந்தாள். அடுத்த நாள் அவள் இல்லாத வீட்டின் வெற்றிடமே நடந்திருப்பதை யூகித்துக் கொள்ள முருகனுக்கு போதுமானதாய் இருந்தது. தன் மீதான நம்பிக்கைகள் அவ்வளவும் நொறுங்கிய வேதனையிலிருக்கும் அவளுக்கு என்ன சமாதா னம் சொல்ல முடியும்? இத்தனை காலம் வேறு யாருக்கும் தெரியாமல் காத்து வந்த அந்த ரகசியம் இனி ரகசியமல்ல. அவளுக்குத் தெரியுமென்றால் இந்த நேரத்திற்கு அவளைச் சார்ந்த எல்லோருக் கும் தெரிந்திருக்க வேண்டும். எப்படி அவர்களை எதிர்கொள்ளுவது? என்ன சமாதானம் சொல் வது? தனிமையில் எப்போதுமில்லாத ஓர் அச்சம் அவனைச் சூழ, அப்பாவிடமோ தங்கையிடமோ சொல்லி சக்தியிடம் பேசச் சொல்லலாமா என யோசித்தான். யோசிக்கும் எல்லா சாத்தியங்களும் அபத்தமாகவே தோன்ற கதவுகளை திறந்துவைத் துவிட்டு படுத்திருந்தான். எப்போதும் போல் கடை திறக்க வந்த கதிர் நொறுங்கிய முருகனையும் சடா ரென பொலிவிழந்து போன வீட்டையும் கண்டு துணுக்குற்றான். "என்னடா ஆச்சு?" கதிரின் இந் தக் கேள்விக்கு பதில் சொல்வதா கதறி அழுவதா எனப் புரியாமல் இறுக அணைத்துக் கொண்டான்.

ஒரு மனிதன் தாங்கிக்கொள்ள முடியாத பிரிவு அது.

"சக்திக்கு தெரிஞ்சிருக்கும்னு நெனைக்கிறண்டா. காலைல யே அவங்க அம்மா வீட்டுக்குப் போயிட்டா. இப்போ வரைக்கும் ஒரு அம்பது அறுபது தடவ ஃபோன் பண்ணி இருப்பேன். எடுக்க மாட்டேங்கறா. எனக்குப் பயமா இருக்குடா." அவன் சொன்னதைக் கேட்டு கதிருக்கும் இப்பொழுது உடல் நடுங்கியது. பாதி இரவு வரை தங்களோடு குழந்தையைப் போல் விளையாடிக் கொண்டிருந்த அவள் இப்பொழுது என்ன நினைத்துக் கொண்டிருப்பாள். ஒரு இரவிற்குள் அவளது வாழ்வின் ஆக வெறுப்பிற்குரிய மனிதனாய் தான் மாறிப்போயிருக்கிறோம் என்பது புரிந்தது. "இத ஃபோன் ல பேசில்லாம் சரி பண்ண முடியாதுடா. நீ கெளம்பி நேர்ல போயி பாரு. பே." கதிர் அவனைத் தன்னிலிருந்து பிரித்துச் சொன்னான். "எனக்குத் தனியா போக பயமா இருக்குடா மாப்ள. இந்த நேரத்துக்கு எப்படியும் அவங்க வீட்ல எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கும். அவங்க கிட்ட எந்த மூஞ்சிய வெச்சுக்கிட்டுடா நான் பேசுவேன். " குமுறி அழுதான். "ஒரு பிரச்சனைன்னா அதுக்குத் தீர்வு என்னன்னு பேசித்தாண்டா ஆகனும். ஒளிஞ்சுக்கிட்டே இருந்தா சின்ன பிரச்சனையோ பெரிய பிரச்சனையோ முதல்ல நீ போயி அவகிட்ட பேசு." கதிர் கையில் எடுத்திருந்த கடை சாவியை திரும்ப வைத்தான். "இப்போதைகு கடைய திறக்க வேணாம். முதல்ல அவள சமாதானம் பண்ணி வீட்டுக்குக் கூட்டி வா. பிறகு பாத்துக்கலாம்." கதிர் அவனை மீண்டும் தனியாக

விட்டு வெளியேறினான். மனதில் தாங்க முடியாத அழுத்தம். இத்தனை நாட்கள் அவனை மறுத்து நேற்று ஏற்றுக்கொண்டது ஏன்? அவன் மீது தோன்றிய பரிவா? அல்லது அவளின் மீதிருந்த மையலின் பொருட்டா? ஏதாவொரு வகையில் அவளை அடைந்துவிட முடியும் என்னும் குறுக்கு புத்தியா? கதிர் தனக்குத் தானே மிக மோசமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டு பதில் காணமுடியாமலிருந்தான்.

திருமங்கலத்திற்கும் திருநகருக்கும் பதினைந்து நிமிட பயண தூரம் தான். ஆனால் அதைக் கடப்பதற்குள் முருகனுக்கு வாழ்வின் மொத்த ஆயுளும் கடக்கும் பாரம். தன் மீதான மதிப்பீடுகள் அவ்வளவும் நொறுங்கிப்போய் முதல் முறையாக அவமானங்களை எதிர்கொள்ளும் ஒரு மனிதனின் மனம் பலவீனமானது. கடுமையான எந்த சொற்களையும் எதிர் கொள்ளத் திராணியற்ற அவன், சக்தி தன்னை முழுவதுமாக மறுதலிக்கும்பட்சத்தில் தற்கொலை செய்து கொள்வதென யோசித்தான். ஒரு பகல் நேரத்தின் தற்காலிக பிரிவு ஏன் மரணம் வரை தன்னை சிந்திக்க வைக்கிறது? அவள் தன்னை விலகிச் செல்கிறாளென்கிற அச்சமா? அல்லது தனது ரகசியம் எல்லோருக்கும் தெரிந்து மற்றவர்கள் தன்னை என்ன நினைப்பார்களென்கிற அவமான உணர்ச்சியா? எதுவாயிருந்தாலும் இழப்புகளையோ அவமானங்களையோ எதிர்கொள்ளும் அளவிற்கு துணிச்சலான ஆள் தானில்லை என்பதை மட்டும் நிஜமென நம்பினான்.

அவளை விடவும் கனத்த மௌனத்திலிருந்தது அவளது வீடு. அவன் வருகையை பொருட்படுத்தாதவர்களாய் எல்லோரும் தங்களது இயல்பில் இருக்க, முருகனின் கண்கள் சக்தியைத் தேடின. இரண்டு மூன்று முறை அவளை பேர் சொல்லிக் கூப்பிட்டான். அவள் தனது அறையிலிருந்து வெளியேறுவதாய் இல்லை என்னும் உறுதியோடு இருந்தாள். "உக்காருங்க தம்பி" திரும்பிப் பார்த்தான். அவளின் அப்பா கையில் தேநீரோடு நின்றிருந்தார். அவன் தயங்கி உட்கார, அவர் அவனுக்கு தேநீரைக் குடுத்தார். அவரின் மனைவியும் சக்தியின் தங்கையும் இன்னொரு அறையிலிருந்து பார்த்துக் கொண்டிப்பது தெரிந்தது. அமைதியாக யாரையும் பார்க்காமல் தேநீரை பருகினான். "புருஷன் பொண்டாட்டிக்குள்ள சண்ட வர்றதெல்லாம் சகஜம் தான். அதுக்காக கல்யாணம் கொஞ்ச நாள்லயே கை நீட்றதெல்லாம் தப்பு முருகா." சக்தியின் அப்பா சொன்னதைக் கேட்டு நிமிர்ந்து அவரைப் பார்த்தான். மனம் ஒரொ நொடி சடாரென இலகுவானது. என்ன பிரச்சனை என்பதை அவள் சொல்லி இருக்கவில்லை. என்ன தியாகம் செய்து வேண்டுமானாலும் அவளை திரும்ப தன்னோடு கூட்டிக்கொண்டு போக வேண்டுமென நினைத்துக் கொண்டான். தேநீரை பாதியிலேயே வைத்தவன் "மன்னிச்சுக்கங்க மாமா. இனிமே அப்பிடி நடக்காது. நான் சக்தி கிட்ட பேசனும்." அவரைப் பார்க்காமலேயே கேட்டேன். அவர் திரும்பி தனது மனைவியைப் பார்க்க, அவர் "வாங்க மாப்ள" என்று கூப்பிட்டுவிட்டு சக்தியின் அறை நோக்கி நடந்தார். முருகனுக்கு அவளை எதிர்கொள்ள

தயக்கமாய் இருந்தது. தன்னை இப்போது என்ன வாய் பார்ப்பாள்? பாதி திறந்திருந்த கதவின் வழி யாய்ப் பார்த்த போது அழுத ஓய்ந்த அவள் தலை கலைந்து சோர்வான உடலோடும் முகத்தோடும் இருப்பது தெரிந்தது. கதவை சாத்திக் கொண்டு உள்ளே சென்றவன் அவளின் காலடியில் உட் கார்ந்து கொண்டான். அவள் பாதங்களில் முத்த மிட்டான். புழுக்களை மிதித்து விட்டவள் போல் அவசரமாய் கால்களை விலக்கிக் கொண்டாள். அவள் கண்களில் அவன் தன் வாழ்நாளில் ஒரு போதும் காணாத வெறுப்பு.

"மன்னிச்சுக்கோ சக்தி." அவன் சொற்களை அவள் எந்த விதத்திலும் பொருட்படுத்தவில்லை. அவள் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு "என் னயப் பாத்து பேசேன் ப்ளீஸ்." என விடாமல் கெஞ்சினான். அவள் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்க கூசினாள். "அய்யோ என்னய விடு முருகா." கைகளை உதறிக் கொண்டவள் அந்த அறையை விட்டு வெளியேறவும் முடியாமல் அங்கு இருக்கவும் முடியாமல் தேம்பி அழுதாள். "நெஜமாவே நீ யாரு? எங்கூட படுக்கற முருகன் நெஜமா? இல்ல அவன் கூட படுத்த ஆள் நெஜமா? ரெண்டுல நீ யாரு?" கேட்கக் கூடாதென அடக்கி வைத்திருந்த கேள் வியை அவன் முகத்தில் வீசியபோது நிதானமாக அவளைப் பார்த்தான். "ரெண்டுமே நெஜம் தான் சக்தி. ரெண்டுமே நாந்தான்." அவளில் இருந்து விலகி அருகில் உட்கார்ந்தான். "ச்சீ இப்பிடி சொல்ல அசிங்கமா இல்ல. எவ்ளோ வருஷம இப் பிடி நடக்குது? அவங்கூட படுக்கறது போதும்னா உனக்கெதுக்கு பொண்டாட்டி? குடும்பம்?"

“அவன் கூட நேத்துதான் முதல் முறையா நடந்துச்சு சக்தி. இதுக்கு முன்ன அவன் என்னய சீண்டினது கூட இல்ல. இதுல அசிங்கப்பட என்ன இருக்குடி? நான் யாருக்கும் எந்த கெடுதலும் செய்யலையே.”

“எனக்கு செஞ்சது என்ன?”

“உனக்கு எவ்ளோ உண்மையா இருக்கனுமோ அவ்ளோ உண்மையா தான இருக்கறேன்.”

“உண்மையா இருக்கறதுன்னா என்ன முருகா? எங்கூட படுக்கறப்போ எனக்கானவனாவும் அவன் கூட படுக்கறப்போ அவனுக்கானவனாவும் இருக்கறதா? இன்னும் எத்தன ஆம்பள கூட நீ படுக்கற?”

“அசிங்கமா பேசாத. நான் அப்பிடியான ஆள் இல்ல.”

“பின்ன” சடாரென இருவரின் உரையாடலும் அறுந்து போக, முருகன் வெறுமனே வெளிச்சம் வராமல் சாத்தப்பட்டிருந்த ஜன்னலைப் பார்த்தான். அவள் மனம் அத்தனை எளிதில் இலகுவாகப் போவதில்லை என்பதை முகமும் சொற்களும் உணர்த்தின. சக்தி எத்தனை மென்மையானவளோ அத்தனை உறுதியானவளும் கூட என்பதை இப்பொழுது புரிந்து கொண்டான்.

”நான் என்ன செய்யனும் சொல்லு? என்னால நீ இல்லாம வாழ முடியாது. அதுக்காக என்ன சொன்னாலும் கேக்கறேன். புரிஞ்சுக்கோ சக்தி.” அவள் மடியில் சாயப் போனவனை தடுத்து நிறுத்தினாள். “பக்கத்துல வராத ப்ளீஸ்.” ஒதுங்கி எழுந்து தனியாகப் போய் நின்றாள். அவனால் ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. “என்ன இப்போ நான்

செத்துடவா உனக்கு எல்லாம் சரி ஆகிடுமா?" உட லின் வெப்பம் மூச்சுக்காற்றுகளாய் ரௌத்திரமாய் கொப்பளிக்க அவன் கண்களையே பார்த்தாள்.

"இவ்ளோ நாள் எங்கூட வாழ்ந்து என்னய கொஞ் சம் கூட நீ புரிஞ்சுக்கவும் இல்ல. என்னய நேசிக் கவும் இல்ல. ச்ச." ஏமாற்றத்தோடு தலையைக் குனிந்து விசும்பினான். "நான் உன்ன நேசிக் கலைன்னா நடந்தது என்னன்னு வந்த உட னேயே வீட்ல சொல்லி இருப்பேன் முருகா. நீ என்னய ஏமாத்திட்ட. அதுக்காக வாழ்நாள் முழுக்க உன்னய மன்னிக்க மாட்டேன். தயவு செஞ்சு என்னய தனியா விடு. இதையெல்லாம் இப்ப பேசற நேரமில்ல. நீ இங்கிருந்து போ."

அவள் கதவுகளைத் திறக்கப் போனாள். அவச ரமாக அவளுக்கு முன்பாக சென்று கதவுகளை மறைத்து நின்றான். "இல்ல சக்தி. எனக்கு நம்பிக் கையான பதில் சொல்லு. நாந்தான் சொல்றனே. நீ என்ன சொன்னாலும் கேக்கறேன்னு. அப்றம் என்ன?" அவள் எரிச்சலானாள். "பொம்பளைக்கு கோவமே வரக்கூடாதா முருகா? நீங்க என்ன செஞ்சாலும் சகிச்சுக்கிட்டு போகனுமா? ஒரே நாள் ல நான் எல்லாத்தையும் மறந்துட்டு உன் பின் னால வந்துடனும். நான் என்ன நாய்க்குட்டியா? என் உணர்ச்சிகள புரிஞ்சுக்கோ. தயவு செஞ்சு போ. ரெண்டு மூணு நாள் ல நானே வரேன்." சக்தி தன் முடிவில் கொஞ்சமும் தளர்ந்து கொடுப்பதாய் இல்லை. கடிகார முள்ளின் நிமிட முள்ளையும், அவர்களின் மூச்சையும் தெளிவாக கேட்க முடிகிற அளவிற்கான நிசப்தம். கையறு நிலையில் நின்று கொண்டிருந்த அவனைப் பார்த்து சுவற்றுப் பல்லி

ஒருமுறை கத்தியது. குனிந்து நின்றவன் அவள் கால்களையே பார்த்தான். இரண்டு நாட்களுக்கு முன் இரவில் அவன் வைத்துவிட்ட ஊதா நிற நகப்பூச்சு இன்னும் பொலிவிழக்காமல் அப்படியே இருந்தது. அவளை அணைத்து ஆசை தீர முத்த மிட வேண்டுமென்னும் ஏக்கத்தை என்ன செய்ய? அவனை உடனடியாக ஏற்றுக்கொள்வதில்லை யென உறுதியாகை இருந்தாள்.

"சரி இனிமே கடைய நடத்தல. அவங்கிட்டயும் பேசல. கல்யாணத்துக்கு முன்னயே மாலத்தீவு ல ஒரு ஸ்டார் ஹோட்டல்ல ஆஃபர் வந்துச்சு நாந்தான் போகாம இருந்தேன். இப்போ அந்த வேலைய நான் ஏத்துக்கப் போறேன். எவ்ளோ சீக்கிரம் முடியுமோ அவ்வளோ சீக்கிரம் நீ வீட் டுக்கு வா." சக்தி எதிர்பாராத நொடியில் அவள் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு அங்கிருந்து வெளி யேறினான். ஏன் இத்தனை விரைவாக முடிவுகள் எடுக்கிறான் என ஒரு நொடி யோசித்தவள் தனக் காக அவன் எதையும் விட்டுக் கொடுப்பான் எனப் புரிந்து கொண்டு ஆறுதலடைந்தாள்.

பைநைட் கடை காரணமின்றி அடைக்கப்பட்ட, சில நாட்களுக்குப் பின் பிரிவை யும் வலியையும் யாருக்கும் காட்டிக்கொள்ள முடி யாமல் முருகன் மாலத்தீவு கிளம்பிச் சென்றான். கதிர் முருகனின் குடும்பத்தினரை சந்திப்பதைத் தவிர்க்க வேண்டியே சில நாட்கள் மதுரையி லேயே சுற்றிக் கொண்டிருந்தான். எதையெல்லாம் வேண்டாமென தப்பித்து ஓட ஒவ்வொருமுறையும் நினைப்பானோ அது விடாமல் துரத்தி வந்தது. டவுன் ஹால் ரோடும், மத்திய சிறைச்சாலையும்

பிழைப்பிற்கான புதிய வாய்ப்புகளோடு அவனை தன்னை நோக்கி இழுத்தபடி இருந்தது.

கம்போடிய டயரி – 7

"I want you to know that everything I did, I did for my country."

- Pol pot.

துப்பாக்கிகளின் சத்தம் மீண்டும் இடைவிடாமல் ஒலிக்கத் துவங்கியது, எதிர்பாராத நேரங்களில் வெடித்த கன்னி வெடிகளில் எதிரிகளோடு சொந்த மக்களும் கொல்லப்பட்டார்கள். பருவ வயதைத் தாண்டுவதற்கு முன்பாகவே யுத்தத்தால் கொல்லப்பட்ட ஏராளமான இளைஞர்களின் உடல்கள் புழுக்கள் நிரம்பி திறந்த வெளி மைதானமெங்கும் சிதறிக் கிடந்தன. கொல்லப்பட்டவர்களுக்கு முறையாக இறுதிச் சடங்கு செய்யும் அவகாசங்கள் எதுவுமில்லாமல் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் பதட்டத்தோடு கெமெர் வீரர்கள் தப்பித்து ஓடினார்கள். தலைமைக்குக் கட்டுப்படாத ஏராளமான இளைஞர்கள் கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு தன்னிச்சையாக பயணிக்கத் துவங்கினார்கள். கெமெர் வீரர்கள் தங்களின் முகாம்களை காலி

செய்வதற்கு முன்னால் தாங்கள் உருவாக்கிய எல்லாவற்றையும் நெருப்பு வைத்து கொழுத்தி விட்டுச் சென்றார்கள். அத்தனை நாட்களும் ரத்தம் சிந்தி உருவாக்கிய அவ்வளவும் நெருப்பால் சூழப்படுவதைப் பார்த்து பசியோடு இருக்கும் மக்களின் வயிறுகள் கதறின. முன்பு ஆளற்றுக் கிடந்த நிலம் செம்மைப்படுத்தி விளைவிக்கப்பட்டு இப்பொழுது மீண்டும் எல்லோராலும் கைவிடப்பட்டது. வியட்நாமிய படைகள் வேகமாக முன்னேறித் தாக்கிக் கொண்டிருந்ததால் மக்களோடு மக்களாக முன்னால் போராளிகளும் சாதாரண உடைகளில் வியட்நாமிய ராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள்.

சண்டை தீவிரமடைய சில நாட்களுக்கு முன்பு கடும் மலேரியா கண்ட அழகர்சாமியை கெமெர் ரோஜின் கட்டுப்பாட்டிலிருந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். முகாமில் பாதிக்கும் மேல் இப்போது ஆட்கள் இல்லை. எந்த நேரத்திலும் அந்த இடத்தை எதிரிகள் சூழ்ந்து கொள்ளலாம் என்கிற நிலை இருந்ததால் எல்லோரும் வேறு இடங்களை நோக்கி நகர்த்தப்பட்டார்கள். மக்களை முன் வரிசையில் அனுப்பிய கெமெர் படை அவர்களின் பாதுகாப்பில் புதிய இடங்களுக்குச் சென்றது. தினமும் பதினாறு மணி நேரங்கள் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தமில்லை என்னும் ஆறுதலோடு மருத்துவமனையில் கிடந்த அழகர்சாமிக்கு அந்தச் சூழலும் நோய்மையும் பெரிய வருத்தங்களைத் தந்திருக்கவில்லை. கடும் நாற்றங்களுக்கு பழகிய நாசி எந்தச் சூழலும் கிடைக்கும் உணவையும்

தயங்காமல் சாப்பிட வைத்தது. இந்த மருத்துவமனையில் இருப்பது வரையில் தான் தனக்கு பாதுகாப்பு என்பதைப் புரிந்து கொண்டிருந்த அழகர் உடல் குணமாகிவிடக் கூடாதென வேண்டிக் கொண்டான். எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத அந்த மருத்துவமனையில் தடுப்பூசிகளோ, சத்து மாத்திரைகளோ அறுவை சிகிச்சைக்கான கருவிகளோ எதுவுமில்லை. காயம்பட்ட போராளிகளின் வலி நிறைந்த ஓலம் எப்போதும் எதிரொலித்தபடி இருக்கும். அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் காயங்கள் குணப்படுத்தப்படாமல் உப்பு நீரால் சுத்தம் செய்து வெறுமனே கட்டுப் போடப்பட்டார்கள். அழுக்குத் துணிகளால் கட்டப்பட்ட அந்தக் கட்டுகளில் எப்போதும் குருதி உறைந்திருக்கும்.

உணவுப் பொருட்களின் இருப்பு முழுவதுமாக குறைந்து போனதால் நோயாளிகளுக்கு ஒரு வேளை உணவு மட்டுமே அனுமதிக்கப்பட்டது. இந்த யுத்தத்தில் துப்பாக்கி தோட்டாக்களால் செத்துப் போனவர்களின் எண்ணிக்கைக்கு கொஞ்சம் குறைவில்லாமல் பசியாலும் நோய்களாலும் மக்கள் செத்துக் கொண்டிருந்தார்கள். இறந்த மனிதர்களின் புதைக்கப்படாத உடல்களில் இருந்து பரவின கிருமிகள் புதிய தொற்று நோய்களை உருவாக்கி இருந்தது. எல்லோருக்குமே சிகிச்சையளிக்க வேண்டிய தேவையோடு இருந்தது அந்த தேசம். அழகருக்கு கழுத்திலிருந்து இடை வரை இருந்த சதைகள் முழுவதுமாக வற்றிப்போய் தோலால் போர்த்திய எலும்பு மட்டுமே மிஞ்சியிருந்தது. அவன் கண்களில்

விழுந்திருந்த குழியில் மரணத்திற்கான பெரும் காத்திருப்பு. மருத்துவமனைக்கு மிக அன்மை யில் யுத்தம் நடந்தபோது அங்கிருந்த கெமெர் வீரர்கள் முழுவதுமாக வேறு இடத்திற்கு நகர்ந்து போனார்கள். கைவிடப்பட்ட நோயாளிகளை ராணுவம் மீட்ட போது அவர்களில் பாதிக்கும் மேலானவர்களுக்கு சுய நினைவில்லை. ரெட் கிராஸ் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட கதிர், லட்சியத்தின் பேரால் நிர்மூலமாக்கப்பட்ட பெரும் மக்கள் சமுத்திரத்தை ரெட் கிராஸ் முகா மில் பார்த்தான். சரி பாதி ஆட்கள் யுத்தத்தால் ஊனமாகி இருந்தார்கள். குணப்படுத்தப்படாத நோய்களோடு சோர்ந்து கிடந்த அவர்கள் எல் லோரின் முகத்திலும் வாழ்வை முழுமையாகத் தொலைத்துவிட்ட ஏமாற்றம்.

கதிருக்கு தன்னைப் பற்றின எந்த விவரங்க ளும் நினைவில் இல்லை. மருத்துவர்களும் அதி காரிகளும் அவனைக் குறித்து விசாரிக்கையில் தன்னோடு சம்பந்தப்பட்ட எல்லோரின் பெயர் களையும் மறந்து போயிருந்தான். அவனிடமி ருந்த அழுக்கேறிய துணிப்பையில் ஒரேயொரு உடையும் பாஸ்போர்ட்டும், சின்னதொரு அப்ச ரஸ் பொம்மையும் மட்டுமே இருந்தது. பாஸ் போர்ட்டை வைத்து இந்தியன் என அடையாளம் கண்டுகொண்ட ரெட் கிராஸ் அதிகாரிகள் இந் திய தூதரகத்திற்கு தகவல் அளித்தார்கள். இரு பது நாட்களுக்குப்பின் கோட்டையூர் தங்கப்பன் செட்டியாரின் உதவியோடு அழகர்சாமி சொந்த ஊருக்குத் திரும்பியபோது அவனது தாய்மொ ழியை முக்கால்வாசிக்கும் மேல் மறந்து போயி

ருந்தான். மேலூரில் இருந்த தன் அத்தை வீட்டில் சில நாட்களும் சித்தப்பா வீட்டில் சில நாட்களுமாய் அவன் வளரத்துவங்கியபோது சொந்த ஊரிலும் தான் ஏதிலிதான் என்பதைப் புரிந்து கொண்டான். இங்கு அவனை யாரும் துன்புறுத்தவில்லை என்பதைத் தவிர்த்து வாழ்க்கை சூழலில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

கூடு திரும்புதலும் வெளியேறுதலும்.

இந்த ஊர் வெளிப்பார்வைக்கு அப்படியே இருப்பதுபோல் தெரிந்தாலும் மிகவேகமாய் மாறிவிட்டிருந்ததை சிறுமிகள் ரெட்டை ஜடைப் பின்னலோடு வளர்ந்த பிள்ளைகளாக பள்ளிக்கூடம் செல்வதிலிருந்துதான் கதிர் புரிந்து கொண்டான். பட்டுநூல்காரன் பேட்டையில் புதிதாக சிலர் குடிவந்திருக்கிறார்கள். சில வீடுகளில் கழிவறை வந்திருக்கிறது. புதிய மனிதர்கள் புதிய கதைகளையும் அங்கு கொண்டு வந்திருந்தார்கள். பெண்கள் எப்போதும் போல் குழாயடியில் கள்ளக்காதல் கதைகளைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சொற்களை கதைகளாக்கும் வித்தை பெண்களுக்கு மட்டுமேயான வரம். அந்த வீதியிலிருந்த ஆண்களின் குறிகள் குறித்த வினோதக் கதைகளை பேசுகையில் அவர்களுக்குள் வரும்

சுவாரஸ்யம் அலாதியானது. எல்லோருக்கும் எல்லாரைப் பற்றின கதைகளும் தெரிந்திருந்தாலும் அந்த வீதியின் மனிதர்களோடு பெரும்பாலும் ஒன்றியிராத கதிர் சமீபமாய் அதிகம் வீட்டிலேயே இருப்பதால் முதல்முறையாக அவர்களின் பேசு பொருளானான். தொழிலைத் தொடரமுடியாத கசப்பில் அலைந்து கொண்டிருந்தவனுக்கு புதிய வேலையைத் தேர்வு செய்வதில் தயக்கமிருந்தது. தன்னை பலவீனப்படுத்தும் ஏதோவொன்றை என்ன செய்தும் அவனால் துறக்கமுடியவில்லை. உடலை மறக்க நினைக்கிற நேரமெல்லாம் தன்னை சவமெனப் பார்த்தான்.

வீதியின் மாற்றத்தில்கூட ஆச்சர்யப்படாத கதிருக்கு மாரியின் மாற்றம் தான் வியப்பாய் இருந்தது. முன்பு தன்னை பராமரித்துக் கொள்வதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்கிறவன் அல்ல. நகங்கள் கூட சரியாக வெட்டப்பட்டு சுத்தமாக இருந்தன. “என்னடா ஒரு டைப்பா மாறிட்ட? தொழில விடப் போறியா?” கதிர் விளையாட்டாக கேட்டான். “ஏன் சாராயம் விக்கிறவன் எப்பயும் அழுக்கு லுங்கியும், அழுக்கு சட்டையுமாத்தான் திரியனுமா?” மாரிக்கு தன்னை அவன் சீண்டவில்லை என்பது புரிந்தாலும் அவன் கேட்பதன் உள்நோக்கம் தெரிந்திருந்தது.

“பங்காளி நீ ட்ரவுசர் போட்ட காலத்துல இருந்து உன்னய பாக்கறேன். நீ காரணமில்லாம இப்பிடிலாம் மாறமாட்ட. சொல்லு என்ன சமாச்சாரம்?” தன் ரகசியத்தை மிக எளிதாக அவன் கண்டுபிடிக்கக் கூடுமென்றுதான் மாரி சில நாட்களாக கதிரை

தவிர்த்தான். அவனைத் தவிர தனக்கான அந்த ரங்கங்களைப் பகிர்ந்துகொள்ள ஒருவருமில்லை மாரிக்கு. ஆனாலும் இந்த விஷயத்தை மட்டும் தனக்கானதாகவே வைத்துக் கொள்ள நினைத் தான். "நேரம் வர்றப்போ சொல்றண்டா. இப்போ எதுவும் கேக்காத." முகத்தில் படர்ந்த அசாத்திய மான வெட்கத்தை மறைத்துக் கொண்டு சொன் னான்.

கதிர் வெவ்வேறு ஊர்களின் பேருந்து நிலையங்களில் பத்து ரூபாய்க்கு மூன்று பேனாக்கள் விற்பது, தலைவலி தைலம் விற் பது என கையிலிருந்த பணத்தில் ஏனோதானோ வென்று சின்ன சின்ன தொழில்களாக செய் துகொண்டிருந்தான். தனிமையுணர்ச்சி அவனுக் குள் அதீத முதுமையை உருவாக்கியது போல் உணர்ந்தான். இந்த உலகம் பணமிருப்பவர்களின் விருப்பங்களுக்காக பணமில்லாதவர்களை வாழ நிர்ப்பந்திக்கிறதோ? ஏன் பணமில்லாதவர்கள் எல்லாவற்றையும் சகித்துக் கொள்கிறவர்களாக இருக்கிறார்கள்? தண்டனையை, தாமதத்தை, மன்னிப்பை இன்னும் எல்லா ஏமாற்றங்களையும் நிராசைகளையும் அவர்களுக்கு மட்டுமே உரித் தனாதாய் மாற்றியது யார்? கதிருக்கு வாழ்வின் மீது ஒரே சமயத்தில் அவநம்பிக்கையும் வெறுப் பும் அதிகமானபடியே இருந்தது. தன்னிடமில்லாத ஒன்று இன்னொருவனிடம் இருக்கையில் பார்க் கும் போது அதை எடுத்துக் கொள்ள அவனை என்ன வேண்டுமானாலும் செய்யலாமென மனம் பரபரக்கும். சிறையைப் பார்த்த அனுபவம் சடா ரென எழுந்து அமைதிப்படுத்தும். அதையும் மீறி

சமயங்களில் நீண்ட தூரப் பேருந்து பயணத்தில் திருடினான். அதுகுறித்து சில பொழுதுகள் குற்றவுணர்ச்சி வரும். காசில்லாதவன் நேர்மையாக வாழ நினைப்பது தனக்குத் தானே செய்துகொள்ளும் துரோகமென தன்னைத் தானே தேற்றிக் கொள்ளுவான். ஒரு மனிதனை அவனைத் தவிர வேறு யார் ஆறுதல்படுத்திவிட முடியும்?

மானாமதுரை சிவகங்கையில் வியாபாரம் முடித்துவிட்டு நள்ளிரவுக்கு மேல் ஊர் திரும்பியவனை இரவின் நிசப்தமான அந்த வீதி தனது ரகசியங்களோடு வரவேற்றது. வீட்டிற்குப் போக அவனுக்கு விருப்பமில்லை. பால்ச்சாமி வீட்டு மாடியில் படுத்துக் கொள்ளலாமென நினைத்ததற்குப் பின்னால் பக்கத்து மாட்டு மொட்டை மாடியில் அந்த அகால வேளையில் யாரேனும் உறவு கொண்டார்களென்றால் குறைந்தபட்சம் திருட்டுத்தனமாக வேடிக்கை பார்க்கலாமென்கிற எண்ணம். பகல் முழுக்க நடந்திருந்த சோர்வில் கால்களில் நரம்பும் சதையும் சுருண்டாலும் இலக்கு வரை நடந்தே தீருவது என நிதானமாக நடந்தான். பல வருடங்களாய் தேசாந்திரம் போனவன் வழி தவறி பயணம் நீண்டு உயிரை மட்டும் மிச்சமாகக் கொண்டு திரும்பும் போது ஏற்படும் சோர்வு அது. எந்த நூற்றாண்டிலும் ஒரு நாடோடியோடு பொருந்திப் போகக்கூடிய அந்தச் சோர்வை அவன் மிகச் சிறுவயதிலேயே அடைந்துவிட்டிருந்தான். பில்டிங் காண்ட்ராக்டர் முத்தையா வீட்டுக் குழந்தை வீறிட்டு அழுதுகொண்டிருக்க அவரின் மனைவி அமுதா பால்கனியில் குழந்தையை தூக்கி வைத்தபடி விளையாட்டிக் காட்டிக் கொண்டிருந்தாள்.

“என்னடா கதிரு இவ்ளோ நேரம்?” அந்த இருளி லும் அவள் சினேகமாக புன்னகைப்பதைப் பார்க்க முடிந்தது. தேவதைகள் எந்த இருளுக்குப் பின்னா லும் அவர்களின் தேஜஸ் எங்கனம் மறையும்? கதிர் நடை தளர்ந்து திரும்பி அவளைப் பார்த்தான். “யாவாரம் முடிச்சுட்டு வாரேன் மயினி.”

“நல்ல யாவாரம்டா. கூத்தாடிப்பயக மாதிரி ஊர் ஊரா சுத்திக்கிட்டு. ஒழுங்கா ஒரு எடத்துல இருந்து வேல செய்யலாம்ல.” உலகமே தூங்கி விட்ட அந்த நேரத்திலும் யாரோ ஒருத்தி தனக் காக அக்கறை கொள்கிறாளென சந்தோசப்பட் டான். பதிலெதுவும் சொல்ல விருப்பமில்லாமல் வெறுமனே “பாப்போம் மயினி” என்றபடி நடந் தான். வீதிக்கு பொதுவாக இருந்த இரண்டாது தெருவிளக்கைக் கடந்தபோது கமலியின் வீட்டுக் கதவைத் திறந்து மாரி வெளி வந்தான். இவ னுக்கும் அவனுக்கும் நடுவில் சில அடிகள் தான் இடைவெளி. அத்தனை வருட பழக்கமெல்லாம் அந்த ஒருநொடி ரகசியத்தில் சங்கட்டமானதொரு நிலையை இருவரிடமும் உருவாக்கிவிட, தலை யைக் குனிந்தபடி மாரி இவனைக் கடந்து சென் றான். “ஏய் உன் மனி பர்ஸ விட்டுட்டுப் போற.” கமலி அவனைப் பின்னாலிருந்து கூப்பிட்டபடியே வந் தாள். இவர்கள் இருவரையும் பார்த்து அவளுக் கும் சங்கடமானது. மாரி பர்ஸை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடக்க, கமலி இவனைப் பார்த்து தயக்கத்தோடு சிரித்தாள். “சாப்ட்டியா கதிரு?” இவனுக்கு என்ன பதில் சொல்வதெனத் தெரி யவில்லை. வெறுமனே ஆமெனத் தலையாட்டி விட்டு நடந்தான்.

அவனால் அதன்பிறகு உறங்கியி ருக்க முடியவில்லை. கமலி மெக்கானிக் சேக ரின் மனைவி. அவரை விடவும் அரையடி உயரம். நடந்து வரும் போதே உடலில் ஒரு திமிர் இருக் கும். அசாத்தியமாக முறுக்கேறிய உடல். உள் ளாடைகள் அணியாமலேயே விரைத்து நிற்கும் முலைகள். தன் வீட்டு வாசலில் ஒருமுறை மக ளுக்கு பாலூட்டும் போது கறுத்த பெரிய வட்டமும் திராட்சைப் பழங்களை விடவும் பெரிதான காம் பையும் என்றோ பார்த்ததை சடாரென நினை வில் கொண்டு வந்தான். ஆனால் மாரி எப்படி இவளோடு இணைந்தான் என்பது மட்டும் விளங் கிக் கொள்ள முடியாத ஆச்சர்யமாய் இருந்தது. இரவில் உறக்கமின்றி விழித்திருப்பவர்கள் எளி தில் துணைகளைத் தேடிக் கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். மாரியும் தொழில் நிமித்தமாய் இரவில் விழித்திருப்பவன். அதிகாலையில் ஓர்க் ஷாப்பை மூடிவிட்டு வரும் சேகர் அண்ணனுக்காக இரவு முழுக்க கமலியும் விழித்திருப்பாள். இரவுக்கு தொலைவுகள் இல்லை. அது அறிமுகமற்ற மனி தர்களைக் கூட அருகாமையில் கொண்டு வரு கிறதென்னும் போது ஒரே வீதியில் இருப்பவர் களை சேர்த்திருப்பதில் என்ன ஆச்சர்யம் இருக்க முடியும்? கமலியைப் பற்றின நினைப்புகள் வெறுந் தரையில் படுத்திருந்த அவன் உடலை சூடேற்ற உறங்கவும் முடியாமல் எழுந்து செல்லவும் முடியா மல் குப்புறப்படுத்த உருண்டான்.

மாரிக்கு கதிரை எதிர்கொள்ள தயக் கமாக இருந்தது. அந்த இரவு விடிந்தபோதே கதிர் இயல்பாகிவிட்டான். மாரி தன் வாழ்வில்

தனக்கென தேடிக்கொண்ட முதல் சந்தோசம் அவள். தன்னை எதிர்கொள்ள அவன் தயங்குகி றான் என்பது புரிய இரண்டு நாட்களுக்குப் பிறகு வேறு வழியில்லாமல் நள்ளிரவில் கமலி வீட்டிற்கு சென்றான். அவளிடம் எப்போதும் இருக்கும் அதே சிரிப்பு. "என்ன கதிரு இந்த நேரத்துல?" அவளை விடவும் அதிகமாக வயதாகி இருந்த இரண்டு மரக் கதவுகளில் ஒன்றைத் திறந்துவிட்டபடியே கேட் டாள். "இந்தப்பய வந்தானா?" தனது உயரத்தை மீறின அவள் தோளைத் தாண்டி எட்டி உள்ளே பார்த்தான். "வார நேரந்தான். உள்ள வா.." கம லியின் உடலில் புணர்ச்சிக்குத் தயாரான வியர் வையும் கமத்திற்கென்றே பிரத்யேகமாக வழியும் அபூர்வ மிளிர்ச்சியும் பொங்கி வழிந்தது. அதை எதிர்கொண்டு உள்ளே செல்ல கதிருக்கு தயக் கமாக இருந்ததால், "இல்ல இல்ல இருக்கட்டும். அவன் வந்தான்னா எங்கிட்ட எப்பயும் போல பேசச் சொல்லு. ஏதோ கொலக்குத்தம் செஞ்சதாட்டம் ஒளிஞ்சுக்கிட்டு இருக்கான். நான் பாத்து இப்ப தான் வாழ்க்கைல உருப்படியா ஒரு காரியம் செய் றான். நாளைக்கு காலைல வீட்டுக்கு வரச் சொல்லு கமலி." தான் அதிக நேரம் அங்கிருப்பது அந் தச் சூழலை மாற்றிவிடும் என்னும் எச்சரிக்கையில் கிளம்பினான். "சரி நான் சொல்லுறேன்" என்றவள் திறந்த கதவை மூடாமல் அப்படியே விட்டுவிட்டு வீட்டிற்குள் சென்றாள்.

மாரி இப்பொழுது பெரிய மனிதனா கத் தெரிந்தான். அவன் செய்யும் எல்லாக் காரி யாங்களிலும் ஒரு பக்குவமிருந்தது. எந்த வேலை யையும் யோசித்து செய்யக்கூடிய பொறுமையை

ஒரு பெண் அவனுக்குக் கற்றுத் தந்திருந்தாள். "போதும்டா ஊர்நாடு சுத்தினதெல்லாம். இங்கியே வேல எதாச்சும் பாக்கவா உனக்கு?" பழைய மாரி யாக இவனிடம் கேட்டான். "நாலு காசு சேக் கனும் பங்காளி. சில்ற வேல பாத்து இனியும் அஞ்சுக்கும் பத்துக்கும் என்னால அல்லாட முடி யாது. நானும் யாவாரத்துக்கு வரேன்." இந்தமுறை கதிர் தீர்க்கமான முடிவாகச் சொன்னான். மாரிக்கு என்ன பதில் சொல்வதென்கிற குழப்பம். "உனக்கே தெரியும் கதிரு. தொழில் முன்ன மாதிரி இல்ல. சாராயம் காச்சறதும் எடுத்துட்டு வாரதும் லேசான காரியமில்ல. நாங்களும் அதக் கொறச்சிட்டுத்தான் இப்போ பொட்டனம் வித்துட்டு இருக்கோம். இதுல ரிஸ்க் அதிகம் டா." மாரிக்கு அவன் வயதில் அவனுக்கு நம்பிக்கையான ஒரு ஆள் தேவைப் பட்டாலும் இவனும் தன்னைப் போல் மாறிவிடக் கூடாதென்கிற கலக்கம் இருந்தது. "ரிஸ்க் என் னடா ரிஸ்க்.? சோத்துக்கே வழி இல்லைன்னா செஞ்சுதான ஆகனும்?" கதிர் விடாமல் அடம் பிடித்தான். "சரிடா பாப்போம்" என நம்பிக்கையில் லாமல் சொல்லிவிட்டுச் சென்றான் மாரி. இரண்டு நாட்களுக்குப் பிறகு பூக்கடைத் தெருவிலிருந்து வந்து கொண்டிருந்த கதிரை எதிர்கொண்ட பில் டிங் காண்ட்ராக்டரின் முத்தையாவின் மனைவி கோவமாக முறைத்துவிட்டு கடந்து சென்றாள். சிரிப்பைத் தவிர எதையும் பார்த்திராத அந்த முகத்திலிருந்த கோவம் இவனை ஆச்சர்யப்படுத் தியது. ஓடிப்போய் அவளை மறித்தான். இடைக் கும் மார்புக்கும் சின்ன இடைவெளி விட்டு நேர்த் தியாக சேலை கட்டியிருந்த அவளின் கழுத்தில்

வியர்வைத் துளிகள் திரண்டிருப்பதைப் பார்க்க உயிரென எழும்பி நின்ற சிற்பம் போலிருந்தாள். "எதுக்கு மயினி கோவமா பாத்துட்டுப் போற? பாதி ராத்திரி ல பாத்தாலும் நிறுத்தி பேசுவ. இப்ப ஒன்னுமே பேசாம போற?" சேலையின் முந்தானையை தேடி ஒரு கையால் இறுக்கியபடியே "வழி விடு கதிரு உங்கிட்ட நான் பேச விரும்பல."

"ஏன் நான் என்ன செஞ்சேன்?":

"என்ன செஞ்சியா? இனியாச்சும் வாழ்க்கை ல நல்லா வருவேன்னு நெனச்சேன். கடைசிலே நீயும் அந்த மாரிப்பய மாதிரி அடுத்தவன் பொண்டாட்டி கிட்ட படுக்க போயிட்ட ல."

அவள் அடக்கி வைத்திருந்த கோவத்தை சத்தம் காட்டாமல் வெளிப்படுத்தினாள். கதிருக்கு அவளின் அக்கறையும் கோவமும் ஆச்சர்யமாய் இருந்தது.

"அப்பிடிலாம் இல்ல மயினி. சும்மா போயி பேசினாலே ஒரு பொம்பள கூட படுத்துட்டதா அர்த்தமா? உங்கூடயும் தான் பேசறேன். அதுக்காக உங்கூடயும் அப்பிடியா?"

அவனது அந்த விளக்கம் முன்னைவிடவும் அவளைக் கோவப்படுத்த ஓங்கி அவன் கன்னத்தில் அறைந்தாள். அந்த அறையை எதிர்பாராத கதிரின் உடல் நரம்புகளெங்கும் கோவம் கொதித்தது.

"எல்லாம் பொம்பளைங்களும் ஒரே மாதிரி இல்லடா நாயே. யார யாரோட வெச்சுப் பேசற. உனக்கு எல்லாம் ஒருநாள் புரியும். வழிவிடுடா." அவள் அவனை விலக்கிவிட்டு வேக வேகமாய் நட்ந்து போனாள். கமலிக்கும் இவளுக்கும் என்ன பிரச்

சனை? நான் எப்படி போனால் தான் யாரோடு போனால் தான் இவளுக்கென்ன? ஏன் மனிதர் கள் எப்போதும் தன்னை விடவும் மற்றவர்களின் நலன்களில் இத்தனை அக்கறை கொள்கிறார் கள்? அவள் மீதிருந்த அன்பு இப்பொழுது எரிச்ச லானாது.

மாரி அவன் தன்னோடு தொழிலுக்கு வர சம்மதித்தான். வருஷநாட்டிலிருந்து காய்கறி வேனில் சரக்கை எடுத்து வருவது கதிரின் முக்கிய வேலை. வரும் சரக்கில் இவர்களுக்குப் போக விரு துநகருக்கும், திருப்பரங்குன்றத்திற்கும் பிரித்து எடுத்துச் செல்ல வேண்டும். சில்லறை வியாபா ரத்திற்கெல்லாம் இப்போது வேண்டாமென உறு தியாகவேச் சொல்லிவிட்டான். உள்ளூரில் கதிர் எப்போதும் போல் ஒரு நாடோடியாகவே அறியப் பட்டான். புதிய மனிதர்கள், புது புது சூழல்கள், எப் போது வேண்டுமானாலும் பிரச்சனைகள் வரக்கூ டுமென்கிற அச்சம் கலந்த பரபரப்பு எல்லாம் அந்த வயதில் ஒரு பெண் ஏற்படுத்தும் சுவாரஸ்யத்தை விடவும் அதிகமாய் இருந்தது கதிருக்கு.

தேசிய நெடுஞ்சாலை

7 ல் சத்யா.

”வாழ்வைப் போன்ற கேள்விக்கும்
மரணத்தைப் போன்ற பதிலுக்குமிடையே
ஒரு மெழுகு நதி குழைந்து அசைவதை
காதல் என்று, அதற்குப் பெயரிட முடியும்
வாழ்வில் இருந்து தோன்றும் வாழ்வை விடவும்,
அது அசாதாரணமான ஒன்றாகும்.
முடிவான மரணத்தினாலும்
முடிவுறாதிருக்கும் அந்த அதிசய மெழுகுநதி
நம் சொற்களாலானது.”

- **அனார்.**

அந்த ஊரை இரண்டாக பிரித்துச் செல்லும் இந்த சாலைக்கு ஏராளமான கதைக ளுண்டு. வெற்றி, வீழ்ச்சி, கொண்டாட்டம், காதல், பகை என எல்லா உணர்வுகளையும் பிரதிபலித்த பல்லாயிரம் மனிதர்களை பல நூறு ஆண்டுகளாய் கண்ட சாலை. சாலையின் இடதுபுறமிருந்த பட் டுநூல்காரன் பேட்டையும், அங்காள ஈஸ்வரி நக ரும் எல்லா சமூகத்தவரும் சேர்ந்து வாழும் பகுதி. சாலையின் வலது புறமிருந்த பகுதிகள் முழுக்க ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே வாழும் பகுதி. தொழில் நிமித்தமாய் வாழ்க்கை நிமித்த மாய் எல்லோரும் சேர்ந்து வாழ்வதைப் பார்க்கும் போது அங்கு யாரும் சாதி பார்ப்பதில்லையென நினைக்கத் தோன்றும். ஆனாலும் இடது புற வீதிகளில் இருந்து வரும் ஒவ்வொருவரும் என்ன சாதி என்பதை வலது புற வீதிகளில் இருந்த வர்கள் தெளிவாக தெரிந்து வைத்திருந்தார்கள். ஒவ்வொரு சாதிக்கும் அவர்களின் வீட்டில் ஒவ் வொரு எல்லை வரை அனுமதி உண்டு. அதை அவர்கள் ஒருபோதும் மீறியதில்லை. பெரும் பகு தியாய் ஒரு சமூகம் வாழும் எல்லா ஊர்களிலும் அவர்கள் ஆண்ட பரம்பரை தான். சாதிய பெருமி தங்கள் தான் சந்தோசத்தின் ஒற்றுமையின் முதல் எதிரி. முதுகுக்குப் பின்னால் சாதியைத் தெரிந்து கொண்டு எச்சரிக்கையாக இருப்பவர்கள் அதை முன்னிட்டு எந்த வன்முறைகளிலும் இறங்குவ

தில்லை. அரிதாக சாலையின் இடது புறத்திலி ருந்து வலது புற வீதிகளில் இருக்கும் பெண்களை யாரேனும் காதலிக்கும் போது தான் அந்தப் பகுதி யுத்தகளமாகும். காதல் பிரச்சனையில் துவங்கும் சண்டை, பல காலமாய் தேக்கி வைத்த பகையை எல்லாம் தீர்த்துக் கொள்ள வழி பார்த்துக் கொள் ளும்.

கதிருக்கு இரண்டு பக்க வீதிகளி லும் நண்பர்கள் இருந்தார்கள். எல்லோருடனும் இணக்கமாக இருந்தான். அப்படி இருப்பது தான் அங்கு பாதுகாப்பாக வாழ்வதற்கான முதல் தகுதி. மாரி தொழில் நிமித்தமாய் ஏற்படுத்தி வைத்திருந்த நட்பை அவனுக்கும் பழக்கினான். “நல்ல யாவாரி யாரையும் பகைச்சுக்க மாட்டாண்டா” என அவன் கற்றுக் கொடுத்ததுதான் கதிருக்கு பாடம். ஆனால் கதிர் நல்ல வியாபாரி இல்லை. நட்பை எத்தனை வேகமாய் ஓரிடத்தில் வளர்த்துக் கொள்கிறோமோ அத்தனை வேகமாய் பகையையும் வளர்த்துக் கொள்கிறோம் என்பது துவக்கத்தில் அவனுக் குப் புரியவில்லை. எல்லோருக்கும் தெரிந்த மனி தனாய் இருக்கும் போது செய்யும் தொழில்களில் கவனமாய் இருக்க வேண்டும். அதோடு பழகும் மனிதர்களோடு செலவிடும் சொற்களிலும். கதி ருக்கு அவன் சொற்கள் எதிரி, இதனாலேயே மாரியைத் தவிர்த்து யாரோடும் மதுவருந்துவதை தவிர்ப்பான். அரிதாக எல்லோருடனும் மதுவருந்

தும் நாட்களில் அதிகம் குடிப்பதை தவிர்த்துவிட்டு கிளம்பிவிடுவான்.

ஊரில் ஒவ்வொரு பகுதி கோவில் திருவிழாவிற்கும் ஒரு தனித்துவம் உண்டு, திருவிழாக்கள் இல்லாமல் போனால் இந்த ஊர்கள் எல்லாம் எப்போதோ அழிந்து போயிருக்கும். மனிதனின் எல்லா உணர்ச்சிகளையும் இந்த திருவிழாக்கள் தான் ஒவ்வொருமுறையும் மீட்டெடுக்கின்றன. புதிய சந்திப்பை, புதிய நட்பை, புதிய காதலை, புதிய பகையை இப்படி எல்லாவித உணர்ச்சிகளும் பிரசவிப்பது திருவிழாக்களில் தான். புரட்டாசி மாதத்தில் பெருமாள் கோவில் திருவிழா ஆறு நாட்கள் நடைபெறும். கணபதி நகர் சுற்றுப் பகுதிகளில் இருக்கும் அத்தனை அழகான பெண்களையும் இந்த நாட்களில் மட்டுந்தான் நாம் பார்க்க முடியும். பெரும்பாலும் சண்டை சச்சரவுகள் வர வாய்ப்பில்லாத இந்த திருவிழா நிகழ்ச்சிகள் சிறப்பாக இருக்குமென்பதால் அதிகமும் அங்கு கூடுவது பெண்கள் தான். வருடம் தவறாமல் முதல் நாள் கம்பராமாயண பட்டிமன்றமும், இரண்டாவது நாள் வெள்ளை ரோஜா இன்னிசை கச்சேரியும் உண்டு. கடைசி நாளில் ஏதாவதொரு நாடகம் .அதுவும் அனேகமாக வள்ளி திருமணம். அடுத்ததாக அரசு மருத்துவமனை எதிரில் இருக்கும் முனியாண்டி கோவில் திருவிழா. மூன்று நாட்கள் தான். அதும் சில வருடங்கள் நடக்காமலும் போய்விடலாம். ஆனால் நடக்கும் நாட்களில்

வெகு விமர்சையாக இருக்கும். கதிர் முதன் முத லில் திருவிழாவில் தன் தாத்தா வள்ளிக்கு அப்பா வாய் நடித்ததை இங்குதான் பார்த்தான். எல்லோ ரும் அவர் நடிப்பதை ஆஹோ ஓஹோ என்றார்கள். இவனுக்கு சிரிப்பு வந்தது. அவருக்கு அந்த வேடம் மட்டுமல்ல கம்பீரமான எந்த ஆண் வேடமும் பொருந்தாதோ என நினைத்துக் கொண்டான். அவரிடமிருக்கும் அதீத பெண்மை காரணமாகவே பெண்களுக்கு அவரை பிடிக்கிறதோ? உலகின் மிகச் சிறந்த சக்கரை பொங்கலும், அவித்த சுண்ட லும் பிரசாதமாய் தரும் காட்டுமாரியம்மன் கோவில் திருவிழா ஊரில் தனித்துவமானது. அதைவிடவும் பெரிய திருவிழாவான பத்திரகாளியம்மன் கோவில் திருவிழா இருந்தாலும் ஊரை என்றும் அழகூட்டி காட்டுவது இந்தக் கோயில் திருவிழா தான். எந் தக் கோவில் விசேஷமென்றாலும் நிகழ்ச்சி துவங் குவதற்கு முன்பு முதல் பாடலை பாடுவது கம்ப ரன்பர் ராசு. அவரில்லையேல் திருவிழா இல்லை. ஊரின் மையமாய் இருதயம் போலிருந்தது அந்த கோவில். இதனாலேயே ஒவ்வொரு முறையும் இந் தக் கோவில் திருவிழாவில் மல்லுக்கட்டி கொண் டாட்டத்தைக் களைக்க எப்போதும் ஒரு கூட்டம் தயாராய் இருக்கும்.

அந்த வருட திருவிழாவிற்கு பட்டு நூல்காரன் பேட்டையிலிருந்தும் நிறைய இளை ஞர்கள் சென்றிருந்தார்கள். அதுரை அபிநயா வின் ஆடல் பாடல் நிகழ்ச்சியென்பதால் கடு

மையான கூட்டம் வேறு. காட்டு மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் மக்கள் எல்லாம் தங்கள் வீட்டு மாடிகளில் இருந்து பார்க்க, அப் படியும் கூட்டம் வீதியின் எல்லைவரை நீண்டிருந் தது. நிகழ்ச்சி துவங்கி தாமதமாகத்தான் இவர்கள் போய்ச் சேர்ந்தார்கள். ஒரே இடத்தில் இல்லாமல் ஆங்காங்கே கொஞ்சம் பேராய் பிரிந்து உட்கார்ந் தபோது ரஜினி மேடையில் ஆடிக் கொண்டிருந் தார். பாடல் பாதியில் இருக்கும் போதே கூட்டத் திலிருந்து ஒருவன் இளைய தளபதி விஜய் வாழ்க என்று கத்தினான். பதிலுக்கு இன்னொரு புறத்தில் ஆசை நாயகன் அஜித் வாழ்க என்று இன்னும் சிலர் கத்த மேடையில் இருந்தவர்கள் நடக்கப் போவதைப் புரிந்து கொண்டு பாடல் முடிவதற்கு முன்பாகவே அஜித்தை மேடைக்கு கொண்டு வந் தார்கள். மக்கள் ஆராவாரம் ஒரு புறம். கூட்டத்தி லிருந்த விஜய் ரசிகர்களின் ஆராவாரம் ஒருபுறம். அஜித்தை தொடர்ந்து விஜயும் வந்து ஆடிவிட்டுப் போனார். மீண்டும் கூட்டத்திலிருந்து ஆசை நாய கன் அஜித் வாழ்க என்ற கோஷம் எழ முன்னால் இருந்த ஆட்களில் சிலர் எழுந்து "எலேய் என்ன வம்பிழுக்க வந்திருக்கீங்களா? பேசாம அமுக்கிட்டு உக்காருங்க இல்லன்னா அடிச்சு மண்டைய உடச் சிருவோம்." எனக் கத்த எல்லோரும் அமைதியா னார்கள். பெப்சியில் கலந்து எடுத்து வந்திருந்த பிராந்தியை கதிரும் அவனோடு இருந்தவர்களும் விடாமல் குடிக்க, போதையில் கதிருக்கு அஜித்

வாழ்க என்று கத்துவதா? விஜய் வாழ்க என்று கத்துவதா எனக் குழப்பமாக இருந்தது. "ஒத்தா லக்க ஆசை நாயகன் அஜித் வாழ்க.. தல தல தல தல தல...." என ஆவேசமாக சட்டையை அவிழ்த்து கத்தினான். கூட்டத்தின் எதிர்ப்புறத்தி லிருந்த விஜய் ரசிகர்கள் மண்ணை அள்ளி இவன் மீது எறிய அதற்காகவே காத்திருந்த இவர்கள் பதி லுக்கு மண்ணைத் தூக்கி எறிந்தனர். "இந்த தூமி யக் குடிக்கிங்க ஆரம்பிச்சிட்டாய்ங்கடி, இனி யாரை யும் நிம்மதியா இருக்க விடமாட்டானுக." என வாயில் வந்த கெட்ட வார்த்தைகளை எல்லாம் கொட்டியபடி பெண்கள் எழுந்து போக மேடையை மறந்து கீழே ஒரு யுத்தம் துவங்கியது. பத்து பதி னைந்து விஜய்களும் பத்து பதினைந்து அஜித் துகளும் அடித்துக் கொள்ளத் துவங்கினார்கள். பத்து நிமிடத்தில் சூழ்ந்துவிட்ட போலிஸ்காரர்கள் எல்லோரையும் ஒட்டுமொத்தமாக அடித்து துரத்த ஆளுக்கொரு திசையில் தப்பித்து ஓடினர்.

பல திருவிழாக்களில் பல வன்மு றைகளை பார்த்த எரிச்சல் போலிஸ்காரர்களுக்கு. அன்றைய தினம் போதையில் சிக்கியவர்களை எளிதில் விட்டுவிட மனமில்லாமல் துரத்தி துரத்தி அடித்தார்கள். முதல் முறையாக இந்த களேபரங்க ளில் வந்து மாட்டிக் கொண்ட கதிர் தப்பிக்கும் வழி தெரியாமல் தனலட்சுமி ஜவுளி ஸ்டோரை ஒட்டின சந்துக்குள் புகுந்து ஓடினான். ஒரு போலிஸ்காரன் துரத்திச் சென்று அடித்தான். தெரு முனையிலி

ருந்த குப்பையில் விழுந்தவனை அவன் மயங்கும் மட்டும் அடித்து அப்படியே இழுத்து அருகிலிருந்த சாக்கடையில் போட்டுவிட்டுப் போனான். போதை யிலும் அடிவாங்கின வலியிலும் கதிர் மயங்கிப் போனான். காயம்பட்ட இடங்களை அந்த இருளில் அடையாளம் கண்டுகொண்டு அதற்காக கூடுத லாக வருத்தப்படுவதும் இயலாத காரியம். முறிந்த இடது கையை தூக்க முடியாமல் சாக்கடையின் மேல் வைத்துவிட்டு உடலை வெளியே எடுக்க முடியாமல் திணறியபடி கிடந்தான். விழும்போது கொஞ்சமாய் தொந்தரவு செய்த சாக்கடையின் துர்நாற்றம் சில நிமிடங்களிலேயே பழகிப்போக அப்படியே அயர்ந்து உறங்கிப்போனான்.

நள்ளிரவிற்கு மேல் திருவிழா முடிந்து வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பெண்க ளில் சிலர் சாக்கடையில் கிடந்த இந்த அடையா ளம் தெரியாதவன் குறித்து வெவ்வேறு விதமாய்ப் பேசிக் கொண்டார்கள். சக்தி சற்று தூரத்திலேயே விழுந்து கிடப்பது இவன் தான் என்பதைக் கண் டுகொண்டாள். ஆயிரம் கோவமிருந்தாலும் சில பொழுதுகள் அவனை சகோதரனாய் நினைத் துக் காட்டிய அன்பு நிஜம். அவனை அப்படியே விட்டுப்போக மனமில்லாமல் “ஏ சத்தியா கதிர் அண்ணன் மயங்கிக் கெடக்கு தூக்கி வெளில போட்றுவமா?” தன்னோடு வந்த சத்யாவிடம் கேட் டாள். “ஓசாக்கா நீ? இந்த நேரத்துல நாம ஒரு ஆம்பளையத் தூக்கிட்டு இருந்தம்னா பாக்கவ

றங்க என்ன நெனைக்க மாட்டாங்க. அதும் இந்த சனியன் திருவிழால என்ன ஆட்டம் போட்டுச் சுன்னு பாத்தே ல." அவள் இவனை நெருங்கவே விரும்பாதவளாய் இருந்தாள். "ச்சீ அது அப்டிலாம் இல்லடி. இவனுக குடிக்க ஊத்திக் குடுத்து கெடுத் துட்ட்டானுங்க. வாடி எனக்கு செய்ற உதவியா நெனச்சுக்கோ." சக்தி ரொம்பவே கெஞ்ச, அவ ளுக்கும் சங்கடமானது. "புது ட்ரெஸுக்கா, எல்லாம் வீணாப் போயிரும்." என பிடிவாதமாய் மறுத்தாள். "ட்ரெஸுதானடி பக்கத்துலயே அடி குழா இருக்கு. கழுவிக்கலாம். ப்ளீஸ் டி." அவளின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள். இரண்டு பேரும் சேர்ந்து அவனை வெளியே இழுத்துப் போடுவதில் பெரிய சிரமம் எதுவும் இருந்திருக்க வில்லை. வலியில் கதிர் "அய்யயயோ என் கைய யாரோ வெட்டறாங்க, வலிக்கிது.. வலிக்கிது." என அலற சக்தி அவன் வாயிலேயே அடித்தாள். "ஏய் வாய மூடு சனியனே. உன்னய யாரும் கொல்லல." அவனுக்கு அத்தனை போதையிலும் வலியிலும் இவளின் குரலை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. "பாதி ராத்திரில குட்டிச்சாத்தான் மாதிரி நீ என்னடி செய்ற குட்டச்சி?" என எங்கோ பார்த்து உளறினான். "இதுக்கொண்ணும் கொறச் சல் இல்ல." தனக்குள்ளேயே புலம்பிக் கொண்டு சக்தி அவனை இழுத்துக் கொண்டு குழாயடியில் போட்டாள்.

சக்தி பைப்பில் தண்ணீர் அடிக்க குழாயடியில் அவன் தலையை முக்கி அந்த அரை யிருளில் அவனை அரைகுறையாய் குளிப்பாட்டி னார்கள். அவர்களுக்குப் பின்னால் சில பெண் கள் இவர்களை முகச்சுளிப்போடு பார்த்துவிட்டு "செய்ற வேலய விட்டுட்டு சென‌மாட்டுக்கு மயிரு புடுங்கற இந்த வேல தேவையா? அப்பிடியே விட் டுட்டு போங்கத்தா." என திட்டிவிட்டுச் சென்றார் கள். கதிர் குழாயில் சாய்ந்து உட்கார்ந்து கொள்ள, அவனை அப்படியே விட்டுச் செல்ல சக்திக்கு பாவமாய் இருந்தது. திட்டுத்திட்டான வெளிச்சத் தில் சத்யா அவனை அப்போதுதான் பார்த்தாள். லேசாக மீசை அரும்பிய முகம், வெட வெடவென அதிக சதையில்லாமல் மெலிந்த தேகம். பார்த்த தும் நடு மண்டையில் நங்கென கொட்டு வைக் கத் தூண்டும் கேசம் அடர்ந்த தலை. மயக்கத்தி லும் சிரித்துக் கொண்டே இருந்த அவன் கண் களுக்குள் நிரந்தரமாய் தேங்கிவிட்டிருந்த சோகம். அவள் தினமும் எதிர்கொள்ளும் ஆண்களில் ஒரு வனல்ல அவன். "உனக்கு எப்பிடிக்கா இது பழக் கம்?" அவன் மீதான சுளிப்புகள் நீங்கி சக்தியிடம் கேட்டாள். "ஏய் நம்ம கடைய இதாண்டி பாத்துட்டு இருந்துச்சு. அவரு வெளிநாட்டுக்குப் போனதால தான் கடைய அடைக்க வேண்டியதாப் போச்சு." சக்தி உரிமையோடு சொன்னாள். அவனை அப் படியே விட்டுவிட்டு அவர்கள் உசிலை ரோட்டின் வெளிச்சத்தில் புகுந்து நடக்க, உடைந்த கையைத்

தூக்க முடியாத வலியோடு அவர்கள் சென்ற பக்க மாய் தலையைத் திருப்பிப் பார்த்தபடி கதிர் சாய்ந்து கிடந்தான். "வத்திக்குச்சி பத்திக்காதுடா, யாரும் வந்து உரசர வரையில. வம்பு தும்பு வெச்சுக்கா தடா யாரும் உன்ன ஒரசர வரயில.." போதையில் கரைந்த அவன் குரல் உறங்க் கிடந்த அந்த வீதி யின் மீது கோரமாய் எதிரொலிக்க, பால் வேன்கா ரன் ஒரு நிமிடம் வண்டியை நிறுத்தி இவனை கவ னித்துவிட்டுச் சென்றான்.

2

அவளை அப்படி பார்த்திருக்கக் கூடாது. அந்த இருளில் நினைவு வைத்துக் கொள்ள முடியாத போதையில் தன்னைத் தவிர உலகில் ஒன்றுமில்லை என்னும் பைத்தியநிலை யில் பார்த்திருக்கக் கூடாது. வேறு யாருக்கும் தெரி யாத அவனை அவனது நிஜத்தை அவள் மட்டுந் தன் நெருங்கிச் சென்று பார்த்தாள். ஒரு ஆண் தன் ஆயுட்காலம் வரை குழந்தைத்தனம் கொண்டவ னாகவே இருக்கிறான். அதனாலேயெ அவன் தன்னை அரவணைத்துக் கொள்ளும் ஒரு பெண் ணின் அன்பிற்காக வாழ்நாள் முழுக்க காத்திருக்க வேண்டியுள்ளது. அந்த ஒரேயொரு பெண்ணைக் கண்டுபிடிக்க முடியாத தோல்வியில் தான் அவனது குழந்தைத்தனமும் தொலைந்து போய்விடுகிறது. சத்யா அவனை அவனின் கடந்த காலத்திலிருந்து மீட்டெடுத்தாள். உடைந்த கையில் கட்டுப் போட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவனை சக்தி பார்க்க வந்தபொழுது அவளை எவ்வாறு எதிர்கொள்வதென சங்கடமாக இருந்தது. உட லெங்கும் காயங்கள். சட்டை கூட போடமுடியாமல் வெறுமனே உடலில் துண்டை சுற்றியிருந்தான். காயங்களில் ஈ மொய்க்கும் போது கூச்சமாய் இருந் தது. யாராவது நலம் விசாரிக்க வரும்போதெல் லாம் சாவி குடுத்தது போல் கதிரின் அம்மா அழத் துவங்கிவிடுவாள். “பாருங்க மயினி, நம்ம குடும்பம் இருக்கற இருப்புக்கு இதெல்லாம் தேவையா?

சேருவாரு கூட சேந்து ஊர்வம்ப இழுக்காத டான்னு சொன்னா கேக்க மாட்டேங்கறான். நீங்க ளாச்சும் எடுத்துச் சொல்லிட்டுப் போங்க." பார்க்கிற எல்லோரும் அவனுக்கு புத்திமதி சொல்ல வேண் டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டார்கள். கட்டுப் போட்டு தொங்கவிடப்பட்ட கையோடு இவனைப் பார்க்க சக்திக்கு சிரிப்பு வந்தது. வீட்டில் சமைத்து எடுத்து வந்த நாட்டுக்கோழி சூப்பை ஒரு கிண்ணத் தில் ஊற்றி அவனுக்குக் கொடுத்தாள். அவளை பார்ப்பதை தவிர்த்தபடி வாங்கி குடித்தான். "பெரிய சண்டியரு. கூட்டத்துல சட்டைய கழட்டிட்டு ஆட் டம் போட்ற.. மூஞ்சியும் மொகரையும்." அவன் கவ னத்தை தன்னை நோக்கி திருப்பும்படி சக்தி திட்டி னாள். கதிர் அவளைப் பார்ப்பதை தவிர்த்து கிண் ணத்திலிருந்த சூப்பை ஆர்வமாய்க் குடித்தான். "நல்லா கேளுத்தா, அசித்து குமாரு என்ன இவங்க ஆத்தா புருஷனா? அவர் வாழ்கன்னு இவுக கத் தாட்டி இப்ப என்ன குடிமுழுகிப் போச்சு.." என கதி ரின் அம்மா கூடுதலாக கொஞ்சம் எடுத்துக் கொடுக்க "இந்தா சும்மா இரும்மா. ஆளும் பேருமா போயிருக்கப்ப பயலுகளுக்கு சப் போர்ட்டா கத்தா தான் செய்வாங்க." சூப் தீர்ந்து போனதால் கிண்ணத்தை கீழே வைத்தான். சக்தி துணியால் அவன் வாயைத் துடைத்து விட்டாள். "நீ சப்போர்ட்டா கத்தின சரி, அடிவாங்கினப்போ எல் லாம் எங்க போனானுக. புத்தி இருக்கா கொஞ்ச மாச்சும். எங்கூட வந்த பிள்ள உன்னய கேவலமா

திட்டுட்டுப் போறா. உனக்கு எதுக்கு இந்த வேல?" அவனுக்கு எதிரில் வாகாக அமர்ந்து கொண்டவள் முதுகிற்கு இணக்கமாக ஒரு தலையணை வைத் துக் கொண்டாள். "மெனக்கெட்டு திட்டிட்டுப் போற துக்குத்தான் வந்தியா?" கதிர் எரிச்சலோடு அவளி டம் கேட்டான், "ஏய் எதுக்குடா அந்தப் பிள்ளைய திட்டற? அய்யோ பாவம்னு வந்து பாத்தா பேச்சப் பாரு." கதிரின் அம்மா அவனை சத்தம் போட்டு அமைதிப்படுத்திவிட்டு "ஏத்தா இவென் சேர்க்க எதும் எனக்கு சுத்தமா பிடிக்கல. நாளப்பின்ன கல் யாணம் காட்சி பண்ணனும். ஆனா என்ன தொழில் பன்றான்னு கேளு. பொட்டலம் விக்கிறான். வம் பாடு பட்டு உழைக்க சொல்லிக் குடுத்தா அவங்கப் பனாட்டம் ரெண்டா நம்பர் வேலையாத்தான் செய் றான். " சற்று முன்பாக தடைப்பட்டிருந்த கண்ணீர் மீண்டும் அலைகடலென அவளுக்குப் பொங்கத் துவங்கியது.

"விடுங்கம்மா கொஞ்ச நா போச் சுன்னா அதுக்கு பொறுப்பு வந்துரும்." சக்தி கதி ரின் அம்மாவிற்கு சமாதானம் சொல்லிவிட்டு தர் மசங்கட்டமான நிலையில் எதுவும் பேசமுடியாமல் அமைதியாய் இருந்தாள். "நீ என்ன சின்னப் பய லாண்ணே. எல்லாத்தையும் சொல்லிக் குடுக்க. நீயாப் பாத்து புரிஞ்சு நடந்துக்க. நான் கௌம் பறேன்." கொண்டு வந்த பாத்திரத்தை எடுத்துக் கொண்டு அவள் கிளம்ப முருகனைக் குறித்து விசாரிக்கலாமா வேண்டாமா என்கிற குழப்பத்

தோடு கதிர் அவளையே பார்த்தான். தேடி வந்த அவளின் மனதை நோகடிக்க விருப்பமில்லாமல் அமைதியாய் இருந்தான்.

ஒன்றரை மாதங்களானது திரும்பவும் அவன் சத்யாவைப் பார்க்க. வாசு அண்ணன் வீட்டு கெடாவெட்டிற்கு பாண்டி கோவிலுக்கு கூப்பிட்டி ருந்தார்கள். பண்டிகை காலத்து சந்தோசங்களை விடவும் உற்சாகமானது கெடாவெட்டு சோறு . பாண்டிகோவில், கமுதி வழிவிட்ட ஐயன்னார் கோவில், சிவகாசி அருகிலுள்ள கூடமுடை ஐய னார் கோவில், சாத்தங்குடி முனியாண்டி கோவில் இப்படி ஏராளமான கோவில்களின் கெடாக்கறி அலாதியான சுவை கொண்டவை. கெடாவெட்டு சோறு திண்ணும் நாளில் எல்லாம் பாண்டிமுனி மீது அளவற்ற பக்தி மேலிடும் கதிருக்கு. பசிய றிந்து சோறு போடும் தெய்வம். எல்லா ஞாயிற் றுக்கிழமையும் பாண்டிமுனிக்கு விசேஷம் தான். மதுரையை யார் வேண்டுமானாலும் ஆளலாம், காவல் எப்பொழுதும் பாண்டிமுனிதான். தன் எல்லைக்குள் எந்த கெட்டதுகளையும் அண்டவி டாது. தன் பிள்ளைகள் உலகத்தில் எந்த மூலைக் குப் போனாலும் அவர்களுக்குக் காவல் தெய்வம் பாண்டிமுனிதான். அன்றைய தினம் ஏராளமான கெடவெட்டு விசேஷங்கள். அறுபட்ட ஆடுக ளின் குருதி வாசனையும், கொதிக்கும் குழம்பின் கறி வாசனையும், மட்டமான பிராந்தி வாசனையும் காற்றில் எங்கும் நிரம்பியிருந்தது. முரட்டுக் குரல்

களில் பேசிக் கொண்ட ஆட்கள் வியர்க்க விறுவி றுக்க வேலை பார்த்துக் கொண்டிருந்தார்க்ள்..

காட்டுமாரியம்மன் கோவில் சம்பவத் திற்குப் பின் கதிர் எல்லோருக்கும் தெரிந்தவனாகி இருந்தான். இந்த ஊருக்கும் எனக்கும் எந்த சம் பந்தமும் இல்லை என்பது போல் சுற்றிக் கொண்டி ருந்தவனை கை உடைந்த இந்த சில நாட்கள் எல் லோருடனும் நட்பாக்கி இருந்தது. புதிய நண்பர்கள் எல்லாம் வந்து நலம் விசாரித்துவிட்டுப் போனார் கள். சின்ன வயதில் கிரவுண்டில் விளையாடும் போது கூட இத்தனை நண்பர்கள் இல்லை. வாசு அண்ணன் தான் இவனை எல்லோருக்கும் நினை வுபடுத்தியது. அவன் தொழிலை முன்வைத்து எல் லோரும் ஒருமாதிரி பார்ப்பார்கள் என்கிற தயக் கத்திலேயே யாரோடும் பேசாமல் தவிர்க்கும் கதி ருக்கு இந்த புதிய அறிமுகம் கூச்சமாய் இருந் தது. பிளாஸ்டிக் சாக்கில் எடுத்து வந்த மிலிட்டிரி சரக்கைத் திறந்து எல்லோரும் குடிக்கத் துவங்கி யபோது பாண்டிமுனி வெயிலாய் உருமாறி உக்கிர மாய் இறங்கிக் கொண்டிருந்தார்.

காட்டமான பிராந்தி அந்த வெயி லுக்கு உகந்ததாய் இல்லை. தலையை பிளந் தது போன்ற எரிச்சல். கதிர் கடும் பசியோடு பந்தி பரிமாறும் இடம் தேடி நடந்தான். “எலேய் அசித்து குமாரு அவ்ளோதான உன் போத?” குடித் துக் கொண்டிருந்த ஒருவன் வம்பிழுக்க, “ஆத்தி இதுக்கு மேல குடிச்சு மறுபடியும் ஊர் வம்பிழுக்

கவா? போய்யா. இப்பதான் கை சரியாகி இருக்கு. நான் வேல வெட்டி பாக்க வேணாமா?" கதிர் சுதாரித்து சிரித்தான். அடுத்தடுத்து நிறைய பேர் பந்தி நடந்து கொண்டிருந்ததால் எது வாசு அண்ணன் வீட்டு வரிசையென இவனால் கண்டுகொள்ள முடியவில்லை. கோவில் சாப்பாட்டில் எந்த பந்தியில் உட்கார்ந்தாலும் யாரும் கேட்கப் போவதில்லை தான். ஆனால் விசேஷ வீட்டிற்கு வந்ததற்கு அத்தாட்சி முறையாக சாப்பிடுவதுதான். "யாரத் தேட்றீங்க?" பின்னாலிருந்து வந்த குரலுக்கு தலையைத் திருப்பினான், அவள் முகத்தை உடனே நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை. "நீங்க?" தயங்கிக் கேட்டான். "அதான அன்னிக்கும் போத. இன்னிக்கும் போத. குடிக்காத நாளுன்னு எதாச்சும் உண்டா?" அவள் முகத்திலிருப்பது கோவமா? சுளிப்பா? ஆர்வமா? யாரிவள்? கதிரின் மனம் வெவ்வேறான இடங்களில் தேடி அவளை நினைவுபடுத்திக் கொள்ள முயன்று தோற்றது. "நா தெனம் லாம் குடிக்கிற ஆள் இல்லங்க. சும்மா என்னிக்காச்சும். ஆனா உங்கள யாருன்னு தெரியலையேங்க." கூச்சத்தோடு சிரித்தான். "அன்னிக்கி ராத்திரி சாக்கடை ல கெடந்த உங்கள நானும் சக்தியக்காவும் தான் தூக்கி வெளிய போட்டு குளிபாட்டினொம்." அவள் சொன்ன போதுதான் அரையிருளில் அவளைக் கவனித்ததை மீட்டெடுக்க முடிந்தது அவனால். "அய்யோ ரொம்ப நன்றிங்க. சக்தி பாக்க வந்தப்போ கூட உங்களப் பத்தி விசாரிக்க

முடியல." அவன் சிரிக்கும் போது அந்த முகத்தில் ஒரு அறியாத்தனம் இருந்ததைக் கவனித்தாள். "ஐய. நல்லா குடிச்சிட்டு குடிச்சிட்டு எங்கியாச்சும் விழுந்து கெடங்க. கை சரியாகிடுச்சா?" சிநேகமாக சிரித்தாள். "கையைத் தூக்கிக் காட்டினான். "சரி ஆனதும் மறுபடியும் ஆட்டம். ம்ம்." கேலியாக அவள் கேட்க, "கெடாச்சோறு திங்கறப்போ ரெண்டு பெக் குடிக்காம திண்ணா பாண்டிமுனு கோவிச்சுக் கும்." என்று போதையில் தலைக்கேறிய பக்தி யோடு கண்களை உருட்டிச் சொன்னான். "ஏன் நாங்களும் தான் திங்கறோம். எங்களுக்கெல்லாம் பாண்டி முனி ஒன்னும் சொல்ல மாட்டேங்குது.?"

"மனசுல உண்மையான பக்தி இருக்கனும், சும்மா பாண்டி ஐயா இறங்கிருவாரா?"

அவள் சத்தமாக சிரித்துவிட்டாள். இடது ஓரத்தில் மூன்று தெற்றுப்பல். கழுத்தில் சின்னதொரு மச்சம். அவளின் பழுப்பு நிற மேனிக்கு அந்த மச்சம் அலா தியான அழகூட்டியது. சிரிக்கையில் இதழ்கள் ஒரு ஓவியத்தின் தனித்துவமான பகுதியைப் போலி ருக்க தன்னையே மெய் மறந்து பார்த்துக் கொண் டிருந்தான். பெண்கள் இப்படித்தான், சமயங்களில் பிரபஞ்சத்தையே மறக்கச் செய்து விடுகிறார்கள். "உங்க பேருங்க?"

"சத்யா"

இத்தனை சிக்கனமான பெயரா? அவளுக்கு அந் தப் பெயர் ஒரு ஆணின் பிம்பத்தைக் கொடுத்

தாலும் அந்தப் பேர் அவளுக்கானதாகவே தோன் றியது. எதிரில் இருந்த அந்த சில நிமிடங்க ளில் கண்களால் ஓராயிரம் புகைப்படங்கள் எடுத் துக் கொண்டான். "உங்களப் பத்தி சக்தி அக்கா நெறைய சொல்லுச்சு?"

"நெசமாவா? என்னன்னு சொன்னா?"

"ம்ம். நீங்க ரொம்ப நல்ல மனுஷராம். ரொம்ப பாவ மாம். உங்களுக்கு இன்னொரு பேரு கூட சின்ன வயசுல இருந்துச்சாமே... ம்ம் கிருபா..."

கதிருக்கு ஆச்சர்யமாய் இருந்தது. தன்னை சக்தி முழுவதுமாக வெறுக்கவோ புறக்கணிக்கவோ செய்வாளென நினைத்தவன் முகம் தெரியாத ஒருத்தியிடம் எதற்காக இத்தனை விவரங்களை சொல்லி இருக்கிறாள்.

"ஓ அவ்ளோ சொல்லி இருக்காளா? அப்ப நான் சொல்றதுக்கு ஒன்னும் இல்ல. நீங்க என்ன செய் றீங்க?"

"பி.எஸ்.ஸி மேக்ஸ். ஃப்ர்ஸ்ட் இயர்." மீண்டும் தெற் றுப்பல் தரிசனம். ஆனால் சத்தமில்லாத சிரிப்பு. "மேத்ஸா?" என இவன் பதற, "மேத்ஸ் ல தண் டமா நீங்க?" ஆர்வமாய்க் கேட்டாள். அவனுக்கு குடித்த மதுவின் போதை மொத்தமாக இறங்கி இவளின் மீதான கிறக்கம் பெருகியது. அவளோடு பேசிக் கொண்டிருக்கையிலேயே கண்கள் அவள் உடலில் அலைந்து திரிந்து அவளை முழுவது மாக அறிந்து கொள்ளத் துடித்தது. வாசு அண்

ணனின் மனைவி இருவரையும் சாப்பிடக் கூப்பிட் டார், "நான் அப்பறம் சாப்டறேன் அத்தாச்சி. நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. நான் பரிமாறறேன்." அவள் அவர்களின் கையிலிருந்து பாத்திரத்தை வாங்கிக் கொண்டு நடந்தாள். வரிசையில் உட் கார்ந்து சாப்பிடுவதா அவளோடு பேசுவதா என மனம் அடித்துக் கொண்டது.

"அத்தாட்சியா? வாசு அண்ணனுக்கு நீங்க என்ன வேணும்?" பரிமாறச் சென்றவளின் பின்னால் நடந் தபடியே இவன் கேட்க, "வாசு எனக்கு பெரி யப்பா பையன். அண்ணன்." என்றாள். இவனுக்கு தொடர்ந்து பேசுவதா வேண்டாமா என தயக்க மாய் இருந்தது. முகத்திலிருந்த உணர்வுகளைக் காட்டிக் கொள்ளாமல் "ஓ" என்றபடி சாப்பிட வரி சையில் உட்கார்ந்தான்.

ஒரு பெண்ணின் மீது காதல்வயப்படும் சரியான தருணத்தை அறுதியிட்டு சொல்லிவிடமுடியாது. அவளைப் பின் தொடர்ந்துசெல்வதிலோ அவள் வீடிருக்கும் வீதியில் சுற்றுவதிலோ இவனுக்கு விருப்பம் இல்லை. அவளோடு நெருங்க வேண்டுமென அலைபாயும் மனதை கூடுமானவரையில் கட்டுப்படுத்திக் கொண்டான். அவளுக்குத் தான் பொருத்தமானவனில்லை என்னும் கடுமையான தாழ்வுணர்ச்சி அவனுக்குள். காலை அவள் கல்லூரி செல்லும் நேரமும், பேருந்தும் தெரியும். வாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் அந்த நேரத்தில் அவளை தற்செயலாக பார்ப்பது போல் பார்த்துக் கொள்வான். சில நாட்கள் கல்லூரி முடிந்து வரும் நேரம். அவளிடம் எத்தனை உடைகள் இருக்கின்றன என்பதில் துவங்கி அவள் அணிந்திருக்கும் செருப்பு வரை அவள் குறித்தான எல்லாவற்றையும் ரகசியமாய் சேகரித்துக் கொண்டான். ஒரு பெண்ணின் மீதான விருப்பத்தை இணக்கமான நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளும் போதுதான் அவள் தனக்குள் எத்தகைய மனவெழுச்சியை உருவாக்கியிருக்கிறாள் என புரிந்து கொள்ள முடியும். சத்யாவை குறித்து யாரிடமும் பகிர்ந்துகொள்ள அவனுக்கு கூச்சமாய் இருந்தது.

திருமங்கலத்திலிருந்து ஆட்டோவில் சரக்கை எடுத்துக் கொண்டு டெலிவரிக்காக பழங்காநத்தம் சென்றான். பள்ளி கல்லூரிகள் முடிந்த மாலை நேரம், காற்று வெக்கையை வாரி இரைக்க,

நிதானமாக சென்ற அவன் ஆட்டோவினுள் டேப் ரெக்கார்டர் இரைந்து கொண்டிருந்தது. 'வத்திக் குச்சி பத்திக்காதுடா யாரும் வந்து ஓரசர வரை யில'. மன்னர் கல்லூரியை கடக்கையில் பேருந்து நிறுத்தத்தில் சத்யாவும் அவள் வயதையொத்த இன்னொருத்தியும் நிற்பதைப் பார்த்து வண்டியை நிறுத்தியவன். தலையை மட்டும் வெளியே நீட்டி அவளைப் பார்த்து கையசைத்தான். அவளும் கையசைத்தபடி வந்தாள். "என்ன புதுசா ஆட்டோ லாம். திருந்தி வாழப் போறிங்களா?" கதிர் சிரித் தான். "ஏன் இப்ப என்ன கெட்டுப் போச்சு, நல்லாத் தான இருக்கேன். எதுக்கு திருந்தனும்?"

"அது சரி. எங்க இந்தப் பக்கம்?"

"தெரிஞ்சவர் வண்டி. எஃப் சிக்காக எடுத்துட்டு போறேன். நீங்க எங்க போறீங்க?"

அவள் தன்னோடு இருந்த தோழியைக் கை காட்டி "அவ என் ஃப்ரண்டு, அவங்க வீட்ல ஒரு விசேஷம் அதுக்காக போய்ட்டு இருக்கேன்."

"வாங்க பழங்காநத்தம் வரைக்கும் நான் விட்டுட றேன்."

அவள் தயங்காமல் தன் தோழியை அழைத்தாள். வண்டி ஸ்டார்ட் ஆன போது பாதியில் நின்றி ருந்த அஜித் மீண்டும் பாடினார். பாட்டைக் கேட்ட தும் சத்யாவுக்கு அன்றைய இரவு நினைவுக்கு வர சத்தமாக சிரித்துவிட்டாள். கதிர் திரும்பி அவளை முறைத்துவிட்டு பாடலை நிறுத்தினான்.

“ஹலோ ஏன் பாட்ட நிறுத்தினீங்க மிஸ்டர் அஜித்?” என அவள் கேலியாகக் கேட்க, பதிலே சொல் லாமல் எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான். கண்ணாடி வழியாய் அவளை அவனும், தன்னைக் கவனிக்கிறானென்கிற என்கிற உணர்வில் அவ ளும் பார்த்துக் கொண்டபோது இருவருக்குள்ளும் உற்சாகமான அலைகள் தழும்பின. தனக்கு இத் தனை அருகில் இருக்கும் போதுகூட அவளோடு பேச ஒன்றுமில்லையா? இந்தத் தயக்கம் எந் தப் பெண்களிடமும் இல்லாமல் இவளிடம் மட்டும் ஏன்? ஒவ்வொரு பத்து விநாடிகள் இடைவெளி யிலும் அவளைப் பார்த்துக் கொண்டே வந்தவன் பைக்கரா தாண்டி போலிஸ் செக்பாயிண்ட்டில் வண்டியை மெதுவாக்கினான். குறிப்பாக ஆட் டோக்களை மட்டும் நிறுத்திப் பார்த்துக் கொண் டிருந்த போலிஸ்காரர்கள் தனது வண்டிக்காக காத்திருக்கக் கூடுமென்பது தெரிந்தது, இப்போ தைக்கு இந்த இரண்டு பெண்கள் தான் அவனது பாதுகாப்பு. பெய்ண்ட் உதிர்ந்து கோரமான சத் தம் எழுப்பிய இந்த ஆட்டோ போலிஸ்காரனின் அருகில் சென்றபோது உள்ளே இருந்து இரண்டு பெண்களையும் பார்த்த போலிஸ்

“எந்த ஏரியா வண்டி?” என பொதுவாகக் கேட்டான்.

“ஸார். வண்டி எஃப்ஸிக்கு போகுது ஸார். பழங் காநத்தம் ஆர்.டி.ஓ ஆஃபிஸுக்கு. தெரிஞ்ச புள் ளைங்க. அதான் போற வழில விட்டுட்டுப் போக லாம்னு கூட்டிட்டுப் போறேன்.”

போலிஸ்காரர் வண்டிக்குள் எட்டிப் பார்க்க

“ஆமா ஸார். எனக்கு சொந்தக்காரர் தான்.” சத்யா அவரிடம் சொன்னாள். வண்டியை போகச் சொல்லி அவர் கை காட்டியபோதுதான் அவன் இலகுவானான்.

“என்னாச்சு ஒன்னுமே பேச மாட்டேங்கறீங்க?” அவன் பார்வையை கவனித்த சத்யா கேட்க, “நீங்க ஏதாச்சும் பேசுங்க. எனக்கு பொண்ணுங்க கிட்ட பேசறதுன்னா கூச்சம்.” கதிர் தன்னடக்கமாகச் சொன்னான்.

“ஆமா சொன்னாங்க, ரொம்ப கூச்சப்படுவிங் கன்னு.”

“யாரு?”

“சூரசம்ஹாரம் பொட்டல்ல.” அவள் புன்னகை யும் குரலும் இப்பொழுது அவனுடனான சினேகத் திற்கு அவள் தயாராய் இருப்பதைக் காட்டியது.

பழங்காநத்தத்தில் அவர்களை இறக்கிவிட்ட போது தனது சுயநலத்திற்காக அவளைப் பயன் படுத்திக் கொண்டோமோ என கதிருக்கு குற்ற வுணர்வாக இருந்தது. சரக்கோடு பிடிபட்டிருந்த தால் குறைந்தபட்சம் ஒரு வருட தண்டனை. நன்றி சொல்லலாமா? காரணம் தெரிந்தால் தன்னைக் காறித்துப்புவாள்.

“ஓகேங்க தாங்க்ஸ்.” ஆட்டோவிலிருந்து இறங் கிக் கொண்ட இரண்டு பேரும் இவனுக்கு விடை கொடுக்க, எதையோ சொல்ல யோசித்து “சத்யா”

எனக் கூப்பிட்டான். "ம் சொல்லுங்க..." அவள் அதே இடத்தில் நிற்க எதற்காக கூப்பிட்டோம் என்பது மறந்து போய் சில நொடி யோசித்தான். "இல்லங்க உங்க ஃபோன் நம்பர் குடுப்பீங்களா?" உதடுகள் படபடவென அடித்துக் கொள்ள, விபரீதும் நடந்து விடுமோ என்கிற அச்சத்தில் துடித்த இருதயத்தை சபித்தான். "எங்கிட்ட மொபைல் இல்லங்க. உங்க நம்பர் குடுங்க. நான் வீட்டு நம்பர் ல இருந்து கூப் டறேன். " பையில் யாரோ தந்த விசிட்டிங் கார்டில் தனது எண்ணை எழுதிக் கொடுத்தான்.

எதற்காக எண்ணை பரிமாறிக் கொண்டோம்? அவள் அழைப்பாளா? நாளின் சரி பாதி நேரமும் அவளைக் குறித்தே மனம் யோசித் துக் கொண்டிருந்தது. தன் மனதின் விருப்பங்க ளைத் தொடர்ந்து செல்லும் மனிதன், அது சிக் கல்களாய் மாறும்போது எத்தனை குழப்பங்களுக் குள்ளாகிறான்? அறுத்தெரிய முடியாத பந்தமாய் அவன் ஆன்மாவெங்கும் சூழத் துவங்கிய சத்யா வின் பிம்பங்களை பிரதிபலிக்காத பூக்களில்லை. எல்லாக் காலைகளும் எல்லா அஸ்தமனங்களும் அவளை உயிர்ப்பிக்க வைத்திருக்கவும் அவள் நினைவுகளோடு இவனை பித்து கொள்ளச் செய்ய வைப்பதையுமே தங்களின் பிரதான கடமையாய் செய்து கொண்டிருந்தன. பேருந்தில் அவள் கல் லூரிக்குச் செல்கையிலும், வீதியிலிருந்து தோழி களோடு கடைகளுக்கு செல்கையிலும் தூரத்தில் எங்கிருந்தாவது அவளைத் தொடர்வதை வழக்க

மாய் வைத்திருந்தான். அவன் கண்களின் தகிப் பில் தனக்காக எத்தனை எரிந்துகொண்டிருக்கி றான் என்பதைப் புரிந்து கொண்ட சத்யாவிற்கு அவன் நோக்கம் தெரிந்து அச்சமானது. இந்த சிநேகிதம் இதற்கு அடுத்த நிலைக்குச் செல்லும் போது நிகழும் விபரீதங்கள் சாதாரணமானவை யல்ல என்பதை அவள் புத்தி உணர்த்தியிருந்தது. அப்போதைக்கு அந்த பிரச்சனைக்குத் தீர்வு சக் தியால் மட்டுமே கிடைக்கக்கூடுமெனத் தோன்ற, அவளிடமே புலம்பினாள். "அக்கா இந்த கதிர் என்ன லூசாக்கா?நான் எங்க போனாலும் என் பின் னாலயே நாய் மாதிரி வருது. உனக்குத் தெரிஞ்ச ஆளேன்னு ரெண்டு வாட்டி சாதாரணமா சிரிச்சுப் பேசினா அது நெனப்பு வேற எங்கியோ போகுது. யாராச்சும் பாத்து எங்க வீட்ல சொன்னா என்ன ஆகும்னு யோசிச்சுப் பாரு?"

"என்னடி சொல்ற? அந்தண்ணன் அப்படில்லாம் செய்யாதே." சக்திக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் அவள் காட்டிக் கொள்ளவில்லை.

"சத்தியமாக்கா. நானே செருப்பக் கழட்டி அடிச்சி ரலாமான்னு பாக்கறேன். ஆனா பக்கத்துல வந்து பேசவும் மாட்டேங்குது சனியன். அவங்க என்ன சாதி, நம்ம என்ன சாதி? கொஞ்சமாச்சும் பிராக்டிக் கலா யோசிக்காத. நீ சொல்லி வெய்யி. இல்லன்னா நான் எங்கப்பா கிட்டயும் வாசு அண்ணங்கிட்டயும் சொல்லிருவேன்." தனக்கு எந்தப் பிரச்சனையும்

வந்துவிடக் கூடாதென்கிற எச்சரிக்கை உணர்வு அவளிடம்.

“லூசுத்தனமா நீ வீட்ல எதும் சொல்லிராதடி. நான் அதுகிட்ட பேசறேன்.” சக்தி அவளை சமாதானம் செய்து அனுப்பினாள்.

பட்டுநூல்காரன் பேட்டையின் எல் லையில் இருக்கும் குட்டிசுவரில் மாலை நேரங் களை கழிப்பதை கதிர் விரும்புவதில்லை. அது அவனை விடவும் சிறுவர்களுக்கான சுவராய் இப் பொழுது மாறிப்போனது. அந்த வீதியின் எல்லை வரை இருக்கும் எல்லா வீடுகளையும் பார்க்கக் கூடிய வசதி கொண்ட சுவர்கள். வடக்கு தெற் காக அந்த சுவர்களில் ஆறேழு பேர் தாராளமாய் உட்காரலாம். மாலை அல்லது காலை நேரங்க ளில் மத்திம வயதுப் பெண்கள் குடி தண்ணீர் அடிப்பதற்காக வீட்டு வாசல்களில் மூச்சு வாங்க இயங்குவதை முன்பு கதிரும் அவன் நண்பர்க ளும் பார்த்ததைப் போல் இப்பொழுது இந்த சிறு வர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொ ழுதும் தங்களது பருத்த முலைகளை மறைக்க முயன்று தோற்று ஒதுங்கிக் கிடக்கும் சேலை யைப் பொருட்படுத்தாமல் அப்பெண்கள் குழாயில் தண்ணீர் அடித்துக் கொண்டுதான் இருக்கிறார் கள். காலமாற்றம் குறித்தும் ஆட்கள் மாறிப்போ னது குறித்தும் முன்பைப் போலவே இப்பொழுதும் அவர்களுக்கு அக்கறையில்லை. அங்காள ஈஸ் வரி நகரின் பாதியை அடைத்திருக்கும் மரக்கடை

வாசலில் தஞ்சமடையும் லாரி ஓட்டுநர்களோடு அவ்வப்போது கதிரும் இப்பொழுது கூடுவதுண்டு. கடை வாசலில் இருக்கும் அறுக்கப்பட்ட மரங்களில் அமர்ந்தபடி எப்பொழுதும் பரபரப்பாக இருக்கும் தேசிய நெடுஞ்சாலையைப் பார்ப்பது சுவாரஸ்யமான பொழுதுபோக்கு. நேரங் காலமின்றி அலறும் ஹோட்டல்களின் ஸ்பீக்கர் சத்தமும் சாலைகளின் இருபுறங்களும் ஒதுங்கி நிற்கும் லாரிகளும் சலிப்பே தருவதில்லை. ஆளற்ற மரத்தில் அமர்ந்து தனது மொபைலை நோண்டிக் கொண்டிருந்தவனை தூரத்திலிருந்தே சக்தி அடையாளம் கண்டு கொண்டாள். மரக்கடையில் நிறையபேர் இருந்தனர். நின்ற இடத்திலேயே அவன் எண்ணுக்கு அழைத்தாள்.

“ஹலோ” அவள் பெயரைப் பார்த்த சந்தோசத்தில் அவன் சிரிக்க

“ஏய் எரும எந்திரிச்சு வா இங்க..”

சத்தம் வராமல் கோவப்பட்டாள். சாலையில் எதிர்ப்புறத்தில் தூரமாக நின்றவளைப் பார்த்தவன் எழுந்து தன் உடையை சரி செய்துகொண்டு அவளை நோக்கி நடந்தான்.

லலித் ஒர்க் ஷாப்பை ஒட்டிய சந்துக்குள் அவனை வரச் சொன்னவள் முடிந்தவரை சத்தம் போடாமல் பேச வேண்டுமென தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள்.

“என்ன அதிசயமா இருக்கு? என்னயத் தேடி வந்தி ருக்க?”

“நீ செஞ்ச வேலைக்கி நான் தேடி வந்ததால பிரச் சன இல்லாம இருக்கு.”

“ஏன் நான் என்ன செஞ்சேன்?”

“ஒரு பொண்ணு கொஞ்சம் சாதாரணமா சிரிச்சுப் பேசிட்டா பின்னாலயே போவியா? அவய்ங்க வீட் டுக்குத் தெரிஞ்சா என்ன ஆகும்? அவ வந்து என்னய கேவலமா திட்டிட்டுப் போறா? இவனப் போயி நீ எப்டி அண்ணன்னு கூப்டறன்னு.”

அவளுக்குத் தன் மீது விருப்பமில்லை என் கிற நிஜத்தை அவனால் ஏற்றுக்கொள்ள முடி யவில்லை. இத்தனை ஈர்ப்பு ஒருபோதும் எந்த வொரு பெண்ணின் மீதும் வந்ததில்லை. அவள் தன்னிடம் வெளிப்படுத்திய புன்னகையை அவன் தவறாக எடுத்துக் கொண்டானா? தனக்கு விருப்ப மான ஒரு பெண் என்ன செய்தாலும் அது தனக் காகவே செய்வது போல் நினைத்துக் கொள்ளும் பிரேமை எத்தனை பலவீனமானது. அவனுக்கு வெடித்து அழ வேண்டும்போலிருந்தது.

“அந்த பிள்ளைக்கு நெசமாவே என்னய பிடிக்க லையா?”

“பிடிக்கலையா? நீ நாய் மாதிரி பின்னால வர்றன்னு சொல்றா? இனி வந்தா செருப்பால அடிப்பாளாம்.”

அவனுக்கு உடல் கூசி அவமானமாய் இருந்தது. தான் யாரென்கிற யதார்த்தம் எங்கோ உரைக்க அந்த இடத்தில் நிற்க முடியாமல் உடல் பதற

“இனிமே அவ பின்னால போ மாட்டேன். அவ கிட்ட சொல்லிடு.” அந்த சந்திலிருந்து வெளியேறி வேகமாய் நடந்தவன் எந்த நொடியிலும் அழுதுவிடுவான் என்பதை கவலையோடு சக்தி பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த யதார்த்தத்தை இவன் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்பதால் அவளிடமும் தற்காலிகமாய் வேறு சமாதானங்கள் இல்லை.

4

அத்தனை எளிதில் அவளையும் அவள் நினைவுகளையும் அவனால் தூக்கி எறி யமுடியவில்லை, அதே சமயம் அதன்பிறகு அவ ளைத் தேடிச்சென்று பார்க்கும் துணிச்சலும் இல்லை. மாரியோடு தொழிலைக் கவனிக்கத் துவங்கினான். அவ்வப்போது தொடர்ந்த வயிற்று வலியின் காரணமாய் கதிரின் அம்மாவிற்கு கருப்பை நீக்கம் அறுவை சிகிச்சை செய்ய வேண் டுமென மருத்துவமனையில் சொல்லிவிட ஏற்க னவே வாங்கிய கடன்களை அடைக்காத நிலை யில் புதியவர்களிடம் கடன் வாங்கிய சூழல் அவ னுக்கு. மாரிதான் வாசு அண்ணனிடம் கேட்கச் சொன்னான். அவனுக்குத் தயங்கி மறுக்க, "என்ன வீராப்பு வெண்ண. அதான் அந்தப் பிள்ள பின்னால போறதில்லை ல. இப்ப என்ன? கடன் தானடா கேக்கப் போற. தனியாப் போக கூச்சமா இருந்தா சொல்லு நானும் வாரேன்." கதிர் பதிலே சொல்லா மல் யோசித்தான். மாரி வம்படியாக அவன் தோள்க ளைத் தள்ளி இழுத்துக் கொண்டு போனான்.

வாசு அண்ணனுக்கும் சத்தியாவிற் கும் அடுத்தடுத்த வீடு. அவள் வீட்டைக் கடக்கை யில் எவ்வளவு முயன்றும் அவனால் சில நொடிகள் தன் கவனமும் கண்களும் அங்கு போவதை தடுக்க முடியவில்லை. படபடவென அடித்துக் கொண்ட மனம் அவளைப் பார்க்கவில்லை என்றதும் இயல் பானது. விஷயம் கேள்விப்பட்டு வாசு அண்ண

னுக்கு கதிரின் மேல் கோவம். "எங்கிட்ட வந்து அவசரத்துக்கு காசு கேக்க என்ன உனக்கு வீறாப்பு. அப்பறம் எதுக்குடா பழக்கவழக்கம். மயிராண்டி.?" அவர்கள் இருவரும் வீட்டிற்கு செல்வதற்கு முன் பாகவே பணத்தை எடுத்து தயாராய் வைத்தி ருந்த வாசு அண்ணன் உரிமையாய் அவனுக்குக் கொடுத்தார். பதில் சொல்ல முடியாத நேரங்களில் வரும் அசட்டுச் சிரிப்போடு வாங்கிக் கொண்டவன் "ரெண்டு மாசத்துல குடுத்துர்றண்ணே." என சத் தம் வெளியே கேட்காமல் சொன்னான். "அடே யப்பா ஒரு அவசரமும் இல்ல, நீ மெதுவாவே குடு. மொத்தமால்லாம் குடுக்க வேணாம், கொஞ்சம் கொஞ்சமா குடுத்தா போதும்."

"சரிண்ணே."

அவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே சத்யா மூன்று பேருக்கும் தேநீர் எடுத்து வந்தாள். அவள் கண்களில் இப்பொழுது அலட்சியமில்லை, இவன் மீது சாதாரணமான பார்வை. இவனுக்குத்தான் பதட்டத்தில் வியர்த்தது. கைகளில் இருந்த நடுக் கத்தை மறைத்துக் கொண்டு தேநீர் எடுக்க,

"அம்மாவுக்கு முடியலைன்னு அலைஞ்சு நீயும் உடம்ப கெடுத்துக்காதடா. கொஞ்சம் பாத்து இரு." வாசு அண்ணன் அவன் சரியான உறக்கமில்லாமல் அப்படி இருக்கக் கூடுமென சொல்ல அவன் அவ ரைப் பார்ப்பதை தவிர்த்தபடி "சரிண்ணே."என் றான். தேநீர் குடித்துவிட்டு இருவரும் அந்த வீட்

டிலிருந்து வெளியேறியபோது கையிலிருந்த பணம் பெரும் பாரமாய் மாறியிருந்தது.

முன்பு அவனை அனுமதித்து குணப் படுத்திய அதே மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனை. இந்தமுறை பெண்கள் வார்ட். உடனிருந்து பார்த்துக் கொள்ள ஒருவருமில்லாமல், பொருள் விற்ற நேரம் போக, வீட்டில் சமைத்து அம்மாவிற் கான உணவை எடுத்துக் கொண்டு வருவான். இரவில் ஆண்கள் அங்கு தங்க முடியாதென்ப தால் பக்கத்து படுக்கையில் துணைக்கு வரும் பெண்களிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட் டுச் செல்வான். இரவில் வேலை. பகலில் மருத்து வமனை. கண்கள் எப்போதும் உறங்கச் சொல்லி கெஞ்சும். இந்த மருத்துவமனையும் நோயில் வதங்கிய மனிதர்களும் அவனை பலவீனப்படுத் தினார்கள். ஹோட்டல் வேலைக்காக முருகன் சொல்லிக் கொடுத்த சமையல் கை கொடுத்ததால் அவனுக்கு சமைப்பதில் பிரச்சனை ஏற்பட்டிருக்க வில்லை. ஒருபோதும் தனக்கு அம்மாவின் பெரிய அன்போ நேசமோ இல்லையென நினைத்துக் கொண்டிருந்தவன் எதற்காக அவளுக்காக தின மும் சமைத்த உணவுகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்? இத்தனை அக்கறையாக பார்த் துக் கொள்கிறோமென தன்னைத் தானே கேட் டுக் கொண்டான். பந்தங்களில் இருந்து துண்டித் துக் கொள்ளுதல் எளிதான காரியமல்ல என்பதை காலம் அவனுக்கு உணர்த்தியிருந்தது.

அறுவை சிகிச்சைக்கு நாள் குறித்து இருந்தார்கள். கண்டிப்பாக ஒரு பெண் துனை வேண்டுமென்ற நிலை. தனியாக ஒரு பிள்ளையாக இருப்பதன் சாபம் இது. அதுவும் ஆண் பிள்ளை. ஒரு ஆண் பிள்ளையால் குடும்பத்திற்கு என்ன பிரயோஜனம்? நூறு பேர் பார்க்க இத்தனை நாட்கள் மருத்து வமனையின் படுக்கையில் அம்மாவின் மலத்தை எடுத்து அதை கழிவறையில் போட்டு வருகி றான். ஆனால் சுத்தப்படுத்துவதை அவளே தான் செய்து கொண்டிருக்கிறாள். இப்பொழுது அதை யும் செய்ய வேண்டுமென்கிற நிலையில் அவன் வயது அம்மாவிற்கும் அவனுக்கும் ஒருசேர கூச் சத்தைத் தந்தது. யாரை உதவிக்கு அழைப்பதென் கிற குழப்பம். துணைக்கு உதவ வந்தாலும் இத் தனை வேலைகளை முகச்சுளிப்பின்றி யார் செய் யக் கூடும்? மனதொடிந்த வேதனையில் அறுவை சிகிச்சைக்கு முதல் நாள் மருத்துவமனையின் நீண்ட வளாகத்தில் அசதியில் வெறும் தரையில் உறங்கிக் கொண்டிருந்தான். மருத்துவமனையின் எல்லா வீச்சங்களும் பழகிப்போனதால் குடலைப் புரட்டும் நெடி தொந்தரவு செய்வதில்லை. இடது கன்னத்தில் எச்சில் வழிய உறங்கிக் கொண்டிருந் தவனை யாரோ எழுப்புவது போலிருக்க அசதி யோடு எழுந்து பார்த்தான். மாற்று உடைகள், புதிய படுக்கை விரிப்புகள் பழங்களென இரண்டு மூன்று பைகளோடு சக்தி வந்திருந்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டான்.

“எதாச்சும் சாப்ட்டியா இல்லயா? ஏன் இப்டி இருக்க?”

அவள் வார்த்தைகளில் அசலான அக்கறை இருந்தது. முகத்தைத் துடைத்துக் கொண்டவன் “எனக்கென்ன நல்லாத்தான் இருக்கேன். வா.” என பெண்கள் வார்டிற்குள் அவளை அழைத்துச் சென்றான்.

“மாரியண்ணன் சொல்லித்தான் நாளைக்கு ஆப்ரேசன்னு எனக்குத் தெரியுது? எங்கிட்ட சொல்றதுக்கு என்ன உனக்கு?” உரிமையோடு கோவப்பட்டவளுக்கு அவன் எந்தப் பதில்களையும் சொல்லி இருக்கவில்லை. சரியாக சாப்பிடாமல் களைத்து மெலிந்து போயிருந்த அம்மா இவளைப் பார்த்து சோபையின்றி சிரித்தாள். நான்கு படுக்கைகளுக்கு பொதுவாக ஓடிக்கொண்டிருந்த பழைய காற்றாடியில் காற்றை விடவும் சத்தம் அதிகமாக வந்து கொண்டிருந்தது. பக்கத்து படுக்கையில் இருந்த பெண்ணிற்கு அவளின் மகள் பழச்சாறு குடுக்க, பாதியை கதிரின் அம்மாவிற்கும் கொடுத்தாள். மருத்துவமனை தரும் சொந்தங்கள் அபூர்வமானவை. தனியாக தன் அம்மாவைப் பார்த்துக் கொள்ள இவன் படும் சிரமங்கள் கண்டு சுற்றியிருந்த எல்லோருமே அவனுக்கு உதவியாய் இருந்தார்கள்.

“எனக்கு இது சொல்லவே இல்லம்மா. மாரிய்ண்ணன் சொல்லித்தான் தெரியும்.” சக்தி கதிரின் அம்மாவிடம் தாமதமாக வந்து பார்த்ததற்காக வருத்

தப்பட்டாள். “எனக்கென்ன வேல இருக்கு. அவ ரும் ஊர்ல இல்ல. மாமனார தனம் பாத்துக்கப் போறா. என்னயக் கேட்டா நான் வந்து பாத்துக்க மாட்டேன்னா சொல்லப் போறேன்.”

“அதுக்கில்லம்மா, ஒரு நா ரெண்டு நான்னா சரி. பத்து பதினஞ்சு நாள்னா சிரமம் ல”

கதிரின் அம்மா முன்னை விடவும் ஒடுங்கிப்போன குரலில் சொன்னாள்.

“அதெல்லாம் ஒரு சிரமமும் இல்லம்மா.”

பொருட்களை எல்லாம் படுக்கைக் கீழ் வைத்த வள், அந்த இடத்தை சில நிமிடங்களில் தனதாக் கியிருந்தாள். மாலை இனிமா கொடுக்க வேண் டும் என்பதால் திட உணவு எதுவும் கொடுக்க கூடாதென சொல்லியிருந்தார்கள். கதிரின் அம்மா படுத்திருந்த படுக்கையை கொஞ்சம் தூய்மை யாக்கி அவளை கொஞ்சம் வசதியாய சாய்த்து உட் கார வைத்தாள். கதிர் அவள் செய்வதை எல்லாம் அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க, பக்கத்து படுக்கையிலிருந்த பெண்

“யாரு கதிரு இது?” எனக் கேட்டாள்.

“சொந்தக்கார பிள்ளதான் அத்த. தங்கச்சி.” என் றான்.

“இதெல்லாம் பொம்பிளைங்க கூட இருந்து பாத் துக்கிட்டாத்தான் கதிரு சரியா இருக்கும். பாரு அந் தப் பிள்ள எப்பிடி நாசுக்கா எல்லாத்தையும் செய் யுதுன்னு.” அந்த அத்தை சொன்னது அவனுக்குப்

புரியாமல் இல்லை. அவர்கள் பேசுவதை புன்ன கையோடு வேடிக்கை பார்த்துக் கொண்டே சக்தி அங்கிருந்த தேவையில்லாத பொருட்களை எல் லாம் எடுத்துக் கொண்டு போய் வெளியே போட்டு வந்தாள்.

“சரிண்ணே நீ போயிட்டு விடிகாலை ல வா. நான் பாத்துக்கறேன்.”

“வேணாம் டி. நீ கெளம்பிப் போ, நீ அந்த கக்கூஸ் பக்கம்லாம் போனா வாந்தியெடுத்திருவ. உனக்கு எதுக்கு தேவ இல்லாத கஷ்டம். நீ கெளம்பு.” என தர்மசங்கடத்தோடு சொன்னான்ல். அவள் உத வியை ஏற்றுக்கொள்வதற்கான எந்த தார்மீக உரி மைகளும் தனக்கில்லை என்னும் குற்றவுணர்ச்சி. “எல்லாம் நான் பாத்து பழகினதுதாண்ணே. எங் கம்மாவுக்கும் இங்கதான் ஆப்ரேஷன் பண் ணோம். நாந்தான் பாத்துக்கிட்டேன். எல்லாத்தை யும் பொம்பளைங்களால சகிச்சுக்க முடியும்ணே. நீ போயிட்டு காலை ல வா.” அரை மனதோடு கதிர் அங்கிருந்து கிளம்பிய போது எல்லா சொந் தக் காரர்களும் கைவிட்ட பின்னும் சின்னதொரு காலத்தில் காட்டிய அன்பிற்காக யாரோ ஒரு பெண் தனக்கு உதவியாய் வந்திருக்கிறாள் என்ப தில் அவனுக்கு மனம் கலங்கி கண்ணீர் கசிந்தது. அழும் எல்லா இதயங்களுக்கும் யாரோ ஒருவரின் இருதயம் ஆறுதலாய் இருப்பதால் தான் இன்னும் உலகம் வன்முறையால் அழியாமல் மிச்சமிருக்கி றது.

அந்த வெள்ளிக்கிழமை கதிரின் அம்மாவோடு சேர்த்து எட்டு பேருக்கு அறுவை சிகிச்சை முடிந்திருந்தது. சக்தி பெரும் துணையாய் அவனோடு இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டாள். இரண்டு நாட்கள் வீட்டிற்குக் கூடப் போகாமல் கதிரின் அமமா இயல்பாக எல்லாம் சாப்பிடக் கூடிய நிலை வருகிற வரை உடனிருந்து பார்த்துக் கொண்டாள். மாரியும், தெருவிலிருந்து பக்கத்துவீட்டுக் காரர்களும் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். யுத்த களத்தை கடந்த நிம்மதி அவனுக்கு. மூன்றாவது நாள் காலை வீட்டிற்கு போன சக்தி மாலை திரும்பி வரும்போது சத்யாவும் அவளோடு வந்தாள். இந்த புதிய சங்கடத்தை எதிர்பார்க்காத கதிருக்கு அங்கு நிற்பதா வேண்டாமா என யோசனையாய் இருந்தது. அவளைப் பார்ப்பதை முடிந்தவரை தவிர்த்தவன் ஏதோ வேலையாய் இருப்பது போல் ஒவ்வொரு படுக்கையாக சென்று அவர்களுக்கு டிஸ்சார்ஜ் எப்போது சொல்லி இருக்கிறார்களென விசாரித்தான். சத்யா கதிரின் அம்மாவோடு இயல்பாக பேசிக் கொண்டிருந்தாள். இவன் அவள் வந்ததில் அச்சம் கொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு சக்தி அவனிடம் சென்றாள்.

“ஏய் லூசா நீயி.? அவ உங்கம்மாவ பாக்க வந்திருக்கா. நீ மூஞ்சியக் காட்டாம போயிட்டு இருக்க.”

“என்ன செய்யச் சொல்ற? புடிக்கலைன்னு சொன்ன புள்ள மூஞ்சிய எப்பிடிப் போயி பாக்க றது?”

“மயிரு. ஒரு பொம்பள நீ கேட்டதுக்கு மட் டும் சரின்னு சொல்லனும். இயல்பா ஒரு பழக் கம் இருக்கக் கூடாது. நல்லது கெட்டது விசா ரிக்க கூடாது. ஏன் இப்பிடி சின்னப்பையன் மாதிரி இருக்க. வா. அவ மேல எந்த எண்ணமும் இல்லாம வந்து பேசு.”

வம்படியாக இழுத்துக் கொண்டு போனாள். வெறு மனே “வாங்க” என்றவனுக்கு பதிலாய் சின்ன தாய் சிரித்தாள். அவளைக் குறித்து அம்மாவிடம் சொன்னான். நீண்ட காலம் பழகியது போல் சத்யா அம்மாவிடம் இயல்பாக பேசினாள். பெண்கள் இத் தனை சீக்கிரம் தங்களுக்குள் நெருக்கமாகி விடு வது போல் ஒரு ஆணும் பெண்ணும் நெருக்கமா கிவிட்டால் சிக்கல்களே இல்லாமல் போய்விடும். ஃப்ளாஸ்க்கில் இருந்த தேநீரை அவளுக்கும் சக் திக்கும் கொடுத்த போது மறுக்காமல் வாங்கிக் குடித்தார்கள்.

“இன்னும் ரெண்டு நாள் ல டிஸ்சார்ஜ் பண்ணி ருவாங்களாம். நீ இன்னிக்கு மட்டும் பாத்துக்க. நாளைக்கு அம்மாவே கொஞ்சம் நடக்க ஆரம்பிச் சிருவாங்க.” கதிர் சக்தியிடம் சொல்ல, “அண்ணே நீ உன் சோலியப் பாத்துக்கிட்டு கிளம்பு. நான் வர் றதா வேணாமான்னு நான் பாத்துக்கறேன்.” அவள் வம்படியாக அங்கிருந்து அவனைக் கிளப்பினாள்.

அவர்களிடமிருந்து அப்போதைக்கு தப்பித்தால் போதுமென உடனடியாக விடைபெற்றுக் கொண்டு கிளம்பி மருத்துவமனை வாசலுக்கு வந்து பேருந் திற்காக காத்திருந்தான்.

"கூப்ட்டுட்டே இருக்கேன். திரும்பிப் பாக்காம வந் துட்டிங்க." தனக்குப் பின்னால் மூச்சிரைக்க யாரோ பேசும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்க்க, தன் தோள் களுக்கு மிக அருகில் சத்யா நின்று கொண்டிருந் தாள்.

"உங்களோடயே சேந்து போயிரலாம்னு தான் வந் தேன். ஏன் திரும்பியே பாக்கல நீங்க.?" முகத்தி லிருந்த வியர்வையத் துடைத்துக் கொண்டு கேட் டாள்.

"எனக்கு நீங்க கூப்ட்டது கேக்கலங்க." அவன் பேசும் மனநிலையில் இல்லாத தயக்கத்தோடு சொன்னான். தங்கள் இருவரையும் சுற்றி இருப்ப வர்களில் சிலர் பார்க்கக் கூடுமென்கிற பயம் வந் தபோது ஊர்க்காரர்கள் தெரிந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என ஒருமுறை வேகமாக பார்த் தான்.

"ஹலோ பயப்படாதிங்க. நான் வீட்ல சொல்லிட்டுத் தான் வந்தேன். அண்ணனனே நான் போக நேர மில்ல நீ ஒரு எட்டுப் போயிட்டு வான்னு சொல் லிதான் அனுப்புச்சு." அவன் மனதைப் புரிந்து கொண்டு அவனை இயல்பாக்கினாள்.

"ஓ." ஆசுவாசடைந்து கொண்டவன் "சரிங்க "48 வந்ததும் நீங்க கெளம்பிப் போங்க, எனக்கு இன் னொரு வேல இருக்கு. முடிச்சிட்டு வர லேட் டாகும்." அந்த நிறுத்தத்திலிருந்து கிளம்பி வேறு இடத்திற்கு செல்லச் சொல்லி மனம் படபடத் தது. அவள் உள்ளெழுந்த கோவத்தை வெளிக் காட்டாமல் தன் உருண்ட கண்களால் அவனை முறைத்தபடி நின்றாள். மெல்லிய இதழ்களுக்குள் ளிருந்த தெற்றுப்பல்லையும் ஆத்திரத்தில் கடிப்பது தெரிந்தது. உள்ளங்கால் வியர்க்க ரப்பர் செருப் பில் வியர்வை அதிகமாகி அழுக்குகளோடு வழியத் துவங்கியது.

"இன்னும் அதையே நெனச்சுட்டு இருக்கீங்களா? விடுங்களேன். நான் அப்பிடி பேசினதுக்காக மன் னிச்சுக்கங்க போதுமா?."

"ச்ச ச்ச. அப்டில்லாம் இல்ல சத்யா. எனக்குத்தான் ஒரு மாதிரி குற்றவுணர்ச்சியா இருக்கு. அதனால தான்."

"அதெல்லாம் ஒன்னும் இருக்க வேணாம். உங்க மேல எந்த தப்பும் இல்ல விடுங்க ப்ளீஸ்." அவ ளிடம் பழைய இயல்புத்தன்மையும் புன்னகையும் திரும்பியதைப் பார்த்தபோது கதிரின் மனம் பட் டுப்பூச்சிகளின் சிறகுகளைப் போல் மென்மையாய் விரிந்து பறந்தது. சில நாட்களாகவே அரித்துக் கொண்டிருந்த அச்சத்திலிருந்து தான் விடுபட்டு விட்டதான நிம்மதி. களைத்து ஒடுங்கின முகத்தின்

எல்லா நரம்புகளும் கிளர்ச்சியுற அரும்பிய மீசை மறைத்திருந்த இதழ் விரித்து சிரித்தான்.

"அப்பா.. இதுக்கு எவ்ளோ நேரம்? ஒன்னு குருட்டுத் தைர்யம், இல்லன்னா சுத்த பயந்தாகுளித்தனம். ரெண்டுக்கும் நடுவுல இருக்கறதே இல்ல."

அவள் பேசப் பேச சந்தோசத்தில் கதிர் எல்லாவற்றுக்கும் வெறுமனே சிரித்தபடி தலையாட்டிக் கொண்டிருந்தான். அந்த சின்னஞ்சிறிய பொழுதின் அற்புதத்தை தொந்தரவு செய்வது போல் திருமங்கலம் செல்ல பேருந்து வர இருவரும் பின் வழியாய் ஏறிக் கொண்டார்கள். பயணிகளால் நிறைந்த பேருந்தில் அவனும் அவளும் அருகருகே நின்று கொண்டார்கள், இருவருக்குமாக சேர்த்து அவள் பயணச்சீட்டு எடுத்தாள். மதுரையைத் தாண்டும் முன்பாகவே பேருந்தில் கூட்டம் நிரம்பி வழிய, காற்றுப் புக முடியா இடைவெளிக்குள் அவள் அவனோடு நெருங்கி நின்றிருந்தாள். இதற்கு முன்னும் காமத்தில் உடல் கொதித்திருக்கிறதுதான். ஆனால் இந்த முறை என்ன இது வித்தியாசமாய்? கதிர் ஆயிரம் சூரியன்களின் தகிப்பில் அவள் உடலோடு ஒட்டி நின்றிருந்தான். அவன் மூச்சுக் காற்றின் வெக்கையில் அவள் கழுத்தில் வியர்த்து நீர் பூத்திருந்தது. தன் பெண்மையின் எல்லாக் கதவுகளையும் திறந்து கொண்டிருக்கும் அவன் அருகாமையிலும், அவன் தொடுதலிலும் பூரிக்கத் துவங்கியவள் தன்னை இழுத்து அணைத்துக் கொள்ளமாட்டானா என ஏக்கமாய் இருந்தது.

அவனை வெறுக்கத்தானே செய்தோம். பின் ஏன் இந்த உணர்ச்சிகள். கதிர் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தன் கைகளை அவள் உடலெங்கும் அலைய விட, தன் உடலின் வனத்திற்குள் முதல் முறையாய் பெரும் மலர்க்காட்டை அவன் கைகள் திறப்பதை அவள் ரசித்து அனுபவித்தாள். இந்த உலகம் தங்களை கவனிக்கக் கூடுமென்கிற அச்சமெல்லாம் பறந்துபோக அவர்கள் அந்த அபூர்வ தருணத்திற்குள் கரைந்து போகத் துவங்கினர். திருப்பரங்குன்றம் வந்த போது பேருந்தில் சரிபாதிக் கூட்டம் இறங்க கிடைத்த ஓர் இருக்கையில் இருவரும் அமர்ந்து கொண்டனர். அவளுக்கு மூச்சு வாங்கியது. கதிர் வெட்கத்தில் அவளைப் பார்க்க முடியாமல் ஜன்னலுக்கு வெளியே தூரமாய்ப் பார்த்தான். அவன் முகத்திலிருந்த காமத்தையும் கூச்சத்தையும் ரசித்துப் பார்த்தவள், "அந்தப் பக்கம் என்ன இருக்குன்னு வேடிக்க பாத்துட்டு இருக்கீங்க. எங்கிட்ட பேசலாம்ல." என அவன் தோள்களில் தட்டினாள். திரும்பிப் பார்த்து சிரித்தவனுக்கு என்ன பேசுவதெனத் தெரியவில்லை.

"அம்மாவ இவ்ளோ நல்லா பாத்துக்கற மனசு எத்தன பசங்களுக்கு வரும்? உன்னோட கேரக்டருக்கும் நீ பாக்கற வேலைக்கும் சம்பந்தம் இல்ல கதிர். பேசாம இந்தத் தொழில விட்றலாமே?"

"நான் அவ்ளோ யோக்கியன் இல்ல. அதோட இத விட்டுட்டு மறுபடியும் அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லாட முடியாது. நான் என் போக்குலயே போறனே."

“இந்தக் கடன எப்ப வேணாலும் அடச்சிரலாம், வீட்ல நீங்க ரெண்டு பேருதான மறுபடியும் ஏதாச்சும் வியாபாரம் பண்ணாக் கூட போதும். ஆனா இந்தத் தொழிலுக்குள்ள போயி உங்கப்பா மாதிரி உங்களுக்கும் வாழ்க்க மாறிடும் ல.”

“இனி மாற என்ன இருக்கு? எனக்கு விருப்பமான எதுவும் என் வாழ்க்கை ல கெடச்சதில்ல சத்யா. அதனாலதான் பல சமயம் என்னய நானே வலிய பிரச்சனைகள் பக்கமா இழுத்துட்டுப் போறேன். சந்தோசந்தான் கிடைக்கல, வலியாவாது இருக்கட்டுமே.”

அவன் அவளையும் தவறவிட்ட வருத்தத்தில் சொன்னான். அவன் வலிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள தானும் ஒரு காரணமாகிப் போனோமோ என நினைத்த சத்யா அமைதியா இருந்தாள். சூரிய வெப்பக் காற்று உடலின் ஈரத்தையெல்லாம் உறிந்து சருமத்தை வறட்சி கொள்ளச் செய்தது. எச்சில் முழுங்கியவள்

“எதுக்கு எல்லாம் போன கெழவன் மாதிரி பேச றீங்க? உங்க மேல எனக்கு அப்போ மரியாத இல்ல. ஆனா இப்போ நிறைய இருக்கு. நீங்க நல்லா இருக்கனும்னு விரும்பறேன்.”

“அப்டின்னா?”

“தெரியல கதிர். ஒரு மனுஷியா, சக மனுஷன் நல்லா இருக்கனும்னு நெனைக்கிற அன்ப விடவும் அதிகமான அன்பு இது. நான் அவ்ளோ

கேவலமா திட்டினதுக்கு வேற யாராச்சும்னா தப்பா ரியாக்ட் பண்ணி இருப்பாங்க. இல்ல என்னயப் பத்தி அசிங்கமா நாலு பேர் கிட்ட பேசி இருப்பாங்க. ஆனா நீங்க ரொம்ப ஜென்யூனா நடந்துக்கிட்டீங்க. அதான் முன்னயே சொன்னேன், உங்க கேரக்டருக்கும் நீங்க செய்ற வேலைக்கும் சம்பந்தமில்ல. ஆண்கள் பெரும்பாலும் பெண்கள் கிட்ட நல்லவிதமா நடந்துக்கிறது இல்ல கதிர். புருஷனோ, அப்பாவோ, அண்ணனோ தம்பியோ என்ன உறவானாலும் ஏதோ ஒரு விதத்துல அதிகாரம் பண்ணத்தான் பாப்பாங்க."

அவனோடு பேசியிராத இந்த நாட்களில் அவனைப் புரிந்து கொண்ட நிதானத்தில் அவள் சொல்ல,

"நான் சத்யா கிட்ட நடந்துகிட்ட மாதிரி எல்லாப் பெண்கள் கிட்டயும் நல்லவிதமா நடந்துக்கற ஆள் இல்லயே." கதிர் சிரித்தான்.

"இல்ல கதிர், நீ தோற்றத்தாலயும், உடலாலயும் தான் ஆணா இருக்க. ஆனா உங்கிட்ட ஒரு அலாதியன பெண்மை இருக்கு. இந்த நிதானம், ஆழமான அன்பு இதெல்லாம் ஆண்களோட மனசுக்கு வரவே வராத ஒன்னு."

"அன்பு மட்டும் இல்ல சத்யா என் வாழ்க்கை ல அதவிட அதிகமா மனுஷங்க மேலயும் உலகத்து மேலயும் வெறுப்பு இருக்கு."

“பெண்களுக்கும் அப்பிடித்தான் கதிர். ஆனா அவங்க அபூர்வமாத்தான் வெளிக்காட்டறாங்க. நீ உன் வெறுப்ப இதுவர காட்டினதில்லயே. சராசரி ஆண் உடனே தன்னோட வெறுப்ப வெளிப்படுத் திருவான்.”

அவளுக்குப் பதில் சொல்லும் அளவிற்கு இவன் பக்குவப்பட்டிருக்கவில்லை, தன்னையே பகுத்துப் புரிந்து கொள்ள முடியாத மனிதனாய் உணர்ந்த வனுக்கு அவள் சொற்கள் ஒவ்வொன்றும் ரோஸி ஆண்ட்டியை நினைவுபடுத்த பால்யத்தில் மறந்து போன எல்லா தேவதைக் கதைகளும் நினை வுக்கு வந்தன. ‘தோல்வியுற்று வாழ்வை வெறுக் கும் மனிதனை அவனின் எல்லாம் தனிமைகளில் இருந்தும் துயர்களில் இருந்தும் என்றோ ஒரு நாள் தேவதைகள் வந்து மீட்டுச் செல்வார்களென ரோஸி ஆண்ட்டி சொன்னது வெறும் கதைகள் மட் டுமேயல்ல என அந்த நொடித் தோன்றியது. கண் கள் கலங்கி வெளியேறத் துடித்துக் கொண்டிருந்த நீரை காற்று அடித்துச் சென்றது.

5

அவன் அன்பின் கூட்டுக்குள் சிக் குண்ட பறவையானதை யாரிடமும் அவர்கள்

பகிர்ந்து கொள்ளவில்லை. வாழ்வின் மட்டற்ற சந் தோசத்தில் இருந்த அதே தருணங்கள் அளவில் லாத அச்சத்தையும் ஒருசேர தந்துகொண்டிருந் தது. தேசிய நெடுஞ்சாலை 7 ம் இருந்த எல் லாக் கடைகளும் எல்லா மனிதர்களும் எப்போ தும் போல் தான் இருந்தார்கள். கதிர் தான் தன்னை எல்லோரும் கவனித்துக் கொண்டிருக்கி றார்களோ என அச்சப்பட்டுக் கொண்டிருந்தான். அவளை சந்திக்கும் பெரும்பாலான சந்தர்ப்பங்க ளில் விடைபெறும் தருணம் கதிர் முகத்திலிருக் கும் கலவரத்தை மறைத்தவனாய் "எனக்கு பயமா இருக்கு சத்யா. பேசாம இப்டியே பிரிஞ்சிரலாமா?" என்று கேட்பான். "ஏன் இப்பிடி பயந்து சாகற? நீ தைர்யமா இருந்தா தான நானும் தைர்யமா இருப் பேன்." அவள் தைரியமும் சொல்ல முடியாமல் அவனை விலகவும் முடியாமல் தவிப்பாள். தங்கள் இரண்டு பேரைத் தவிர்த்த மூன்றாவது நபருக்கு தெரியும் வரை மட்டுமே அது ரகசியம் என்பதை கதிரை விடவும் சத்யா தெளிவாக புரிந்து வைத்தி ருந்தாள், அதனாலேயே அவனை ஊருக்குள் ஒரு போதும் சந்திப்பதோ பேசுவதோ இல்லை.

இரண்டு நாட்களுக்குப்பின் நள்ளிரவிற்கு மேல் அவனுக்கு கால் வந்த போது தாஜ் ஹோட்டல் கிச் சனில் சிக்கந்தர் மாமாவுடன் குடித்துக் கொண்டி ருந்தான். "என்னடா இந்த நேரத்துல கால் வருது?" சிக்கந்தர் மாமா சிரிக்க, "யாருன்னு தெரியல மாமா இருங்க வரேன்." மொபைலை கையில் எடுத்துக்

கொண்டு பின் வாசலுக்குச் சென்றான். உறங்கத் தயாராய் இருக்கும் பூனைக்குட்டியின் குரலில் அவள் பேசினாள். "ஹலோ." அவனுக்கு சிலிர்த்தது "அட சத்யா. என்ன இந்த நேரத்துல?" தன்னை யாரும் கவனிக்கவில்லையென ஒருமுறை பார்த்துக் கொண்டு முனுமுனுப்பான குரலில் பேசினான். "பார்றா பேர் சொல்லாமயே நாந்தான் எப்பிடி கண்டுபிடிச்சிங்க?"

"எனக்கு வேற எந்த பொண்ணுங்களையும் தெரியாதே."

"ஃப்ராடு பொய் சொல்லாதிங்க."

"உங்க குலசாமி சங்கையா மேல சத்தியம்."

"ஐ எங்க குலசாமி சங்கையான்னு உங்களுக்கு எப்பிடி தெரியும?"

"ம் சொன்னாங்க. சூரசம்ஹாரம் பொட்டல்ல."

"இந்த நக்கல் தான வேணாங்கறது.?"

அவள் இவனுக்கு மட்டுமே கேட்கும் சத்தத்தில் சிரித்தாள். காற்றும் குரலும் சேர்ந்த மோன ஒலி. சிரிப்பென்று சொல்ல முடியாத மகத்துவம்.

"ரெண்டு நாளா உன்ன எங்கியும் பாக்க முடியல. ஃபோன் பண்ணலாம்னா வீட்ல எப்பவும் ஆள் இருந்தாங்க. இன்னைக்கி வீட்ல யாரும் இல்ல. அதனாலதான் கேட்டேன்."

"வீட்ல யாரும் இல்லயா?"

"ம்..."

கதிருக்கு கை கால்கள் பரபரத்தன, கொஞ்சமாய் அருந்தியிருந்த மது உடலுக்குள் தந்த உற்சாகத்தில் இப்பொழுதே அவளைப் பார்க்க வேண்டுமென துடித்தான். “சரி உங்க தெருவுக்கு வரேன். ஒரு ரெண்டு நிமிசம் பால்கனில வந்து நிக்க முடியுமா?”

“ஐயய்யோ வேற வெனயே வேணாம். நான் மாட்டேன்.”

கதிர் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான். “ஹலோ நான் வெக்கட்டா.” மறுபடியும் அவன் அமைதியாக இருக்க, அவள் இவன் எதாவது பேசுவானெனக் காத்திருந்தாள்.

“பத்து நிமிசத்துல உங்க தெருவுல இருப்பேன் டாடா..”

இணைப்பை துண்டித்தான்.

சோடியம் விளக்குகளின் வெளிச்சத்தில் கடையிலிருந்து அவள் வீடு செல்லும் வீதிகள் முழுக்க மஞ்சள் பூக்கள் மலர்ந்திருந்தன. சாக்கடையில் புரளும் நாய்களும், சாலையோரம் படுத்திருந்த பிச்சைக்காரர்களும் தேவதூதர்களைப் போல் தெரிந்தனர். கடைக்கும் அவள் வீட்டிற்கும் நடுவில் நட்சத்திரங்கள் நிறைந்து கிடக்க, இரவின் சின்னஞ் சிறிய தூரத்தை வேகமாய்க் கடந்தான். மன்மதன் தெருவில் எல்லோரும் உறங்கிப் போயிருக்க, ஒரேயொரு வீட்டில் மட்டும் தொலைக்காட்சி உறங்கும் எல்லோருக்காகவும் பாடிக் கொண்டிருந்தது.

அவள் வீட்டிலிருந்து கொஞ்சம் தள்ளி ஒரு தெரு விளக்கின் கீழ் நின்றான். அவள் வருவதற்கான எந்த அறிகுறிகளும் இல்லை. அவளுக்கு திரும்ப தொலைபேசியில் அழைக்கவும் தயக்கமாக இருந்தது. தலையைத் தூக்கி தெருவிளக்கைப் பார்த்தவன் அருகில் கல் ஏதாவது கிடைக்குமாவெனத் தேடி எடுத்தான். முதல் இரண்டு முயற்சி வீணாகிப் போனாலும் மூன்றாவது முயற்சியில் விளக்கு உடைந்து அந்த இடம் இருட்டானது. சத்தம் கேட்டு யாரும் வந்துவிடுவார்களென்கிற அச்சத்தில் ஒரு வீட்டின் வாசலில் மறைவாக ஒளிந்து கொண்டான். சத்யாவின் வீட்டிற்குள் இப்பொழுது விளக்கெரிய அவள் ஒரு கதவை மட்டும் திறந்து பால்கனி வழியாக எட்டிப் பார்த்தாள். உடைந்து தெருவிளக்கை அடுத்த இருந்த வீட்டின் மறைவிலிருந்து அவன் கையசைத்தான். தலையில் அடித்துக் கொண்டவள், உள்ளே போய்விட்டாள். அவளை சரியாக பார்க்க முடியவில்லையே என இவன் ஏங்க, அவன் மொபைல் ஒலித்தது.

“நாந்தான் வராதன்னு சொன்னன் ல. எதுக்கு இப்போ லைட்ட உடச்ச?”

“எப்பிடி கூப்டறதுன்னு தெரியல. அதான் லைட்ட உடைச்சன்.”

“எரும. யாராச்சும் பாக்கறதுக்குள்ள போ.”

“சரி இன்னும் ஒரே ஒரு வாட்டி வந்து ஹாய் சொல்லிட்டுப் போ. நான் போயிடறேன்.”

“ஒரு மயிரும் வேணாம். கௌம்பு.”

“நீ இப்போ வரல. நான் வந்து உன் வீட்டு காலிங் பெல்ல அடிப்பேன்.”

“சனியனே, இரு வந்து தொலைக்கிறேன்.”

மறுபடியும் பால்கனிக்கு வரும் போது, அந்த இரவு அவளோடு கழிக்க வேண்டுமென மனம் சிறகடித்தது. அவள் வீட்டு வாசலில் நின்று சொற்களே இல்லாமல் கெஞ்சிக் கொண்டிருந்தான். தெருவிளக்கின் வெளிச்சமும் இல்லாமல் அவள் இவனை எப்படியாவது அனுப்பிவிடுவதில் குறியாய் இருக்க பிடிவாதமாய் அவள் வீட்டுக் கதவோடு வந்து ஒட்டிக் கொண்டான்.

நீண்ட தயக்கத்துக்குப்பின் கதவு திறந்தவளின் முகத்தில் அவனோடு அந்த இரவை கழிக்கப் போகிற பரவசமும், குதூகலமும் இருந்தாலும் அவற்றையெல்லாம் மீறி யாராவது பார்த்து விட்டால் என்னவாகும் என்கிற அச்சம் தான் அதிகமாயிருந்தது.

“ஏண்டா இப்பிடி படுத்தற? கொஞ்ச நாள் பொறுமையா இருக்க மாட்டியா?”

“கண்டிப்பா இருக்கேண்டி. சும்மா இருந்தவன் கிட்ட வீட்ல யாருமில்லன்னு சொன்னது நீதான.”

“நான் பேசனுங்கறதுக்காக கூப்ட்டேன். இப்பிடி பூதம் மாதிரி நிப்பன்னு கனவா கண்டேன்.”

“சரி வந்தவன வாசலோட அனுப்புவியா? எவ்ளோ நாள் ஆச தெரியுமா? ராத்திரில உங்கூட கொஞ்ச நேரம் இருக்கனும். உன்னக் கொஞ்சனும்னு.”

“ஏன் இருக்காது. நீ குடிச்சிருக்க, மட்டையாகிட்டா பிரச்சன. பேசாம போயிடு.”

திறந்த கதவை சாத்திவிட்டு இருவரும் மங்கலான விளக்கெரிந்த வீட்டின் முன்னறையின் சுவற்றில் சாய்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

“நான் கொஞ்ச நேரம் உன்னோட இருந்துட்டு விடியறதுக்கு முன்னால போயிடறேண்டி. நானும் பாவம்ல.”

அவளுக்கு நிஜமாகவே அவன் பாவமாகத்தான் தெரிந்தான். சிரித்தாள். அவன் அவளை தன் விரல்களால் தீண்ட, மறுப்போ கூச்சமோ இன்றி தன்னை அவனோடு பிணைத்துக் கொண்டாள். அந்த வெளிச்சமும் அவளுடலில் பூத்திருந்த வியர்வை நறுமணமும் அவனைக் கிளர்த்த அவள் கழுத்திலும் காதுகளிலும் முத்தமிட்டான். தன் மார்போடு பிணைத்து அவன் நெற்றியிலும் முகத்திலும் மூர்க்கமாய் முத்தமிட்டாள். நீண்டக் காத்திருப்பிற்குப் பின்னால் காதல் பூரித்திருந்த அந்த ஜீவன்கள் கூடிக் கொண்டபோது இந்த உடல்கள் இந்த நாளில் பிணைவதற்காகவே இந்த பிறப்பெடுத்தது போல் ஒன்று கலந்தனர். அவனோடு கூடுவதில் சத்யாவிற்காக எந்த அச்சமோ வருத்தமோ இல்லை. முழுமையான அன்போடு அவனை

அனுமதித்தவளின் உடல் தன் எல்லா சாபங்க
ளில் இருந்தும் தன்னை விடுவிப்பதாய் மகிழ்ந்து
கதிர் கூடினான். எல்லா சுவர்களும் நாணத்தோடு
பார்க்க, வீட்டின் அசாத்தியமான நிசப்தம் குடித்த
இருள் கூட கிளர்ந்து அவர்களோடு பிணைந்து
கொண்டது. அவனை இருளின் வார்ப்பாய் தனக்
குள் திரும்ப திரும்ப வாங்கிக் கொண்டவள் அந்தப்
பொழுதிலேயே அவனோடு எங்காவது ஓடிவிடலா
மாவென தவித்தாள். "என்னய எங்கியாச்சும் கூட்
டிட்டுப் போயிரு கதிரு. என்னால தனியா இருக்க
முடியலடா." அவள் உடலோடு கலந்து போனவ
னின் காதுகளில் அவள் சொன்னபோது சந்தோ
சத்தில் அவள் கண்களில் ஆழமாய் முத்தமிட்டான்.

அந்த இரவு அவர்கள் பேசிக்
கொள்ள விரும்பிய எல்லாவற்றையும் புரிந்து
கொள்ள வைத்தது. அவனை நினைக்கும் போது
ஏன் இத்தனை நாணம் வர வேண்டும்? அல்
லது அவனோடு பேசத் துடிக்கும் இந்த குறுகுறுப்
பும், பேருந்துகளில் சாலைகளில் எங்கிருந்தாவது
தன்னை அவன் பார்க்கிறானா என்கிற தவிப்பும்
என்ன? அவன் இதுவரை இல்லாத சந்தோசமாய்
அவளுக்குத் தெரிந்தான். இன்னதென்று சொல்
லிக்கொள்ளாமல் அவர்கள் சந்தித்துக் கொண்
டார்கள், பேசிக் கொண்டார்கள். பேருந்து நிறுத்
தங்களில், கல்லூரியின் கேண்டினில் இருந்த ஒரு
ரூபாய் காய்ன் ஃபோன்களில் கால் வலிக்கும்
வரை நின்று பேசினாள். புத்தகப் பையில் ஒரு

ரூபாய் நாணயங்கள் நிரம்பி வழிந்தன. இரண்டு வெவ்வேறு உலகைச் சேர்ந்த ஜீவன்கள் பேசிக் கொள்ளும் போது இருக்கும் எல்லா முரண்பாடுகளும் அவர்களின் பேச்சில் இருக்கும். நான்கு வாரங்களுக்குப்பின் தனக்கு மாதவிடாய் தள்ளிப் போன போதுதான் சத்யா தன்னை சிக்கல்கள் சூழ்ந்துள்ளதை புரிந்து கொண்டிருந்தாள். அன்று காலை வழக்கம் போல் கல்லூரிக்குக் கிளம்பிய வள் பேருந்தி நிலையத்தில் இருந்து அவனுக்கு ஃபோன் செய்து அழகர் கோவில் வரச் சொல்லி விட்டாள். உடனடியாகத் தீர்வைத் தேடிக் கண்டடையும் குழப்பம் அவளுக்குள்.

“கதிர் நமக்கு இப்போ வேற வழியே இல்லடா.”

“என்னடி ஆச்சு?”

“பீரியட்ஸ் தள்ளிப் போயிருச்சு. கன்சீவா ஆகி இருக்கேன் கதிர். ரொம்ப நாள் நாம தள்ளிப் போடவும் முடியாது. இந்தக் குழந்தைய களைக்கிற துலயும் எனக்கு உடன்பாடில்ல.”

கதிரின் முன்னால் ஒரே நாளில் அவன் இன்னொரு மனிதனாய் மாற வேண்டிய நிர்ப்பந்தம் நிழலாடியது. அவன் விரும்பி ஏற்கத்தயாராக இருந்தாலும் அது எப்படி சாத்தியம் என்பதற்கு பதில் தெரியவில்லை.

“என்ன செய்யலாம் சத்யா?”

“என்ன செய்யலாமா? எங்கியாச்சும் கூட்டிட்டுப் போ கதிர். கல்யாணம் பண்ணிக்கலாம். நம்ம

வாழ்க்க, நம்மளோட உலகம்னு நாம மாற வேண்டிய நேரம் இது.”

எந்த நம்பிக்கைகளும் இல்லாமல், ஆதாரங்களும் இல்லாமல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒரே நாளில் எப்படி தப்பித்துச் செல்ல முடியும்? யார் உதவப்போகிறார்கள்? தலை சுற்றியது அவனுக்கு.

“நீ எதுவும் யோசிக்காத, நான் கொஞ்சம் பணம் சேத்து வெச்சிருக்கேன். என்னோட நக கொஞ்சம் எடுத்துட்டு வரேன். கல்யாணம் செஞ்சு வெக்க நம்மளுக்கு ரெண்டு ஆளுங்க வேணும், அத மட்டும் நீ பாத்துக்கோ.”

இப்பொழுதும் நம்பிக்கையின் முதல் படியை அவளை எடுத்து வைத்தாள். அவள் சொன்ன எல்லாவற்றிற்கும் தலையாட்டிக் கொண்டவன்

“ஒரு வாரம் பொறுத்துக்கோ டி. எப்டியாச்சும் எல்லாத்தையும் சரி பண்ணிட்டு கிளம்பிடலாம்.” என ஆறுதலாக அவனை அணைத்துக் கொண்டான்.

தனக்குள் இன்னொரு உயிர் வளரத்துவங்கியிருக்கிறது என்பதை அவள் புரிந்து கொண்ட நாளில் இருந்து ஒவ்வொரு நிமிடமும் அவளுக்கு மரண அவஸ்தை. யாரும் கண்டுபிடித்துவிடக் கூடாதென்பதற்காக எல்லோரிடமிருந்தும் ஒதுங்கி இருந்தாள். கதிர் மாரியிடமும் வீதியிலிருந்த இன்னும் சில நண்பர்களிடமும் விஷயத்தை சொன்ன போது “ஏண்டா நெசமாத்தான் சொல்றியா?” என எல்லோரும் ஆச்சர்யப்பட்டார்கள். தங்

களோடும் இந்த வீதியோடும் அவன் இணைய மாட்டான் என நினைத்துக் கொண்டிருந்தவர்க ளுக்கு அவனது இந்தக் காதலும் தங்களிடம் நம் பிக்கையாக வந்து உதவி கேட்டதிலும் ஆச்சர்ய மாக இருந்தது. மாரி, பழனி, காதர், மணி, அசோக், செந்தில் என அவன் வயதிலும் அவனை விட மூத் தவர்களுமாய் ஆறேழுபேர் அவனோடு உதவிக்கு சேர்ந்தனர். மணி எல்லோரையும் விட நம்பிக்கை யாய் பேசினான் "விட்றா கதிரு. அந்த ஏரியா ல ஒரே சாதி. அவங்க பெரிய குடும்பம். இருந்துட்டுப் போகட்டும். நாம இங்க வேற வேற சாதியா இருந் தாலும் இத்தன வருஷம் ஒன்னு மண்ணா பழகி இருக்கோம். உனக்காக என்னண்டாலும் செய் வம்டா. தைர்யா இரு. உள்ளூருக்குள்ள வெச்சு நாம எதும் செய்ய முடியாது. எங்க அக்கா வீடு திருச்செங்கோட்டுல இருக்கு. நாம அங்க போயி கோயில்ல கல்யாணத்த முடிச்சிக்கிட்டு பத்து பதி னஞ்சு நாள் கழிச்சு வருவோம். அப்பறம் சமாதா னம் பேசறதெல்லாம் பாத்துக்கலாம்." அவன் திட் டத்தை சொன்ன நிமிடத்திலிருந்து அதை நடை முறைப்படுத்துவதற்கான எல்லா ஆயத்தங்களை யும் செய்யத் துவங்கிவிட்டார்கள். கதிர் அம்மாவை அழைத்துக் கொண்டு போய் மேலூரில் அப்பா வின் மாமா வீட்டில் விட்டுவந்தான். சத்யாவிடம் சொன்னபோது அவளும் அச்சம் விலகி தைர்ய மாகி இருந்தாள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு கல் லூரி சென்ற சத்யா தன் பையில் கொஞ்சம் உடைகளையும், தேவையான பணமும் எடுத்துக் கொண்டு கதிரோடு நாமக்கல் நோக்கி பயணித் துக் கொண்டிருந்தாள். நாமக்கல் ரிஜஸ்தர் அலு வலகத்தில் தனக்குத் தெரிந்தவர்கள் இருப்பதால் அங்கு வைத்தே திருமணம் செய்து கொள்ள லாமென மணியின் மாமா சொல்லி இருந்ததால் அந்த இரவு நாமக்கல்லில் ஒரு விடுதியில் அவர் கள் எல்லோரும் தங்கினார்கள். மணியின் அக்கா மற்றும் மாமாவின் ஏற்பாட்டில் திருமணத்திற்கு ஏற்பாடுகள் தயாராகிக் கொண்டிருந்தன. கதிர்-சத்யா ஒரு அறையிலும் மற்றவர்கள் இன்னொரு அறையிலுமாய் உறக்கம் வராத அந்த இரவை ஒரு புதிய மாற்றத்துக்கான உற்சாகத்தோடு கழித் துக் கொண்டிருந்தனர். காலையில் தனக்கு மனை வியாகப் போகிறவளின் இந்த அருகாமை தான் கனவு கண்ட தன் வாழ்வின் மிகப்பெரிய சந்தோ சமும் முழுமையும் இதுவே என்கிற குதூகலத்தை கதிருக்குக் கொடுத்தது. ஒரு முயல் குட்டியை தனக்குள் ஒளித்து வைத்துக் கொள்வதைப் போல் இறுக்கிக் கொண்டான். நள்ளிரவைத் தாண்டி கதவு தட்டும் ஓசை கேட்டபோது நண்பர்கள் யாரா வது இருக்கக் கூடுமென நினைத்துத் திறந்தான். விடுதியை சோதனையிட வந்த காவலர்கள் இவ னையும் படுக்கையில் இருந்த அவளையும் பார்த்

துவிட்டு கதிரிடம் "அந்தப் பொண்ணு யாரு? என விசாரித்தனர். "என்னோட மனைவி ஸார்."

போலிஸ்காரன் உள்ளே எட்டிப் பார்த்தான்.

"இங்க வாம்மா."

அவள் உடல் முழுக்க அச்சத்தோடு மெதுவாக எழுந்து வர, போலிஸ்காரனின் கண்கள் அவள் கழுத்தில் தாலி இல்லாததை நொடியில் கண்டு கொண்டது. திரும்பி உதவி ஆய்வாளரிடம்

"ஸார் ஜட்டம் ஸார், பொய் சொல்றான்." என சிரித் தபடியே சொல்ல, கதிர்

"ஸார் ஸார் தப்பா சொல்லாதிங்க ஸார். நாளைக்கு காலை ல எங்க ரெண்டு பேருக்கும் கல்யா ணம். பக்கத்து ரூம்ல ஃப்ரண்ட்ஸ் இருக்காங்க வேணும்னா கேளுங்க ஸார்." என உதவி ஆய்வா ளரின் காலில் விழுந்து கெஞ்சினான். அவர் ஓங்கி கதிரின் பொடணியில் அடிக்க சுருண்டு உட்கார்ந் தவன் "ஸார் சத்தியமா ஸார் நம்புங்க ஸார்" என கதறினான். அவன் அலறல் சத்தம் கேட்டு பக்கத்து அறையிலிருந்து அவனது நண்பர்களும் வேகமாக வந்தனர். சூழலைப் புரிந்து கொண்ட மாரி தான் பேசுவது சரிவாராதென மணியைப் பேசச் சொன் னான்.

"ஸார், ஏன் ஸார் அடிக்கிறாங்க. அவங்களுக்கு நாளைக்குக் காலை ல கல்யாணம். நீங்க நினைக் கிற மாதிரி தப்புல்லாம் இங்க நடக்கல ஸார்."

போலிஸ்காரன் அவர்கள் எல்லோரையும் கவன மாகப் பார்த்துவிட்டு

“கல்யாணம் சரி, இந்தப் பிள்ள வீட்டு ஆளுங்க எங்க? அந்தப் பய வீட்டு ஆளுங்க எங்க? மொதல்ல நீங்கல்லாம் எந்த ஊரு?”

“ரெண்டு பேர் வீட்லயும் ஒத்துக்கல ஸார். சாதிப் பிரச்சன. அதான் நாங்க சேத்து வெக்கலாம்னு கூட்டியாந்தோம்.”

மணி எப்படியாவது அவர்களை மீட்டுவிட வேண் டுமென்கிற கவலையில் பதட்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் பேசினான்.

“எவனோ ஒருத்தன் பெத்த புள்ளைக்கு கல்யா ணம் பண்ணி வெக்க நீங்கல்லாம் யாரு? அதென் னடா சாதி விட்டு சாதி தான் காதலிப்பிங்களா? அப் பிடி என்னடா மயிருக் காதல்.?”

திரும்பி சத்யாவைப் பார்த்தவன்

“இங்க வாம்மா. பாத்தா சின்னப் பொண்ணா தெரி யற பெத்தவங்கள விட்டுட்டு வந்திருக்கியே அறி வில்லயா?”

“ஸார் எனக்கு இவரப் புடிச்சிருக்கு. சேந்து வாழ ஆசப்படறேன் இதுல என்ன ஸார் தப்பு.”

போலிஸ்காரன் அவளை அடிக்க முடியாத ஆத்தி ரத்தில் கதிரை மீண்டும் ஓங்கி அடித்தான். “இவன் மூஞ்சியப் பாரு அக்யூஸ்ட் மாதிரி இருக்கான். இவன் கூட வாழப் போறேங்கற வெக்கமா இல் லயா? சரி உன் வயசென்ன?”

நடுக்கத்தில் இருந்தவள் "17 ஸார்" என்றதும் பிடி மாட்டிக் கொண்ட நிறைவில் உதவி ஆய்வாளர் போலிஸ்காரர்களைப் பார்க்க அவர்கள் கதிரின் நண்பர்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

"மைனர் பொண்ணக் கடத்திட்டு வந்து திருட்டுக் கல்யாணம். எல்லாத்தையும் உரிச்சாதாண்டா சரி வருவீங்க. யோவ் மொத்தமா எல்லாரையும் இழுத் துட்டு வாங்கய்யா."

இத்தனை உறுதி இருந்தும் பதட்டத்தில் தன் சொற்களே தனக்கு எதிரியாகிவிட்ட வேதனையில் சத்யா கதறி அழுதாள். விடுதியிலிருந்து போலிஸ் ஸ்டேஷன் வரும் வரை இடைவெளி விடாமல் கதி ரையும் அவனோடு இருந்தவர்களையும் அடித்த போலீஸ்காரர்கள் அவர்களைக் குறித்த எல்லா தகவல்களையும் விசாரித்து விட்டிருந்தார்கள்.

அடுத்த நாள் பிற்பகல் சத்யாவின் அப்பாவும், வாசுவும் அந்த ஏரியாவிலிருந்து முக் கியமான வேறு சிலரும் அங்கு வந்தபோது அடி வாங்கி உடம்பெல்லாம் வீங்கிப் போயிருந்த கதிர் அவர்களை எதிர் கொள்ள முடியாமல் தலையைக் குனிந்து கொண்டான். அவனை அடிக்க கை ஓங்கிய வாசு ஸ்டேஷன் என்பதால் கட்டுப்படுத் திக் கொண்டு அவன் மூஞ்சியில் காறித்துப்பினார். "தாயோளி உன் புத்தியக் காட்டிட்ட ல." என்ன வழக்கு வேண்டுமானாலும் இவர்களின் தொடுக்க தயாராய் இருந்த உதவி ஆய்வாளரிடம் சத்யாவின் அப்பா "ஸார் கேஸ் எதும் போட வேணாம். இந்த விஷயம் வெளில தெரிஞ்சா எங்களுக்கு அசிங்கம்.

இப்பிடியே போனா ஊருக்குள்ள தெரியாத அள வுக்கு வெச்சுக்குவோம். இவய்ங்கள நீங்க விட் றுங்க. நாங்க பாத்துக்கறோம்." என வன்மத்தைத் தீர்த்துக் கொள்வதற்கான திட்டங்கள் தங்களி டம் தயாராய் இருப்பதை எல்லோருக்கும் பொது வாய் சொல்லிவிட்டு சத்யாவைக் கூட்டிக் கொண்டு சென்றார். அவள் தன் ஆவி தீர அழுது தீர்த்தாள். அவள் குடும்பத்திலிருந்து வந்த ஒவ்வொருவரின் கைகளும் அவளை அடித்துத் துவைத்தது. சின் னக் காயங்களைக் கூட தாங்க முடியாமல் சிவந்து போகும் அவளின் மெல்லிய தோல் வீங்கி தடித் துப் போனது. உடலெங்கும் ரத்தம் கட்டிப் போய் நிற்கவும் முடியாமல் உட்காரவும் முடியாமல் துடித் தாள். ஊருக்குப் போகும் துணிவில்லாமல் மணி எல்லோரையும் திருச்செங்கோட்டுக்கு அழைத் துப் போனான். "பேசாம நாலு நாள் இங்கியே இருங்கய்யா. கொஞ்சம் ஆறப்போடுவோம். அப்ப றம் பேசி சமாதானம் பண்ணலாம்." மணியின் மாமா ஆறுதல் சொன்னார். அவளைப் பிரிந்திருந்த அந்த நாளு அடுத்த நாளும் கதிருக்கு சூன்யமாய் இருந் தது.

அத்தனை வருடங்களும் வீட்டின் சந்தோசமாய் வீட்டை அலங்கரித்துக் கொண்டிருந்த சத்யாவை இப்பொழுது மொத்த குடும்பமும் சபித்தனர். அவ மானத்தின் பதில்களை இவள் மீதான வன்முறை யாய் ஆண் பெண் வித்தியாசமில்லாமல் எல்லோ ரும் பிரயோகித்தனர். சத்யாவின் அம்மா அவளின் இரண்டு பாதங்களிலும் கம்பிகளால் சூடு போட் டாள். "எம்புட்டு நெஞ்சழுத்தம் இருந்தா நீ அந்தப்

பய கூட ஓடியிருப்ப தேவிடியா முண்ட.” சத்யா வலியில் கத்தும் போது கூட அவள் அம்மாவின் ஆத்திரம் அடங்கியிருக்கவில்லை. “இந்தக் காலுதான ஓடுச்சு, இனி எங்கியும் நடக்கக் கூடாது.” வைத்த சூட்டில் ஒரு முறைக்கு இரண்டு மூன்று முறையென அவளை ரணப்படுத்தி அலற வைப்பதன் மூலம் கிடைத்த ஆறுதல் அந்தக் குடும்பத்தில் எவருக்கும் போதுமானதாய் இல்லை. அந்த வீட்டின் கொடூரங்களில் இருந்து தன்னால் இனி ஒருபோதும் தப்பிச்செல்ல முடியாதென்கிற உண்மை அவளை அச்சப்படுத்தியது. கதிரின் நிலையை நினைத்தபோது அவனும் தன்னால் சீரழியப் போகிறான் என மனம் பதைத்தாள். இந்த வலிகளில் இருந்து ஒட்டுமொத்தமாக தப்பிச் செல்ல என்ன வழி? செத்துவிடலாமா? சாவை நினைத்த போதெல்லாம் உள்ளே வளர்ந்து கொண்டிருந்த இன்னொரு உயிரின் நினைவு உடனே எழுந்தது. எத்தனை ஆசையோடு அவனோடு கூடி வாங்கிக் கொண்ட உயிர். மகளோ மகனோ இந்தப் பூமியில் அவனுக்கே அவனுக்கென ஒரு சொந்தத்தை தந்துவிட்டுப் போகத்தானே அவளும் விரும்பினாள். அவன் அலைச்சலும், துயரமும் ஒருபோதும் குழந்தையாய் இருக்க முடியாமல் போன அவன் ஏக்கங்களும் அவனுக்கே அவனுக்கான ஒரு குழந்தையை கொடுக்கும் நாளில் தான் நிறைவேறும். இந்தக் குழந்தையை அவனுக்குத் தர எதிர்த்து நிற்பதைத் தவிர வேறு வழியே இல்லை என புத்தியும்

மனதும் திரும்ப திரும்பச் சொன்னது. அவள் எதிர்த்து நிற்கிற போதெல்லாம் ஓய்ந்திருந்த அடி கள் மீண்டும் விழுந்தன. வாசுவிற்கும் சத்யாவின் அப்பாவிற்கும் இவளது பிடிவாதம் உறங்கிக் கொண்டிருந்த வெறியையும் தூண்டிவிட்டபடியே இருக்க, "என்ன மைய வெச்சுடி மயக்கினான். இவ்ளோ பேரையும் தூக்கிப் போட்டுட்டு போறேங் கற. இவ்ளோ மிதி வாங்கியும் உனக்கு வலிக்கல. அப்படி என்ன ஆம்பள சொகம் கேக்குது?" வாசு அவள் முதுகிலும் மாரிலும் எட்டி உதைத்தான். "நான் ஒன்னும் ஊர் மேயலண்ணே. அவன் வேணும். அவன் மட்டுந்தான் வேணும். நீங்க யாரும் எனக்கு வேணாம். எங்கள விட்றுங்க." என அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு அழ, "அவு சாரி முண்ட சொல்ல சொல்ல கேக்கறாளான்னு பாரு." சத்யாவின் அப்பா பின்னாலிருந்து அவளை எட்டி உதைக்க வீங்கிய கன்னத்தில் வழிந்த குருதி யைத் துடைத்தபடியே "அப்பா என்னய விட்றுப்பா. நான் அவன் புள்ளய சுமந்துட்டு இருக்கேன். தாலி கட்டிதான் நாங்க புருஷன் பொண்டாட்டியா ஆக னும்னு இல்ல. நான் அவன் புள்ளைக்கு இப் போவே அம்மா ஆகிட்டேம்ப்பா. என்னய விட் றுப்பா." வலி தாள முடியாமல் கதறி அழுதாள். அத் தனை நாட்களும் அது வெறும் காதலென்றும், பழக்கமென்றும் நினைத்துக் கொண்டிருந்த அவர் கள் அவள் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட அதிர்ந்து போனார்கள். வாயிலும் வயிற்றிலும்

அடித்துக் கொண்டு ஓடிவந்து அவள் கூந்தலைக் கொத்தொடு அள்ளிய அம்மாவை சத்யாவின் அப்பா பிடித்து இழுத்துக் கொண்டார். "அவளத் தொடாத. இந்தக் குடும்பத்தையே வேரோட சாய்க்க வந்த சனியன் அவ. யாரும் தொடாதிங்க." எல்லோரும் அவளை அப்படியே விட்டுவிட்டுப் போக தான் கிடந்த இடத்திலேயே வலியில் சத்யா மயங்கிப் போனாள்.

நடந்த எல்லா பிரச்சனைகளையும் கேட்டு உடைந்து போயிருந்த சக்தி எவ்வளவு முயன்றும் சத்யாவை சந்திக்க முடியவில்லை. கதிரின் நிலைமையும் தெரியாமல் இருந்தது. இத்தனை அவசர அவசரமாய் அவர்கள் ஏன் முடிவுகளை எடுத்தார்களென நொந்துகொண்டாள். எல்லோருமிருந்தும் தனித்துக் கிடந்த சத்யா பசித்த போது நடக்க முடியாத கால்களோடு சிரமங்கொண்டு தனக்கான உணவை எடுத்துக் கொண்டு வந்து சாப்பிட்டாள். மனம் முழுக்க கதிரின் நினைவு மட்டுமே. தன்னை எப்படியாவது எடுத்துக் கொண்டுபோய் பாதுகாப்பாக அவனிடம் கொடுத்துவிட வேண்டும். இந்தப் பறவைகள் இன்னும் கொஞ்சம் பெரியவையாய் இருந்தால் ஏதாவதொரு பறவையில் கால்களைத் தொற்றிக் கொண்டு அவனிடம் கொண்டு போய் விடச் சொல்லி இருக்கலாம். அல்லது தற்காலிகமாக கடவுள் ஒரே ஒரு நாளுக்கு மட்டும் அவளுக்கு சிறகுகளைத் தந்திருந்தால் அடுத்த நிமிடம்

அவனிருக்கும் திசையில் பறந்து போயிருப்பாள். விருப்பங்களைத் தொடர்ந்து சென்று வாழ்வதை ஏன் இந்த சமூகம் பாவமென்கிறது. இரண்டு தனி மனிதர்களின் காதல் எப்படி ஒரு குடும்பத்தின் ஒரு ஜாதியின் அவமானமாய் மாற முடியும்? ஒரு பெண்ணின் உடலிலும் வாழ்க்கைத் துணைத் தேர்விலும் தான் ஒரு ஜாதியின் பெருமிதமும் கௌரவமும் அடங்கியிருக்கிறதென்றால் அந்த ஜாதியியின் பெருமிதம் எத்தனை இழிவானது? பரிதாபத்திற்குரியது. கன்னகி கதை மெய்யென்றால் தனக்கும் இந்த நகரையும் மனிதர்களையும் எரிக்கும் சக்தி வந்திருக்க வேண்டுமே? அவனே எல்லாமென நினைத்து வாழ்ந்தது பிழையா? தன் மனம் சிந்திக்கும் எதற்கும் பதில்கள் இல்லாதவளாய் சாப்பிட்டு முடித்தாள். வீட்டில் அவளை தனியாக விட்டு விட்டு எல்லோரும் சென்றுவிட்டிருந்தனர். சொந்த வீடு வதைகூடமாய் மாறிப்போன வலியை எதிர் கொள்ள முடியாத பெண்ணாய் வேதனைகளோடு உறங்கிப் போனாள்.

உடலில் தண்ணீர் படுவது போன்ற உணர்வு ஏற்பட, முழித்துப் பார்த்தபோது அவளைச் சுற்றி எங்கும் பெட்ரோலின் மனம். பயந்து அலற முயன்றவளின் வாய் கட்டப்பட்டிருந்ததோடு வீட்டின் தூணில் நின்ற நிலையில் அவளின் கை கால்களும் கட்டப்பட்டிருந்தன. வீட்டிற்குள் நடந்து கொண்டிருக்கும் இந்த கொலைபாதகச் செயலை வெளியில் யாரும் தெரிந்து கொண்டுவி

டக் கூடாதென்கிற எச்சரிக்கையில் அதிகபட்ச சத்தத்தில் தொலைக்காட்சி பாடிக் கொண்டிருந்தது. அடிவயிற்றிலிருந்து எல்லா சக்திகளையும் திரட்டி முடிந்தவரை கத்திப் பார்த்தவளின் குரல் அந்த வீட்டின் சுவர்களைத் தாண்டி எங்கும் ஒலிக்க வில்லை. வாசுவும், சத்யாவின் அப்பாவும் அவள் இந்த வீட்டின் குழந்தையென்கிற எல்லா அன்பையும் தொலைத்தவர்களாய் நெருப்பின் உதவியோடு இவளை எரித்துவிட்டு தங்களின் சாதிப் பெருமையைக் காப்பாற்றிக் கொண்டார்கள். அவளைச் சூழ்ந்த நெருப்பு பல நூறு வருடங்களாய் இந்த சமூகத்தை சீரழிக்கும் நெருப்பு. அவளுக்கு முன்பாகவும் பின்பாகவும் யாரோ ஒருவனை காதலித்ததற்காக யாரோ ஒருத்தி அல்லது ஒருவளைக் காதலித்ததற்காக ஒருவன் கருணையின்றி எரிக்கப்பட்ட நெருப்பு. சிந்திக்க துவங்கிய மனிதனுக்கான எல்லா வளர்ச்சிகளையும் இழந்த இந்த கேடு கெட்ட மானுடக் கூட்டம் எரித்த பல்லாயிரம் சத்யாக்களில் ஒருத்தியாய் அவளும் அவளுக்குள் வளர்ந்து கொண்டிருந்த சின்னஞ்சிறிய உயிரும் எரிந்து கொண்டிருந்தனர். வாழ்வின் எந்த சந்தோசங்களையும் கண்டிராத ஏக்கங்களோடு எரிந்து கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் அலறல் அவர்களுக்குள் எப்படி எந்த வேதனைகளையும் உருவாக்காமல் இருந்தது. தெருவில் அடிபடும் நாய்களுக்காகவும் பூனைகளுக்காகவும் உருகி பதறும் மனம் எப்படி சொந்தக் குழந்தையை எரிக்

கும் அளவிற்கு வெறி கொள்கிறது. அன்று இரவிற் குப் பின் சத்யா அந்த வீதியின், அந்த ஊரின் இன் னொரு கதையாகிப் போனாள்.

ஒரு வாரத்திற்குப் பின் கதிர் தன் நண்பர்களோடு ஊர் திரும்பியபோது பேருந்து நிலையத்தின் சுவர்களெங்கும். சத்யாவின் கண் ணீர் அஞ்சலி போஸ்டர்கள் தான் இரக்கமின்றி அவர்களை வரவேற்றது. அவள் தற்கொலை செய்து கொண்டதாக மாவட்ட செய்திகள் பக் கத்தின் பெட்டி செய்தி குறிப்பிட்டிருந்தது. நடந்த எல்லாமும் எல்லாருக்கும் தெரிந்தும் யாரும் அந் தக் குடும்பத்தினரைக் காட்டிக் கொடுத்திருக்க வில்லை. தனது சந்தோசங்கள் ஒருபோதும் நிலை யானவை அல்ல என வெடித்துக் கதறிய கதிர் வீதிகளெங்கும் அழுதபடியே ஓடினான். எரித்த பின் புதைக்கப்பட்ட அவளின் புதை மேடு தேடிச் செல்வதா? எரித்தவர்களை எரித்துவிட்டு தானும் மரித்துப்போவதா? அவன் எல்லா சுய சிந்தனை களையும் இழந்துபோய் அவள் இல்லாது போன உலகை சபித்தவனாய் ஓடினான். மாரி, மணி, செந்தில், பழனி எல்லோருக்கும் இந்த பேரிடி தாங்க முடியாததாய் இருந்தது. அவன் வருகையை சில நிமிடங்களிலேயே நெடுஞ்சாலையின் இரு பக்கமும் இருந்த ஆட்களிடம் யாரோ தகவல் சொல்லிவிட சக்தி அவனை மீனாட்சி தியேட்டர் தாண்டும் போதே மறித்து அணைத்துக் கொண் டாள். "அண்ணே நீ அங்க போகாதண்ணே. உன்

னயவும் கொன்றுவாய்ங்கண்ணே. நீ எங்கியாச்சும் போயிருண்ணே." அவள் அலறல் அந்த வீதியில் சென்ற எல்லா வாகனங்களையும் நிறுத்தியிருந்தது. அவன் எந்த பேராற்றலாலும் தடுத்து நிறுத்த முடியாத வெறியோடு அவளை விலக்கிவிட்டு சூர சம்ஹாரம் பொட்டலின் வழியாய் சத்யாவின் வீடிருக்கும் வீதிக்குள் ஓடினான். இன்னும் வன்மம் அடங்கியிருக்காத வாசும், சத்யாவின் குடும்பமும் அவனை பொட்டலிலேயே வைத்து அடித்துத் துவைத்தனர். ஒருவர் இரண்டுபேர் என்றில்லை. அந்த வீதியின் சரிபாதி ஆண்கள். இன்னொரு பகுதி ஊர் கண் முன்னால் நடக்கும் கொலையை நிறுத்த முடியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. கூட்டத்தில் ஒருவன் "இங்க வெச்சு எதும் செய்ய வேணாம். இவன நம்ம ஜிம்முக்குத் தூக்கிட்டுப் போயிருவம்ணே." எனக் கத்த கதிரின் கை கால்களைக் கட்டித் தூக்கிக் கொண்டு சென்றனர்.

ஊருக்கு வெளியிலிருந்த அந்த பழைய ஜிம்மில் பார் கம்பிகளில் அவன் கட்டி வைக்கப்பட்டிருந்தான். ஆத்திரம் தீர அடித்த ஒவ்வொருவருக்குள்ளும் அவன் ஜாதி மூக்கு மேல் ஒட்டிய பீயாய் உறுத்தியது. அதை துடைத்தெறிய வேண்டுமானால் அவன் சாக வேண்டும். அத்தனை எளிதில் கொன்றுவிடவும் அவர்களுக்கு மனமில்லை. தம்பில்ஸ்களால் அவன் கால்களில் அடித்தும், தலையை மொட்டை அடித்தும் உடலை சிதைப்பதற்கான எல்லா பயிற்சிகளையும் செய்து

பார்த்தார்கள். சத்யாவை எரித்த பெட்ரோல் அவன் மீதும் ஊற்றப்பட்ட போது உதவிக்காக கதிர் கத்தி அழக்கூட இல்லை. சத்யாவோடு என்றென்றைக்கும் சேர்ந்துவிட்டால் போதுமென தன்னைச் சூழ இருந்த நெருப்பிற்காக கண்ணீரோடு காத்திருந்தான். காவல்துறை வாகனமும், கதிரின் ஏரியா ஆட்களுமாய் வந்து அவன் மரணத்தை தற்காலிகமாய் தள்ளி வைத்தனர். இரண்டு ஏரியா ஆட்களுக்குள்ளும் தள்ளு முள்ளு வந்தபோது போலிஸ் காரர்கள் இரண்டு பக்கமும் பாதகமில்லாமல் பேசி சமாதானம் செய்தனர். அவன் தற்காலிகமாகவேனும் சில மாதங்களுக்கு ஊரில் இருக்கக் கூடாதெனப் பேசி அங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டான். மிச்சமிருக்கும் இந்த வாழ்க்கையை இனி வாழ்ந்தால் என்ன செத்தால் என்ன? தான் வாழ்வதற்கான சந்தோசமிக்க ஒரே காரணமாய் இருந்த அவளும் இல்லாது போன பின் இந்த உலகில் தனக்கு என்ன இருந்துவிடப் போகிறது. இந்தக் காயங்கள் ஆறினாலும் வலியும் வடுவும் எப்போது ஆறும்? உள்ளே எப்பொழுதும் கதறும் உலகை வெறுக்கும் கதிரின் ஆன்மா இனி துயரிலிருந்து எவ்வாறு மீளும்? தனக்கு இந்த வாழ்வில் எந்த சந்தோசங்களும் நிரந்தாரமானதில்லையென அவன் ஆன்மா அவன் முன்னாலும் அந்த நெடுஞ்சாலையின் மையாகவும் விழுந்து கதறியது.

ரத்தப் பூக்கள்

சிவப்பு புத்தகம்.

Master sun

"those who are first on the battlefield and await the opponents are at ease; those who are last on the battlefield and head into battle get worn out."

- 'the art of war' – sun tzu.

சோதோமும் கொமோராவும் அழிக்கப்படுதல்.

23 சூரியன் உதயமானபோது லோத்து சோவார் நகரத்திற்குள் நுழைந்தான். 24 அதே நேரத்தில் கர்த்தர் சோதோமையும் கோமோராவை அழிக்க ஆரம்பித்தார். கர்த்தர் வானத்திலிருந்து நெருப்பையும் கந்தகத்தையும் அந்நகரின் மேல் விழுமாறு செய்து, 25 அந்த நகரங்களையும் அதன் முழு சமவெளியையும், அங்கிருந்த செடிகளையும், ஜனங்களையும் அழித்துவிட்டார்.

26 அவர்கள் ஓடிப்போகும்போது லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். அதனால் அவள் உப்புத்தூண் ஆனாள்.

27 அதே நாள் அதிகாலையில், ஆபிரகாம் எழுந்து கர்த்தரை தொழுதுகொள்ளும் இடத்துக்குச் சென்றான். 28 அவன் அங்கிருந்து சோதோம், கொமோரா நகரங்கள் இருக்கும் திசையையும், அதன் சமவெளியையும் பார்த்தபோது அங்கிருந்து

புகை எழும்புவதைக் கண்டான். அது பெரிய நெருப்பினால் ஏற்படும் புகைபோல் தோன்றியது.

29 தேவன் பள்ளத்தாக்கில் உள்ள நகரங்களை அழித்துவிட்டார். அப்போது அவர் ஆபிரகாமை நினைத்து, ஆபிரகாமின் உறவினனான லோத்தை அழிக்காமல் விட்டார். பள்ளத்தாக்கில் இருக்கும் நகரங்களுக்குள் லோத்து வாழ்ந்துகொண்டிருந்த அவ்விடங்களை அழிக்கும் முன்பு லோத்தை தேவன் வெளியேற்றினார்.

- லோத்தின் பார்வையாளர்கள்.

பாசவலை

சத்யா கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு களாக மாறிக்கொண்டிருந்தாள். ரணத்தின் ஒவ் வொரு துளியும் அவள் விட்டுச்சென்ற பிரி வால் நிரம்பியிருந்தது. வலிகளுக்கு இயல்பாகப் பழகிப்போன அவனின் ஆகப்பெரிய சந்தோசமும் கைவிட்டுப் போன பின் அந்த ஊரிலிருந்து கொஞ் சமே விலகி இருக்க விரும்பினான். ஹார்விபட்டி யில் தற்காலிகமாக குடியேறிய சில நாட்களுக்குப் பின் முருகன் தேடிவந்திருந்தான். சக்தி விடுமுறை எடுத்துக் கொள்ள வரச்சொன்னாளென அவன் சொன்ன போது முன்னைவிடவும் அவள் மீதான அன்பு பெருக்கெடுத்ததைப் போலவே கொஞ்சம் குறைந்திருந்த சத்யாவின் மீதான காதலும் அவ ளற்ற வெறுமையும் பெரும் வலியாய் மனதெங் கும் ஒலித்தது. "நான் யாருக்கும் எந்த கெட்டதும் நெனைக்கலையேடா, ஏன் எனக்கு எந்த சந்தோ சமும் நிரந்தரமா இருக்க மாட்டேங்குது?" தலை கனக்கும் போதையில் கதறி அழுத கதிரை சமா தானப்படுத்த விரும்பாமல் முருகன் வலி தீர அழ விட்டான். "நான் காதலிச்ச பொண்ண உயிரோட கொன்னு இருக்கானுக. ஆனா என்னால அவ னுகள எதுத்து ஒன்னும் செய்ய முடியல. என்ன பொறப்புடா இது? என்னால என் பிரச்சனைகள்

எதுக்குமே பதிலா எதுவும் செய்ய முடியலைன்னா எதுக்குடா இந்த வாழ்க்க? அவமானமா இருக்கு முருகா. திங்கற ஒவ்வொரு கவள சோறும் பீயாத் தெரியுது." உள்ளே கனன்று கொண்டிருந்த ஆத்திரத்தை எல்லாம் கதறலாய்க் கொட்டினான். "இப்போதைக்கு நீ பாதுகாப்பா இருக்கனும்டா கதிரு. எல்லாத்துக்கும் ஒரு நேரம் வரும் பொறுமையா இரு." முருகனிடம் இப்பொழுதும் அதே நிதானம், அக்கறை. "புழு மாதிரி வாழற இந்த வாழ்க்க எதுக்குடா முருகா?" சிவந்து கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். ஹார்விப்பட்டியின் இரவு திருமங்கலத்தில் இருப்பது போல் உவப்பானதாக இல்லை. சரியான நேரத்தில் உறங்கி சரியான நேரத்திற்கு எழுந்து வேலைக்குச் செல்லும் சராசரியான மனிதர்கள். அடுத்தவர் நலன் குறித்தோ துக்கம் குறித்தோ யோசிக்க அவகாசமில்லாத எளிய மனிதர்களே அவனைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருந்ததால் அந்த இரவில் மனம் கொந்தளித்து கதறும் அவனின் குரலைக் கேட்க முருகனைத் தவிர ஒருவருமில்லை. "அவளுக்கும் சேத்து நீ வாழனும் கதிரு. உன்னய அழிக்கனும்னு நெனைக்கிற அவனுக எல்லாருக்கும் முன்னயும் நல்லா வாழ்ந்ந்து காட்டு. நீயே சாகனும்னு நெனச்சாலும் சத்யா சாமியா இருந்து உங்கூடயே வருவா. நீ வாழ்றதத்தாண்டா அவளும் விரும்புவா. நாங்கல்லாம் இருக்கம் ல தைர்யமா இரு." உடைந்து நொறுங்கிய கதிரின் மனதிற்கு முருகனின் ஆறுதல் வார்த்தைகள் சின்னதொரு விடுதலையைத் தந்தது. ஒரு வாரத்திற்கும் மேலாக தினமும் அவனை தினமும் வந்து பார்த்துவிட்டுப் போனான். விடு

முறை முடிந்து அவன் மாலத்தீவு திரும்பிவிட்டப் பின்னும்கூட சக்தி அவ்வப்போது பேசிக் கொண்டி ருந்தாள்.

வாழ்க்கை தனது ஆகப்பெரிய சந்தோ சத்தை பறித்துக் கொண்ட பிறகும் ஆறுதலுக்காக சில உறவுகளையும் நட்புகளையும் விட்டுச்சென்றி ருந்தது. மாரி, பழனி, செந்தில், மணி எல்லோரும் அவனுக்கு எதுவும் செய்ய முடியாத குற்றவுணர்ச் சியில் புழுங்கினர். இவனுக்கு எதுவும் ஆகிவிடா மல் பாதுகாக்க முடிந்தவரை உதவி செய்தார்கள். சத்யாவுக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டு வேறு வேலைக்குச் செல்ல விரும்பியிருந்த கதிர் அந்த விருப்பங்களை கைவிட்டான். இழப்பதற்கு ஒன் றுமில்லையென ஆனபின் எந்த வேலை பார்த் தால் தான் என்ன? யாருக்காக ஒழுங்குகளை பின் தொடரவேண்டும்? தன் இழப்பையும் அவமா னங்களையும் மனசாட்சியின்றி சமூகம் தன்னைக் குறித்து என்ன நினைத்தால் இனி என்ன? மாரி யிடமிருந்து எப்போதும் போல் சரக்கை வாங்கி விநியோகிக்கத் துவங்கினான். அந்தத் தொழிலும் அலைச்சலும் போதையூறிய மனிதர்களும் அவன் உலகை ஆக்ரமிக்கத் துவங்கினார்கள்.

வருடத்திற்கு மூன்று முறை பரோல் விடுப் பில் அப்பா வந்து போகத் துவங்கினார். இவனி டம் பேசுவதற்கு விஷயங்கள் எதுவும் இல்லாததால் அவர்கள் பெரும்பாலும் நேருக்கு நேராக பார்த் துக் கொள்வதில்லை. கண்டிசன் கையெழுத்துப் போட போலிஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிப் போவான். அப்பொழுது கூட இருவரும் பேசிக் கொள்ளமாட் டார்கள். அவர் விடுமுறைக்கு வந்து போகத் துவங்

கியபோது அவரோடு சம்பந்தப்பட்ட நிறைய பேர் பழக்கமானார்கள். தற்செயலாக குற்றத்தின் பக்கமாய் போனவர்களும், குற்றங்களுக்கு சிறுவயதிலிருந்தே பழக்கப்பட்டவர்களுமாய் அவன் பார்த்த மனிதர்கள் தான் அவனை வேறுமாதிரியானவனாய் மாற்றினார்கள். மருத்துவமனைகளில் ரயில் பயணங்களில் கிடைக்கும் உறவுகளை விடவும் ஆச்சர்யமானவர்கள் சிறைச்சாலையில் கிடைக்கும் நண்பர்கள். விஜி அண்ணனும் அவனுக்கு அப்படி அறிமுகமானவர் தான். ஆனால் அவரைப் பார்க்கும் போதெல்லாம் தனக்கு இந்த மாதிரி ஒரு அண்ணன் இருந்திருக்கலாமென ஆசையாய் இருக்கும் கதிருக்கு. பரோல் விடுப்பில் வருகிறவர்களுக்கு அவர்களின் வீடும் கதிரும் தவிர்க்க முடியாதவைகளாய் மாறியதற்கு முக்கியமான காரணம் அவன் செய்த தொழில்.

மாரியோடு எந்த பிணக்குமில்லாமல் கதிரால் வேலை செய்ய முடிந்தது. பொருளை எடுத்து வருவதோ சரியான நேரத்தில் பிரித்து எடுத்துக் கொண்டு போய் சேர்ப்பதோ எதுவும் சிரமமாக இருந்திருக்கவில்லை. சரக்கு எடுத்து வரும் வழியில் எப்போதாவது போலிஸ் செக் அப் இருக்கலாம், ஆனாலும் அவர்கள் ஒரே வண்டியில் தொடர்ந்து சரக்கு எடுத்து வராமல் இருப்பதில் கவனமாய் இருப்பார்கள். ஒரு கிலோ ரெண்டு கிலோ மாட்டினாலே சிக்கல் என்னும் நிலையில் மூட்டையாக சிக்கினால் போட்ட முதலும் மிஞ்சாது என்கிற பயம். பொருளை எடுத்து வரும் போது அதிகபட்ச பொறுமை முக்கியமான ஒன்று. குறைவாகப் பேசுதல் அல்லது பேசுவதை முற்றிலுமாக

தவிர்த்தல் இதுதான் பாதுகாப்பு. தேவைக்கு அதி கமாய் ஒரு சொல் வெளியேறினாலும் சிக்கல் தான். மேற்குத் தொடர்ச்சி மலையின் பறந்து விரிந்த வனத்திற்குள் வருஷநாட்டின் இந்தக் கஞ்சக் காடு கள் ஒரு தனித்த சாம்ராஜ்யம். தமிழ் முதலாளி மார்களும், மலையாள முதலாளி மார்களும் சச்ச ரவுகள் இல்லாமல் அந்த வனத்தின் வளத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

விஜி அண்ணனின் மூலமாகத்தான் கதி ரின் ஐயா இவனிடம் அந்த கோரிக்கையை வைத் தார். 'உள்ள பொருள் எடுத்துட்டு வந்து குடுத்தா நம்மளுக்கும் லாபம் அவங்களுக்கும் லாபம்.' என. உள்ளே எடுத்துப் போக வேண்டிய பொறுப்பு கதிரி னுடையது. சிறைக்குள் சரியாக வியாபாரம் செய்து பணத்தை தங்களுக்கு விசுவாசமான போலிஸ்கா ரர்களின் மூலமாய் வெளியில் சேர்க்க வேண்டியது அழகர்சாமி மற்றும் விஜியின் பொறுப்பு. மேலோட் டமாய்ப் பார்க்க சாதாரணமாகத் தோன்றும் இந்த வேலை கடும் சிக்கலானது. கொஞ்சம் பிசகினா லும் அதனால் வரும் விளைவுகள் மோசமானவை. இராமநாதபுரத்து கேங் ஒன்று ஏற்கனவே உள்ளே மருத்து விற்றாலும் அது அவ்வளவு சுத்தமாக இல்லை என்கிற புகாருண்டு. கதிரின் ஐயா விடு முறைக்கு வந்தபோது மாரியின் சரக்கை பயன் படுத்திப் பார்த்தார். அதன் தனித்துவத்திற்கான விலை சிறைக்குள் எத்தனை மடங்கென யோசிக் கையிலேயே ஆசைகள் சிறகுகளாய் விரிந்தன. சிறைக்குள் ஒரு கூட்டமாக இருப்பது எப்போதும் பாதுகாப்பு. எல்லாச் சிறைகளும் உள்ளே செல் கிறவர்களுக்கு இரண்டு விதமான வாய்ப்புகளைத்

தரும். ஒன்று யாரோடும் கூட்டு சேரமுடியாமல் எல்லோரிடமும் வதைபடுவது. இரண்டு, யாரேனும் வலிமையான ஆட்களோடு சேர்ந்து தனக்குத் தேவையான எல்லாவற்றையும் சாதித்துக் கொள்வது. அழகர்சாமிக்கு நண்பர்கள் இருந்தார்கள். ஆனால் அது கேங் ஆக வளர்ந்திருக்கவில்லை. அவர்களுக்கென எந்த அதிகாரங்களும் இல்லாதவர்களாகவே இருந்தார்கள். இந்தப் புதிய தொழில் வழியாகத்தான் அவர்கள் தங்களுக்கான சாம்ராஜ்யத்தை உருவாக்க முடியும். லாபத்தை விடவும் சிறையிலிருந்து வெளியேறும் வரைக்குமான பாதுகாப்பும் அதிகாரமும் முக்கியமெனக் கருதியதாலேயே அழகர்சாமி தன் மகனின் மூலமாக இந்த வியாபாரத்தை செய்ய முனைப்போடு இருந்தார்.

"நீ பாத்து செய்யனும்னு நெனச்சா செய்யலாம்டா தம்பி." விஜி அண்ணன் இந்த விஷயத்தில் கதிரை முழுமையாக நம்பியது. மறுக்கவே முடியாத நிலையில் கதிர் அரைமனதோடு சம்மதித்தான். அடுத்த பரோல் விடுமுறையில் அப்பா வரும் போது எவ்வாறு பொருளை உள்ளே எடுத்துச் செல்வதென்கிற மிகத்தெளிவான திட்டமும் இருந்தது. அவர் தன்னைச் சார்ந்த ஒரு கூட்டத்தை உருவாக்கியிருந்தார். ஒரு தேநீர் 25 ரூபாய், ஒரு துண்டு பீடி பதினைந்து ரூபாய், கணேஷ் புகையிலை பாக்கெட் 50 ரூபாய் என அவர்களின் மிக அத்தியாவசியமான தேவைகள் எல்லாம் பெரிய விலை கொண்டிருக்கும் போது சிறையிலிருக்கும் மனிதர்களுக்கு பணம் தேவைப்படத்தானே செய்யும். தேவைகளைக் கொண்டிருந்த மனிதர்களின் கூட்டில் உருவான அந்தக் குழுவில் எல்

லோருக்குமே இந்த வருமானம் குறித்த பேராசை இருந்தபோதும் நேரடியாக ஒருவரும் காட்டிக் கொள்ளவில்லை. இப்படியானதொரு குழுவை நடத்துவதென்பது பெரும் பகையை சம்பாதிக்கிற விஷயம். இராமநாதபுரத்து தங்கராசு கேங் பல வருடங்களாக சிறையில் மருந்து வியாபாரத்தை கைவசம் வைத்திருந்தார்கள். வெளிச்சத்தின் அதிகாரங்கள் எதுவும் செல்லாத இருளின் அதிகாரம் என்பது எல்லாவகையான குரூரங்களுக்கும் தயாரான ஒன்று. கருணை மன்னிப்பு என்கிற வார்த்தைகளை அறவே வெறுக்கும் இவர்கள் தங்கள் இருப்பிற்கான போரில் தியாகம் செய்யவும் தயாராகவே இருப்பார்கள். தங்கராசு என்னும் மனிதனுக்கு பெரும் பாதுகாப்பாய் இருந்தது அவனது ஜாதி. அதை உடைத்து அந்த அதிகாரத்தின் கூட்டில் கல்லெறிந்து கலைப்பதில் இருக்கும் எல்லா பாதகங்களையும் அழகர்சாமி தெரிந்தே தான் வைத்திருந்தார். இந்தத் தேவையின் பொருட்டு முதல் முறையாக அழகர்சாமியுடன் பேசிய கதிர் அவரை யாரோ ஒருவராகத்தான் பார்த்தான். விஜி அண்ணனனிடம் ஏற்பட்ட பிடிப்பு கூட இவரிடம் உருவாகவில்லை. தனது தேவைகளுக்காக இப்பொழுதும் தன்னைப் பயன்படுத்திக் கொள்கிற மனிதராகத்தான் பார்த்தான். மூன்று நாட்கள் பரோல்விடுமுறை முடிந்து அழகர்சாமி கிளம்புகையில் மாரியிடமும் அவர் தன் திட்டத்தை வெளிப்படுத்தினார். “நீ சரக்க குடுத்தா மட்டும் போதும் மாரி. உள்ள எடுத்துட்டு வர்றது, பிரிச்சு வியாபாரம் பாக்கறது எல்லாத்தையும் நாங்க பாத்துக்குவோம். வெளில கிடைக்கிற லாபத்தவிட அங்க அதிகம். நீ

எந்த ரிஸ்க்கும் எடுக்க வேணாம். என்ன சொல்ற?" தனது இந்த தூண்டிலுக்கு அவன் மறுக்காமல் சம் மதிப்பான் என அழகர்சாமி உறுதியாக நம்பினார்.

வியாபாரத்தில் லாபத்தை விடவும் பாது காப்பு முக்கியமென்பதை எப்போதும் தெளிவாக உணர்ந்திருந்த மாரி அவருக்கு எந்த வாக்கு றுதிகளையும் கொடுத்திருக்கவில்லை. அவரின் பேராசைக்கு தன்னை வேட்டையாடக் கொடுக்கக் கூடாதென்பதில் மட்டும் உறுதியாய் இருந்தான். பத்து நாட்களுக்குப் பிறகு சிறைக்கு மணுபோட் டுப் பார்க்கச் சென்ற கதிர் பொருளோடு வருவா னென எதிர்பார்த்திருந்த அழகர்சாமியும், விஜியும் வெறுங்கையோடு வந்த அவனைப் பார்த்து ஏமாற் றமடைந்தனர். கச்சேரியில் விலாவாரியாக பேசவும் முடியாமல் அழகர்சாமி அப்படியே திரும்பிப் போய் விட்டார். "சரி விட்றா தம்பி. முடியாட்டி நீ ரிஸ்க் எடுக்காத." என அப்போதும் விஜி அண்ணன் தான் ஆறுதல் சொல்லியது. கதிர் என்ன முடிவெடுப்ப தென தெரியாத குழப்பத்தோடு வீடு திரும்பினான். இரண்டு நாட்களுக்குப்பின் ஒரு போலிஸ்காரர் ரகசியக் கடிதத்தோடு அவனைத் தேடி வந்தார். "என்ன ஸார் இந்த லெட்டர குடுக்கவா தேடி வந்திங்க?" ஆச்சர்யமாகக் கேட்டான். "ஆமாய்யா. உள்ள இருந்து உனக்கு இன்லண்ட் லெட்டர் போட்டா அத அங்க படிச்சு பாத்துட்டுதான் அனுப் பியெ வெப்பானுங்க. மொத்தமா மாட்டிக்குவிங்க. அதனால இந்த மாதிரி லெட்டரெல்லாம் இப்பி டித்தான் வரும்." தனது சேவைக்கான சன்மானம் எதிர்பார்த்து நின்ற அவருக்கு 500 ரூபாயை செல விற்குக் கொடுத்து அனுப்பினான். அவன் யூகித்

திருந்ததை அழகர்சாமி விஜி அண்ணன் ,மூலமாக கடிதம் எழுதியிருந்தார். "மாரி இந்த விஷயத்தில நம்மளுக்கு உதவாட்டி நீ தனியா வியாபாரத்த ஆரம்பி. உள்ள ஏற்பாடும் தயாரா இருக்கு. உனக் கும் பொருள எப்பிடி கொண்டு வரனும்னு தெரியும். யோசிக்காத. அடுத்த முறை மணுபோட்டு வரும் போது பொருளோடு வரவும்." என சுருக்கமாக எழு தப்பட்டிருந்த கடிதத்தின் இறுதியில் அழகர்சாமி என்பதற்கு பதிலாக விஜி என பெயர் இருந்தது. இவன் விஜியின் மீது வைத்திருந்த அன்பை தனக் கானதாக அழகர்சாமி பயன்படுத்திக் கொண்டார்.

பொருளை வாங்கி விற்பது ஒரு தொடர் செயல். நினைத்த மாத்திரத்தில் ஒருவன் எப் படி மருத்துவராகவோ கலெக்டராகவோ ஆகமு டியாதோ அப்படியே மருந்து விற்கும் தொழிலை எடுத்துச் செய்யவும் முடியாது. நம்பிப் பொருள் கொடுக்கிறவர்கள், முதலீடு, போலிஸ்காரர்களின் பழக்கமென அதற்கு நீண்ட கால உழைப்பும் தொடர்பும் அவசியம். இந்த நிலையில் மாரியை விட்டால் வேறு மார்க்கமில்லை என்னும் இக்கட் டான நிலையில் கதிர் "டேய் பங்காளி எங்கய்யா சொல்லிட்டுப் போனத கொஞ்சம் யோசிச்சியா? பொருள் மட்டும் நீ குடுத்தா போதும். எல்லா ரிஸ்க்கையும் நான் எடுத்துக்கறேன்." என்று கேட் டான். இப்படி கேட்பது எத்தனை முட்டாள்த்த னமெனத் தெரிந்தும் அவனால் தவிர்க்கமுடிய வில்லை. இந்த தர்மசங்கடமான சூழலை எதிர் கொள்ளக் கூடாதென பயந்த மாரிக்கும் என்ன பதில் சொல்வதெனத் தெரியவில்லை. தன் வாழ் வில் தவிர்க்கவே கூடாதென நினைக்கும் மனி

தன் கதிர். ஆனால் அன்பையோ நட்பையோ பார்த்து தொழில் செய்ய முடியாது. "கதிரு உனக்குத் தெரியும் இந்தத் தொழில் எவ்ளோ ரிஸ்க்குன்னு. வெளில செய்றதுக்கே நாம படாதபாடு படறோம். இதுல ஜெயிலுக்குள்ள எடுத்துட்டுப் போறதெல் லாம் நம்மளுக்கு மட்டுமில்ல நம்மளோட சேந்த எல்லோருக்கும் ஆபத்து. என்னால ஒரு நாளும் அதச் செய்ய முடியாது. ஆனா நீ பொருள் வாங் கறதுக்கு மட்டும் வேணும்னா நான் முதலாளி கிட்ட சொல்றேன். நீ தனியா பாத்துக்கோ. பொருள் எடுக்கறது, விக்கிறது இதெல்லாம் விளயாட்டு இல்ல. அதோட நீ உள்ள மட்டுந்தான் யாவா ரம் பாக்கனும். மதுரை டவுனுக்குள்ளயோ இல்ல நம்ம ஏரியாவுலயோ யாவாரம் பாக்கக் கூடாது. அது தேவையில்லாத பகை. சம்மதமா?" மறைமுகமாக அவன் தன்னிடமிருந்து கதிரை பிரித்து அனுப் புகிறான் என்பது புரிந்தாலும் அதற்கு உடன்பட் டான். தனியாக இந்தத் தொழிலை செய்யுமள விற்கு துணிச்சலோ பலமோ கதிருக்கு எப்படி இல் லையோ, அதே போல் அவன் இழப்பதற்கும் இனி ஒன்றுமில்லை. "நீ உன் விருப்பத்துக்காகன்னு எதையும் செய்ய முடியாத வரையிலும் உன்னால யாருக்கும் விசுவாசமா இருக்க முடியாது கதிர். நாம கொஞ்ச நாள் விலகியே இருப்போம். நம்ம ரெண்டு பேர் தொழிலுக்கும் அதுதான் நல்லது." தொழி லில் இருந்து மட்டுமல்லாமல் மாரி தன்னிலிருந் தும் கதிரை வெகு தூரத்திற்கு பிரித்துவைக்க முடி வுசெய்தான்.

ஒரு வாரத்திற்குப்பின் புதிதாக கொள்மு தல் செய்யப்பட்ட பொருளை சிறு சிறு பொட்

டலங்களாகப் பிரித்து இரண்டு மிக்சர் பைகளில் அடைத்துக் கொண்டவன் துணைக்கு மலர் அக் காவையும் கூட்டிக் கொண்டு சிறைக்கு வந்தான். அவன் எதையெல்லோம் செய்யக்கூடாதென அக் கறையோடு கண்காணிப்பாளரும் வேறுசிலரும் உதவ வந்தார்களோ அதையெல்லாம் செய்யப் பழ கும் மனிதனாக அந்த சிறைச்சாலை கதவுகளை முதல் முறையாக கடக்கையில் அடிவயிற்றில் ஒரு போதுமில்லாத பயம் சுழன்று கொண்டிருந்தது. எந்த நிமிடம் வேண்டுமானாலும் தான் மாட்டிக் கொள்ளலாமென்கிற பயத்தோடேயே அவன் கண் கள் அங்குமிங்குமாய் அலை பாய்ந்தன. அவனிட மிருந்த பதட்டத்தைக் கவனித்து "என்னடா உடம்பு சரி இல்லயா? ஏன் இப்பிடி மலங்க மலங்க பாக்கற?" எனக் கேட்டாள். "அதெல்லாம் ஒன்னுமில்லக்கா. நீ பேசாம வா." சமாளித்தவன் அவளிடம் பொருள் எடுத்துச் செல்வதைக் குறித்து வாய் திறக்க வில்லை. அழகர்சாமியும், விஜி அண்ணனும் பொருளோடு அவன் வந்த சந்தோசத்தில் பூரித்துப் போயிருந்தனர். எல்லா பாதுகாப்பு சோதனைக ளையும் மீறி கச்சேரியில் பொருளை அவர்களிடம் சேர்த்த பிற்பாடுதான் இருதயம் தன் இயல்பிற்குத் திரும்பியது. தான் விரும்பிய சாம்ராஜ்யம் இனி எளிதில் அமைந்துவிடுமென்கிற உறுதியான நம் பிக்கையில் அழகர்சாமி பொருளை பிரித்து எப்படி வியாபாரம் செய்வதென்பது குறித்து விஜியோடு ஆலோசித்தார். புதிதாக வியாபாரம் துவங்கப் போகும் அவர்களோடு மறைமுகமன யுத்தத்திற்கு தங்கராசு கேங் எப்போதோ தயாராகியிருந்தனர்.

மதுரை மத்திய சிறைச்சாலை.

சூழ்ச்சிகள் மிகுந்த இந்த சிறைச்சாலைக் குள் பரஸ்பர நம்பிக்கை என்பது பொய். தற்காலி கமாக மனிதர்களை வசியம் செய்யும் ஒரு சொத்து. அந்த ஒன்றை நம்பித்தான் தவறான முடிவுகளின் வழி ஒவ்வொரு நாளையும் மோசமாக்கிக் கொண் டிருக்கிறார்கள். தனக்கான அதிகாரம், பலம் எல் லாம் பாதுகாப்பானதாய் இருக்கிறது என்னும் நம் பிக்கையில் ஆழமாய் மூழ்கிப் போகிறவர்கள் மிக விரைவில் வீழ்ச்சியை நோக்கிச் செல்கிறார்கள். தங்கராசு கேங்கிடமிருந்து தொழில் இவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கு நீண்ட போராட்டம் தேவைப்பட்டது. கண்காணிப்புகளை மீறி தண்ட னைச் சிறைவாசிகள் அவ்வப்போது இரு அணி களாக மாறித் தாக்குதல் நடத்திக் கொள்ளத் துவங்கினர். இரவு நேரங்கள் பாதுகாப்பற்றவை யாய் இருந்தன. அழகர்சாமியின் குழுவில் ஆள் மாற்றி ஆள் காவலுக்கு இருந்தார்கள். தொழில் பழக வேண்டுமென்பதற்காக மருதுவிற்கும் அழ கர்சாமிக்கும் மண்புழு இயற்கை உரம் தயாரிப் பது எப்படி என பயிற்சி அளித்தார்கள். ஆறேழு

வருடங்களைக் கடந்த பிறகு சிறைவாசிகளுக்கு இதுமாதிரியான சிறுதொழில்கள் நிறைய கற்றுத் தரப்படுவதுண்டு. அதில் வரும் சிறிய வருமானம் இவர்களின் செலவுகளுக்காக தரப்படும். தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் தேனீக்கள் வளர்த்தல், ஹாலோ பிரிக்ஸ் கற்கள் செய்தல், ஓடு தயாரித்தல், தோட்ட பராமரிப்பு என இப்படி ஏராளமான வேலைகளுண்டு. அழகர்சாமி வியாபாரம் துவங்கிய நாளில் இருந்து கூடுதல் கவனத்தோடு இருந்ததால் தங்கராசு குழுவின் கவனம் முழுக்க அவரோடு இருந்த மற்றவர்களின் மீதே இருந்தது. முதலில் அவர்களிடம் மாட்டிக்கொண்டது மருதுதான். மண்புழு பயிற்சி வகுப்பு முடிந்து மதிய உணவிற்காக திரும்பியவரை சலவை செய்யும் இடத்தில் வைத்து நான்கைந்து பேர் அடித்தனர். மருதுவும் அவர்களோடு சரிக்கு சரியாய் மல்லுக்கட்டினாலும் அவர்களிடமிருந்த ஆயுதமே இறுதியில் வென்றது. உடல் முழுக்க ரத்தக் காயங்களோடு மயங்கி விழுந்தவரை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். கண்காணிப்பாளர் எல்லா பிளாக்குகளிலும் திடீர் சோதனை நடத்திய போது எங்கும் ஆயுதங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை. “மருதுவ அடிச்சது யாருன்னு எனக்குத் தெரியனும்? இல்லாட்டி சந்தேப்படற எல்லாரையும் பனிஷ்மெண்ட் ல கடலூருக்கு அனுப்பிருவேன்.” என கோவமாகச் சொல்லிவிட்டுப் போனார். யாரும் தங்கராசு குழுவைக் காட்டிக் கொடுக்கத் தயாராய் இல்லை. சிறைச்சாலையில் இரண்டு குழுக்களுக்குள் நடக்கும் சண்டைகளுக்கு அவர்களே தான் முடிவு தேடிக் கொள்ள முடியும். இது தனி உலகம்,

இங்கு எல்லாமே தனி விதிகள். சட்டத்தின் விதி களைக் கூட மீறினாலும் இந்த விதிகளை மீறும் துணிச்சல் ஒருவருக்குமில்லை.

அழகர்சாமியின் பக்கமிருந்து எந்த பதில் தாக்குதலும் இல்லை. பொருள் விற்பதைக் கூட தற்காலிகமாக நிறுத்தி வைத்தார்கள். சில வாரங்களுக்குப்பின் தங்கராசுவிற்கு சிறைக்குள் பொருளை எடுத்து வரும் அவரின் தம்பி வேறொரு வழக்கு விசாரணைக்காக வந்துவிட்டு நீதிமன்றத் திலிருந்து ஊர் திரும்புகையில் நான்கைந்து பேர் சேர்ந்து அவனை வெட்டிக் கொன்றார்கள். எந் தத் தடயங்களும் கிடைக்காமல் நடந்த அந்தக் கொலையை விசாரித்த போலிஸ் 'இது தொழில் போட்டியால் நடந்த கொலை என்பதை மட் டும் விசாரணைக் குறிப்பாக எழுதிக் கொண்டது. தொழிற் பகையின் காரணமய் நிகழும் கொலை கள் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு வழிபாட்டை போல் எந்த சிதறலும் இல்லாமல் கொலையில் மட்டுமே அக்கறை கொள்பவை. உடலை வைத்து எந்த அருவருப்பான செயல்களையும் அவர்கள் செய்ய மாட்டார்கள். அந்தப் பகை அந்தக் கொலை யோடு முடியாதென்பதால் முடிந்தவரை மரணத் திற்கு ஒரு மரியாதை இருக்கும். கொலை செய் யப்பட்டவனின் கண்களில் எந்த பரிதாப உணர்ச் சியும் மன்னிப்புக் கோரலும் இல்லாமல் வெறுப்பும் பகையும் மட்டுமே உறைந்துபோயிருக்கும். எவ்வ ளவு யோசித்தும் தன் தம்பியின் யார் காரணமாய் இருக்கக் கூடுமென்பதை தங்கராசுவால் கண்டு பிடிக்க முடியவில்லை. இறுதி சடங்கிற்காக ஒரு நாள் விடுப்பில் ஊருக்குச் சென்றவரிடம் அவ

ரின் மனைவி "ஜெயிலுக்குள்ள இனிமே தொழில் வேணாம்." என விம்மலோடு சொன்னாள். வன்ம மும் குரூரமும் நிரம்பிய அழகர்சாமியின் முகம் சடா ரென தங்கராசுவின் நினைவிற்கு வர முதல்முறை யாக அவரின் மீது மனதின் ஆழத்தில் அச்சம் நிரம் பியது.

எந்த விதிகளையும் அறத் தையும் நம்பாத மனிதர்களில் ஒருவன் அழகர் சாமி என்று புரிந்தபோது தங்கராசு தானாகவே தொழிலை கைவிட்டார். முன்னெப்போதும் இல் லாத யுத்தமொன்று கூடியவிரைவில் வரக்கூடு மென பயந்திருந்த எல்லோரும் அது இத்தனை எளிதில் முடிந்து போனதில் ஆறுதலடைந்தனர். தங்கராசு அமைதியாக ஒதுங்கியிருந்தாலும் பகை மட்டும் அடிபட்ட மிருகம் போல் வேட்டையாடுத லுக்கான சரியான தருணம் எதிர்பார்த்துக் காத்தி ருந்தது.

கையில் அந்த வாரத்திற்கான முதலீடு மிக் சர் பொட்டலங்களாய் இருந்தன. மத்திய சிறைச்சா லையின் வழமையான வியாழக்கிழமையை விட வும் கூட்டம் அதிகமாக இருந்ததால், நிறைய தெரிந்த முகங்களைக் காண முடிந்தது. கிழவி ஒருத்தி மணு எழுதித்தர ஆளில்லாமல் அங்குமிங் குமாய் அலைந்து கொண்டிருப்பதைப் பார்த்தவன் "எத்தா என்ன தேட்ற?" என உரிமையாய்க் கேட் டான். காலை நேரத்தின் வெயிலில் கருத்துப் போயிருந்த அவள் முகத்திலிருந்து வியர்வை அரு

வியென ஊற்றிக் கொண்டிருக்க, கையில் கசங்கி ஈரமான மனுவைக் காட்ட, "எய்யா இந்த மனுவ எழுதித்தர ஒரு ஆள் தேடிக்கிட்டு இருக்கேன். நீ எழுதித்தர்றியா?" என சிரித்தபடி கேட்டாள். "சரி யாப் போச்சு இதுக்கா இப்பிடி தவிச்சுப்போயி கெடக்க. கொண்டா." மனுவை வாங்கியவனின் கைகள் பழக்கப்பட்ட ஒன்றை செய்வது போல் வேகமாக செய்தது. "கைதி பேர் என்னத்தா?" "பன் னீரு."

"கைதி நம்பர் என்ன? எந்த ப்ளாக்?"

"சி பிளாக். கைதி நம்பர் 4791"

"என்ன கேசு?"

"கொலக் கேசு."

"யார் யாரு வந்திருக்கீக?"

"நான் என் மருமக, பேத்தி." அவன் திரும்பி அவர் களைப் பார்த்தான். நூறு நாள் வேலைக்கு விடுப்பு எடுத்துக் கொண்டாலும் ஊரின் கன்மாய்க்கரை புழுதி மறுமகளென காட்டப்பட்டவளின் உடலெங் கும் படிந்திருப்பதைப் பார்க்க முடிந்தது. "எந்த ஊருத்தா?"

"மானூத்துய்யா." அவன் திரும்பிப் பார்த்து சிரித் தான். மனுவை நீட்டி கையெழுத்துப் போடச் சொன்னான். கிழவி கையெழுத்துப் போடுகையில் திரும்பி அவளின் மருமகளைப் பார்த்தான். முற்றிய பனைமரம் போல் அப்படியொரு திரட்சி, வலிமை. அவள் கண்களை ஊடுருவிப் பார்க்கையில் இவ

னைத் தவிர்ப்பதற்காக பார்வையை வேறு பக்கமாகத் திருப்பினாள். கிழவியன் பக்கம் திரும்பியவன் “எனக்கும் பக்கத்துல தான் ஊருத்தா, ராசக்கா பட்டி.” என்றான். கிழவி ஆச்சர்யமாய், “அப்பிடியா? யார் வீட்டுப் பயப்பா நீ?” என விசாரித்தாள். “ராசக்காபட்டி தானாபதி நாகையசாமி இருக்காருல்ல.” கிழவி தன் நினைவுகளில் உடனேயே அவரைக் கண்டுகொண்டாள். “ஏப்பா அவர் பேரனா நீ?” என அக்கறையாகக் கேட்க, “ஆமத்தா. மக பேரன்.” என்றான். கிழவிக்கு நெருங்கின சொந்தக்காரனை பார்த்த சந்தோசம். தேநீர் விற்றுக்கொண்டிருந்த மாரியம்மாளைக் கூப்பிட்டவன் எல்லோருக்கும் தேநீர் கொடுக்கச் சொன்னான். கிழவியின் கையில் பழம், கடலைமிட்டாய், பேரிச்சம்பழம் என ஏராளமான பலகாரங்கள். சிறையின் கதவைத் திறந்து வந்த போலிஸ்காரன் கையிலிருந்த மனுக்களை வரிசையாக வாசிக்கத் துவங்கினான். அந்த வளாகமெங்கும் உட்கார்ந்திருந்த ஆட்கள் கதவின் பக்கமாய் நெருங்கி வந்தனர். தூர தொலைவுகளில் இருந்து வந்திருந்த சிலரின் முகத்தில் அசாத்தியமான களைப்பு தெரிந்தது. ”மணிமாறனப் பாக்க வந்த முத்துப்பாண்டி, ராசு வப் பாக்க வந்த முத்துமாரி, விஜயனப் பாக்க வந்த செல்வி, போஸ்டர் கண்ணனப் பாக்க வந்த குமாரு.” போலிஸ்காரனின் கையிலிருந்த மனுக்கள் ஆட்களாய் மாறி வரிசையாக கதவைக் கடந்து உள்ளே செல்ல, மணு எழுதும் இடத்திலிருந்து ஒரு ஆள்

அதுவரை எழுதிய புதிய மணுக்களை எடுத்துக் கொண்டுபோய் வாசலில் நின்ற போலிஸ்காரனிடம் கொடுத்தான். மீண்டும் கதவு சாத்தப்பட்டது.

காலியான காகிதக் குவளையை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுத் திரும்பியவனின் கண்கள் அந்தக் கூட்டத்தில் சுதாவைத் தேடி யது. எல்லா வாரத்தின் வியாழக்கிழமையிலும் தவ றாது வந்துவிடுமவள் இன்னும் வந்திருக்காததில் தவிப்பாய் இருந்தது. அவள் குறித்து பலவாறாக யோசித்தபடியே மீண்டும் கிழவியிடம் திரும்பிய போது அவளின் மருமகள் இவனிடம் ஏதோ கேட்க தயங்குவது தெரிந்தது. சில நொடிகள் அவளைக் கவனித்துவிட்டாலும் தானாக கேட்கட்டுமென கண்டுகொள்ளாதது போல் விட்டுவிட்டான். கிழ விதான் அப்பொழுதும் மெதுவாகத் துவங்கினாள், "எய்யா பயலுக்கு செலவுக்குத் துட்டு குடுக்கனும். போலிஸ்காரவுக கிட்ட குடுத்து குடுக்க சொன்னா குடுப்பாகளா?" அவன் சிரித்தான்.

"ம் குடுப்பாய்ங்க. ஆனா நீ குடுக்கறதுல பாதிய புடுங்கிட்டு மிச்சத்ததான் குடுப்பாய்ங்க. கையில வெச்சிருக்கற பலகாரம் என்ன பாடுபடுதுன்னு பாரு.?" என்று அவன் சொன்னதைக் கேட்டதும் கிழவிக்குக் கவலையாய்ப் போனது.

"இப்ப என்னய்யா செய்றது?' அவளிடம் தீர்வு தேடிய குழப்பம். கதிர் அவள் கையிலிருந்த பல காரப்பையை வாங்கிப் பார்த்தான். உள்ளே பல காரங்களோடு துணி துவைப்பதற்கும், குளிப்பதற்

குமாய் வெவ்வேறு சோப்புகளை வைத்திருந்தாள். பெரிய சைஸிலிருந்த லக்ஸ் சோப்புக்கட்டியை எடுத்தவன் யாரும் பார்க்காதபடி அதன் கவரை ஒரு பக்கமாக பிரித்தான். கிழவியும் அவள் மரு மகளும் குழப்பமாகப் பார்க்க, "எவ்ளோ குடுக்கப் போறீங்க?" இந்தமுறை அவன் பார்வை கிழவியின் மருமகள் பக்கமாகத் திரும்ப, "ஐநூறு ரூவாங்க." என்று சிரித்தாள்.

"ம் நானூறு ரூவாயக் குடுங்க. நூறு ரூவாயக் கையில போயி குடுங்க. எதுமே குடுக்காட்டியும் சந்தேகப்படுவாங்க." என்று கையை நீட்டினான். அவள் இன்னதென்று சொல்லமுடியாதபடி நிறமி ழந்து போன தனது சேலைக்குள் திமிறிக் கொண் டிருந்த ஊதா நிற ஜாக்கெட்டிற்குள் கையை விட்டு பர்ஸை எடுத்தாள். இதற்கு மேல் கசங்க வழியே இல்லையென்னும் அளவிற்கு நைந்து போன நான்கு நூறு ரூபாய்த் தாள்களை அவனிடம் தந் தாள். "பேச்சின்னு கூப்டுங்க." என்று அவள் சிரித் தபடி சொல்ல, சரியெனத் தலையாட்டிக் கொண்டு அந்த ரூபாய்த் தாள்களை முன்னை விடவும் சுருட்டி சோப் கட்டிக்குள் வைத்தவன் முன்பு போலவே சோப் கவரை மூடினான்.

சிறையின் சுவரோடு சேர்த்து மணு எழு தும் அந்த பெரிய வளாகத்தையும் மறைத்து அடர்ந்து வளர்ந்திருந்த பிரம்மாண்டமான மரத் தின் அத்தனை பெரிய கிளைகளையும் மீறி வெயி லின் கதிர்கள் எங்கும் நிரம்பியிருந்தன. தகர்க்க

வியலாத உறுதியான குறுங்கத்திகளென உடலை துளைத்துப் பார்த்த வெயிலை அங்கிருந்தவர்க ளில் சபிக்காதவர்கள் இல்லை. மீண்டும் கதவைத் திறந்து போலிஸ்காரன் வந்தபோது, கதிர் "எத்தா நம்ம மணு வந்திருக்கும். வாங்க. இத மட்டும் கையில வெச்சுக்கங்க. என தன்னிடமிருந்த மூன்று பைகளில் ஒன்றை பேச்சியிடமும், இன்னொன்றை அவளின் மகளிடமும் கொடுத்தான். போலிஸ்கா ரன் இவன் பெயரைக் கூப்பிடாமலேயே மணுவை இவன் கையில் கொடுக்க, அவர்களின் மணுவை யும் கேட்டு வாங்கிக் கொண்டு உள்ளே சென் றான். பழக்கமான சோதனைகளுக்கு நேர விர யம் செய்யாமல் அவன் கையிலிருந்த இருபது ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்ட போலிஸ்கா ரன் அடுத்ததாக வந்த கிழவியிடம் கையை நீட்ட, அவன் திரும்பி "நம்ம ஆளுங்க தான் ஸார்." என் றான். பொருட்களை சோதிக்கும் அடுத்த இடத் தில் அதே போல் இன்னொரு இருபது ரூபாய் கொடுக்க மெட்டல் டிடக்டர் இருக்கும் இடம் நோக்கி அவனை நகர்த்தினார்கள். அங்கும் இரு பது ரூபாய் நீட்டியபோது கிழவிக்கும் அவள் மரும களுக்கும் ஆச்சர்யமாய் இருந்தது. எதுவும் பேசா மல் அவனைத் தொடர்ந்தனர். கடைசியாய் கச்சே ரிக்கு முன்பாக நின்ற போலிஸ்காரன் இவனைப் பார்த்து சிரிக்க அவனுக்கும் ரூபாயை எடுத்து நீட் டினான். கதவைத் திறந்த போதே கச்சேரியில் ஆட்கள் உச்சபட்சமான சத்தத்தில் பேசிக் கொண்

டிருப்பதைக் கேட்க முடிந்தது. கிழவி நெருங்கி வந்து இவனிடம் "என்னய்யா அராஜகமா இருக்கு. எவ்ளோ சம்பளம் வாங்கினாலும் இந்த அஞ்சு பத்து பிச்சையெடுக்கறது இவய்ங்க நிறுத்த மாட்டாய்ங்களா?" என எரிச்சலோடு கேட்டாள். "அஞ்சு பத்தா? ஒரு நாளைக்கு எப்பிடியும் ரெண்டாயிரம் மூவாயிரம் பாத்துருவாய்ங்க. இதெல்லாம் கண்டுக்கக் கூடாதுத்தா. இந்த ஜெயிலுக்கு வெளிய இருக்கறது வேற உலகம். இது வேற உலகம். வெளி உலகத்து நியாய தர்மம் எதுவும் இங்க எடுபடாது. பேசாம வா."

யார் யாரோடு என்ன பேசுகிறார்கள் என்பதைப் பிரித்தறிய முடியாதபடி இரைச்சல் மட்டுமே கச்சேரி முழுக்க நிரம்பியிருந்தது. பெருவெள்ளம் பொங்கும் அருவிக்குள்ளிருந்து பேசுவதற்கு எத்தனை வீர்யமும் பலமும் வேண்டுமோ அத்தனை பலம் வேண்டும் இந்தப் பெருங்கூட்டத்திற்குள் பேசுவதற்கு. கதிர் தான் வழக்கமாக விஜி அண்ணனைப் பார்க்கும் இடது மூலைக்குச் செல்ல, எங்கு போவதெனத் தெரியாமல் கிழவியும் அவனுக்குப் பின்னால் சென்றாள். பேச்சி தன் மகளை இடுப்பிற்கு அருகில் வைத்துக் கொள்ள முயல அந்தக் குழந்தைக்கு கூட்டத்தில் நுழைந்து உள்ளே செல்ல மூச்சு அழுந்தியது. அவள் சுவாசிக்க முடியாமல் அழ, பேச்சி இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டாள். பார்வையாளர்களை ஒட்டி பெரிய கம்பி வலை, எதிரில் கைதிகளின் முன்னாலும்

அதே போன்ற கம்பிவலை. நடுவில் இரண்டு அடியில் போலிஸ்காரர் நடந்து கண்காணிக்க ஒரு நடைபாதை. அருகில் கூட பார்க்க முடியாது போல என பேச்சி கவலைப்பட்டாள். விஜி அண்ணனைப் பார்த்ததும் கையசைத்தான். பின்னால் தூரத்தில் நடந்து வந்த தன் மகனைப் பார்த்து கிழவி சத்தமாகக் கத்திக் கூப்பிட்டாள். அவள் சத்தம் சுவர்களை தகர்த்தெறியுமளவிற்கு இருக்க எல்லோரும் ஒருநொடி திரும்பிப்பார்த்தனர். அது வெறும் குரல் அல்ல, கதறல். அடி வயிற்று குமுறல். மகனைப் பிரிந்திருக்கும் தவிப்புகள் அவ்வளவையும் அலறலாய்க் கொட்டினாள். அவளின் மகனும் அழுதபடியே வர, பேச்சியும் தாங்கமாட்டாமல் அழுதாள். போலிஸ்காரன் எரிச்சலோடு வந்து, "எம்மா இங்க வந்துதான் ஒப்பாரி வெக்கனுமா? பயலப் பாக்க வந்தா நாலு நல்ல வார்த்த சொல்லிட்டுப் போவியா? ஒப்பாரி வெச்சிட்டு இருக்க.?" எனக் கத்தினான். அழுகையை அப்படியே முழுங்கியவள் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு "சரிங்கய்யா சரிங்கய்யா" என்றாள்.

"என்னடா உங்க அய்யாவப் பாக்கலையா?" விஜி அண்ணன் கொஞ்சம் கோவமாகவேதான் கேட்டது, கதிர் சிரித்தான். "எதுக்கு?" என்றான் கேலியாக. "கிறுக்கா இன்னும் நாலஞ்சு மாசத்துல அந்தாளு விடுதலையாகிடுவாருடா. அப்பனும் மகனும் ஒரு வீட்ல இருக்கப் போறீங்க. இப்

பிடியேவா இருப்ப.” அவரின் குரலில் அக்கறை இருந்தது.

“வரட்டும்ணே பாத்துக்கலாம்.” உற்சாகமில்லாமல் அவன் சொல்ல, விஜி நெருங்கி வந்தான். சுற்றிலும் பார்த்துவிட்டு,

“கதிரு உள்ள நெலம கொஞ்சம் சரியில்ல. மலர் வந்து பாத்துட்டுப் போயி ரெண்டு வாரம் ஆச்சு. ஒரு லெட்டர் கூட போடல. நீ ஒருக்காப் போயி அவளப் பாரு. எனக்கு உடனே பரோல் எடுக்க ஏற்பாடு பண்ணச் சொல்லு.” என்றவனின் கண்கள் கலங்கி யிருந்தன.

“என்ன பிரச்சனண்ணே.” என இவனும் பதட் டமாக, பேச வேண்டாம் என்பது போல் விஜி செய்கை செய்தான். கிழவி இன்னும் தன் மக னோடு சத்தமாக பேசிக்கொண்டிருந்தாள். திரும் பிப் பார்த்த கதிர் விஜியிடம், “அண்ணே நம்ம பக்கத்து ஊர்க்காரவுக தான். அவர பாத்துக் கண்ணே.” என்றான். விஜி சரியெனத் தலையாட் டிக் கொள்ள, கதிர் பேச்சியிடம் கொடுத்த பொட் டலங்களை வாங்கிக் கொண்டு போலிஸ்காரரிடம் சென்றான். “வாய்யா” என சிரித்தபடியே போலிஸ் காரர் மிக்சர் பொட்டலங்களை வாங்கி விஜி கொடுத்த துண்டில் கட்டினார். சட்டைப்பையில் மடித்து வைத்திருந்த இரநூறு ரூவாயை யாரும் பார்க்காதபடி அவரிடம் நீட்ட, அவர் துண்டை விஜி யிடம் கொடுத்தார். கூட்டத்திலிருந்து விலகி வந் தபோது கதிருக்கு ‘இன்னும் நாலு மாசத்துல விடு

தலையாகிடுவாருடா' என விஜி அண்ணன் சொன்னது குரூரமானதொரு சந்தோசத்தைத் தந்திருந்தது. பத்து வருடங்களுக்கும் மேலாக அவன் காத்துக் கொண்டிருப்பது அந்தவொரு தருணத்திற்காகத்தான். ஒரு மனிதனின் மீதான வெறுப்பு ஒரே நாளில் விதையாகி மரமாவதில்லை. கடந்த காலத்தின் நினைவுகளைக் கிளறி கிளறியே வெறுப்பு துளிர்விட்டு வளர்ந்து பின்னொரு நாள் பகையாக அடர்கிறது. தன் அப்பாவின் மீது கதிருக்கு இப்பொழுது இருப்பது வெறுப்பல்ல, பகை. இந்த ஒற்றைப்பகை இவனோடு சேர்த்து இன்னும் சிலரையும் தூங்கவிடாமல் செய்துகொண்டிருந்தது.

சாலையைக் கடந்து சிறைச்சாலைக்கு எதிரிலிருந்த கரும்பு ஜூஸ் கடையில் ஒதுங்கி நின்றவனை நோக்கி பேச்சியும் அவளின் மாமியாரும் வந்தபோது, அழுது தீர்த்ததில் அவர்களின் முகங்களில் இன்னும் கண்ணீரின் தடயங்களைப் பார்க்க முடிந்தது. மூன்று பேருக்குமாக சேர்த்து கரும்பு ஜூஸ் சொன்னான்.

"ஒன்னும் கவலப்படாம இருங்கத்தா, ரெண்டு மூணு வருஷம் போனா பரோல் லீவு கெடைக்கும். வருஷத்துல பத்து பதினஞ்சு நாள் வீட்டுக்கு வந்துட்டுப் போகலாம். மேல் கோர்ட்டுல அப்பீல் பண்ணலையா?" ஐஸ் கட்டிகள் மிதக்கும் கரும்பு ஜூஸ் க்ளாஸ்களை அவர்களிடம் தந்தபடி கேட்டான். கிழவியின் கைகளில் நடுக்கமிருந்தது. கழுத்தில் அடர்ந்த வியர்வையைத் துடைத்துக் கொள்ள

பேச்சி தன் சேலை முந்தானையை உருவிய போது அவளின் ஒரு பக்க முலை திமிறி சரிபாதி யாய் ஜாக்கெட்டோடு தெரிய பிரம்மிப்போடு பார்த் தான். நான்கடி தள்ளி நின்றுமே கூட இந்த கடும் வெயிலில் அவளிடமிருந்து காட்டமான வியர்வை நெடியை உணரமுடிந்தது. நீண்ட புணர்ச்சிக்குத் தூண்டும் பெண் மிருகத்தின் வியர்வை. பார்வை யைத் திருப்பிக் கொண்டு அவளின் மகளுக்கு கரும்பு ஜூஸை கொடுத்தபோது சற்று தூரத்தில் டியூட்டி முடிந்த மதன் ஸார் வருவது தெரிந்தது. இங்கிருந்தே சல்யூட் அடித்தான். நெருங்கி வந்த வர்,

"யார்றா கதிரு? உறவா?" என பேச்சியைக் கவ னித்தபடி கேட்க, அவள் இப்பொழுது உரிமையா னவளைப் போல் கதிருக்குப் பின்னால் ஒதுங்கிக் கொண்டாள். ஆமென்றான். "ஜூஸ் குடிக்கிறீங் களா ஸார்?" எனக் கேட்டவனிடம், "டேய் இங்கி யேவா?" என சிரித்துவிட்டு பையிலிருந்து சுருட்டிய ரூபாய்த் தாள்களை எண்ணிக் கொடுத்தார். எண் ணிப் பார்க்காமலேயே வாங்கி வைத்துக் கொண்ட வன் ஐநூறு ரூபாயை எடுத்து அவருக்குக் கொடுத் தான்.

"எண்ணிப் பாத்துக்கடா?" என அவர் சொன்னதில் கூடுதலாக ஏதோ எதிர்பார்க்கிறார் என்பது புரிந் தாலும், அவராகக் கேட்கட்டுமென "பரவாயில்ல ஸார்." என்றான். நிற்கவும் முடியாமல் கிளம்பவும் முடியாமல் அவர் தயங்கி,

“ஞாயித்துக் கெழம குருபூஜைக்குப் போறேன். செலவுக்கு கொஞ்சம் குடேன்.” என்று சிரித்தார். கதிர் பைக்குள் கைவிட்டு இன்னொரு ஐநூறு ரூபாயை எடுத்துக் கொடுக்க, அவரின் முகம் மலர்ந்தது. சந்தோசமாக வாங்கிக் கொண்டு வந்த வழியில் திரும்ப நடந்தார்.

“குருபூஜக்கிப் போகனும்னா பிச்ச எடுக்கனும். நாந்தான கெடச்சேன். தாயோளி.” கடுப்போடு சத்தமே வராமல் முனகினான். இவன் பணம் வாங்கியதையும் அவர் குழைந்ததையும் பார்த்துக் குழம்பின கிழவி

“எதுக்குய்யா அவரு துட்டு குடுக்குறாரு உனக்கு? பதிலுக்கு நீயும் குடுக்கற?” தன் கையிலிருந்து கண்ணாடி தம்ளரை வைத்துவிட்டுக் கேட்டாள். கதிர் யாரும் தன்னை கவனிக்கவில்லையென்பதை உறுதி செய்துகொண்டு,

“நாம எடுத்துட்டுப் போனமே மிக்சர் பொட்டணம், அதுல பொடுசு பொடுசா கஞ்சா பொட்டணமும் இருக்கு. உள்ள எங்க அய்யாவும் என்னயப் பாக்க வந்துச்சே ஒரு அண்ணன், அதுவும் பொட்டணத்த வித்து வார வாரம் காச இவர் கையில குடுத்து விடுவாங்க.” அவன் சொல்வதைக் கேட்டு ஆச்சர்யமாய்ப் பார்த்த கிழவி, “அடப்பாவிப்பயலே, உங்க தாத்தான் எவ்ளோ பெரிய நாடக நடிகன், நீ என்னடா இப்பிடி? சரி எதும் பிரச்சன வராதா?” இன்னும் பயம் விலகாமல் கிழவி கேட்டாள். “போலிஸ்

காரவுகளுக்கு குடுக்க வேண்டியத சரியா குடுத்தா எந்த பிரச்சனையும் இல்லத்தா" எனச் சிரித்தான்.

"என்னமோ போய்யா." என கிழவி கிளம்ப ஆயத்தமாக, பேச்சி நெருங்கி வந்து அவன் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

"அவரப் பாத்துக்கச் சொல்லுங்கப்பா. பாவம் வீட்டுல சொகுசா இருந்தா மனுஷன்." அந்தக் கைகளில் இருந்த சூட்டை அனுபவித்தபடியே கதிர்,

"கவலப்படாம போங்க மயினி. நம்மாளுங்க நிறைய பேர் இருக்காங்க, பாத்துக்கலாம்." என்று நம்பிக்கையாய்ச் சொன்னான். அவர்கள் விடைபெற்று நடக்கையில், சுதா இன்று வராமல் போனதின் ஏமாற்றத்தை இவளிடம் தனித்திருக்கலாமென நினைத்துக்கொண்டவன், இத்தனை அவசரம் தேவையில்லையென தனக்குத் தானே சமாதனாம் சொல்லிக் கொண்டான். ஷேர் ஆட்டோ ஒன்று அவனைக் கடந்து சற்றுத் தள்ளி நிற்க, 'சென்ரல் ஜெயில் இறங்கிக்கங்க' என ஆட்டோக் காரரின் குரலைத் தொடர்ந்து சிலர் இறங்கினார்கள். நண்பகல் வெயிலில் சரிபாதி வியர்வையால் நனைந்திருந்த உடலோடு கதிர் ஓடிப்போய் ஆட்டோவிற்குள் ஏறிக் கொண்டான்.

டவுன் ஹால் ரோட்.

தனக்கு ஆக நெருக்கமான இந்த வீதிக் குத் திரும்பியபோது அந்த நாள் அவனுக்கு அசலாக துவங்கியது. காலேஜ் ஹவுஸிற்கு எதிரி லிருந்த சாலையோர பிரியாணிக் கடையிலிருந்து நஸீர் மாமா கையசைத்தார். காலேஜ் ஹவுஸின் இரண்டாவது தளத்தில் குளிர்சாதன வசதிகூட இல்லாத பழைய அறையொன்றில் கடந்த மூன்று மாதங்களாக தஞ்சம் புகுந்திருக்கும் ஆன்ரூ ரஷ் யக்காரன். இதற்கு முன்பு இந்தியா வந்திருந்த போது ஸ்ரீடியில் பாபா மடத்திலிருந்தான். அங்கு அவனுக்கு கட்டுப்படியாகவில்லை என்பதால் இந் தமுறை மதுரைக்கு வந்திருக்கிறான். கதிர் பொது வாக சிறைக்கு வெளியே எங்கும் 'மருந்து' விற்ப தில்லை. அதிலும் டவுன் ஹால் ரோட் அவனது பிரதான தொழிலுக்கான இடம். இங்கு பலருக்கு இவனிடம் மருந்து இருப்பதே தெரியாது. வெளி நாட்டுச் சாமியார் என்பதால் ஆன்ரூவின் மீது அலாதியான அன்பு இவனுக்கு. அதனால் அவ ருக்கு மட்டும் அவ்வப்போது 'மருந்து' எடுத்து வரு வான். தனது வருகையை எதிரோக்கி காத்திருக் கும் அந்த மனிதனைப் பார்க்க விரைந்தவனின் பாதையை மறைத்து மீனா நின்றாள். "அந்த சாமி யார பாக்க வந்தியாக்கும்?" என வெற்றிலை குதப் பிய வாயோடு சிரித்தாள். தனித்துவமானதொரு தேஜஸ் அவள் முகத்திலும் உடலிலும். "நீ நேத்து ராத்திரி கஸ்டமரோட போனவ இப்பதான் வரியா?"

சந்தேகத்தோடு கதிர் கேட்டான். சடாரென வந்த பொய்யான கோபத்தில் அவன் தோள்க ளில் அடித்தவள் "ச்ச, ச்ச, காலைலயே வீட்டுக்குப் போயிட்டண்டா. இப்பதான் எந்தம்பி வந்து விட்டுட் டுப் போறான்." என்றாள். "அதுசரி." என சிரித் தபடியே அவளைக் கடந்து படியேறியவன் திரும்பி, "நான் சொல்லாம எங்கியும் ஊர்மேயப் போயிராத. மாசக் கடேசி. ரெய்டு வந்தான்னா இருக்கற எல் லாத்தையும் கேசுக்கு அழுகனும்." என எச்சரித்து விட்டுச் சென்றான்.

ஆன்ரூ அந்த கடும் வெயிலிலும் தரை யில் படுக்கையை விரித்து ஆழ்ந்த தியானத்திலி ருந்தார். சத்தமில்லாமல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தவன், கண்விழிக்கும்வரை காத்திருக்கலா மென ஒரு ஓரமாய் உட்கார்ந்தான். சாமி இப்போ துதான் அரைகுறையாக தமிழ் பேசுகிறார். ஆனால் அவரது சொல்லுக்கு ஒரு வீர்யமிருக்கிறதென திட மாக நம்பினான். இதே வீதியில் தன்னை எல்லோ ரும் பலகாலமாய் இழிவாய்ப் பார்த்துக் கொண்டி ருப்பதாக நினைத்துதான் கவலை கொண்டிருந் தான். ஆன்ரூ சாமியோடு பழகத்துவங்கினபின் அவர் இவனிடம் தயக்கமில்லாமல் பழக "நான் என்ன தொழில் செய்றேன்னு தெரியுமா சாமி?" என ஒருநாள் தயக்கத்தோடு கேட்டான். சிரித் தார். 'என்ன வேலயா வேணும்னாலும் இருக்கட் டுமே, நீ விரும்பி செய்றியா?" என பதில் கேள்வி கேட்டார். ஆமென்றான். நாம் யாராய் இருக்கிறோ

மென்பது நமது விருப்பத்திலும் இயல்பிலும் இருக்கிறது. தேவைகள் இதை தீர்மானிக்கத் துவங்குகிற நாளில் நாம் தொலைப்பது தன்மானத்தையல்ல ஒரே ஒரு துளி சுயநேர்மையை. மனிதன் குறைந்த பட்ச சந்தோசத்தோடேனும் வாழவேண்டுமாயின் பாதுகாக்க வேண்டியது ஒன்று மட்டுந்தான். இருப்பதிலேயே எளிதாக கிடைக்கக் கூடியதும் அது ஒன்றுதான், சுயநேர்மை. நான் யாரை விடவும் மேலானவனுமில்லை, கீழானவனுமில்லை. ஆனால் யாரை விடவும் சுயநேர்மை கொண்டவன். ஏதோவொரு கனத்தில் மற்றவர்களை ஏமாற்றியிருக்கலாம். ஒருபோதும் என்னை ஏமாற்றிக் கொண்டிருந்ததில்லை.' என்று புரிதலை அவனுக்குள் உருவாக்கியது ஆன்ரூ சாமிதான். அவருக்கென வைக்கப்பட்ட மதிய உணவு பிரிக்கப்படாமல் அப்படியே இருந்தது, உட்கார்ந்த நிலையிலேயே அவன் சில நிமிடங்களில் தூங்கி வழிந்தான். கன் விழித்த சாமி, "மருந்து எங்க கதிர்?" என ஆர்வமாய்க் கேட்டார். ஒரு பாலித்தீன் பையில் சுற்றிய காகிதப் பொட்டலங்களை அவரிடம் கொடுத்தான். "சாமி மருந்து கொஞ்சமா எடுத்துக்கோங்க. சோறும் திங்காம மருந்தா எடுத்தா சீக்கிரம் ஜீவசமாதி அடஞ்சிருவிங்க" என சிரித்தான். பதில் சொல்ல பொறுமையில்லாமல் அவர் பொட்டலத்தைப் பிரித்து பீடியில் ஏற்றிக்கொண்டு கண்களை மூடி புகைக்கத் துவங்கினார். அடுத்த சிலநொடிகளில் அந்த அறை, அந்த சூழல் கதிர் அருகிலிருந்த எல்லாவற்

றிலிருந்தும் தன்னைத் துண்டித்துக் கொண்டார். அவரையே பார்த்துக் கொண்டிருந்த கதிர் இப்போதைக்கு அவர் தன்னோடு பேசப்போவதில்லை என்பதைப் புரிந்துகொண்டு எப்படி வந்தானோ அதேபோல் சப்தமெழுப்பாமல் அங்கிருந்து வெளியேறினான்.

மாலைநேர வெயிலின் காத்திரத்தில் அந்த சாலையில் விரைந்த மனிதர்கள் பொசுங்குவதற்கு முந்தைய நிலையில் வதங்கிப் போய்க் காணப்பட்டனர். கதிர் குவளையிலிருந்த கடைசி சில துளிப் பருத்திப் பாலை குடித்துக் கொண்டிருக்கையிலேயே வயிற்றில் பரவிய சூடு இனம் புரியாத வலியைக் குடுத்தது. சில நாட்களாகவே இருக்கிற பிரச்சனைதான். எதை உட்கொண்டாலும் அடுத்த சில நிமிடங்களில் கழிவறை நோக்கி ஓடுவது போல் ஆகிவிடுகிறது. சரியான உறக்கமின்றி அலைச்சலும் சேர்ந்ததால் ஏற்பட்ட விளைவு. வயிற்றில் சூடும் வலியும் இப்பொழுது குடலைப் பிடித்து இழுப்பது போலவும் குதத்திற்கு அருகிலான குறு குறுப்பாகவும் மாறிவிட அவன் குவளையை அப்படியே வைத்துவிட்டு சாலையைக் கடந்து எதிரில் சுண்ணாம்புக்காரத் தெருவிற்குள் விரைந்தான். நீண்ட தூர நிகழ்ச்சிகளுக்கு செல்ல இருந்த நடிகர்கள் குழு ஒன்று தயாரான நிலையில் அங்கிருந்து கூடல் அழகர் பெருமாள் கோவிலை நோக்கி நடந்தார்கள். அந்தக் கூட்டத்திலிருந்த இவனது தாத்தா ஒருமுறைத் திரும்பிப்ப் பார்த்து என்னவென்று

கேட்க, பதில் சொல்ல நேரமில்லாமல் சங்கத்திற் குள் ஓடினான். அவன் உடல் பிரச்சனை எல்லோ ருக்கும் தெரிந்திருந்ததால் அப்போதைய அவசரத் தைப் புரிந்து கொண்டனர்.

பரிதாபத்திற்குரிய நிலையில் கொஞ்சம் புதுப்பிக்கக் காத்திருந்த அந்த கழிவறையில் தொடர்ந்து மூன்று நிமிடங்களுக்கு மேல் இருத் தலென்பதும் தற்கொலைக்குச் சமமான காரிய மென்றாலும் இப்போதைக்கு அவனுக்கு வேறு மார்க்கமில்லை. இடுப்பிலிருந்த புது வேஷ்டியை உருவி துருப்பிடித்து சுவற்றிலிருந்து எந்த நேரத் தில் வேண்டுமானாலும் உதிரக் காத்திருந்த பழைய ஆணியில் தொங்க விட்டு கழிவறைக் கோப்பையில் அமர முயன்றபோது, ட்ரவுசர் பையி லிருந்த அன்றைய வசூல் தொகை தொடையில் அழுத்தியது. அவசரமாக அதையும் உருவி வேஷ் டியோடு தொங்கவிட்டான். கடந்த சில நாட்களா கவே மலம் கழிக்கையில் குருதியும் கசிவதை அவன் கவனிக்கத் தவறவில்லையெனினும் உட னடியாக அதற்கான சிகிச்சை மேற்கொள்ளுவ தில் தயக்கமிருந்தது. உள்ளூர் மருத்துவர் ஒருவரி டம் தனது நிர்வாணத்தைக் காட்ட விருப்பமில்லை என்பதால் வெளியூர் செல்லும் போது பார்த்துக் கொள்ளலாமென நினைத்திருந்தான். வெயில், குருதி கசிந்த களைப்பையும் மீறி அந்த சின்னஞ் சிறிய தனிமையில் பேச்சியின் நினைவுவர அவன் குறி தானாக விரைத்துக் கொண்டது. எத்தனை

காட்டமான வியர்வை? எத்தனை இறுகின உடல்? அவளது அருகாமையை அந்த நொடியில் உணர்ந்தவன் வேக வேகமாய் சுயமைதுனம் கொள்ளத் துவங்கினான். அந்த நொடி அவன் சிந்தனையிலிருந்து அவ்வளவும் விலகிப் போக, அவள் கடைசியாக சொல்லிவிட்டுச் சென்ற 'மறக்காம வீட்டுக்கு வாங்க, அடிக்கடி ஃபோன் பண்ணுங்க' என்னும் வார்த்தைகள் போதையாய் இறங்கின. மைதுனம் முடிந்தபின்பும் அவள் அவன் சிந்தனையிலிருந்து விடுபட்டிருக்காததால் அப்படியே சில நொடிகள் கண் மூடியிருந்தான். 'என்னடா கதிரு தூங்கிட்டியா? என வெளியிலிருந்து குரல் வர, எரிச்சலோடு கண்களைத் திறந்து கொண்டவன், நீண்ட நேரம் அதே நிலையில் அமர்ந்திருந்ததில் குதம் வலிக்க, எல்லாவற்றையும் கழுவிக் கொண்டு எழுந்தான். இரண்டாவது தளத்தில் நாடக நடிகர்களின் அறையெங்கும் தொங்கிக் கொண்டிருக்க, தேடிப்போய் தாத்தாவின் காலண்டரைப் பார்த்தான். 'பந்தல் குடி' என்றிருக்க சோர்வோடு அப்படியே விட்டு விட்டு கீழே இறங்கினான்.

இருட்டத் துவங்கியபிறகு உலகின் வேறெந்த நகருக்கும் இல்லாத தனித்துவமான தொரு அழகு மதுரைக்கு வந்துவிடும் போல். எதிர்ப்படும் எல்லோரும் ஓராயிரம் வினோதக் கதை கொண்ட மனிதர்களாகவே அவனுக்குத் தெரிந்தார்கள். பகலின் எல்லா நினைவுகளும் மறந்து போன இரவு மனிதனாய் சுப்ரீம் ஹோட்

டல் எதிரிலிருந்த மதுக்கடையில் அமர்ந்திருந் தான். ஒரு நாளின் முதல் வாடிக்கையாளனைக் கண்டுகொள்வது எப்போதுமே சுவாரஸ்யமானது. இந்த சில வருட அனுபவத்தில் பெரும்பாலும் அன்றைய தினத்தின் முதல் மனிதனை தோராய மாக அவன் இப்படித்தான் இருப்பானென முன் முடிவு செய்து கொண்டிருப்பான் ,அது பெரும் பாலும் தவறுவதில்லை. `லஷ்மி,மீனா,ராணி,சுந்த ரி' இந்த நால்வரும் அவனின் சொத்துக்கள். முன்று வருடங்களுக்கு முன்பு வரை திருநெல் வேலி செல்லும் நெடுஞ்சாலையில் திருமங்க லத்தையடுத்த ஆறு கண் பாலத்தினடியில்தான் இந்த நால்வரும் தொழில் செய்து கொண்டிருந் தனர். தொடர்ந்து இவர்களின் மேல் போலிஸ் கேஸ்போட்டு தொல்லை தந்ததோடு அடிக்கடி அவர்களோடு படுக்கவேண்டிய தொல்லைகளும் இருந்ததால் இனி சாலையோரமே வேண்டா மென உறுதியாக முடிவெடுத்தார்கள். அந்த நேரத் தில்தான் கதிரின் பழக்கம் கிடைத்தது. ஏராள மான வேலைகள் பார்த்து சலித்துப் போன கதிர் மாதத்திற்கு மூவாயிரம் ரூபாய் கூட சம்பா திக்க முடியாத தவிப்பிலிருந்தபோதுதான் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு இந்த வேலைக்கு வந்தான். அப்போதிருந்து இவர்கள் ஒரு குடும் பம். அவன் அலைபேசியில் அழைப்பு வர எடுத் துப் பார்த்தான், நேஷ்னல் ஹோட்டல் ரூம்பாய் சண்முகம் அழைத்தான். 'இருட்டுதோ இல்லியோ

நம்ம பொழப்புக்கு ஒரு கொறையுமில்ல' என சிரித்தபடி எடுத்துப் பேசினான். புதிய வாடிக்கை யாளன். ஃபோட்டோக்களைப் பார்த்து மீனாவைக் கேட்டிருக்கிறான். நன்கு பழக்கமான ஹோட்டல் என்பதால் பாதுகாப்பு குறித்த அச்சமில்லை. "பத்து நிமிசத்துல அனுப்பி வைக்கிறண்டா." எனச் சொல் லிவிட்டு மீனாவைத் தேடிச் சென்றான். சற்று முன்பாகத்தான் அவள் கொஞ்சமாய் குடித்திருக்க வேண்டும். மதுவின் கிரக்கம் உடலிலும் குரலிலும் அபரிமிதமாய் ஒளிர்ந்தது. "தொழிலுக்கு போற துக்கு முன்னயே ஆரம்பிச்சிட்டியா? கஸ்டர் வெய்ட் டிங்க்கா. தயவு செஞ்சு வேலய முடிச்சுட்டுக் குடி." என்றவாறே அவளின் மேக்கப்பை சரி செய்தான். "சரிங்க தொர" என சிரித்துவிட்டு மீனா எழுந் துகொண்டாள். "நேஷ்னல் லாட்ஜ். ரூம் நம்பர் 211" இவனைத் திரும்பிப் பார்க்காமலேயே சென் றவளுக்கு கேட்கும்படி சத்தமாகச் சொன்னான். அவள் திரும்பிப் பார்த்துச் சிரிக்கையில் அபூர்வமா னதொரு ஒளிகொண்டிருந்தாள்.

நன்னடத்தை அதிகாரி.

ஆக வெறுப்பான காரியமொன்றைச் செய்யும் எரிச்சலோடு நடந்து வந்த மலர் அக்கா நீண்ட நேரமாய் இவனோடு ஒரு வார்த்தை யும் பேசியிருக்கவில்லை. 'எதாச்சும் சாப்டறி யாக்கா?; என பொதுவாக அவன் பேசினால் கூட பதில் சொல்லாமலேயே தவிர்த்தாள். உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து பத்து நிமிட நடைதூ ரம் தான். அதற்கே இன்று சலிக்கிறாள். அவளது கையில் ஒரு கட்டைப்பையுமாக, இவன் கையில் ஒரு கட்டைப்பயுமாக அதிகாரிக்கான அன்பளிப் புப் பொருட்கள் நிறையவே இருக்கின்றன. ஆனா லும் அதிகாரிகளை நாம் அத்தனை எளிதில் திருப்தி செய்துவிடமுடியாதுதானே. தேவைகளை எப்போதும் புதிது புதிதாய் மாற்றிக் கொள்ளும் திற மைசாலிகள் நம் அதிகாரிகள். பணியில் இலக் கிருக்கிறதோ இல்லையோ வசூலில் இருக்கிறது. வலது கையிலிருந்து இடது கைக்கு பையை மாற் றிக் கொண்டவள் ஒருமுறை இவனைத் திரும்பி முறைத்தாள். மனம் விபரீதங்களை நினைத்து அச்சத்தில் தவித்துக் கொண்டிருப்பதை நடுங்

கும் அவளுடலும், அலைபாயும் அவளின் கண்க ளும் சொன்னாலும் இது தவிர்க்கவே முடியாதது. நன்னடத்தை அதிகாரியின் வீடிருக்கும் தெருவை அடைந்தபோது அவள் பதட்டம் முன்னைவிடவும் அதிகமாக, "டேய் நீ மட்டும் போய்ப் பாரேண்டா அந்த ஆள?" என மீண்டும் முதலில் இருந்து துவங் கினாள். அவன் பையைக் கீழே வைத்துவிட்டு அவளை கவலையோடு பார்த்தான். பதட்டங்க ளோடு அதிகாரியை சந்தித்தால் விடுமுறை கேட் கையில் அதிகாரியின் கேள்விகளுக்கு சரியாக பதில் சொல்லாமல் போய்விடுவாளெனத் தோன் றியதால் அருகிலிருந்த சர்பத் கடைக்குக் கூட்டிச் சென்றான். இருவருக்குமாக சர்பத் சொன்னபோது அவளின் கண்கள் மட்டும் தூரத்திலிருந்த அரசு மருத்துவமனையை வெறித்திருந்தது. எல்லாவற் றிலிருந்தும் தப்பிச் செல்லுதல் குறித்து அவள் சிந் தித்துக் கொண்டிருக்க வேண்டும். அல்லது ஒரு துரோகத்திற்கு தன்னைத் தயார் செய்துகொள் ளும் எளிய தைரியத்திற்கான காத்திருப்பாகவும் இருக்கலாம். சர்பத் க்ளாஸை அவள் கையில் கொடுத்தான். "க்கா, நீ ஒன்னும் யோசிக்காத, நான் கூட இருக்கன்ல. அந்த ஆளு அனாவசியமா ஒருவார்த்த பேசினாலும் அதுக்கப்பறம் பாத்துக்க லாம்." அவள் பதிலேதும் சொல்லாமல் வெறுமனே திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.

பரோல் விடுப்பென்பது நீண்ட காலம் தண்டனை அனுபவிக்கும் கைதிகளுக்கான

எளிய இளைப்பாறுதல். அதுவும் கிடைக்க குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டும். அதன்பிறகே வருடத்திற்கு பதிமூன்று நாட்கள் விடுமுறை கிடைக்கும். ஆறு நாட்கள் ஒருமுறை, நான்கு நாட்கள் ஒருமுறை, மூன்று நாட்கள் ஒரு முறையென முன்றாகப் பிரித்துக் கொடுப்பார்கள். சிறையிலிருக்கும் கைதியின் நலன்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் அரசாங்கம் எவ்வளவோ செய்துதான் வருகிறது. ஆனால் அது பெரும்பாலனவர்களுக்குப் போய்ச்சேராமல் பார்த்துக் கொளவது இந்த அதிகாரிகள். கைதிகள் மற்றும் அவர்களின் குடும்ப நலன் எல்லாவற்றையும் தொடர்ந்து கண்காணிக்க தனியாக நியமிக்கப்பட்டிருப்பவர் இந்த நன்னடத்தை அதிகாரி. விடுமுறை எடுக்க வேண்டுமானாலும் சரி, விடுதலைக்காக பரிந்துரை செய்ய வேண்டுமானாலும் சரி இவர் மனது வைத்தால் தான் முடியும். இவர்கள் சிறையினுள்ளும் சரி வெளியிலும் சரி எடுத்துக்கொள்ளும் சுதந்திரம் ஏராளமானது. விடுதலைக்குப் பின்புமே குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் இவரது கண்காணிப்பில் தான் கைதிகள் இருக்கவேண்டும். அதனால் தான் இத்தனை அன்பளிப்புகளும் கூடுதலாக ஒரு கையெழுத்திற்கு ஐநூறு ரூபாய் பணமும். இவ்வளவும் போதாதொன்று மணுவோடு வரும் கைதிகளின் வீட்டுப் பெண்களையும் மேற்படி காரியங்களுக்கு நிர்ப்பந்தப்படுத்துவதால் தான் பலர் இந்த அலுவலகம் பக்கமாக வருவ

தற்கே யோசிக்கிறார்கள். மலர் அக்கா இப்பொழுது கொஞ்சம் பதட்டம் குறைந்தவளாய்த் தெரிந்தாள். இவன் உடனிருக்கும் தைர்யமாய் இருக்கலாம். அவளால் கொஞ்சம் சிரிக்க முடிந்தது. கழுத்தி லிருந்து பெருகியோடும் வியர்வையை துடைத் துக் கொள்ளும்போது விரல்களில் பதட்டமில்லை. போலாம்டா என நிதானமாகச் சொன்னாள்.

விஜி அண்ணனுக்கு இருபத்தி யெட்டு வயதுதான், துணிச்சலுக்கும் முட்டாள்த் தனத்திற்குமான சின்ன இடைவெளி தெரியா மல் எல்லாவற்றையும் சாகசமாய் செய்து பார்க் கும் மனிதன். எதிர்காலம் குறித்த நிச்சயமின் களை எப்போதும் தனது ப்ரியத்திற்குரிய தோழ னாய் கொண்டிருக்கும் மனிதன் காதலிக்கக் கூடாது, விஜி அண்ணன் அதையும் விட்டுவைக் கவில்லை. மலர் அக்காவும் விஜி அண்ணனும் அடுத்தடுத்த தெருக்காரர்கள். விருதுநகர் புதுமா ரியம்மன் கோவிலில் இருந்து நடந்து செல்லும் தூரத்திலிருந்த பாரப்பட்டித் தெருவில் மலர் அக் காவின் வீடு. விவரம் தெரிந்த வயதில் துவங்கின காதலென்றாலும் அவர்கள் அந்த ஊரின் சூழலில் அத்தனை சுதந்திரமாகவெல்லாம் காதலித்துவிட முடிவதில்லை. பிறக்கும் போதே பெயரோடு குறி களில் சாதிகளை வைத்து பூட்டிப் பாதுகாக்கும் வினோத சமூகங்கள் நிறைந்த ஊர் அது. ஒரு சாதி யின் குறியை மூடின பூட்டை இன்னொரு சாதியின் சாவி திறத்தல் தண்டனைக்குரிய குற்றமென்பதை

அந்த ஊரில் மட்டுமல்ல தமிழ் சமூகம் நிறைந்த எல்லா ஊரிலும் காணமுடியும். அந்த சிக்கல் அவர் களின் முன்னாலுமிருந்தது. விஜி அண்ணனுக்கு வயதை விடவும் அதன் வன்முறை குணமே வேக மாய் வளர்ந்தது. சுலோச்சனா தியேட்டரை ஒட் டிய சந்தில் அவரின் அப்பா சின்னதாக சலூன் கடை வைத்திருந்தார். ஆனந்தன் என்ற பெய ருக்கு முன்னால் சேர்ந்து அம்பட்டையன் ஆனந்து என்ற அடைமொழியைக் கேட்கும்போதெல்லாம் சிறிய வயதிலிருந்தே விஜி அண்ணனுக்கு தாங்கமு டியாத வெறுப்பு வரும். அப்பாவுக்குப் பிறகு தானும் அப்படி அழைக்கப்படுவதில் விருப்பமில்லாததோ அப்பாவின் தொழிலைக் கற்றுக்கொள்ளவில்லை. எத்தனையோ முறை வற்புறுத்தியும் பிடிவாதமாக மறுத்து படித்து வேறு வேலைகளுக்குப் போனதால் அப்பாவுக்கு விஜி அண்ணன் மீது பெருங்கோவம் இருந்தது. சலூன் கடை கூட பிரச்சனையில்லை, சாவு காரியம் பார்க்க தனக்குப் பின்னால் ஆளில் லாமல் போகிறதே என்கிற கவலை அவருக்கு. விஜி அண்ணனுக்கு ஒரேயொரு தங்கச்சி மட்டுந் தான். விருதுநகரில் சரிபாதி ஆட்களுக்கு ஆனந் தனைத் தெரிந்திருக்கும். மிக முக்கியமான கார ணம் பெரிய வீட்டுச் சாவுகளுக்குக் கூட சாவுகாரி யம் பார்க்கிறவர் அவர்தான். கேத வீட்டு வேலை வருகிற நாட்களைத் தவிர்த்து பிறநாட்களில் குடிக் கும் பழக்கமும் அவருக்கில்லை. ஒரு வயதுக்குப் பின் விஜி அண்ணன் சூர்யா கேபிள் செண்ட

ரில் வேலைக்கு சேர்ந்த பிறகு அதன் சேர்க்கை எல்லாம் மாறத் துவங்கியது. மலர் அக்கா டிடிகே கம்பெனியில் வேலைக்குப் போகத் துவங்கினாள். டீலக்ஸ் ஆனுறைகள் தயாரிக்கும் கம்பெனியில் பேக்கிங் பிரிவில் வேலை. வாழ்க்கை குறித்த அச்சங்கள் பெரிதானபோது அவள் தன்னோடு இருப்பாளா என்னும் சந்தேகம் அவருக்கும் அவனைக் கட்டிக் கொண்டால் வரும் பிரச்சனைகள் குறித்து அவளுக்கும் ஏராளமான குழப்பங்களிருந்தன.

புதுமாரியம்மன் கோவில் திருவிழா நடந்துகொண்டிருந்த நேரம். திருவிழாக்கள் கொண்டாட்டத்தையும் சந்தோசத்தையும் மட்டுமல்ல பகையையுன் வன்மத்தையும் ஒருசேர கொண்டு வந்துசேர்க்கிறது. விருதுநகர் மாரியம்மன் கோவில் திருவிழாவும் பொருட்காட்சியும் கோடை காலத்தின் மகத்தான பிரம்மாண்டம். பகல்நேர வெயில் முடிந்து இருட்டத் துவங்கும் போது பொருட்காட்சி மைதானத்தின் விளக்குகள் அபாரமான விளக்கு ஒளிகளோடு பகல் நேரத்தின் நீட்சியென விரிந்திருக்கும். வெவ்வேறு ஊர்களில் இருந்து ஆட்கள் தீச்சட்டி எடுத்து வருவது, பொங்கல் வைப்பது, மாவிளக்கு எடுப்பதென ஒவ்வொரு நாள் திருவிழாவும் கோவிலுக்கு ஆயிரக்கணக்கில் ஆட்களைக் கொண்டு வரும். இத்தனை மனிதர்களாவென மலைப்பாய் பார்க்குமளவிற்கு எங்கும் மனிதத் தலைகள். திடீர் கடைகள் எல்லா வீதிகளிலும் முளைக்கும். ஆனந்தன் திருவிழா முடிகிற

வரையிலும் கடை திறப்பதில்லை. பொருட்காட்சிக்கு செல்லும் வழியில் பால் ஐஸ் கடை போடுவது அவரின் நீண்டகால வழக்கம். திருவிழாக்காலங்களில் கிடைக்கும் இந்தக் கூடுதல் வருமானம் அந்தக் குடும்பத்திற்கு சின்னதொரு சேமிப்பு. கோடையின் வெக்கைக்கு இரவில் பால் ஐஸ் சாப்பிடுவது மாதிரியான சுகானுபவம் வேறில்லை என்பதை கரிசல் நிலத்து சிறுநகரத்தவர்கள் மட்டுமே அறிவார்கள். அவரின் பால் ஐசிற்கு எப்போதும் தனிச்சுவை என்பதால் விருதுநகர் வாசிகள் திருவிழா நாட்களில் பொருட்காட்சியில் பெரும்பாலும் இவரின் ஐசைத் தவறவிடுவதில்லை. இன்னொரு முக்கியமான காரணம். திருமணத்திற்கு தயாராகியிருக்கும் யுவதிகளை பெண் பார்க்கும் படலமெல்லாம் இந்த திருவிழா நாட்களில் தான் நடக்கும். புது உடை நகைகளோடு அலங்கரிக்கப்பட்டு யுவதிகள் பொருட்காட்சியில் குறிப்பிட்ட சில இடங்களில் அல்லது பெரிய ராட்டினம் போட்டிருக்கும் இடங்களில் இருக்க, அவர்களைக் குறித்து விசாரிக்க மணமகன் வீட்டு நாட்கள் பெரும்பாலும் ஆனந்தனிடம் தான் வருவார்கள். ஊரில் பெரும்பாலானவர்களைத் தெரிந்து வைத்திருப்பவர் அவர். மணமகளைக் குறித்தோ மணமகன் குறித்தோ அவர் சொல்வது பெரும்பாலும் நியாயமானவைகளாய் இருக்கும். இதற்காக அவர் யாரிடமும் பணமும் வாங்குவதில்லை. அந்த அன்பிற்காகவே நிறைய பேர் அவரிடம் ஐஸ் வாங்குவார்கள். அந்த வருடம்

பால் ஐஸ் கடை வழக்கத்தை விட அதிகமானோர் போட்டிருந்தும்கூட இவருக்கு வியாபாரத்தில் குறை இருந்திருக்கவில்லை. மற்ற கடைக்காரர்க ளுக்கு இதில் கடுங்கோவம். உள்ளெழுந்த கோவங் களை காட்டிக் கொள்ளாமல் கடந்துபோனவர்கள் நான்காவது நாள் கள்ளிக்குடியிலிருந்து சிலரை பணம் குடுத்து அழைத்திருந்தனர். கூட்டம் சேரத் துவங்கியிருந்த நேரம், மூன்று நான்கு பேர் அவரி டம் ஐஸ் வாங்க ஆட்களை விலக்கி வந்தார்கள். எல்லோருக்கும் குறையாத சிரிப்போடு ஐஸைக் குடுத்த ஆனந்தன் அவர்களுக்கும் குடுத்தார். "என்னய்யா ஐசுல மயிர் கெடக்கு?" என அவர்க ளில் ஒருவன் அங்கேயே வம்பிழுக்க, பக்கத்திலி ருந்தவன் "அம்பட்டையன் கடைல ஐசு வாங்கினா அப்பிடித்தாண்டா இருக்கும், அப்பயே சொன் னேன் கேட்டியா?" என கூடுதலாக சில வார்த்தை களை விட்டான். "அண்ணாச்சி உங்களுக்கு விருப் பமில்லைன்னா சாப்டாதிங்க. அத விட்டுட்டு அனா வசியமா பேசக்கூடாது." என அப்போதும் ஆனந் தன் தன்மையாகப் பேசினார். மூன்று பேரின் ஒரு வன் ஐஸ் வைத்திருந்த மர பேரலை கிழே உருட்டி விட சுற்றியிருந்த ஆட்கள் நகர்ந்து செல்லத் துவங் கிவிட்டார்கள். தனக்காக யாரும் வந்து பேசப்போ வதில்லை என்கிற ஏமாற்றத்தில் கதறி அழுதவர் அவர்களிடம் "அண்ணாச்சி எம் பொழப்புல மண்ண போட்டு உங்களுக்கு என்ன கெடைக்கு போகுது விட்றுங்க.." என கதறினார். கூட்டம் கவ

னிப்பது புரிய மூன்று பேரும் அவரை உதைக்கத் துவங்கினார்கள். அவருக்காக வருத்தப்பட்டவர் கள் கூட சண்டையை விலக்கிவிட பயந்தனர். கூடு தலாக சதைகள் இல்லாத மெலிந்த அந்த மனிதன் தன் உடையெல்லாம் கிழிந்து சமாதானப்படுத்த ஆதரவாகப் பேச ஒருவருமில்லாமல் கிழிந்த உடை களோடும் காயங்களோடும் வீட்டிற்குத் திரும்பி னார்.

அதன் பிறகு அன்று இரவு நடந்த தெல்லாம் விஜி அண்ணனின் அத்தனை வருட வாழ்வை மாற்றிப்போட்டவை. அன்றைய பொருட் காட்சி இரவு வழக்கமில்லாத ஒரு சண்டை யைப் பார்த்தது. திருவிழாக்கூட்டத்தில் ஆனந் தனை அடித்த மூன்று பேரை அடையாளங் காட்ட நிறையபேர் இருந்தனர். சிறப்பு நிகழ்ச்சியாக வள்ளி திருமணம் நாடகம் நடந்து கொண்டிருந்த தால் ஏராளமான பெண்கள் கூட்டம். வள்ளியைத் தேடி நாரதர் வனத்திற்கு வரும் நேரத்தில் கூட் டத்திலிருந்த மூன்று பேரையும் விஜி கண்டுபிடித் துவிட்டான். வரிசையாக இருக்கும் பலூன்களை துப்பாக்கியால் மூன்று பேரில் ஒருவன் சுட்டுக் கொண்டிருந்தான். அவ்வளவு நேரமும் மறைத்து வைத்திருந்த தேங்காய் உடைக்கும் இரும்புக் கம் பியை எடுத்த விஜி துப்பாக்கி வைத்திருந்தவனின் மண்டையில் ஓங்கி அடிக்க சுற்றி இருந்த கூட் டம் சிதறி ஓடியது. அடி வாங்கியவனுக்கு ரத்தம் பொங்கிவர அவன் அப்போதே மயங்கிவிழுந்தான்.

மற்ற இரண்டு பேரும் ஆத்திரத்தோடு வந்திருக்கும் இவனோடு மல்லுக்கட்ட முடியாதென உஷாராக தப்பித்து ஓட முயன்றனர். கூட்டத்தை விலக்கி ஓடுவது அத்தனை எளிதாக இல்லை. இத்தனை காலமும் ஊர்க்காரன்களின் மீது இருந்த கோவமெல்லாம் ஒருசேர தலைக்கேற விஜி அவர்களை பொருட்காட்சி மைதானத்தில் புரட்டி எடுத்தான். இவனுக்குள் இவ்வளவு கோவமிருக்கும் என்பதை முதல் முறையாகப் பார்த்த ஊர்க்காரர்கள் மிரண்டு ஒதுங்கினார்கள். முதலில் அடிவாங்கியவன் அதன்பிறகு எழவேயில்லை. மிச்சமிருக்கும் இரண்டு பேரையும் கொன்றுவிடும் வெறியோடு அடித்தவனை பாதுகாப்பிற்கு இருந்த காவலர்கள் பிடித்துக் கொண்டனர். ஆத்திரத்தில் விஜிக்கு வார்த்தைகள் கோர்வையாய்க் கூட வரவில்லை. ஏமாற்றமும் அவமானமும் ஆத்திரங்களாய் வெடிக்கும் போது அங்கு வார்த்தைகளும் மொழியும் அர்த்தமற்றவைகள் தானே. விஜியின் கைகளைப் பின்னால் கட்டி போலிஸ்காரர்கள் இழுத்துச் சென்ற போது “இப்போ எவனாச்சும் எங்ப்பன அம்பட்டையன்னு சொல்லிப் பாருங்கடா, தாயோளிங்களா. இனி எவன் சொன்னாலும் அவன் சங்கறுப்பேன்.” என ஆவேசமாகக் கத்தியபடியே கூட்டத்திலிருந்து வெளியேறிய விஜி மீண்டும் ஒரு திருவிழாவைப் பார்க்க ஆறேழு வருடங்கள் ஆனது.

கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறைக்குச் சென்றபின் முதல் பரோல் விடு

முறையில் தான் திரும்பி வந்தான். அப்போது ஊரில் நிறையவே மாறியிருந்தது. ஆனந்தன் சலூன் கடையை எப்போதோ மூடிவிட்டார். யாரும் அவரை சாவு காரியங்களுக்குக் கூப்பிடுவதில்லை. சரியான வேலை இல்லாதபோதும் இத்தனை காலம் முதுகு வளைந்து வாழ்ந்த இழிவு இப்போ தில்லை என்னும் நிம்மதி இருந்தது. மீசை அரும் பத் துவங்கிய மனிதனாய் ஜெயிலுக்குப் போன விஜி முரட்டு உடலும் முறுக்கிய மீசையுமாய் திரும்பி வந் தபோது அவன் மீது எல்லோருக்குள்ளும் அச் சம் எழுந்தது. சிலர் பவ்யமாய் சிரித்தனர். இன்னும் சிலர் நலம் விசாரித்தனர். மலர் அக்கா வீட்டாரின் நிர்ப்பந்தத்தால் திருமணம் கூட செய்திருந்தாள். குழந்தை, புருஷன் என எல்லோரையும் போல் வாழத் துவங்கியவள் அவன் பரோலில் வந்த நாளி லேயே புரிந்து கொண்டாள். எத்தனை காலமா னாலும் தான் அவனுக்கானவள் என்பதை. அதன் பிறகு குடும்பம் சொந்தக்காரர்கள் எல்லோரையும் பிரிந்து அதே ஊரில் தனியாகத்தான் வாழ்ந்து வரு கிறாள். விஜியின் தாலி கட்டாத மனைவியென்றா லும் அவளை நெருங்க எல்லோருக்கும் அச்சமி ருந்தது. அந்த அச்சமே அவளுக்கு பாதுகாப்பாக வும் மாறிப்போனது.

அதற்குப்பிறகு இந்த நன்னடத்தை அதிகாரியின் மூலமாகத்தான் இப்பொழுது புதிய பிரச்சனை வந்திருக்கிறது. அவ்வப்போது விசாரிக் கிறேன் என்ற பெயரில் மலர் அக்காவின் உள்

ளாடை அளவுகள் குறித்து தொலைபேசியில் பேசி யிருக்கிறார். அவள் கோவமாகத் திட்ட, "நல்லா யோசிச்சுக்கோ மலரு, பரோல் லீவுக்கு என் ஆஃபி சுக்குத்தான் வரனும். என் கையெழுத்து இல்லாம எதும் நடக்காது தெரியும்ல." என மிரட்டியிருக்கி றார். விஜிக்கு சிறையின் சூழல் ஒரு பக்கமும் அவ ளைப் பிரிந்திருக்கும் அவஸ்தை இன்னொரு பக்க முமாய் கொந்தளிப்பான நிலை. அதனாலேயே கதி ரிடம் தூது விட்டிருந்தார். மிகுந்த போராட்டத்திற் குப்பின் மலர் அக்காவை சமாதானம் செய்து கூட்டி வந்திருந்தான். நன்னடத்தை அதிகாரியின் அலுவ லகம் வேறு சில கைதிகளின் குடும்பத்தினரால் நிரம்பியிருந்தது. எல்லோரும் கையில் பலகாரங் கள், காய்கறிகள், பேண்ட்பிட் துணிகளென கூடு மானவரை அன்பளிப்புகளோடு காத்திருந்தனர். புதிய காம்பளக்ஸ் ஒன்றின் முதல் தளத்தில் சின்ன தொரு அலுவலகம் அது. இரண்டு டைப்ரைட்டர் கள், பிளாஸ்டிக் சேர்கள் ஏராளமான ஃபைக ளென இரைச்சலான இடம். வந்திருக்கும் எல்லோ ரிடமும் வழக்கமான சில கேள்விகளைக் கேட்டவர் மலரோடு கதிரைப் பார்த்ததில் எரிச்சலானார். "என்னய்யா நீ அந்த அழகர்சாமி மகன் தான? உங் கப்பனுக்கும் பரோல் கேட்டு வந்திருக்கியா?" என மலரைப் பார்க்காமலேயே கேட்டார். "இல்ல ஸார். அக்கா கூட துணைக்கு வந்திருக்கேன்." என அவரை முறைத்தபடி சொன்னான். "ஓஹோ. அக் யூஸ்ட்டெல்லாம் கூட்டு சேந்திருக்கீங்களாக்கும்.?"

என்றவர் திரும்பி மலரிடம் "ஏன் உனக்கு துணைக்கு கூட்டியார வேற ஆள் கெடைக்க லையா? இவன் ஆளே ஒரு மாதிரி இருக்கான். இவன் கூட வந்திருக்க?" எனக் கேட்டபடியே அவ ளின் கையிலிருந்த மனுவை வாங்கிப் பார்த்தார். "எதுக்கு பரோல் லீவு.?" என மனுவோடு இருந்த மருத்துவ சான்றிதழ்களைப் பார்த்தார். "அவங்கப் பாவுக்கு முடியல ஸார்." மலர் தயங்கி தயங்கிச் சொன்னாள். "அவரக் கூட்டியார வேண்டிதான?" என மனுவை மடித்து வைத்துவிட்டு பதிலுக்குக் கேட்க, கதிர் சிரித்தபடி "அவருக்குத்தான் முடிய லைன்னு ஆஸ்பத்திரில இருகாரே ஸார். எப்பிடி வரமுடியும்?." என்றான். அவனை முறைத்த அதி காரி "அடேயப்பா யோக்கியனுங்களா நிறுத்துங் கடா. எல்லாம் டாக்டர் கிட்ட போலி சர்டிஃபிகேட் வாங்கிட்டுத்தான லீவு கேக்க வர்றீங்க?" என்று சொல்லிவிட்டு மனுவில் கையெழுத்துப் போட்டு விட்டு மேஜையில் மற்ற மனுக்களோடு வைத்தார். "சரிம்மா பாத்து செய்றேன். அவன் லீவுல வர் றப்போ என்னய வந்து பாக்க சொல்லு" என சத்தம் வராமல் சொன்னார். கதிர் கொண்டு வந்த அன்ப ளிப்புகளையும் காசையும் அவரின் உதவியாளரி டம் கொடுத்தான். பதட்டம் குறைந்த மலர் நிம்மதி யாக அங்கிருந்து வெளியேறினாள். "நல்லவேளடா நீ கூட வந்த, இல்லாட்டி இன்னைக்கு இந்தாளு என்னய நோண்டிட்டுத்தான் விட்டிருப்பான்." அவள் குரல் இப்பொழுதுதான் இயல்பாகியிருந்

தது. பேருந்து நிலையத்திற்கு அருகில் வந்தபோது அவளது மொபைலுக்கு ஒரு குறுஞ்செய்தி வர எடுத்துப் பார்த்து எரிச்சலானாவள் இவனிடம் காட்டினாள். "இன்னிக்கி இல்லாம போய்ட்டா என்ன இன்னொரு நாள் வசமா மாட்டாமயா போய்டுவ. ஒழுங்கா நான் சொல்றதக் கேளு. இல்ல அவனுக்கு இனிமே எப்பவும் லீவு கெடையாது." என அதிகாரி அனுப்பியிருந்தான். கைகள் பரபரக்க கதிர் பற்களைக் கடித்தபடி "இப்ப இவன பகைச்சுக்கக் கூடாதுக்கா. பொறுமையா இரு." என ஆறுதல் படுத்தினான்.

சுதா

விலக்கப்பட்ட கனிகளுக்கு தனித்த சுவை யுண்டு. காத்திருப்பிற்குப் பிறகு அந்தக் கனி கள் ஒருவனுக்கு தரும் ஆத்ம சந்தோசம் வேறு எதனோடும் ஒப்பிட இயலாதது. சுதாவை சில மாதங்களாகத்தான் கதிருக்குத் தெரியும். இருவ ரும் நேரில் சந்திக்கும் போது பேசிக்கொள்வதைத் தவிர்த்து வேறு எதன் பொருட்டும் எப்பொழுதும் பேசிக்கொண்டதில்லை. சுப்புராஜிற்கு காதலியா, மனைவியா, தோழியா என எந்த உறவுமுறை அவள்? ஒருபோதும் அந்தரங்கமான அந்த உரை யாடல் அவர்களுக்குள் நிகழ்ந்ததில்லை. வியா ழக்கிழமைகளில் தவறாமல் அவனைப் பார்க்க வந்துவிடுவாள். வேலூர் மத்திய சிறைச்சாலை யில் இருந்து பனிஷ்மெண்ட் காரணமாக இங்கு அணுப்பப்பட்டவன் சுப்புராஜ். புதிதாக தண்டிக்கப் பட்டு சிறைக்கு வருகிறவர்கள் சக கைதிகளுக்கும் வார்ட்டர்களுக்கும் ஒருவித சோதனை எலிகள்

என்றால் பனிஷ்மெண்ட்டில் வருகிறவர்கள் எல் லாவிதமான பரிசோதனைகளுக்கும் தகுதியான எலிகள். அவர்களைக் காட்சி பொருளாக வைத்து மற்றவர்களை மிரட்ட வேண்டுமென்பது சிறைச் சாலைகளின் எழுதப்படாத விதி. வேலூர் சிறை யில் தொடர்ந்து அடிதடியில் ஈடுபட்டதால் இங்கு அனுப்பப்பட்ட சுப்புராஜை வந்த முதல் நாள் தனி செல்லில் அடைத்து வைத்தார்கள். புதிய இடத் தில் மூட்டைப்பூச்சிகள் நிறைந்த அந்த சின்னஞ் சிறிய மூத்திரக் கூடத்திற்குள் உறங்க முடியாமல் புழுங்கிக் கிடந்தவனை நள்ளிரவில் நான்கைந்து வார்ட்டர்கள் வந்து கைகளை பின்னால் கட்டி கூட் டிச் சென்றனர்.

மழை பெய்து ஓய்ந்திருந்ததால் நடக்கும் போது எல்லோரின் கால்களிலும் சேற்று மண் அடித்தது. தன்னை என்ன செய்யப் போகிறார் கள் என்பதைப் புரிந்து கொண்டு அலற முயன்ற சுப்புராஜின் வாயில் ஒருவன் அழுக்குத்துணியை வைத்து அடைத்தான். “தாயோளி, பேசாம கூட வா. இல்ல மென்னியத் திருகிருவேன்.” என முது கில் ஓங்கிக் குத்தினான். சுப்புராஜ் அந்த முதல் அடியிலேயே சுருண்டு விழுவது போல் ஆகிப்போ னான். பி பிளாக்கிற்கு எதிரிலிருந்த பெரிய புங் கன் மரத்திற்கு முன்னால் நிற்க வைத்து “மரத்த உன் பொண்டாடின்னு நெனச்சு கட்டிப்புடிடா” என ஒருவன் சொன்னான். கண்கள் கலங்கி ஏற்கனவே வாங்கிய அடியின் வலியையும் சகித்துக் கொண்டு

தயங்கி நின்றவனை "வக்கா புண்ட, சொல்லிக் கிட்டே இருக்கேன். என் மூஞ்சில என்ன பாத் துட்டு இருக்க?" இன்னொரு வார்ட்டர் அவன் கெண்டைக்காலில் மிதிக்க "ண்ணா, வலிக்கி துண்ணா. உதைக்காதண்ணா." என மரத்தைக் கட்டிக் கொண்டு சுருண்டான். மழையில் நனைந்த மரம் ஈரத்தில் வழவழப்பாயிருக்க, அவன் கை வைத்த இடத்தில் ஊர்ந்து கொண்டிருந்த சிவப்பு எறும்புகள் வேகமாய் நகர்ந்து ஓடின. சிரமப்பட்டு மரத்தின் பாதியைக் கட்டிப்பிடித்தான். எதிர்ப்புறம் நின்ற வார்ட்டர் அவன் இரண்டு கைகளையும் மரத்தோடு கட்டி இறுக்க, இவனுக்குப் பின்னால் நின்ற இன்னொரு வார்ட்டர் இவனின் ட்ரவுசரை உருவி சர்க்கரை கரைத்த நீரை மேலே ஊற் றிவிட்டான். நிர்வாணமாக அந்தக் குளிரில் மரத் தைக் கட்டிப்பிடித்து நின்றவனின் உடலில் சர்க்க ரையின் வாடைக்கு எறும்புகள் வேகமாய்த் தேடி வந்தன. வந்த வேலை முடிந்த நிறைவில் வார்ட்டர் கள் மீண்டும் காவலுக்குக் கிளம்ப ஒருவன் மட்டும் இவன் பின்புறத்தில் ஓங்கியடித்தான். "காலைலே வரைக்கும் மரத்த இப்பிடியே பிடிச்சுக்கிட்டு ஓலு. அப்பத்தான் நாளப்பின்ன இங்க எவன்கிட்டயும் சண்ட இழுக்க மாட்ட." என சிரித்துவிட்டு அங்கி ருந்து நகர்ந்து போனான். மரத்திலிருந்த எறும்பு கள் மொத்தமாக இடம்பெயர்ந்து அவன் உடலெங் கும் ஊர்ந்து கடிக்கத்துவங்கின. வலியில் அல றியவனை அடைக்கப்பட்ட செல்லுக்குள்ளிருந்து

சிலர் எட்டிப் பார்த்தனர். அலறி அலறி வலியும் மரத்துப்போக, அப்படியே மரத்தோடு சாய்ந்துவிட்டான். விடிகாலையில் அவனை மரத்திலிருந்து மீண்டும் வார்ட்டர்கள் விடுவித்தபோது இரண்டு கைகளும் வீங்கிப் போயிருந்ததோடு உடலெங்கும் செவ்வெறும்புகள் கடித்த தடம். அவன் ஆண்குறியில் எறும்பு கடித்து அது வீங்கிப்போயிருந்தது. நடக்க முடியாமல் நடந்து செல்லுக்குள் விழுந்தான். சிறுநீர் கழிக்க முயன்ற போதெல்லாம் குறியின் முனை அடைத்து வலித்ததோடு சொட்டு சொட்டாகவே சிறுநீர் கழிக்க முடிந்தது.

அத்தனை வயது வரை உடலில் சேர்ந்திருந்த தெனாவட்டும் திமிரும் அந்த ஒரு இரவில் சுப்புராஜுக்கு மொத்தமாய் கரைது போயிருந்தது. தனக்கு அருகில் பூட்ஸ் கால்களின் சத்தம் கேட்டாலே பயந்து நடுங்குமளவிற்கு மாறிப்போயிருந்தவனை பி பிளாக்கின் கடைசி செல்லில் அடைத்திருந்தனர். உடலில் எறும்புகள் கடித்து தடுப்புகள் உருவாகியிருந்ததால் உடனிருந்த கைதியொருவர் தேங்காய் எண்ணையை கொடுத்துத் தேய்த்துக் கொள்ளச் சொன்னார். "பனிஷ்மெண்ட் ல வந்தா மொதல்ல அப்பிடித்தான் இருக்கும். அப்பறம் சரியாகிடும். ஒன்னும் கவலப்படாதய்யா. கல்யாணம் ஆகிருச்சா?"

அவன் வீக்கம் குறையாத கைகளை அசைக்க முடியாமல் உடம்பில் எண்ணையைத் தேய்த்துக் கொண்டான். "ஆயிருச்சுண்ணே. செங்கம் ல

பொண்டாட்டி ஒரு தனியார் ஆஸ்பத்திரில நர்ஸா இருக்கு."

"லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களாக்கும்?" அவர் அவனைப் புரிந்துகொண்டு கேட்க, ஆமென்று தலையாட்டினான். அவர் தனது எண்ணை போத்தலை வாங்கிக் கொண்டு சற்றுத்தள்ளி சென்று படுத்துக் கொண்டார். அவனோடு வேறு யாரும் இணக்கமாக பேசி இருக்காததால் சுவற்றில் சாய்ந்து உறங்க ஆயத்தமானான். விரித்து படுத்துக் கொள்ள வேண்டி தந்திருந்த போர்வையில் சரி பாதி கிழிந்து போயிருந்தது. ஒரு பக்கமாய் சாய்ந்து படுக்கமுடியாமல் சுவற்றில் தலையை சாய்த்துப் படுத்துக் கொண்டான். இருபது பேருக்கும் மேலாக இருந்த அந்த நீண்ட செல்லில் ஒரேயொரு காத்தாடி தயங்கி தயங்கி சுற்றிக் கொண்டிருந்ததால் எல்லோருக்கும் வெக்கையில் கசகசத்தது. கழிப்பறைக் கோப்பைய ஒட்டி இவனுக்கு இடம் கொடுத்திருந்ததால் நாற்றத்தையும் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தான். சரிவரத் தூக்கம் வராமல் குப்புறக் கிடந்தவனின் முரட்டு ட்ரவுசர் துணி உருவப்படுவது போலிருக்க, உஷாராகி வேகமாக எழுந்தான். அவன் தலைமாட்டிலிருந்த இன்னொருவன் காயம்பட்ட அவனின் கைகளை இறுக்கி அழுத்தியதோடு வாயையும் பொத்த, இன்னொருவன் தடித்த குறியை இவனின் குதத்திற்குள் செலுத்த முயன்றான். சுப்புராஜ் வலியில் கத்த அதை பொருட்படுத்தாமல் அவன் உள்ளே

திணிப்பதில் தீவிரமாய் இருந்தான். சுப்புராஜ் வலி பொறுக்கமாட்டாமல் அலற, கண்களில் நீர் பொங்கியது. உடலை அவர்களிடமிருந்து துண்டித்துக் கொள்ள வேண்டி சிலுப்பியவனை முதுகில் ஓங்கி அடித்தான் ஒருவன். எதிர்க்கும் திராணியின்றி அப்படியே கிடக்க, இவனிலும் முரட்டு மனிதர்களான அந்த இரண்டு பேரும் இவன் கதறலை சிறிதும் பொருட்படுத்தாமல் குதத்தில் புணர்ந்தனர். பழகிப்போன ஒரு வன்முறையை சகித்துக் கொள்வதுபோல் சக கைதிகள் அமைதியாக அப்படியே படுத்திருக்க, ஆதரவிற்கு ஒருவருமில்லாத வேதனையில் சுப்புராஜ் அப்படியே படுத்துக் கிடந்தான்.

ஒரு மாதத்திற்குப் பின்பாகத்தான் தகவல் தெரிந்து சுதா பார்க்க வந்திருந்தாள். சுப்புராஜ் அவள் பார்த்தது போல் இல்லாமல் அடையாளம் தெரியாத அளவிற்கு மாரிப்போயிருந்தான். அத்தனை வருடங்களில் இல்லாத அழுகை அவளுக்கு. அந்த சின்ன இடைவெளியில் சுப்புராஜிற்கு ஆதரவாக இருந்தது பக்கத்து செல்லில் இருந்த விஜி தான். இருவருக்கும் சம வயது என்பதால் சுப்புராஜின் உணர்வுகளை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அவன் சொல்லித்தான் சுதா கதிரை சந்தித்தாள். இந்த மாநகருக்கு முற்றிலும் புதிதானவளை கதிரின் மட்டற்ற அன்பு அரவணைத்துக் கொண்டது. “என்ன வேல பன்ற கதிர்?” என அவள் கேட்டபோது எந்த வேலையைச் சொல்வதெனத் தெரியாமல் சிரித்தான். “அதெல்

லாம் எதுக்கு கேக்கறீங்க? விடுங்க." பதில் சொல்லத் தவிர்த்தவனின் முகத்திலிருந்த தயக்கத்தைப் பார்த்தவள் "இன்னாடா கேட்டுட்டேன். என்ன வேல பன்றன்னு கேட்டது ஒரு குத்தமா? இவ்ளோ சலிச்சுக்கற?" என அவன் முதுகில் அடித்தாள். "நான் சொல்லுவேன், ஆனா முகத்த சுளிக்கக் கூடாது."

"அட சும்மா சொல்றா?"

"ஜெயிலுக்குள்ள கஞ்சா எடுத்துட்டுப் போறேன். அத பிரிச்சு வியாபாரம் பண்ணி காசு தர்றது எங்கய்யா, விஜி, உங்காளு சுப்புராஜு எல்லாரோட வேல. ஜெயிலுக்கு வெளிய எனக்குத் தெரிஞ்ச பொம்பளைங்கள வெச்சு மத்தவங்கள சந்தோசப் படுத்தற வேல."

அவன் வயதிற்கும் தோற்றத்திற்கும் அவன் சொன்ன வேலைக்கும் எந்த சம்பந்தங்களும் இருப்பதாய்த் தெரியவில்லை. குற்றங்களின் ரேகைகள் எதையும் அவன் முகத்தில் கண்டு கொள்ள முடியாத அவள் தொடர்ந்து பேசுவதா அவனைத் தவிர்ப்பதா எனத் தெரியாமல் தயங்கினான். சுப்புராஜுக்கு எதுவும் இதனால் சிக்கல் வருமா என ஒரு நிமிடம் யோசித்தவள், இத்தனை பேர் சேர்ந்து செய்வதால் அவன் பாதிக்கப்பட மாட்டேன் என சுயசமாதானம் செய்து கொண்டாள். ஆனாலும் தொடர்ந்து அவனோடு பேச விரும்பாமல் அன்று ஊருக்குக் கிளம்பிவிட்டாள்.

அவனால் அவளைப் புரிந்து கொள்ள முடிந்தது. தன்னோடு நெருங்கி பழக அவளுக்கு இருக்கும் தயக்கங்களும், அச்சமும் இயல்புதான். கதிர் அப்படியே விட்டுவிட்டான். இரண்டு வாரங்களுக்குப் பிறகு சுதா அவனைப் பார்த்தபோது எப்போதும் போல் அவனிடம் ஒரு சிரிப்பு, இவளுக்குத்தான் சங்கடமாக இருந்தது. அவன் தொழில் என்னவாக இருந்தாலும் தன்னோடு மிக மரியாதையாகவும் அன்பாகவும் நடந்துகொள்ளும் அவனை அவமதித்து விட்டதாக நினைத்தாள். "டேய் கதிரு, அன்னிக்கு நீ பேசினதக் கேட்டு ஒரு மாதிரி இருந்துச்சு. அதனாலதான் பயந்துட்டு ஓடிட்டேன். தப்பா நெனச்சுக்காத." வருத்தங்களை புன்னகையாய் வெளிப்படுத்தினாள். "அட இதில என்னங்க இருக்கு. இதெல்லாம் இயல்பு தான. நான் ஒன்னும் தப்பா எடுத்துக்கல." அவன் அவள் எண்ணங்களை எளிதில் உள்வாங்கிக் கொள்ள அதன்பிறகு தனக்கு விருப்பமான இன்னொரு மனிதனாய் கதிரை நினைத்தாள். தனக்குத் தோன்றும் எல்லாவற்றையும் தயக்கமின்றி பகிர்ந்து கொள்ளும் உரிமை அவனிடம் இயல்பிலேயே அவளுக்கு வந்தபோது முதலில் தம்பி என்றுதான் கூப்பிட்டாள்.

"என்னய தம்பின்னு கூப்டாத சுதா?" கதிர் தயங்கி தயங்கி சொன்னான்.

"ஏண்டா?"

"நான் சந்திக்கிற சரிபாதி பெண்களுக்கும் மேல நான் தொடனும்னு தான் நெனைக்கிறேன். தற்

காலிகமாகவோ இல்ல வாழ்க்கை முழுக்கவோ ஒருத்தர சகோதரியா நினைக்கிற அளவுக்கெல் லாம் நான் யோக்கியன் இல்ல. அபூர்வமா சிலர மட் டுந்தான் என்னால சகோதரப் பாசத்தோட பாக்க முடியும். எனக்கு உன்னய பாக்கறப்போ எல்லாம் உங்கூட படுக்கனும்னு தான் தோணுது. நீ கோவிச் சுக்கிட்டாலும் பரவா இல்ல. மனசுல பட்டத சொல் லிடனும்னு நினைக்கிறேன்." முகத்தை எங்கோ வைத்துக் கொண்டு சொன்னவனின் கழுத்தில் ஓங்கி ஒரு அரை விழுந்தது. சுர்ரென எழுந்த வலி யோடு திரும்புகையில், அவள் வேக வேகமாய் அங்கிருந்து செல்வதைப் பார்க்க முடிந்தது. அவ னுக்கு பெரிய வருத்தமெல்லாம் இல்லை. தான் இதுதான் என்பதை சொல்ல ஏன் வெட்கப்பட வேண்டுமென்கிற நிம்மதி.

இரண்டு மூன்று வாரங்கள் அவள் வியாழக் கிழமைகளில் வந்தபோதும் இவனை சந்திக்கா மலேயே சாதுர்யமாக சென்றுவிட்டாள். மூன்றா வது வாரம் அப்படி செல்ல முடியவில்லை. தான் கொஞ்சம் பிசிறுள்ளவன் என்று சொல்வதற்கு ஒரு வனுக்கு எத்தனை அசாத்திய நேர்மை வேண் டும்? அவன் கொஞ்சம் கூட தயக்கமில்லாமல் எப்படி தன்னிடம் வெளிப்படுத்தினான் என பல வாறாக யோசித்தவள் சுப்புராஜை பார்த்துவிட்டுத் தான் இவனது மொபைலுக்கு கால் செய்தாள்.

"எங்கடா இருக்க?"

"நீ ஏன் கேக்கற?"

“கேட்டா பதில் சொல்லு மயிரு. கேள்வி கேக்காத?”

“உனக்கென்ன அக்கற மயிரு. நான் எங்கியும் இருந்துட்டுப் போறேன்.”

அவள் இப்பொழுது சிரித்துவிட்டாள்.

“தூம, நாந்தான் கோவப்படனும். நீ என்ன சூத்துக்கு கோவப்படற? எங்கடா இருக்க மாமா பையா?”

“போடி மயிரு. நான் மாமா பையந்தான் யார் இல்லைன்னா. மாமா பையன பாக்கனும்னா டவுன் ஹால் ரோட் வா.”

காக்கா தோப்புத் தெருவிலிருந்த பழைய விடுதியில் அவனுக்கு மிக பழக்கமான அறையில் அவளுக்காக காத்திருக்கையில், அச்சம் கலந்த தயக்கமிருந்தது. தான் ஏதோவொரு வகையில் சிக்கலான மனம் கொண்டவனா? சத்யாவின் பிரிவிற்குப் பின்னால் எந்தப் பெண்ணின் மீதும் அவனால் காதல் கொள்ள முடியவில்லை. அவளை மறக்க வேண்டுமென்பதற்காக பெண்களை காமத்தோடு மட்டுமே அணுகினான். காமத்தின் போதான பெண் அன்பு அவனை தற்காலிகமாக கடந்தகாலத்தின் வலிகளில் இருந்து மீட்டெடுத்தது. ஆனால் எதிர்கொள்ளும் பெரும்பாலான பெண்களிடமும் ஒருவன் எப்படி காமத்தை மட்டுமே எப்படித் தேட முடியும்? சொல்லப் போனால் எல்லாப் பெண்களிடமும். ஒரு நொடி குற்றவுணர்ச்சி எழுந்தாலும் அடுத்த நொடி

சுதாவின் உடல் வனப்பில் தானாகவே இவனுக்கு காது நரம்புகள் சூடாகின. குறி விரைக்கத் துவங் கியது. ஒருவேளை இப்படி இருப்பதிலிருந்து துண் டித்துக் கொண்டால் சமூகத்தின் உன்னதமான மனிதனாகி விடலாம், ஆனால் இந்த சந்தோசமோ, ஆறுதலோ கிடைக்கப் போவதில்லை, யாரோ சிலர், யாரோ சிலரிடம் தன்னை நேர்மையாளன் என்று சொல்வதால் கிடைக்கும் போலி கௌரவத் திற்கு இந்த சந்தோசமும், பொறுக்கி அயோக்கியன் என்ற அவப்பெயர்களும் எவ்வளவோ பரவாயில் லையென சமாதானம் கொண்டான். வெயிலையும், தாகத்தையும் ஒருசேர கொண்டு வந்தவள், "எதுக் குடா இங்க வரச்சொன்ன? ஹோட்டல்ல எங்கியாச் சும் சாப்பிட்டா நான் அப்டியே கிளம்பி இருப்பன்ல." எனக் கேட்டபடியே கழிவறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். எழுந்து கொண்டு கழிவறை கதவருகில் நின்றான். அவள் சிறு நீர் கழிக்கும் சத்தம் சீராய்க் கேட்க, அடைபட்ட கதவைத் தகர்த்துவிடும் தூண்டுதலை அடக்கிக் கொண்டவன்

"எனக்கு வெளில அலைய முடியல, அதான் இங்க வரச் சொன்னேன்." கதவில் தலை சாய்த்தபடி கேட்டான். அவள் தன்னைக் கழுவிக் கொண்டு கதவைத் திறக்க, சாய்ந்திருந்த கதிர் சடாரென விழப்போய் சுதாரித்து விலகி நின்றான். தலையில் அடித்துக் கொண்டு சிரித்தாள்.

“டேய் நாத்தம் புடிச்சவனே, ஒத்தா மூத்திரம் போற துல என்ன இருக்கும்னுடா இப்பிடி வந்து நிக்கிற? ச்சை.” தன்னை மறைத்து நின்றவனை விலக்கித் தள்ளிவிட்டாள். அவனுக்கு வெட்கமாகிப் போக, சிரித்தபடியே அவளுக்கு எதிரில் உட்கார்ந்தான். இருவருக்குள்ளும் தற்காலிகமானதொரு அமைதி நிலவ, அவள் தன்னுடையை சரி செய்துகொண் டாள்.

“கதிரு, உங்கூட படுக்கறத நெனைக்கவே முடிய லடா. நீ சாதாரணமா கேக்கற. சொந்தம்னு சொல் லிக்க யாருமில்லாத அனாத ஜென்மங்கடா நாம. உன் துண வேணும். ஆதரவு வேணும். ஆனா படுக்க முடியுமான்னு தெரியலடா... நான் ஒன் னும் ஒழுக்கமெல்லாம் இல்ல. புருஷன் கூட மட் டுந்தான் படுப்பேன்னு பொய் சொல்ல. அதுக்காக பாக்கறவங்கூட எல்லாம் படுக்க முடியுமா?”

தழுதழுத்த கண்ணீரை வெளிக்காட்டாமல் துடைத்துக் கொண்டவளின் மனம் சலனமும் குழப்பமும் நிறைந்து கலங்கியிருந்தது. தனிமை யின் நீண்ட பயணத்தில் ஆதரவிற்கு இருக்கும் சில ஜீவன்களும் தன்னிடமிருந்து பிரிந்து செல் லும் வலியைத் தாங்கிக் கொள்ள முடியாத வலி அவளின் குரலில். வெடித்து அழுவதற்கு முன்பான கொதிநிலையில் கிடந்தாள். கதிர் நெருங்கி வந்து அவள் தோள்களை பிடித்துக் கொண்டு தடவிக் கொடுத்தான்.

“நான் உன்னய இப்போவே எங்கூட படுன்னு சொல்லல. மேல பாஞ்சு கற்பழிக்கவும் இல்ல. தம்பின்னு கூப்டாதன்னுதான் சொன்னேன்.” ஜாக் கெட்டிற்கு வெளியில் தெரியும் கழுத்துப் பகுதியில் எச்சில் பதிய முத்தமிட்டான். திரும்பி அவனைப் பார்த்தவள் “நான் இவ்ளோ பேசிட்டு இருக்கேன், மனசாட்சியே இல்லாம தடவிட்டு இருக்க சனிய னே.”என முறைத்தாள். கதிர் குனிந்து அவள் முது கிலும் இடுப்பிலும் முத்தமிட்டு மெதுவாக அவள் மடியில் படுத்துக்கொண்டான். அவள் அவனின் இந்த வினோதமான சேட்டைகளை மறுக்க முடி யாதவளாய் அனுமதித்தாள். தன் மடியில் கிடந் தவனின் தலையிலிருந்த சூடு அவன் மனம் எதைக் குறித்து யோசித்து அலையும் என்பதை புரிந்துகொள்ளச் செய்தது. அவன் வெறுமனே அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் கைகள் மட்டும் அவள் உடலெங்கும் அலைவதை நிறுத் தியிருக்கவில்லை. காட்டில் ஒற்றையாய் வேட் டைக்கு ஓடும் மிருகத்தின் மூர்க்கமாய் அவனது விரல்கள் அவளது மார்புகளிலும் தொடையிடுக் கிலும் தேடித் தேடி வியர்வை மணத்தை அள்ளிக் கொண்டு வந்தது. சில நிமிடங்களுக்குப் பின் சுவற் றில் சாய்த்து படுக்கச் செய்தவன் இறுக அணைத் தபடி மேலேறி படர்ந்தான். அவள் பதிலே பேச முடியாமல் மரமெனக் கிடக்க, எதையும் பொருட் படுத்தாமல் உடைகளைக் களைந்து மார்புகளை சுவைக்கத் துவங்கினான். ”டேய் கதிரு, ப்ளீஸ்டா.

புரிஞ்சுக்கடா.. ப்ளீஸ்டா..' என சத்தமே வராமல் முனகினாள். அவன் உடல் மட்டுமே அவளிடம் பேசிக்கொண்டிருந்தது. பெண்களின் அந்தரங்க குரலுக்கும் அன்பிற்கும் நிறையவே பழக்கப்பட்டுப் போன அந்த மனிதனுக்கு இவளைக் கையாள்வது ஒன்றும் சிரமமான காரியாமாய் இருந்திருக்க வில்லை. அவளுடலின் ஆழங்களில் நஞ்சின் ஈரம் நிரம்பிய தன் நாவால் தூண்டி ஒளிரவிட்டவனை மறுப்பின் வழியாகவே அனுமதித்துக் கொண்டிருந்தவவளுக்கு தொப்பூள்கொடியில் நீல மலர்கள் பூத்துக் குலுங்கின. அவன் களைத்து ஒதுங்குகிறவனாய் இல்லாமல் இன்னும் இன்னுமென அவள் ஆழத்திற்குள் மூழ்கிக் கொண்டிருந்தான். தன்னை மொத்தமாக நீராய் உருமாற்றி குடித்து விட்டாலும் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை என்னும் மிரட்சியோடு தன் தொடையிடுக்கிலிருந்த அவனின் தலையை இறுக பற்றிக் கொண்டாள்.

கதிர் தனக்கு விருப்பமான பெண்களில் ஒருத்தியை இன்னொருத்தியிடம் ஒருபோதும் தேடுவதில்லை. ஒரு பெண்ணுக்குத் தரும் அதிகபட்ச மரியாதையாகக் கூட அதை நினைக்கிறான். ஒவ்வொரு பெண்ணும் அவனுக்கு மகத்தான ஆச்சர்யம். சுதா அவர்களில் ஒருவரோடும் ஒப்பிட முடியாத தனித்த ஆச்சர்யம். இவனோடு இப்போதெல்லாம் தயக்கமின்றி கூடுகிறாள். ஆனால் இன்று வரையிலும் காதலுக்குரியவனாய் வைத்துக் கொண்டதில்லை. அவளுடல்

தரும் பிரமிப்பெல்லாம் அடங்கிப் போகும் நேரத்தில் கொஞ்சமே கொஞ்சமாய் தன்னைக் காதலிக்க மாட்டாளா என இவனுக்கு ஏக்கமாய் இருக்கும்.

“இப்பிடி உம்மேல பித்துப் புடிச்சு அலையிறன்ல. ஒரு தடவையாச்சும் முழு அன்போட கூட படேண்டி?” கதிர் அவளின் கால்களில் தலை வைத்து புரண்டபடி கேட்பான்.

“உனக்கு இந்த உடம்புன்னு இல்ல, எந்தப் பொம்பள உடம்ப பாத்தாலும் பித்துப் பிடிக்கும்டா. போதுங்கற வரையறையே இல்லாத மிருகம் நீ. மிருகத்தோட படுக்க முடியும். காதலிக்க முடியாது. நீ சாகற வரைக்கும் ஒரு பெண்ணோட அன்புக்கு ஏங்கி செத்ததா இருக்கனும்.” சுதா அவனின் கண்களுக்குள் ஊடுருவியபடி சொல்வாள்.

அவனிடம் தனக்குத் தேவையான எதையும் கேட்பதில்லை, உடன் பயணிக்கச் சொவதோ, விரும்பி தொலைபேசியில் பேசுவதோ எந்தவித மான நெருக்கத்தையும் அவனுக்குத் தர மறுத்தாள். தன்னுடலை மட்டும் நேசிக்க விரும்பிய அவனுக்கு அதை மட்டும் முழுமையாகத் தந்தாள். தான் வளர்க்கும் பிரியத்திற்குரிய ஒரு நாய்க்குட்டியிடம் காட்டும் அன்புகூட அவனிடம் உருவாகிவிடக் கூடாதென்பதில் உறுதியாய் இருந்தாள். கதிருக்கு அதனாலேயே அவள் மீதான தாபம் உடலை மீறி பெருகிக் கொண்டிருந்தது. சமயங்களில் அவளைப் புணரும் போதே கதறி அழுவான். அவள்

பொருட்படுத்தாமல் அவன் துவங்கியதை முடிக்கத் தூண்டி புணரச் செய்வாள்.

இந்த இரண்டு வாரங்கள் நூறு முறையாவது அவளோடு பேச வேண்டுமென தொலைபேசியில் அழைத்திருப்பான். அவள் எந்த அழைப்பையும் எடுத்திருக்கவில்லை. அவள் எண்ணிலிருந்து வரும் அழைப்பிற்காக காத்திருந்த அவன் கண்கள் அடிக்கடி தனது மொபைலை எடுத்துப் பார்த்துக் கொண்டன. அவள் தனக்குள் நிகழ்த்தியிருப்பது என்னமாதிரியான மாற்றம் என்பதைப் புரிந்துகொள்ள முயன்றபோது அவளின் மீதான அன்பும் ஒட்டுமொத்தமாக பெண்களின் மீதான வன்மமும் ஒருசேர வளர்ந்து நின்றது. அடுத்த முறை அவளைப் பார்க்கும் போது அவளை ரணப்படுத்த வேண்டுமென ஆத்திரமுற்றான். அந்த நினைப்பு புதுவிதமான கிளர்ச்சியளிக்க, அவளில்லாத தவிப்பில் அன்றைய தினம் பார்த்த பேச்சி அந்த கிளர்ச்சியின் தற்காலிக இலக்கானாள். "எந்தப் பொம்பள உடம்பப் பாத்தாலும் பித்துப் பிடிக்கிற மிருகம்டா நீ." என்ற சுதாவின் வார்த்தைகள் அவன் செவிகளை ஓங்கி அறைந்ததை அப்போது அவன் பொருட்படுத்தியிருக்கவில்லை.

மானாமதுரையி
லிருந்து ஒரு
பெண்.

வெறுப்பை விதைக்கும் மனிதர்கள் மரித்துப் போகும் போது கூட மன்னிக்கப்படாத வர்களாக இருக்கிறார்கள். தனக்குத் தெரிந்த சரி பாதிக்கும் மேலான மனிதர்களை கதிர் வெறுப் பின் வழியாகவே நினைவுகொள்கிறான். மற்றவர் களின் மீதிருந்த அந்த வெறுப்புதான் அவனைத் தொடர்ந்து வாழச் செய்கிறது. அன்பையும், காமத் தையும் போல் இந்த உணர்ச்சி தற்காலிகமான தாய் இல்லை. தன்னை ஒரு கன்னத்தில் அறை யும் மனிதனுக்கு இன்னொரு கன்னத்தைக் காட் டச் சொன்ன கிறிஸ்துவை முன்பொரு காலத்தில் தீவிரமாய் பின் தொடர்ந்தவன் என அவனை யாரும் அடையாளப்படுத்திவிட முடியாது. அன்பு செய்தலை விடவும் வெறுப்பது அவனுக்கு பிடித் தமானதாய் இருக்கிறது. மதுவருந்துகிற இர வுகளில் திருப்பரங்குன்றம், திருநகர் வீதிகளில்

முகம் தெரியாத மனிதர்களிடம் சண்டை இழுத் தான். அவர்களை இவன் வீழ்த்தினாலும் அவர் கள் இவனை வீழ்த்தினாலும் சந்தோசப்பட்டான். வன்முறை அவனுக்குத் தந்த ஆறுதல் அலாதியா னது. தான் இருபது வருடங்களுக்கும் மேலாக வளர்ந்த ஊருக்கு நினைத்த மாத்திரத்தில் அவ னால் போக முடியவில்லை. பட்டுநூல்காரன் பேட் டையும், தேசிய நெடுஞ்சாலையின் கடைகளும் நண்பர்களும் வெகு தூரத்தில் இருப்பவர்களைப் போல் மாறிப்போனார்கள். டவுன் ஹால் ரோட்டில் பெண்களை வைத்து தொழில் செய்யத் துவங்கிய நாளில் இருந்து அம்மா இவனோடு பேசுவதை மொத்தமாக நிறுத்துக் கொண்டாள். அறுவை சிகிச்சை செய்து கொண்ட பிறகும் கூட கிடைத்த எளிய வேலையும் வருமானமும் அவள் பசியாற போதுமானதாய் இருந்தது. ஆன்மா ஒரு கருப்பு ஒளிவட்டத்தை அணிந்து கொண்டு சொர்க் கத்தை நோக்கி மேலே போகப் போராடினாலும் உடல் லௌகீகமாகவே இருக்கும். அது திண் ணும், குடிக்கும், வாழும்.

இரண்டாவது முறை முருகன் வந் துவிட்டுப் போனபின் சக்தி கர்ப்பம் தரித்திருந் தாள். அருகிலிருந்து அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென இருந்த விருப்பங்களை எல்லாம் சிரமப்பட்டு அடக்கிக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. தனக்காக எவ்வளவு செய்திருக்கிறாள். தொப்பூள் கொடி உறவு கூட இல்லாத இந்த

அபூர்வ அன்பு ஏன்? பத்து நாட்களுக்கு ஒரு முறை அதிகாலை நேரங்களில் அவளைப் பார்க்கச் செல்வான். அவள் கோபப்படுவாள். "நீ அடிக்கடி வராதுண்ணே. இவனுக சாதிவெறியும் பகையும் அத்தன சீக்கிரம் ஓயாது. உன்னயவும் பலி குடுத்துட்டு எங்களால இருக்க முடியாது." சொல்லும் போதே அவளுக்குக் கண் கலங்கும். "ஏய் கிறுக்குத்தனமா பேசாதடி. நாந்தான் அவனுகள வம்ம வெச்சு வெட்டனும். இழப்பு எனக்குத்தானடி. அவனுகளுக்கு இருக்கறத விட கோவமும் பகையும் எனக்கு நிறையவே இருக்கு. ஆனா எதுத்து நிக்கற தைர்யம் இல்ல." தொண்டைக் குழிக்குள் இருக்கும் உக்கிரம் வெளியெற முடியாமல் துடிக்கும். "விடுண்ணே, அவங்க செஞ்ச பாவத்துக்கு அவங்க அனுபவிப்பாங்க." சக்திக்கு சத்யாவையும் இவனையும் நினைக்கும் நேரங்களில் எல்லாம் அழுவதைத் தவிர்க்க முடியாது. "உன்கூட இருந்து உன்னயப் பாத்துக்கனும். அதுக்குக் கூட முடியலையேன்னு நினைக்கிறப்பதாண்டி வருத்தமா இருக்கு." கதிர் புலம்புவான். "எனக்கு என்னண்ணே கொற. பாத்துக்கவா ஆள் இல்ல. நீ எதுக்கு வருத்தப்படற." சமாதானமாக அவள் சொன்னாலும் அவன் அந்த ஊரை விட்டுத் தள்ளி இருப்பதில் வெளிக்காட்ட முடியாத ஏராளமான வருத்தம் இருந்தது. இந்த தூரமும், பிரிவும் அன்பை எந்தவிதத்திலும் குறைத்திருக்கவில்லை. ஆனால் கதிரை மீண்டும் நம்பிக்கை

யற்றவனாக மாற்றிவிட்டது. அவன் செய்யும் இந்தப் புதிய தொழில்களில் சக்திக்கு கொஞ்சமும் உடன்பாடில்லை. சண்டை போட்டுப் பார்த்தும் கூட கதிர் தன்னை மாற்றிக் கொள்வதாய் இல்லை. ஒரு பத்து நாட்களுக்கு பேசாமல் அவனது அழைப்புகளை எடுக்காமலிருந்தாள். பட்டு நூல்காரன் பேட்டையிலிருந்த சரிபாதி நண்பர்களை அவள் வீட்டுக்கு சமாதானம் பேச அனுப்பிவிட்டான். அவனை விலக்கவோ மாற்றவோ முடியாதெனப் புரிந்து கொண்டாள். ஆற்றின் பெரும் சுழிப்பில் தன்னை விரும்பி நுழைத்துக் கொண்ட மீன், அது விருப்பப்படி சுற்றும். அது சாகசமெல்லாம் இல்லை. சில பழைய நாட்களின் துயரிலிருந்து தப்பித்துக் கொள்ளும் தந்திரம். ஒவ்வொரு நாளும் வாழ்விற்கு மரணத்திற்கும் இடையில் வைத்துக் கொள்வதன் மூலம் கிடைத்த காயங்கள் வினோதமான ஆறுதலை கொடுத்ததால் அந்த சுழிப்பை விடாமல் பற்றிக் கொண்டிருந்தது அந்த மீன்.

டவுன் ஹால் ரோட்டின் இரவுகளும், விடுதிகளும் அங்கிருந்தவர்களின் விருப்பங்களும் பழகின. வெவ்வேறு மொழி பேசும். வெவ்வேறு தேவைகளோடு வரும் மனிதர்களைக் கண்டு ஆச்சர்யப்பட்டான். ஹர்னி காம்ப்ளக்ஸ் அடுத்து இருக்கும் தேநீர்க் கடையில் தினமும் பார்க்கும் அகாச்சுகு நைஜீரியக்காரன். இப்பொழுது அரை குறையாய் தமிழ் பேசுகிறான். என்ன வேலைகள் கிடைத்தாலும் செய்யத் தயாராய் இருக்கும் அவ

னுக்கு திருப்பூரில் அவனைப் போலவே இன்னும் சில நண்பர்கள் இருந்தார்கள். பணத்தின் தேவைகள் மிகுந்திருந்த மனிதர்கள் ஒருபோதும் தங்கள் சந்தோசங்களை அதற்காக தியாகம் செய்வதில்லை. மதுவருந்தும் போதுகூட தனக்கான பியருக்கு வேறு யாரும் பணம் செலுத்தினால் அவனுக்குப் பிடிக்காது. இந்த வீதியிலிருக்கும் எல்லாக் கார்மண்ட்ஸ்களுக்கும் அவன் தான் திருப்பூரிலிருந்து துணி கொண்டு வந்து கொடுக்கிறான். கிடைத்த வருமானத்தில் மாதத்தில் இரண்டு நாட்கள் ஹாவாவெளியிலோ, அல்லது வேறு பெரிய விடுதியிலோ அறை எடுத்துக் கொண்டு அவனும் அவன் நண்பர்களும் அந்த நாளைக் கொண்டாட கதிரிடம் தான் பெண்துனை கேட்பார்கள். தங்கள் நிலத்தின் கனத்து வலுவேறிய பெண்களைப் போல் இல்லாதபோதும் எல்லா வகையிலும் வளைந்து கொடுக்கும் இந்தப் பெண்களோடு சல்லாபிக்க சுவாரஸ்யமாகத்தான் இருக்கும். தொழில் தாண்டி கதிருக்கு அகாச்சுகுவோடு ஒரு நட்பு இருந்தது. எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாத மனிதன் என்பதால் அவனும் இவனை மதித்தான். ஆண்டிபட்டியிலிருந்து பொருள் எடுத்து வரும் நாட்களில் இப்போதெல்லாம் பிரித்து மிக்சர் பொட்டலங்களில் அடைக்க அவன் வீட்டைத்தான் கதிர் பயன்படுத்திக் கொள்கிறான். வீடு அவனுக்கு கசந்தது. இழந்ததை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும் எல்லாவற்

றிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாய்த் துண்டித்துக் கொள்ளத் துவங்கியபோது புதிய மனிதர்கள் அவனையும் புதியவனாய் மாற்றினார்கள்.

ராணியும், மீனாவும் அவன் வாடிக்கையாளர்களுக்கு விருப்பமானவர்களாய் இருந்தார்கள். நேஷனல் லாட்ஜும், சுபம் விடுதியும், காக்காத் தோப்புத் தெருவிலிருந்த வேறு சில விடுதிகளும் மனத்தடையின்றி இவர்களை அரவணைத்துக் கொண்டது. நெடுஞ்சாலைகளின் ஓரம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தொழில் செய்து கொண்டிருந்த அந்தப் பெண்களுக்கு கதிர்தான் ஆறுதலும் அடைக்கலமும் கொடுத்தான். சில வருடங்களுக்கு முன் அவர்களோடு தொழில் செய்த ஒரு பெண் லாரி ஓட்டுநர்களோடு விருதுநகர் வரை சென்றாள். இரவில் இது வழக்கம்தான். குறைந்தபட்ச தூரம் தங்களோடு அழைத்துச் சென்று விருப்பமான இடத்தில் உறவு கொண்டு பின் காலை நேரமாக அனுப்பி வைப்பார்கள். ஆறு கண் பாலத்தில் போலிஸ் ரெய்ட் அதிகம் இருக்கும் நாட்களில் இந்த வழி பாதுகாப்பானது. அன்று அவளை ஏற்றிக்கொண்டு சென்ற லாரியில் இரண்டு ஓட்டுநர்கள் ஒரு க்ளீனர் என மூன்று பேர். அவளை ஏற்றிக் கொண்ட போது சாலை தெரியாதளவிற்கு மழை. குடித்திருந்த மூன்று பேரும் பார்க்க நிதானமானவர்களாக இருந்ததால் அவர்களோடு மதுவருந்த அவளும் தயங்கவில்லை. காமராஜர் கல்லூரியைத் தாண்டி விருதுநகர் செல்

லும் சாலையில் இருந்து கொஞ்சம் ஒதுங்கிய லாரி ஒரு கிராமத்திற்குச் செல்லும் பாதையில் கொஞ்ச தூரம் சென்று நின்றது. லாரியில் லோடு இருந்ததால் அவளை மட்டும் கீழே இறக்கி ஒவ் வொருவராக போய் வர முடிவு செய்தார்கள். விரித் துப் படுக்க வைத்திருந்த பேனரோடு முதல் ஓட் டுநர் அவளை அழைத்துக் கொண்டு சோளத் தட்டைகள் அடர்ந்திருந்த காட்டிற்குள் நடந்தான். இரவுப்பூச்சிகளின் சத்தம் எங்கும் நிறைந்திருக்க மதுவின் போதை அவர்களை அச்சமின்றி பார்த் துக் கொண்டது. இரண்டு பாதைகளுக்கு நடுவாக பேனரை விரித்தவனைச் சுற்றி மழையின் நனைந் திருந்த மண்ணின் ஈரமும் வாசனையும். முறுக்கேறி கொதிக்கும் உடலோடு அவளின் உடைகளை அவசரமாய்க் களைந்தவன் மாரிலும் வயிற்றிலும் பற்கள் பட கடித்தான். முதலில் விளையாட்டாய் வலியை அனுபவித்து பொறுத்துக் கொண்டவள் அவன் தொடர்ந்து மூர்க்கத்தில் கடிக்கத் துவங் கியதும் வலி பொறுக்க மாட்டாமல் கொட்டை யைப் பிடித்து கசக்கினாள். “ஆவென” பின்னால் விலகியவன் மூச்சு வாங்க அவளைப் பார்த்த வன். “நான் என்ன மனுஷியா மிருகமா? இந்தக் கடி கடிக்கிற. ஒழுங்கா செய்றதா இருந்தா செய்யி. இல்ல அறுத்துருவேன்.” என காட்டமாகச் சொல் லிவிட்டு தொண்டையில் திரண்டிருந்த சளியைக் காறித்துப்பினாள். அவன் சரியென தலையாட்டி விட்டு மீண்டும் அவளோடு கூடினான். நீண்ட பய

ணத்தின் தனிமையை ஆவேசமாக அவளின் மீது இயங்கி தீர்த்துக் கொண்டு அவன் எழுந்து செல்ல அடுத்தவன் வந்தான்.

படுத்திருந்த இடத்திலிருந்து சிறிது தள்ளி சிறுநீர் கழித்துவிட்டு வந்தவள் தன் ஜாக்கெட்டிலி ருந்து ஆணுறையை எடுத்துக் கொடுத்தாள். சிரித் தபடியே வாங்கி அணிந்து கொண்டவன் அவளை நிதானமாகப் புணரத் துவங்கிய போது கனத்த அவன் உடலை சுமக்க முடியாமல் மூச்சு வாங்கி னாள். அவர்களுக்கு அருகில் இப்பொழுது புதிய காலடிகளின் சத்தம் கேட்க, சுதாரித்து எழ முயன் றாள். அவன் விடாமல் அவளை தனக்குக் கீழாக அமிழ்த்த முதலில் சென்ற ஓட்டுநரும், க்ளீனரும் வேகமாக ஓடிவந்து அவள் கைகளைப் பிடித் துக் கொண்டார்கள். கையில் கொண்டு வந்த லிவரால் அவளின் தலையில் அடிக்க அவளுக்கு மண்டை உடைந்து குருதி கசிந்தது. "ஏண்டி தேவ் டியா என் கொட்டையவா நசுக்கற?" என நசுக்கப் பட்டவன் ஆத்திரத்தோடு அவளை அறைந்தான். அவள் சேலையைக் கிழித்து அதைக் கொண்டே அவளின் கைகளை கட்டியவர்கள் தூக்கி நிறுத்தி னார்கள். நிர்வாணமாய் அவர்களின் நடுவில் நின் றிருந்த அவள் தன்னை விடச் சொல்லி கெஞ்ச ஒருவன் அவன் கழுத்தைப் பிடித்து இறுக்கினான். பின்னாலிருந்து ஒருவன் அவள் குதத்தில் புணர உள்ளே செல்லாத தன் குறியை வம்பாக திணித் தான். வலியில் அலறிய அவளை மற்ற இரண்டு

பேரும் அடித்து துவைத்தார்கள். என்னவிதமாக வெல்லாம் அவளை வதைக்க முடியுமோ வதைத் தவர்கள் அப்படியே விட்டபோது பாதியில் மயங்கிப் போனாள். குதத்திலிருந்து குருதி கசிந்தது. நீண்ட நேரமாக இறுக்கப்பட்ட கழுத்தில் குரல்வளை நெறிந்து போயிருந்தது. மயங்கி விழுந்து கிடந்த அவளின் கொழுத்த உடல் அப்பொழுதும் அவர்க ளைத் தொந்தரவு செய்தபடியிருக்க முதலில் அவ ளோடு கூடிய ஓட்டுநர் ஓரமாகக் கிடந்த லிவர் கம் பியை எடுத்து மூன்று நான்கு முறை அவள் தலை யிலேயே அடித்தான். ஏந்த எதிர்வினைகளும் இல் லாமல் மயங்கிக் கிடந்தவள் அதே நிலையிலேயே இறந்து போயிருந்தாள். பசிக்கும், வாழ்வின் எளிய தேவைகளுக்கும் வேறு வழியின்றி ஆறு கண் பாலத்தில் அடைக்கலம் புகுந்திருந்த அந்தப் பெண்கள் மரண பயத்தில் ஒட்டுமொத்தமாக அங் கிருந்து விலகியபின் கதிர் தான் எல்லோரையும் ஒருங்கிணைத்தான். இந்த பாதுகாப்பும், நிம்மதியும் கிடைத்த வருமானமும் அவர்கள் வாழப் போதுமா னதாய் இருந்தது. எப்போதாவது போலிஸ் ரெய்டில் மாட்டிக் கொண்டால் கூட இவனுக்கு பிரச்சனை வராதபடி ஜாமீன் எடுக்கவும் மற்ற வழக்கு வேலை களுக்கும் ராணியின் தம்பிதான் வருவான். டவுன் ஹால் ரோட்டில் கதிருக்கு இருந்த பழக்கமும் அவனது பாதுகாப்பும் தான் இந்தப் பெண்களின் அடிப்படைத் தேவை.

வாரத்தில் சில நாட்கள் மட்டுமே வீட்டுக்குச் செல்கிறவனை அன்று அமமா மெனக் கெட்டு ஃபோனில் கூப்பிட்டு வரச் சொன்னபோது ஆச்சர்யப்பட்டான். தன்னை முழுக்க வெறுக்கத் துவங்கிவிட்ட அவள் திடீரெனக் கூப்பிடுவதன் காரணம் புரியாமல் சென்றான். முப்பத்தைந்து வயதுக்கும் கொஞ்சம் குறைவாக மதிப்பிடக் கூடிய அளவில் ஒரு பெண் வீட்டு வாசலில் உரிமையோடு தேநீர் குடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து யாரோ உறவுக்காரப் பெண்ணாயிருக்குமென நினைத்தான். இவனைக் கண்டு உரிமையோடு சிரித்தவள் "நல்லாருக்கியா தம்பி?" என நலம் விசாரித்தவளுக்கு சிரிப்பை பதிலாய்த் தந்து விட்டு வீட்டிற்குள் சென்றான். அம்மா ஒரு மூலையில் அழுது வடிந்த முகத்தோடு குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தாள். "எதுக்கும்மா அழுதிட்டு இருக்க? யார் அது வாசல்ல?" இவன் கேட்ட நொடியில் படபடவென தன் தலையில் அடித்துக் கொண்டாள். "இன்னும் என்னென்ன அசிங்கமெல்லாம் படனுமோ ஆண்டவரே," என அவள் ஒப்பாரி வைக்க, வாசலில் அமர்ந்திருந்த பெண் எழுந்து வந்து "எதுக்குக்கா அழுகற? இப்ப என்ன நடந்து போச்சு.?" எனப் பாசமாக பேசினாள்.

"வெளக்கமாறு பிஞ்சிரும். யாருடி உனக்கு அக்கா? ஒழுங்கா கெளம்பிரு. இல்ல நானே அருவாமனைய எடுத்து உன்னய வகுந்துருவேன்." அம்மா ஆவேசமாக கத்தினாள். கதிருக்கு எது

வும் புரியாத குழப்பத்தில் அம்மாவின் மீது கோபம் தான் அதிகமானது. "என்ன விஷயம்னு மொதல்ல சொல்லும்மா. எரிச்சல கெளப்பாத." கதிரும் கத்தினான். "எலேய் உங்கப்பன் இந்தப் பொம்பளைய புதுசா சேத்துக்கிட்டானாம். நம்ம கூட இருந்துக் கலாம்னு வந்திருக்கா?" அம்மா அந்த விஷயத்தைச் சொன்ன போது சிறைக்கு சென்று ஏழெட்டு வருடங்கள் கடந்த மனிதனுக்கு இதெப்படி சாத்தியம் என்றுதான் முதலில் கதிர் ஆச்சர்யப்பட்டான். "சும்மா எதையாச்சும் ஒளராதம்மா." என கதிர் சந்தேகத்தோடு சொல்ல, "ஆமா தம்பி நெசந்தேன். எங்க தம்பியும் ஜெயில்ல தான் இருக்கான். அவனப் பாக்கறதுக்கு போறப்போ வாரப்போ கச்சேரில வெச்சு இவரு பழக்கம். அதுக்கப்பறம் பரோல்ல வாரப்ப எல்லாம் வீட்டுக்கு வருவாரு. இந்தவாட்டி வந்தப்போ என் புருஷனுக்கும் அவருக்கும் பிரச்சனையாகிடுச்சு. அதான் என்ன செய்றதுன்னு மாமா கிட்ட போயி அழுதேன். நீ நம்ம வீட்டுக்குப் போ, அக்காவும் தங்கச்சியுமா சேந்து இருங்கன்னு அனுப்பி வெச்சது." அந்தப் பெண் எந்தக் குழப்பமும் இல்லாமல் இயல்பாகச் சொன்னாள். "ஏய் யாரும்மா நீயி அறிவு இருக்கா இல்லயா? இந்த வயசுக்கு மேல புருஷனையும் குடும்பத்தையும் விட்டுட்டு வரேன்னு சொல்லிட்டு இருக்க. அதும் ஜெயில்ல இருக்க ஒரு அயோக்கியனுக்காக. மொதல்ல கெளம்பு இங்க இருந்து. எங்கள எல்லாம் பாத்தா உனக்கு எப்பிடி தெரியுது?" உள்

ளெழுந்த கோவத்தை அடக்கிக் கொண்டு அவன் சொல்ல "ம்ம்ம்... நல்லா சொல்லுவியே, உங்கப் பன் வர்றப்ப எல்லாம் உழுதுட்டுப் போவான். நான் புருஷன் புள்ள குட்டியெல்லாம் விட்டுட்டு அவனே கெதின்னு வந்தா தொரத்தி விடுவிங்களோ. நான் எங்கியும் போக மாட்டேன். இங்கதான் இருப்பேன்." பிடிவாதமாக வீட்டின் நடுவில் உட்கார, ஆத்திரத் தில் எட்டி அவளை உதைத்தான். அவள் ஓவென ஒப்பாரி வைத்து அழத் துவங்கினாள். "அய்யய்யோ குடும்பத்தோட சேந்து என்னயக் கொல்ல பாக் கறாங்களே." என அவள் தெருவிற்கே கேட்கும் படி அழ பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து என்ன ஏதென விசாரித்தார்கள். அத்தனை பெரிய கூட் டத்தின் நடுவிலும் கூச்சமே இல்லாமல் "இவுக அப்பா என்னய வெச்சிருக்காருங்க. நம்ம வீட்ல போயி ஒன்னு மண்ணா இருன்னு சொல்லி அனுப் பிவிட்டாரு. இவங்க என்னய அடிச்சுக் கொல் லப் பாக்கறாங்க. நீங்களே ஒரு நியாயம் சொல் லுங்கய்யா." என அவள் முறையிட மானங்கெட்ட இந்தப் பிரச்சனைக்கு என்ன தீர்வு சொல்வதெ னத் தெரியாமல் எல்லோரும் "எதுவா இருந்தாலும் நாலு ஆள வெச்சு பேசித் தீத்துக்கங்கப்பா. அசிங் கமா இல்லயா?" கதிரைத் திட்டிவிட்டுச் சென்றார் கள்.

அன்று மாலை அவள் வீட்டு முக வரியை வாங்கிக் கொண்டு கதிர் மானாமதுரை கிளம்பினான். இந்த பிரச்சனைக்கு யாரிடம் உதவி

கேட்க முடியும்? ஏன் இந்த மனிதன் தன் ஆயுட்கா லம் முழுக்க தன் குடும்பத்திற்கு இத்தனை துரோ கங்கள் செய்து கொண்டிருக்கிறான். தன் அப்பா வின் மீதிருந்த வெறுப்பு முன்னெப்போதும் இல் லாத அளவில் வளர்ந்தது. பால்யத்திலிருந்து இந்த வாழ்க்கையின் எல்லா விருப்பங்களையும் சிதைத் தது அவரின் பொறுப்பின்மை. கனவுகளை விருப் பங்களை நிரந்தரமாகப் பிடிங்கிக் கொண்டு எல்லா வற்றையும் சூன்யமாக்கியது போதாதென இடை விடாத இதுபோன்ற அவமானங்களும். பயணம் முழுக்க மனம் வெறுப்பை மீறி பகையாய் வளர்ந்து கொந்தளித்துக் கொண்டிருந்தது. "ஒரு சின்ன பிரச்சனடா மாப்ள, வா மானாமதுர வரைக்கும் போய்ட்டு வருவோம்" என ஊரிலிருந்து மணி யைத்தான் வரச் சொல்லி இருந்தான். பாதி வழியில் பிரச்சனையைக் கேட்ட மணிக்கு எரிச்சலானது. "உங்கப்பனுக்கு வெக்க பொச்சே இருக்காதாடா. இத்தன வயசுக்கு மேல ஏன் இப்பிடி சில்றத்தனம் பண்ணிக்கிட்டு இருக்காரு." உள்ளிருந்த கோவம் அவன் வார்த்தைகளைக் கேட்டு இன்னும் அதிக மானது. "வெளிய இருந்தும் எங்கள சாகடிச்சான். உள்ள போயும் சாகடிக்கிறான். இவன சங்க அறுத் தாலும் என் ஆத்திரம் அடங்காதுடா. மொதல்ல இந்தப் பிரச்சனைய முடிச்சுக்கறேன். அப்பறம் இருக்கு அவனுக்கு." கதிருக்கு முகத்திலும் உட லிலும் இருக்கும் நரம்புகள் ஆத்திரத்தில் முறுக் கேறி துடித்தன.

இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையுமாய் மூன்று பேர். கணவன். அவனது அம்மா அப்பா அக்கா என பெரிய குடும் பம். அருகிலேயே நிறைய சொந்தக்காரர்களும் இருந்தார்கள். மானா மதுரை தாண்டி வைகை யாற்றை ஒட்டின சின்ன ஊர். இந்த பிரச்சனை விஷயமாகப் பேச வேண்டுமென அவன் அவள் வீட்டிற்கு சென்ற சில நிமிடங்களிலேயே அங்கு பெரும் கூட்டம் கூடி விட்டார்கள். பேசுவதற்கு முன்பே நீண்ட கைகள் அவனுடலை பதம் பார்க்க, அத்தனை பெரிய கூட்டத்தை விலக்க முடியாமல் மணி சிரமப்பட்டான். "அப்பு இருங்க. மொதல்ல பேசுவோம். இவனுக்கும் பிரச்சனைக்கும் சம்பந் தமில்ல. மொதல்ல பேச விடுங்க." என தொண் டைத்தண்ணி வற்றக் கத்திப் பார்த்தான். அவர்கள் எளிதில் சமாதானம் அடைகிறவர்களாய் இல்லை. "உங்கப்பங்காரன் என் பொண்டாட்டிய ஓத்துட்டுப் போவான், நீ சமாதானம் பண்ண வரியோ? ஏண்டா தாயோலி." அவளின் புருஷன் அடங்காத ஆத் திரத்துடன் கதிரின் பொடனியிலேயே அடித்துக் கொண்டிருந்தான். அவர்களின் உறவு முறையிலி ருந்த பெரியவர் ஒருவர் "ஏலேய் வெளக்கெண் ணைங்களா மொதல்ல என்னன்னு பேசுவம்டா. வந்ததும் அடிச்சுக்கிட்டு இருக்கீங்க." என சத்தம் போட்டு பிரித்துவிட்டார். உடலும் முகமும் ரத்தம் கட்டிப் போயிருந்த கதிரின் கிழிந்த சட்டையை மணி சரி செய்துவிட்டான். அந்த வீட்டிற்குப் பின்

னாலிருந்த தென்னை மரங்களுக்கு நடுவில் எல் லோரும் கூட்டமாய் உட்கார அம்மாவைப் பிரிந்த குழந்தைகளும் ஏக்கத்தோடு அவர்களோடு வந்து உட்கார்ந்து கொண்டனர்.

எல்லோருக்கும் பொதுவாகப் பேசத் துவங்கிய பெரியவர் ஒருவர் கதிரைக் கூப்பிட்டு முன்னால் நிற்க வைத்தார். "தம்பி நீ வந்த விசயத்த தெளிவா சொல்லுய்யா." என்றார். முகமும் வாயும் வீங்கிப் போயிருக்க பேச வாயெடுத்தவனால் வலி தாங்க முடியவில்லை. திரும்பி மணியைப் பார்க்க, இவனுக்குப் பதிலாக மணி பேசினான். "அப்பு இவ னும் இவங்க அம்மாவும் பாவம் ஏதோ வேல செஞ்சு பொழச்சுட்டு இருக்கற அப்பிராணிங்க. இவங்க அய்யா இந்த மாதிரி தொடுப்பு வெச்சிருக் கற எந்த சமாச்சாரமும் அவங்களுக்குத் தெரியாது. ஜெயில்ல தான இருக்காருன்னு நெனச்சா இப்பிடி செய்வாருன்னு யாருக்குத் தெரியும்? திடுதிப்புன்னு இன்னிக்கி அந்த அக்கா கெளம்பி வந்து வீட்ல உக்காந்துக்கவும் தான் விஷயம் தெரியும். அதான் பிரச்சன முத்தறதுக்கு முன்னால உடனே கெளம்பி வந்தோம். நாங்களே கையோட கூட்டி வரலாம்னா முடியவே முடியாதுன்னு அந்தக்கா பிடிவாதமா இருக்கு. நீங்கதான் வந்து கூட்டிட்டுப் போகனும்." அவன் நிதானமாகச் சொல்ல அமைதியாகக் கேட் டிருந்த ஊர்க்காரர்களில் சிலர் சத்தம் போட்டார் கள். பெரியவர் மறுபடியும் அமைதிப்படுத்திவிட்டு "ஏய் இருங்கடா நாந்தான் பேசிட்டு இருக்கன்ல."

எனக் கத்தினார். இவர்கள் பக்கமாய்த் திரும்பி "ஏய் அதெப்பிடிப்பா அந்தாளு லீவுல வர்றப்போ எங்க போற வாரன்னெல்லாம் கேக்காமயா இருந்தீங்க. நாங்க எல்லாரும் அவரு இங்க வர்றதப் பாத்துருக்கோம். உங்களுக்கு தெரியாதுன்னு சொன்னா நம்பற மாதிரியா இருக்கு."

"நீங்க நெனைக்கிற மாதிரி இல்லங்கய்யா. இவனும் இவங்கப்பாவும் பேசிக்கிறது இல்ல. இவன் சின்னப்பயலா இருந்த காலத்துல இருந்து வீடு தங்காத ஆளு. அதனாலயே அவர இவனுக்கும் பிடிக்காது. இப்ப பாதிக்கப்படறது அவன். புரிஞ்சுக்கங்க."

கூட்டத்தில் சிலர் சலசலத்தனர். பெரியவர் தனக்கருகில் இருந்து இன்னொருவருடன் பேசினார். பாவமான கதிரைப் பார்க்க சூதுவாது தெரியாதவனாய் இருந்தான். அந்தப் பெண்ணின் கணவனை அழைத்துப் பெரியவர் தனியாகப் பேசினார். அந்தாள் எளிதில் சமாதானம் அடைகிறவனாய் இல்லை. பிறகு அவன் குழந்தைகளைக் காட்டி அவர்கள் பேசியபோது வேண்டாவெறுப்பாக சரியெனத் தலையாட்டினான். திரும்பி வந்த பெரியவர் "சரி தம்பி. நீங்க சொல்ற மாதிரியே செய்றோம். ஆனா என்னண்டாலும் உங்கப்பா செஞ்சது தப்பு. அதனால அவருக்குப் பதிலா நீ எல்லாருக்கும் பொதுவா ஊர் முன்ன விழுந்து மன்னிப்புக் கேளு. அதோட உங்கப்பாவுக்கும் இந்தக் குடும்பத்துக்கும் இனிமே எந்தப் போக்குவரத்தும் இருக்காதுன்னு எழுதிக் கொடுத்துரு." என தீர்மானமாகச் சொல்ல

கூட்டத்தில் இருந்து பெரும்பாலனவர்களும் அதை ஆமோதித்தனர். கதிருக்கு அவமானமாக இருந்தது. தனக்கு சம்பந்தமே இல்லாத ஒரு பிரச்சனையில் இத்தனை பேர் முன்னால் விழுந்து மன்னிப்புக் கேட்கும் இந்த அவமானத்தை என்ன சொல்ல? அவன் தயங்கி நிற்க, "என்னங்கய்யா அநியாயமா இருக்கு. அவங்கப்பா செஞ்ச தப்புக்கு இவன ஊர்ப்பொதுவா விழச் சொல்றீங்க?" மணி ஆத்திரமாகக் கேட்டான். "தம்பி அப்பன் சேத்து வெக்கிற சொத்துல மட்டுமில்ல, பாவத்துலயும் பிள்ளைக்கு பங்கு இருக்கு, மன்னிப்புதான கேக்கச் சொல்றோம். ஒன்னும் கொறஞ்சு போகாது. கேக்கச் சொல்லு." என விடாப்பிடியாக அவர் சொல்ல கதிர் இனி வேறு மார்க்கமில்லையென எல்லோருக்கும் பொதுவாக விழுந்து கும்பிட்டான். கூட்டத்தில் சிலர் களைந்து செல்ல அந்த வீட்டிலிருந்து ஒரு சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து குடுத்தார்கள். பகையை முடித்துக் கொள்வதற்கான சம்பிரதாயமான ஒப்பந்தம் அது. வாங்கிக் குடித்த கதிரின் உடலெங்கும் அந்த நீர் கடும் நஞ்சாய் இறங்கியது.

இரண்டு நாட்களுக்குப் பின் சிறையில் மனுப்போட்டு விஜி அண்ணனைப் பார்க்கச் சென்றவன் நடந்த எல்லாவற்றையும் சொன்ன போது அவருக்கும் கோவம். "நீ சொல்லித்தாண்டா எனக்கும் இதெல்லாம் தெரியுது. அந்தாளு எந்த நேரத்துல என்ன செய்றாருன்னே கண்டுபிடிக்க முடியல. அதும் இப்ப தொழில் கைக்கு வந்த

துல இருந்து ஆட்டம் எல்லையில்லாம போயிட்டு இருக்கு.” என வருத்தப்பட்டார். “கண்டிச்சு சொல்லுண்ணே. ஏற்கனவே கொலவெறில இருக்கேன். பழி தீக்க நானே என்ன வேணும்னாலும் செய்வேன். சரக்கு வந்தாதான ஆட்டம். கொஞ்ச நாளைக்கு எதுவும் வராது. அந்தாளுக்கு இனி பரோல் லீவும் எடுக்கப் போறதில்ல. நான் சொன்னேன்னு சொல்லு.” ஆத்திரத்தோடு சொல்லி விட்டு வந்தவன் இரண்டு மாதங்களுக்கும் மேல் சரக்கெடுக்கச் செல்லவில்லை. மணு போட்டு சிறையிலும் போய்ப் பார்க்கவில்லை. சிறையிலிருந்து வந்த எந்தக் கடிதத்தையும் பொருட்படுத்தாது அவனுக்குள் ஒவ்வொரு நாளும் ஆத்திரம் வளர்ந்தபடியே இருந்ததே ஒழிய குறையவில்லை. உறங்க நினைத்த போதெல்லாம் தான் இன்னொருமுறை புழுவாய் மாறி அவமானப்பட்ட அந்த நிமிடங்கள் அருவருப்பூட்டி உறக்கம் களைத்தது. இந்த மனிதன் உயிரோடு இருக்கும் காலம்வரை தன்னை அவமானங்களுக்கு பலிகொடுத்தபடியே தான் இருப்பான் என்பது உரைத்தது. இதிலிருந்து தப்பிச் செல்லவெல்லாம் முடியாது. நிரந்தரமாக தீர்த்து வைக்க வேண்டும். இத்தனை காலம் எல்லா பிரச்சனைகளின் போதும் தன்னைத் தண்டித்துக் கொண்ட அவன் இந்த முறை அப்படி இருக்க விரும்பவில்லை. ரத்த உறவுகளுக்கு நடுவிலான பகை பலி கொடுக்கும் நாள் வரை தீரப்போவதில்லையென தீர்மானித்துக் கொண்ட

வன் சொரக்காபட்டி பாறைச்சாமி கோவில் திரு விழாவிற்குச் சென்ற நாளில் தான் நினைத்தது நல்லபடியாய் நடந்து முடியவேண்டுமென வேண் டிக்கொண்டு குட்டியாடு ஒன்றை நேர்ந்து விட் டான். கொலையும் ஒரு பிரார்த்தனையென்றானது அவனுக்கு. தன்னிடமிருக்கும் இந்த பகை மொத்த பிரபஞ்சத்தையும் சுட்டு வீழ்த்தினாலும் அடங்காது, தன் தந்தையைக் கொலை செய்வதன் மூலமாய் சின்னதொரு ஆறுதலாவது கிடைக்கும். இரண்டு மாதங்களுக்குப்பின் மன்னிப்புக் கேட்டு அழகர் சாமி எழுதின கடிதத்தை அவன் பொருட்படுத்தக் கூட இல்லை. மன்னிப்பதாகக் காட்டிக் கொள்வ தன் வழியாகவும், தொடர்ந்து சரக்கைத் தருவதன் வழியாகவும் தான் இயல்பாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள முடிவுசெய்தான். பகை தீர்த்துக் கொள்ள கொஞ்சம் நிதானமும் காத்திருப்பும் அவசியமான தாகத்தானே இருக்கிறது.

இறந்து கொண்டிருப்பவனுக்கு ஒரு கடிதம்.

இறந்துகொண்டிருந்த தன் சீடர்களில் ஒருவருக்கு பாஸ்ஸுய் பின்வரும் ஒரு கடிதத்தை எழுதினார் :

‘உன் மனதின் சாராம்சம் பிறக்கவில்லை, ஆகவே அது ஒருபோதும் சாகாது. அது அழுகிப் போகக்கூடிய இருப்பல்ல. அது வெறுமை அல்ல, அது வெறும் வெற்றிடமாக இருப்பதற்கு. அதற்கு நிறமும் வடிவமும் கிடையாது. அது இன்பங்களை அனுபவிப்பதில்லை, துன்பங்களில் வேதனைப்படுவதுமில்லை. எனக்குத் தெரியும் நீ மிகவும் நோயுற்றிருக்கிறாய். ஒரு நல்ல ஜென் மாணவனைப் போல, நீ பிணியை நேரே எதிர் கொண்டிருக்கிறாய். துயரப்படுவது யார் என்று மிகச் சரியாக

உனக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், உன்னையே விசாரித்துப்பார் : இந்த மன தின் சாராம்சம் என்ன? அதை மட்டும் யோசி. உனக்கு இனி வேறெதுவும் தேவையில்லை. எதற்கும் ஆசைப்படாதே. முடிவற்ற உன் முடிவு தூய காற்றில் கரையும் ஒரு பனித்துளி போல.'

- ஒரு ஜென் கதை.

சாத்தானின் மனவெளிக் குறிப்புகள்.

அதிகாரம் - 1

1. தன் தாயிடமிருந்து குழந்தைகளைப் பிரிக்கும் நாளிலேயே தகப்பன்மார் எவ ரும் சாத்தானாகிறார்கள். அவர்களின் கீழ் மையினாலே நிகழும் எல்லா அழிவுகளும் பிள்ளைகளையும் கேடுகளை நோக்கி இழுத்துச் செல்கிறது.
2. தன் தகப்பனை கடவுளென நம்பச் சொல் லும் சமூகத்தவனாகிய கதிர், பால்யத்தில் எதிர்கொண்ட துர்கனவுகள் அவ்வளவிற் கும் தகப்பனே காரணம் என்று நம்பினப டியால் அவரை ஒரு நாளும் மரியாதைக் குரியவராய் நினைத்தானில்லை. பொறுப் பற்ற கணவன்மார் குடுமபத்தை சீரழிக்கும் களைகள்.
3. கதிர் வீட்டிலிருந்து விடுதிக்கு அனுப் பப்பட்ட நாளில் கனவுகளில் சந்தோசப்

பட பழகினான். எல்லா சந்தோசங்களும் தற்காலிகமானவை என்பதை பால்யம் உணர்த்திய நாளில் அவனுக்கு கனவுக ளின் மீது வெறுப்புண்டானது. எதையெல் லாம் விரும்புகிறோமோ அதையெல்லாம் வெறுக்க நேரும் சூழல் வருந்தத்தக்கது.

4. பசியால் நிரம்பிய பகலும், பயத்தால் நிரம் பின இரவுகளும் வாய்க்கப்பெற்ற விடு திக் காலத்தில் வெளிச்சம் கூட பாதுகாப் பாய் இருந்ததில்லையென கர்த்தரிடத் தில் அவன் மன்றாடாத நாளில்லை.
5. கர்த்தர் அவனிடம் பேசுவதுண்டு, அவன் பிரார்த்தனைக்கு செவி சாய்ப்பதுண்டு. எல்லா வருத்தங்களையும் நான் நீக் கப் பண்ணுவேன், உன்னை வருந்தச் செய்கிறவர்களுக்கும் சேர்த்து பிரார்த்தி. ஸ்தோத்திரம்' என்பார்.
6. அவன் தன்னைக் கைவிட்ட பெற்றோர் களுக்காய் பிரார்த்தித்தான். அவர்களின் உடல் மன நலனுக்காய் பிரார்த்தித்தான்.
7. பரிசுத்தவான்களுக்கு வருத்தங்கள் நிரந் தரமில்லை. ஒரு புதிய நாளின் அபூர்வ துவக்கமாய் கதிரின் வீட்டிற்கு அழகர்சாமி திரும்பிய போது அவரோடு அவரின் மக னாய் இணங்கிப் போக முடியாத நெருக்க டியிலிருந்தான். அச்சுறுத்தக் கூடிய தோற் றமும், புன்னகைக்க பழகாத முகமும் அவ ரால் யார் மீதும் அன்பாயிருக்க முடியா தென்பதை உணர்த்தியது.

8. எப்போதும் குற்றத்தின் நறுமணம் வீசும் அவர் அவனுக்கு தந்ததெல்லாம் தன் னைப் போன்ற மனிதர்களின் சகவா சத்தை தான். மனிதர்கள் வருவார் கள். மதுவருந்துவார்கள். தர்மசகாயங் கள் குறித்து அவர்கள் ஒருபோதும் பேசிய தில்லை. அந்த வீடு அவர்கள் இளைப்பா றும் விடுதியானது. அப்பா மட்டுமல்ல அவ ரைச் சார்ந்த ஒவ்வொருவருமே புதிர்.
9. பள்ளிக்கூடத்திற்கும் முடிந்ததும் மாலை வேளைகளில் வேலைகளுக்கும் போய்க் கொண்டிருந்த கதிர், அப்போ ஏன் எந்த வேலைகளுக்கும் போவதில்லை யென ஒருபோதும் அம்மாவிடம் கேட்ட தில்லை. அம்மா அவரின் இருப்பை பாது காப்பென நம்பினாள். மாட்டை விடவும் கடுமையாய் உழைக்கும் திராணியிருந்த அவளுக்கு ஆண் துணையை இழக்கும் திராணியில்லை.
10. அவர் நீண்ட காலம் அவர்களோடு இருந் ததில்லை. சில மாதங்கள் அங்கும் சில மாதங்கள் வேறு இடங்களிலுமாய் சுற்றிக் கொண்டிருந்தார். அவர் வருகையை எப் படி முன்னுணர முடியாதோ வெளியேறுத லும் அப்படித்தான்.
11. அவர் வெளியேறும் நாட்களின் இரவுக ளில் விளக்குகள் அணைக்கப்பட்ட சின் னஞ்சிறிய வீட்டிற்குள் பின்னிரவில் அம்மா வெளி உலகத்திற்கு கேட்காதபடி அழுவ

துண்டு. தனிமையின் எல்லா அவஸ்தை களையும் கொப்பளிக்கும் அந்த அழுகு ரலைக் கேட்க நேரும் ஒரு ஆண்மகன் ஒருபோதும் பெண் துணையை விரும்ப மாட்டான்.

12. இல்லற வாழ்வில் பிடிப்பில்லாத மனிதர் களுக்கு திருமணம் ஒரு சாபக்கேடு. அந் தக் கேடு அவர்களையல்ல, அவர்களின் மனைவிமார்களையே சிதைக்கிறது.

13. அழுது பெலவீனப்பட்ட அம்மாவை கதிர் வெறுத்தான். 'அவள் ஏன் ஒவ்வொரு முறையும் அந்த மனிதனை வீட்டிற்குள் அனுமதிக்கிறாள்?; இப்படியான ஒருவ னுக்கு மகனென்று சொல்வதைக் காட்டி லும் தன்னை தகப்பனறியாது பிறந்தவன் என்று சொல்லிக் கொள்வதில் ஆறுதல டைந்தான்.

14. மழையை மழையென்று உணர முடிவ தைப் போல், வெயிலை வெயிலென உணரமுடிவதைப் போல் பரிசுத்தமான அன்பும் அருகாமையினாலும் தீண்டுத லிலும் தான் நிஜமாகிறது. பெற்றோர் என் னும் வழியில் தன்னை அன்பு மிகுதியில் அவர்கள் ஒருபோதும் தீண்டியதில்லை என்னும் ஏக்கம் கதிருக்கு எப்போதும் உண்டு.

15. தன் தகப்பனை கொலை செய்யும் இடி பஸின் கதையை ரோஸி ஆண்ட்டி தான் முதலில் அவனுக்குச் சொன்ன

வள். வாழ்வின் மீதான கசப்புகளை ஒரு தன் தகப்பனைக் கொல்லுவ தின் வழியாக கடந்து செல்ல முடியு மென நம்பினான். தங்களின் அசிரத் தையினால் பிள்ளைகளைக் கைவிடும் தகப்பன்மார்கள் ஆரோக்கியமாய் இருக் கிறார்கள். எப்போதும் தங்கள் நலன் குறித்து அக்கறையும் கவலையும் அவர் களுக்குண்டு. தின்று கொழுத்த குதிரை யென உடல் திமிறி எப்போதும் காமத் தின் தகிப்பு மிக்க கண்களோடு அலை யும் அப்பாவை பார்க்கும் பொழுதுகளில், மெலிந்து கழுத்து எலும்புகள் துருத் திக் கொண்டிருக்கும் தன்னைத் தானே சபித்துக் கொள்வான். யாரெல்லாம் தன் மீது வன்முறையை பிரயோகிக்கிறார் களோ அப்போதெல்லாம் தன் தந்தை யைக் கொலை செய்வதாகவே நினைத் துக் கொள்வான். பதி மூன்று வயதிற்குள் ளாக பல்லாயிரம் முறை அவன் மனம் அவரை கொலை செய்திருந்தது.

16. தந்தையைக் கொல்லுதல் பாவமென நீதிமொழிகள் வலியுறுத்தின. பாவங்கள் வழியாகவே பிறப்பு முழுமையடைகிற தென சமாதானம் செய்துகொண்டான்.

அதிகாரம் - 2

1 மேலும் அவன் விளங்கிக் கொண்டது,, பாவத்தை விதைக்கிற ஒருவன் அதையே அறுவடை செய்கிறான். சின்னதாய் விதைக்கும் யாவும் சிறிய விளைச்சலாகவும், பெரியதாய் விதைக்கிற யாவும் பெரியதாகவும் விளைகிறது.

2. அப்போது, பதிமூன்று வயது கதிருக்கு, வலது புறம் பத்து வீடுகளும் இடது புறம் பத்து வீடுகளுமாய் உயர்ந்த இரும்புக் கதவுகளுக்

குள் இருந்த காம்பவுண்ட்டில் தனித்திருந்த மாடி வீடு அவர்களுடையது. பல வருடங்க ளுக்கு முன் கட்டப்பட்ட அத கல் வீடுகளெங் கும் சுண்ணாம்பு உதிர்ந்து முதுமை எய்தியி ருந்தன.

3. ப்ரியங்களை பகிர்ந்து தந்த ஸ்திரீக ளால் நிரம்பிய அந்த உலகில் தன்னை பாக்கி யவானாய் உணர்வான். பசி குறித்து விசனப்ப டாதிருக்கும் படி அவர்கள் உணவளித்தனர். இரவென்றும் பகலென்றும் பாராமல் கதைக ளால் நிரம்பிய அந்த நாட்கள் அவனுக்கு தற் காலிக விடுதலை.

4. அப்பாவும் அவரின் சினேகித மார் களும் வருவதுண்டு. அந்த மாடியின் திறந்த வெளி இரவுகளில் மதுவருந்துவதற் கும், உறங்குவதற்கும் தோதாய் இருந்தது. மற்ற வீட்டுக்காரர்கள் எவரும் அவர்களைப் பொருட்படுத்துவதில்லை.

5. தன் மனைவியோடு பிணக்காயிருந்த செல்வம் என்பவன் அவ்வப்போது அப்பா வோடு வந்து மதுவருந்துவதுண்டு. வறுத்த கோழி மணக்க அவர்கள் இரவுகளில் முரட் டுக் குரலில் பேசிக் கொள்வதைக் கேட் கும் எவருக்கும் அருவருப்பாயிருக்கும். கொச் சையான வார்த்தைகள் மொத்த மதுவையும் குடித்த போதையில் பெண்களின் உடல் நுகர மட்டுமேயானதென பெருங்குரலில் சொல் லும்.

6. வீட்டின் பின்புறமிருந்த பழைய வீட்டின் மூன்றாவது மாடியில் பல வருடங்கள் முன் ஒரு பெண் தற்கொலை செய்துகொண்டாள் என்பதால் எப்போதும் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அந்த அறையும் இவர்கள் வீட்டைப் பார்த்தது போல் இருக்கும் அந்த ஜன்னலும் அமானுஷ்யமான ஒரு அச்சத்தை ஏற்படுத்தும். இரவில் மூத்திரம் பெய்கையில் அந்த வீட்டின் மஞ்சள் நிற வர்ணம் அடிக்கப்பட்ட சுவர்களை கவனித்துவிடாதபடி கவனமாய் தவிர்க்க கதிர் முய்ல்வான். இறந்த பெண்ணின் நீண்ட கூந்தல் இரவுகளில் அந்த வீட்டின் சுவர்களெங்கும் அலைவது போன்ற அச்சம்.

7. அப்பாவுக்கும் அவரின் சினேகிதர்களுக்கும் பேய்கள் குறித்த அச்சமேயிருப்பதில்லை. அவர்கள் இரவுகளுக்கு அஞ்சாதவர்களாகவும் பாவங்களுக்கு பழகினவர்களாகவும் இருந்தவர்கள்.

8. தன்னைச் சார்ந்தவர்களுக்கு துரோகிக்கும் எவர் ஒருவரும் பாவிகளே என கதிர் தீர்க்கமாய் நம்பினான். துரோகித்தல் தான் மனிதன் தன் அழிவை நோக்கித் தூவும் முதல் விதை.

9. பின்னொரு நாள் செல்வமும் அவன் மனைவியுமாய் வீட்டிற்கு வந்தபோது, மது வருந்திய அவன் நட்சத்திரங்கள் தன்னை கவனிக்கிற பிரக்ஞையின்றி உறங்கிப் போக, கதிரின் அப்பாவும் செல்வத்தின் மனைவியும்

அவனருகிலேயே உறவு கொண்டனர். இர வின் சாட்சியாய், பின் வீட்டின் மஞ்சள் நிற சுவர்களெங்கும் கூந்தல் அலைபாயும் இறந்த பெண்ணின் சாட்சியாய், நட்சத்திரங்கள் மற் றும் வீட்டைச் சூழ்ந்திருந்த வாதா மரம், மற் றும் வேப்ப மரங்களின் சாட்சியாய் நிகழ்ந்த அந்த உறவின் போது மூத்திரம் பெய்ப்வதற் காக வெளியே வந்த கதிர், இரண்டு முரட்டு எருமைகள் யுத்தம் செய்வதைப் பார்த்தான்.

10. அதிகாலையில் நிர்வாணமாய் தன் மனைவி அழகர்சாமியின் உடலோடு பிணைந்து கிடப்பதைப் பார்த்த செல்வம் அவள் இத்தனை காலம் துரோகிக்க கார ணமான ஆண்மகன் இவனே எனப் புரிந்து கொண்டு, உறக்கத்தில் இருந்தவளின் மீது எட்டி உதைத்தான். ஊர் ஆழ்ந்த உறக்கத்தி லிருந்த அந்த அகால வேளையில் களைந்த தன் உடையை சரி செய்து கொண்டவளாய் அந்தப் பெண் அங்கிருந்து தப்பித்து ஓடினாள். கரைச்சல் சத்தம் கேட்டு கீழ் வீட்டுக்காரர் கள் ஓடிவர, கதவைத் திறந்து பார்த்த கதிரும் அவன் அம்மாவும் ஸ்தம்பித்துப் போயிருந்த னர். உடலில் சிறு ஆடைகள் மட்டுமே சுற்றியி ருந்த இரண்டு ஆண்கள். அந்த நேரத்திற்கு பொருந்தாத வன்முறை. தப்பிச் சென்ற பெண் நடந்ததை ஊகிக்கச் செய்திருந்தாள். செல் வத்திற்கும் அழகர்சாமிக்குமான சண்டையில் செல்வம் சராமாரியாக வெட்டப்பட, அரை உயிராய் அப்படியே மயங்கினான்.

11. அத்தனை காலம் இல்லாத ரத்தச் சுவ டுகளோடு அந்த நாள் விடிந்ததை பாரதி தெரு வியப்போடு பார்த்தது. சந்தோசங்களை, கொண்டாட்டங்களை மிக அரிதாக சண்டை களைப் பார்த்துப் பழகிய அந்த வீதியில் நிகழ்ந்த முதல் கொலை. பக்கத்து வீடுகளில் கூட நிறைய பேர் உறக்கம் களைந்து எழுந்து வந்திருந்தனர்.

12. முன்னும் அனேக குற்றங்களுக்கு பழகின அழகர்சாமி, தன் மனைவியிடமும், கதிரிடமும் இந்தச் சூழலை எப்படி எதிர் கொள்ள வேண்டுமெனச் சொல்லாமலேயே அவசரமாக தப்பித்துச் செல்ல, தன் முன் னால் வெட்டப்பட்ட மனிதனைப் பதட்டத் தோடு பார்த்துக் கொண்டிருந்த கதிர் அச்சத் தில் நின்ற இடத்திலேயே சிறுநீர் கழித்துவிட் டான்.

13. மிச்சமிருந்த உயிரோடு துடித் துக் கொண்டிருந்த மனிதனின் குருதியிலும் முகத்திலும் மெல்லிய அதிகாலை வெளிச்சம் பரவத் துவங்கிய போது அவன் "கதிரு கொஞ் சம் தண்ணி குடுய்யா." என உயிரைப் பிடித்துக் கொண்டு அனத்தினான்.

14. இறந்து கொண்டிருக்கும் ஒரு மனி தனைப் பார்க்க வேண்டாமென எவ்வளவு தவிர்த்தும் கதிரால் முடியவில்லை. கண்க ளும் மனதும் குருதி கசிந்த அவனின் இறு திக் கனங்களை கவனமாகப் பார்த்தன. அரு கில் செல்ல வேண்டாமென எவ்வளவு தடுத்

தும் கேட்காதவனாய் ஒரு சொம்பு நிறைய தண்ணீர் எடுத்துச் சென்று அவரின் கையில் கொடுத்தான். சொம்பை பிடிக்க முடியாதபடி வெட்டப்பட்டு துண்டாகியிருந்த மணிக்கட்டைக் கண்டதும் அவனே அவர் அருந்த ஏதுவாக வாயில் கொஞ்சம் கொஞ்சமாய் நீரை ஊற்ற, பாதிக்கும் மேலான நீர் குருதியோடு சேர்ந்து அறுபட்ட தொண்டை வழியாய் வெளியேறியது.

15. தூர நின்று பார்க்கையிலிருந்த அச்சம் இப்பொழுது குறைந்து கதிர் நிதானமானான். ஏமாற்றப்பட்ட வேதனைகளோடு செத்துக் கொண்டிருந்த மனிதனின் துர் கனவுகள், வன்மம் யாவும் அவன் கண்களில் நீராய்க் கொப்பளிக்க, அவரின் கண்களை வேதனையோடு கவனித்த கதிர் அந்த வன்மம் யாவும் இனி தனதேயென நினைத்துக் கொண்டான்.

16. இறப்பு அந்த மனிதனை எளிதில் தழுவவில்லை. தாங்கொண்ணாத வலியிலிருந்து தன்னை விடுவிக்கும் படி கதிரின் பிஞ்சுக் கைகளைப் பிடித்து மன்றாடினான். பதறி ஓடி வந்த அம்மா கதிரை இழுத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றாள். அந்த மனிதன் துரோகித்த மனைவியையும், கொலை செய்த அழகர்சாமியையும் மறந்துவிட்டு தனது கடைசி மூச்சை நிறுத்தும் படி வானத்தைப் பார்த்து மன்றாடிக் கொண்டிருந்தான். மரங்கள் அசைவதை நிறுத்தியிருந்தன. காற்று அந்த வெளியிலிருந்து காணாமல் போயிருந்தது.

17. காவல் துறையினரும், அரசு மருத்து வமனை ஆட்களுமாய் வந்து அவனுடலை அள்ளிக் கொண்டு போனபோதும் அவனால் மிகத் தெளிவாக பேச முடிந்தது. மருத்துவ மனையின் எந்த சிகிச்சைகளையும் எதிர்பா ராத அவன் இறக்கும் முன்பாக தன் சாவுக்கு காரணம் அழகர்சாமியென அழுத்தமாக வாக் குமூலம் கொடுத்திருந்தான்.

18. இப்படியாக இன்னொரு கொலைக் குற் றத்தில் பங்கெடுத்துக் கொண்ட அந்த மனி தன் இந்த முறை அதற்கான விளைச்சலை தன் குடும்பம் அறுக்கும்படி செய்துவிட்டிருந் தான்.

அதிகாரம் - 3

1. துர்குணரும், பொல்லாத மனுஷருமான அழகர்சாமியின் சூழ்ச்சியால் அன்றைய காலை வேளையில் கதிரும் அவனது அம்மாவும் விசாரணைக்கென கைது செய்யப்பட்டார்கள். அந்த வீதியும் மக்க

ளும் இவர்களை பாவிகளாய் பார்த்தப டியால் தனக்கிருந்த இந்த முகத்தையும், தகப்பனால் ஆன உடலையும் வெறுத் தான்.

2. காவல் நிலையத்தின் லத்திகளுக்கு பெண்கள் குழந்தைகள் என்கிற பேதமில்லை. "எல்லோரும் சேந்து தான கொல செஞ்சீங்க?" என்னும் துவக்க கேள்விக்கு பதில் எதிர் பார்த்து போலிஸ்காரர்கள் இடைவிடா மல் அடித்தனர். முதலில் முழங்கால் களுக்குக் கீழும் பின்பு கைகளிலும். அவன் அலறினான். மெலிந்து எலும்புக ளும் கொஞ்சமே சதையுமிருந்த அவன் அம்மா அலறவும் தெம்பில்லாமல் மயங் கிப் போனாள்.
3. இறந்த மனிதனின் குருதி தேம்பிய கண் களை நினைத்த பொழுதெல்லாம் அவ னுக்கு குமட்டிக் கொண்டு வந்தது. அப் போதும் அடித்தார்கள். கேள்வி இப் பொழுது உங்கப்பன எங்கடா? என திரும்பிய போது நிஜமாகவே அதற்கான பதில் தெரியாத கதிர் அப்பாவியாய் தெரியாதென்றான். "பொய்யி, பொய்யி இந்த வயசுலேயே பொய்யி.." என அவன் கால் விரல்களை ஒரு போலிஸ் காரர் தன் பூட்ஸ்களால் நசுக்கினார். அவன் அலறித் துடித்த போது அரு

கில் இருந்த டேபிளில் வலி தாளாமல் சாய்ந்து விழுந்தான்.

4. இந்த பிறப்பு எத்தனை கேவலமான தென மனம் பேதலித்துக் கிடந்தவன் கடவுளர்களை, அவர்களின் போதனை களை நிந்தித்தான். எல்லா நம் பிக்கைகளும் போலியானவை. வஞ் சிக்கப்பட்டவர்களுக்காக எந்தக் கட வுள்களும் மனமிரங்குவதில்லை. பாவி கள் சுதந்திரமானவர்களாகவும் நியா யவான்கள் தண்டிக்கப்படுகிறவர்களாக வும் விதிக்கப்படும் இந்த நீதி தான் எத்தனை அவமானகரமானது. வலியி லிருந்து, போலிஸ்காரர்களின் உதைக ளில் இருந்து தற்காலிகமாக மறத்துப் போகும் வரத்தைக் கூட கடவுள் தராமல் போனதென்? தேம்பி அழுதவனுக்கு பசி வயிற்றுக்குள் புழுக்களாய் நெளிந்தது.

5. கேள்விகள் இப்பொழுது அனேகமா கின. "செல்வம் கொண்டு வந்த காச எல்லாம் எங்க? நீங்கதான திருடினீங்க?" உங்கப்பன் காசோட எங்க ஓடினான்?" இது மாதிரி இன்னும் எத்தன பேர கொல பண்ணி இருக்கீங்க?" ஒரே நாளில் அவர்கள் தேர்ந்த குற்றவாளி களின் வரிசையில் சேர்க்கப்பட்டார்கள். இல்லையென்று சொல்லும் போதெல் லாம் லத்திகளும் பூட்ஸ்களும் அவனு டலை பதம் பார்த்ததால் அவன் பேசவே

பயந்தான். கால்சட்டையை கழற்றிவிட்டு கைகளைப் பின்னால் கட்டி ஒரு மூலையில் குத்த வைத்து உட்காரச் சொன்னார்கள். இரண்டு கெண்டைக் கால்களிலும் லத்தியால் அடித்ததில் ரத்தம் கட்டிப் போயிருந்ததால் சில நொடிகளிலேயே அப்படி உட்கார முடியாமல் வலியில் அலறினான். எல்லோருக்கும் முன்பாக தன் மகன் நிர்வாணமாக உட்கார வைக்கப்பட்டிருந்த வலிதாளாமல் கதிரின் அம்மா கதறினாள். ஒரு போலிஸ்காரன் அவள் முதுகில் எட்டி உதைத்தான்.

6. அவர்களின் சாட்சியை ஏற்றுக் கொண்டு, அவர்களை சத்தியமானவர்களென அங்கிருந்து வெளியே அனுப்ப ஒருவரும் முன் வந்திருக்கவில்லை.
7. பக்கத்து வீட்டுக்காரர்களும், இறந்தவனைப் பார்த்தவர்களுமாய் வந்து சாட்சி சொன்னார்கள். வாக்கு மூலங்கள் எழுதப்பட்ட இடைவெளியில் இவர்களுக்கு அடி விழாமல் இருந்ததால் அந்த இடைவெளியில் வலி மறக்க உறங்கினான். சார்லஸ் மாமா, கீழ் வீட்டிலிருந்த கான்ஸ்டபிள் ரங்கராஜ், ஹரி, பூக்காரர் மாதவன் என 16 பேர் சாட்சியளித்தார்கள்.
8. இத்தனை காலம் அன்பு காட்டின விசுவாசத்தில் சார்லஸ் மாமா இவனுக்கும்

இவன் அம்மாவிற்கும் உணவு வாங்கித் தந்துவிட்டுப் போனார்.

9. உடல் வேதனை சாப்பட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. எல்லாவற்றிலும் குருதியின் மணம். சாவின் அடையாளங்கள். கையில் அள்ளி உண்ணும் ஒவ்வொரு கவளத்திலும் இறந்த மனிதனின் சதைத் துண்டுகள். பாவம் செய்கிறவன் மட்டுமல்ல அதற்கு சாட்சியமாகிறவனும் அதில் பங்கெடுத்தவனாய் ஆகிறான்.
10. இறந்த மனிதனை புசித்த அந்த பிற்பகல் வாழ்வின் மீதான நிரந்தர அச்சத்தை அவனுக்குள் உருவாக்கியது.
11. கதிரின் மாமாவும் இன்னும் சிலரும் அஸ்தமனத்தில் ஜாமீன் எடுக்க வந்திருந்தார்கள். வழக்கை அப்பொழுதே பேசி சமாதனாம் செய்து கொள்ள காவல் துறையும் கொலை செய்யப்பட்டவனின் தரப்பும் ஒரு தொகையை முன்மொழிந்தார்கள். ஒரு மரணம் இப்பொழுது விலை பேசப்பட்டுக் கொண்டிருக்க, அவர்கள் கேட்கும் தொகையை தரமுடியாத சூழலில் ஜாமீன் எடுத்துச் சென்றனர்.
12. "நல்ல யோசிச்சுக்கங்கய்யா. சாட்சி எல்லாம் ஸ்ட்ராங்கா இருக்கு. மரண வாக்குமூலமும் இருக்கு. இப்பயே முடிச்சுக்கிட்டா எல்லாருக்கும் நல்லது"

என போலீஸ்காரர் எச்சரித்த எதை யும் இவர்கள் பொருட்படுத்தியிருக்க வில்லை.

13. காயங்கள் ஆற நாட்கள் பிடித்தன. வீடு திரும்பிய நாளில் பக்கத்ஹு வீட்டுக்கா ரர்கள் எல்லோரும் இவனைத் தவிர்த் தார்கள். பள்ளிக்கூடத்தில் ஒதுக்கப் பட்டான். அவமான உணர்ச்சி அவன் முதுகின் பின்னால் எப்போதும் மனிதக் கண்களாய் தொடர்ந்தபடியே இருந் தது. ஒரு மாதத்திற்குப் பின் மதுரை நீதிமன்றத்தில் சரண்டரான அப்பா, அந்தக் குடும்பத்தை நிரந்தரமாய் குற் றத்தின் உலகிற்கு பழக்கியதாய் மாற்றி யிருந்தார்.

14. மனிதர்களிடத்தும் இறைவனிடத்தும் விசுவாசமாயிருந்தும் அவன் நித்திய ஜீவனை உடையவனாய் இல்லை. உலகின் வெறுப்பிலிருந்து தப்பிக்க தன்னை வெளிச்சத்தின் கதிர்கள் எட் டாத இருண்ட வெளிக்குள் புகுத்திக் கொண்டான். நினைவென்பது வலி. அங்கு சந்தோசங்கள் இல்லை. நன் மைகள் இல்லை. வெளிச்சமில்லை.

15. பட்டுநூல்காரன் பேட்டைக்கு இடம் பெயர்ந்த போது பழைய நட்பு கள் இல்லை, சந்தோசங்கள் இல்லை. அவனிடம் அதன் பிறகு ஒருபோதும்

சிறுவர்களுக்கான விளையாட்டுத்த னங்கள் இல்லை.

அதிகாரம் - 4

1. ஆரோக்கியமான உபதேசங்களை அவ னிடத்திலே சொல்லாதவர் இல்லை. நீதிமானாய் இரு, புறம் பேசாதே, பிறர் பொருட்களின் மீது விருப்பம் கொள் ளாதே என இங்கும் சிலர் அவனுக்கு நீதிமொழிகளைக் கற்றுக் கொடுக் கத் தவறவில்லை. அவன் வாழ்தலின்

நீதியே தப்பிப் பிழைத்தல் தான் என்று மறுமொழி கூறுவான். வாழ்க்கை குறித்த மனிதர்களின் நம்பிக்கைகள் அவர்கள் ஒருபோதும் பின்பற்றாதவைகளாகவே இருக்கின்றன என்றான்.

2. பட்டுநூல்காரன் பேட்டை வீதியில் துரத்தியடிக்கப்பட்ட ஒரு தலைமுறையின் ஏக்கங்கள் ஒவ்வொரு வீட்டின் சுவர்களிலும் கேவி அழுதுகொண்டிருந்தன. பாவங்களை பொருட்படுத்தாமல் இந்த மனிதர்கள் சந்தோசமாய் இருந்தார்கள். அம்மா வேலைக்குப் போனாள். அதிகாலையில் நீச்சத் தண்ணீர் குடித்துவிட்டு தன் குட்டைக் கால்களை பரப்பி நடந்து செல்லும் அவளுக்கு போலிஸ்காரர்களிடம் வாங்கிய அடி கால்களில் நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.
3. வழக்கு நடந்து கொண்டிருந்தது. ஜாமீனில் விடுதலையான கதிரின் அப்பா தற்காலிகமாய் வீட்டிலிருக்க, இரண்டாவது குற்றவாளியாய் குற்றப்பத்திரிக்கையில் பெயர் சேர்க்கப்பட்ட கதிரின் அம்மாவைத் தேடி ஒருநாள் போலிஸ்காரர்கள் அங்கு வந்தார்கள்.
4. "அப்பவே பேசி முடிச்சுக்கலாம்னு சொன்னேன், கேட்டீங்களா?" என தேடி வந்த போலிஸ்காரனின் குரல் இளக்காரமாய் வம்பிழுத்தது. பள்ளிக்கூடம் கிளம்பிக் கொண்டிருந்த கதிர் அந்த

மோசமான காலையில் என்ன செய்வ தெனத் தெரியாமல் உறைந்து போய் நின்றான். போலிஸ்காரர்களின் லத்தி அடிகளும் பூட்ஸ் கால் மிதிகளும் நினைவுக்கு வர, அம்மா நடுக்கத் தோடு சொம்பில் நீச்சத் தண்ணீர் எடுத் துக் குடிக்கப் போனவள் கைகளில் சொம்பை பற்றிக் கொள்ள முடியாமல் கீழே தவறவிட்டாள். "பயப்படாதம்மா அடிக்க மாட்டோம். நேரா கோர்ட்டுக் குத்தான் கூட்டிட்டுப் போவோம்" என போலிஸ்காரன் அவளின் அச்சத்தைப் புரிந்து கொண்டு சொன்னான்.

5. வீதியில் இருந்த எல்லோரும் வாசலில் குடி தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த தால் போலிஸ்காரர்கள் கூட்டிச் செல் லும் போது பொங்கி எழுந்த கண் ணீரைக் காட்டிக் கொள்ள முடியாமல் அம்மா தலை குனிந்தபடியே சென் றாள். வீதி எல்லை வரை தொடர்ந்து சென்ற கதிரை போலிஸ்காரன், "தம்பி நீ போய்யா." என துரத்தினான். இதற்குப் பிறகு என்ன செய்வதெனத் தெரியாத அச்சத்தில் கதிர் வீட்டுக் கதவை சாத் திக் கொண்டு உள்ளேயே உட்கார்ந் தான். நீண்ட நேரத்திற்குப் பிறகு அன்று கணிதத் தேர்வு என்பது நினைவுக்கு வர, பசியில் கண்கள் சொருகி மயக்கம் கண்டது.

6. யாரும் அவனிடம் எதும் விசாரிக்க வில்லை. வீட்டிலிருந்து வெளியேற கூசி னான். "அந்தப் பொம்பள தொழில் எதும் செஞ்சிட்டு இருந்துச்சா? எதுக்கு போலிஸ் கூட்டிப் போறாங்க?" என பக் கத்து வீட்டில் பால்க்கார அம்மா பேசு வதைக் கேட்டு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான். நள்ளிரவிற்கு பக்கமாய் முற்றிய போதையில் வீடு திரும்பிய அழ கர்சாமி "என்னடா கொம்மால போலிஸ் புடிச்சிட்டு போயிருச்சா.. ஒன்னும் கவ லப்படாத மூணு நாலு மாசம் கழிச்சு சாமின் எடுத்துக்கலாம்" என சொல்லி விட்டு நடு வீட்டில் கால்களையும் கைக ளையும் பரப்பிக் கொண்டு படுத்து உறங் கிப் போனார்.

7. ஒரு வீடிருக்கிறது. பெயருக்கு அப் பாவென இந்த மனிதர் இருக்கிறார். ஆனால் இன்னும் நான்கு மாதங்க ளுக்கு தான் அடிமைதான் என கவ லைப்பட்டுக் கிடந்தவனை ஆறுதல் படுத்தியவன் மாரி மட்டுமே. அடுத்த நாள் காலை அவனுக்கு உணவ ளித்து பள்ளிக்கூடம் அனுப்பி வைத் தான். போலிஸ்காரர்கள் தந்த அச் சம் குறையாமல் நடுங்கிக் கொண் டிருந்தவனுக்கு பள்ளிக்கூடம் கூடு தல் பயம் தந்தது. எந்தக் காரணங்க ளையும் விசாரிக்க தயாராய் இல்லாத

கணக்கு வாத்தியார் கையில் கிடைத்த எல்லாவற்றையும் கொண்டு அவனை அடித்தார். சிலருக்கு சிலரை அடிக்க காரணங்களே தேவைப்படுவதில்லை. இவன் கணக்கு வாத்தியாருக்கும் அப் படித்தான். மற்ற பாடங்களில் தொண் ணூறுகளுக்கு குறையமால் எடுக்கும் இவன் கணக்கில் ஐம்பதைத் தாண்டு வதே அபூர்வம். இதனாலேயே அவன் மீது தீராத ஆழமான வெறுப்பும் கசப் பும் இருந்தது அவருக்கு. அவர் தன்னை அடிக்கும் எதாவது ஒரு நாளில் அந் தாளின் கொட்டையைப் பிடித்து நசுக்க வேண்டுமென இவனுக்கு ஆத்திரமெ ழும். பல்லைக் கடித்து தாங்கிக் கொள் ளுவான்.

8. வலி தாங்காமல் அவன் காரணத்தை சொன்ன போது அந்த வாத்தியார் இவனை ஒரு புழுவைப் போல் பார்த் தார். நசுக்கப்பட வேண்டிய ஒரு கரப் பான் பூச்சியைப் பார்க்கும் மனிதனின் கண்களில் இருக்கும் அருவருப்பு, சக மனிதனைக் கண்டு அருவருப்படையும் மனிதக் கண்களை நோண்டி எடுத்து காகங்களுக்கோ நாய்களுக்கோ திண் ணக் கொடுத்தால் என்ன? ஒரு மனிதனின் தோற்றத்தை வறுமையைக் கண்டு அருவருப்புக் கொள்கிறவன் எத் தனை இழிவானவான். இத்தனை இழி

வான மனிதனா தனக்கு பாடம் கற்பிக்க முடியுமென அந்த மனிதரை அடியாழத் தில் இருந்து வெறுத்தான்.

9. இரண்டு நாட்களுக்குப் பின் ஒரு சாலையோர உணவகத்தில் இரவு வேலைக்கு அவனை அழகர்சாமி சேர்த்துவிட்டார். மாலை ஐந்து மணியி லிருந்து இரவு பதினோறு மணி வரை ஆனந்தா தியேட்டர் வாசலில் இருந்த அந்தக் கடையில் சாப்பிட்ட தட்டுகளை கழுவி வைப்பதும் குடிக்க தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவதும் அவ னுக்கு வேலை. இரவு உணவும் இரு பது ரூபாய்க் கூலியும் அவனுக்கு. அந் தக் கடை அவனோடு படித்த சல்மாவின் வாப்பாவினுடையது. அவர் அன்பான மனிதர். சல்மாவும் அவன் தன் வாப்பா விடம் வேலை செய்வது குறித்து சங் கடப்பட்டிருக்கவில்லை. ஆனால் மற்ற மாணவர்களுக்கு இவன் ஒரு கேலிப் பொருளானான்.

10. அவன் எச்சில் தட்டுகளை கழுவுவ தைப் பார்க்க வேண்டிய சக மாணவர் கள் அடிக்கடி அங்கு சாப்பிட வந்தார் கள். உதாசினப்படுத்தும் போது கிடைக் கும் சந்தோசத்தை சிறுவர்கள் வேறு எதையும் விட அதிகம் ரசிக்கிறார்கள். சகவயதிலிருப்பவனை வீழ்த்த எளிய வழிகளில் ஒன்று அவனை உதாசீனம்

செய்வது. கதிர் எல்லோரிடம் தோற்றுக் கொண்டே இருந்தான். அந்தத் தோல்வி எல்லோரின் மீது பகையையும் வன்மத்தையும் வளர்த்தது.

11. துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து பழகிய பால்யமும், இந்த வளர் பருவமும் அவனை உள்ளூர ஒவ்வொரு நாளும் பலவீனப்படுத்தியபடியே இருந்தது. தனது பலவீனங்களைக் காட்டிக் கொள்ளாதிருக்கும் பொருட்டு பெரிய மனுஷத்தனமான எல்லாக் காரியங்களையும் செய்ய விழைந்தான்.
12. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெரும் நாளில் கூட அதற்காக சந்தோசப்பட்ட சில ஆசிரியர்களுக்கு நடுவில் கணக்கு வாத்தியார் "இத மட்டும் ஒழுங்கா செய்யி, கணக்குப் போடாத." என அதையும் ஒரு காரணமாகக் கொண்டு உதைத்தார். மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கான ஆட்களை தேர்வு செய்கையில் 100 மீட்டரிலும், 400 மீட்டரிலும் முதலாவதாக வந்து அவன் தேர்வு செய்யப்பட, அவனை அனுப்பக் கூடாதென அந்த வாத்தியார் பிடிவாதமாய் மறுத்தார்.
13. மைதானத்திலிருந்து மாலை வகுப்பிற்குத் திரும்பிய மாணவர்களுக்கு இவன் எப்படியும் போட்டிகளுக்குச் செல்வான்

என்ற நினைப்பு எரிச்சலூட்டியது. நண்பர்கள் என்று சொல்லிக் கொள்ள வெகுசிலரே இருந்த அந்த சின்னஞ்சிறிய உலகில் எதற்காக தன் மீது இத்தனை வெறுப்பென யோசித்தே கதிர் நொந்து போவான். பின் வரிசை இருக்கையில் படம் பெயர் சொல்லி விளையாடிக் கொண்டிருந்த சில மாணவர்கள் விளையாட்டினூடே கீழே விழுந்த ஒரு நோட்டை எடுக்கச் சொல்லி இவனைக் கூப்பிட்டனர். "டே எச்சித்தட்டு அந்த நோட்ட எடுத்துக் குட்றா." என பாண்டி சத்தமாகக் கத்த வகுப்பிலிருந்த பெரும்பாலனவர்களும் சிரித்துவிட்டார்கள். அவன் இரண்டாவது முறையும் மூன்றாவது முறையும் அப்படியே கத்த எழுந்த கதிர் அவன் உட்கார்ந்திருந்த டெஸ்க்கோடு சேர்த்து அவன் தலையை அடித்தான்.

14. அந்த வகுப்பறை அப்படியான எதிர்வினையை எதிர்பாராததில் மலைத்துப் போனது. மண்டைப் பிளந்து ரத்தம் கொப்பளித்த பாண்டியை சில மாணவர்கள் தூக்கிக் கொண்டு தலைமையாசிரியர் அறைக்குச் சென்றார்கள். கதிர் முதல் முறையாக ஆழ்ந்த நிம்மதியோடும் சந்தோசத்தோடும் தனது இருக்கையில் உட்கார்ந்து கொண்டான். அவ்வளவு நாட்களும் அவன்

மீதிருந்த கேலிப்பார்வைகள் இப்பொழுது அச்சமாக மாறியது.

15. தலைமையாசிரியர் அறை வாசலில் கதிரை ஆசிரியர்கள் மாறி மாறி அடித்தார்கள். அவன் அந்த வலியைப் பொருட்படுத்தவில்லை. "பாருங்க ஸார் எவ்வளவு தெனாவெட்டுன்னு, நாம இவ்ளோ அடி அடிக்கிறோம். அசஞ்சு குடுக்க மாட்டேங்கறான்." கணக்கு வாத்தியார் மாட்டிக் கொண்ட தன் பகையாளியை வதம் செய்யும் முடிவோடு இவனை குச்சிகளால் பிளந்தார். "இந்த வயசுலயே என்ன தெனாவெட்டு. நீயும் உங்கப்பன மாதிரிதான் வரப் போற. இப்பவே தோல உரிச்சா தான் ஒழுங்கு வரும்.." பேசியபடியே விடாமல் அடித்தார். அவனுக்கு உடல் வலித்து ஓய்வுக்காக கதறியது. வலி தாள முடியாமல் இப்பொழுது அங்கும் இங்குமாக அவன் ஓட அவனை வென்றுவிட்ட மகிழ்ச்சியில் அந்த வாத்தியார் விடாமல் அடித்தார்.

16. கைகள் வீங்கிப் போயிருந்தன. பின்புறத்தில் ஏற்கனவே கிழிந்து போயிருந்த பேண்ட் கூடுதலாக கிழிந்து தொங்கியது. அடித்தவரின் கம்பை பிடித்து நிறுத்திய கதிர் "தேவ்டியா மவனே நான் திருப்பி அடிச்சா நீ செத்துருவடா பொண்டுகா" என ஆத்திரமாகக் கத்

தினான். தனது ஆண்மையைக் கொச்சைப் படுத்திவிட்டான் என்கிற ஆத்திரத்தில் அவர் முன்னை விடவும் மூர்க்கமாக அவனை அடித்தார். தப்பித்தால் பொதுமென்கிற முடிவோடு கதிர் அங்கிருந்து வேகமாக ஓடினான்.

17. பதினைந்து நாட்களுக்குப் பிறகு மன்னிப்புக் கடிதங்கள் கொடுத்து கணக்கு வாத்தியாரிடமும் மன்னிப்பு கேட்டபின் அவனை பள்ளிக்கூடத்தில் அனுமதித்தனர். வழக்கமாக அவன் உட்காரும் இடத்திலிருந்து வேறு இடத்தில் உட்கார வைக்கப்பட்டான். அவன் குறித்து கேலி பேச இப்போது அந்த வகுப்பில் ஒருவருக்கும் தைர்யம் இருந்திருக்கவில்லை.

அதிகாரம் - 5

1. 'நானென்பது கொலை செய்யப்பட்ட நானல்ல' என செல்வம் அவன் கன வில் வந்து தூக்கம் களையும் இரவுகளில் எல்லாம் பனிக்கட்டியில் உறைந்த மீன் தனிமை மிகுதியில் தற்கொலை செய்து கொள்ளத் துடிப்பது போல் கதிர் துடிப் பான்.
2. பூமியில் கொல்லப்பட்ட யாவரின் ரத்தமும் அவனிடத்திலே நியாயம் கேட்டது. துரோ கத்த மனிதர்களையும் கொலை செய்யப் பட்ட மனிதனையும் அருகருகே பார்த்த அவன் நீதிபரிபாலனை செய்ய தகுதியு டையவனாய் இருந்தான்.
3. அம்மாவின் சிறைவாசம் இரண்டு மாதங் கள் மூன்று மாதங்களென நீண்டு கொண் டிருக்க, தன்னைச் சூழ்ந்த எல்லா இழி வுகளுக்கும் பழக்கப்பட்டுப் போன கதிர்

வேலை முடிந்த பெரும்பாலான இரவு களை ஆனந்தா தியேட்டரில் கழித்தான். பரந்து விரிந்த அந்த திரையும் அவன் கண்ட படங்களும் வலிகளை மறக்கச் செய்தன.

4. மாரியும் அவன் வீடும் அடைக்கலம் குடுத் தபடியால் தனிமை குறித்த அச்சம் அவ னிடமிருந்து கொஞ்சமே விலகியது. விடு முறை நாட்களில் தனக்குத் தேவையா னதை கதிர் சமைக்கப் பழகினான். மற்ற நாட்களில் பள்ளிக்கூட இலவச உணவு பசியாற்றியது.
5. அம்மாவின் முகம் மறக்கத் துவங்கி யது. எவ்வாறாயினும் வாழ்ந்து தீர்க்க வேண்டுமென்கிற நிர்ப்பந்தம் தன்னைத் தவிர எதுவும் முக்கியமிலை என்ற எண் ணத்தை உருவாக்கியதால் யார் மீதும் அன்பு கொள்வதை தவிர்த்தான். விசுவா சம், நேசம் என்கிற வார்த்தைகள் அர்த் தமற்றவைகளாய்ப் போயிருந்தன. அப்பா அருகிலிருக்கும் ஒவ்வொரு நாளும் அவ ரின் மீதான வெறுப்பு அதிகரித்தபடியே தான் இருந்தது. முற்றிய போதையில் இர வுகளில் அவர் உறங்குகையில் 'நானென் பது கொலை செய்யப்பட்ட நானல்ல கதிர்' என செல்வம் அவனை அனத்தி உசுப்பி விடுவான். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பொருட்களை எடுத்து அழகர்சாமியை கொலை செய்துவிட நினைப்பான்.

6. கடையில் வேலை முடிந்து வீடு திரும்பும் போது சோர்வு இரண்டு தோள்களையும் அழுத்தும். செருப்பில்லாத கால்களோடு வீடு வந்து சேரும் போது குதிகால்களில் இருந்து இடுப்பு வரையிலும் நரம்புகள் வலித்து இழுக்கும். இன்னும் செருப்பில்லாமல் தன் வயதில் நடப்பது தான் மட்டுந்தான் என்னும் நினைப்பு தாங்கொண்ணாத தாழ்வுணர்ச்சியை ஏற்படுத்தும். கோவில்களிலோ பள்ளிக்கூடத்திலோ தனக்கென ஒரு செருப்பை திருடும் தைரியம் அவனுக்கு வந்திருக்கவில்லை. குதிகால்களில் பித்த வெடிப்பு மிகுந்த நீர் படும் போதெல்லாம் நீரோடு குருதி கசியும்.
7. மஞ்சள் விளக்கெரிய திறந்து கிடக்கும் கதவைத் தாண்டி வீட்டின் வாசல் வரை சாராய நெடி நிரம்பியிருக்கும். சாராய நெடியும் சில நாட்களில் அழகர் சாமி எடுத்து வைத்த வாந்தியின் நெடியும் சேர்ந்து ஏற்படுத்தும் அருவருப்பான உணர்ச்சியில் இருந்து மீள்வது எளிதானதல்ல. காலையில் பயன்படுத்திவிட்டு உலர்த்தப் போட்டிருக்கும் துண்டை எடுத்துக் கொண்டு மொட்டை மாடியில் போய் படுத்துக் கொள்வான். அடுத்த நாள் காலையில் அந்த வீடு அப்படி இருக்கிற தென்கிற எந்தக் கவலைகளும் இல்லாமல் அவர் எழுந்து வெளியே போய்வி

டுவார். வீட்டு முதலாளியம்மாவின் வச வுகளைக் கேட்டுவிடக் கூடாதென்கிற கவலையில் அதிகாலையிலேயே எழுந்து போய் குடலைப் புரட்டும் அந்த நாற் றத்தை சுத்தம் செய்வான். சகிப்புத் தன்மைக்குப் பழகுகிறவனுக்கு கொலை செய்தல் ஆக எளிதானது.

8. இந்த வீதியின் இரவுகள் வினோதமா னவை, கொண்டாட்டத்தின் சாபத்திற்கு பழகியிருந்தாலும் இங்கு ஒரு சூன்யம் எப்போதும் கவிந்திருக்கும். பழைய சிப் பாய் ஒருவன் விடுமுறையில் ஊர் திரும் பியிருந்தான். கொஞ்சம் மாட்டிறைச்சியும், நாட்டுச் சாராயமும் வழமையான இரவு உணவாகக் கொள்ளுமவனோடு அழகர் சாமியும் இரவுகளை பகிர்ந்து கொள்ளத் துவங்கினார். மதுவில் நிரம்பிய இரண்டு குரல்களும் பாடும் போது ஆந்தைகள் அலறி ஒளியும். ஆழ்ந்த நித்திரையிலிருக் கும் மனிதர்களின் மீது நிகழ்த்தப்படும் மகா வன்முறை அது.

9. கதிர் அவர் இல்லாத அந்த சில நாட்கள் நிம்மதியாக உறங்கினான். சிலருக்கு சந் தோசம், நிம்மதி, ஆறுதல் எல்லாமே தற் காலிகமானவை தான் போல.

10. உப்புச் சுவையோடிய அவன் மனம் வாழ்க்கை எப்போதும் துவர்க்கும் தன் மையுடையது என தீவிரமாய் நம்பியது. காளை மாட்டின் உருவத்தையொத்த தன்

தந்தையிடமிருந்தே தன் மீதும் இந்த துவர்ப்பு பரவியிருக்கக் கூடுமென தனக் குத் தானே சொல்லிக் கொண்டான். ஒரு அமாவாசை இரவில் கடை விடுமுறை என்பதால் அந்த வீதியிலிருந்த சிறுவர்க ளோடு விளையாடியவன் எப்போதும் போல் மொட்டை மாடியில் படுத்துக் கொண்டான். அந்த மாடியை பெரும் வய லாக்கி, வயலை நாசம் செய்யும் யானைக ளாய் விளையாடிய மற்ற சிறுவர்களும் களைப்பில் அவனோடு ஆழ்ந்து உறங்கி யிருந்தனர். அவன் ஒரு முரட்டு யானை யாய் இன்னும் வயல்களை தன் கனவுக ளில் மிதித்து விளையாடிக் கொண்டிருந் தான். மெல்லிய பனித்துளிகள் அந்த குட்டி யானையின் முரட்டுத் தோல் மீது மழையெனப் பொழிந்து உடலை நனைத் திருந்தது. தன் சாணத்தை தானே மிதித்து விளையாடும் குஷியின் அந்த யானை இன்னும் தன் விளையாட்டிலி ருந்து ஓயவில்லை. சில நிமிடங்களுக்குப் பின் அவனது அந்தப் புதிய வயலில் அவ னுக்கு நன்கு தெரிந்த காளை மாடு புகுந்து அலைந்தது. ஒருபோதும் உறக் கம் கொள்ளாத அந்த காளைமாட்டின் கொழுத்த பின்புறங்கள் அசைவதை பின் னிரவில் பாதி உறக்கத்தின் வழிக் கவ னித்தவன் தன் மீது இரண்டு பாறைகள் கவிழ்ந்த அழுத்தத்தை உனர்ந்தான்.

11. முச்சுவிட முடியாது தவித்த அவன் நாசித் துவாரங்களில் காட்டுப் புழுக்களின் வீச் சம் நிரம்பி வழிய தான் இன்னும் ஒரு சிறு வன் என்று சொல்ல முடியாதவனாய் விழி பிதுங்கி திணறினான். அதே மாதிரியான காளைகள் அவன் விடுதியிலிருந்த நாட் களில் அவன் மீது மிக மோசமான வன் முறையை பிரயோகித்துள்ள நினைவு வர அவனுக்கு வயிற்றில் குடல்கள் எல்லாம் அச்சத்தில் கரைந்து வெளியேறிவிடும் போலிருந்தது. அது கனவில்லை. ஒரு குழந்தையின் மீது ஒருபோதும் நிகழ்த் தப்படவே கூடாத ஆகப்பெரிய வன் முறை. அந்த நிஜம், அந்த நிமிட வலி மனித உறவுகளின் மீது நிரந்தர மாக எழுந்த அருவருப்பு எல்லாமுமாக சேர்ந்து தன்னையே கொல்லும் வலிமை யைத் தரச் சொல்லிக் கேட்டது.
12. முந்தைய இரவின் குரூரங்கள் எதற்கும் தனக்கும் தொடர்பே இல்லை என்ப தைப் போல் நடந்து கொண்ட காளை மாட்டிடமிருந்து தப்பிக்கவே அடுத்த டுத்த நாட்களில் மாரியின் வீட்டில் உறங் கச் சென்றான்.
13. நம் வீடு தான் நம் குழந்தைகளுக்கு பாது காப்பானது என்று நம்புவது எத்தனை பெரிய பொய்.
14. அவன் தன் மீது நிகழ்த்தப்பட்ட வன் முறையை பகிர்ந்து கொள்ளக்கூட ஒரு

வருமில்லாமல் தவித்தான். குறைந்தபட்சம் கற்பகம் கூட அருகிலில்லை. வன் முறைகளை எதிர்கொள்ளும் பருவமா இது? கொஞ்சம் சந்தோசமும், மூன்று வேளை உணவும் இருந்தால் போது மென்று எதிர்பார்க்கும் இந்த எளிய சிறு வனின் உலகம் ஏன் இத்தனை துயர்மிக் கதாகவே இருக்க வேண்டும்.

15. இறந்த காலம் நிகழ் காலம் எல்லாமே துர் சொப்பனம். கழுத்தறுபட்ட பறவையை நீரருந்தப் பழக்க இயலுமா? அவன் கடுந் தாகத்தில் இப்போதெல்லாம் முறிபட்ட தன் கழுத்தை பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.
16. உலகின் மீது, வாழ்வின் மீது எந்த விருப் பங்களும் இல்லை. இந்த இழிந்த வாழ் வும் தனக்குத் தேவைதானா? என மனம் அடித்துக் கொண்டது. நான்காவது மாதம் முடிந்த பின்பும் அம்மாவுக்கு ஜாமீன் கிடைக்கவில்லை. அவன் உறவினர்க ளின் வீடுகளுக்குப் போனான். ஓரிரு நாட்களுக்கு மேல் யாரும் அவனை வைத்துப் பராமரிக்க விருப்பப் பட வில்லை என்பது ஒருவேளை உணவை நிறுத்துவதில் இருந்து புரிந்து கொள்ள முடியாது.
17. வழக்கு விசாரணைக்கு மதுரைக்கு வரும் அம்மாவை பார்க்க போகலாமென்றால் அழகர்சாமியோடு தனியே பயணிக்கும்

துணிச்சல் இல்லை அவனுக்கு. அம் மாவின் முகத்தை முழுவதுமாக மறந்து போனான். அவளை அடையாளம் பார்த் துக் கொள்ள வீட்டில் அவளது ஒரு புகைப்படம் கூட இல்லை. அவளின் பழைய உடைகள், அவள் பயன்படுத்திய பொருட்கள் எதன் வழியாகவும் அவளது நினைவுகளை மீட்டுக்கொள்ள முடிய வில்லை. அம்மா என்று அழும் போது அந்தக் குரல் அந்த வீட்டின் சுவர்களுக் குள்ளேயே அமிழ்ந்து போனது.

18. சபிக்கப்பட்ட தன்னை வெறுத்தவன் ஒரு நாள் தற்கொலை செய்து கொள்ள லாமென முடிவு செய்தான். துணை யிழந்த புறாக்கள் கற்களை விழுங்கி உயரப் பறந்து மரிப்பது போல் கடு மையான வேதனைமிக்க ஒரு சாவு வேண்டும். என்ன செய்யலாம்? உட லில் நெருப்பு வைத்துக் கொள்ளலாமா? வீட்டிற்கு அருகிலேயே இருக்கும் ரயில் ரோட்டில் தலை வைத்துவிடலாமா? ரயி லில் அடிபட்ட உடல்களை சிலமுறை அவன் பார்த்ததுண்டு. தலை நசுங்கி கூழாகி கால்கள் சிதறி உடல் பல துண் டுகளாய் சதைகள் ரயில் ரோட்டில் மனி தர்கள் கழித்து வைத்த மலங்களோடு சேர்ந்து அருவருப்பாய் இருக்கும். தன் இறப்பு அத்தனை அருவருப்பாய் இருப் பதை அவன் விரும்பவில்லை.

19. எளிய வழியாய் அம்மாவின் சேலை யின் உதவியோடு தூக்கிட்டுக் கொள்ள முடிவுசெய்தான். திரைப்படங்கள் இந்த வழியை மனிதர்களுக்குக் கற்றுக் கொடுத்திருப்பதால் அவர்கள் பெரும் பாலும் தேர்ந்தெடுக்கும் முதல் முயற்சி இதுதான். வயிறு நிறைய தண்ணீர் குடித்துவிட்டு இறப்பதற்கு முன்னால் நீண்ட நேரம் கடவுளை வழிபட்டான். மர ஸ்டூலின் உதவியோடு காற்றாடியில் சேலையை முடிச்சிட்டவன் கழுத்திலும் சுருக்கிட்டுக் கொண்டு ஸ்டூலை தள்ளி விட்டான்.

20. தூக்கிட்டு சாவது அத்தனை எளிதான தாய் இல்லை. சேலை கழுத்தை இறுக் கத் துவங்கின சில நொடிகளில் தொண் டைக்குக் கீழிருந்த எல்லாமும் உறிஞ்சு எடுப்பது போல் மூச்சை பிடித்து நிறுத்தி யது. கண்கள் மேல் நோக்கி சொருகிக் கொள்ள நரம்புகள் எல்லாம் சுருட்டிப் பிடித்துக் கொண்ட அவஸ்தையில் குறி தானாகவே விரைத்தது. மரணமும் காம மும் இத்தனை நெருக்கமானவையா? அவனுக்கு தொண்டைக்குழி முழுவது மாக முறிவது போலிருக்க வெளியே எழும்ப முடியாத சப்தத்தை திக்கித் திணறி எழுப்பினான். திரைப்படங்களின் வழி கற்றுக் கொள்ளும் எல்லாவற்றிலும் சில பாதகங்கள் உண்டு. அவை நமக்கு

முழுமையானவற்றை கற்பிப்பதில்லை. அந்தப் பழைய காற்றாடி இவன் சுமையை தாங்காமல் உடைந்து விழ இவனும் கீழே விழுந்தான்.

21. சத்தம் கேட்டு ஓடிவந்த முதலாளி அம்மா அவன் கிடந்த கோலத்தைப் பார்த்து நடந்ததைப் புரிந்து கொண்டு "அய்யயோ என்னயவும் கொலகாரியா மாத்த பாத்துட்டானே. கொலகாரப் பாவி." என வாசலில் கிடந்த விளக்குமாற்றால் அடிக்கத் துவங்கினாள்.

22. இரண்டு நாளிலேயே அந்த வீட்டை காலி செய்தாக வேண்டுமென அவள் ஒற்றைக் காலில் நின்றபோது, மாரியின் அப்பா தான் பேசி சமாதானம் செய்தார். "ஆச்சி அந்தப் பயலோட அம்மா வர்ற வரைக்கும் கொஞ்சம் பொறுத்துக்கங்க. எதுண்டாலும் நாங்க பாத்துக்கறோம்." அவரின் வார்த்தைகளுக்கு ஆச்சி சம்மதிக்க, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவனைப் பார்க்க மாரியும், சல்மாவும், அவளின் வாப்பாவும் வந்திருந்தனர்.

23. "இந்த வயசுல என்ன வந்துச்சுன்னுடா சாகப் போற?" என அவனைத் திட்டிய யாரிடமும் அவனால் காரணங்களை சொல்லி இருக்கமுடியவில்லை. தற்கொலை செய்து கொள்ளும் மனிதன் தன் சாவுக்கு எப்போதும் ஒற்றைக் காரணங்களைக் கொண்டிருப்பதில்லை.

24. காயங்கள் குணமானபோது அழகர்சாமி யின் மீதான கதிரின் வன்மம் ஒருபோ தும் அழிக்க முடியாத ஓவியமாய் முழு மையடைந்திருந்தது. சீக்கிரம் வளர்ந்து பெரியவனாக வேண்டும். கையில் ஒரு கத்தியைப் பிடிக்கும் வலுவும், அந்த மனி தன் தப்பித்துச் செல்ல முடியாதளவிற்கு பிடித்து வயிற்றைக் குத்திக் கிழிக்கும் பல மும் வரவேண்டும். அதற்காகவேணும் வேகமாக வளர வேண்டுமென கடவுளி டம் பிரார்த்தித்தான்.
25. அம்மா ஜாமீனில் விடுதலையானாள். வழக்கு விசாரணை தொடர்ந்தது. இவன் வளர்ந்த போது அடுத்த ஒரு வருடத் திற்குப்பின் அழகர்சாமிக்கு மட்டும் அந்த வழக்கில் ஆயுள் தண்டனை கிடைத்தது. அம்மா குற்றவாளி என்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என விடுதலை செய்திருந்தார்கள்.
26. தனக்குள் வளர்ந்த இந்த பகையை வெறுப்பை தீர்த்துக் கொள்ள இத்தனை வருடங்கள் காத்திருக்க வேண்டுமா வென அழுது புலம்பியபோது கதிருக்கு பதினைந்து வயது.

இளைப்பாறு தல்.

ஆறு நாட்கள் பரோல் விடுமுறை விஜி அண்ணனுக்கு கிடைத்திருந்தது. அவருக்கு இத் தனை காலம் பழக்கப்படாத அச்சமென்னும் உணர்ச்சியை அவரிடம் கதிர் கவனித்தான். தான் வழக்கமாகச் செல்லும் இடங்களுக்கு இந்த முறை அவர் போகவிரும்பவில்லை. கல்லுப்பட்டியிலி ருந்த அவர்களின் பூர்வீக வீட்டிற்கு மலர் அக் காவையும் வரச் சொல்லியிருந்தது. கண்டிசன் கையெழுத்துப் போட முதல்நாள் காலை விஜி யோடு கதிர் விருதுநகர் போலிஸ் ஸ்டேசனுக்கு துணைக்குச் சென்றான். பழக்கமான இன்ஸ்பெக் டரிடம் பேசி ஆறு நாட்களுக்கும் சேர்த்து அன்றே கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். பறக்க விரும்பும் மனிதன் பூமியெங்கும் இருக்கும் எல் லைக் கற்களை நீக்கிவிடவே முயற்சிக்கிறான், அவனது தப்பித்தலுக்கு தடையாய் இருக்கும் எல் லாவற்றையும் ஒரு நொடியில் கடந்து போக வேண்டும். விஜி சூழச்சியின் காரணமாய் வன்மு றைக்குள் மாட்டிக் கொண்டுவிட்டதை இந்த சில நாட்களில் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தான். அழகர்சாமிக்குப் பிறகு தொழிலை தொடர்ந்து

நடத்தவும் சிரமம், விட்டுத் தப்பித்துச் செல்வதற்கு வாய்ப்பில்லை. உடனிருப்பவர்கள் நம்பிக்கையாக பேசுவது போல் தெரிந்தாலும் அவர்களின் நாவிற் கடியில் புரண்டிருக்கும் அவ்வளவும் பொய். ஜாதி அவர்களை இவனுக்குக் கீழ் ஒருங்கிணைய அனு மதிக்கவில்லை என்பதை அவர்களின் உதாசி னங்களில் பலமுறை புரிந்து கொண்டிருக்கிறான். யோசித்துப் பார்க்கையில் அழகர்சாமியும் இவனது தனது தேவைகளுக்காக பயன்படுத்தியிருக்கிறார் என்பது புரிந்தது.

எப்போதும் நிழல் தரும் புளியமரங்க ளடர்ந்த சாலையில் இருந்து சிறிது தொலைவில் இருந்தது அந்த வீடு. மலர் நன்னடத்தை அதிகாரி குறித்து அவனிடம் சொல்லவே கூடாதென சிரமப் பட்டு கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள். மாலை நேரங்களில் தனது வழக்கமான வேலைகளை கவ னிக்க கதிர் மதுரைக்குப் போய்விடுவதால் அவர் கள் இரண்டு பேர் மட்டுமே தனித்திருக்கும் இரவு கள் அச்சமூட்டுவதாய் இருந்தன. அச்சத்தை வெளிப்படுத்திவிடக் கூடாத எச்சரிக்கையில் விஜி இரவு முழுக்க மலரோடு உறவு கொண்டான். அவளை இதன் பிறகு ஒருபோதும் சந்திக்க முடியா மல் போய்விடலாமென்னும் சந்தேகம், சாவு ஒரு நிழலைப் போல் தன்னைத் தொடர்ந்து கொண்டி ருப்பதாக நினைத்தான். "ஏண்ணே ஒரு மாதிரி யாவே இருக்க? உள்ள எதும் பிரச்சனையா?" மூன் றாவது நாள் மதிய உணவிற்குப் பின் கதிர் கேட் டான். விஜி அவனைத் தன்னோடு எழுந்து வரச் சொல்லிவிட்டு முன்னாள் நடந்தான். வீட்டிற்கு அருகிலிருந்த தென்னந்தோப்பில் அந்த நேரத்தில்

ஒருவரும் இருக்கவில்லை. இரண்டு மூன்று நாட்க ளுக்கு முன்பு தென்னம்பிள்ளைக்கு நீர் விட்டிருக்க வேண்டும். மரங்களின் தூரெல்லாம் காய்ந்து போயிருந்தது. வெக்கையில் சுருண்டு கிடந்த பச் சோந்தி ஆள் நடமாட்ட சத்தம் கேட்டு வெருண்டு மரமேறி ஓடியது. கிணற்று மேட்டிற்கு வந்து சேர்ந்த பின் கமலை போடும் கல்லில் உட்கார்ந்து கொண்ட விஜி அச்சத்தில் குலுங்கி அழத் துவங்கி னான். கதிர் ஒருபோதும் அவன் அழுது பார்த்த தில்லை. தன்னை எப்போதும் தைர்யமாய் இருக் கச் சொல்லும் இவன் ஏன் இப்போது அழுது கொண்டிருக்கிறான்? ஓடிப்போய் விஜியின் தோள் களைப் பிடித்துக் கொண்டான். "என்னண்ணே லூசு மாதிரி அழுதுட்டு இருக்க? என்ன பிரச்ச னன்னு சொல்லுண்ணே." யாரிடமாவது எல்லாவற் றையும் கொட்டி அழ மாட்டோமா என தவித்துக் கொண்டிருந்த விஜி, சொல்ல முயன்று முடியாமல் அழுதபடியே இருந்தான். அவனாகப் பேசட்டுமென அமைதியாக அவனருகில் உட்கார்ந்த கதிர் அவ ரின் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டான். "கதிரு கூடிய சீக்கிரம் என்னயக் கொல்லப் போறா னுகடா." தொண்டையில் அடைத்துக் கிடந்த சொற்கள் மரணத்தின் அச்சத்தோடு வெளியேறி யது. "யாருண்ணே? எதுக்கு உன்னயக் கொல்ல னும்?" கதிரும் பதட்டமானான். "உங்க ஐயா ஆரம் பிச்ச தொழில் பகை ல தங்கராசு கேங் ஒரு பக்கம், விருதுநகர் பொங்கல்ல நான் கொன்ன கள்ளிக் குடி காரனோட கூட்டாளிங்க ஒரு பக்கம்னு கொஞ்ச நாளா மாறி மாறி சுத்துப் போட்டுட்டு இருக்கானுங்கடா. ரெண்டு பேருமே வலுவான

ஆளுங்க. பகைய தீத்துக்க எந்த எல்லைக்கும் போவானுங்க. இத்தன வருஷம் யாரோடயும் எந்த பிரச்சனைக்கும் நான் போனதில்லை. எப்போ உங்க ஐயாவோடு சேர்ந்து தொழில் பண்ண ஆரம் பிச்சனோ அப்பவே நிறைய பகைய சம்பாதிச்சிட் டண்டா. எல்லாருக்கும் நன்பனா இருக்கவரைக் கும் எனக்கு இருந்த பாதுகாப்பு இப்போ இல்ல. உங்க அய்யா விடுதலையாகிட்டா இப்ப இருக்க கூட்டாளிங்க கண்டிப்பா கூட இருக்க மாட்டா னுங்க. அதுக்கப்பறம் என் உயிருக்கு எந்த உத்திர வாதமும் இல்லடா." அழுகையினூடே விஜி எல்லா வற்றையும் சொல்ல கதிருக்கு இந்த பிரச்சனையை எப்படிக் கையாள்வதென குழப்பமாக இருந்தது.

ஏன் குற்றங்கள் அல்லது வன்மு றைக்கு தீர்வு கருணையாகவோ மன்னிப்பாகவோ இல்லாமல் இருக்கிறது. மன்னித்தலில் எதுவும் முழுமையடைவதில்லையா? எனில் வன்முறைக் கும் முடிவோ எல்லையோ இல்லைதானே? எதி லிருந்து தப்பித்துக் கொள்ள இப்படி தொடர்ந்து வன்முறைகளை கைக்கொள்ள வேண்டியிருக்கி றது. ஆறுதலும் சொல்ல முடியாமல் தீர்வும் சொல்ல முடியாமல் தனக்குள்ளிருந்த ஏராளமான குழப்பங் களோடு கதிர் தனியாகக் கிளம்பிப் போய் மது வாங்கி வந்தான். குடிப்பதற்கு ஏதுவான சூழல் அல்ல அது. "இல்லடா உள்ள இருக்கறத விட வெளிய நான் ரொம்ப பாதுகாப்பா இருக்கனும். இப்ப எனக்கு ஏதாச்சும் ஆச்சுன்னா பரோலுக்கு அப்ளை பண்ணதால மலருக்கும் எங்க வீட்ல இருக்க எல்லோருக்கும் பிரச்சன." அவர் தவிர்க்க நினைத்தார். "இல்லண்ணே குடி. நான் கூட இருக்

கன் ல. ” அவரின் அனுமதியை எதிர்பாராமல் அவ
ருக்கும் சேர்த்து ஊற்றிக் கொடுத்தான். அவர்கள்
இருவரும் எதையுமே சரியாகச் செய்யாதவர்கள்,
யாருக்கும் எந்த தீங்குகளையும் வலிய சென்று
செய்ய நினைக்காதவர்கள். நன்மைகளின் எந்தப்
பலன்களையும் அனுபவித்திராத அவர்கள் இருவ
ரும் வயதுகளில் உடலில் வேறு வேறானவர்களாய்
இருந்தும் வாழ்முறையில் ஒரே மாதிரியானவர்க
ளாய் இருந்தார்கள். அவர்களுக்கான இந்த உற
வும் அன்பும் அப்படி உருவானதுதான். வெளியே
பரவத் துவங்கிய குளிரின் குரல் அச்சத்தை அவர்க
ளிடமிருந்து பிடுங்கி எறிந்தது. மீனா இரண்டொரு
முறை கதிரை அலைபேசியில் அழைத்துப் பார்த்
தாள். அவன் யாருடைய அழைப்பையும் எடுக்க
வில்லை. விஜியைத் தவிர்த்து யாருடைய பிரச்
சனைகளும் அவனுக்கு முக்கியமில்லையெனத்
தோன்றியது. இருளில் குடித்துக் கொண்டிருந்த
இருவரையும் தேடி யாரோ நெருங்கி வரும் சத்
தம் கேட்டதால் கதிர் திரும்பிப் பார்த்தான். மலர்
அக்கா. முகத்தில் அச்சமும் கோவமும். “குடிக்க
வேணாம்னு படிச்சு படிச்சு சொன்னேன் ல விஜி.
ஏன் இப்டி பன்ற?” நிதானம் இழந்துகதிர் எதையும்
சொல்லிவிடுவானோ என்கிற அச்சம் அவளுக்கு.
”சும்மா இருக்கா அண்ணன திட்டாத. நாந்தான்
குடிக்க சொன்னேன்.” கதிர் அவளை பேசவிடா
மல் மறித்தான். “நீ மொதல வீட்டுக்கு கிளம்புடா.
உங்கம்மா எனக்கு நாலஞ்சு வாட்டி ஃபோன் பண்
ணிருச்சு. அது ஃபோன் பண்ணினா நீ எடுக்க மாட்
றியாம். திமிராடா?” அவனை வம்படியாக பிடித்து
எழுப்பிவிட்டாள். சிரித்தான். “வீட்டுச் செலவுக்கு

காசில்லைன்னா பிள்ள நெனப்பு வந்துரும் எங் கம்மாவுக்கு. மத்த நாள் லாம் இப்பிடி பொழப்பு பொழைக்கிறதுக்கு மருந்தக் குடிச்சு சாகலாம் டான்னு திட்டும். காசு கேக்கற அன்னிக்கி மட்டும் வாயத் தொறக்காது." அவள் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டு இன்னொரு கையால் விஜியை யும் தன் பக்கமாக இழுத்துக் கொண்டான். மூவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

"டேய் நானும் ரொம்ப நாளா சொல்லனும்னு நெனச்சிட்டு இருந்தேன். இந்தத் தொழில விட் டுட்டு வேற எதாச்சும் செய்யிடா. வாழ்க்கையோட ஒரு பாதி கஷ்டமும் கலவரமுமா போச்சு அடுத்த பாதியாச்சும் நல்லா இருக்கட்டும்டா. நீயும் எங்கள மாதிரி ஆகிடாதடா கதிரு." விஜி வருத்தத்தோடு சொன்னான். "நீ சொன்னா மட்டும் கேக்கவா போறான். நானும் இவனும் ஜெயிலுக்கு வந்தா போலிஸ்காரனுக என்னயும் கேஸுன்னுதான் பாக் கறானுக. இவன் லட்சணம் அப்பிடி." மலர் இந்த வார்த்தைகளைச் சொன்னதும் கதிருக்கு சப் பென்று ஆனது. அவள் மேலிருந்து கைகளை விலக்கியவன். "ஓ. தெரியுதுல்ல அப்பறம் என்ன மயித்துக்கு எதாச்சும் என்னய கூப்டற? இனிமே கூப்டாத." வேறு யார் மீதெல்லாமோ வெளிப்படுத்த முடியாமல் அடக்கியிருந்த கோவத்தை எல்லாம் துப்பிவிட்டு வேகமாக சாலையை நோக்கி நடந் தான். விஜி எரிச்சலோடு "உனக்கு எதாச்சும் அறிவு இருக்கா?" என மலரைத் திட்டிவிட்டு கதிரை சமா தானம் செய்ய ஓடினான்.

பேருந்து நிலையம் நோக்கி நடந்த வனை "எலேய் ரோசக்கார வெண்ணதான் நில்லு."

என விஜி பிடித்து நிறுத்தினான். கதிருக்கு கண் கள் கலங்கிப் போயிருந்தன. கடந்த சில மாதங் களாக மதுவருந்தும் போதெல்லாம் காரணமில் லாமல் தனக்கு அழுகை வருவதைப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தான். அழுவதற்காகவே சில சமயம் மதுவருந்த தோன்றும். விஜி அவனை சமாதானம் செய்து தன்னோடு வீட்டிற்குக் கூப்பிட "இல்லண்ணே நான் போறேன். எங்கூட இருந்தா லும் அசிங்கம். நானும் அசிங்கம்." என சொன் னதையே திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டி ருந்தான். "சரி வீட்டுக்கு வர வேணாம். மிச்சம் இருக்க சரக்க குடிச்சிட்டுப் போகலாம் வா." விடாப் பிடியாக அவனை இழுத்துக் கொண்டு போனான். வீட்டிற்குப் பின்னால் இருந்த வேப்பமரத்தினடியில் அமர்ந்து கொண்ட இருவருக்கும் நடுவே பின் வாசலில் எரிந்து கொண்டிருந்த மஞ்சள் விளக் கின் வெளிச்சம் திட்டுத் திட்டாய் நிரம்பியிருந் தது. மலர் மறுபடியும் அவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாதென்கிற முடிவில் இவர்களின் பக் கம் வந்திருக்கவில்லை. மிச்சமிருந்த மதுவையும் குடித்த போது அச்சம், துக்கம், எல்லாம் மறந்து இன்னும் தீர்க்கப்படாத பகை மட்டுமே இருவ ரின் முன்னும் பேருரு கொண்டு எழுந்தது. "நீ எதுக்குண்ணே பயந்து சாகற? தைர்யமா இரு. உனக்குத் தொணையா நான் சீக்கிரமே வந்துரு வேன்." என போதையின் உச்சத்தில் கதிர் உளற விஜி ஓங்கி அறைந்தான். "பொச்ச மூடிட்டு இரு. நாங்க நாசமா போனதெல்லாம் போதும். நீயாச்சும் நல்லா இருக்கனும். நான் செத்தாலும் தனியா சாக மாட்டண்டா. ரெண்டு பேர கொன்னுட்டுத்தான்

சாவேன். இவள தனியா விட்டுப் போறோமேன்னு தான் கவலையெல்லாம்." குடித்த பிறகு விஜியின் குரலில் அசாத்தியமான நம்பிக்கை தெரிந்தது. "இல்லண்ணே உனக்காக இல்லன்னாலும் நான் சீக்கிரம் வரத்தான் போறேன். இவ்வளவு கஷ்டப்பட்டு எங்கப்பனுக்கு விடுதல வாங்கிக் குடுக்கறது எதுக்கு? பாசத்துலன்னு நெனைக்கிறியா?" போதையில் அவன் சொற்கள் தடுமாறின சாய்ந்து கீழே விழப் போனவனை விஜி பிடித்துக் கொண்டான். "அவன கொல்லப் போறண்ணே. இத்தன வருஷம் அதுக்காகத்தான் பகையோட காத்திருந்தேன். அவன மன்னிச்சு விட்றதெல்லாம் எனக்கு நானே செய்ற துரோகம். அந்தாளக் கொன்னாதாண்ணே எனக்கு மனசு ஆறும்." விஜிக்கு தூக்கி வாரிப்போட்டது. அவன் விளையாட்டாக சொல்லவில்லை என்பதை ரௌத்திரமான முகம் உணர்த்தியது. ஆனால் எதற்காக இத்தனை பகை? "டேய் கேணக்கூதியாட்டம் பேசாத. அப்பனையே யாராச்சும் கொல்லுவாங்களா?" விஜி சொம்பிலிருந்த தண்ணீரை அவன் முகத்தில் அடித்து அவனை தெளிய வைக்க முயற்சித்தான். "நான் கொல்லுவண்ணே. இவன மாதிரி ஒரு அப்பன் இருந்தா கொன்னுதான் ஆகனும். உனக்கு சொன்னாப் புரியாது." எழுந்து கொண்டு வீட்டின் முன் வாசலுக்கு வந்தவன் மனதிலிருந்ததைக் கொட்டிவிட்ட பதட்டம் கூட இல்லாமல் திண்ணையில் தூங்கிவிட்டான்.

அடுத்த இரண்டு நாட்கள் கதிர் விஜியைப் பார்க்க வரவில்லை. கடைசி நாள் மாலை விஜி பரோல் முடிந்து போவதால் மதுரையில்

வைத்துப் பார்த்தான். அரசரடியில் மதி தியேட்டருக்கு எதிரில் இருந்த டீக்கடையில் பதட்டமாக இருந்த இவர்கள் இருவருக்கும் என்ன பிரச்சனை என்பது புரியாமல் மலர் பார்த்துக் கொண்டிருந்தாள். இருவரில் யாருக்கு யார் சமாதானம் சொல்வதெனத் தெரியாத நிலை. "மலரு நீ இங்கியே இரு நாங்க வந்துடறோம்." விஜி கதிரோடு சற்றுத் தள்ளி நடந்தான். அவன் என்ன பேசப்போகிறான் என்பது தெரிந்ததால் "அண்ணே நீ எதுவும் சொல்ல வேணாம். நான் அன்னைக்கு போதைல சொல்லல. தெளிவாவே சொல்றேன் அந்தாளக் கொல்லப் போறேன். அத யார் என்ன செஞ்சாலும் மாத்த முடியாது." விஜிக்கு உடல் எல்லாம் வியர்த்தது. பகையோடு காத்திருக்கும் ஒரு மனிதன் எத்தனை ஆபத்தானவன் என்பதை சிறை அவனுக்கு மிகத் தெளிவாக புரிய வைத்திருக்கிறது. "டேய் இந்தப் பக வேணாம்டா. கொல பன்றது ஈசி. ஆனா ஏண்டா கொல செஞ்சோம்னு வாழ்க்க முழுக்க இருக்க குற்றவுணர்ச்சி உன்ன சாகடிச்சிடும். நீ என்னய அண்ணன மதிச்சா நான் சொல்றதக் கேளு." கதிருக்கு கோவத்திலும் வருத்தத்திலும் முகம் சிவந்தது. "என் வாழ்க்கை முழுக்க நாசமாப் போனதுக்கு அந்தாளு தாண்ணே காரணம். நீ சொன்னியே வாழ்க்கையோட ரெண்டாவது பாதி நல்லா இருக்கனும்னு. அப்படி இருக்கனும்னா இந்த பகைய நான் தீத்துக்கிட்டுத்தான் ஆகனும்," கதிர் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான். அவனோடு பேசி இனி ஆகப் போவது ஒன்றுமில்லை என்னும் ஏமாற்றத்தில் விஜி டீக் கடைக்குத் திரும்ப, "அண்ணே ஒரு நிமிஷம் இரு." கதிர்

அவன் கைகளைப் பிடித்து நிறுத்தினான். "நீ என் னயப் பத்தி யோசிக்காத. முதல்ல உன்னய பாது காப்பா வெச்சுக்க. எனக்கு ஒரு ஐடியா தோணு துண்ணே."

"என்னன்னு சொல்றா?"

"மதுரைல இருந்தா தானா உனக்குப் பிரச்சன? பனிஷ்மெண்ட் ல வேற ஊர் போயிட்டா?"

"அது எப்பிடிடா முடியும். அப்பிடியே போனாலும் முதல்ல ரெண்டு மாசம் நரக வேதனடா."

"அது எனக்கும் தெரியும்ணே. ஆனா உயிர் முக் கியமா? காயம் முக்கியமா? வேற ஊருக்குப் போயிட்டா இன்னும் மூணு நாலு வருசந்தான் உனக்கு தண்டன காலம். பிரச்சன இல்லாம முடிச் சிட்டு வந்துடலாம்."

விஜிக்கும் அந்த யோசனை சரியெனப் பட்டது. ஆனால் எதையுமே திட்டமிட்டது போல் காட்டிக் கொள்ளாமல் செய்ய வேண்டும். இந்த விஷயத் தில் யாரையும் கூட்டு சேர்க்கவும் கூடாது.

"யோசிக்கிறண்டா. அப்பிடி ஏதாச்சும் ஒன்னு ஆகிட்டா நீ இவளப் பத்திரமா பாத்துக்க."

"சரிண்ணே."

இருவரும் திரும்பி வந்தபோது பழைய பதட்டம் குறைந்து இலகுவாகியிருந்தனர்.

"பொம்பளைங்க பொறணி பேசற மாதிரி அப்பிடி என்னதான் பேசுவிங்க அண்ணனும் தம்பியும்?" மலர் சிரித்தாள். கதிர் மூன்று பேரின் தேநீருக்கும் பணம் கொடுத்துவிட்டு வந்தான். விஜி அவர்க

ளுக்கு அங்கேயே விடை கொடுத்துவிட்டு சிறைச் சாலை நோக்கி நடந்தான்.

சுதாவும்,
சுப்புராஜும்.

தன்னைச் சூழ்ந்த இடர்களில் இருந்து மீண்டு வந்த நாளில் சுதா என்னும் பெண் மாயரூபமாய் மீண்டும் நினைவில் வந்தாள். வேறு பெண்களும் இச்சைக்கென இருந்தும் ஏன் இவள் இத்தனை முக்கியமானவள்? தவிப்பையும் தாபத்தையும் ஒருசேர கொப்பளித்த இருதயம் எல்லாவற்றிலிருந்தும் முதலில் மீண்டு வா என அவனைக் கண்டு நகைத்தது. அவளும் அவனைக் கடந்த பெண்களில் ஒருத்தி அவ்வளவு தான். இச்சை கொள்ளும் பெண்களோடெல்லாம் பயணிக்க வேண்டுமானால் இந்த மனிதனுக்கு ஒரு யுகம் போதாது. சிறையில் பொட்டலங்கலுக்குத் தேவைகள் அதிகமாக அவன் ஒரே ஆளாக இந்த வேலைகளைச் செய்ய முடியாமல் தடுமாறினான். போதாக்குறைக்கு புதிய சூப்பிரண்ட் வருவதாகச் சொன்னதால் பாதுகாப்பு கருதி கெடுபிடிகளை அதிகமாக்கினர். ஒரே ஆள் வாரத்தில் இரண்டு நாட்கள் கச்சேரிக்குச் செல்வது தேவையில்லாத சந்தேகங்களை உருவாக்குமென்பதால் உதவிக்கு விஜி அண்ணன் மூலமாக இன்னொரு ஆளைப் பிடித்திருந்தான். மலைச்சாமி நாற்பதுக

ளைக் கடந்த மனிதர். வண்டாரி சொந்த ஊர். வய திற்கும் பக்குவத்திற்கும் பொருத்தமில்லாத உரு வம். இரட்டை ஆயுள் தண்டனை பெற்ற அண்ண னைப் பார்க்க அடிக்கடி வந்து போகும் மலைச்சா மிக்கு திருமணம் ஆகியிருக்கவில்லை. அண்ணன் குடும்பத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டிய நெருக்கடியில் இதில் வரும் வருமானம் அவருக்கு முக்கியமாய் இருந்தது. சிறையிலிருந்த அவரின் அண்ணன் சின்னச்சாமி விஜியிடமும் அழகர்சாமி யிடமும் கேட்டுக் கொண்டதால் அவர்கள் மலைச் சாமியை இவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தனர். அதன் பிறகு வாரத்தில் ஒரு நாள் இவனும் இன் னொரு நாள் அவரும் தொழிலைக் கவனித்தார் கள். தான் செய்யும் வேலையின் எந்த ஆபத்து களையும் உணர்ந்திருக்காத அந்த மனிதர் எடுத் துச் செல்வது கஞ்சாவென எவருக்கும் சந்தேகம் வராது. அத்தனை அப்பாவியான மனிதர்.

சுதாவை மறந்து அடுத்த வேலைகளைக் கவனிக்க நினைத்த ஒரு நாளில் திரும்ப வந்தாள். இத்தனை நாட்கள் பிரிவிற்கான எந்த வருத்தங்க ளும் அவளிடம் இல்லை. ரயில் நிலையத்திற்கு வெளியிலிருந்த மரங்கள் பகல் நேரத்தின் வெயி லைக் குடித்திருக்க, ஆட்கள் போவதும் வருவது மாய் இருந்தனர். ஆட்டோ ஸ்டாண்ட் தாண்டி ஆளற்றப் பகுதியில் அமர்ந்திருந்த இருவரும் பேசிக் கொள்ள நிறைய இருந்தும் மௌனமாய் இருந்தனர். கோவத்தில் சொற்களைக் கொட்டிவி டக் கூடாதென எத்தனை பொறுமை காத்தும் கதி ரால் முடியவில்லை. "என்னயப் பாத்தா அவ்ளோ வெறுப்பா இருக்கா சுதா? எத்தனவாட்டி ஃபோன்

பண்ணி இருப்பேன். உங்கிட்ட பேச முடியாது டான்னு சொல்லி இருந்தா கூட பேசாம இருந்திருக் கலாம். ஆனா நீ பதிலே சொல்லல. உனக்கு என்ன ஆச்சுன்னு சுப்புராஜு அண்ணங்கிட்ட கேக்கவும் சங்கடமா இருக்கு? நீ ஏண்டா கேக்கறன்னு கேட்டா என்ன பதில் சொல்றது? ச்ச." முகத்திலி ருந்த சிடுசிடுப்பை அவளின் பிரிவைக் கொட்டி னான். ஓங்கி அறையலாமாவென்று கூட கைகள் பரபரத்தன. சுதா சிரித்தாள். "நான் கெழவிடா. என் னய ஏன் புடிச்சு தொங்கிட்டு இருக்க. நான் வரல, பேசலைன்னா விட்டுட்டுப் போக வேண்டிதா னடா." அவன் கோபத்தைக் கிளறிப் பார்க்க சந் தோசமாக இருந்தது. "உன்னய மாதிரி நெனச்சதும் யாரையும் என்னால வெட்டிவிட்டுட்டுப் போக முடி யாது சுதா. உனக்கு என்னயப் பத்தி என்ன தெரி யும்டி?" இந்த முறை நேருக்கு நேராக அவளின் கண்களைப் பார்த்தபோது காமத்தை விடவும் மிகு தியான அன்பு தெரிந்தது. "டியா? செருப்பு பிஞ்சி ரும். உன்னயப் பத்தி நான் என்னடா தெரிஞ்சுக்க னும்? நீ யாரு எனக்கு? நான் எப்பவோ சொல்லிட் டேன், ஒருநாளும் உனக்கான பொம்பள நான் இல் லன்னு. நீ எதுக்கு என் சூத்துக்குப் பின்னாலயே சுத் திட்டு இருக்க. என்னயப் பத்தி என்ன தெரியும் உனக்கு?" அவள் கேட்டது நியாயம் தான். சுதா வைக் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்கிற நிஜம் புரிந்து போது ஒவ்வொரு முறை புணரும் போது அவள் உடலின் மீதிருந்த பிரம்மிப்பு நேசம் காமத்தைக் குறித்து பகிர்ந்து கொண்ட அளவிற்கு சொந்த வாழ்க்கை குறித்து பேசியிருக்கவில்லை. "நான் அப்படித்தான் சுதா, நேசிச்சு உறவு வெச்சுக்

கற எந்தப் பெண் கிட்டயும் நான் அவங்களோட சொந்த வாழ்க்கைய கேக்கறதில்ல." ஒன்றை மறைக்க பொய்களை நாடினான். "நான் நீ வெச்சு தொழில் பாக்கற பொம்பளைங்கள்ல ஒருத்தி இல்ல கதிர். படுக்கவும், படுக்கறதுக்காக மட்டுமே காதலிக்கவும்." அவள் வார்த்தைகள் அவனை குலைத்துப்போட பொங்கியெழுந்த ஆத்திரத்தில் ஓங்கி அறைந்தான். அவள் யோசிக்கவே இல்லை, ஒன்றுக்கு இரண்டாக திருப்பி அறைந்தாள். "என்னய என்னன்னு நெனச்சிட்டு இருக்க. நீயா புரிஞ்சுப்பன்னு பாத்தேன். ஒத்தா ஒருநாளும் புரிஞ்சுக்க மாட்டா. படுக்கறதையும், காதலிக்கற தையும் தாண்டி பொம்பளைய வேற எதுக்காச்சும் யோசிச்சு பாருடா." அவள் தன் பைகளை எடுத்துக் கொண்டு வேகமாக அங்கிருந்து கிளம்பிவிட்டாள். கதிருக்கு அவமானமாக இருந்தது. தனக்கு நேசிக் கத் தெரியாதென ஒரு பெண்ணின் முன்னால் அவ மானப்பட்டதற்காக அழுதான். சத்யாவைத் தாண்டி இன்னொரு பெண்ணை நேசிக்க முடியாதென்கிற உண்மையை சொல்லக் கூட தன்னை அனுமதிக் காமல் போன அவளின் மீது இப்பொழுது ஆத்திரம் பொங்க இனி ஒருபோதும் பேசவே கூடாதென முடிவு செய்தான்.

அடுத்த நாள் சிறைக்குத் தன் கணவனை பார்க்க வந்த பேச்சி முந்தைய தினம் சுதா ஏற்படுத்திய வெறுப்புகளை எல்லாம் தீர்த் துக் கொள்ள போதுமானவளாய் இருந்தாள். தீபம் லாட்ஜின் அந்த சின்னஞ்சிறிய அறைக்குள் புழுக் கத்தின் நெடியப்பிக் கிடந்த ஒவ்வொரு பொருளும் இவர்களின் வேட்கையை கூச்சத்தோடு பார்த்தது.

அழுக்கேறிப்போன பிளாஸ்டிக் ஜக்கிலிருந்த நீரை நிரம்பக் குடித்தும் அவனுக்குத் தாகம் அடங்கியிருக்கவில்லை. உடலின் வெக்கை ஈரத்தை உறிஞ்சி எடுக்க, காலை ஊரிலிருந்து கிளம்புகையில் வைத்த மல்லிகைப்பூவை அவிழ்த்து வைக்கக் கூட அவளுக்கு அவகாசம் கொடுத்திருக்கவில்லை. மலைமுகடுகளில் மேயும் முரட்டுக் காட்டு மாட்டைப் போல் அவள் உடலெங்கும் அலைந்தவனை சாதாரணமாகக் கையாண்டாள். "என்ன கொழுந்தனாரே இன்னிக்கி வேகம் பலமா இருக்கு. கொடும் பசியோ?" பேச்சி கேலி செய்தாள். பதில் கூட சொல்லாதவனாய் அவள் மார்புகளை சுவைத்தவன், தொடர்ந்து பேசவிடாதபடி தன் விரல்களால் தொடர்ந்து தூண்டினான். நீண்ட பயணத்தின் வியர்வை அவளுடல் எங்கும் படர்ந்திருந்தது. தன் நாவால் வியர்வையின் உப்புத்தடத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் அழித்து வந்தவன் மயிரடர்ந்த அவளின் யோனிக்குள் முகம் புதைத்த போது "டேய் என்னடா இது புதுப் பழக்கம்?" என வேதனையில் முனகினாள். முன்பு ஒரு போதும் இல்லாதபடி பேச்சியை இப்பொழுது சுதாவாக நினைத்துக் கொண்டான். ஒருத்தியின் இடத்தில் இன்னொருத்தியை வைத்து சுவைக்கும் இந்த அவஸ்தை மோசமானது. ஆனால் ஒரு பெண் குறித்தான சிந்தனை முழுமையாக சூழ்ந்திருக்கையில் தற்காலிகமாக தப்பிக்கவேனும் இப்படி செய்துதான் ஆகவேண்டியிருக்கிறது. அவன் நாவு ஓய்வெடுக்க விருப்பமின்றி அவள் ஆழங்களைத் துழாவ, அவளின் சத்தம் அதிகமானது. தன் வனத்தின் வியர்வைப் பூக்களை அவன் அருந்

தட்டுமென இறுக்கமாக அவன் தலையைப் பற்றிக் கொண்டாள். அந்தப் பகல் நேரத்தின் புணர்ச்சிக் குப் பின் பேச்சிக்கு அவனை ரொம்பவே பிடித்துப் போனது. உடை மாற்றிக் கொள்ளக்கூட விரும்பாத வளாய் படுக்கையின் பாதியை ஆக்ரமித்துப் படுத் திருந்தவளின் மார்பில் தலை வைத்துப் படுத்தி ருந்த கதிர் முதல் முறையாக அவளிடம் பேசினான். "நீ ஒருத்தி வேல செஞ்சு எப்பிடி குடும்பத்தப் பாத் துக்கற பேச்சி?"அவன் குரல் குளிர்ந்த காற்றென அவளின் உடலைத் தழுவியது. "என்னவாம் இன் னைக்கு ரொம்ப அக்கறையா இருக்க? என்னாச் சுடா?"

"ஏன் நான் சாதாரணமா பேசக் கூடாதா?"

"ம்ம்ம். அதெல்லாம் பேசலாம். சோலி முடிஞ்ச துக்கு அப்பறம் எல்லா ஆம்பளையும் தொடச்சிட்டு அடுத்த வேல என்னன்னு தான பாக்கப் போறீங்க. நீயும் இத்தன நாள் அப்பிடித்தான் இருந்த. இன் னைக்கு ஆறுதலாப் பேசவும் தான் என்ன புதுசா இருக்கேன்னு கேக்கறேன்."

"இல்ல எனக்கு உங்கிட்ட பேசனும்னு தோணுச்சு அதனாலதான் கேட்டேன்."

அவள் உடலைத் தாண்டி அவளைக் குறித்து கதிர் சிந்திக்கத் துவங்கிய அந்த நிமிடத்தில் அவன் மீது அவளுக்கு அலாதியான அன்பு சுரந்தது. இழுத்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.

"என்ன பெரிய சம்பாத்தியம். கொஞ்சம் காடு கர இருக்கு. வீடும் சொந்த வீடு. உழைக்கறதுக்கு கை கால்ல தெம்பிருக்கு. நம்ம காட்டுல வேல இருக்கறப்ப வெளி வேலைக்குப் போக மாட்டேன்.

காட்டுல வர்ற வருமானமே எங்களுக்குப் போதும் கதிரு. என்ன பாப்பா வளர்றதுக்குள்ள கொஞ் சம் நக சேத்துட்டா அவ கல்யாணத்த பிரச்சன இல்லாம முடிச்சிருவேன்." தனித்து பத்து வருடங் களைக் கடக்க இருக்கும் கவலைகள் இல்லா மல் சாதாரணமாக சொன்னவளை மலைப்பாகப் பார்த்தான். வாழ்க்கையின் மீது இத்தனை நம் பிக்கை கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் முன் னால் தனது இருப்பும் போராட்டமும் அற்பமாய் இருந்தது. "சாமி எல்லாருக்கும் அவரவருக்கான வழிய விட்றுக்குல கதிரு. முட்டி மோதின்னாலும் வாழ்ந்துதான ஆகனும்." அவனின் தலைகோதி விட்டு சிரித்தாள். அவளின் முரட்டு உடலுக்கும் இறுக்கமான தசை கொண்ட முகத்துக்கும் அந்த சிரிப்பு அலாதியான அழகைத் தந்தது. காப்பே றிப்போன அவள் உள்ளங்கையில் முத்தமிட் டவன் ஒவ்வொரு விரலாக வைக்குள் வைத்து சுவைத்தான். "ச்சீ விட்றா.. எனக்கு ஒரு மாதிரியா இருக்கு. விட்டா இன்னும் ரெண்டு நாளைக்கு நக் கிட்டு இருப்ப. நான் கெளம்பறேன்." செல்லமாக அவன் பின்புறத்தில் ஓங்கி அடித்துவிட்டு எழுந்து தன் உடைகளை அணிந்து கொண்டாள். பெண் கள் இந்த வாழ்க்கையில் வருவதற்கும் போவ தற்குமான முக்கியமான காரணம் 'நீ இன்னும் இந்த வாழ்க்கைக்கு முக்கியமானவன்; என்னும் பேருண்மையை உணர்த்துவதற்குத்தான். குழம் பிப் போயிருந்தவனை பேச்சி தெளிவுபடுத்திவிட் டுச் சென்றாள்.

அடுத்தமுறை வந்தபோது சுதாவிட மும் முன்பிருந்த கோவமில்லை. மதுரை சிறைச்

சாலை சுப்புராஜிற்கு பழகிப் போயிருந்தததோடு விஜியோடு சேர்ந்து பொட்டலம் விற்றதால் கொஞ் சம் செல்வாக்கும் கிடைத்தது. இடையில் சில மாதங்கள் தொலைந்து போயிருந்த பழையா தெனாவெட்டு அவன் உடலில் ஏறியிருப்பதைக் கவனித்த சுதா இனி அடிக்கடி அவனை வந்து பார்க்கக் கூடாதென நினைத்துக் கொண்டாள். கதிரை கச்சேரியில் வைத்தே பார்த்துவிட்டதால் இருவரும் அங்கிருந்து ஒன்றாகவே வெளியில் வந் தார்கள். "வெளில பேச வேணாம் டா. ரூமுக் குப் போயிரலாம்." அவளே அவனுடனான தனி மையை விரும்பியிருந்தாள். தீபம் லாட்ஜின் அறை அவளுக்கு பிடிக்காதென்பதால் கே.பி.எஸ் ஸில் முன்பே ஒரு அறை சொல்லி வைத்திருந்தான். மதிய உணவு, ஜூஸ், பழங்கள் என நிறைய வாங் கும் போதே "தண்ணியடிக்கலாமா கதிரு?" எனக் கேட்டாள். அவளோடு இதற்குமுன் ஒருமுறை கூட அவன் குடித்ததில்லை. சிரித்தபடியே சரியெ னத் தலையாட்டிக் கொண்டான். குதிகால்களில் இருந்த கடுமையான வலி காரணமாக நடக்க முடியாமல் அவதிப்பட்டவள் அறைக்குள் நுழைந் ததும் படுக்கையில் சாய்ந்து கொண்டாள். கதிர் குனிந்து அவள் கால்களில் இருந்த செருப்புகளை உருவி ஓரமாகப் போட்டான். நீண்ட பயணத்தின் அசதியில் உடல் வலிக்க அப்படியே படுத்திருந் தாள். பழங்களையும் கண்ணாடி டம்ளர்களையும் கழுவி எடுத்துக் கொண்டு வைத்தான். அவளுக் குப் பிடித்த எல்லா உணவுகளையும் பிரித்து கீழே செய்தித்தாள் வைத்து எல்லாவற்றையும் ஒழுங் காக வைத்தான். மதுவையும் தயாராக வைத்து

விட்டு அவளுக்கு அருகில் சென்று படுத்தவன், பின்னங்கழுத்திற்குக் கீழ் ஜாக்கெட் மறைக்காத பகுதியில் அழுத்தமாய் முத்தமிட்டான். "வா சாப்ட லாம்." அவள் அசைவே இல்லாமல் "ம்ம். கொஞ் சம் பொறு." என்றாள். முத்தமிட்ட இடத்திலிருந்து துவங்கி மெதுவாக நுனி நாக்கால் நக்கியவனாய் "டேய் வந்ததும் ஆரம்பிக்காத. எனக்கு உடம்பு வலிக்கிது." என முனகினாள். அவள் சொன்ன தைக் கேட்காமல் தொடர்ந்து நக்கியபடியே இருந் தான். "மாமா பையா தள்ளிப் படறா.." என போலியான எரிச்சலோடு சொல்ல, ஓங்கி அவள் முதுகில் அடித்தான். வலியில் ஆவென உடலை சுருட்டி எழுந்து கொண்டவள் அவள் தலையில் அடித்தாள். "வலிக்கிதுடா நாயே." அவன் அடித்த இடத்தை தடவிவிட்டாள். "சரி எந்திரிச்சு வா சாப் டலாம்." படுத்த இடத்திலிருந்து எழுந்து கொண்ட வன் கீழே இறங்கினான். "நான் இப்டியே உக்காந் துக்கறென். சரக்க ஊத்தி குடு." தலையை களைத் துவிட்டு வசதியாக உட்கார்ந்து கொண்டாள்.

முதல் இரண்டு சுற்று குடிக்கும் போது அவர்கள் இயல்பாக இருந்தார்கள், மூன்றாவது சுற்றுக்குப்பின் ஏற்கனவே சிவந்திருந்த அவள் கண்கள் கூடுதலாய் சிவந்துபோக மேலே உட் கார்ந்தபடியே கால்களால் அவன் கழுத்தை வருடி னாள். திரும்பி முறைத்தான். சிரித்தவள் அவனை படுக்கையை ஒட்டி இழுத்து அவன் உடலெங்கும் காலல் உரசி சீண்டினாள். கோவப்படும் போது அவன் கண்களுக்குக் கீழ் விழும் சின்னக் குழி யும் சுருக்கமும் பார்க்க சுவாரஸ்யமாய் இருந்தது. அவள் பாதத்தைப் பிடித்துக் கொண்டு முத்தமிட்

டான். நாய்க்குட்டி போல் பாதங்களில் தலை வைத்துப் படுத்துக்கொண்டான். "உன்னய எவ்ளோ கேவலப்படுத்தறேன் கோவமே வர்லயாடா?" ஒரு கையால் தலையைக் கோதிவிட்டாள். அவளைப் பார்த்து சிரித்தவன் இல்லையென்று தலையாட்டினான். "செல்லக்குட்டிடா நீ." குனிந்து அவன் முகம் கழுத்தென இடைவெளியின்றி முத்தமிட்டாள். "மன்னிச்சுக்கோ சுதா. நான் இவ்ளோ நாளா உங்கிட்ட நடந்துக்கிட்ட மாதிரி இனி நடந்துக்க மாட்டேன்." அவன் முத்தத்தினூடாக அவள் காதுகளுக்குள் சொல்ல "ச்சீ நாயே. நாந்தாண்டா மன்னிப்புக் கேட்கனும். நீ யாருன்னு எப்பவும் வெளிப்படையா தான் இருந்திருக்க. நான் ஏன் அதுக்காக கோவப்படனும். தப்பு என்னோடதுடா.." சுதா அவன் கண்களில் முத்தமிட்டாள். "சொல்லப் போனா உன்ன பாக்கனுங்கறதுக்காகத்தான் இன்னைக்கு மதுரைக்கே வந்தேன்."

"நெஜமாவா சொல்ற?"

"ம்.. ஆமாடா கதிரு. நான் எல்லாத்தையும் விட்டுட்டுப் போயிடலாமான்னு இருக்கேன். நானும் அவரும் முறையா கல்யாணம் செஞ்சுக்கிட்டவங்க இல்ல. பக்கத்து பக்கத்து வீடு. என் புருஷன் செத்ததுக்கு அப்பறம் இவரோட பழக்கமாகிடுச்சு. நானும் வேற எதுவும் வேணாம் சாகற வரைக்கும் இவருக்காக இருக்கனும்னுதாண்டா நெனச்சிட்டு இருந்தேன். ஆனா இந்த உடம்பு ஒரு மிருகம். அதத் தூண்டி விடாத வரைக்கும் சும்மா இருக்கும். தூண்டி விட்டுட்டா அடங்காது. உன்னோட பழகினதுக்கு அப்பறம் ஏன் ஒரு ஆம்பள தொண இல்லாம இருக்கனும்னு தவிப்பா இருக்குடா. இன்

னும் ரெண்டு மூணு வருஷம் கழிச்சு வந்தாலுமே கூட இவர் திருந்தி வாழற மாதிரி தெரியல. மறு படியும் ஜெயிலுக்குப் போனாருன்னா என் நெல மைய யோசிச்சுப் பாரு. பாப்பா வேற வளந்துட்டு இருக்கா. எப்ப வேணும்னாலும் பெரிய பிள்ளையா ஆகிடுவா. எங்களப் பொறுப்பா பாத்துக்கற ஒரு ஆம்பளை கூட வாழனும்னு நெனைக்கிறண்டா."

தன் குமுறல்கள் அவ்வளவையும் அவனிடம் கொட்டிவிடும் வேகத்தில் நிறுத்தாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். தனக்கு மட்டுமேயான உலகில் எத்தனை சிரமங்களை அவள் எதிர்கொள்ளக் கூடுமென்பதை அந்த நொடியில் கதிர் உணர்ந் தான். தனித்திருக்கும் பெண்கள் இந்த சமூகத் தின் அவச்சொல்லுக்கு எளிதில் இலக்கு. இவளது சூழல் இன்னும் மோசம். "இவ்ளோ பிரச்சனைய வெச்சுக்கிட்டு ஏன் வாரந்தவறாம வந்து பாத்துட் டுப் போற. அப்பிடி என்ன உனக்கும் இவருக்கும் ஆழமான உறவு.?" கதிர் புரிந்துகொள்ள முடியா மல் கேட்டான். "கஷ்டப்பட்ட கொஞ்ச காலம் கூட இருந்து பாத்துக்கிட்டாருடா, அதனாலயே நல்லா பாத்துக்கனும்னு இருந்துச்சு. முன்னல்லாம் அத காதல்னு நெனச்சிட்டு இருந்தேன். இப்ப வெறும் விசுவாசமா மட்டுந்தான் தோணுது." சோபையின்றி சிரித்தாள். அடுத்த சுற்று விஸ்கியையும் குடிக்கும் போது அவளுக்கு கடுமையாக வியர்க்க, உடை களைக் களைந்து அரைநிர்வாணமாக படுக்கை யில் சாய்ந்து உட்கார்ந்தாள். கெண்டைக் கால் களில் அடர்ந்திருந்த மயிர்களுக்குள் விரல்களை அலைய விட்டு விளையாடினான். "அப்போ கூடிய சீக்கிரம் என்னயவும் மறந்துடுவ இல்லயா?" பரி

தாபமாகக் கேட்டான். “மறக்க மாட்டேன் கதிர். நீ தனக்கு என்ன வேணும்னு தெரியாத சின்னப் பையன். சாகற வரைக்கும் இப்படித்தான் இருப்பியோன்னு தோணுது. வாழ்க்கை ல நிறைய கஷ்டப் பட்டிருக்க, அந்த வலி இருக்கு. ஆனா அத நல்லா வாழனுங்கற விருப்பம் இல்ல.”

“நல்லா வாழ்றதுன்னா என்ன சுதா?”

“உனக்கான உயிர்களோட, எப்பவும் அன்பு சூழ வாழ்றதுடா.” கதிர் சிரித்தான்.

“அப்பிடி எத்தன பேரு இருக்காங்க?”

“இருக்காங்க கதிர். சராசரி மனிதர்கள்னு நாம கவனிக்காம விட்ற எவ்வளவோ பேர். அப்படியான வங்க தான். அவங்க எல்லாம் சந்தோசமா தான் இருக்காங்க. எப்ப தேவைகளுக்கு அதிகமா எதிர் பாக்கறமோ அப்பயே இருக்கற சின்ன சின்ன சந்தோசமெல்லாம் போயிடுதுடா.”

அவன் அவள் கால்களை ஒட்டி படுக்கையில் சாய்ந்து கொண்டான். இருவரும் மௌனமாகினர். அங்கிருந்து வெளியேறும் எண்ணங்கள் இல்லாமல் இருவரும் கதவில் இவர்களையே பார்த்துக் கொண்டிருந்த பல்லியைக் கவனித்தனர். வழக்கமான எந்த இரைச்சலும் இல்லாத டவுன் ஹால் ரோட்டின் அமைதி அச்சமூட்டியது. உலகின் தனித்த தீவொன்றில் மாட்டிக் கொண்டது போன்ற தனிமை. “கதிரு இன்னைக்கு உங்கூடயே இருந்துட்டு நாளைக்கு போகட்டுமாடா?”

“ம்...” அவள் அவன் கழுத்தை அணைத்துக் கொண்டாள். இருவரும் கூடிமுயங்கவில்லை. மிச்சமிருந்த மதுவையும் குடித்துமுடித்தபின் இது

கடைசி சந்திப்போ என்னும் ஏக்கத்தில் கதிர் அழுதான். “நாயே செத்தா போயிட்டேன். எனக்கு எப்பல்லாம் தோணுதோ அப்பல்லாம் உன்னத் தேடி வருவண்டா.” என சமாதானம் செய்ய எவ்வ ளவோ முயன்றாள். “இல்ல சுதா, உனக்குத் தெரி யாது, நான் விரும்பற எதும் எனக்கு எப்பவும் கெடச்சதில்ல. இது என்னோட சாபம்.” அழும் போது அவனுக்கு மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இடைவிடாமல் தண்ணீர் வழிந்தபடியே இருக்க, கதிர் இப்பொழுது முன்னைவிடவும் சிறியவனாய்த் தெரிந்தவன். “நீ என் குழந்தடா குட்டி. அழாத.” வாரி அணைத்துக் கொண்டவள், மீளமுடியாத அவனின் இந்த அன்பிற்கு என்ன கைமாறு செய்வ தெனத் தெரியாமல் தவித்தாள்.

சின்னசாமி

எல்லா மட்டத்திலும் எல்லா இடங்க ளிலும் யாரோ சிலர் வஞ்சிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இரட்டை ஆயுள் தண்டனை பெற்ற சின்னசாமி ஒரு சலவைத் தொழிலாளி. சிறைக்கு வெளியில் இருந்த அவரின் ஊர்க்கா ரர்கள் எவ்வாறு அவரைப் பயன்படுத்திக் கொண் டார்களோ சிறைச்சாலையிலும் அழகர்சாமி உள் ளிட்ட ஆட்கள் அவரை அவ்வாறே பயன்படுத் திக் கொண்டார்கள். செல்லை விட்டு வெளியில் இருக்கும் பகல் நேரம் முழுக்க மற்றவர்களின் துணிகளைத் துவைத்து தருவதே அவரின் பிர தான பணியாக இருந்தது. தண்டனை விதிக்கப் பட்டு அவர் சிறைக்கு வந்து ஆறு மாதங்களாகிறது. அந்த சிறைச்சாலையின் பெருங்கூட்டத்தில் இவர் மீது உடல்ரீதியாக யாரும் எந்த வன்முறைகளை யும் செலுத்தியிருக்கவில்லை. தனது செல்லுக் குள் தன்னோடு இருந்த எல்லோரைக் கண்டும் பயப்படுவார். தன்னை பொருட்படுத்தாத அவர்க ளின் பார்வையும், அலட்சியமும் இந்தக் கூட்டத் தில் எப்படி காலம் தள்ளப் போகிறோமென அச் சுறுத்தும். முதல் நாள் பரிசோதனைகள் எல்லாம் முடிந்து சி பிளாக்கில் இவருக்கான செல்லுக்கு அனுப்பி வைத்தனர். முதலில் சிலர் இயல்பாக

விசாரித்தனர். ஆள் மாற்றி ஆள் சாதாரணமான விசாரிப்பு.

“எந்தூருப்பா?”

“வண்டாரிங்க.”

”அது எங்க இருக்கு?”

“சாப்டூருக்கு மேல மலை ல சின்ன கிராமம்.”

“ஓ. எத்தன வருசம் தண்டன?”

“ரெண்டு ஆயுள்”

“ஏ எப்பா பெரிய சம்பவமா இருக்கும் போலயே?”

அமைதியாக பதில் சொலலத் தயங்கி அவர்களைப் பார்த்தார்.

“சரி என்ன ஆளுக?”

இந்தக் கேள்வியை இந்த வளாகத்தில் அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. இங்கும் சாதியா? குற் றம் தண்டனை எல்லாவற்றிலும் சாதி. குற்றவாளி யின் சாதியைத் தெரிந்து கொண்டு நீதி வழங்கும் இந்த அருவருப்புகள் எல்லாம் வேறு எந்த நாட்டி லாவது உண்டா? அவர் வார்த்தைகளை மென்று முழுங்கி

“டோபிங்க.” என்றார்.

அருகிலிருந்தவர்களில் ஒருவர் “ஓ..” வென சாதார ணமாகச் சொல்லிவிட்டு தன் வேலைகளைக் கவ னிக்கச் சென்றுவிட்டார். அதன்பிறகு யாரும் அவ ரிடம் எதுவும் விசாரிக்கவில்லை. தன் சாதி அந்த அறையில் தன்னை தனிமைப்படுத்தி விட்டதை உணர்ந்தவர் பாதுகாப்பாய் இருந்தால் நல்லதென நினைத்துக் கொண்டார். தனித்திருப்பது பாதுகாப்

பல்ல, புறக்கணித்தல். குற்றங்களின் நியாயங்கள் எப்படி உண்மையற்றவையோ, அப்படித்தான் தண்டனைகளின் நியாயங்களும். இந்திய தண்டனைச் சட்டம் குற்றமிழைத்தவர்கள் திருந்தி வாழ்வதற்கான இடமாக சிறைச்சாலையைச் சொல்கிறது. இது திருந்துவதற்கான இடமும் அல்ல, காலகட்டமும் அல்ல. தனக்கு ஏதுவான இன்னொரு கூண்டைக் கண்டுகொண்ட நினைப்பு வருகிற போது தன் அடுத்தகட்ட நகர்விற்கான பயிற்சிகளாய் இதனைப் பாவிக்கிறவர்கள் அதிகம். வெளியில் இருப்பதை விடவும் சிறைக்குள் குற்றங்களை பழகிக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். தீமையை விரும்பிச் செல்கிறவர்களை, அதை நோக்கித் தள்ளப்படுகிறவர்களை தடுத்த நிறுத்த உறவுகளோ அன்பானவர்களோ ஒருவரும் இருப்பதில்லை. சின்னசாமியின் சாதி தெரிந்து ஒதுங்கிய அனேகம் பேருக்கு நடுவிலும் அவரைப் போலவே அப்பாவியான சிலர் அவரோடு நட்பு பாராட்டவும் செய்தார்கள். ஒரு பட்டுப்பூச்சியைக் கொல்வதற்குக் கூட மனமற்ற அந்த மனிதர் ஒருநாளும் கொலை செய்திருக்க முடியாதென்றுதான் எல்லோருக்கும் தோன்றியது. விஜி அவரைப் பார்க்கும் போதெல்லாம் எல்லோரிடமும் சிரித்து தன் இயலாமையை மறைக்க முயலும் அந்த சாயலில் தன் தந்தையை உணர்ந்தான். ஓநாய்க் கூட்டத்திற்குள் மாட்டிக்கொள்ளும் இதுமாதிரியான எத்தனை அப்பாவிகளை நாம் பாதுகாக்க முடியும். வாழ வேண்டுமானால் கொஞ்ச எதிர்க்க பழக வேண்டுமென அவர் விரைவில் கற்றுக் கொள்ள வேண்டுமென நினைத்துக் கொண்டான். ஆனா

லும் இரண்டு ஆயுள் தண்டனை பெறும் அளவிற்கு அவர் என்ன குற்றமிழைத்திருக்கக் கூடும்? அவரிடம் அதுகுறித்துப் பேசும் போதெல்லாம் பதில் சொல்ல தவிர்ப்பார்.

வண்டாரியில் எல்லோருக்கும் தெரிந்த குடும்பம் சின்னசாமியினுடையது. ஊர்க்காரர்களின் துணிகளை வெளுக்கும் அந்த மனிதர் பகல் நேரங்களில் கண்மாயில் துணிகளை சலவை செய்தபடி பாடுவதைக் கேட்கும் எவருக்கும் அந்த இடத்தைக் கடந்து செல்ல தோன்றாது. ஆயிரம் பறவைகள் சேர்ந்திசைக்கும் இசை. அந்தக் குரலுக்கு மயங்காத மனிதரில்லை. அவரும் அவர் தம்பியும் அவர் தம்பி மலைசாமியுமாய் எத்தனை மூட்டைத் துணிகள் சேர்ந்தாலும் சலிக்காமல் துவைத்துப் போடுவார்கள். துணிகளுக்கு அடையாளம் போட்டு சரியாகப் பிரித்து ஒவ்வொரு வீடாகக் கொடுப்பது சின்னசாமியின் மனைவி மற்றும் மகன்களின் வேலை. சின்னசாமி அப்பாவியென்றால் மலைசாமி அவரைவிடவும் அப்பாவி. வருஷத்துக்கு ஒருமுறை இனாமாக பண்டிகை நாளில் புதுத்துணி தருகிறார்கள் என்பதற்காகவே இன்னும் ஊர்க்காரர்களுக்கு விசுவாசமாக இருக்க நினைக்கும் அந்த மனிதர்களின் குருதியையும் உழைப்பையும் சுரண்டிக் கொண்டிருந்தது அந்த ஊர். தோட்டம் தொரவுகளோடு இருக்கும் பெரிய மனிதர்களில் முத்துராஜ் முக்கியமானவர். சாப்டூர் ஜமீனுக்கு தூரத்து சொந்தம். இன்றும்கூட மாதத்தில் ஒருநாள் வேட்டைக்குப் போகிறவர். இந்த வேட்டைக்காகவே வெவ்வேறு ஊர்களில் இருந்து ஆட்கள் அவ்வப்போது வருவ

துண்டு. ஊரின் சரிபாதி அதிகாரத்தைக் கொண்டிருந்த அந்த மனிதரின் குடும்பத்திற்கும், தங்கப் பாண்டி முதலாளி குடும்பத்திற்கும் கொஞ்ச காலமாகவே பகை இருந்து வந்தது. கண்மாய் ஏலம் எடுப்பதிலிருந்து எல்லாவற்றிலும் போட்டி. ஊரை இரண்டாகப் பிரித்திருந்த சாலையின் வலது பக்கத்தில் ஒரு கோயிலும், இடது பக்கம் இன்னொரு கோயிலும் இருந்தது. காளியம்மன் கோவில் தங்கப்பாண்டியின் கட்டுப்பாடு. பெருமாள் கோவில் முத்துராஜின் கட்டுப்பாடு. கோவில் திருவிழாக்களுக்கு போஸ்டர் அடிப்பதில் சாதி பெருமிதத்தைப் போட்டுக் கொள்வதும். எத்தனை ஸ்பீக்கர் வைப்பது என்பதில் போட்டி போடுவதிலும் சர்வ நிச்சயமாய் வருடத்திற்கு இரண்டுமுறை மல்லுக்கட்டு இருக்கும். சரியாக ஆடலும் பாடலும் நடக்கும் போதோ அல்லது இன்னிசைக் கச்சேரி நடக்கும் போதோ கரண்டு மரத்தில் பச்சை வாளை மரத்தைப் போட்டு ப்யூஸ் அடிக்க அவைத்து விடுவார்கள். விடியும் வரை அதன்பிறகு ஊரை இருள் சூழ, இருளுக்குள் காத்திருந்த பகை அருவாளோடு ஆட்களைத் தேடும். கொல்லப்பட்ட, காயம்பட்ட பாதிக்கும் மேலான மனிதர்களை சாதி தான் காவு வாங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு இழப்பின் போதும் தங்களுக்குள் இருந்த சாதி வெறியை அதிகப்படுத்திக் கொண்ட எவரும் குறைத்துக் கொள்ளவில்லை. சாதி இல்லாத நாளில் செத்துவிடுவோமென்கிற அச்சம் அவர்கள் ஒவ்வொருவருக்கும்.

அந்த வருடம் காளியம்மன் கோவில் திருவிழாவின் போது நள்ளிரவு வரை மின்சாரம்

போகவில்லை. முத்துராஜ் பக்கத்து ஆட்களுக்கு இந்த வெட்டுக்குத்து சமாச்சாரங்கள் சின்னதாய்ப் போய்விட்டதால் அந்த வருடம் வேட்டைக்கு வருகிற ஆட்களிடம் சொல்லி நாட்டு வெடிகுண்டுகளை செய்து வரச் சொல்லி இருந்தார்கள். இன்னிசைக் கச்சேரி சுவாரஸ்யமாக சென்று கொண்டிருந்தது. ஊர்க்காரர்களில் பெருங்கூட்டம் மேடைக்கு முன்னால் திரண்டிருக்க, இரு சக்கர வாகனங்களில் வந்த இரண்டு பேர் மேடைக்கு அருகில் முக்கியஸ்தர்கள் உட்கார்ந்து பார்ப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் கையெறி குண்டுகளை வீசியெறிந்துவிட்டுச் சென்றனர். முதல் குண்டு வெடித்ததுமே ஊர்க்காரர்கள் அலறி அடித்துக் கொண்டு ஓட, சண்டைக்கு எப்போதும் போல் தயாராக இருந்த தங்கப்பாண்டியின் ஆட்கள் ஆயுதங்களோடு வண்டியை துரத்திக் கொண்டு ஓடினார். அடுத்த சில நிமிடங்களிலேயே அங்கு வந்த இன்னொரு வண்டி இன்னொரு குண்டை எரிய மீண்டும் வெடித்ததில் மேடை சரிந்து விழுந்தது. இதுவரை அருவாள் மட்டுமே பேசிக் கொண்டிருந்த வன்முறையில் இறப்புகள் குறிவைத்து அடிக்கப்படும். இந்தமுறை கண்ணில் படும் யார் செத்தாலும் கவலை இல்லை என்கிற எண்ணம் இரண்டு பக்கமும். திருவிழா நடந்த ஊர்ப்பொட்டல் எரிந்து பொசுங்கி சுடுகாட்டைப் போல் மாறியிருக்க, முத்துராஜின் ஆட்களில் சிலருக்கு கடுமையானகாயம். துரதிர்ஸ்டவசமாக காவலுக்கு வந்திருந்த போலிஸ்காரர் ஒருவர் இறந்து போனதால் அத்தனை காலமும் அவர்களின் சாதி சண்டையை பொறுமையாக விட்டுக் கொண்டி

ருந்த காவல்துறை இந்தமுறை கடுமையான நடவ டிக்கை எடுப்பதென களத்தில் இறங்கியது. ஊரில் சரிபாதி ஆட்கள் தப்பித்து ஓடிப்போனார்கள்.

நேரடியாக இரண்டு சமூகத்திற்கும் பாதிப்பு வருமெனத் தெரிந்து கொண்டபோது இரண்டு சமூகத்து ஆட்களும் முத்துராஜையும் தங் கப்பாண்டியையும் ரகசியமாக அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இரண்டு பக்கத்திலும் உயிர்ச்சேதாரமில்லை, அதனால் சமாதானமாய்ப் போக உடன்பட்டார்கள். வழக்கில் யார் சரணட வைவது என்கிற கேள்வி வந்தபோது தங்கராஜ் தன் பக்கத்து ஆட்களைக் காப்பாற்ற என்ன விலை வேண்டுமானாலும் தரத்தயாராய் இருந்தனர். ஆக அவர்களின் உடன்படிக்கை தங்களுக்கு விசுவாச மான ஒரு ஆளை பலிகொடுக்க முடிவு செய்தது. மற்ற எல்லா சமூத்தினரும் குறைந்தது பத்து பதி னைந்து குடும்பங்களாவது இருந்தார்கள், ஒரே குடும்பமாய் இருந்தது சின்னசாமியின் குடும்பம் தான். கொஞ்சம் நிலமும், பையன்களுக்கான படிப்பு செலவை ஏற்றுக் கொள்வதாகவும் சொல்லி ஊர்ப் பெரியாட்கள் சின்னசாமி குடும்பத்தை அணுகியபோது திட்டவட்டமாய் மறுத்துவிட்டார். அதன்பிறகு சில நாட்கள் இரவுகளில் வீட்டைச் சுற்றி ஆட்கள் நடமாட்டமும், சலவை செய்து வைத்த துணிகள் எரிந்து போவதுமாய் இருந்தது. ஒருநாள் அவர்களின் குட்டிக் கழுதை கொல்லப் பட்ட போது அது தங்களுக்கான எச்சரிக்கையென அந்தக் குடும்பம் அச்சம் கொண்டது. ஆதரவிற்கு எவருமில்லாமல் தப்பித்துச்செல்ல வேறு போக்கிட மும் இல்லாமல் சின்னசாமி ஊர்க்காரர்களின் நிர்ப்

பந்தத்திற்கு உடன்பட்டார். மலைச்சாமிக்கு சரியாக பேச்சுகூட வராது என்பதால் அவர் குண்டெறிந்ததாகச் சொன்னால் ஒருவரும் நம்பமாட்டார்கள் என சின்னசாமியை மதுரை கோர்ட்டில் சரணடையச் சொன்னார்கள். வழக்கு விசாரணை நடந்தபோது ஊர்க்காரர்கள் மொத்தமாய் சின்னசாமி செய்ததை கண்ணால் பார்த்ததாக சொன்னார்கள். அவரும் மறுக்காமல் ஒப்புக்கொள்ள இரட்டை ஆயுள் தண்டனை தீர்ப்பானது. விசாரித்து தீர்ப்பளித்த ஒருவருக்கும் தெரிந்திருக்காது டூவீலரில் வந்து குண்டு வீசியதாக சொல்லப்பட்ட எந்த வண்டியும் ஓட்டத் தெரியாது என்கிற எளிய உண்மை. தன்னைப் போலவே மேல்சாதிகாரர்களின் சதிக்கு ஆள் சின்னசாமி எனத் தெரிந்தபின் விஜிக்கு அவரின் மீதான கரிசனம் முன்னைவிடவும் அதிகமானது. மேல் கோர்ட்டிற்கு வழக்கை எடுத்துச் செல்லவும் அவருக்கு நியாயம் கிடைக்கவும் முயற்சிப்பதென முடிவு செய்தான். “என்னண்ணே இப்பிடி போயி அகப்பட்டு இருக்கீங்க. நீங்க எதுக்கு செய்யாத குத்தத்துக்கு தண்டன அனுபவிக்கனும். மேல்கோர்ட்டுல நடந்த உணமையச் சொல்லுங்க. நாம நல்ல வக்கீலா புடிப்போம்.” ஆவேசமாகச் சொன்னான். “கேசு பாக்க காசு வேணுமேய்யா. அதோட ஊர்க்காரவுகள பகச்சுக்கிட்டா என் குடும்பம் என்னாகும்?” பரிதாபமாகக் கேட்டார். “உதவி பன்றதுக்கு நிறைய வக்கீலுங்க இருக்காங் கண்ணே. உழைச்சு வாழ்றவனுக்கு சொந்த ஊரு என்னண்ணே. எங்க போனாலும் பொழச்சுக்கலாம். நீங்க தைர்யமா இருங்க. நான் பாத்துக்கறேன்.” விஜி எப்படியாவது அவருக்கு நீதி கிடைக்க

வேண்டுமென துடித்தான். ஒவ்வொரு வாரமும் சிறைக்கு வரும் இலவச வக்கீல்கள் சிலரிடம் பேசிப்பார்த்தான். அவர் கதையைக் கேட்ட நிறைய பேர் அவருக்கு உதவ முன்வந்தாலும் அந்த வழக்கில் எல்லாமே அவருக்கு எதிராக வலுவாக கட்டமைக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்கள். அவன் விடாமல் முயற்சித்ததில் வழக்கு இப்பொழுது மேல் கோர்ட்டிற்கு சென்றிருக்கிறது. வண்டாரியை விட்டு வெளியேறிய சின்னசாமியின் குடும்பம் இப்பொழுது டி.கல்லுப்பட்டியில் வசிக்கிறது. காந்தி நிகேதனில் அவரின் மனைவி வேலைக்குச் செல்கிறார். என்றாவது ஒருநாள் நீதி கிடைக்குமென்கிற நம்பிக்கையில் சின்னசாமி விஜியை நம்பினார். குடும்ப வருமானத்திற்கு உதவியாய் இருக்கட்டுமென கதிரை மலைச்சாமிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். கைவிடப்பட்டவர்கள் தன்னைப்போலவே கைவிடப்பட்டவர்களிடம் தான் உதவிக்கு நிற்க முடியும். கதிர் அந்தக் குடும்பத்தின் நிலையைப் புரிந்து கொண்டதுடன் எல்லா வகையிலும் துணை நிற்க நினைத்தான். குடும்பமும் உறவுகளும் கைவிட்டபின் சந்தர்ப்பங்கள் மனிதர்களுக்கு புதிய உறவுகளை ஏற்படுத்தி தரும். துயரங்களை கடந்து செல்ல இந்த மனிதர்களின் அன்பு போதுமானது.

சூன்யப்புள்ளியி
லிருந்து
வெளிச்சத்
திற்கு.

வயது முதிர்ச்சியைத் தந்ததோடு தனிமையையும் பிரிவையும் தந்தபடியே இருந்தது. இந்த வீடு பிடிக்கவிலையென அம்மா புலம்பிக் கொண்டே இருந்தாள். எந்த இடத்திலும் பாதுகாப்பு தற்காலிகமானதுதான். யாரோ ஒருவர் தன்னைக் கொல்லக்கூடுமென்றால் அது எந்த இடத்தில் வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டுமேயென கதிரும் யோசித்தான். ஹார்வி பட்டியில் அவனுக்கு நண்பர்கள் இல்லை. சொந்தக்காரர்களோடு எப்போதும் அவனால் உடன் பட்டு இருக்க முடியாது. சுகமில்லாமல் இருந்த கதிரின் அம்மாச்சி ஹார்விபட்டி வீட்டிலிருந்தபடி தான் தவறிப்போனாள். சொந்தக்காரர்கள் கடமைக்கு வந்து எழவு விசாரித்துவிட்டுப் போனார்கள். அம்மாவுக்கும் இந்த தனிமை சாவைக் குறித்தான எண்ணங்களை உருவாக்கி விட்டிருந்

தது. சுண்ணாம்புக்காரத் தெருவும் நாடக நடிகர் சங்கமும் தாத்தாவைப் பார்த்துக் கொள்ளுமென்ப தால் அவரைக் குறித்து இவர்கள் கவலைப்பட்டி ருக்கவில்லை. "எலேய் இங்க இருந்தா அனாதை யாவே செத்துப் போவேன். பேசாம நம்மூருக்குப் போயிரலாம்டா. நல்லது கெட்டதுன்னா பக்கத்துல இருந்து பாத்துக்க நம்ம சனம் இருக்கும். இந்த ஊரு வேணாம்டா." என அம்மா அவனைப் பார்க் கும் போதெல்லாம் புலம்பினாள். ஹார்விபட்டியி லிருந்து கதிரும் அம்மாவும் வீட்டை காலி செய்து மீண்டும் திருமங்கலத்திற்கு சென்றிருந்தனர். இந்த சில வருடங்கள் பகையை மறக்கச் செய்திருக்காது தான். ஆனால் எதிர்ப்புகளை சமாளிக்கும் மனோ திடம் கதிரிடம் இருந்தது. இந்த உயிரைத் தவிர அவர்களால் வேறொன்றையும் தன்னிடமிருந்து எடுத்துவிட முடியாது. சொந்த ஊர் அச்சத்திற் குப் பதிலாக பாதுகாப்பையே தந்தது. கற்பக நகர் இரண்டாவது தெருவில் அந்த புதிய வீட்டைச் சுற்றிலும் கொஞ்சம் நண்பர்கள் இருந்தார்கள். பழைய நெருக்கமில்லாத போதும் மாரி அவனோடு சாதாரணமாகப் பேசியபடிதான் இருந்தான். பழைய ஊரும் வீதிகளும் உள்ளுறங்கிய வன்மங்களை எல்லாம் காட்டிக் கொள்ளாமல் அவனை அரவ ணைத்துக் கொண்டது.

முருகனுக்கு பெண் குழந்தை ஒரு வருடம் ஆகப்போகிறது. தன் பிஞ்சுக்கரங்களை ஊண்டி நடக்கப் பழகியிருந்த அந்தக் குழந் தையின் புன்னகை கதிருக்குத் தந்த சந்தோச மும் நிம்மதியும் அளவற்றவை. ஜோதியென பெய ரிட்டிருந்தார்கள். அவள் பிறந்தபின் சக்தி சடா

ரென பெரிய மனுஷியாய்த் தெரிந்தாள். உலகின் சகல பிரச்சனைகளுக்கும் தன்னால் தீர்வு சொல்ல முடியுமென்கிற பெரிய மனுஷித்தனம். எல்லாவற் றையும் தன் குழந்தையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் அம்மாவின் மனம். நடக்கத் துவங்கிய தன் மகள் ஒரு நாள் பன்னிரு குதிரைகளின் வேகத்தில் இந்த பிரபஞ்சத்தில் வேறு யாரையும் ஓடக்கூ டுமென்கிற நம்பிக்கை. எல்லாக் கலைகளுக்கும் பிரசித்தமானவளாய் இருப்பாளென்கிற பெருமிதம். குழந்தைகளோடு சேர்ந்து அம்மாக்களும் பிறப் பார்கள் போல. வாழ்வதற்கான அதிகபட்ச நம் பிக்கைகளை குழந்தைகள் தான் விதைக்கிறார் கள். முன்பு போல அவளை போடி வாடி எனக் கூப்பிட கதிருக்கு கூச்சமாய் இருந்தது. "எப்பவும் போல பேசுண்ணே, என்ன புதுசா போப்பா வாப் பான்னு கூப்டற?" சக்திக்கு அவன் அப்படிக் கூப் பிடும்போதெல்லாம் யாரோ போலிருக்கும். கதிர் முயற்சித்துப் பார்த்தான். அவனுக்கு இயல்பாகவே வரத்தயக்கமாய் இருந்தது. "இல்ல பரவால்லப்பா நான் இப்டியே கூப்டறேன்." என சிரிப்பான். அந்த வீடு இன்னொரு முறை முழு அன்போடு அவனை ஏற்றுக்கொண்டது. தனலட்சுமி திருமணம் முடிந்து பக்கத்திலேயே தான் இருந்தாள். அவள் ஏற்பாட் டில்தான் மீண்டும் இவன் வீடு மாற்றிக் கொண்டு ஊர் வந்தது. எல்லோருக்கும் மனதின் அடியா ழத்தில் அந்த விருப்பமிருந்தது. ஆனால் அதை நேரடியாய்க் கேட்கத் தயங்கினர். கதிரே கேட்கட் டுமென தனமும், சக்தியும் யோசித்தனர். அவர்க ளின் மனவோட்டம் புரிந்த கதிருக்கு இன்னொரு முறை தன்னால் அந்த இயல்பிற்குத் திரும்ப முடி

யுமாவென யோசனையாய் இருந்தது. பைநெட் ஹோட்டலைத் துவங்கி கதிரின் பொறுப்பில் நடத் தினால் அவனை அவனது இந்தச் சூழலிருந்து மீட்க முடியுமென அவர்கள் நம்பினார்கள். தங்க நாற்கரச் சாலைகள் ஊருக்குள் வந்த பெரும்பா லான லாரிகளைத் துரத்தி விட்டதால் பல கடை களையும் இப்பொழுது மூடிவிட்டார்கள். ஊரிலி ருந்த ரயில்வே பிளாட்ஃபார்ம் கல் தயாரிக்கும் கம் பெனிக்கு நைட் ஷிஃப்டில் உணவு தேவைப்படும் போது பசியாற்ற கடைகள் குறைந்து போயிருந் தது. "ஏங்க நீங்க கதிரண்ணன் கிட்ட பேசுங்க. அது இப்பிடியே போச்சுன்னா வீணா போயிரும். நாம கடைய திரும்ப ஆரம்பிக்கலாம்." சக்தி அடிக்கடி முருகனிடம் ஃபோனில் பேசும்போதெல்லாம் நச் சரிக்கத் துவங்கினாள். "அவன் போக்கு உனக்குத் தெரியும். திடீர்னெல்லாம் அவன புடிச்சு இழுக்க முடியாது. கொஞ்சம் பொறுமையா இரு." முருகன் அவளை சமாதானப்படுத்தினாலும் கதிரால் முன் னைப் போல் ஒரே இடத்தில் இருக்க முடியுமா வென சந்தேகமாய் இருந்தது.

நன்னடத்தையில் அழகர்சாமியை விடுதலை செய்வதற்காக தனக்குத் தெரிந்த எல் லோரின் உதவிகளையும் கதிர் நாடினான். அதிக மும் கவனிக்கப்படாத இந்த துறைக்குள்ளும் அதி காரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் அனேக வரு மானமுண்டு என்பதை நெருங்கிச் சென்று பார்க் கும் போது அவனால் தெரிந்து கொள்ள முடிந்தது. சேமிப்பிலிருந்த பெரும் பகுதியை அதற்காக செல வழிக்க கதிர் தயங்கவில்லை. செல்லூரில் தேவை யான உதவிகளை செய்து கொடுப்பதற்கென்று

ப்ரோக்கர் இருந்தார். ஒரு கதவைத் தாண்டி இன்னொரு கதவென அவர் வழிகாட்டுதலின்படி எல்லாமும் நடந்து முடிந்த போது அவனுக்கு சலிப்பாக இருந்தது. தண்டனைக் கைதிகளை நன்னடத்தையின் அடிப்படையில் தண்டனைக் காலத்திற்கு முன்பாகவே விடுதலை செய்வதென்பது அத்தனை சாதாரண காரியமல்ல. விடுதலைக்கு தகுதியான வேறு சிலரின் வாய்ப்புகளைத் தட்டிப் பறித்தால் மட்டுமே சாத்தியம். கதிர் இந்த முறை சுயநலமாகவே இருந்தான். கூடிய விரைவில் அழகர்சாமி விடுதலையாவதற்கான எல்லா அறிகுறிகளும் தெரிந்தது.

"அண்ணே, போதும்ணே நாடோடித்தனமெல்லாம். பழைய மாதிரி எங்களோடயே வந்துருண்ணே. கடைய ஆரம்பிப்போம். நீ பாத்துக்கோ. இந்த வேலையவெல்லாம் விட்றுண்ணே." தனம் தான் கதிரிடம் காத்திருக்க முடியாமல் கேட்டாள். டவுன் ஹால் ரோட் கதிருக்கு சலிக்கவில்லை, அந்த வேலை செய்வதில் வருத்தமோ தயக்கமோ இல்லை. சொல்லப் போனால் அந்த வீதியின் பழக்கம் தான் இன்று அழகர்சாமியை விடுதலை செய்வதற்கான எல்லாக் கதவுகளையும் திறக்கும் வழிகளை சொல்லிக் கொடுத்தது. இதை ஏன் விட்டுவிட்டு பழையபடி ஹோட்டல் நடத்த வேண்டும். எதிர்காலம் என்னவென்பதை தீர்மானிக்க விரும்பாத தனது குழப்பங்களுக்கு நடுவே இந்த பொறுப்புகள் தன்னை பலவீனப்படுத்துமென தயங்கினான். இந்தக் குடும்பத்தின் அன்பு முக்கியம், சேர்ந்திருப்பது எத்தனை சந்தோசமென்றும் கதிருக்குத் தெரியும். ஆனால்

தனக்கு என்ன தேவை என்பதை தீர்மானிக்க முடி யாத நிலை அவனுக்கு. அன்பை விட, விடுதலை அவனுக்கு முக்கியமானது. உள்ளே எப்பொழுதும் கனன்று கொண்டிருக்கும் மனம் பகை தீர்த்துக் கொள்ளும் வரை அடங்கி ஓயாது என்பதை அன்பு கொண்ட இந்தப் பெண்களுக்கு எப்படி சொல்லி புரிய வைப்பது. மறுக்கவும் மனமில்லாமல் கதிர் "கொஞ்ச நாள் போகட்டும் தனம். நான் முக்கிய மான சில வேலைகள செஞ்சு முடிக்க வேண்டி இருக்கு. அத முடிச்சுக்கறேன்." நம்பிக்கையோடு அவளுக்கு வாக்கு கொடுத்தாலும் அந்த தேசிய நெடுஞ்சாலையின் இரவுக்கு மீண்டும் திரும்ப அவனுக்கு விருப்பமில்லை.

ஆன்ரூ சாமி.

”வயல்களுக்குத் தீமை களைகள். மனித வர்க்கத்திற்கு தீமை ஆசை. ஆதலால் ஆசையற்றவர்களுக்கு செய்த உதவி பெரும்பயனை அளிக்கும்.”

- தம்மபதம்.

கீழ்ச்செட்டித்தெருவின் அன்றைய காலை நேர வெயில் மதுரையின் அபூர்வமான முகங்களை எல்லாம் ஆழ்ந்த நினைவுகளிலிருந்து துயிலெழுப்பியபடி துவங்கியது. என்றென்றைக்குமான அவிழ்க்கப்படா ரகசியங்களை சுமந்து வாழும் ஓர் நகரம் எத்தனை நூற்றாண்டுகளுக்குப் பின்னாலும் சலித்துப் போவதில்லை. மதுரை ரகசியங்களின் விளைநிலம். தன் கபாலத்தின் பல்லாயிரம் நரம்புகளுக்குள் மூதாதையர்களின் நினைவுகளை சுமந்து அலையும் வினோத மனிதர்களை இந்நகரின் வீதிகளில் அனேகமாய்க் காணமுடிவது வரமல்ல. நம்பிக்கைகளுக்குள்ளும் சொற்களுக்குள்ளும் வாழப்பழகிய உப்பு மனிதர்கள்.

தனக்குள்ளிருந்து தன்னை விலக்கிவிடுதலின் துவக்கத்திலிருக்கிறது உலகின் மீதான பற்று. உலகை பூர்ணமாக நேசிக்க ஒரு மனிதன்

விருப்பங்களுக்கு வெளியிலிருந்து எல்லாவற்றை யும் காண வேண்டியுள்ளது. ஆன்ரு குடும்பத் தின் மீதான விருப்பங்களை தினத்தில் அவ ருக்குள் மிகுந்து கிடந்ததெல்லாம் பால்யத்தில் தொலைந்து போன பூனைகள் குறித்த கனவு கள் தான். பசித்து அழுத அப்பூனைக்கூட்டம் பின் குரலொடுங்கி பொருட்படுத்துவாரின்றி மரணித் துப் போன துர்கனவுகள் அவ்வப்போது இடை விடாது வந்தபொழுது கனவின் விசித்திர தன் மையை தான் நம்ப மறுக்கும் நிஜமனெ புரிந்து கொண்டார். மனிதன் கனவுநிலையில் காணும் உலகத்தின் முன்னால் எல்லா யதார்த்தங்களும் பொய்யானவையே. காணும் அவ்வளவும் பசியின் பேருருவாய் வளர்ந்து நிற்பதைக் கண்டவருக்கு பசிக்காது போயிருந்தால் உலகம் எந்த மாற்றத் தையும் எதிர்கொள்ளாமல் போயிருக்குமென்கிற எண்ணம். பிரபஞ்சம் பசியால் உருவானதுதானே. தனது இந்த எளிய உடலை பசியின் கரங்க ளுக்குள் விருப்பத்தோடு அவர் கொடுக்கப்பழகிய போது தன் சொற்கள் வேறொன்றாய் மாறியிருப்ப தைக் கண்டுகொண்டார். பனி சூழ் நிலத்தின் தனி மையும் பசியும் எத்தனை கொடுமையானதென் பதை பூனைகள் அவருக்கு உணர்த்தின. குளிர் மௌனத்தின், தனிமையின் அசாத்திய உருவம். அந்த தனிமையிலிருந்து தப்பிக்கும் பொருட்டே பசியின் வழியாய் தன்னை பிரபஞ்சத்தோடு ஐயக் கியமாக்கிக் கொண்டார்.

பசி உடலின் அடைக்கப்பட்ட ஆயி ரம் கண்கள் திறந்து காணப் பழக்கிய தருணத்தில் இயல்பை மீறி அவர் உடல் லேசானது. தன்னை

துளைகளாக்கி தன் கண்களின் வழியாய்ப் பார்த்த வருக்கு பகட்டான உடைகளும் தன்னைச் சூழ்ந்த சந்தோசங்களும் எத்தனை அருவருப்பானதென் பது புரிய யாரிடமும் பேச தனக்கு சொற்கள் இல்லை என்பதைப் போல் மௌனித்துவிட்டார். இந்த தேசத்தில் தன் மிச்ச நாட்களை செலவ ழிக்க முடிவு செய்யக் காரணம் இதன் வரலாறு முழுக்கவே பிறழ்வால் ஆனது என்பதால் தான். பைத்தியத்தின் அரூபத்தை ஒவ்வொரு இந்திய னின் ஆன்மாவும் ஏதோவொரு கனத்தில் பிரதி பலிக்கச் செய்யும். ஞானம் என்பது பைத்தியமாத லின் துவக்கம். ஆன்ரூ முழு முற்றான பைத்திய நிலையை விரும்பினார். வாரணாசியின் குளிரும், வெயில் காலத்தில் மத்திய பிரதேசத்தின் கிரா மங்களின் தாங்கொண்ணா வெக்கையும் அவர் தோல்களை தொந்தரவு செய்யவில்லை. நாசியின் இந்தியர்களுக்கே பிரத்யேகமான சகிப்புத்தன்மை நிரந்தரமாக வலுத்திருந்தது. போதி மரம் ஒன் றல்ல, இந்த தேசத்தில் நூறு வருடங்களைக் கடந்து பெருத்திருக்கும் எல்லா மரங்களுமே போதி மரங் களாகத்தான் அவருக்குத் தெரிந்தது. முதல் முறையாக டேராடூனுக்குச் சென்றபோது பழங்குடி மக்களோடு காட்டிற்குள் பயணித்தார். அவரோடு இன்னும் சில வெளிநாட்டவர்கள். இந்த நாடோ டிகளுக்கு தேசமில்லை, அவர்கள் பிரபஞ்சத்தில் எதுவும் தனக்கு உடமையில்லை என்று சொல் வதாலேயே பிரபஞ்சம் முழுமையும் அவர்களுக்கு வசப்பட்டிருக்கிறது. இரவில் காட்டிற்குள் டெண்ட் அடிப்பதற்காக எல்லோரும் இடம் பார்த்து ஒதுங் கிய போது பனி இடைவெளி இல்லாமல் எங்

கும் நிறைந்திருந்தது. "இந்தக் காட்டில நிறைய புலி இருக்குன்னு படிச்சிருக்கேன்." வந்திருந்த பயணிகளில் ஒருவர் பழங்குடியிடம் சொன்னபோது அவன் சிரித்துக் கொண்டே "ஆமா 84 புலிகள் இருக்கு மொத்தமா?" என சாதாரணமாகச் சொன்னான். இத்தனை துல்லியமாக அவனால் எப்படி சொல்ல முடியுமென எல்லோருக்கும் ஆச்சர்யம். ஆன்ரூ தான் கேட்டார், "அது எப்பிடி உறுதியா சொல்றீங்க?" அவன் வெறுமனே அவரைப் பார்த்தான். "இந்தக் காடும் நாங்களும் வேற வேற இல்ல. எல்லா சின்ன அசைவையும் கவனிச்சுட்டுத்தான் இருப்போம். உங்களுக்கு எல்லாத்துக்கும் புள்ளிவிவரம் வேணும். இத்தனை பிரம்மாண்டமா திறந்திருக்க காட்டத் தெரிஞ்சுக்க எங்களுக்கு கண்கள் போதுமானது. எந்தப் புள்ளிவிவரமும் தேவையில்ல." எல்லோரும் அவன் பேசுவதையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். தான் படித்த எந்த புத்தகங்களும் இத்தனை சிக்கலான விஷயத்தை கற்றுக்கொடுத்ததில்லை யென ஆன்ரூ மலைத்துப் போனார்.

நெருப்பு சூழ இரவு உணவிற்கு முன்பாக எல்லோரும் ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில் "ஓடுங்க புலி வருது.. ஓடுங்க." என அலறியபடியே பழங்குடி ஒருவன் அவர்களை நோக்கி ஓடிவந்தான். வெளிச்சம் மிகக் குறைவாகவே இருந்த அந்த இருளில் சூழலை எவ்வாறு சமாளிப்பதெனத் தெரியாத எல்லோரும் அச்சத்தில் ஆளுக்கொரு பக்கமாய் ஓடினார்கள். மரணத்தின் ஓலத்தை எல்லோரின் குரல்களும் பிரதிபலிக்க அருகிலிருந்த மரங்களில் சிலர் வேக

வேகமாய் ஏறியிருந்தார்கள். ஒருபோதும் மரமேறி பழக்கப்பட்டிருக்காத ஆன்ரூவும் கூட ஒரு பெரிய மரத்தின் பாதி தூரம் வரை ஏறியிருந்தார். ஒவ் வொருவரும் தங்களால் இயன்றளவில் தங்களைக் காத்துக் கொண்டிருந்தனர். புலி வருவதாக அல றியவன் திரும்பி வந்து எல்லோரையும் பார்த்தான். கையிலிருந்த டார்ச்சால் எல்லோரை நோக்கியும் வெளிச்சத்தை மாற்றி மாற்றி நகர்த்தி வரச் சொன் னான். உயிர் திரும்பக் கிடைத்த நிம்மதியில் எல் லோரும் திரும்ப வந்து அவன் சொன்ன புலியைத் தேடினார்கள். "புலி வரல. நான் சும்மாதான் சொன் னேன். நீங்க எவ்வளவு வேகமா உங்களக் காப்பத் திக்க முடியும்னு சரி பார்க்க. ஏன்னா நாளைக்கு நாம காட்டுக்குள்ள போகப் ஒபோறோம். அப்ப எச்சரிக்க யாரும் இல்லாட்டியும் நீங்க ஒவ்வொ ருத்தரும் உங்களக் காப்பாத்திக்கனும். அதுக்கு முடியாதவங்கள இப்பிடியே திரும்ப போகச் சொல் லிடலாம். அதனால தான்." எல்லோரும் அவனை வெறுப்போடு பார்க்க, ஆன்ரூ அவன் தனக்கு வாழ் வின் மகத்தான விஷயங்களை கற்றுக் கொடுத்த பூரிப்பில் பார்த்தார். ஒரு மனிதன் தன் ஆயுள் முழுக்க சுற்றியலைந்தாலும் இந்தியாவையும் இந் தியர்களையும் முழுதாகப் புரிந்து கொள்ளவோ கற்றுக் கொள்ளவோ முடியாதெனத் தோன்றியது. கதைகளால் கதைகளின் கதைகளால் நிறைந்த மனிதர்கள் இவர்கள்.

தன்னிடமிருக்கும் கடைசி விருப்பங் களையும் தொலைப்பதற்காக மனம் போன போக் கில் சுற்றத் துவங்கினார். பசியை முழுமையா கத் துறப்பதற்கான பயிற்சியே அவரது அலைச்சல்.

சில நாட்கள் ஒரு வேளை உணவு போதுமானதாய் இருக்கும். சில நாட்களில் பசி எவ்வளவு உணவை எடுத்துக் கொண்டாலும் ஈடுசெய்ய முடியாததாய் இருக்கும். இந்த வயிற்றையும் பசியையும் மனித னால் கடக்கவே முடியாதா? என கவலைப்படுவார். மதுரை வந்தபோது அவருக்கு புராதன நகரம் ஒன் றிற்குள் வந்துவிட்ட உணர்வு. தூய்மையை வெறுக் கிற மனிதர்களைப் பார்க்க நிம்மதியாய் இருந்தது. சுத்தம் ஒழுக்கம் இவையெல்லாம் மனிதர்களை தனிமைப்படுத்துகிறது. இந்த அசுத்தமும், பிறழ்வும் தான் மனித சமூகத்தின் குறைந்தபட்ச சந்தோ சங்கள். மதுரை பிறழ்வின் அதீதம். அசுத்தத்தை இயல்பாகக் கொண்ட மனிதர்களோடு அவரால் எளிதில் இணங்கிப் போக முடிந்தது. அவர்கள் தான் எத்தனை மகிழ்வாய் இருக்கிறார்களென ஆச்சர்யப்பட்டார். டவுன் ஹால் ரோட் அவருக்கு துறவின் உச்சநிலையை போதித்தது. திருடுதல், போலியான பொருட்களை வியாபாரம் செய்தல், மிகக் குறைந்த செலவில் கிடைத்த மகோன்ன தாமான போதை, வெவ்வேறு வயதுகளில் பார்க்க முடிந்த விபச்சாரிகள். ஓரினப் புணர்ச்சியாளர்கள். என்ன இல்லை இந்த வீதியில். ஒரு கழிவறையின் மூத்திர நெடியைப் பொருட்படுத்தாமல் எப்படி ஒரு வனால் சில மணி நேரங்களுக்குள் பத்திலிருந்து இருபது பேரோ வாய்வழிப் புணர்ச்சி கொள்ள முடி கிறது. எத்தனை எத்தனை வியாபாரங்கள் எத் தனை எத்தனை ரகசியங்கள்? அத வீதியை சலிக்க சலிக்க சுற்றினார்.

அன்று காத்திரமான பசி. அவரின் கையில் பணமும் இல்லை. நீண்ட நாட்களுக்குப்

பிறகு பசி உயிரைச் சுருட்டி இழுத்தது. புகைக்க லாமென்றால் கஞ்சாவும் இல்லை. பசியடங்கட்டு மென குடித்த நீர் வயிற்றைக் கிளறி பசியைத் தூண் டியபடியே இருக்க, பழைய செண்ட்ரல் தியேட் டர் இருக்கும் வீதியில் ஒரு தேநீர்க் கடையில் ஒதுங்கினார். அவர் கேட்காமலேயே தேநீர் குடுத் துவிடுவார்கள். ஆனால் பசியடங்க அது நிச்சய மாய்ப் போதாது. யாரிடமும் யாசகம் கேட்க விருப் பமில்லை. ஒரேயொரு முறை திருடினால் என்ன? அவர் கைகளும் கண்களும் மிக வேகமாக தன் னைச் சூழ நின்றவர்களை நோட்டமிட்டன. அந்தக் கூட்டத்தில் இவரை யாரும் சந்தேகப்படப் போவ தில்லை. தேநீர் வந்த போது சிரித்தபடி நன்றி சொன்னவர் அதை வாங்கும் சாக்கில் மிக வேக மாக தனக்கு முன்னால் நின்றவரின் பேண்ட்டில் இருந்து பர்சை உருவினார். அவருக்கே ஆச்சர்யம். எப்படி தன்னால் இதை செய்ய முடிந்ததென. உட லில் ஒரு பதட்டமிருந்தாலும் காட்டிக் கொள்ளா மல் பர்ஸை தனது வேஷ்டிக்குள் மடித்து வைத்துக் கொண்டு தேநீரைக் குடித்துவிட்டு பணம் எடுப் பது போல் தேட, கடைக்காரர் "சாமி நீங்க எதுக்கு காசு கொடுத்துட்டு இருக்கீங்க? கெளம்புங்க." என்றான். சிரித்தபடியே நன்றி சொல்லிவிட்டு வேக வேகமாக சபரீஸ் ஹோட்டலை நோக்கி நடந்தார். அந்த உணவு இதற்கு முன் ஒருபோதும் சாப்பிடாத சுவை. சாப்பிட்டு முடித்து வெளியில் வந்தவரை நீண்ட நேரமாக யாரோ தொடர்வது போலிருக்க, திரும்பிப் பார்த்தார். சிரித்தபடி ஒரு இளைஞன். கவனமாகப் பார்த்தபோது தான் திருடியது அவனது பர்ஸ் தான் என்று தெரிந்தது. அவன் கையை

நீட்ட, கலவரமான முகத்தோடு பர்ஸைத் திரும் பக் கொடுத்தார். கதிரை ஆன்ரூ சாமி அறிந்து கொண்டது இப்படியாகத்தான். கதிர் தன் பர்ஸி லிருந்த எல்லா பணத்தையும் எடுத்து அவருக்கே கொடுத்தேன். "வெச்சுக்கங்க." அவர் வேண்டா மென மறுத்தும் கேட்பதாய் இல்லை அவன். பசிக் காக திருடும் சாமியாரிடம் உண்மை இருப்பதாக நம்பினான்.

அதன் பிறகு ஆன்ரூ அவனை அதே வீதியில் பலமுறை பார்த்தார். இருவருக்குள் ளும் ஒரு புன்னகை தான் பரிமாற்றமாய் இருக் கும். அவன் காலேஜ் ஹவுஸில் தனது அறைக்கு அடுத்த அறையில் ஒரு வாடிக்கையாளரிடம் ஒரு பெண்ணை விட்டுச் சென்றபோதுதான் அவன் செய்யும் தொழிலை தெரிந்து கொண்டார். மன் னிக்கும் பொறுமை பிறழ்வு கொண்ட ஒருவனுக் குத்தான் இருக்க முடியுமென அவர் நம்பியது வீண் போகவில்லை. அவர் கதிரை தனது நண்பனாக வும் கதிர் அவரை குருவாகம் ஏற்றுக்கொண்டார் கள். தன் தொழில் வாழ்க்கை எல்லாவற்றையும் குறித்து எப்போதும் குற்றவுணர்வுகளோடு இருப் பவனை அவர் தான் மீட்டெடுத்தார். வாழ்க்கை குறித்த பொய்களை வெற்றி குறித்த நம்பிக்கை களை அவர் அவனிடமிருந்து வெளியே தூக் கிப் போட்டார். 'தேவையின் பொருட்டு மனிதன் செய்யும் குற்றமில்லை' என அவர் கற்றுக் கொடுத்ததைத் தான் நிஜமென நம்பினான். ஆம் தான் செய்வதெல்லாம் எளிய தேவைகளுக்காக என்னும் நிஜம் அவனை ஆறுதல் கொள்ளச் செய் தது. அவனிடமிருந்து கஞ்சாவைத் தவிர எதையும்

அவர் வாங்கிக் கொள்வதில்லை. ஒரே இடத்தில் அமர்ந்து தொடர்ந்து மூன்று நான்கு கஞ்சா சிகரெட்டுகளை புகைத்தாலும் அவரிடம் எந்தச் சலனமும் இருக்காது. ஒருநாள் காலை விடிவதற்கு முன்பாகவே நாகமலைப் புதுக்கோட்டையிலிருக்கும் சமணப் படுகைக்கு அவரைக் கூட்டிக் கொண்டு சென்றான். சுத்தமான காற்று வெயிலை அனுமதிக்காத அதிகாலை. வெகு தூரத்திலிருந்து பறவைகள் வந்தபடியே இருந்தன. பாறைகளுக்கு நடுவே பாதையைத் தேடி படுகை இருந்த புடவை அடைந்தவர் அதன் அபூர்வ குளிர்ச்சியில் நெகிழ்ந்து போனார். கண்களை மூடி நீண்ட நேரமாய் அமர்ந்திருந்தவர் உயிரோடுதான் இருக்கிறார் என்பதை சீரான மூச்சின் இயக்கம் மட்டும் உறுதி செய்தது. கதிர் அவருக்கு எதிரில் இருந்த ஒரு பாறையில் உட்கார்ந்து கொண்டு அவரையே பார்த்தான். கண்விழித்தபோது அவரின் முகத்தில் அசாத்தியமான தேஜஸ். சிரித்தபோது புதிதாக பிறந்த ஒரு குழந்தையின் மலர்ச்சி. அவன் சுருட்டி வைத்திருந்த கஞ்சா சிகரெட்டை அவருக்குத் தந்தான். நிதானமாக புகைக்கத் துவங்கியவரிடம் “எல்லா பாவத்தையும் விட்டுட்டு நானும் உங்கள மாதிரி ஆகிடவா சாமி?” பணிவாய்க் கேட்டான். “இந்த உலகத்துக்கு நீ எந்தக் கெடுதலும் செய்யலையே. உடல் ஒரு தேவை. அது தேவப்படறவங்களுக்கு உதவி செய்ற? பிம்ப்பா இருக்கறதுக்கு ஒரு பக்குவம் வேணும் கதிர். அது உங்கிட்ட இருக்கு.” அவர் அவனை ஏற்கவுமில்லை, மறுக்கவுமில்லை.

“அட போங்க சாமி. அவசரத்துக்கு எங்கிட்ட உதவின்னு வர்ற எத்தனையோ பேர் முதுகுக்குப் பின்

னால எவ்வளவு கேவலமா பேசறாங்கன்னு தெரியுமா? யார் கூடயாச்சும் சேந்து சாப்பிடனும்னா கூட எனக்கு துணையில்ல சாமி."

"அவங்க வாழ்க்கை முழுக்க எப்பவும் யார் பத்தியாவது பேசிட்டே தான் கதிர் இருப்பாங்க. உன்ன மாதிரி அவங்களால வாழ முடியாது. அதனால தான் உன்னயப் பத்தி அதிகமா யோசிக்கிறாங்க. உணவ பகிர்ந்துக்கனும்னு எத்தன பேருக்குடா தோணும்.? நீ இவங்களோட உன்னய ஒப்பிடாத." அவர் அவனிடமிருந்து கற்றுக் கொள்வதாக சொல்லும் போதெல்லாம் அவனுக்கு கூச்சமாக இருக்கும். தன்னிடம் என்ன இருக்கு கற்றுக் கொள்ள? தான் பிசிறுகள் நிறைந்த மனிதன் அவ்வளவுதானே. சாமி பிசிறுகளைத்தான் துறவென்றார். எல்லாவற்றிலிருந்தும் துண்டித்துக் கொள்ள முதலில் எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு அதில் சலிக்க வேண்டும் கதிர். அவர் சொல்வது கொண்டாடவா? அல்லது துறக்கவா? அவன் அவரை இரண்டாகப் பிளந்து அவரின் தலைக்குள்ளிருக்கும் மூளையை ஒருநாள் தனக்குள் வைத்து யோசிக்க வேண்டுமென நினைப்பான். எத்தனை குழப்பங்கள் இருந்தாலும் அந்த மனிதரின் சொற்கள் அவனை மீட்டெடுத்தன.

"நீ பசிய எப்பவோ கடந்துட்ட கதிர். ஆனா உனக்குள்ள வன்முறை இருக்கு. அது உன்னய விட்டு எப்பவும் போகாது."

கதிருக்கு உலுக்குப் போட்டது. வேறு யாருக்கும் தெரியாத தன் அந்தரங்கத்தை இவர் எப்படி கண்டுகொண்டார். "நீ எத துறக்கனும்னு நெனைக்கி

றியோ அதான் நீ. உன்னால அதுல இருந்து தப் பிக்கவே முடியாது. உனக்குள்ள இருக்க காயம் ஆறனும்னா அதை விட பெரிய காயங்கள நீ பாக் கனும். வலிக்கு பழக பழகத்தான் எல்லாம் எளி மையா ஆகும். நீ இந்த உலகத்துக்கு முக்கிய மானவன். பந்தங்கள் எவ்வளவு போலித்தனமான துன்னு புரிஞ்சுக்கிட்ட மனிதன் வேற யார் இருக்க முடியும்? நீ புரிஞ்சுக்கிட்டத மத்தவங்களுக்கும் புரிய வெச்சிடு போதும்."

கதிர் மலைத்துப் போய் நின்றான். எதையெல் லாம் அவரோடு பேசி தெளிவு பெற நினைத் தானோ அதைத்தான் அவர் அவனுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். "எனக்கு எதும் புரியல சாமி?" என தடுமாறினான். "நீ எத செய்ய நினைக்கிறியோ அத செஞ்சு முடி. அவ்வளவுதான். என்னோட சுத் தறதோ, கடவுளத் தேடறதோ பிரார்த்தனை இல்ல. வன்முறைக்கு பழகறதுதான் முழுமையான பிரார்த் தன. நீ அதுக்கு முழுமையா உன்ன ஒப்புக் கொடு." அவர் அவனுக்கு முன்பாக எழுந்து மீண்டும் வந்த பாதையிலேயே நடந்தார். அந்த மலைகளும் மரங் களும் அவனை நிலைகுலையச் செய்தன. தன் னைச் சூழ்ந்திருந்த பேருண்மைகளுக்கு முன் னால் நிர்வாணமாய் உணர்ந்தான். அப்பாவைக் கொலை செய்தலென்பதுதான் தனக்குத் தானே அவன் ஏற்படுத்திக் கொள்ளப் போகும் விடு தலை. மனிதன் தன் ஆன்ம விடுதலைக்காக எந்த விலையை வேண்டுமானாலும் கொடுக்கலாமென இதைத்தன் ஆன்ரூ சாமி அடிக்கடி சொல்கிறாரா? அவர் சென்ற திசையைப் பார்த்தான். பறவைகள் கூட்டமாய் அவரைத் தொடர்ந்து சென்றன.

விடுதலைப் பத்திரம்.

நியாயமற்ற மன்னிப்புகளும் ஒருவித வன் முறைதான். மன்னிப்பையும் கருணையையும் இந்த சிறைச்சாலை எளிய விலைகளுக்கு விற்றுக் கொண்டிருந்தது. சாமர்த்தியமாக அதை வாங்கிக் கொண்ட எத்தனையோ பேர் மீண்டும் மீண்டும் இங்கு வருகிறவர்களாக இருக்கிறார்கள். குற்றங் களுக்கு பழக்கப்பட்டவனுக்கு தப்பித்தலின் ரகசி யமும் பழகிப்போகுமானால் இந்த நீதிமுறைதான் எத்தனை பலவீனமானது? தண்டனைக் கைதிக ளின் நலன்களுக்காக எல்லா சிறைச்சாலைகளி லும் எவ்வளவோ வாய்ப்புகள் கொடுக்கப்படுகின் றன. வாய்ப்புகளை பயன்படுத்தி திருந்தி வாழ் கிறவர்கள் வெகு சொற்பமே. ஒவ்வொரு செவ் வாய்க் கிழமையும் கைதிகளை சந்திக்க வரும் நன்னடத்தை அதிகாரி அந்தமுறை கையில் ஒரு பட்டியலோடு வந்திருந்தார். ஒரு கைதியின் சிறை நாட்களில் ஆக சந்தோசமான நாள் இது. அந் தப் பெயர்ப்பட்டியலில் இருக்கிற பத்தோ இரு பதோ ஆட்களுக்காக சக கைதிகள் எல்லோருமே சந்தோசப்படுவார்கள். சிறையில் பத்து வருடங்க

ளைக் கடந்து விடுதலைக்காக காத்துக் கொண் டிருக்கும் ஏராளமான கைதிகள் தங்களின் பெயர் வராதாவென காத்துக் கிடக்கும் லிஸ்ட் அது. ஒவ் வொரு வருடமும் நன்னடத்தையின் அடிப்படை யில் யாரை விடுதலை செய்யலாமென தமிழ்நாடு முழுக்க இருக்கும் சிறைகளில் இருந்து பட்டி யல் தயாரித்து பின்பு கவனமாக ஆராய்ந்து அதி லிருந்து சிலரை விடுதலை செய்வார்கள். அப்படி நீண்ட ஆய்வுக்குப்பின் இறுதிசெய்யப்பட்ட பட்டி யல் அது. கதிர் இந்தப் பட்டியலில் அழகர்சாமியின் பெயர் வரவேண்டுமென்பதற்காக செலவழித்த உழைப்புகள் வீணாகியிருக்கவில்லை. வாய்ப்புள் ளவர்கள் தங்களுக்கான தண்டனைக் காலம் முடி வதற்கு முன்பாக வெளிவருவது போலவே ஆதர வில்லாதவர்கள் நீண்ட காலம் வெளியே வரமுடி யாமல் இருப்பதும் உண்டு. பெயருக்கு பதினான்கு வருட தண்டனையென்றாலும் பலபேர் தண்ட னைக் காலம் முடிந்தும் விடுதலையாவதில்லை. அந்த வருடம் மதுரை சிறைச்சாலையில் இருபத்து நான்கு பேரும், தமிழ்நாடு முழுக்க இருந்த சிறைக ளில் இருந்து நூற்றி பதிமூன்று பேர் விடுதலையாக இருந்தார்கள்.

நீண்ட காலம் பகலை கம்பிகளுக்கு வெளி யிலும் இரவை கம்பிகளுக்குள் சின்னதொரு அறையிலும் கழித்துப் பழகும் மனிதன் இயல்பை விடவும் அதிக சுயநமலமிக்கவானாகிறான். தனக் கான வாழ்க்கை குறுகியதென்கிற அச்சத்தில் அவன் எல்லாவற்றையும் தனதாக்கிக் கொள்ள விழைகிறான். வழக்கமாக சிறு சிறு வேலைக்குச் செல்லும் தண்டனைச் சிறைவாசிகள் அன்றைய

தினம் நன்னடத்தை அதிகாரிக்காக காத்திருந் தார்கள். வெளியில் காட்டிக்கொள்ள முடியாத பட படப்பு. அடைபட்டுக் கிடந்தவனுக்கு கிடைக்கும் சுதந்திரம் ஒரு மறுபிறப்பு. தண்டனைக் காலத்தை எல்லோரும் அப்படி எடுத்துக் கொள்வதில்லை. இந்த வழக்கில் விடுதலையானால் இன்னொரு வழக்கென வாழ்கிறவர்களுக்கு சிறைச்சாலையும் இன்னொரு வீடு. சந்தர்ப்பவசத்தால் குற்றவாளி யாகும் மனிதர்களின் நிலை அப்படியில்லை. தன் னைச் சூழ்ந்த தீமைகளில் இருந்து எப்போதும் தன்னைக் காத்துக் கொள்ளப் போராடி பழைய மனிதனாய் திரும்பிச் செல்வதுதான் அவர்கள் அத்தனை வருடம் தேக்கி வைத்திருந்த கனவாக இருக்கும்.

பிற்பகல் உணவிற்கு இன்னும் நேரமிருந் தது. பகல் நேரத்தின் இள வெயில் ரம்மியமாய் எங் கும் நிரைந்திருக்க ஆட்கள் சிலர் ஓரிடத்தில் தாயம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆளுக்கு நான்கு கனேஷ் பீடி போட்டிக் கட்டணம். விசாரணைக் கைதிகள், தண்டனைக் கைதிக ளென வேறுபாடில்லாமல் களை கட்டியிருந்த கூட் டம். செங்கல்லால் போடப்பட்டிருந்த தாயக் கோடு களை ஆர்வமாக கவனித்துக் கொண்டிருந்த ஏரா ளமான கண்களில் விஜியும் இருந்தான். அவன் பக் கம் வெற்றி மெது மெதுவாக நகர்ந்து கொண்டிருந் தது. தாயம், ஆறு, பணிரெண்டென ஒவ்வொன்றுக் கும் ராகமாக சொல்லும் அவன் குரலைப் பின் தொடர்ந்த ஆட்களில் சிலர் 'இன்னிக்கி விஜிக் குன்னு எழுதி வெச்சிருக்கு போல' என சத்தமாக சிரித்தார்கள். கூடியிருந்த மனிதக் கூட்டத்தின்

வெக்கையில் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. விளையாட்டினூடே புதிதாக வந்த விசாரணைக் கைதி ஒருவன்,"நான் உள்ள வாரதுக்கு ரெண்டு நா முன்ன ஒரு நியூஸ் படிச்சண்ணே. வேலூர் ஜெயில்ல ஒரு கைதி கன்விக்ட் வாட்டரெல்லாம் என்னய அடிக்கிறாய்ங்கன்னு கம்ப்ளைண்ட் பண்ணி இருக்காரு. விசாரிச்சவங்களும் அவன் பக்கம் நிக்காமப் போனதால வெறுத்துப் போயி மரத்துல ஏறி குதிச்சு செத்துப் போனாராம். அப்பிடி எல்லாம் செயில்ல நடக்குமாண்ணே." என பயத் தோடு கேட்டான். ஒரு சிறையை பற்றின எந்த செய் திகளும் இன்னொரு சிறையில் இருக்கும் ஆட்க ளுக்கு தெரியாமல் பார்த்துக் கொள்வதில் போலிஸ்காரர்கள் கவனமாக இருப்பார்கள். ஆனா லும் எல்லைகள் தாண்டி கைதிகள் எல்லா சிறைக ளிலும் நம்பிக்கையான தொடர்புகளை வைத்தி ருந்தனர். அத்தனை பரபரப்பிலும் எல்லோரும் சில நொடி அவனைத் திரும்பிப் பார்த்தனர். விஜி யோடு இருந்த ஒருவன் "புதுசா தம்பி?" எனக் கேட்க, அவன் ஆமென தலையாட்டினான். "நீ யார் வம்புக்கும் போகாம பொச்ச மூடிட்டு மட்டும் இரு. ஒரு பிரச்சனையும் வராது." என்றதும் எல்லோரும் சிரித்துவிட்டு மீண்டும் ஆட்டத்தின் பக்கமாக கவ னத்தைத் திருப்பினார்கள். கன்விக்ட் வார்ட்டர் ஒருவன் தள்ளி நின்று "யோவ் அந்த எய்ட்ஸ் க்ரூப்பு வந்திருக்காய்ங்க. நாடகம் போடப் போறாய்ங்க. வாங்கய்யா." என சத்தமாகக் கூப்பிட்டார். முடியும் தருவாயிலிருந்த ஆட்டத்தை துண்டிக்கும் விருப்ப மில்லாமல் விஜி "ஸார், அவய்ங்களுக்கு வேற வேல இல்ல. ஆறு மாசத்துக்கு முன்ன என்ன

சொன்னாய்ங்களோ அதையே தான் திரும்பவும் சொல்லப் போறாய்ங்க. அவய்ங்க சொல்ற மாதிரி இருக்கனும்னா சாமியாராத்தான் இருக்கனும்." என சிரித்தான். "சர்தாண்டா ஐயா.. நாளப்பின்ன சீக்கு வந்தா தெரியும். வாங்கடா." என சலித்துக் கொண்டார். ஆட்டத்தின் முடிவு காணும் ஆவலில் கூட்டம் களையாமல் கடைசி நிமிடத்திற்கு காத்திருக்க, எதிர்பார்த்தபடியே விஜி வென்று அத்தனை பீடிகளையும் எடுத்துக் கொண்டான். யு கேன் தொண்டு நிறுவனத்தின் நாடகம் பார்க்க பெரும்பாலான கைதிகள் மூன்றாம் பிளாக்கை ஒட்டியிருந்த பொதுக்கூடத்தில் கூடினார்கள். எய்ட்ஸ் என்னும் நோய் ஒரு மனிதனுக்கு ஏற்படுத்தும் அவமானங்கள், புறக்கணிப்பு எல்லாவற்றைக் குறித்தும் அவர்கள் பாடத் துவங்கியிருந்ததில் பெரும்பாலனவர்கள் கவனம் செலுத்தியிருக்காத போதும் ரகசியமாக அவர்கள் தரும் ஆணுறைகள் தேவையென்பதால் கவனத்தையும் சிதறவிட்டிருக்கவில்லை.

விடுதலையாவதற்கான பட்டியலில் இருந்தவர்களை ஜெயில் வார்டன் தனிப்பட்ட முறையில் மருத்துவர் அறைக்கு அழைத்தபோது அந்த வரிசையில் தானும் இருப்போமென அழகர் சாமி எதிர்பார்த்திருக்கவில்லை. அவரை விடவும் நீண்ட வருடங்கள் இதே சிறையில் இருப்பவர்கள் அதிகம். பிறகு எப்படி ? நன்னடத்தையின் காரணமாகவா? அவருக்கே சிரிப்பு வந்தது. அவரைப் போலவே அவரோடு வந்த மற்றவர்களுக்கும் அவரின் விடுதலை ஆச்சர்யமளித்திருக்க வேண்டும். குசுகுசுப்பாக பேசிக் கொண்டார்கள். விலையேதும் இல்லாத கருணையோ தண்டனையோ

இல்லை . கடந்த வருடமே விடுதலையாவோ மென காத்திருந்து முடியாமல் போன வேலுச் சாமி அண்ணன் கூட அடிக்கொரு முறை இவரைப் பார்த்து சிரித்தார். நன்னடத்தை அதிகாரியின் முகத்தில் பெருமிதம். அந்த விடுதலை தனது கரு ணையினால் கிடைப்பதான பாவனை. கைதிகள் எல்லோரும் அவருக்கு மரியாதையாக வணக்கம் வைக்க, பதிலுக்கு அவரும் ஒரு கையால் வணக் கம் வைத்தார். எல்லோரும் அவரின் கையிலிருந்த காகிதத்தை ஆர்வமாகப் பார்த்தனர். "எதுக்கு கூப்ட்டு இருக்கோம்னு உங்களுக்கு தெரிஞ்சிருக் கும். இப்பவே சந்தோசமா ரெடி ஆகிருப்பீங்க. சரி. பேரறிஞர் அண்ணாவோட பிறந்த நாள் அன் னிக்கி உங்க எல்லோருக்கும் விடுதல இருக்கும். இப்போதைக்கு யாரும் யார் கிட்டயும் சொல்லிக்க வேணாம். இருக்கற மிச்ச நாளையும் சண்ட சத் தமில்லாம கழிச்சிட்டுப் போகனும். மத்த வெவ ரம் எல்லாத்தையும் விடுதலையாகறப்போ சொல் லுவாங்க." அந்த சின்னஞ்சிறிய இடம் அங்கிருந்த மனிதர்களின் சந்தோசத்தால் ஒளி நிரம்பியது.

"சரிங்கய்யா." எல்லோரும் சந்தோஷமாகச் சொன் னார்கள்.

"எல்லாம் உங்க புண்ணியம் ஸார். இத்தன வருசத் துக்கு அப்றம் வீடு திரும்பப் போறோம். உங்களுக்கு எப்பிடி நன்ற் சொல்லன்னு தெரியல." வேலுச்சா மியின் குரல் கம்மியது. இந்த சிறைச்சாலைக் குள் வரும்போது ஓங்கு தாங்காய் திமிறிக்கிடந்த முரட்டு உருவம். இப்பொழுது உத்தரவுகளுக்கு அடிபணிந்த மிருகமாக தண்டனை குறித்த அச்சங் களுக்குப் பழகின உடலோடு ஒடுங்கிப் போயிருந்

தார். “என்ன வேலுச்சாமி, இது என் கடமை இல் லியா? அதுக்குத்தான என்னய அரசாங்க, நியமிச்சி ருக்கு.”

“இருந்தாலும் இத்தன பேர் ல எங்களையும் பொருட்படுத்தி சொல்றது லேசான காரியமாங் கய்யா.” இன்னொருவர் வேலுச்சாமிக்கு ஆதர வாக இப்பொழுது பேச, சிரித்தபடியே அதிகாரி “இது நான் மட்டும் எடுக்கற முடிவா என்ன? சூப் பிரண்ட், அதுக்கு மேல அமைச்சர்னு நிறைய பேர் சம்பந்தப்பட்ட விஷயம்யா.” தன்னடக்கத்தோடு அவர்களிடம் சொன்னார்.

“எதுவா இருந்தாலும் முதல் காரணம் நீங்கதான் யா.. நாங்க எப்பவும் மறக்க மாட்டோம்.” எல்லோ ரும் கண்ணீர் தளும்ப கையெடுத்துக் கும்பிட்டனர்.

“அட இருக்கட்டும் விடுங்கப்பா.” அவர் எல் லோரையும் அமைதிப்படுத்திவிட்டு கிளம்புவதற்கு முன்பாக “அழகரு...”

என்று நின்றுகொண்டிருந்தவர்களில் அவரைத் தேட, அவர் பவ்வியமாய் கூட்டத்தை விலக்கி முன் னால் வந்தார். “அய்யா சொல்லுங்கய்யா.” வலிய வரவழைத்துக் கொண்ட பணிவு அழகரின் குர லில். பொலிகாளை அடங்கிப் போகும் பாவனை யில் நின்றார். “மத்தவங்க யாருக்கு வேணாலும் நன்றி சொல்லட்டும். நீ உன் மகனுக்கு நன்றி சொல்லு. யார் யாரயோ புடிச்சு உன் பேர சேக்க வெச்சுட்டான். நான் உன் பேர லிஸ்ட்ல சேக்கவே இல்ல. முக்கியமான ஆளுங்க எல்லாம் சிபாரிசு பண்ணதாலதான் சேத்தேன்.” அழகரை வெளியே அனுப்ப விருப்பமில்லாதவர் போல சொன்னார்.

தன் வாழ்நாளில் தன் மகனுக்கென எதையுமே செய்யவில்லையென்கிற எண்ணம் கொஞ்சமாய் அழகருக்கு உறுத்தியதால் அவர் பதில் சொல்லாமல் நின்றார். "இனிமேலாச்சும் குடும்பத்துக்கு பொறுப்பா இருந்து பாத்துக்கோய்யா." கடைசி வார்த்தைகளை சொல்லி முடித்த திருப்தியில் அதிகாரி வெளியேறிச் செல்ல, எல்லோரும் உற்சாகமாக அங்கிருந்து கிளம்பினார்கள்.

நாடகத்தை முடித்துவிட்டு யு கேன் குழுவினர் கிளம்பியிருக்க ஆணுறை கிடைத்த மகிழ்ச்சியை அதன் தேவை உணர்ந்த ஆட்களிடம் காண முடிந்தது. வேலுச்சாமி அன்றே தான் விடுதலையாகிவிட்ட நிம்மதியிலும் உற்சாகத்திலும் இருந்ததால் வரும் போதே வார்டனிடம் 'எனக்கு இன்னைல இருந்து டூட்டி வேணாம் ஸார். வேற யாருக்காச்சும் குடுங்க.' என இத்தனை காலம் தனக்கு படியளந்த வேலையைக் கூட தியாகம் செய்துவிட்டு வந்திருந்தார். எல்லோரும் அவர்களைச் சூழ்ந்து கொள்ள, அழகர்சாமி விஜியைத் தேடிப் போனார். தனக்குப் பின்னால் விஜி தான் தனியாக வியாபாரத்தைக் கவனிக்க வேண்டும். அது அத்தனை எளிதான காரியமில்லை. கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக இவர்கள் மட்டுந்தான் சிறைக்குள் மருந்து விற்கிறார்கள். விஜி, மருது, சுப்புராஜ், ஆண்டி, சிவா என தன்னோடு விசுவாசமான நிறைய பேரை வைத்திருந்தார். இந்த பலம் தான் வேறு யாரையும் அவர்களுக்கு எதிராக வளரவிடாமல் வைத்திருந்தது. ஆனால் தனக்குப் பின்னாலும் இது அப்படியே இருக்கும் என்பதில் அழகர்சாமிக்கு கொஞ்சமும்

நம்பிக்கையில்லை. உடன் இருப்பவர்களிலேயே விஜிக்கு எதிரான ஆட்கள் நிறைய இருந்தனர். அவனிடமிருந்த பொருட்கள் அடிக்கடி திருடு போகத்துவங்கியபோது அதற்கான நஷ்டத்தையும் அவனே ஏற்க வேண்டியிருந்தது. இதனாலேயே விஜி பொருளை இப்போதெல்லாம் ஒரே இடத்தில் வைப்பதில்லை. நம்பகமான ஒவ்வொருவரிடமும் பிரித்துக் கொடுத்து தான் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறான்.

அந்தப் பகல் தன்னை இத்தனை வஞ்சிக்குமென விஜி எதிர்பார்த்திருக்கவில்லை. அழகர்சாமி தான் விடுதலையாகப் போகும் செய்தியை விஜியிடம் சொன்னபோது அவர் முகத்தில் அத்தனை பிரகாசம். 'எனக்கு முன்னயே தெரியும் சின்னய்யா. கதிர் எல்லா ஏற்பாடையும் செய்யும் போதே எங்கிட்ட சொன்னான்." விஜியின் குரலில் அத்தனை சந்தோசமில்லை. தேவைக்கும் அதிகமாகவே இங்கு சேர்த்து வைத்திருக்கும் பகையின் விளைவுகளை இனி அவன் தனியாக எதிர் கொண்டாக வேண்டும். "ஒரு பத்து நாள் போகவும் எல்லா பொறுப்பையும் நீயே எடுத்துப் பாத்துக் கடா விஜி. நம்ம ஆளுங்க கிட்ட நான் சொல்லி வெக்கிறேன். வெளிய போயிட்டா என்ன எப்பவும் போல தொழில பாப்போம். நான் சப்போர்ட் பன்றேன்." அவர் உற்சாகமாக சொன்னார். தனது பொறுப்பில் இங்கு வியாபாரம் செய்வது எளிதானதில்லை என்பதை விஜி தெளிவாகப் புரிந்து வைத்திருந்ததால் அவருக்கு எந்த வாக்குறுதிகளையும் கொடுத்திருக்கவில்லை. தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிகளை மட்டுமே யோசித்

துக் கொண்டிருந்தான். தொழில் தன் கையை விட்டு முழுமையாக இடம் மாறிய நாளில் இருந்து பொறுமை காத்து வந்த தங்கராசு கடந்த சில நாட்களாக மரத்தை விட்டுவிட்டு வேர்களை களை யெடுப்பதை கவனமாக செய்து கொண்டிருந்தான். இதற்குப்பின் வெறும் நம்பிக்கைகளை மட்டும் பிடித்துக் கொண்டு சிறைச்சாலையில் காலம் கடத்துவது எளிதான காரியமில்லை. தன்னை எவரும் எதிர்க்க முடியாத அளவிற்கு ஆட்களை உடன் வைத்துக் கொள்ள முயற்சித்தான். விசுவாசமான மனிதர்களை விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. விஜி பிரத்யேகமாக அவர்களுக்கு அன்பையும் தந்து தன் பக்கமாய் இழுத்துக் கொண்டிருந்தான். பலமானவர்களை பலவீனமான ஒரு தனிமனிதனால் தனித்து எதிர்க்க முடியாது. எல்லோருக்கும் இரங்கும் மனமிருந்தது விஜியிடம். அந்த மனதிற்காகவும், அவனின் உறுதிக்காகவும் அவனோடு இணைய நிச்சயம் யாரோ சிலர் இருக்கக் கூடுமென நம்பினான்.

முருகனும் கதிரும்.

பேய்கள் அவனைச் சூழத் துவங்கி தொடர்ந்தன. அசாத்தியமான பாவங்களை செய்யத் துணிந்த அவன் மனதிற்குள் விடுதலையை விரும்பும் சாதாரண மனிதனும், பழி தீர்த்துக் கொள்ள துடிக்கும் காவல் தெய்வமும், இச்சைகளில் இருந்து மீளத் துடிக்கும் துறவியும் பிறப்பெடுக்கத் துவங்கினார்கள். அழகர்சாமி விடுதலையாகப் போகும் செய்தி தெரிந்து கொண்டு கதிர் சந்தோசம் கொண்ட அளவிற்கு அச்சமும் கொள்ளத் துவங்கினான். ஒருவனை கொலை செய்ய யோசிக்கும் நாளில் கொலை செய்கிறவனுக்குத் தான் முதலில் மரணம் குறித்தான அச்சம் சூழ்கிறது. உள்ளிருந்து கொதித்தெழுந்த வெறுப்பின் தீ நாவுகள் கொடும் பசியில் காத்திருக்கத் துவங்கின. அவனை விடவும் வலுவானவர், அவரைக் கொலை செய்வது மலைப்பான காரியம். ஒற்றை மனிதனாக ஒரு கடலை நீந்திக் கடக்கும் சாமர்த்தியமும் அதே வேகத்தில் நான்கு மலைகளை ஏறி இறங்கும் வலுவும் வேண்டும். யாரோ ஒருவனை வீழ்த்துவதற்கு மிக எளிதாக ஒரு மனிதன் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள முடியும், தன்

தகப்பனை வீழ்த்த அந்த மனிதன் அதிமனிதனாய் மாற வேண்டும். தந்தையர்கள் கொல்லப்படும் நாளில் தான் மகன்கள் பிறக்கிறார்கள். அப்படியானதொரு பிறப்பிற்காக கதிர் தவமிருக்கத் துவங்கினான். தன் தந்தையைக் கொலை செய்ய ஏதோவொரு தருணத்தில் நினைக்காத மனிதர் நம்மில் அபூர்வம். அவர்கள் எல்லோரும் அதிமனிதனாய் மாறும் துணிவில்லாது போவதாலேயே அந்தக் கொலைகளைச் செய்யாமல் தவிர்க்கிறார்கள்.

தன்னை அதிமனிதனாய் மாற்றிக் கொள்ளவே கதிர் உள்ளூர முயன்றான். உடல் வலுவை குழப்பங்கள் தோற்கடித்தன. எளிதில் உறுதி குலையாத ஒருவன் தன்னோடு இருக்க வேண்டும். கொலையைத் தொழிலாகக் கொண்டவனை அதற்குப் பழகாத ஒருவன் கொலை செய்வ தன் பின்னாலிருந்த சிரமங்களை யோசித்த கதிர் தனக்கு நம்பிக்கையான இன்னொரு ஆள் வேண்டுமென யோசித்தான். அவனைப் புரிந்து கொள்ள முடிந்த ஒருவனால் மட்டுமே இந்தக் காரியத்தில் துணை நிற்கமுடியும். யாரோ ஒருவருக்கு பணம் கொடுத்து இதை செய்து முடிக்க அவனுக்கு விருப்பமில்லை. அழகர்சாமியின் மரணத்தை அருகில் நின்று கண்ணால் பார்க்க வேண்டும். மனதினுள் இருக்கும் மொத்த வெறியையும் உள்வாங்கி அவரின் உடலுக்குள் இறங்கும் கத்தியை பிடித்திருக்கும் தருணம் அவனுக்கு முக்கியமானது. தந்தையைக் கொல்ல நினைத்து முடியாமல் புழுங்கிச் சாகும் எத்தனையோ பேரின் உள்ளார்த்தமான கொதிப்பையெல்லாம் தன் விரல்கள் கொப்பளிக்க வேண்டுமென நினைத்துக் கொண்டான்.

”நான் எல்லாத்துல இருந்தும் மீள இதவிட்டா எனக்கு வேற வழி தெரியலடா முருகா. என் வாழ்க்கைய நான் அர்த்தப்பூர்வமா மாத்திக் கனும்னா இத செஞ்சுதான் ஆகனும். எனக்கு உன்ன விட்டா நம்பிக்கையான வேற யாருமில்ல. என் கூட இருப்பியா?” கதிர் முருகனிடம் தொலை பேசியில் உதவி கேட்டபோது என்ன பதில் சொல் வதெனத் தெரியாமல் முருகன் தயங்கினான். இது ஒரு நாளில் சடாரென எடுத்துக் கொண்ட முடி வல்ல, நீண்ட காலமாய் அவனுக்குள் தேங் கிய எல்லா வலிகளுக்குமான தீர்வு. தகப்பனின் மீதான பகை சிலருக்கு தொப்புள்கொடி அறுத்த நாளில் இருந்து துவங்கிவிடுகிறது. கருவறை யின் நீண்ட கால உறக்கத்திலிருந்தே தகப்பனின் மீதான பகையோடு காத்திருந்த கதிர் இத்தனை காலம் அழகர்சாமியை எதுவும் செய்யாமல் இருந் ததே ஆச்சர்யம் தான். “உனக்காக என்ன வேணா லும் செய்வண்டா கதிரு. ஆனா நீ நல்லா யோசிச் சுக்கோ. ஒரு மனுஷன வெறுக்கறது வேற. கொல செய்றது வேற. பாவம் புண்ணியம்னு எல்லாம் நான் சொல்ல வரல. அதத்தாண்டி குற்றவுணர்ச்சின்னு ஒன்னு இருக்கு. அது உன்ன சாகற வர கொல் லும்டா.” முருகன் நிதானமாக அவனுக்கு எடுத் துச் சொன்னான். “உள்ள இருக்க வலிகள விட வும், வெறுப்ப விடவும் குற்றவுணர்ச்சி பெருசா இருக்காது முருகா. வாழ்க்கையோட பெரும்பகுதி சந்தோசங்கள இழந்துட்டேன். ஜெயில்ல இருந்து விடுதலையாகி அந்த மனுஷன் எப்பவும் போல தன்னோட சுயநலங்களுக்காக சந்தோசமா வாழ் றத பாக்கற அளவுக்கு என பொறுமையோ மன

தைரியமோ இல்லடா. அவரக் கொல்லனும். இல்லன்னா இந்த கொந்தளிப்பு என்னயக் கொன்னுடும்." கதிர் ஆத்திரம் கொப்பளிக்க கலங்கினான். "சரிடா, அப்போ நான் கிளம்பி வரேன். அவர் விடுதலையாக இன்னும் எவ்ளோ நாள் இருக்கு?"

"நாற்பது நாள்டா."

"ம்ம். நீ வேற யார்கிட்டயும் இதப்பத்தி சொல்லாத. பொறுமையா இரு." கதிர் தன்னிடம் உதவி கேட்ட நிமிடத்திலேயே முருகனும் அந்தக் கொலைக்குத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டான். தன் குடும்பம், குழந்தை என எல்லோரின் மீதும் அவனுக்கு அக்கறை இருக்கிறதுதான். ஆனால் இவனுக்காக இந்த வாழ்க்கையில் ஏதாவதொன்றை செய்ய முடியும் அவன் நிரந்தரமாக எல்லாத் துயரிலிருந்தும் அதன் மூலம் மீண்டுவிடுவானென்றால் அதற்காக துணை நிற்கலாமென மனது சொன்னது. இந்தக் கொலை ஒரு தனிமனிதனுக்கு தரும் தண்டனையா? அல்லது கதிருக்கு கிடைக்கப் போகும் விடுதலையா? இது பாவமென்றால் இந்தப் பாவத்தை அவனுக்காக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். முருகனுக்கு அழகர்சாமி சாக வேண்டுமென எந்த மன உந்துதலும் இல்லை. அழகர்சாமியை விடவும் மிக மோசமான மனிதர்கள் எல்லாம் இந்த உலகில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இந்தக் கொலை இரண்டு மிருகங்களுக்கு இடையிலான ரகசியமான யுத்தம். காயம்பட்ட ஒரு குட்டி விலங்கு பல காலம் பொறுமையாக பலி வாங்க காத்திருக்கிறது. நியாங்களுக்கு அப்பால் இரண்டு மிருகங்களுக்குமான விடுதலை இது. முருகன் மாலத்தீவிலிருந்து

கிளம்புவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தான்.

சிறைச்சாலைக்கும் தனக்குமான உறவை குறைத்துக் கொள்ளத் துவங்கிய கதிருக்கு இதற்குப்பிறகென்ன என்னும் கேள்வி எல்லா சமயங்களிலும் வந்தது. களிப்பை, போராட்டத்தை,வலிகளை எவ்வளவு பார்த்தாகிவிட்டது. இவையெல்லாம் இத்தோடு முடிந்து போகப் போவதுமில்லை. திரும்பவும் தன்னிடம் வருமென்றால் இத்தனை துயர் மிக்க அழுகி நாற்றமெடுத்த வாழ்க்கை எதற்காக? மனதை ஆக்ரமித்திருக்கும் வெறுப்பும், பகையும் மட்டுமில்லாமல் போனால் இந்த கனத்தில் தானொரு ஜடம். வெறுப்பு மட்டுந்தான் அவன் மனித உணர்ச்சியை தற்காலிகமாக பாதுகாத்து வைத்திருக்கிறது. பொட்டலம் எடுத்துச் செல்லும் வேலையை கதிர் முழுவதுமாக மலைசாமியிடம் கொடுத்துவிட்டான். குற்றங்களுக்குப் பழகத் துவங்கிய அவர் தன்னைச் சுற்றி மனிதர்களின் வழியாய் பிழைபதற்கான பக்குவத்தை வளர்த்துக் கொண்டிருந்தார். ஊர்க்காரர்கள் செய்த துரோகங்கள் எல்லாம் சேர்ந்து மனிதர்கள் மீதான வெறுப்பை உருவாக்கியிருந்ததோடு எந்த இடர்களையும் எதிர்கொள்ளும் வலுவை தந்திருந்தது. சிறைச்சாலையின் சுவர்களுக்குள்ளிருந்த ரகசியங்கள் இப்பொழுது இவருக்கும் பரிட்சயமானவை. தொழிலும் நுணுக்கங்களை கதிர் அவருக்கு கற்றுக் கொடுத்துவிட்டான். சிறைக்குள் அழகர்சாமியிடமிருந்து விஜிக்கும், வெளியே கதிரிடமிருந்து சின்னசாமிக்கும் பொட்டலம் விற்கும் தொழில் கை மாறியிருந்தது.

தன் ஆற்றலில் வரம்புகளற்ற ஜீவன், தன்னை மலராகக் காட்டிக் கொள்ளலாம். அல்லது ஒரு நிலநடுக்கத்தை உண்டாக்கலாம். அவன் எல்லாவற்றிலிருந்தும் துண்டித்துக் கொள்வதன் வழியாய் பெருவெடிப்பிற்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தான். உறவுகள் என்றில்லை அறிமுகமான ஒவ்வொருவரின் அன்பும் சுமையானது. பழி தீர்த்துக் கொள்வதின் வழியாய் விடுதலையையும் அமைதியையும் தேடும் ஒருவனுக்கு சக மனிதனின் அன்பை மாதிரியான அருவருப்பானது ஒன்றுமில்லை, தன்னிலும் கூடுதலான வெறுப்போடு யாரேனும் நெருங்கி வர மாட்டார்களாவென ஏக்கமாய் இருக்கும். அன்பு தன்னை பலவீனப்படுத்துவதாய் கதிர் வருந்தினான். யாரையும் நேசிக்காத போதுதான் தன்னால் பூர்ணத்துவம் கொண்ட காதலை கண்டடைய முடியுமென அவனுக்குத் தோன்றியது, எந்த ஆசானையும் தத்துவத்தையும் கதிரால் பின் தொடர முடியாமல் போனதற்கு காரணம் அவன் எப்போதும் தன்னிலிருந்து தன்னை வெளியே வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதுதான். அன்பிற்கும் அப்பால் தனக்கென சில கடமைகள் இருப்பதிலிருந்து அவனால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இத்தனை காலம் அவனுக்காக வருந்தியவர்கள், அவனுக்காக உழைத்தவர்களென பிரதிபலன் எதிர்பாராத சின்ன மனிதக் கூட்டம் இருக்கிறது. தன் கூட்டில் வளரும் பறவை எந்த வானத்தில் பறந்தாலும் தங்களை நினைத்துக் கொள்ளுமென்னும் நம்பிக்கையும் சந்தோசமும் அவர்களுக்கு இருந்தாலும் தான் எந்த கைமாறுதலும் செய்யாமல் கைவிட்

டுச் செல்வது வாழ்நாள் பிழையாகக் கூடுமென யோசித்தான். டவுன் ஹால் ரோட்டின் விடுதி அறைகளில் தனது பாதுகாப்பை நம்பியிருந்த பெண்களுக்கு தகுதியான இன்னொரு ஆளை ஏற்பாடு செய்வதுதான் இன்னும் சாத்தியமில்லா மல் இருந்தது. அவன் குழப்பங்கள் அவனை முதிர்ச்சியானவனாய்க் காட்டியதை அந்தப் பெண் கள் கவனிக்காமல் இல்லை.

அன்று பின்னிரவு தொழில் முடிந்து வந்த ராணியோடும் மீனாவோடும் மதுவருந்திய வன் பெரிதாக நாட்டமில்லாமல் அமர்ந்திருந்தான். இரவு நேரத்திலும் காக்கா தோப்பு தெரு விழிப் போடு இயங்கிக் கொண்டிருந்தது. காலேஜ் ஹவு ஸில் இப்போது போய் கதவைத் தட்டினாலும் ஆன்ரூ சாமி உறங்கி இருக்க மாட்டார். எந்த நேரத் தில் வேண்டுமானாலும் இவன் அணுக முடிந்த ஒரே ஆள் அவர் தான். அவரைப் பார்க்கையில் இரவு பகலென எல்லா நேரங்களிலும் யாரோ ஒரு வரின் வருகைக்காக காத்திருப்பவரைப் போலி ருக்கும். தன்னிடமிருக்கும் சுமக்க முடியாத ஒன்றை தொலைக்கவோ அல்லது யாருக்காவது அன்பளிப்பாக தந்துவிடவோ அவர் தொடர்ந்து ரகசியமாய் முயன்று கொண்டிருக்க வேண்டுமென கதிருக்குத் தோன்றியது. நேற்று அவரோடு இரவு உணவுக்காக செல்லும் போது தன்னிடம் உண விற்கு பணமில்லையென்றவர் கைகளை நீட் டச் சொல்லி இர்னடு கூழாங்கற்களைத் தந்தார். “எதுக்கு சாமி இது?” புரியாமல் கேட்டவனை “உன்னத் தேடி வந்து சேர்ற எல்லாத்துக்கும் ஒரு அர்த்தம் இருக்கும். அது மனுஷனோ மிருகமோ

கல்லோ செடியோ எதுவா இருந்தாலும். கார ணம் தேடாம அதோட இருப்ப அனுமதி." என சிரித்தார். முதலில் வாங்கியபோது சாதாரணமாய் இருந்த கூழாங்கற்கள் அவர் பேசியதைக் கேட் டபின் அசாத்திய கனம் கொண்டதைத் தெரிந் தது. நேற்றிலிருந்து அதை பாக்கெட்டில் வைத்த படி அவன் சுற்றிக் கொண்டிருக்கிறான். பழைய புத்தக கடைக்குப் பின்பாக செய்தித்தாள்களை விரித்த உட்கார்ந்திருந்த மூன்று பேருக்கும் நடுவி லிருந்த பிளாஸ்டிக் க்ளாஸ்களில் காட்டமான மது காத்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு மடக்கை யும் யோசித்து யோசித்துக் குடித்தவனைப் பார்த்து "அப்பா வந்ததுக்கப்பறம் இந்தத் தொழில் செய் யனுமான்னு யோசிக்கிறியா கதிரு?" ராணியக்கா அக்கறையாக கேட்டாள். "ச்ச ச்ச என்னக்கா இப் பிடி பேசற? நான் இத என்னைக்காச்சும் அசிங்க மாவோ முகம் சுளிச்சோ செஞ்சிருக்கனா? அடுத் தவன் வயித்துல அடிச்சு பொழைக்கிறவனெல் லாம் இங்க எந்த அசிங்கமும் இல்லாம உயிரோட தான் இருக்கான். நாம என்னக்கா பெருசா செஞ் சுட்டோம். என் கவல எல்லாம் வேறக்கா. என்னால இந்த ஊர்ல இருக்க முடியல. எங்கியாச்சும் போயி ரலாமான்னு பாக்கறேன்." பேச்சு இவர்களின் பக் கமாக இருந்தாலும் அவனது மனம் வேறெதிலோ தொலைந்து போயிருந்தது. "எங்களப் பத்தி கவ லப்படாதய்யா. இந்த டவுன் ஹால் ரோடும், இங்க இருக்க மனுசங்களும் பாத்துக்குவாங்க. இத்தன வருஷம் சோறு போட்ட ஊறு இதுக்கும் மேலயா கை விட்றும்" ராணி அவனுக்கு சுற்றிப் போட்டு நெட்டி முறித்தாள். "முன்ன மாதிரி இல்ல கதிரு.

இப்போ நீ முழு மனுஷன். நாலு இடத்துக்குப் போ, மத்தவங்க தேவைக்காக நீ உழச்சதெல்லாம் போதும், உனக்காக எதையாச்சும் சேத்து வெச்சுக்கோ," குடித்துக் கொண்டிருந்தவனை இழுத்தணைத்து நெற்றியில் முத்தமிட்டாள். மதுவின் வாடையும் வெற்றிலையில் வாடையும் சேர்ந்து அவன் முகத்தை நிறைத்தது.

வரமும் சாபமும் ஒரு நாளின் வழமையான பொழுதுகளைப் போல் மாறாமல் தொடர்ந்தபடிதான் இருக்கும். அவன் யாரிடமிருந்தெல்லாம் தன்னை துண்டித்துக் கொள்ள நினைத்தானோ அவர்கள் அந்த விலகுதலை எளிமையாக ஏற்றுக்கொண்டு அவனை ஆசிர்வதித்தனர். அவன் இருதயம் ரகசியங்களின் உறைவிடம். அத்தனை எளிதில் பிறிதொருவரால் நுழைந்து சென்று பார்த்துவிட முடியாத அளவிற்கு தீவிரமானதும்கூட. முருகன் ஊருக்குத் திரும்புகிறான் என்பதில் சக்திக்கு ஆச்சர்யம். திடீரென அவன் எடுத்த முடிவில் சந்தோசமும் சந்தேகங்களும் ஒருசேர இருந்தது அவளுக்கு. "என்ன திடீர்னு வேலய விட்டுட்டு வர்றேன்னு சொல்ற?" தனக்கான பதில் கிடைத்தாலும் சமாதானமாவதில்லை என்னும் முடிவோடு சண்டை போட்டாள். "ஏய் இல்ல லூசு, இங்க இத்தன வருஷம் வேல பாத்தும் பெருசா சம்பளம் இல்ல. மலேசியாவுல நல்ல ஆஃபர் ஒன்னு வந்திருக்கு. அதான் அங்க போகலாம்னு பாக்கறேன்." தன் வேலையின் மீதும் அனுபவத்தின் மீதும் இருந்த நம்பிக்கையில் அவளை சமாளித்தான். ஜோதியைப் பார்க்க வீட்டிற்கு வந்த கதிருக்கு சக்தி சொல்லித்தான் முருகன் உறுதியாக

வருவது தெரிந்தது. சக்தி முருகனிடம் சந்தேகத் தோடு சண்டை போட்டாலும் கதிரிடம் சொல் லும் போது முழு சந்தோசத்தோடே சொன்னாள். "எண்ணே இது வேலய விட்டுட்டு வர்றேன்னு சொல்லுதுண்ணே. மலேசியாவுல வேற எடத்துக்கு வேலைக்குப் போகப் போகுதாம். பேசாம நீயும் அதுகூடயே போறயா?" என சொன்ன போது அவ ளுக்கு கடந்த காலத்தின் எந்த சங்கடமான நிகழ் வுகளையும் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டிய தேவை இருந்திருக்கவில்லை. இவளைப் போல் மன்னிக்கும் மனம் வாய்த்திருந்தால் ஒருவேளை தானும் எந்த சிக்கல்களும் இல்லாமல் வாழ்ந்தி ருக்கலாமோ என கதிர் நினைத்தான். ஒவ்வொரு உயிருக்குமான இயல்பு விதியை யார் மாற்றக் கூடும்? அவள் மனம் முழுக்க அன்பால் ஆனது, இவன் மனம் முழுக்க வெறுப்பாலும் அகங்காரத் தாலும் ஆனது. அகங்காரமும் அன்பும் எப்படி ஓரி தயத்தில் சேர்ந்திருக்க முடியும்?

வெளியேற்றம்.

ஆயிரம் கண்கள் எப்போதும் சுவர்களின் வழி விஜியைத் தொடர்ந்து கொண்டிருந்தன. அவ னோடு சேரும் நண்பர்களையும் சேர்த்து சந் தேகித்தான். தனக்கு மட்டுமில்லாமல் மலருக்கும் ஆபத்து வரக்கூடுமோ என மனம் எப்போ தும் பாதுகாப்பின்மை குறித்தே அச்சம் கொண் டது. நிறைய பேரை ஒரு பிளாகில் இருந்து இன்னொரு பிளாகிற்கு மாற்றினார்கள். பகல் நேரங்களைப் போலில்லை சிறைச்சாலையின் இர வுகள். நம்பிக்கையானவர்கள் அருகில் இல்லாத சூழலில் ஒவ்வொரு நாளையும் கடப்பது விஜியைப் போன்ற ஒருவனுக்கு சிரமமானது. இரவுகள் ஒரு குழந்தையை விடவும் இது போன்ற கைதிகளை அச்சப்படுத்தும். இவனுக்கு சி பிளாக்கை ஒதுக்கி இருந்தார்கள். பாதிக்கும் மேல் தங்கராசுவிற்கு வேண்டியவர்கள். விஜி தனது பொருட்களை யும் பாதுகாத்து தன்னையும் பாதுகாக்க வேண் டிய நெருக்கடியில் அழகர்சாமியிடம் “சின்னய்யா எனக்கு இனிமே தொழில் தோதுப்படாதுன்னு நினைக்கிறேன். நீங்க போறதுக்கு முன்ன பொறுப்ப வேற யார்கிட்டயாச்சும் குடுத்துட்டுப் போயி ருங்க” என தயக்கத்தோடு சொன்னான். “கிறுக் குப் பயலே, இந்தத் தொழில் இருக்கவரைக்கும்

தாண்டா உனக்கு பாதுகாப்பு. உன் தேவ யாருக்கும் இல்லைன்னு ஆகிட்டா எவனும் உன் பக்கம் வர மாட்டான். அப்றம் எப்பிடி நீ பாதுகாப்பா இருப்ப?" அழகர்சாமியின் இந்த வார்த்தைகள் அவனுக்கு ஆதரவான தொனியில் தான் இருந்தது. முற்றிலும் குழம்பிய மனதைப் போலொரு அடிபட்ட மிருகம் எதுவுமில்லை. அது யாரையும் நம்பாது. விஜி அவர் சொன்னதில் சமாதானம் ஆக முடியாமல் தடுமா றினான். "தைர்யமா இருடா தம்பி, நம்மாளுங்க தான் இவ்வளவு பேர் உன்கூட இருக்கானுங் களா?" அழகர்சாமிக்கும் தெரியும் இந்த நம்பிக்கை எத்தனை பலவீனமானதென. அவருக்குப் பிறகு எல்லோருமே அதிகாரத்தை தனக்கென வைத் துக் கொள்ளத்தான் நினைத்துக் கொண்டிருக்கி றார்கள். எந்த நேரத்திலும் அவர்கள் சண்டை யிடக் கூடுமென்றுதான் இவரும் எதிர்பார்க்கிறார். ஆனாலும் விடுதலையாகிற நேரத்தில் இவர்கள் சண்டையில் தானும் மாட்டிக் கொண்டு விடுத லையாவதில் சிக்கலாகிவிடக் கூடாதென்கிற எச் சரிக்கையில் தான் எல்லோரையும் சமாளித்துக் கொண்டிருந்தார். எந்த முடிவுகளையும் எடுக்க முடியாமல் விஜி திரும்பிப் போனான்.

அண்ணா பிறந்தநாள் கைதிகள் விடுத லையென விசேஷங்கள் வருவதால் சிறைச்சா லையை முழுமையாக சுத்தம் செய்ய கைதிக ளுக்குள்ளேயே குழு அமைக்கப்பட்டது. அதற்காக கன்விக்ட் வார்ட்டர்கள் போலிஸ்காரர்கள் சூப்பி ரெண்ட் என எல்லோரும் கூடியிருந்த கூட்டத் தில் "ஐயா எடத்த சுத்தம் பன்றதெல்லாம் இருக் கட்டும், இங்க எல்லா செல்லுக்குள்ளயும் கஞ்சா

தாரளமா பொழங்குது. அத மொதல்ல என் னன்னு பாருங்க." என தங்கராசுவின் ஆள் ஒரு வன் சத்தமாகச் சொல்ல சூப்பிரண்ட் போலிஸ்கா ரர்கள் எல்லோரையும் முறைத்தார். "யோவ் என் னய்யா இது? அவய்ங்களே கம்ப்ளைண்ட் பன்ற அளவுக்கு வெச்சிருக்க்கீங்க." மீசையில் எச்சில் தெறிக்க அவர் சத்தம் போட போலிஸ்காரர்கள் எதுவும் பேசாமல் அமைதியாக நின்றார்கள். கூட் டத்தில் விஜியும் அவனோடு சிவாவும் இருந்தார் கள். யாரும் எதையும் காட்டிக் கொள்ளாமல் அமைதி காக்க, போலிஸ்கார்களுக்கு எரிச்சலும் கோவம் கனன்றது. அன்று மீட்டிங் முடிந்த பின் இரவு உணவை வாங்கிக் கொண்டு எல்லோரும் மாலை ஆறு மணிக்கு செல்லுக்குள் சென்ற ஒரு மணி நேரத்திற்குப்பின் போலிஸ்காரர்கள் கன் விக்ட் வார்ட்டர்களென ஒரு பெரும் படை ஒவ் வொரு செல்லாக திடீர் சோதனை நடத்தத் துவங் கினார்கள். இப்படியான ஒரு சோதனை நடக்க லாமென்பதை முன்பே யூகித்திருந்த விஜி தனது பொறுப்பிலிருந்த எல்லா பொட்டலங்களையும் மற்ற பிளாக்கில் இருந்த ஆட்களுக்கு கை மாற்றி இருந்தான். பகலில் வேலைக்குச் சென்றவர்கள் தங்களின் வேலை இடங்களிலும், சிலர் அந்த சிறைச்சாலையில் தங்களுக்குத் தெரிந்த அத் தனை ரகசிய இடங்களிலும் பொட்டலங்களைப் பிரித்து பத்திரமாய் பதுக்கிவிட்டார்கள். எவ்வளவு தேடியும் போலிஸ்காரர்களுக்கு அன்று கஞ்சா பொட்டலங்கள் கிடைத்திருக்கவில்லை. 'இரண்டு முன்று நாட்களுக்கு யாரும் பொருளை வெளியில் எடுக்க வேண்டாமென விஜி சொல்லி இருந்தான்.

அழகர்சாமிக்கு கூட ஆச்சர்யம், அவன் இத்தனை திறமையாக இந்த பிரச்சனையை கையாளுவான் என அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. இத்தனை நாட்கள் அவனை சாதாரணமாய் நினைத்திருந்த வர்களுக்கு அவன் மீது இப்பொழுது மரியாதை யும் அச்சமும் வந்தது. நான்கு நாட்களுக்குப் பிறகு பொருளை வியாபாரத்திற்கு வெளியில் எடுத்த போது விஜி வேறு ஆளாய் மாறிப்போயிருந்தான்.

விஜியைச் சூழ்ந்திருந்த மனிதர்களில் சில ரின் தோல்களுக்குக் கீழே முரட்டு விலங்கு கள் இருந்தன. அந்த விலங்குகள் தக்க தருணம் கிடைத்தும் தவறவிட்ட வெறுப்பில் இனி நேரடி யாகவே தாக்குவதென முடிவெடுத்தன. தொழில் கையை விட்டுச் சென்ற பிறகு தங்கராசுவின் ஆட் களுக்கு அவர்களுக்கிருந்த அதிகாரமும் கைவிட் டுப் போயிருந்தது. சிறைச்சாலையை சுத்தம் செய்வதற்கான வேலைகள் மும்முரமாய் நடந்து கொண்டிருந்தன. அன்று பிற்பகல் உணவிற்குப் பின் விஜி சில கைதிகளோடு தாயம் விளை யாட உட்கார்ந்தான். அவன் ஆட்கள் வெவ்வேறு வேலைகளுக்கா வெவ்வேறு இடங்களில் இருந் ததால் அவனிடம் போதுமான பலமில்லை. தாய விளையாட்டு மும்முரமாய்ப் போய்க் கொண்டி ருந்த நேரத்தில் ஒரு விசாரணைக் கைதி வந்தான். "அண்ணே சரக்கு வேணும்." விஜி அவனை கவ னித்துவிட்டு "நம்மாளுங்க யார்கிட்டயாச்சும் வாங் கிக்கப்பா." என தொடர்ந்து விளையாடினான். "இல்லண்ணே அவங்க யாரையும் புடிக்க முடி யல, அதான் உங்களத் தேடி வந்தேன்." என சிரித்தான். விளையாட்டை பாதியில் விட்டுப்போக

மனமில்லாமல் விஜி “சரி இரு வாரேன்.” என்று எழுந்து கொண்டான். அவர்கள் இருவரும் அந்த வளாகத்திலிருந்து கிளம்பியபோது மரத் திலிருந்து உதிர்ந்த இலைகள் எங்கும் நிறைந்து கிடந்தன. பொதுக்கழிப்பறைக்கு செல்லும் வழி யில் நுழைந்தவன் வழக்கமாக பதுக்கி வைக்கும் இடத்திலிருந்து பொட்டலத்தை எடுக்க உள்ளே சென்றான். வெளிச்சம் அதிகம் வராத நாற்றம் பிடித்த அந்த இடத்தில் சில நிமிடங்களை கடக்க நீண்ட கால பயிற்சி வேண்டும். ஆள் நடமாட்டமும் பெரிதாக இல்லாத சாப்பாட்டு நேரம். வெளியில் வந்த விஜியின் பின்னந்தலையில் பலமாக ஒரு அடிவிழ அவன் சுருண்டு விழுந்தான். அவனிடம் பொருள் கேட்டு வந்தவனும் தங்கராசும் இன் னும் சிலரும் அங்கு இருந்தார்கள். அழுக்கேறிய துண்டில் ஹாலோ பிரிக்ஸ் கற்களை சுற்றி இருந் தார்கள். தனியாக கிடைத்த இரையை வேட்டை யாடும் வெறியோடு தங்கராசு அவனை அடிக்கத் துவங்க தப்பித்து ஓடி விடாதபடி மற்றவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். “அண்ணே விட்றுண்ணே விட் றுண்ணே. நான் தொழில் பண்ணலண்ணே.” என முதல் சில அடிகளுக்கு கதறிய விஜி எதிர்வினை யாற்றும் திராணியின்றி மயங்கிப் போனான். அந்த இடம் முழுக்க குருதி சூழ, அடித்த வெறி அடங்கி அவர்கள் அங்கிருந்து தப்பித்து ஓடிவிட்டார்கள். விஜியின் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த ஆட்கள் அவனை மருத்துவரிடம் தூக்கிக் கொண்டு ஓடி னார்கள். இன்னும் உயிர் இருப்பதற்கான அடை யாளமாய் மூச்சொலி மெல்லிய ஓசையில் வந்து கொண்டிருந்தது. ஒரு கை முழுமையாக நைந்து

போயிருந்ததோடு பின்னந்தலை காயத்திலிருந்து ரத்தம் கொப்பளித்து வந்தபடியே இருந்தது.

மதுரை அரசு மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் விஜி சேர்க்கப்பட்ட இரவில் சிறைச்சாலைக்குள் பெரிய யுத்தம் ஒன்று நடப்பதற்கான எல்லா அறிகுறிகளும் தெரிந்தன. அழகர்சாமியோடு இருந்த எல்லோரும் பழி எடுக்க வேண்டுமென தீவிரமாய் இருந்தார்கள். தங்களது பாதுகாப்பு குறித்து அவர்களுக்கு இருந்த அச்சம் பதில் தாக்குதல் மட்டுமே தங்களைக் காப்பாற்றும் என்று நினைக்க வைத்தது. அழகர்சாமி மற்றவர்களைப் போல் பதட்டப்படவில்லை, 'விடுதலையாகிற நேரத்தில் எந்த சண்டைகளும் வேண்டாமென' நன்னடத்தை அதிகாரியும் சூப்பிரெண்ட்டும் சொன்னது நன்றாக நினைவில் இருந்தது. எதிர்த்தாக்குதல் என்பது தனது விடுதலைக்கு பாதகம் செய்யுமென அவர் எந்த முடிவுகளையும் எடுக்காமல் தவிர்த்தார். விஜிக்கு உயிர் இருக்கிறது, தப்பித்துக் கொள்வான். இந்த சிறைச்சாலையில் தன்னைக் காத்துக் கொள்ள இந்த தாக்குதல் சில யுக்திகளை சொல்லிக் கொடுக்கும். பிற்பாடு வேறு வகையில் ஏதாவது உதவி செய்யலாமென நினைத்த அழகர்சாமி "தொழில் போட்டில உடனுக்கு உடனே எல்லாத்தையும் செஞ்சிடக் கூடாது. இப்ப அவன் உஷாரா இருப்பான். கொஞ்சம் ஆறப்போடுவோம்" தன்னோடு இருந்தவர்களையும் அமைதிப்படுத்தினார். சூப்பிரண்ட் ஒவ்வொரு செல்லாக விசாரிக்கும் முன்பாகவே தங்கராசு தானாக முன் வந்து பகையின் காரணமாக அடித்ததாக ஒப்புக் கொண்டான். இரவு

முழுக்க அவனை அடித்து துவைத்த கன்விக்ட் வார்ட்டர்கள் தனிச்சிறையில் அடைத்தனர். ஒரு மாதத்துக்கு அங்கேயே இருக்கட்டுமென அவனுக்கு கொடுக்கப்பட்ட தண்டனைதான் தங்கராசுவுக்கும் தேவையாய் இருந்தது. யாரும் நெருங்க முடியாத பாதுகாப்பு அந்த தனிச்சிறை. ஒரு மாதத்திற்குப்பின் அவன் வெளியே வரும் போது அழகர்சாமி விடுதலையாகி இருக்கக் கூடும், மற்றவர்களுக்கும் தன் மீது ஒரு அச்சம் இருக்குமென நிறைய விஷயங்களை யூகித்தே அவன் குற்றத்தை ஒப்புக் கொண்டிருந்தான். தனிமைச் சிறையைக் கடப்பது ஒன்றும் தங்கராசுவிற்கு சிரமமான காரியமில்லை. இதற்கு முன்பும் அவன் தன்னை பாதுகாத்துக் கொள்ள இதைச் செய்ததுண்டு. தன் மீது மற்றவர்களுக்கு இருந்த மரியாதையும் அச்சமும் மீண்டும் கிடைக்கவேண்டுமென்பதற்காக அவன் செய்த இந்த செயல் உடனடியாக பலன் தந்தது. பொருளை வைத்திருந்தவர்கள் வியாபாரம் செய்ய அச்சப்பட்டார்கள். தங்கராசு தனிமைச் சிறையில் இருந்தாலும் அவன் ஆட்கள் எல்லா பிளாக்கிலும் கலந்து இருந்ததால் அவர்களே உடனடியாக அதிகாரம் செலுத்தினார்கள்.

நதியின் மறுகரை நோக்கி.

"நிரபராதியான ஒருவனுக்கு எவன் தீங்குசெய்தாலும், பாவமற்ற பரிசுத்தமான ஒருவனுக்கு எவன் தீங்கு செய்தாலும், காற்றுக்கு எதிராகத் தூவிய மண் மேலேயே வந்து சாடுவது போல், அந்த மூடனைப் பாவம் பற்றிக்கொள்கிறது."

- தம்மபதம்.

1

மர்மங்களைப் புதைத்து வைத்திருக்கும் எந்த அடையாளங்களும் இல்லாமல் முருகன் ஊருக்குத் திரும்பியிருந்தான். மனைவி மகள்களோடு கழிந்த முதல் இரண்டு நாட்களுக்குப் பின் கதிரை கவனித்தபோது அவன் முழு மனிதனாக மாறியிருப்பது தெரிந்தது. அவன் வலியோ, காமமோ, அன்போ, கருணையோ எதுவும் இளைஞனிலிருந்து முதிர்ச்சியடைந்த மனிதனாய் மாற்றி

யிருக்கவில்லை. அவனுக்குள்ளிருந்த வன்மமும் அதைத் தீர்த்துக் கொள்ள அவன் எடுத்துக் கொண்டிருந்த தீர்க்கமும் தான் இந்த மாற்றத்திற் குக் காரணம். மிக மோசமான வன்முறை களை யாரும் பேசவோ எழுதவோ செய்வதில்லை. அதுவொரு வெறுப்பாக எப்போதும் உள்ளுக்குள் கனன்று கொண்டே இருக்கும். மனித இயக்கத் தின் ஆதார சக்தி இந்த வன்முறையும் வெறுப்பும் தான். மனிதர்களின் எல்லா வன்முறைகளையும் கடவுள் அனுமதிப்பதற்குப் பின்னால் இந்த உலகம் வலியவர்களுக்கானது என்கிற நிஜத்தை உணர்த் துவதற்குத்தான். ஆனால், மகன்களுக்கெதிரான தந்தையரின் பாவங்களை எந்தக் கடவுளும் அனு மதிப்பதில்லை. அந்த நிஜத்தைப் புரிந்து கொண் டவன் கதிர். முருகன் வந்தது இப்பொழுது அவ னுக்கு நூறு யானைகளின் பலத்தை உணரச் செய் தது.

அழகர்சாமி விடுதலையாகும் விஷயத்தை அவர் வளர்ந்த உறவினர்கள் வீட்டில் சொல்வ தற்கு கதிர் மேலூருக்கு சென்றிருந்தான். மிக அரி தாக அவன் வந்து போகும் உறவினர்கள் வீடு. அப்பாவே உறவில்லை என்றான சூழலில் அவ ரின் உறவினர்களை என்ன சொல்வது? வளமாக இருந்து வீழ்ந்து போன அந்த வீட்டின் சுவர் கள் காரை உதிர்ந்து போயிருந்தன. அவலட்சண மான அந்த வீட்டின் துர்நாற்றத்தை அங்கிருந்த எல்லோரிடமும் கவனித்தான். எந்தக் கஷ்டங் களின் போதும் சந்தோசத்தின் போதும் அவர் கள் வந்து கலந்து கொண்டதில்லை. அழகர்சாமி அவர்களைப் பொறுத்தவரை மறக்கநினைக்கும்

துரதிர்ஸ்டன். அவர் மீதிருந்த வெறுப்பு கதிரின் மீதும் இருந்தது. தந்தையர்கள் புண்ணியங்களை யும் பாவங்களையும் மட்டுமல்ல வெறுப்பையும் தங்கள் பிள்ளைகளுக்கு சேர்த்து வைத்துவிட்டுச் செல்கிறார்கள். ஆயாவின் இளைய மகள் பழைய ஈய டம்ளரில் இவனுக்கு தேநீர் குடுத்தாள். சர்க்க ரையில் இருந்த எறும்பு தேநீரில் மிதந்து கொண் டிருக்க அவன் அதைக் குடிக்காமல் அப்படியே வைத்துவிட்டு,

"அப்பா இந்த மாசம் விடுதலையாகறாரு ஆயா அதான் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்." என ஆயாவிடமும் எல்லோரிடமும் பொதுவாக சொனான்.

"நல்லதுடாப்பா. வந்து மட்டும் என்ன ஆகப் போகுது. திருந்தவா போறான். எங்களோட இருக் கற வரைக்கும் எங்கள சாகடிச்சான், கல்யாணத் துக்கு அப்பறம் உங்கள சாகடிக்கிறான். அவங் கப்பா சொத்துன்னு பழைய வீடு ஒன்னு இருக்கு. வந்ததும் பத்தத்த குடுக்கறோம். வெச்சுக்கிட்டா லும் சரி வித்து திண்ணாலும் சரி."

ஆயா மனதிற்குள் குமைந்த வெறுப்பை அடக்கிக் கொண்டு சொல்ல,

"ஏன் ஆயா அந்தாளுதான் இவ்ளோ கேவல மானவன்னு தெரிஞ்சதுல்ல, அப்பறம் கல்யாணம் பண்ணி வெச்சு எங்கம்மா வாழ்க்கைய கெடுத் தீங்க?"

"இவென் காலம் முழுக்க இப்பிடி இருப்பான்னு நாங்க நெனைக்கலையே. ஏதோ திருந்தி கொஞ் சமாச்சும் மனுஷனா வாழ்வான்னு பாத்தா முன்ன

விடவும் மோசமாத்தான் ஆனான். எல்லாம் வாங்கி வந்த வரம்."

"வளந்தப்பவே கொஞ்சம் வெஷத்தக் குடுத்து கொன்னுருக்கலாம். யாருக்கும் தொல்லையில் லாம போயிருக்கும்."

ஆயாவுக்கு கண் கலங்கியது. வெறுப்பையும் மீறி கடந்த காலத்தை இவன் கிளறியதில் உடல் நைந்து மரண பயத்தோடு ஓடி வந்த அழகர்சாமி யின் முகம் ஒரு நொடி முன்னால் வர, பெருங்குர லெடுத்து அழுதாள்.

"அவென் எங்ககிட்ட வந்தப்ப எப்பிடி இருந்தான்னு தெரியுமா கதிரு. அந்த நாட்டு சண்டைல அடிபட்டு சோறு தண்ணி இல்லாம பட்டினி கிடந்து அம்மா அப்பா பிறந்து ஒரு வருஷம் கூட ஆகாத தம்பி எல்லாரையும் சாகக் குடுத்துட்டு அனாதையா வந் தான். பல நாள் குடிக்க தண்ணி கூட கிடைக் காம மூத்திரத்தக் குடிச்சு எப்போ சாவோம்னு தெரியாம பயத்துலயே இருந்தவன். அந்தக் குடும் பத்துல இருந்து மீண்டது அவன் மட்டுந்தான். அவனோட பேரே அவனுக்கு மறந்துபோச்சு. அந்த நாட்டு சண்டைலயே செத்திருந்தா கூட எங்க யாருக்கும் தெரிஞ்சிருக்காது. இங்க வந்து அம் மாவையும் அப்பாவையும் கேட்டு அழறப்போ எங்க யாராலயும் அவனுக்கு ஆறுதல் சொல்ல முடியாது. ராத்திரிலாம் தூங்க மாட்டான். இருட்டுலயே உக் காந்திருப்பான். கொஞ்ச நாள் போனதுக்குப்பறம் பாத்தா அவன் நடவடிக்கை எல்லாமே மாற ஆரம் பிச்சது. நாலுவேள அஞ்சு வேள சாப்பிடுவான். சரி பசி போலன்னு நாங்களும் விட்றுவோம். ஆனா

வீட்ல இருக்க பொண்ணுங்க துணி மாத்தறத, குளிக்கறத எல்லாம் அவன் பாக்க ஆரம்பிச்சப்போ எங்களுக்கு என்ன செய்றதுன்னு புரியல. யார் நம்மளுக்கு என்ன உறவு? இத செய்யலாமா கூடாதான்னு எந்த நிதானமும் அவனுக்கு இல்லாமப் போச்சு. கண்டிக்க ஆரம்பிச்சோம். அவன் எங்க கிட்ட கை நீட்டினான். அதுக்கப்பறம் அவன யாரும் கட்டுப்படுத்தல."

ஆயா அழுகையையும் நிறுத்த முடியாமல் அழகர் சாமியின் மீதான வெறுப்பிலிலிருந்தும் மீள முடியாமல் சொல்லிக் கொண்டிருந்தது. அப்பா கம்போடிய சண்டையிலிருந்து பிழைத்து வந்தவர் என்று மட்டும் தெரிந்திருந்த கதிருக்கு ஆயா சொன்னதைக் கேட்க மனது குமைந்தது. தான் அமர்ந்திருந்த பழைய நாற்காலியிலிருந்து எழுந்து கொண்ட ஆயா,

"எங்கூட வா." என முன்னால் நடக்க, கதிரும் அவளைத் தொடர்ந்து சென்றான். ஆயா நல்ல உயரம். முடியெல்லாம் உதிர்ந்து கொஞ்சம் நரை மட்டும் குருவிக் கூடு போல் தலையிலிருந்தது. நடக்க மாட்டாமல் சிரமப்பட்ட காலை இழுத்துக் கொண்டு உள்ளறைக்குச் சென்று ஒரு சின்ன துணிப்பையை எடுத்து வந்தாள். கிழிந்து அழுக்கேறிப்போன அந்தப் பையை இவன் கையில் கொடுக்க அவன் பிரித்துப் பார்த்தான். கெமெர் ரோஜின் சீருடைச் சட்டையும் ஒரேயொரு பழைய அப்சரஸ் பொம்மையும் யுத்தத்தின் குருதிக்கறை படிந்த சாட்சியமாய் இருந்தன. கதிருக்கு அதை கையில் எடுத்தபோது கைகள் நடுங்க ஆயாவைப் பார்த்தான். "அவன் இங்க வர்றப்போ இது மட்டுந்

தான் அவன் கைல இருந்துச்சு. எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் அங்க இருந்து மீட்டுட்டு வந்தோம். இப்ப எல்லாம் கத மாதிரி இருக்கு." அந்த அறையிலிருந்து ஆயா வெளியேற கதிர் அந்தப் பையை தன்னோடு எடுத்துக் கொண்டான். புகைப்படத்தில் மட்டுமே தாத்தாவும், பாட்டியும் அப்பாவின் எந்தச் சாடையிலும் தெரியவில்லை. அவர்களிடமிருந்த கருணையின் துளிகூட தனது தந்தையின் கண்களில் எப்படி இல்லாமல் போனதென கதிர் குழம்பினான். அந்தப் பையை அவனோடு எடுத்துக் கொண்டு போகச் சொல்லி ஆயா சொன்னதால் பத்திரமாக தனது கட்டைபைக்குள் வைத்துக் கொண்டான். அவர்களிடம் பழைய கதை கேட்டு சிரமப்படுத்த விருப்பமில்லாமல் கிளம்பியவன் அவர் விடுதலையானதும் அழைத்து வருவதாக பெயருக்கு சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

ஊர் திரும்பும் வழி முழுக்க கதிருக்கு குழப்பமான யோசனைகள். அவரைக் கொலை செய்வதா? அல்லது விட்டு விலகிச் செல்வதா? விலகிச் செல்வதால் பகை தற்காலிகமாக அடங்கிக் கிடக்குமே தவிர முழுக்கவும் அழிந்து போகாது. தன் ரகசியம் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாததவொன்று என்பதை அவன் புரிந்து வைத்திருந்தான். மனிதர்களிடமிருந்து துண்டித்துக் கொள்ள முடிவதைப் போல் குழப்பங்களிடமிருந்தும் துண்டித்துக் கொள்ள முடிந்தால் நிம்மதியாக இருக்கும். அவனுக்குள்ளிருந்த மனப்போராட்டம் எப்போதையும் விட அதிகமாய் அவனை குழப்ப, முருகனிடம் பேசினால் கொஞ்சம் தெளிவு கிடைக்குமென அவனைத் தேடிப் போனான்.

ரயில்வே ஸ்டேஷனை ஒட்டியிருந்த ஸ்லீப்பர் கல் தயாரிக்கும் ஃபேக்டரிக்குள் இருவரும் பேசியபடியே நுழைந்தார்கள். வெல்டிங் மெஷின்களின் சத்தம். பெரிய பெரிய இரும்புப் பாளங்களை நகர்த்தும் சத்தம். பீகார், ஜார்கண்ட் ஆட்கள் சத்தமான குரலில் பேசிக் கொண்டபடி வேலை செய்தார்கள். ஃபேக்டரியை ஒட்டி அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆஷ்பெட்டாஸ் டெண்ட்டுகளில் வெக்கை தாளாமல் நைட் ஷிஃப்ட் செல்ல வேண்டிய ஆட்கள் வெளியில் போர்வை விரித்து படுத்திருந்தார்கள். இரண்டு புறங்களிலும் இடை வெளியின்றி அடர்ந்திருந்த வேப்ப மரங்களின் நிழலில் குழுமையும் சேர்ந்திருந்தது. அழகர்சாமியின் சூதில் விஜி மாட்டிக் கொண்டு சாகப் பிழைக்கக் கிடந்ததில் கதிருக்கு முன்னை விடவும் அதிகமான கோவம். விஜியின் விஷயத்தை முருகனிடம் சொன்னபோது அவனும் ஆத்திரப்பட்டான். “இந்தாளு உலகத்துல இருக்க எல்லாரையும் தனக்காக பயன்படுத்திக்கிறாண்டா. எந்தக் குற்ற வுணர்ச்சியும் இல்லாம எப்பிடி இவனால இருக்க முடியுது?” கதிர் முன்பைப் போல் உணர்ச்சிக் கொந்தளிப்பில் பேசவில்லை. அவன் கோவம் இறுகிப் போயிருந்ததால் அவனும் இறுகிப் போயிருந்தான். இந்த ஒரேயொரு தீமையை எப்படியும் தனது வாழ்விலிருந்து தூக்கி எறியும் தீவிரம். “அது அவரோட இயல்புடா கதிர். எல்லா மிருகங்களையும் வேட்டையாடற ஒரு மிருகத்துக்கிட்ட ஏன் வேட்டையாடறன்னு நாம கேக்க முடியாது. அப்பிடித்தான் உங்கப்பாவும்.” முருகன் அவனை ஆறுதல் படுத்த முயன்றான்.

“இல்லடா முருகா இவென் மிருகங்கள விடவும் கேவலமானவன். எந்த மிருகமும் தன் தேவைக்கு அதிகமா எதையும் செய்றதில்ல. இவன் கிடைக் கிற எல்லாத்தையும் தனக்குன்னு எடுத்துக்கற ஆளு. உனக்குத் தெரியாதுடா அந்த மானாம துரைக்காரய்ங்க பிரச்சனை ல இப்ப வரைக்கும் அந்த ஆளு தப்பு பண்ணிட்டேன்னு ஒரு மன் னிப்பு கூட கேக்கல. கொஞ்சம் அசந்திருந்தா அன் னிக்கே என்னயக் கொன்னுறுப்பானுங்க.”

“புரியுதுடா, ஆனா அவர் கிட்ட இதையெல்லாம் நீ எதிர்பாக்காதன்னு தான் சொல்றேன். சரியோ தப்போ நீ எடுத்துருக்க முடிவு ஒரு வகையில உனக்கு நல்லது. இதுக்குப் பிறகான உன்னோட வாழ்க்கையாச்சும் ஒழுங்கா அமையும். இப்ப அத எப்பிடி செஞ்சு முடிக்கிறதுன்னு மட்டும் யோசி,”

”சரியா செஞ்சிடலாமாடா. எனக்கு கொஞ்சம் பய மாவும் இருக்கு.”

“பயமும் குழப்பமும் இருக்கறது நல்லதுதாண்டா கதிரு. பயப்படறவன் தான் எதிலயும் மாட்டிக்காம எப்பிடி ஒரு காரியத்த செஞ்சு முடிக்கிறதுன்னு புத் திசாலித்தனமா இருப்பான்.”

முருகனின் ஆறுதல் கதிருக்கு பலத்தைக் கொடுத்தது. பேசியபடியே இருவரும் ஃபேக்டரி யின் எல்லைக்கு சென்றுவிட்டார்கள். அங்கிருந்து கூழையாபுரம் செல்லும் பாதையில் விறகு வெட்டிக் கொண்டிருந்த பெண்கள் இவர்களைக் கவனிக்க மீண்டும் வந்த வழியிலேயே திரும்பி நடந்தார்கள்.

“எல்லாம் முடிஞ்சதும் பேசாம எங்கூட மலேசியா வந்துருடா. புது இடம் புது மனுஷங்கன்னு வாழ்க்

கையா புதுசா மாறிடும். நான் உனக்கும் சேத்து தான் ஏற்பாடு பண்ணிட்டு இருக்கேன்."

கதிர் யோசனையோடு தலையசைத்தான்.

"எனக்கு வேற ஒரு யோசன இருக்குடா. ஆனா அது சரியா தப்பான்னு தெரியல."

முருகன் அவனை நிறுத்தி என்னவென்று பார்க்க, கதிர் அமைதியாய் இருந்தான்.

"தாத்தா கட வெச்சிருந்த அந்த ஊரப் போயிப் பாக்கனும்னு தோணிட்டே இருக்குடா. ஒருத்தன் இவ்வளவு தூரம் மிருகமா மாறி இருக்கான்னா அதுக்கு காரணமான ஊர் எப்பிடி இருக்குன்னு பாக்கனும். வேல சம்பாத்தியம் உறவுகள் எதிர்காலம் எல்லாத்துல இருந்தும் விலகி இருக்கப் போறேன்."

"கேணக்கூதியாட்டம் பேசாத. நீ கம்போடியா போகனும்னு நெனைக்கிறது சரி, அதுக்காக ஏன் சாமியாராகனும்னு நெனைக்கிற?"

"சாமியாரா ஆகலடா மாப்ள. இந்த உடலுக்குள்ள ஒரு பசி இருந்துட்டே இருக்கு. அந்தாளக் கொன்னதுக்கு அப்பறமும் அந்த பசி இருக்குமான்னு தெரியல. அந்தப் பசியடங்க என்ன செய்யனும்னும் தெரியல. மனம் போன போக்குல கொஞ்ச காலம் சுத்தனும்டா."

ஒற்றை இலக்கிற்குள் அடைபடாத கதிரின் மனதிற்கு என்ன செய்தாலும் இப்பொழுது அடங்கி இருகாதென்பதைப் புரிந்து கொண்ட முருகன் அமைதியாக அவனோடு நடந்தான். மனிதர்களின் மீதான வெறுப்பு வாழ்வின் மீதான வெறுப்பாய் அவனுக்கு மாறிக்கொண்டிருந்தது. தன்

னைத் தண்டித்துக் கொள்வதில் வதைத்துக் கொள்வதில் சுகம் காணும் மனிதர்களுக்கு அந்தச் சுவையிலிருந்து மீள்வது கடினம். கதிருக்கும் அப் படித்தான்.

"சரிடா. எல்லாம் நெனச்ச மாதிரி சரியா அமையட் டும். பாத்துக்கலாம்."

முருகன் நம்பிக்கையாகச் சொன்னான். கற்பக நகர் செல்லும் வீதிக்கு வந்து சேர்ந்தவர்கள் அடுத்து என்ன செய்வதெனத் தெரியாமல் நின்றனர். எங் கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் முருகன் தன் வார்த்தைகளால் மறு உலகை உண்டாக்குகி னான். கதிரின் நோய் வார்த்தைகளாலும் சித்தி ரங்களாலும் தான் குணமாகுமென்பதால் அவனை ஒருபோதும் கைவிட்டுவிடக் கூடாதென உறுதி யாய் இருந்தான்.

போர் போடும் வண்டி ஒன்று பகத்சிங் நகர் முதல் வீதியிலிருந்து மெதுவாக வெளியேற, மனம் தற்கா லிகமாக ஆறுதலடைந்த நிம்மதியில் கதிர், "சரிடா மாப்ள நீ வீட்டுக்குப் போ நான் நாளைக்கு வாரேன்." என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கி நடக்கத் துவங்கினான். பின்னாலிருந்து அவனைக் கவனித்த முருகன் அச்சமும் குழப்பங்களும் அவன் வயதிற்குப் பொருத்தமில்லாத ஓர் முதிர்ச்சியைக் கொடுத்திருப்பதைப் பார்த்து வருத்தப்பட்டான்.

2

அந்த அதிகாலை சிறைச்சாலையில் வசந்த மலர்கள் பூத்துக் குலுங்கின. மகிழ்ச்சியில் திளைத்த மனதோடு விடுதலையாக இருந்த கைதிகளை பிற கைதிகள் சந்தோசமாக அனுப்பி வைக்கத் தயாராய் இருந்தார்கள். பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கைதிகளில் ஒரு சிலர் சேர்ந்து ஒரு நாடகம் போடத் தயாராய் இருந்தார்கள். கடந்த நான்கு நாட்களாய் ஒத்திகை நடக்கும் அந்த நாடகத்திற்கு கதை எழுதியது சூப்பிரண்ட்டின் துணைவியார் என்பதால் அன்று அவருக்கு தனியாக மேடையில் ஒரு பாரட்டு நடத்தவும் திட்டமிட்டிருந்தர்கள். ஒவ்வொரு நிகழ்வாக முடிந்து நாடகம் துவங்கியபோது ஒரு மணி நேரத்தைத் தாண்டியிருந்தது. விடுதலையாகும் எல்லோருக்கும் எப்போது அனுப்புவார்கள் என்கிற பரபரப்பு. இத்தனை வருடங்கள் இருந்த பொறுமையெல்லாம் விலகி இப்போது ஒவ்வொரு நொடியையும் நீண்டதாக மாற்றியிருந்தது. நன்னடத்தை அதிகாரி பெயர்களையும் ஆட்களையும் சரிபார்த்தார். தாமதமாக வந்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்ட சூப்பிரண்ட் எல்லோருக்கும் இனிப்புகள் வழங்கினார். ஆளுக்கொரு பையில் கொஞ்சம் பலகாரங்கள் வைத்துக் கொடுத்தார். வழக்கமான கோவங்கள் எதுவும் இல்லாத அவர் குரலில் அன்பு மிகுந்திருந்தது. இத்தனை நாட்கள் தனது பொறுப்பிலிருந்தவர்களை ஓர்மையில் அழைப்பதுதான் அவருக்கு வழக்கம், இன்று எல்லோரையும் மரியாதையாய் போங்க வாங்கவென அழைத்தார், விடுத

லையாகும் எல்லோரின் மீதும் அவருக்கு நிஜமான அக்கறை இருப்பது தெரிந்தது.

நாடகம் முடிந்து விடுதலையாகும் கைதிகள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டார்கள். எல்லோருக்கும் புதிய உடையும், காந்தியின் சத்திய சோதனை புத்தகமும் கொடுத்தார்கள். திருந்திய பின் எதற்கு ஒருவனுக்கு சத்திய சோதனை என்கிற கேள்வி அவர்களில் சிலருக்கு? திருந்த விருப்பமில்லாதவனுக்கு எதற்கு இந்தக் கன்றாவி என்கிற இளக்காரம் இன்னும் சிலருக்கு. எப்படியாயினும் தங்களுக்கு இந்த முதியவர் ரூபாய்த் தாளைத் தவிர்த்து வேறு எதற்காகவும் அவசியமற்றவர் என அவர்கள் நினைத்தனர். கைதிகள் தங்களுக்கான அன்பளிப்புகளை வாங்கிக் கொண்டு அமர்ந்தபின் நாடகம் எழுதியதற்காக சூப்பிரண்ட்டின் துணை வியாரைப் பாராட்டி மரத்தால் செய்த காந்தி பொம்மையைக் கொடுத்தார்கள். தண்டனைச் சிறைவாசி தனது கடும் உழைப்பில் உருவாக்கிய பொம்மை அது. கைக்கு அடக்கமாக மிக அழகானதாய் இருந்த அந்த பொம்மையை வாங்கிக் கொண்ட அந்தப் பெண்ணின் கண்களில் ஆனந்தக் கண்ணீர். இறுதியாக சூப்பிரண்ட் பேசத் துவங்கினார்.

“எல்லாம் தண்டனைய முடிச்சுட்டுப் போறீங்க. இதுக்கு முன்ன உங்கள ஒவ்வொருத்தரும் ஒரு மாதிரி பாத்திருப்பாங்க, இனிமே வேற மாதிரி பாப்பாங்க. யார்கிட்டயும் கோபப்படாம சண்ட சத்தம் போடாம அமைதியான முறைல வாழனும். உங்க கைல பி.ஓ. ஸார் ஒரு ஃபார்ம் குடுப்பாரு அத பத்திரமா வெச்சுக்கனும். அஞ்சு வருஷத்துக்கு நீங்க

எங்க வெளியூர் போறதா இருந்தாலும் வர்றதா இருந்தாலும் அவர் கிட்ட சொல்லிடுத்தான் போக னும். மறக்காம மூணு மாசத்துக்கு ஒருமுற அவரப் போயி பாத்து என்ன செஞ்சுட்டு இருக்கோம்னு சொல்லிருங்க."

நிதானமாகப் பேசிய சூப்பிரண்டை எல்லோரும் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவ ருக்கு கூடுதலாக பேச தர்சங்கடமாக இருந்ததால் தடுமாறியபடி நின்றார். சிலர் கைதட்டப் போய் நிறுத்தினார்கள்.

"வேற நான் ஒன்னும் சொல்றதுக்கு இல்ல, நீங்க எல்லோருமே நல்லபடியா வாழனும் அதான் எனக்கு விருப்பம். உங்களுக்கு என்ன உதவி வேணும்னாலும் நீங்க பி.ஓ. ஸார் கிட்ட கேளுங்க. அவர் செய்வாரு."

தனது சுருக்கமான உரையை அவர் முடித் துக் கொண்டபின் எல்லோரும் உற்சாகமாய் கைதட்டினார்கள். வீடு திரும்பும் அவசரமும் பர பரப்பும் அவர்களுக்கு முன்னைவிடவும் அதிக மாக, கடைசியாக ஒவ்வொருவருக்கும் ஊர்வரைச் செல்வதற்கான செலவுத் தொகையைத் தந்து அனுப்பி வைத்தார்கள். கூண்டிலிருந்து விடுபட்ட பறவைகள் தங்கள் பூர்விக நிலம் நோக்கி பறக்கும் ஆவலாதியுடன் ரெக்கைகள் முளைத்து நடந்தன. மனம் சிந்திக்கிற வேகத்திற்கு உடல் இயங்க முடிந் தால் இந்த நொடியில் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த ஊரில் இருந்திருக்க வேண்டும். சிறைச்சு வர்களைத் தாண்டின அத்தனை பேருக்கும் மகத் தான சந்தோசம். இந்த உலகோடு ஒரே நொடியில்

கட்டிப்புரண்டு களியாட்டம் போடப் போகிற பரவசம். சிலரை அழைத்துச் செல்ல அவர்களின் உறவினர்கள் வந்திருந்ததால் அங்கு சின்ன கூட்டமிருந்தது. அழகர்சாமி தன்னை அழைத்துச் செல்ல வரவேண்டாமென சொல்லி இருந்ததால் வீட்டிலிருந்து யாரும் வரவில்லை. மாறாக விடுதலையானதும் எல்லோருமாக சேர்ந்து ராமேஸ்வரம் போய் வருவதென பேசி இருந்தனர். இதற்குப்பின் எல்லாம் சரியாகிவிட வேண்டுமென்பதற்காக அம்மா எப்போது வேண்டிக் கொண்ட நேர்த்திக் கடன். எதாவதொரு காலத்தில் தன் கணவன் திருந்திவிடமாட்டானவென நம்பும் லட்சக்கணக்கான பெண்களின் நிறைவேராத நேர்த்திக்கடன். நேர்த்திக்கடன்கள் மட்டுந்தான் நிறைவேறுமே ஒழிய, நேர்ந்து கொண்ட காரியம் பெரும்பாலும் விளங்கியதில்லை. பெண்கள் விஷயத்தில் எந்தக் கடவுளும் ஆகக் கருணையானவர்களில்லை.

கதிர் அம்மாவையும் முருகனையும் அழைத்துக் கொண்டு காரில் கிளம்ப, அவர்களுக்கு முன்பாகவே மதுரையிலிருந்து ராமநாதபுரம் செல்லும் புறவழிச்சாலையில் அழகர்சாமி காத்துக் கொண்டிருந்தார். அவரை எதிர் கொண்டதும் என்ன பேசுவது? சிரிக்க வேண்டுமா? நலமாய் இருக்கிறாயா எனக் கேட்பதா? வழியெல்லாம் கதிருக்கு குழப்பம். வெறுப்பை மீறின திடீர் அன்பு எப்படி வரும்? சந்தோசமாய் வந்த அம்மா அவரைப் பார்த்ததும் உணர்ச்சி பெருக்கில் ஓவென அழத்துவங்கினாள். கதிருக்கு முன்பு அம்மா சந்தோசமாய் இருந்ததைப் பார்த்தபோது உண்டான எரிச்சலை விடவும் இப்போது கூடுதலான எரிச்சல்.

அவன் வெறுமனே அவரைப் பார்த்து சிரித்தான். அவனுக்கு சிரமம் தராமல் அவர் முருகனிடம் இயல்பாக பேசத் துவங்கினார். அவர்கள் எல்லோ ருமாக ஒரு கடையில் ஒதுங்கி தேநீர் குடித்த போதும் கூட அம்மா அழுகையை நிறுத்தியிருக்க வில்லை. கதிர் இரண்டு முறை சத்தம்போட்டான். "ஏம்மே இப்ப அழுது அசிங்கப்படுத்திட்டு இருக்க." என அவளை அமைதிப்படுத்த முயன்று தோற் றுப்போனான். அழகர்சாமி இதையெல்லாம் பெரி தாக அலட்டிக் கொள்ளவில்லை. "எதுக்கு இப்ப அழுதுக்கிருக்க. அதான் விடுதலையாகிட்டன் ல. பேசாம வா." என நிதானமாகச் சொல்ல அம்மா வின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து தேம்புதலானது. பின்பு தன் வாழ்க்கை இப்படி நொடிந்து போனதற்காக சம்பந்தமே இல்லாத யார் யாருக்கெல்லாமோ சாபம் விட்டுக் கொண்டிருந் தாள். எதையும் பார்க்காமல் உறங்கலாமென்றா லும் கதிருக்கு அம்மாவின் விசும்பல் சத்தம் தொந் தரவுசெய்தது. முருகன் மட்டும் அழகர்சாமியிடம் சாதாரணமாக பேசிக் கொண்டு வந்தான். அழகர் சாமி சிறையில் தனது ஆளுமை குறித்தும், பலங் கள் குறித்தும் பெருமை பேச கதிர் எல்லாவற்றை யும் கேட்டும் கேட்காதவனாய் இருந்தான். வெயி லின் உக்கிரம் கொஞ்சம் கொஞ்சமாய் தணிந்து கொண்டிருந்த சாலையின் இருமருங்கிலும் மரங் கள். திறந்துவிடப்பட்ட கண்ணாடியின் வழியாய் பொங்கி வந்து காற்று உடலைத் தழுவி கதிரை சாந்தப்படுத்தியது. வெக்கையில் நீண்ட நேரமாய் நீர் அருந்தாமல் வறண்டு போயிருந்த இதழ்களை அவ்வப்போது நாவால் ஈரப்படுத்திக் கொண்டான்.

ராமநாதபுரம் தாண்டி மண்டபம் நெருங்குகையில் எங்கும் உப்புக்காத்தின் வாடை. தன்னைச் சூழ்ந்த எல்லாவற்றையும் தனது பிரதிகளாய் மாற்றிவிடும் வல்லமை கடலுக்கு மட்டுமேயுண்டு. காற்றில் வெயிலில் எல்லாவற்றிலும் கடல். உப்புக் காற்று உடலில் பட்டு கதிரும் கடலின் உப்பானான். நீலக்கடலும் நீலவானும் அருகருகே இருப்பது போல் கடலின் இயற்கையின் பிரம்மாண்டம். தன் கொந்தளிப்புகள் எதையும் காட்டிக் கொள்ளாத வங்காள விரிகுடாவைப் போல் கதிரும் உள்ளிருக்கும் அதிர்வுகளைக் காட்டிக் கொள்ளாத ஆழ்ந்த அமைதியிலிருந்தான். சூரிய அஸ்தமனத்துக்கு கொஞ்சம் முன்பாக ராமேஸ்வரத்தை அடைந்தார்கள். மாலை நேரத்தின் பரபரப்பு எலலா சாலைகளிலும். புனித நீராடிய வட இந்தியப் பெண்கள் ஈர உடையோடு கூட்டமாக அவர்களைக் கடந்து சென்றார்கள். கோவில் கோபுரத்தில் தெறித்த சூரிய ஒளிக்கதிர்கள் மகோன்னதமான ஒரு மயக்கத்தைத் தந்தது. பொன்னில் உருக்கிய சிற்பக் குவியலென நீல வானுக்குக் கீழ் கோபுரத்தைக் காணும் எவருக்கும் முன்னிலும் கூடுதலான பக்தி வரும். கடற்கரையை ஒட்டி தமிழ்நாடு ஹோட்டலுக்குப் பின்புறமாக காரை நிறுத்திவிட்டு புனித நீராட சென்றவர்களை உள்ளூர் கைடுகள் சிலர் சூழ்ந்து கொண்டனர். "அண்ணே, இரநூறு ரூவா குடுங்கண்ணே எல்லா தீர்த்தக் கிணறையும் சுத்திக் காட்றோம்." என கதிரிடம் ஒருவன் கேட்டான். "இல்லண்ணே நாங்க அதுக்கு வர்ல." கதிர் அவர்களை விலக்கி வேகமாக நடக்க, இன்னொருவன் "பிண்டம் குடுக்கனுமாண்ணே. ஐயர் ஏற்பாடு பண்

ணலாம். கம்மி ரேட்டுதான்." என நச்சரித்தான். "ஏங்க, நாங்க பக்கத்து ஊருதான் என்ன வேணு னாலும் பாத்துக்கறோம். சோலியப் பாத்துட்டுப் போங்க." என கதிர் கடுப்பில் வந்தவும் வந்தவர்கள் முறைத்தபடியே திரும்பிப் போனார்கள்.

நடு வீதியை மறைத்து நின்றிருந்த பசுமா டுகளுக்கு அருகில் நின்றிருந்த ஒரு வட இந்தியக் குடும்பம் கொழுத்த காவி நிற பசுமாட்டை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றது. அங்கும் இங்குமாய் நடந்து போக்குக்காட்டிய மாடு நின்றவாக்கில் சாலையில் மூத்திரம் கழிக்க அந் தக் குடும்பத்தில் இருந்தவர்கள் ஒவ்வொருவராய் சிறுநீரைக் கையில் பிடித்து தலையில் தெளித் துக் கொண்டனர். 'தாயோலி இம்புட்டு தூரம் வந் தாய்ங்க?' என நினைத்துக் கொண்ட கதிர் எல் லோரும் குளிக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். வெயில் குறைந்து ஊரை அள்ளிச் செல்லும் பெருங்காற்று வீசியதால் சட்டையை அவிழ்த்த தும் குளிரை உணர முடிந்தது. அந்த இடம் கோவில் ஸ்தலம் என்பதையும் தாண்டி கண்கள் குளித்துக் கொண்டிருந்த பெண்களின் அங்கங் களில் அலைந்து செல்லத் துவங்கியது. குளிக்க படியில் இறங்கியவனை அம்மா பிடித்து நிறுத் தினாள். "என்னடா அதுக்குள்ள குளிக்க எறங் கிட்ட?" கதிர் அவளைப் புரியாமல் பார்த்தான். "முடி இறக்க வேணாமா?" கோவிலுக்குப் போவது மட் டுந்தான் அவளுக்கு நேர்த்திக் கடனென நினைத் துக் கொண்டிருந்தவனுக்கு முடி எடுக்க வேண் டுமென்பதைக் கேட்டதும் எரிச்சலானது. "நான் எதுக்கு எடுக்கனும்?" என முகம் சுளித்தான்.

“எலேய் கிறுக்கனாட்டாம் பேசாத. இனிமேலாச்சும் நம்ம குடும்பம் நல்லா இருக்கனுமேன்னு நென.” என அம்மா அவன் மீது எரிந்து விழுந்தாள். கதிர் அவிழ்த்து வைத்த தன் சட்டையை மாட்டிக் கொண்டு கோவிலை நோக்கிச் செல்லும் பாதை யில் நடக்க, சற்றுத்தள்ளி முடி இறக்க அமர்ந்தி ருந்த அழகர்சாமி அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

வெவ்வேறு மொழி பேசும் ஆட்கள் நிறைந்து கிடந்த வீதியில் அவனைத் துரத்தி வந்து பிடிக்க முருகனுக்கு சிரமாய் இருக்கவில்லை. “என்னடா என்னயப் பாத்தா கேணக் கூதியா தெரி யுதா இவய்ங்களுக்கு?” என ஆத்திரமாக கதிர் கத்த, ஒரு கடையை ஒட்டி அமர்ந்திருந்த ஆண் டிகளில் ஒருவர் “தம்பி கோயில் வாசல்ல நின்னு என்ன பேசிட்டு இருக்க.?’ எனக் கோவமாய்க் கேட் டார். முருகன் அவன் கையைப் பிடித்து இழுத் துக் கொண்டு கடலை நோக்கி நடந்தான். “டேய் மாப்ள, மயிர் தானடா. விட்றா போகட்டும்டா..” என சமாதானம் சொல்ல, “இந்தக் கூதியனுக்கு மயிரக் கூட நான் இனிமே தரக்கூடாதுடா. என்னய விட்றா முருகா.” கதிர் அவனிடமிருந்து விலக முயன் றான். எதிரில் வந்த ஆட்களின் மேல் இருவரும் இடித்துக் கொண்டனர். பார்க்கிற எல்லோருக்கும் அவர்கள் மல்லுக்கட்டுகிறார்களோ என சந்தே கம். “டேய் இத மட்டும் பொறுத்துக்கடா. அந் தாளுக்காக இல்ல அம்மாவுக்காகன்னு நெனச் சுக்க. வாடா.” முருகன் அவன் கைகளை விடா மல் பிடித்துக் கொள்ள “அவ ஒரு முதுகெலும்பு இல்லாத முண்ட டா. அந்த முண்டையால தான்

இவ்வளவு காலம் நானும் புழு மாதிரி வாழ்ந்துட்டு இருக்கேன்." ஆத்திரம் உச்சத்திற்கு சென்றதில் தன் மீதான ஆற்றாமையில் அவனுக்கு கண்ணீர் கசிந்தது. முருகன் அவனைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டு கடலை நோக்கி அழைத் துச் சென்றான்.

பகலின் வெளிச்சம் விலகி இருளுக்காக வழிவிட கடலுக்கு இறங்கும் படிக்கட்டில் வெற்று மேலோடு கதிர் முடி இறக்கப்பட்டு மொட்டைத் தலையோடு இருந்தான். இந்த முறையும் அந்த தேவடியா மகனிடம் தான் தோற்றுவிட்டோமே யென மனம் புழுங்கியது. முதுகிலிருந்து எலும்பு கள் உதிர்ந்து விழுந்து புழுவாகிப் போன அவமா னம் அவனுக்குள். தன்னைச் சூழ்ந்த எல்லோரும் தன்னைப் பார்த்து சிரிப்பது போன்ற வேதனை யிலும் வெறுப்பிலும் எழுந்து கடலுக்குள் இறங்கி யவன் யாரும் கண்டறிய முடியாத ஆழத்திற்குள் தொலைந்து போக வேண்டிய அழுத்தத்தோடு தனது உடலை ஆழம் நோக்கி இழுத்துச் சென் றான். உப்பு நீர் மூக்கின் வழியாகவும் காதுகளின் வழியாகவும் நுழைந்து அவனைத் தூக்கி எறிந்தது. வேண்டா வெறுப்பாக நீரிலிருந்து வெளியேறியவ னின் பார்வையில் இப்போது விளக்குகள் வெளிச் சம் சூழ்ந்த கோவில் கோபுரம் முன்னை விட வும் ரம்மியமாய் காட்சியளித்தது. முருகன் இவன் மேலேறி வர வேண்டுமென்பதற்காக முதல் படியில் காத்துக் கொண்டிருந்தான்.

3

சிறைவாழ்க்கையின் மீதான நம்பிக்கையின்மை மரணம் குறித்த அச்சத்தை நிரந்தரமாக விஜிக்குள் ஏற்படுத்தியிருந்தது. அவனோடு இருந்த எல்லோரும் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் சாமர்த்தியங்களைக் கற்றுக் கொண்டிருந்தனர். தங்கராசு படிப்படியாக தன்னை அதிகாரத்தை நோக்கி நகர்த்திக் கொண்டிருந்தான். மருத்துவமனையிலிருந்து திரும்பிய விஜிக்கு எப்போதும் வீட்டின் நினைவு. இந்தக் கொடிய தனிமையிலிருந்தும் சாவின் விளிம்பிலிருந்தும் மீண்டு மலரின் மடியில் பாதுகாப்பாய் சுருண்டு படுத்துக் கொள்ள வேண்டுமென மனம் ஏங்கியது. பாதுகாப்பு கருதி தற்காலிகமாக அவனை விசாரணைக் கைதிகள் இருக்கும் பிளாக்கிற்கு மாற்றியிருந்தார்கள். இரவில் சின்ன அரவம் கேட்டாலும் பயந்து விழிப்பான். கைகள் தானாக உதறலெடுக்க, நரம்புகள் பிடித்து இழுத்துக் கொள்வதைப் போல் உதறும். கண்கள் ஓரிடத்தில் நிற்கமுடியாமல் அங்குமிங்குமாய் அச்சத்தில் அலையும். குன்

றென உறைந்து நிற்கும் யானையின் வலிமையை குலைத்துப் போடும்படியாய் அவன் மீதான தாக்குதல் அவனிடமிருந்த பலத்தையும் மனவலிமையையும் பறித்துக் கொண்டு அச்சத்தை நிரந்தரமாக தந்திருந்தது. யாரோடும் பேச அச்சப்பட்டு ஒதுங்கி இருந்தான். ஒவ்வொரு வேளை உணவும் தனக்கான நஞ்சாக இருக்கக் கூடுமென்கிற சந்தேகத்தில் சோற்றுக்கவளம் தொண்டைக்கும் வயிற்றுக்குமாய் நகர்ந்து செல்ல போராடும். கதிரும் மலரும் அவ்வப்போது வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். கதிர் அழகர்சாமியை கொலை செய்யுமளவிற்கு வெறுப்பதற்கான காரணங்களை அவன் சொல்லாமலேயே இந்த நாட்களில் விஜி புரிந்து கொண்டிருந்தான். தன்னை நேசிக்கும் மனிதர்களுக்கு தயக்கமின்றி துரோகமிழைக்கும் ஒரு மனிதனின் மீது யாருக்குத்தான் அபிப்பிராயம் வரும்? சில துரோகங்களை மன்னிக்கலாம், சில துரோகங்களை மன்னிப்பது நாம் நம் ஆன்மாவிற்கு செய்யும் இழுக்கு. கதிர் ஒளியைக் கண்டடைய இருளைக் கடக்கத்தான் வேண்டும் என்கிற நியதியில் விஜியும் உடன்பட்டான். ஒரு சகோதரனைப் போல் அவனோடு நெருங்கும் சமயமெல்லாம் விடுமுறையில் செல்லும் போது எந்த காரணத்திற்காகவும் அழகர்சாமியை பார்த்துவிடக் கூடாதென்கிற எச்சரிக்கையும் இருக்கும்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு மலர் அவனுக்கான பரோல் விடுப்பிற்கு விண்ணப்பித்திருந்தாள். அவன் உடல்நிலை கருதி உடனடியாக அவனுக்கு விடுமுறை அனுமதிக்கப்பட்டது. இதற்கு முந்தைய விடுமுறைகளின் போது

தன்னை அழைத்துக் கொண்டு செல்ல யாரை யும் அவன் வரச்சொன்னதில்லை. இந்த முறை கதிர் வந்திருந்தான். பொட்டல் எடுத்து வரும் வேலையோ, டவுன் ஹால் ரோட் வேலையோ எதுவுமில்லாமல் சுதந்திரமானவனாய் இருந்தான். ஊரிலிருந்த அழகர்சாமியின் வீட்டை விற்றதில் வந்த பணத்தில் ஒரு பாதியை அவர் கதிரின் அம் மாவிடம் கொடுத்துவிட்டதால் வீட்டு நிலைமை கவலைப்படும்படியாக இல்லை. புது மனிதனாய் தனது எதிரில் இருக்கும் கதிரைப் பார்க்கும் போது, அதற்காக முழுமையாக சந்தோசப்படும் மனநிலை யில் விஜி இல்லை. ஆறுதலாக கதிர் அணைத் துக் கொண்டபோது நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு பாதுகாப்பு உணர்வு பிறந்தது. "உன்னய இப்பிடி பாக்கறதுக்கு சந்தோசமா இருக்குடா கதிரு. பெரிய மனுஷனாட்டம் இருக்க." விஜி பூரித்துப்போன மனதோடு சொல்ல, கதிருக்கு கண்கள் கலங்கின. சத்யா இல்லாமல் மனம் நொறுங்கிப் போயிருந்த நாட்களில் இவனை அந்த வலியிலிருந்து மீட்டு வந்தது விஜி. இந்த உலகில் இனி யாருமில்லை யென கதிர் கலங்கியிருந்த நேரத்தில் விஜியும் மல ரும் அவனை ஒரு குழந்தையென அரவணைத்துக் கொண்டிருந்தனர். அவன் செய்யும் தொழில், திடீர் திடீரென கோவப்படும் மனநிலையென எல்லாவற் றையும் அனுசரிக்கத் தெரிந்திருந்த அவர்களோடு பேசும் போதெல்லாம் இப்படியொரு குடும்பத்தில் பிறந்திருக்கலாமெனத் தோன்றும். அங்கும் கஷ் டங்கள் இருக்கிறதுதான், ஆனால் அவர்களிடமி ருந்த அன்பிற்கு முன்னால் அந்தக் கஷ்டங்கள் ஒன்றுமில்லை. தான் பார்த்து பிரம்மித்த விஜி

இப்பொழுது சுணங்கிப் போய் யாரோ ஒருவனைப் போலிருப்பதை கதிரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. "என்னண்ணே இப்பிடி ஆகிட்ட?" தன்னை மீறி கசிந்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக் கொள்ள மறந்து கதிர் குரல் தழுதழுத்தான். "எப்பிடி உயிரோட இருக்கம்னே ஆச்சர்யமா இருக்குடா. இந்த உடம்புல வெறும் உயிர மட்டுந்தான் விட்டு வெச்சிருக்கானுக. இப்பல்லாம் யாரப் பாத்தாலும் பயமா இருக்குடா கதிரு." சொல்லும் போதே விஜிக்கு கை நடுங்கியது. பகல் முழுக்க பெய்திருந்த மழையின் குளுமை மதுரையின் சாலைகளெங்கும். அவ்வளவாக வாகனங்கள் கூட இல்லாத ரம்மியமான அந்தப் பொழுது அவர்களுக்கானதய் இல்லை. "பயப்படாதண்ணே, எதும் ஆகாது. எல்லாத்துக்கும் ஒரு வழி இருக்கும். தைரியமா வா." கதிர் ஆறுதலாக அவர் கைகளைப் பிடித்துக் கொண்டான். விஜி ஆமென தலையாட்டிக் கொண்டு எங்கோயோ பார்த்துக் கொண்டு அவனோடு நடந்தான்.

ஊர் திரும்புகையில் ஏதோ நினைவு வர, விஜி "கதிரு உங்கய்யா கிட்ட நான் பரோல்ல வர்றதப் பத்தி எதும் சொன்னியா?" என பதட்டமாகக் கேட்டான். "அடப் போண்ணே. நான் அந்தாளு கூட பேசறதே இல்ல. இதப்போயி ஏன் சொல்லப் போறேன்." கதிர் சிரித்தான். இருவருக்கும் சேர்த்து வாங்கிக் கொண்ட மது பையில் கனத்தது. வீடு செல்லும் வரை பொறுமையில்லாமல் விஜி கொஞ்சம் மதுவை குளிர்பான போத்தலில் கலந்து குடித்த பிறகுதான் கொஞ்சம் துணிச்சல் வந்தவனாய் மாறினான். மதுவின் வீர்யம் குருதி

யில் கலந்த போது கசப்பு மறைந்து மெல்லிய ஆறுதல் பிறந்தது. பேருந்திலிருந்து இறங்கி வீடு நோக்கி நடந்தவர்களை எங்கும் இருள் சூழ்ந்தி ருந்தது. தூரத்தில் நாய்களின் குரைப்பொலி. கல் லூப்பட்டிக்குச் செல்லும் டவுன் பஸ் ஒன்று அவர்க ளைக் கடந்து செல்ல இருவரும் ஒதுங்கி வழிவிட் டார்கள். சாலையின் ஓரத்தில் சற்று தூரம் தள்ளி மலம் கழித்துக் கொண்டிருந்த பெண்கள் இரண்டு ஆண்கள் வருகிற நிழலைப் பார்த்து எழுந்து நின் றுகொண்டனர். இருவரும் வேகமாய் அவர்களைக் கடந்தபோது தூரத்தில் வீட்டு வாசலில் விளக்கெரி வதை விஜி பார்த்தான். பாதுகாப்பான கூட்டிற்குத் திரும்பிவிட்ட நிம்மதி அவனிடம். முன்னை விடவும் நடையின் வேகம் அதிகமானது. வாசலில் விஜியின் அப்பாவும் மலரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த னர். கடந்த முறை ஒரு குதிரையைப் போல் வந்து சென்றவன் இந்த முறை காயமுற்று நொறுங்கிப் போன விலங்கென வருவதைக் கண்டு விஜியின் அய்யா கதறி அழுதார். ஓடி வந்து இவனைக் கட்டிக் கொண்டார். “என்ன சாமி இது? இப்பிடியாகிட்ட.?” ஆற்றாமையில் பெருங்குரலெடுத்து அழுதவருக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் விஜியும் கண் கலங் கியபடி நின்றான். மலர் அவன் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள். அய்யாவை என்ன சொல்லி யும் அவனால் சமாதானப்படுத்த முடியவில்லை. தன்னால் தான் அவனது வாழ்க்கை இத்தனை சீர ழிந்து போனதென்கிற வருத்தம் அவருக்கு. அழுது தீர்த்தாலும் ஆறாத ரணத்திற்கு ஆறுதல் சொல்வது எளிதானதில்லை.

எல்லோருடனும் அமர்ந்து இரவு ணவை முடித்துக் கொண்டு அய்யா விருதுநகர் கிளம்புவதாகச் சொல்ல, விஜி "எதுக்குப்பா இந்த நேரத்துல போறேங்கற. இருந்துட்டு காலை ல பொ." என பிடித்து நிறுத்தினான். "இல்லய்யா நான் நாளைக்கு பொழுசாயம் வாரேன். காலைல முக்கி யமான சோலி ஒன்னு இருக்கு." என பிடிவாதமா கக் கிளம்பினார். விஜிக்கும், மலருக்குமான அந்த இரவின் தனிமை முக்கியமென்பதைப் புரிந்து கொண்ட கதிர் தானும் கிளம்புவதாய்ச் சொல்ல, "டேய் நீ போகாத இரு. உங்கிட்ட பேசனும்." மலரும் விஜியுமாக மறித்தார்கள். அவனுக்கு நேரடியாகச் சொல்லவும் தயக்கம். அங்கு தங்குவதற்கும் யோச னையாய் இருந்தது. "இல்லண்ணே அம்மா கிட்ட ஒன்னும் சொல்லல. தேடிட்டு இருக்கும்." என வெவ்வேறான காரணங்களை சொல்லிப் பார்த் தான். மலர் பிடிவாதமாக அனுப்ப மறுத்தாள். கதி ரும் அன்று தங்க சம்மதித்தான். சூது நிறைந்த சிறைச்சாலையின் இரவுகளில் இருந்து விடுபட்ட விஜி வாசலில் பாய் விரித்து வானத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். மிச்சமிருந்த மதுவை கதிரும், அவனும் நிதானமாய்க் குடித்துக் கொண்டிருக்க வேலைகளை முடித்துவிட்டு வந்த மலர் களைப்பு நிரம்பிய முகத்தோடு அமர்ந்தாள். வேகமாக அவ ளிடம் முதுமை சேர்வதை கவனித்த கதிருக்கு வருத்தமாய் இருந்தது.

"நீ மாறினதுல எங்களுக்கு சந்தோ சண்டா கதிரு. ஆனா இதுக்கு அப்பறம் என்ன செய்யப் போற?" மலர் தான் பேச்சைத் துவங் கினாள். அளவாகவே மதுவருந்தியிருந்ததால்

கதிர் நிதானமாகவே இருந்தான். "இப்போதைக்கு ஒரு யோசனையும் ஒரு யோசனையும் இல்லக்கா. முருகன் அவங்கூட மலேசியாவுக்குக் கூப்டறான். பாஸ்போர்ட்டெல்லாம் வாங்கி எல்லா ஏற்பாடும் அவந்தான் செய்றான். ஆனா நா இன்னும் ஒரு முடிவுக்கு வரல." பெரிதான விருப்பமில்லாமல் அவன் சொல்ல, "ஏண்டா உங்கய்யாவ கொல்ற துக்கு நேரம் பாத்துட்டு இருக்கியா?" மலர் இப்படிக் கேட்டதும் கதிருக்கு சங்கடமாக இருந்தது. பதிலே சொல்லாமல் அமைதியாய் இருந்தான். "உங்கண் ணன் சொல்லுச்சுடா. எனக்கு சங்கடமா போச்சு. நீ இப்பதான் புதுசா வாழ்க்கைய ஆரம்பிக்கப் போற. அப்பிடியே கண்காணாம எங்கியாச்சும் போயி சந் தோசமா இருடா. இந்தப் பக வேணாம்." கதிர் திரும்பி அவள் கண்களைப் பார்த்தான். அழகர் சாமி விஜிக்கு இத்தனை துரோகங்கள் செய்தும் எப்படி இவர்களால் அவனை மன்னிக்க முடிகிறது. "நீ அவனுக்கு புரியற மாதிரி எடுத்து சொல்லு மாமா." விஜியையும் தன்னோடு சேர்த்துக் கொண் டாள். கதிரின் மனதை அறிந்திருந்ததால் விஜி எது வும் சொல்லாமல் இருவரையும் வெறுமனே கவ னித்துக் கொண்டிருந்தான். "உனக்கு சொன்னா புரியாதுக்கா. அவர மன்னிச்சு விட்றது என்னய நானே கொல செஞ்சுக்கற மாதிரி." கதிர் தாள முடியாத வெறுப்பில் காறித் துப்பினான். விஜி மலரிடம் எதுவும் கேட்கவேண்டாமென கண்க ளால் சொல்ல அவள் அமைதியானாள். காயம் பட்ட மனதோடு கலங்கியிருந்த அம்மூவரையும் நேற்று முழுதாய் இருந்து இன்று சற்றே கரைந்தி ருந்த நிலா கருணையோடு பார்த்துக் கொண்டி

ருந்தது. ஊர் அடங்கி நீண்ட நேரமாகியிருந்ததால் எங்கும் இப்பொழுது இரவின் நிசப்தம். குளுமை உடலுக்கு ஆறுதலாய் இருக்க, "சரிண்ணே நான் படுக்கறேன். காலைல பேசுவோம்." என கதிர் போர்வையை எடுத்துக் கொண்டு திண்ணைக்குச் செல்ல எழுந்தான். "இன்னொரு விஷயம் சொல்ல னும்டா கதிரு." போதையின் நிதானத்தோடு விஜி யின் குரல் கேட்டு கதிர் எழாமல் அப்படியே அமர்ந் தான். "சொல்லுண்ணே." எப்படித் துவங்குவதெ னத் தெரியாமல் தயக்கத்தோடு விஜி

"நீ என் தம்பின்னு நெனச்சு சொல்றண்டா கதிரு. நீ எனக்கு ஒரு உதவி பண்ணனும், ஆனா வேற யாருக்கும் தெரியக் கூடாது."

"என்னண்ணே லூசு மாதிரி பேசற. உனக்காக என்ன வேணும்னாலும் செய்வேன்."

கதிர் அந்த நொடியே அதை செய்து கொடுக்கும் முடிவோடு சொன்னான்.

"என்னால இதுக்கு அப்பறம் ஜெயிலுக்கு திரும் பப் போக முடியாதுடா. என்னய எப்ப வேணாலும் சாவடிச்சிருவானுங்களோன்னு பயமா இருக்கு. நானும் மலரும் இப்பிடியே எங்கியாச்சும் போயிர லாமான்னு இருக்கோம். எங்களுக்குக் கொஞ்சம் பணம் வேணும். அதோட கண் காணாத இடத் துக்கு நாங்க போறதுக்கு நம்பிக்கையான ஒரு ஆளோட உதவி வேணும்."

அவன் குரலில் இருந்த அச்சத்தையும் ,தன் மீதான நம்பிக்கையையும் கதிர் புரிந்து கொண்டிருந்தான். பணம் பிரச்சனையில்லை. ஆனால் எங்கு அனுப்பி வைப்பதென மனம் வேகமாய் யோசித்தது. யாவா

ரத்திற்காக அலைந்த தமிழக கேரள மலைப்பகு திகளின் கிராமங்களும் சிறு நகரங்களும் நினை வுக்கு வந்து மறைந்தன. எங்குப் போவதென் பதை மெதுவாக யோசித்துக் கொள்ளலாம். முத லில் இவர்கள் இங்கிருந்து கிளம்ப உறுதுணையாக இருக்க வேண்டுமென முடிவு செய்தவன்,

"நல்ல விஷயம்ணே. நான் உடனே பணம் ஏற்பாடு பன்றேன். எங்க போறது என்னங்கறத நாளைக்கு முடிவு பண்ணிரலாம். இங்க பக்கத்துல எங்க போனாலும் நம்மாளுங்க யார் கண்லயாச்சும் பட் றுவீங்க. தூரமா ஒரு எடம் யோசிப்போம். ஆனா அப்பா பேர்ல லீவு எடுத்திருக்க, அப்பாவுக்கு எதும் பிரச்சன வராதா? அவர் கேட்டா என்ன சொல்லப் போற?"

விஜி சிரித்தான். "இல்லடா இப்ப ரெண்டு மூணு தடவ மலர் பேர் ல தான் லீவு எடுக்கறேன். அவ என்கூட வர்றதால பிரச்சன இருக்காது. ஆனா அப்பா கிட்ட விஷயத்த சொல்லி சமாதானப்படுத்த னும் அத நாளைக்குப் பாத்துக்கலாம்." கதிர் தங்க ளுக்கு பலமாக இருப்பான் என இருவரும் உறுதி யாக நம்பினார்கள். இதற்குப் பின்னும் மரண பயத் தோடு அவனை எப்படி சிறைக்கு திருப்பி அனுப் பதென்கிற குழப்பத்திலிருந்த கதிருக்கு இந்த யோசனை பெரும் சந்தோசத்தைக் கொடுத்தது. ஏதோவொரு மூலையில் அவன் சந்தோசமாய் வாழ்கிறான் என்பதை விடவும் வேறென்ன வேண் டும். இனி ஒருபோதும் பார்த்துக் கொள்ள முடி யாமல் போனால் கூட பிரச்சனையில்லை. அவர் களை இவனும் இவனை அவர்களும் மரணத்தின் தருணம் வரை நினைத்துக் கொண்டிருக்க முடி

யும். கதிர் சந்தோசமாக ஏற்பாடு செய்வதாக சம்ம தித்தான். இந்த ஊரும், தங்களைச் சூழ்ந்த கஷ்டங் களும் ஓரிரு தினங்களில் நிரந்தரமாக விலகிவிடு மென்கிற நம்பிக்கையில் விஜியும், மலரும் வாசலில் படுத்துக் கொள்ள கதிர் திண்ணையில் போர்வை விரித்து படுத்துக் கொண்டான்.

பாட்னாவில் ஹோட்டல் நடத்தும் அருப்புக்கோட்டைக்காரர் ஒருவரின் தொடர்பு கிடைக்க அவரிடம் பேசி விஜியையும், மலரையும் அங்கு அழைத்துக் கொள்ள சம்மதம் வாங்கியிருந் தான். போதுமான பணமும் கைவசமும் இருந்த தால் அடுத்த நாள் மாலையே அவர்கள் அங்கி ருந்து கிளம்புவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் கதிர் செய்திருந்தான். இன்னும் நான்கு நாட்க ளுக்கு பரோல் விடுமுறை இருக்கிறது, அதுவரை யாரும் தேடப்போவதில்லை. இப்பொழுது ஒரே சங் கடம் விஜியின் அய்யாவுக்கு சொல்லி புரிய வைப்ப துதான். என்ன சொல்வதெனத் தெரியாமல் விஜி யும் மலரும் தயங்கிக் கொண்டிருந்தார்கள். சொன் னது போலவே மாலை அய்யா வந்திருந்தார். அடுத்த நாள் மகனும் மகளும் சாப்பிடுவதற்கென சந்தையிலிருந்து வாங்கி வந்த சேவல் அவர் கையி லிருந்த பிளாஸ்டிக் சாக்கிற்குள் துள்ளிக் கொண்டி ருந்தது. நேற்று போல் இல்லாமல் இன்று அவர் முகம் கொஞ்சம் மலர்ச்சியாய் இருந்தது. "இந் தாம்மா நாளைக்கு அடிச்சு கொழம்பு வெய்யி" என அவர் கொடுத்த சேவலை மறுக்காமல் வாங்கிக் கொண்டவள் விஜியிடம் சொல்லச் சொல்லிவிட்டு நகர்ந்து போனாள். நடக்கிற எல்லாவற்றையும் கவ னித்த கதிர் அவர்கள் பதட்டத்தில் எதையாவது

சொல்லிவிடக் கூடுமென நினைத்தான் . அங்கி ருந்து கிளம்புவதற்கான அவகாசமும் குறைவாய் இருந்தது. "அப்பா ஒரு விஷயம் சொல்லனும் உங்க கிட்ட." கதிர் பேச்சைத் துவங்க, விஜிக்கு மனம் படபடத்தது. "சொல்லுய்யா." அவர் கதிரின் பக்கமாய் வந்து உட்கார்ந்தார். "நீங்க என்ன நெனப்பீங்கன்னு தெரியல. ஆனா நாங்க பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கும். அண்ணனுக்கும் நம்ம ளுக்கும் அதான் நல்லது." என தயக்கத்தோடு அவன் சொல்ல, "அட என் புள்ளைக்கு ஒரு நல்ல துன்னா அது எதுக்கு இவ்ளோ தயங்கி தயங்கிச் சொல்ற. என்னண்டாலும் சொல்லுய்யா." அவர் முகம் முன்னைவிடவும் மலர்ச்சியானது. "ஜெயிலுக் குள்ள அண்ணனுக்கு நிறைய பிரச்சன. அது திரும்ப போச்சுன்னா எதும் ஆயிருமோன்னு பயப்ப டுது. அதான் இன்னைக்கு ராத்திரியே தூரமா ஒரு இடத்துக்குப் போயிரலாம்னு நெனைக்கிது. நம்மா ளுங்க யார் கண்லயும் படாத தூரத்துக்கு." மனதை அடைத்துக் கொண்டிருந்ததை படபடவென சொல்லி முடித்தபின் அவனுக்கு சிறிது ஆசுவாசு மாய் இருந்தது. விஜியின் அய்யா ஒரு நொடி கூட தயங்கவில்லை. "இதச் சொல்லவா மென்னு முழுங் கின. என் புள்ளைக்கு ஒரு விடிவு கிடைக்கி துன்னா எனக்குத்தானய்யா பெரிய சந்தோசம். சந் தோசமா போகட்டும்." சந்தோசமாகச் சொன்னார். "அதுக்கில்லப்பா, நான் போயிட்டா என்னய போலிஸ் தேடும். எப்பிடியும் பிடிக்கனும்னு பாப் பாங்க. உங்கள கூப்ட்டு கடுமையா விசாரிப்பாங்க. அடிக்கக்கூட செய்யலாம். அதனாலதான் தயக் கமா இருக்கு." விஜி அவர் முகத்தை பார்க்க முடியா

மல் சொன்னான். அய்யா அவன் தோள்களைப் பிடித்து அணைத்துக் கொண்டார். "நான் வாழ்ந்து முடிச்சிட்டண்டா தம்பி. சின்னதுல இருந்து முதுகெலும்பு இல்லாம எல்லாருக்கும் வளஞ்சு குடுத்து வாழ்ந்துட்டு இருந்தவன தல நிமிந்து வாழ வெச்சது நீ. அதுக்காக வாழ வேண்டிய நீ உன் காலத்தையெல்லாம் விட்டுட்ட. அந்தப் பிள்ள கெடச்சா வாழ்க்கையவும் விட்டுட்டு நீதான் வேணும்னு வந்துட்டா. இனிமேலாச்சும் ரெண்டு பேரும் சந்தோசமா இருக்கனும்யா. நீங்க போங்க. எந்த போலிஸ் விசாரிச்சாலும் எப்படி விசாரிச்சாலும் கவல இல்ல. உங்கள யாரும் தேடி வராமப் பாத்துக்கறேன்." விஜிக்கு அழுகை முட்ட அவரை இறுக அணைத்துக் கொண்டான்.

நான்கு பேருமாக அமர்ந்து உண்ட அந்த கடைசி விருந்திற்குப் பின் வெகு தூரத்திலிருக்கும் ஒரு நகரத்தை நோக்கி வலசை போகவிருக்கும் தன் மகனின் முகத்தையும் அதிலிருந்த சந்தோசத்தையும் பார்க்க அய்யாவுக்கு நிறைவாய் இருந்தது. அவன் இனி எப்படியும் பிழைத்துக் கொள்வான் என்கிற நம்பிக்கை வந்தது அவருக்கு. நிறைய பேசவேண்டுமென எழுந்த எல்லா தவிப்புகளையும் அவர்கள் அடக்கிக் கொண்டார்கள். பேச நினைக்கும் ஒவ்வொரு வார்த்தையும் கண்ணீராய் மாறி மலருக்கு சோற்றில் விழுந்தது. "அழாம சாப்பிடு தாயி." அய்யா நிறைவாகச் சொன்னார். உணவை முடித்துக் கொண்ட விஜியும், மலரும் அய்யாவை இறுக அணைத்துக் கொண்டார்கள். "எங்க போனாலும் சந்தோசமா இருங்கய்யா. இனி உங்களுக்கு எந்தக் கஷ்டமும் இருக்காது.

ஒரு காலம் மாதிரி ஒரு காலம் இருக்காது. எல்லா சோதனையும் ஒழிஞ்சு நீங்க வாழனும். போயிட்டு வாங்க." என இருவரையும் தன்னிலிருந்து பிரித்து அனுப்பினார். அய்யாவிடமிருந்து பிரிந்தவர்களை கதிர் அணைத்துக் கொண்டான். "விஜி, உன் கைலி எதாச்சும் இருந்தா குடுத்துட்டு போய்யா. நான் இருந்துட்டு காலை ல போறேன். லேட்டாகிப் போச்சு." என அய்யா கேட்க விஜி தன் பையைத் திறந்து புது கைலி ஒன்றை எடுத்துக் கொடுத்தான். சந்தோசமாக வாங்கிக் கொண்டவர் அவன் தோள் களில் தட்டிக் கொடுத்து போய்வரச் சொல்லி கை அசைத்தார். அவர்களோடு மதுரை வரைச் சென்று வழியனுப்புவதற்காக கதிரும் அங்கிருந்து கிளம்பிப் போனான்.

இரவு தாமதமாக வீடு திரும்பியதால் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த கதிரை முரு கன் வந்து எழுப்பிய போது பதினோறு மணியி ருக்கும். "டேய் கதிரு, எந்திரிடா கொஞ்சம் அவச ரம்." பதற்றத்தோடு இருந்தது அவன் குரல். உறக்க சடவோடு எழுந்த கதிர் என்ன ஏதேன விசாரிக் கும் முன்பாகவே "உடனே மூஞ்சியக் கழுவிட்டு எங்கூட வா.." என முருகன் அவசரப்படுத்தினான். "என்ன ஏதுன்னு சொல்லாம வா வான்னா என் னடா அர்த்தம்? என்னாச்சு?" படுக்கையிலிருந்து எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டபடி கதிர் கேட்க, அழுகையை அடக்கியபடி முருகன் "டேய் தயவு செஞ்சி இப்ப எதும் கேக்காத. எங்கூட வா." என முருகன் அழுகையினூடாகச் சொன்னான். சலிப்போடு சென்று முகத்தைக் கழுவி உடை மாற்றி வந்தான். இருவரும் அங்கிருந்து கிளம்பிய

போது வெயிலே இல்லாமல் வானம் மேக மூட்ட மாய் இருண்டிருந்தது.

வழியில் எங்கும் தேநீர் குடிக்கக் கூட நிறுத்தாமல் வேமகாய்ச் செல்லும் முருகனின் மீது எரிச்சல் வர, "என்ன ஏதுன்னு சொல்றா முருகா. கஞ்சியும் குடிக்காம தண்ணியும் குடிக்காம வயிறு அல்லையப் புடிக்கிது. சில நிமிடங்களில் அரசு மருத்துவமனையை நெருங்கிவிட முருகன் வண் டியை முன் வாசல் பக்கமாக இல்லாமல் மார்ச்சுவரி இருக்கும் பின் வாசல் பக்கமாக கொண்டு சென்று நிறுத்தினான். கதிருக்கும் இப்பொழுது சின்ன பதற்றம் தொற்றிக் கொள்ள "டேய் என்னன்னு சொல்றா?" என ஆத்திரமாகக் கேட்டான். சொல்ல நினைத்ததை சொல்ல முடியாமல் கதறி அழுத முருகன் "விஜி அண்ணன் செத்துப் போச்சுடா." என்றான். அவன் குரல் இப்பொழுது ஒப்பாரியாகி இருந்தது. கதிருக்கு குழப்பமாய் இருந்தது. இந்த நேரத்திற்கு சென்னையிலிருந்து பாட்னா செல்லும் ரயிலில் பயணித்துக் கொண்டிருக்கும் அவன் எப் படி இந்த மருத்துவமனையில் பிணமாக இருக்க முடியும்? பதட்டமும் குழப்பமும் சூழ வேக வேக மாய் பிணவறை நோக்கி ஓடினான். ஒரு போலிஸ் காரன் மட்டும் அங்கு காத்திருக்க, விஜியின் அம் மாவும் இன்னும் சிலரும் அங்கு பெருங்குரலில் அழுது கொண்டிருந்தார்கள். ஈரக்கொலை நடுங்க ஓடிவரும் கதிரைப் பார்த்ததும் விஜியின் அம்மா விற்கு அழுகை அதிகமாகியது. "கதிரு இந்தப் பய இப்பிடி செஞ்சுட்டானேடா." என கதறினாள். கதிர் அவளை தன்னிலிருந்து பிரிக்க முடியாமல் சேர்ந்து அழுத் துவங்கிவிட்டான். எங்கோ சென்று

வாழ நினைத்த அந்த மனிதனுக்கு எதற்காக இந்த முடிவு? ஆனாலும் அவனால் விஜி இறந்து போய் விட்டான் என்பதை உறுதியாய் நம்பமுடியவில்லை. அவளை விலக்கிவிட்டு பிணவறைக்குள் சென் றான். இறந்த உடல்களின் நாற்றமும், குருதிக்கறை படிந்த தரையுமாய் அந்த இடம் அவனை அடுத்த நொடியே குமட்டி வாந்தியெடுக்கும்படி தூண்ட ஒரு ஸ்ட்ரெச்சரில் வைக்கப்பட்ட எரிந்து போன உட லைக் காட்டினார்கள். சுமாரான உயரம். எரிந்து முழுமையாய் வெந்து போன உடல். இது கதி ரில்லை. ஆனால்? அவனுக்கு முன்னை விடவும் அழுகை அதிகமாக அந்த இடத்திலேயே விழுந்து கதறினான். தன் மகனை ஒருபோதும் யாரும் தேடக் கூடாதென்பதற்காக விஜியின் அய்யா தன் னைத் தானே தியாகம் செய்திருப்பதை இங்கு யாருக்கு சொல்ல முடியும்? வெளியில் அழுது கொண்டிருக்கும் இவரின் மனைவியிடம் மட்டு மாவது உண்மையைச் சொல்லலாமா? அவனால் கதறி அழ மட்டுமே முடிந்தது. இறந்தது விஜி யின் அய்யா தான் என்ற உண்மையை யாரிடம் சொன்னாலும் அது அவரின் தியாகத்திற்கு செய் யும் துரோகம். மனம் குமுறி அழுது கொண்டிருந்த கதிரை அந்த போலிஸ்காரனும், முருகனும் சிர மத்தோடு வெளியே அழைத்துக் கொண்டு வந் தார்கள். அந்த மருத்துவமனை வளாகத்திலிருந்த மனிதர்களும் பறவைகளும் அவன் கதறல் கேட்டு மனமிரங்கின. யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடி யாத துயரத்தை இந்த மனிதன் ஏன் தனக்கு தந் துவிட்டுப் போகவேண்டும். கதிர் கதறி அழுதபடி மயங்கிப்போனான்.

4

அழகர்சாமி முதல் வாரத்தில் வீட்டில் பொழுது கழித்து சலித்துப்போய் விரைவிலேயே தன் பழைய நாட்களுக்குத் திரும்பினார். இத்தனை ஆண்டுகால சிறைவாசம் அவர் உடலின் தினவை கொஞ்சமும் குறைத்திருக்கவில்லை. அவர் உடலுக்கு மிக வேகமாய் முதுமை எய்தியிருந்த அவரின் மனைவி போதுமானதாய் இல்லாததால் முன்னாள் தோழிகளை எல்லாம் தேடிச் சென்றார். நீண்ட இரவுகளில் தனக்கான இடத்தையும் பெண்ணையும் எளிதாக அமைத்துக் கொள்ள பழக்கப்பட்டவன் தனித்து உறங்க விரும்புவதில்லை. அழகர்சாமிக்கு பெண்கள் தேவையாய் இருந்தார்கள். யாராலும் அணைக்க முடியாத நெருப்பொன்று பசி தீராமல் எப்போதும் எரிந்து கொண்டே இருந்தது. மரணம் வரையிலும் ஓயாது எரிகிற தீவிரம் அதனிடம்.

சில நாட்களுக்குப்பின் அவர் வீட்டிற்கு வரும் நாட்கள் குறைந்துபோனபின், ஒரு அதிகாலை மானாமதுரைக்காரப் பெண்ணின் கணவனும் இன்னும் சிலரும் அங்கு தேடி வந்தார்கள். கதிருக்கும் அம்மாவுக்கும் குழப்பம். “அதான் எல்லாம் பேசி முடிச்சாச்சுல, திரும்ப எதுக்குய்யா வந்திருக்

கீங்க?" இதற்கு முன்னால் அவர்களிடம் அவமானப் பட்ட காயம் இன்னும் அவனுக்குள் ஆறவில்லை. "என்னத்தய்யா சத்தியம் பண்ணிக் குடுத்த? மறுபடி யும் உங்கப்பன் என் பொண்டாட்டிய இழுத்துக் கிட்டு ஓடிட்டான். அன்னிக்கி ஊர் முன்னால இனிமே எதும் ஆகாமப் பாத்துக்கறேன்னு சொன்னே ல. இப்ப எனக்கு ஒரு பதில் சொல்லு. என் புள்ளைங்க எல்லாம் ஆத்தா வேணும்னு அழு துங்க. நான் என்ன பதில் சொல்லட்டும்." கோவமும் ஆற்றாமையுமாக அந்த ஆள் கத்தினான். கதிரின் அம்மா தலையில் அடித்துக் கொண்டு அழுதப டியே வீட்டிற்குள் போக, என்ன பதில் சொல்வதெ னத் தெரியாமல் கதிர் பேசாமலிருந்தான். அந்த ஆள் தன் மனைவியின் மீதான கோவத்தை எல் லாம் இவனோடு சண்டை போடுவதன் மூலம் தீர்த் துக் கொள்வதென்கிற தீர்மானத்தோடுட் விடாமல் கத்த, பக்கத்து வீடுகளில் இருந்து எல்லோரும் வாசலில் கூடினார்கள். விஷயம் கேள்விப்பட்டு கொஞ்ச நேரத்திலேயே முருகன், மணி என கதி ரின் ஆட்கள் கொஞ்சம் பேர் வர, அந்த ஆள் இப் பொழுது சத்தத்தைக் குறைத்து புலம்பினான். மணிமாறனுக்கு அவனைப் பார்த்ததும் கோவம் தலைக்கேறியது, 'யோவ் தாயோலி பொண்டாட்டிய ஒழுங்கா பாத்துக்க துப்பில்லாம இங்க வந்து சண்ட போட்றியா? நீ ஆம்பள தான, உன் பொண்டாட்டி எங்க இருக்கான்னு தேடிப்போயி நீயே கூட்டிட்டுப் போ." என கத்தினான். அந்த ஆள் அவமானத்தில் தலையில் அடித்துக் கொண்டு அழ, அவனோடு வந்திருந்த ஆட்களில் ஒருவர் "ஏய் என்னாப்பா இப்பிடி மரியாத இல்லாம பேசற. அந்தாளு வய

சென்ன? உன் வயசென்ன? ஒரு பிரச்சனைன்னு நியாயம் கேக்க வந்தா இப்பிடித்தான் மட்டு மரியாத இல்லாம பேசுவியா?" என குரலை உயர்த்தினார். "எப்பு உன் பொச்சப் பொத்து. அன்னிக்கி அந்தம் மாவ நாங்க கூட்டியாந்து விடனும்னு நியாயமாத் தான் வந்தோம். மரியாதையாவ பேசுனீங்க. உங் கள இன்னும் நிக்க வெச்சு பேசிட்டு இருக்க மேன்னு சந்தோசப்படுங்க. பயகல இப்ப உசுப்பி விட்டன்னா யாரும் முழுசா ஊரு போக மாட்டீக." மணி முழு சண்டைக்குத் தயாராகி இருக்க, முரு கன் அவனைப் பிடித்து இழுத்தான். "டேய் நீ சும்மா இரு. நான் பேசிக்கிறேன்." கோவத்தில் மணிக்கு உடல் கொதித்துக் கொண்டிருந்தது. ஒருத்தனை யாவது அடித்து மண்டையை உடைக்க வேண்டு மென துடித்த கைகளை சிரமப்பட்டு கட்டுப்படுத் திக் கொண்டிருந்தான். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஆட்களின் கண்களில் ஏதாவது சண்டை நடக்குமென்கிற ஆர்வம். "அப்பு, அவங்க அய்யா விடுதலையானதுல இருந்து எங்க யார்கிட்ட யும் சரியா பேசறதில்ல. வீட்டுப்பக்கமும் அதிகமா வர்றதில்ல. அன்னிக்கி அவர் செயில்ல இருந்தாரு. அதனால் வேற வழியில்லாம அவருக்காக இவன் மன்னிப்புக் கேட்டான். இன்னிக்கு விடுதலையாகி வெளியிலதான் இருக்காரு. நீங்க நேர ஆளப் பாத்து நியாயம் கேளுங்க. அந்தம்மாவ நீங்க கூட் டிட்டுப் போனாலும் சரி வெட்டிப் போட்டாலும் சரி உங்கபாடு. இந்தப் பக்கம் இனிமே வராதிங்க. கெளம்புங்க." முருகன் தீர்மானமாகச் சொல்லவும் அவர்களும் வேறு வழியில்லாமல் அங்கிருந்து களைந்தனர்.

இத்தனைக்குப் பிறகும் தன்னை ஒரு சதவிகிதம்கூட மாற்றிக்கொள்ளாத அழகர் சாமியை நினைக்க எல்லோருக்குமே எரிச்சலாய் இருந்தது. "அந்தாளு வந்தா கொட்டையப் புடிச்சு நசுக்குடா கதிரு." மணி எரிச்சலோடு சொல்லிவிட்டுப் போனான். அம்மா இரவு பகலென இரண்டு நாட்கள் அழுதபின் இதுதான் தனது வாழ்நாள் சாபமென தன்னைத் தானே தேற்றிக் கொண்டது. அந்தப் பெண்ணோடு போயிருப்பாரெனத் தெரியாமலிருந்த கதிருக்கு அவன் ஆயா சொல்லித் தான் மேலூரில் இருப்பது தெரிந்தது. "இத்தன காலம் எங்கள அசிங்கப்படுத்தினது பத்தாதுன்னு இப்ப எவள ஒருத்திய இழுத்துட்டு வந்து எங்க முன்னயே குடி வெச்சு மறுபடியும் எங்க மானத்த வாங்கறாண்டா. எதாச்சும் செஞ்சு அவன தயவு செஞ்சு இங்க இருந்து கூட்டிட்டுப் போங்கடா சாமி உங்களுக்குப் புண்ணியமாப் போகும்." நொந்துபோன குரலில் கோபப்பட்ட ஆயாவுக்கு ஆறுதல் சொல்லக்கூட அவனுக்கு அவள் அவகாசம் கொடுக்கவில்லை. அந்த வார இறுதியில் வீட்டிற்கு வந்த அழகர்சாமி வெகுசாதாரணமாக இரவு உணவிற்காக உட்கார, "நீ கெட்ட கேட்டுக்கு சோறு கேக்குதோ. அதான் ஒருத்திய கூட்டிட்டுப் போயி வெச்சிருக்கயில்ல. அவ பீயத் திண்ணு போ." சமையற்கட்டிலிருந்த தட்டை கதிரின் அம்மா ஓங்கி வீசியடித்தாள். உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து கொண்ட அழகர்சாமி கோவப்படவோ அவளை அடிக்கவோ விருப்பமில்லாமல் "உங்க யாருக்காவும் என் சந்தோசத்த என்னால விட்டுக் குடுக்க முடியாது. எதாச்சும் நல்லது கெட்

டதுன்னா சொல்லி அனுப்புங்க வரேன்." பையிலி ருந்து கொஞ்சம் பணத்தை எடுத்து வைத்துவிட்டு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னிரவில் வீடு திரும்பிய கதிருக்கு இந்த சில நாட்களில் இருந்த வெறுப்பு எல்லை தாண்டி சென்றுவிட்டி ருந்தது.

வாழத் தகுதியானவர்கள் மரணிப்பதும், மர ணிக்க வேண்டியவர்கள் உயிர் வாழ்வதும் தான் இயற்கையின் நியதியா? கதிருக்கு எல்லாவற்றின் மீதும் வெறுப்பு சூழ்ந்தது. ஒரு தகப்பன் தன் மகனுக்காக தன்னையே தியாகம் செய்ய முடியு மென்றால் ஏன் மற்றவர்களாலும் அப்படி இருக்க முடிவதில்லை. அவரின் இறப்பு அழகர்சாமியின் மீதான வெறுப்பை அதிகமாக்கியது. தங்கள் புத்தி ரர்களுக்காக தியாகம் செய்யும் தந்தைகளுக்கெல் லாம் அவமானம் அழகர்சாமியின் இருப்பு. இனி யும் தள்ளிப்போடக் கூடாதென முடிவு செய்து கொண்டான். பாட்னா சென்று சேர்ந்த விஜி மூன்று நாட்களுக்குப் பிறகு பேசியபோது அய்யா இறந்து போனதை சொல்லாமல் தவிர்க்க படாதபாடு பட் டான். எந்த நிலையிலும் அழுதுவிடுவோமென மனது அடித்துக் கொண்டது. தான் மரணிக்கும் வரை காப்பாற்ற வேண்டிய ரகசியம் அது. இறந்த அந்த மனிதர் உலகத்திற்கு அல்ல இவனுக்கு ஒரு முக்கியமான செய்தியை விட்டுச் சென்றிருக் கிறார் என்றுதான் நினைக்கிறான். எல்லா தந் தைகளும் வெறுக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். "அண்ணே கொஞ்ச நாளைக்கு எனக்குக் கூப் டாது. யாருக்காச்சும் சந்தேகம் வந்துரும் .ஏதாச்சும் அவசரம்னா மட்டும் கூப்டு." விஜியோடு பேசுவதை

தற்காலிகமாக தவிர்க்க அரைகுறையாக உரையாடலை முடித்துக்கொண்டான்.

"இதுக்கு மேல தள்ளிப்போட வேணாம் முருகா. அந்தாள முடிச்சு விட்றலாம்." கதிர் உறுதியாக முருகனிடம் சொல்ல, அவன் எந்தப் பதிலும் சொல்லாமல் சரியென தலையாட்டினான். கதிரின் வீட்டிலிருந்து ரயில்வே ஸ்டேசன் செல்லும் வழியிலிருந்த ஆளற்ற பிள்ளையார் கோவிலில் உட்கார்ந்திருந்த அவர்களுக்குப் பின்னால் புதிதாக வளர்க்கப்படத் துவங்கியிருக்கும் வேப்ப மரத் தோட்டத்திலிருந்து காற்று அலைபுரண்டு வந்தது. சற்று தூரத்தில் புதிதாக டெண்ட் அடித்திருந்த நரிக்குறவர்களின் டெண்ட்டிலிருந்து வந்த ரேடியோ சத்தம் நாரசமாய் எதிரொலித்துக் கொண்டிருக்க, சின்னக் குழந்தைகள் உற்சாகமாய் ஆடிக் கொண்டிருந்தார்கள். இரவு உணவுக்காக அவர்கள் தயார் செய்த சுட்ட இரைச்சியின் நறுமணம் இப்பொழுது வேப்பரக் காற்றோடு கலந்து அட்த்தியாய் நிறைந்தது. கதிரும் முருகனும் தற்காலிகமாக எதைக் குறித்தும் யோசிக்கக் கூடாதென நினைத்து தோற்றுக் கொண்டிருந்தார்கள். இன்னதென்று சொல முடியாத ஒரு அச்சமும் தயக்கமும் அவர்களைச் சூழ்ந்திருந்தது. கொலை செய்ய வேண்டுமென்கிற தீர்மானம் இருந்ததே தவிர திட்டங்கள் எதுவும் அவர்களிடம் தெளிவாக இல்லை. சொல்வதற்கு எளிதாகத் தெரிந்த அதை செயல்படுத்த நினைத்தாலே மலைப்பாய் இருந்தது. கத்தியால் குத்திக் கொல்லலாமா? விஷம் கொடுத்து? இதற்கு முன் கேள்விப்பட்ட கொலைகள் எல்லாம் எவ்வாறு நடந்திருக்குமென மனம் விடாமல்

தேடிக் கொண்டிருந்தது. செய்திகள் தகவலைப் பரிமாறிக் கொள்வதைத் தாண்டி எதையும் கற்றுத் தருவதில்லை. கொலையை அனுபவத்தில் தான் கற்றுக்கொள்ள முடியுமென தோன்ற, முருகன் "சரிடா கதிரு. நாளைக்கு ராத்திரி போவோம். நான் முதல்ல போறேன். கொஞ்சம் தண்ணியப் போட்டுக்கிட்டே பொதுவா அவர்கிட்ட சமாதானம் பேசற மாதிரி பேசறேன். பிறகு நீ வா." ஒரு எளிய திட்டத்தை சொன்னான். "எப்பிடிடா முருகா கொல்லப் போறோம்.?" முருகன் வெறுமையாகப் பார்த்துவிட்டு கைகளை விரித்தான். "கொல்லனும்னு உறுதியா இருக்க, ஆயுதம் எது கெடச்சா என்ன? வா பாத்துக்கலாம்." அவன் நம்பிக்கையோடு இருக்கச் சொல்லிவிட்டு வீட்டிற்குச் செல்ல கதிருக்கு உறக்கம் பிடிக்கவில்லை. கொலை செய்யும் தருணத்திற்கு தன்னை மனதளவில் தயார்ப்படுத்திக் கொள்ள எழுந்து இருள் நிறைந்த சாலையில் அங்குமிங்குமாய் நடக்கத் துவங்கினான்.

பருகும் நீரிலும் சுவாசிக்கும் காற்றிலும் வெறுப்பின் சுவை சூழத் துவங்கியிருந்த அந்த நாளில் எல்லாவற்றிலிருந்தும் தனக்கான ஆதார சக்தியை கதிர் எடுத்துக் கொண்டான். உறக்கத்திலும் விழிப்பிலும் இயற்கையின் அதீத ஒளியானதுபோல் அவன் ஆன்மா வெளிச்சம் பெற்றது. அவனிடம் இப்போது ஒரு மனமும் விருப்பமும் ஆன்மாவும் உள்ளது. முருகனும் கதிரும் அன்று மாலை மேலூருக்குக் கிளம்பிய போது கதிரிலும் முருகன் வலுவானவனாய்த் தெரிந்தான். எல்லா உணர்ச்சிகளையும் நிதானமாகக் கையாளக் கற்றுக் கொண்டவனின் வலு. பதட்டத்தில் கதிரின்

கண்கள் ஓரிடத்தில் இல்லாமல் அலைபாய்ந்தது. குற்றவுணர்ச்சியில் எலும்புகள் நொறுங்கி விழுவதைப்போல் அவ்வப்போது பிரமை. "எதையும் யோசிக்காம வாடா கதிரு." முருகன் எளிதாக சொல்லிவிட்டான். மனதை காலியாய் வைத்துக் கொள்வது மாதிரியான போராட்டம் வேறில்லை. இந்த நொடியில் உலகின் எந்த பேரரசையும் எதிர்த்து நின்று போரிடும் வலுவும் ஆற்றலும் அவனுக்கிருந்தாலும் தன் மனதை சிந்திக்கமால் வைத்துக் கொள்ள அவை எதுவும் உதவவிலை. ஒவ்வொரு கிலோமீட்டர் பயணமும் நெருப்பின் நதிக்குள் ஆடையின்றி நீந்தும் அவஸ்தையைத் தந்தது. வன்மம் அடங்கா குதிரைகளின் வேகத்தில் ஒரு புறம் அவனை இழுத்துச் செல்ல முயன்றாலும் குற்றவுணர்ச்சியானாலான மனத்தடையும், அச்சமும் அதை விடவும் வேகமாய் பின்னால் இழுத்துக் கொண்டு சென்றது. எளிதாக யாருக்கும் தெரியாமல் தன் மணிக்கட்டை அறுத்துக் கொண்டுவிட்டால் போதும், மேலுாரை அடைவதற்கு முன்னால் இறந்து போய்விடலாம். இந்த உலகின் மீதான வெறுப்பும் வாழ்க்கை குறித்தான குழப்பங்களும் நிரந்தரமாய் விலகி காற்றோடு காற்றாகிப் போகலாம். அவன் கைகளின் இயக்கத்தை வன்மமும் சூதும் நிரம்பிய மனதின் ரகசியக் கண்கள் அனுமதிக்கவில்லை.

கதிரை ஆயா வீட்டிற்கு அனுப்பிய முருகன், "நான் கூப்டறப்போ வா. அதுவரைக்கும் பொறுமையா இரு." உறுதியாகச் சொன்னான். அழகர்சாமியோடு பகிர்ந்து குடிக்க வாங்கியிருந்த மது அவனது பையிலிருந்தது. கதிர் சரியென தலை

யாட்டிவிட்டு சென்றான். ஊர்ச்சந்தைக்கு சென்ற ஆட்களின் கூட்டம் சாலைகளில். பரோட்ட கடை களின் இரைச்சலும், தேநீர்க்கடை ஸ்பீக்கர்க ளின் இரைச்சலும் அவன் செவிகளுக்குள் எட்ட வில்லை. கணேஷ் தியேட்டர் தாண்டி சிவகங்கை செல்லும் சாலையிலிருந்த ஆயா வீட்டை நோக்கி நடந்தவனுக்கு அங்கு செல்லவும் தயக்கம். "என்ன ஏதென அவள் விசாரித்தால் ஒருவேளை தான் உளறிவிடக்கூடுமெனத் தோன்றியதால் அருகிலி ருந்து மதுக்கடை நோக்கி திரும்பினான். குடித் தால் கொஞ்சம் நடுக்கம் குறையும் போல் தோன் றியது. ஆழ்மனதின் விருப்பங்களுக்கு கட்டுப்பட போதை வஸ்துகள் நல்ல துணைவன். நிதான மான போதை இருக்க வேண்டுமென்பதற்காக ஒரே ஒரு பியரை மட்டும் வாங்கிக் கொண்டு பாரில் அமர்ந்தான். சில்லி சிக்கனில் தூவும் மசலா நெடி நிரம்பியிருந்தது. பெரிய அளவில் கூட்டமில்லை. அடையாளம் தெரிந்தவர்கள் எவரும் இல்லை என்பது ஆறுதலாய் இருந்தது. முதல் சில மிட றுகளை குடித்தபிறகு அவனுக்குள் தேங்கியிருந்த பகை தயக்கமின்றி எட்டிப்பார்க்க இவ்வளவு நேரம் இல்லாத தெளிவும் நம்பிக்கையும் அவனுக்குக் கிடைத்தது. பக்கத்து டேபிளில் சத்தமாக பேசிய படி குடித்த ஒருவன் எதுக்களிப்பில் திரும்பி இவன் பக்கமாய் வாந்தியெடுத்தான். அந்த இடம் முழுக்க மீன் வாட. தனக்கு அருகில் காலியாய் இருந்த பிளாஸ்டிக் நாற்காலியை எடுத்து அவனை அடித்த கதிர் "தேவ்டியா மகனே, அங்கிட்டுப் போய் வாந்தியெடுக்க வேண்டிதானடா.." என உறும, அந்த பாரிலிருந்த எல்லோரும் அசாதாரணமான அந்

தச் சூழலை எதிர்கொள்ள விரும்பாலம் அமைதி யாய் வேடிக்கை பார்த்தனர். அடி வாங்கியவனுக்கு முப்பத்தைந்து வயதிருக்கும் இவன் அடித்ததைக் கூட பொருட்படுத்தாமல் சிரித்தபடி "தெரியாமப் பட்றுச்சு தம்பி." என தன் வாயைத் துடைத்துக் கொண்டே சொன்னான். கதிருக்கு அவன் சிரிப்பி லிருந்த சிநேகத்துவம் பிடிக்கவில்லை. "தெரியாம உன் பொண்டாட்டி சாமான் ல போயி வாந்தி யெடு. தாயோளி." என்றவாறு மீண்டும் அடிக்க கை ஓங்க, அடிவாங்கியவன் அப்போதும் சிரித்த படி "அடிக்காத தம்பி வலிக்கிது. அடிக்காத அடிக் காத." எனக் கூனிக் குறுகினான். சிரித்துக் கொண் டிருந்த அவன் முகம் அச்சமூட்ட எல்லோரும் தனனையே பார்த்துக் கொண்டிருக்கிறார்களென் பதை உணர்ந்து கதிர் வேகமாக வெளியேறினான். தனது பலவீனத்தைக் காட்டிவிடக் கூடாதென்ப தற்காக தான் செய்த நாடகத்தை வேறு யாரை யும் விட அடிவாங்கியவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும் .அவன் சிரிப்பிலிருந்த ஏளனம் திரும் பச் திரும்பச் சொன்னது அதைத்தான். 'நீ பலவீ னமானவன். உனக்காக மனமிறங்குகிறேன்." அந் தச் சிரிப்பு இவனின் ஆன்ம பலத்தையும் எலும் புகளையும் நொறுக்கியது. போதை முழுமையாய் அவனது ஆன்மாவை ஆக்ரமித்திருக்கவில்லை.

அவனை வரச்சொல்லி முருகன் அழைத்தபோது கூடுதலாக இரண்டு பியர்களைக் குடித்திருந்த கதிர் நிதானமான போதையின் எல் லையைக் கொஞ்சமாய்த் தாண்டியிருந்தான். அழ கர்சாமியின் வீட்டைத் தேடிக் கண்டடைந்த போது அந்த வீட்டின் திண்ணையில் முருகன் நிதானமான

போதையிலும் அழகர்சாமி மிதமிஞ்சிய போதையி லும் இருப்பது தெரிந்தது. அவரோட ஓடி வந்த மானாமதுரைக்கார பெண் சிரித்தபடியே இருவருக் கும் உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். "வா தம்பி." சிரித்தபடி கதிரை அழைத்த அவள் முகத் தைப் பார்க்க இவனுக்குப் பிடிக்கவில்லை. முருக னுக்குப் பக்கத்தில் சுவற்றோடு சாய்ந்து உட்கார்ந் தான். "இந்தா அவனுக்கும் சாப்பாடு எடுத்து வெய்யி." அழகர்சாமி அவனைப் பார்க்காமலேயே சொன்னார். கதிர் அவர் சொன்னதை காதில் வாங் கிக் கொள்ளாமல் சாலையைப் பார்த்தபடி அமர்ந் திருக்க, முருகன் அவன் முதுகில் தட்டி சாப்பிடச் சொன்னான். அந்தப் பெண் ஒரு தட்டில் சாதமும் பயறு குழம்பும் போட்டுக் கொண்டு வந்து கொடுத் தாள். அழகர்சாமி மதுவருந்தியபடியே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அந்த உணவின் ஒவ்வொரு கவ ளமும் நஞ்சென கதிருக்கு தோன்ற விடாப்பிடியாய் அதைத் தொட மறுத்தான். "அட சும்மா சாப்பி டுய்யா. பக மனுஷங்களோட இருக்கட்டும். சோத் துல காட்ட வேணாம்." வியர்வை நிரம்பிய முகத் தைத் துடைத்துக் கொண்டபடி எதிர்ப்பக்கத் திண் ணையில் அமர்ந்தாள். முருகன் கடுமையாக இவ னைப் பார்த்து சாப்பிடச் சொல்ல கதிர் ஒவ்வொரு கவளமாய் அள்ளி திண்ணத் துவங்கினான். சோற் றின் சுவையையும் மீறி தன்னை நினைத்து அருவ ருப்பாய் இருந்தது. எதற்காக வந்துவிட்டு என்ன செய்து கொண்டிருக்கிறோம்? எந்த நிமிடத்திலும் வாந்தியெடுத்துவிடலாம் என்பது போல் குடலைப் புரட்டிக் கொண்டு வந்தது. ஒருபாதி உண்ட பிறகு போதுமென எழுந்து கொண்டான். கை கழுவச்

சென்றவனைத் தொடர்ந்து முருகனும் எழுந்து சென்றான். “அவசரப்பட்டு எதாச்சும் செஞ்சு காரி யத்தக் கெடுத்துடாத. பொறுமையா இரு.” முருகன் அவனைக் கடிந்து கொண்டான். இருவரும் திரும்பி வந்தபோது அழகர்சாமியும் சாப்பிட்டு முடித் திருந்தார். “முருகா இனி நேரங்கெட்ட நேரத்துல எதுக்குப் போய்க்கிட்டு இருந்துட்டு காலை ல போங்க.” சாப்பிட்ட இடத்திலிருந்து எழுந்து கொண்டவர் நெருங்கி அவர்களின் பக்கமாய் வந்த போது அவருக்குப் பின்னால் அவரின் நிழல் அரக்கனைப் போல் தோற்றமளித்தது. இத்தனை அபாயகரமானதொரு மனிதனை எப்படிக் கொல் வதென அந்த நிழலைக் கண்ட அச்சத்தில் கதிர் நடுக்கமுற்றான். “நீயாச்சும் எடுத்துச் சொல்லு முருகா. அவன் தொழில் பண்ண வேணாம் எங்க சரக்க எடுக்கனும், எப்படி கொண்டு வரனும்னு தக வல் மட்டும் சொல்லச் சொல்லு. நானே இதுக்கப்ப றம் பாத்துக்கறேன்.” முருகனிடம் சொல்வது போல் அவர் கதிரிடம் தான் சொன்னார். கதிர் முருக னைப் பார்க்க, “நான் எடுத்து சொல்றேன் ப்பா.” முருகன் திரும்பிக் கதிரையும் பார்த்துக் கொண் டான். அவர் இருக்கிறார் என்பதால் “ஒரே ஒரு வாட்டி அவரக்கூட்டிட்டுப் போயி வருஷநாட்ல பார்ட்டிய காட்டிட்டு வந்துருவோம் கதிரு. அதுக்கப் பறம் அவர் பாத்துக்கட்டும். நீயும் நானும் வெளி நாடு போயிட்டா நாளைக்கு அவசர ஆத்திரத்துக்கு அம்மாவ பாத்துக்க ஒரு ஆதரவு வேணும்டா.” முரு கன் நிதானமாகப் பேசினான். இவ்வளவு நேரம் அவர்கள் எதைக் குறித்தெல்லாம் பேசி இருக்கக் கூடுமென கதிரால் புரிந்து கொள்ள முடிந்தது.

வெறுமனே சரியென தலையாட்டினான். "அப்பா நீங்க படுத்துக்கங்க. நாங்க பக்கத்துல கணேஷ் தியேட்டர்ல படம் பாத்துட்டு வந்து திண்ணை ல படுத்துக்கறோம்." முருகன் கதிரின் பதட்டத்தை உணர்ந்து அவனை அங்கிருந்து அழைத்துக் கொண்டு செல்ல அவசரப்பட்டான்.

என்ன படமென்ற அக்கறையே இல் லாமல் சென்ற இருவருக்கும் அந்த இருட்டும், திரையும் சுற்றி இருந்த ஆட்களும் தற்காலிகமா னதொரு பாதுகாப்புணர்வை தந்தனர். "என்ன டா கதிரு இப்பிடி நடுங்கற? பேசாம இப்பிடியெ விட்டுட்டுப் போயிரலாமா?" முருகன் சத்தமில்லா மல் கேட்டான். கதிர் அவசரமாக அவன் கைக ளைப் பிடித்துக் கொண்டு "இல்லடா முருகா, இன்னிக்கி எப்பிடின்னாலும் செஞ்சிடலாம். போக வேணாம்." கதிர் அவனை அமைதிப்படுத்தினான். அவனின் மனப்போராட்டத்தைப் பார்க்க பாவமாக இருந்தது. அதிகம் பேசி அவன் மனதை பலவீ னப்படுத்த வேண்டாமென முருகன் அமைதியா கப் படம் பார்க்கத் துவங்கினான். இடைவேளை முடிந்து சில நிமிடங்கள் போயிருக்கும். "நம்ம கைல பொருள் ஒன்னுமில்லயேடா?" கதிர் சந்தே கமாக முருகனைத் திரும்பிப் பார்க்க, "எல்லாம் இருக்குடா." முருகன் சட்டையை உயர்த்தி இடுப் பில் சொருகி வைத்திருந்த கத்தியைக் காட்டி னான். இருளினூடாய் மெலிந்து வளைந்த இரும்பு ஸர்ப்பமென அந்த குறுங்கத்தியை பார்த்தபோது கதிரின் கண்கள் மின்னின. "சரிடா முருகா வா போகலாம்." மனதிலிருந்த துணிச்சலை எல்லாம் திரட்டிக் கொண்டு வந்தவனாய் கதிர் இருக்கையி

லிருந்து எழுந்து கொண்டான். இருவரும் தியேட்டரை விட்டு வெளியேறியபோது அந்த ஊரின் எல்லா வீதிகளும் காலியாய் இருந்தன. நீண்ட தூரம் செல்லும் பேருந்துகள் மட்டும் ஒன்றிரண்டாய் சாலையில் சென்று கொண்டிருக்க அவர்கள் அழகர்சாமியின் வீட்டிற்கு செல்லும் தெருமுக்கில் நின்று சிறுநீர் கழித்தனர். பதட்டமெல்லாம் தணிந்து எல்லாம் இயல்பாய்த் தோன்றியது. முருகனிடமிருந்து கதிர் கத்தியை வாங்கிக் கொண்டான். "மொதல்ல அங்க போவோம். அவர் எங்க படுத்திருக்காரு என்ன ஏதுன்னு பாத்துட்டு அதுக்கப்பறம் எப்பிடி செய்றதுன்னு முடிவு பண்ணிக்கலாம்." முருகன் சொன்னதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டான். வாசல் கதவை சரிபாதியாய் திறந்து வைத்துவிட்டு அழகர்சாமி மட்டும் வெளியில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தார். நீண்ட மூச்சுகளை விட்டுக் கொண்டிருந்த அவரின் உடல் சீரான இயக்கத்தில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. தங்களின் வேலை எளிதாகிவிட்ட நிம்மதி முருகனுக்கு. தான் கொண்டு வந்த பையிலிருந்த பிளாஸ்டிக் கயிறை வெளியில் எடுத்தான். "இங்க பாரு, அவர் கழுத்த கட்டிலோட சேத்து இழுத்து நான் வேக வேகமாக கட்டி சத்தம் போட புடிச்சுக்குவேன் .அதே வேகத்தோடு நீ குத்தனும். எங்க குத்தினாலும் ஆழமாக் குத்து. முடிஞ்ச வர அவர் நெஞ்சுல இதயம் இருக்கற பக்கமா குத்தனும். அப்பத்தான் சீக்கிரமா சாவாரு. இல்லாட்டி அப்பறம் சிக்கலாகிப் போகும். சரியா." கதிர் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த அழகர்சாமியையே பார்த்தபடி நின்றான். "டேய் கதிரு." முருகன் அவனை சுயநினைவிற்குக்

கொண்டு வர, கதிர் அதிர்ந்து "ம் சரிடா முருகா.." என்று தலையாட்டினான்.

இருவரும் கட்டிலை நெருங்கினார் கள். தூரத்தில் தெரிந்த தெருவிளக்கின் கீழ் யாரோ சைக்கிளில் வருவது போலிருக்க இருவ ரும் ஒரு நொடி உஷாராகி ஒதுங்கி நின்றார்கள். அவர்களைப் போலவே மதுவருந்திய போதையிலி ருந்த ஒருவன் சத்தமாக பாடியபடி மெதுவாகச் சென்றான். அவன் இரைச்சலை பொறுக்க முடி யாத தெருநாய்கள் அவனைத் துரத்தியபடி ஓடின. முருகன் முதலில் அழகர்சாமியை நெருங்கிவிட்ட அவனை வரச் சொன்னான். கதிர் அந்தப் பகுதி முழுக்க சுற்றிலும் கண்களை ஓடவிட்டான். ஆளர வமோ பேச்சரவமோ இல்லாமல் ஆழ்ந்த அமைதி. நெருங்கி வந்து உறங்கிக் கொண்டிருந்த அழகர்சா மியைப் பார்த்தபோது ஒரு நொடி தன்னையே பார்ப் பது போலிருக்க குழப்பத்தில் அவனுக்கு கைகள் நடுங்கின. கனவில் தான் இப்படியான தோற்றத்தில் தான் இருக்கிறோமென உள்ளுணர்ச்சி உணர்த் திய நொடியில் படுத்திருப்பவனும் தானும் வேறு வேறல்ல எனத் தோன்றியது. எல்லா மகன்களும் உறக்கத்தின் கனவுகளில் தங்கள் தந்தையர்களா கவே இருக்கிறார்களோ என அந்த நொடி அவ னுக்குத் தோன்றியது. என்றால் தனக்குத் தானே துரோகமிழைத்துக் கொள்ளும் இழி பிறவியா நான். அவன் அந்த இடத்திலிருந்து நகர்ந்து சென்றான். உடலெல்லாம் அதீதமாய் வியர்த்துக் கொட்ட முரு கன் வேகமாய் ஓடிவந்து அவனைப் பிடித்து திருப்பி னான். ஓங்கி அவன் முகத்திலறைந்து கத்தியைக் கையில் கொடுத்தான். "இதப் பிடி. பிடிடா.." அவன்

குரல் சன்னமான ஒலியில் இருந்த போதும் அதிலி
ருந்த கடுமை பயங்கரமானதாய் இருந்தது. "நீ அந்
தாள இப்ப குத்தப் போற. அவன் சாகறத பாத்துட்
டுத்தான் இங்க இருந்து நாம போறோம். சரியா.?"
கதிருக்கு அவனை நேர்கொண்டு பார்க்கும்
துணிச்சல் இல்லை. பொங்கி எழுந்த கண்ணீ
ரோடு சரியெனத் தலையாட்டினான். அவன்
கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அருகில்
சென்ற போது முருகனுக்கு சந்தேகமாய் இருந்தது,
"டேய் நான் இதுல உனக்கு உதவப் போறதில்ல.
போ குத்து. இவ்வளவு வருஷம் இதுக்குத்தான
பொறுத்திருந்த போ." என அவனைப் பிடித்துத் தள்
ளினான், கட்டிலை நெருங்கிய கதிர் ஸ்தம்பித்துப்
போய் அப்படியே நின்றான். கையிலிருந்த கத்தியை
அவரை நோக்கி கொண்டு சென்றபோது இருளில்
அவனுக்குப் பின்னாலிருந்த நிழல் அவனையே
கொல்ல வருவது போல் அச்சமூட்டியது. கைகள்
நடுங்க உறங்கிக் கொண்டிருந்தவரையே பார்க்க,
அவர் சடாரென எழுந்து "சீக்கிரம் குத்தி கொல்
லுடா கதிரு. எதுக்கு காத்துக்கிட்டு இருக்க.?"
கொஞ்சமும் சிரிப்பே இல்லாமல் சொன்னார்.
நின்ற இடத்தில் தடுமாறி விழுந்தவனை முருகன்
வந்து இழுத்துக் கொண்டு சென்றான். கதிர் அந்த
நிலையிலேயே தன் பேண்ட்டில் சிறு நீர் கழித்திருந்
தான். அச்சத்தில் அவனுக்கு குடலை புரட்டி வாந்
திவர, அந்த வீட்டிலிருந்து சிறுது தூரம் தாண்டி கரு
வேலங் காட்டிற்குள் உடைகளை எல்லாம் களைந்
துவிட்டு மலங்கழிக்க உட்கார்ந்தான். ஒரே நேரத்
தில் அவனுக்கு வாந்தியும், மலமுமாய் அச்சம்
வெளியேறிக் கொண்டிருந்தது. அவனருகில் நின்ற

முருகன் கையிலிருந்த பிளாஸ்டிக் கயிற்றைத் தூக்கிப் போட்டுவிட்டு கண் கலங்க அவனைப் பார்த்தான். நட்சத்திரங்கள் நிறைந்து கிடந்த வானம் தன் தீராக் கருணையை இவர்களுக்கு தடையின்றி பரிசளித்துக் கொண்டிருந்தது. அழுகையும் வேதனையும் நிரம்ப, ஆடையின்றி முள் காட்டிலிருந்து எழுந்து வந்த கதிரை அழைத்துக் கொண்டு போய் அருகிலிருந்த அடிகுழாயில் உட்கார வைத்துக் குளிப்பாட்டினான். கதிரால் எதுவும் பேசமுடிய வில்லை. மூச்சடைக்க தேம்பியழுதனை எழுப்பி ஈரத்தோடு அணைத்துக் கொண்ட முருகன், "அழாதடா கதிரு. இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்." என அவன் தலையைத் துவட்டி விட்டான். உடலில் இருந்த பலமெல்லாம் நீராய் உருமாறி அந்த இருள் வெளியெங்கும் கரைந்து கொண்டிருக்க கதிர் அவனை இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

5

சாந்தமும் குளிர்காலத்தின் அமைதியும் நிரம்பிய அந்த விடுதியின் அறையில் படுத்துக் கிடந்த கதிருக்கு கடுமையான காய்ச்சல் கண்டிருந்தது. தன்னை வெற்றி கொள்ள முயன்று தோற்றுப்போன கீழ்மையிலும் கீழ்மையான மனிதனாய் தன்னை உணர்ந்தான். பாதி உறக்கத்தில் மனம் பதைபதைக்க எழுந்த போது குளித்து விட்டு ஈர உடலோடு வந்த முருகன் உடைமாற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். எங்கிருக்கிறோம் என்கிற குழப்பத்தில் இருதயம் வேகமாய் அடித்துக் கொண்டது. சுவர்களெங்கும் மனிதக் கண்கள் நுழைந்து தங்களை வேவு பார்த்துக் கொண்டிருக்கலாமென மனமும் கண்களும் எச்சரிக்கை உணர்வில் அங்கும் இங்குமாய் அலைந்தன. இன்னும் விடிந்திருக்காத அதிகாலையின் சின்னஞ்சிறிய வெளிச்சம் உதயமாவதை அறையின் கண்ணாடி வழியாக பார்க்க முடிந்தது. "எந்திரிச்சு கிளம்புடா கதிரு. ஊருக்குப் போகனும்." முருகன் அவசரப்படுத்தினான். கதிருக்கு தன்னை அறிந்த மனிதர்களிருக்கும் இடத்திற்குச் செல்லப் பிடிக்கவில்லை. வைகை அணையை ஒட்டியை இந்த விடுதியின் தனிமை தற்காலிகமான ஆறுதலைத் தந்திருந்ததால் படுக்கையிலிருந்து எழுந்து கொள்ளாமலேயே படுத்திருந்தான். "கெளம்புடா எதுவானாலும் ஊருல போயி பேசிக்கலாம்." அவன் தீர்மானமாகச் சொல்ல கதிர் வேண்டா வெறுப்பாக எழுந்து கொண்டான்.

அந்த இரவு தோல்வியும் அவமானமும் சூழ வீழ்ந்து மனசாட்சியின் முன்னால் மண்

டியிட்டு விழுந்த கதிரை வீட்டிற்கு அழைத்துச் செல்ல கதிர் விரும்பவில்லை. ஒன்றைக் குறித்து சிந்தித்தபடியே இருப்பதென்பது அதை செய்வதற்கான பலத்தை தந்துவிடாது. பத்து வருட காலம் அவன் தேக்கி வைத்திருந்த பகை, வன்மம் எல்லாவற்றையும் மனதின் அடியாழாத்தில் ஒளிந்து கிடந்த குற்றவுணர்ச்சியும் எல்லா மகன்களும் தன் தந்தைகளாகவே மாறுகிறார்களென்னும் அவனது உள்ளுணர்வும் எளிதில் அவனை வீழ்த்தி விட்டதை முருகன் புரிந்து கொண்டிருந்தான். கதிர் முதலில் கொல்ல வேண்டியது அவனிடமிருந்து பிடிவாதமாய் விலக மறுக்கும் மனசாட்சியை. அதை அவனுக்கு புரிய வைப்பதற்காகவே ஆளற்ற இந்தப் பகுதிக்கு அழைத்து வந்திருந்தான். அரை குறையாக முருகன் சொன்னதைப் புரிந்து கொண்டிருந்த கதிர், காலம் கடத்துவதால் தன்னால் அதை ஒருபோதும் செய்ய முடியாமலேயே போய் விடுமோவென வருத்தப்பட்டான். தனது எல்லாத் துயரங்களுக்கும் ஆமாம் சொல்ல முடிந்த தன்னால் ஒரேயொரு மகிழ்ச்சிக்கு சொல்ல முடியாமல் போவது என்ன மாதிரியான கையாலாகத் தனம், இந்தக் கொலையை ஒரு வேட்டையாக அதைத் தொடர்ந்த கொண்டாட்டமாக ஏன் மனது நினைத்துக் கொள்ள மறுக்கிறது? குறைந்தபட்சம் காவல் தெய்வங்களுக்குக் கொடுத்த பலியாகவேனும் மாற்றலாம். தனது ஆற்றலை கட்டுப்படுத்தும் உணர்வுகளில் இருந்து விடுபட முடியாமல் முருகனையும் சேர்த்து வருத்துகிறோமென புழுங்கினான். கதிரிடம் நோய்மையின் அடையாளங்களை இப்போது பார்க்க முடிந்தது. ஒன்றிலிருந்து

விடுபட முடியாத ஆழமான பிணைப்பிற்குள்ளான வனின் மனம் உடலை எத்தனை சிதைக்குமென் பதற்கான ரத்த சாட்சியாய் முருகன் அவனைப் பார்த்தான். "டேய் கதிரு. நீ நெனச்சது கண்டிப்பா நடக்கும். அத மட்டுமே யோசிக்கிறதுல இருந்து கொஞ்சம் விலகி வா. வேற எதுலயாச்சும் கவனம் செலுத்து. யாரையாச்சும் பாக்கனும்னா போய்ப் பாரு. கொஞ்சம் சிரி. கொல செய்யப் போறோங்கற எண்ணத்த மட்டும் நெனைக்கவே நெனைக்காத." முருகன் அவனை உலுக்கி சரிப்படுத்தினான். சரி யென தலையாட்டிக் கொண்ட கதிர் அவனோடு காரில் ஏறிக் கொண்டான்.

விடியலில் பறவைகள் அந்த புல் மேட்டிலி ருந்து தென் திசை நோக்கி பறக்கத் துவங்கின. தாரை தப்பட்டை ஒலிகள் அவர்களை நோக்கி நெருங்கி வர, காரை நிறுத்திவிட்டு இருவரும் இறங்கி நின்றனர். அருகிலிருந்த ஊரில் இறந்து போயிருந்த ஒரு முதியவரைத் தூக்கிக் கொண்டு சின்ன ஊர்வலம் ஒன்று மயானக்கரை நோக்கி சென்று கொண்டிருந்தது. காலை நேரத்தின் அமைதியை குளிர்ச்சியை எல்லாம் மீறி அந்த மரண இசை எங்கும் நிறைய, ஊர்வலத்தின் முன் னால் சிலர் பூ தூவியபடி வந்தார்கள். இன்னும் சிலர் இரவு முழுக்க குடித்த போதை விலகாமல் ஆடிக்கொண்டு வந்தனர். மரணித்தவருக்கு எண் பது வயதுகளைத் தாண்டிய முதுமையிருக்கும். காலத்தின் எல்லா வீழ்ச்சிகளையும் சந்தோசங்க ளையும் தாங்கின முகம் நிறைவாய் இருந்தது. ஊர் வலம் நெருங்கி வந்தபோது இறந்த முதியவர் அதே அலங்காரத்தோடு திரும்பி கதிரைப் பார்த்தார்.

ஆசிர்வதிக்கும் படி சாந்தமாக சிரித்தார். கதிர் வெடித்து எழுந்த சிரிப்பை அடக்கி வாய்க்குள் ளேயே சிரித்தான் . அவர் சிரித்தது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மை. கூட்டத்தோடு சேர்ந்து நடந்தவன் ஆடிக் கொண்டிருந்த ஆட்களோடு சேர்ந்து ஆடத் துவங்கினான். தங்கள் கூட்டத்தில் சேர்ந்து கொண்ட அந்தப் புதிய மனிதனை முழு மனதோடு ஏற்றுக் கொண்ட பிற ஆட்டக்காரர்கள் அவனுக்கு நிறைய இடமளித்தனர். தாளத்தை மீறின ஆக்ரோஷம் கதிரின் ஆட்டத்தில். முருகன் காரிலிருந்து சாவியை எடுத்துக் கொண்டு அவர்க ளைத் தொடர்ந்து நடந்தான். ஊர்வலம் மயா னத்தை நெருங்க நெருங்க கதிரின் ஆட்டம் மூர்க்க மானது. உடல் களைத்து மயங்கிப் போகுமளவிற்கு ஆடியவனை மயானக்கரையின் பனைமரங்களும் ஆச்சர்யமாய்ப் பார்த்தன. இறுதிச் சடங்கு துவங்கிய போது இவர்கள் யாராக இருக்கக் கூடுமென ஊர்வ லத்தோடு வந்தவர்கள் ரகசியமாக பேசிக் கொள் ளத் துவங்க, முருகன் கதிரிடம் போகலாமென சத் தமில்லாமல் சொன்னான். கதிர் அமைதியாக அதே இடத்தில் நிற்க, வழக்கமாக எரிப்பது போலவோ, படுக்க வைத்தோ புதைக்காமல் ஆற டிக் குழியில் உட்கார்ந்த நிலையில் புதைத்தார்கள். அவன் திரும்பி முருகனைப் பார்த்தான். “ஏன் முருகா இப்பிடி புதைக்கிறாங்க?” முருகனுக்கும் காரணம் தெரிந்திருக்கவில்லை. யாரிடமும் கேட்க வும் சங்கடமாக இருந்ததால் தன் சம வயதில் யாரா வது அருகில் இருக்கிறார்களா எனத் தேடினான். பின்னாலிருந்த பெரியவர் நெருங்கி வந்தார். “இதுக்கு சமாதுன்னு பேரு தம்பி. எண்பத்தி மூணு

வருஷம் வாழ்ந்துருக்காரு. சாமி மாதிரி இல்லயா. அதனால அவர இனிமே கால காலத்துக்கும் அவர் குடும்பத்துல வழிபடுவாங்க. பொறக்கும் போது மனுஷனா பொறந்தாலும் இனிமே அவர் எங்க ளுக்கு சாமின்னு சொல்றதுக்குத்தான் கோயில் பூடத்துல சாமிய வெக்கிறாப்பிலயே வெக்கிறாங்க," நிதானமாக அவர் சொல்லி முடித்த பின் கதிர் திரும்பி அந்தக் குழியைப் பார்த்தான். ஒரு குடும்பத் தின் கடவுளைப் புதைத்துக் கொண்டிருந்த மனிதர் களிடம் இனம் புரியாது அன்பு பெருகியது. அவர் இனி பிறக்கத் தேவையில்லை. இன்னொரு பிறப் பிற்கான எந்த அவசியங்களும் இல்லாத அவர் ஆன்மா சொர்க்கத்திற்குச் செல்லும் நதியில் சந் தோசமாக உறங்கச் செல்லும். தன் முன்னால் நிரந் தர அமைதியை நோக்கிப் பயணிக்கும் ஆன்மா யாரோ ஒருவரினுடையது அல்ல. தன்னுடையது தான். இவ்வளவு நேரமும் தான் தனது மரணத்திற் காகவே மூச்சு வாங்க ஆடினோம். கதிருக்கு தன் மரணத்தை ரசிக்க முடிந்த தனது மனநிலையை நினைக்க சிரிப்பு வந்தது. அவர்கள் முழுமையாக புதைத்த பின் ஒரு விளக்கை ஏற்றி வைத்தனர். வந் திருந்த எல்லோரும் வரிசையாக ஒவ்வொருவராய் அவரின் சமாதிற்கு முன்னால் விழுந்து வணங்கி னார்கள். கதிரும் தயக்கமின்றி விழுந்து வணங்கிய பின் அவன் மனம் இலகுவாகியிருந்தது. "போலாண்டா முருகா." என சொன்னவனின் குர லில் சாந்தம் பெருகியிருப்பதை முருகன் கவனித் தான். ஊர் திரும்பும் வழி முழுக்க அயர்ந்து உறங் கிய கதிருக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு கனவு களே இல்லை.

மலேசியா செல்வதற்கான எல்லா ஏற்பாடு களும் தயாராக இருந்தன. முருகனின் நேரத்தை குடும்பம் எடுத்துக் கொள்ளத்துவங்க இரண்டு மூன்று நாட்கள் தனியாகவே சுற்றினான். இத் தனை காலத்திற்குப்பிறகு மகன் தான் விரும்பிய துபோல் நல்ல வேலைக்காக வெளிநாடு செல் கிறான் என்பதில் அம்மாவிற்கு பூரிப்பு. "எந்த வேலையா இருந்தாலும் முகஞ்சுளிக்காம செய்யி. நாலு பேரப் போல உழச்சு முன்னுக்கு வந்தா தான் வாழ்க்க என்னன்னு புரியும்டா கதிரு." என பல வருடமாக சொன்ன அதே வார்த்தைகளை இப்போதும் சொன்னாள். இந்த முறை மறுக்கா மல் தலையசைத்து சம்மதித்தான். இந்தப் பய ணத்திற்கு முன்னால் தனக்கிருக்கும் கடமையை நிறைவேற்றிடும் மார்க்கம் இன்னும் அவனுக்குக் கிடைத்திருக்கவில்லை. அவனுக்கு இப்பொழுது கடவுளின் மீது நம்பிக்கையில்லை. மார்க்கங்க ளின் மீதும் தத்துவங்களின் மீதும் நியாங்களீன் மீதும் கூட நம்பிக்கையோ பிடிப்போ இல்லை. எல் லாமே மனிதன் இப்படி வாழலாமென்னும் சித்தி ரத்தை உருவாக்கித் தருகின்றனவே தவிர ஆதார மானதொரு உண்மையை உணர்த்தவில்லை. கட வுள்கள் கைவிட்ட பின்னும்கூட ஆன்ரூ சாமியை நம்பினார். 'வழிபட கடவுளோ மார்க்கமோ தேவை யில்லை, ரணங்களால் சிதறுண்ட ஒரு மனம் போதுமானது.' என எப்போதோ அவர் சொல்லிக் கொடுத்தது எத்தனை நிஜமென்பது புரிந்ததால் அவரைப் பார்க்கச் சென்றான். பசிக்கு பழகிய அவரைச் சுற்றி அபூர்வமானதொரு ஒளியைப் பார்க்க முடிந்தது. உடலின் எல்லாப் பசிகளுக்கும்

வலிய பழகிக் கொண்டு மனிதன் கண்டடைவது எதனை? அவர் தன் வாழ்வின் வழியான அந்த ரங்கமான உதாரணமாய் அவனுக்குத் தெரிந்தார். தனது சிக்கல்களையும், பலவீனத்தையும் இந்த முறை எந்த மனத்தடையும் இல்லாமல் அவன் சொன்னபோது ஒரு நொடி தனக்கு வெகு அருகில் அவன் வந்துவிட்டிருப்பது கண்டு ஆன்ரு சாமி மலைத்துப் போனார். அவன் வன்முறைகளின் வழியாய் எல்லாவற்றையும் துறந்து கொண்டிருக்கிறான் என்பது புரிந்ததால் "மனம் நம்பும் ஒன்றை செய்து முடிப்பதுதான் வாழ்வின் அருவருப்புகளில் இருந்து மீள்வதற்கான வழி. அதைச் செய்து முடி கதிர்." என சொல்லி அனுப்பினார். இறப்பிற்கும் விடுதலைக்குமான வெளியில் அவனிருக்கிறான், இனி அவனுக்குத் தேவையெல்லாம் நீண்ட பயணத்திற்கான ஒரு மனம் தான். தனது குருவை மீறிச் செல்லும் மாணவனால் மட்டுமே புதிய பாதைகளைக் கண்டுகொள்ள முடிகிறது. அவன் இவரை குருவாக ஒருநாளும் சொன்னதுமில்லை, இவர் ஏற்றுக்கொண்டதுமில்லை. ஆனால் அவர்கள் அப்படித்தானிருந்தார்கள். அவன் தன்னிடம் இனி ஒருபோதும் திரும்பி வரக்கூடாதென முடிவுசெய்தவராய் "இனிமே நான் உன்னய சந்திக்க விரும்பல கதிர்" என கடுமையாக சொல்லி அனுப்பினார்.

முருகனின் பாப்பாவிற்கு மொட்டையடித்து காது குத்துவதற்காக வழிவிட்டான் கோயிலுக்கு அவன் குடும்பத்தோடு கிளம்பிச் சென்றான். கழுதியின் இரக்கமற்ற வெயிலும், பாளம் பாளமாய் பிளந்து கிடந்த கரிசல் காடும் வழிபாட்டிலும் கூட அங்கிருந்த மனிதர்களிடத்தில் ஒரு மூர்க்கத்தனத்

தைக் கொடுத்திருந்தது. கோவிலைச் சுற்றி கண் ணுக்கெட்டிய தூரம் வரை நீண்டிருந்த கருவே லங்காட்டை மட்டுமே நம்பி ஏராளமான குடும் பங்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அடுப்புக்கரி போடுவதற்காக வெட்டப்பட்ட கரு வேல மரங்கள் குட்டியானை வண்டிகளில் ஏற்றப் பட்டுச் சென்றன. கெடா வெட்டுவதற்கு முன்பா கவே மதுக்கடையைத் தேடிப்போய் கருப்பு நெப் போலியன் போத்தலோடு கதிர் திரும்பி வந்தான். மொட்டையடிக்கப்பட்ட முருகனின் பாப்பா புதி தாக காதில் கம்மல் குத்திய வலியில் ஒவ்வொ ருவரிடமாகச் சென்றாள். கதிர் அவளைத் தூக்கி முத்தமிட்டான். சொந்தக்காரர்கள் கெடா விருந் திற்கு தயாராகிக் கொண்டிருக்க களைத்துப்போன முகத்தோடு அங்குமிங்குமாய் அலைந்து வேலை செய்து கொண்டிருந்த சக்தியைப் பார்க்க ஆச்சர்ய மாய் இருந்தது. "எல்லா வேலையையும் ஒரு ஆளா பாத்துர்றாளேடா மாப்ள." முருகனிடம் சொன் னான். "அவ இருக்கற தைரியத்துல தாண்டா என்ன வேணும்னாலும் செய்யலாம்னு துணிச் சலா இருக்கேன். நம்மளோட இயல்ப புரிஞ்சுக் கற ஒரு பொண்டாட்டி கிடைக்கிறதெல்லாம் ஒரு வரம்டா மாப்ளா." முருகனுக்கு சந்தோசத்தில் கண்கள் கலங்கின. "சரி பாப்பாவ குடுத்துட்டு வா, சரக்கடிக்கலாம்." ஜோதியை முருகனிடம் கொடுத் தான். முருகன் சக்தியின் அம்மாவிடம் குழந்தை யைக் குடுத்துவிட்டுக் கிளம்ப, தனம் தூரத்திலி ருந்து கூப்பிட்டாள். "எண்ணே என் வீட்டுக்கார ரையும் கூப்ட்டு போண்ணே." என அவளின் குரல் இவர்களை வந்து சேர்வதற்கு முன்பாகவே தனத்

தின் வீட்டுக்காரன் நெருங்கி வந்துவிட்டான். “சும் மாவே இருக்க கடுப்பா இருக்குது மச்சான். கம்பெ னிக்கும் யாருமில்ல. நல்லவேள நீங்க சரக்கோட வந்திங்க.” உடலெங்கும் வியர்த்த கசகசப்போடு அவன் சொல்ல, மூவருமாக சற்றுத் தள்ளியிருந்த ஆலமரத்தை நோக்கி நடந்தார்கள்.

கடும் போதைக்குப் பிறகு கதிருக்கு அந்தக் கோயிலும் சூழ்ந்திருந்த மக்களும் இனம் புரியாத உணர்வைக் கொடுத்தார்கள். அவ்வளவு நேரமும் கோவிலுக்குள் செல்வதில் நம்பிக்கை யற்று இருந்தவன் தடுமாறியபடி நடந்து கோவில் வாசலுக்குச் சென்றான். சக்தி ஓடிவந்து அவனை நிறுத்தினாள். “எண்ணே குடிச்சுட்டு உள்ள போகாத. சத்தம் போடுவாங்க.” என அவள் சொன் னதும் அவனுக்கு ஏமாற்றத்தில் கண்ணீர் வந் தது. வாசலில் நின்றபடியே சாமியைப் பார்த்தபோது ரௌத்திரமான அவரது தோற்றத்தைத் தாண்டி பார்வையில் ஒரு கருணை இருந்தது. பரபரப்பில் என்ன செய்வதென தெரியாமல் கொஞ்சமாய் முடி வளரத் துவங்கியிருந்த தன் தலையைத் தடவி னான். யாரிடமும் எதுவும் சொல்லாமல் முடியிறக் கும் இடத்திற்கு சென்று சீட்டு வாங்கிக் கொண்டு உட்கார்ந்தவனை ஒரு நிலையில் பிடித்து உட்கார வைக்க மொட்டையடிப்பான் படாத பாடு பட்டான். சக்திக்கு அவன் செய்வதையெல்லாம் பார்க்க சிரிப்பு வர அருகில் சென்று அவன் ஆடாமல் பிடித்துக் கொண்டாள். “உனக்கு எதுக்கு இப்ப இந்த வேண்டாத வேல?” அவள் கேட்டது தூரத் திலிருந்து ஒலிப்பது போலிருந்தது கதிருக்கு. “என் மருமகளுக்கு மொட்டையடிச்சா நானும் அடிப்

பேன்." என கதிர் தலையைக் குனிந்தபடியே சிரித்தான். "ஓஹோ. மொட்டையடிச்சுட்டு வா, உனக்கும் காது குத்தச் சொல்றேன்." என அவள் சொன்ன போது மொட்டையடித்தவனும் சிரித்தான். அவன் பையிலிருந்த காசையும் மொபைலையும் வாங்கிக் கொண்டு கிணற்றடியில் உட்கார வைத்தாள். தனம் தான் உதவிக்கு வந்தாள். "இந்த லூசு செய்ற வேலைய பாத்தியா?" என்றபடியே கிணற்றில் நீர் இரைத்த தனம் அவன் தலை வழியாய் ஊற்றினாள். மதுவின் வீர்யத்தோடு இந்தக் குளியலும் சேர்ந்து அவன் கண்களை சிவந்து குளமாக்கிவிட்டிருந்தது. மனநிறைவோடு வந்து சாப்பிட உட்கார்ந்தவனை முருகனின் சொந்தக்காரர்கள் எல்லோரும் வினோதமாய்ப் பார்த்தனர். "ஏற்கனவே மொட்டையடிச்சுட்டுத்தான இருந்தாப்ள. அப்றம் எதுக்கு திரும்ப மொட்டையடிக்கனும்?" தனத்தின் வீட்டுக்காரன் பொதுவாகக் கேட்டான். "அவனுக்கு கோயிலப் பாத்தாலே மொட்டையடிக்கிற வியாதி மச்சான். நீங்க சாப்டுங்க." முருகன் தனக்கு அருகில் அவனை உட்கார வைத்துக் கொண்டு சாப்பிட வைத்தான்.

வேகமாக சூரியன் அஸ்தமனமாகிக் கொண்டிருக்க, ஆலமரத்தடியில் உறங்கிக் கிடந்த கதிரை முருகன் எழுப்பினான். "டேய் மாப்ள. கெளம்புடா போவோம்." கதிருக்கு தலை பாரமாய் இருந்தது. உறங்கி எழும் போதெல்லாம் மனம் தெளிவடைவதற்குப் பின்னால் குழப்பத்தை நோக்கியே சென்றது. மிச்சம் வைத்த அந்த வேலையை எப்போது செய்து முடிப்போமென்னும் எண்ணம் மட்டுமே முழுக்க ஆக்ரமித்தது. எந்த

அசைவுகளும் இல்லாமல் மரத்தில் சாய்ந்து உட் கார்ந்தான். "என்னடா ஆச்சு தல வலிக்கிதா?" முருகன் அவனருகில் அமர்ந்தான். இல்லையென தலையாட்டிய கதிர் "மதியானம் அந்த போதைல கோவிலுக்குப் போனது நீயாச்சும் எங்கப்பன சாக டிக்க ஒரு பலத்தக் குடுன்னு வேண்டிக்கத் தாண்டா. ஆனா எனக்கு அந்த சாமியப் பாத்த உடனே அவரோட கண்ல இருந்த கோவத்தை யும் மீறி அதுல ஏதோ ஒரு அமைதி இருக்கறத தெரிஞ்சுது. அதான் அழுதுட்டேன். என்ன செய் றதுன்னு தெரியாமத்தாண்டா மொட்டையடிச்சுக் கிட்டேன்." கதிர் விசும்பத் துவங்கினான். "பேசாம நான் தற்கொல பண்ணிக்கவா முருகா? என்னால இந்தத் தோல்விய ஏத்துக்க முடியாதுடா." யாரும் தன்னை பார்த்துவிடக் கூடாதென்கிற கவலையில் சட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். அந்த நாளின் சந்தோசம் கொண்டாட்டம் எல்லாம் ஒரு நிமிடத்தில் நொறுங்கிப் போக முருகன் தன் னையே நொந்து கொண்டான். பேசாமல் இவனை விட்டு விலகிவிடலாமா? ஏன் இவனுக்காக மனம் இத்தனை இறங்குகிறது? தன்னோடு அழைத் துக் கொண்டு செல்ல வேண்டுமென நினைப் பது கூட அந்தரங்கமாக தனக்குள்ளிருக்கும் சுய நலமா? பலவாறாக யோசித்தான். "சரிடா கதிரு. கெளம்பு ஊருக்குப் போயி பேசுவோம்." கூடுத லாய் பேச எதுவுமில்லாமல் அவன் அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

ஊர் வந்து சேரும் போது எல்லா வீதி களும் அடங்கிப் போயிருந்தன. உறக்க சடவோடு வேனிலிருந்து இறங்கிக் கொண்ட ஆட்கள் வீடு

களுக்குத் திரும்ப கதிரும் முருகனிடம் சொல்லி விட்டு கிளம்ப நினைத்தான். "டேய் கதிரு நீ இரு. சாப்பாடு நிறைய மிச்சமாகிருச்சு. இதுக்கு மேல ஆளுங்க யாருக்கும் குடுக்க முடியாது, அப்படியே ஒரு ரவுண்ட் போனம்னா நாயிங்களுக்கு வெச் சிட்டு வரலாம்." இவன் மனவோட்டத்தை புரிந்து கொண்ட முருகன் சொல்லிவிட்டுப் போனான். ஆட்களை இறக்கிவிட்டு தனியாக நின்றிருந்த வேனின் முதல் சீட்டில் சாய்ந்து கதிர் உறங்குவதற் காக கண்களை மூடினான். ட்ரைவர் ஒலிக்கவிட் டுப்போன ராமராஜன் ஹிட்ஸ் இப்போதைக்கு முடி வதாக இல்லை. பாடலின் மெல்லிய சத்தம் தொந் தரவாக இல்லாததால் கண் மூடின சில நிமிடங்களி லேயே உறங்கிப் போனான். முருகன் திரும்ப வந்து எழுப்பியபோது முக்கால் மணி நேரம் கடந்திருக் கும். முன்னைவிடவும் இப்போது வாடைக்காற்றின் அடர்த்தி கூடியிருந்தது. சாலையிலிருந்த சோடியம் விளக்குகள் கூட குளிருக்கு மங்கலாகிப் போனது போலிருந்தன. சோற்றோடு குழம்பை பிசைந்தி ருந்த இரண்டு வாளிகளை அவன் கையில் கொடுத்து தன் இரு சக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டான். அங்காள ஈஸ்வரி நகர், பட்டுநூல்கா ரன் பேட்டை, முத்தாலம்மன் கோவில் தெரு, பசும் பொன் தெரு என பக்கத்து வீதிகளில் கண்ணில் படும் நாய்களுக்கெல்லாம் கதிர் தன் கையால் கொஞ்சம் கொஞ்சமாய் சோற்றை பகிர்ந்து வைத் தான். "இதென்ன கூத்துன்னுடா முருகா செஞ் சுட்டு இருக்கோம்." என கதிர் சலிப்பாகக் கேட் டான். "வீணாப் போற சோத்த என்னடா செய்றது?. சலிச்சுக்காம வெச்சுட்டு வா. அடேய் வீட்ல பிச்சக்

காரனுங்களுக்குக் குடுக்கப் போறதா சொல்லிட்டு எடுத்துட்டு வந்தேன். நீ உணமையச் சொல்லி காரியத்தக் கெடுத்துடாத" என சிரித்தான். "சரி டாப்பா நாயக் காத்த வள்ளலே." என்றபடி கதிர் சோற்று வாளியோடு நகர்ந்து போனான். இரண்டு வாளிகளும் தீர்ந்தபின் அவர்கள் வீடு திரும்பினர். "அண்ணே இங்கியே தூங்குண்ணே" என சக்தி ஒரு போர்வையை கதிரின் கையில் கொடுத்துவிட்டுச் சென்றாள். இதற்கு மேல் வீட்டிற்குச் செல்லவும் பொறுமையில்லாமல் கதிர் முருகன் வீட்டு மொட்டை மாடியில் உறங்கச் சென்றான்.

யாரும் எழுப்பாமலேயே கதிர் விழித்துக் கொண்டபோது காலை நேரத்து வெயில் அவன் பாதத்திற்கு மிக அருகில் நெருங்கி வந்திருந்தது. முருகன் வீட்டில் இருந்திருக்கவில்லை. "டீ குடிக்கிறியாண்ணே?" எனக் கேட்டபடியே சக்தி ஒரு தம்ளரோடு வந்தாள். முகம் கழுவி வாய் கொப்பளித்துவிட்டு வந்தவன் இன்னும் முழுமையாக உறக்கத்திலிருந்து மீளவில்லை. தேநீர்க் குவளையைக் கையில் எடுத்துக் கொண்டவன் சில மிடறுகள் குடித்தபின் "முருகன எங்க?" ஜோதியோடு விளையாடிக் கொண்டிருந்த சக்தியிடம் கேட்டான். "பசும் பொன் தெருவுக்குப் போயிருக்குண்ணே. நம்ம ஏரியாவுல அங்கங்க நிறைய நாயிங்க செத்துக் கெடக்காம். என்ன ஏதுன்னு தெரியல. முனிசிபாலிட்டு ஆளுங்க வந்து எல்லாத்தையும் தூக்கிட்டு இருக்காங்க." அவள் சொன்னதைக் கேட்டதும் கதிருக்கு தூக்கி வாரிப்போட்டது. தேநீரின் சுவை மாறி கசப்பாக அப்படியே கீழே

வைத்தவன் அவசரமாய் வீட்டிலிருந்து வெளியே றினான்.

இப்படியானதொரு காரியத்தை செய்ய முருகனுக்கு எப்படித் துணிச்சல் வந்தது? இந்தப் பாவத்தை ஏன் தன் கையால் செய்ய வைத் தான். அவனுக்குள்ளிருந்து குருதியையும் எலும் பையும் தனித்தனியாய் பிரித்தெடுப்பது போன்ற வலியை உணர்ந்தான். சாலையில் சென்ற வாக னங்கள் ஆட்கள் எல்லோரும் அவனின் நினைவி லிருந்து தொலைந்து போய்விட்டனர். இத்தனை காலம் செய்யத் துணியாத பாவம்மொன்றை செய்து விட்ட குமுறலில் நொறுங்கிக் கொண்டிருந்தவன் இன்னும் சில நொடிகளில் அந்த சாலையிலிருந்த மண்ணோடு மண்ணாக கலந்து போய்விடமாட் டோமா என தவித்தான். பசும்பொன் தெரு தண் ணீர் தொட்டியை கூட்டமாய் நின்றிருந்த ஆட்க ளோடு முருகனையும் பார்த்தபோது கதிருக்கு ஆற் றாமையை மீறி ஆத்திரம் கொப்பளித்தது. கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டாலும் தகு மென நினைத்தபடி நெருங்கிச் சென்றான். இறந்து போன நாய்களை மஞ்சள் நிற முனிசிபாலிட்டி வண் டியில் ஏற்றுவதை பார்த்த தெருக்கார ஆட்களில் சிலர் சத்தமாக அழுதார்கள். உடல் உப்பிப் போய் கழுத்து தொங்கிப் போயிருந்த நாய்களின் கண்க ளில் இன்னும் வாழ்விற்கான ஏக்கம். அந்த வீதி யில் இத்தனை காலம் யாராலும் பொருட்படுத்தப்ப டாமல் சுற்றித்திரிந்த நாய்களுக்காக இப்பொழுது அங்கிருந்த எல்லோரும் அழுது கொண்டிருந்தார் கள். “எந்தப்பாவி செஞ்சானோ மாரியாத்தா அவன் கை கால் வெளங்காம போகட்டுமென” ஒரு

பெண் சாபமிட்டாள். கதிர் முருகனை கூட்டத்திலி
ருந்து இழுத்துக் கொண்டு சென்றான். எந்த
உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் முருகன்
அவனோடு நடந்தான் .சாலையைக் கடந்து இருவ
ரும் மார்க்கெட் செல்லும் சந்திற்குள் நுழைய கதிர்
திரும்பி ஆத்திரம் தீர மட்டும் அவனை அடித்தான்.
"முட்டாக்கூதி அந்த நாயிங்க என்னடா பாவம்
செஞ்சுச்சு? ஏண்டா அதுங்கள என் கையால சாக
டிச்ச?" அடிப்பதை நிறுத்தவும் முடியாமல் எழும்
அழுகையை அடக்கிக் கொள்ளவும் முடியாமல் கத
றினான். முருகன் அமைதியாக அப்படியே நின்
றான். கதிருக்கு சத்தமாக அழக்கூட அச்சமாக
இருந்தது. இத்தனை நாய்களின் சாவிற்கு தான்
காரணமென யாருக்காவது தெரிந்துவிட்டால்
என்ன நினைப்பார்கள்? தனக்காக இவ்வளவு செய்
யும் இவன் ஏன் இப்படியானதொரு தண்டனைய
தனக்குத் தரவேண்டும்? வார்த்தைகளைக் கொட்
டமுடியாமல் கதிர் அழுதபடியிருந்தான். முருகன்
கலங்கிய முகத்தோடு அவனைப் பார்த்தான்,
"எனக்கு வேற வழி தெரியலடா கதிரு. நீ நிரந்தரமா
உன் குழப்பத்துல இருந்து வெளியேறனும்னா உங்
கப்பாவ கொல்லனும். அவரக் கொல்லனுங்கற
ஆத்திரம் ஒரு பக்கம் இருந்தாலும் அது பாவம்
செய்யக்கூடாதுங்கற உணர்வு உனக்குள்ள ஆழமா
ஊறிப்போயிருக்கு. அதில இருந்து உன்னய
வெளிய கொண்டுவரனும்னுதான் இப்பிடி செஞ்
சென். நான் செஞ்சது சரியோ தப்போ ஆனா நீ
இப்போ இருபத்தி நாலு கொல பண்ணிட்ட. இனி
உனக்குப் பாவம் புதுசில்ல. கருணையோட வாழத்
தெரியாதவங்க கிட்ட பாவத்த விட இது பெரிய பாவ

மில்லடா. நீ நீயா இருக்கனும்னா அந்த உணர்ச்சில இருந்து வெளிய வா. உன்னய உன்னால மட்டுந் தான் சரிசெய்ய முடியும். போ நிதானமா யோசி." கதிரை அங்கேயே விட்டுவிட்டு முருகன் வேகமாய் வீட்டை நோக்கி நடந்தான். கதிர் நின்றிருந்த வீட்டின் ஜன்னலில் அமர்ந்திருந்த பூனையொன்று அவன் கண்களில் எரிந்து கொண்டிருந்த நெருப்பு ஜ்வாலைகளைக் கண்ட அச்சத்தில் வேகமாய் அங்கிருந்து குதித்து ஓடியது.

6

”துன்பம் தோற்றம் பற்றே காரணம்;

இன்பம் வீடே பற்றிலி காரணம்...”

மணிமேகலை.

தன்னைத் தானே சமாதானம் செய் துகொண்டபின் அவனை சந்திக்கலாமென்கிற முடிவோடு முருகன் முழு முற்றாக கதிரைத் தவிர்க்க நினைத்தான். கதிர் அன்றைய பக லும் இரவும் இடைவெளியின்றி மதுவருந்தினான். உடலை இந்த திரவத்தால் எரித்துக் கொன்றுவிட வேண்டும். குடல்கள் இப்படியே வெந்து அழுகி புழுக்களாகிப்போய் தானொரு பெரும் புழுக்கூட் டமாய் மாறிப்போனால் கூட அந்த வலியிலி ருந்து மீள முடியுமா? தான் இன்னும் உயிரோடு இருப்பதான நினைவு வரும் போதெல்லாம் குடிக் கத் துவங்கினான். மதுக்கடைகள், ஆறுகண் பாலத்தை ஒட்டியிருந்த இடுகாடென வெவ்வேறு இடங்களில் குடித்து நீண்ட மயக்கத்திலேயே கிடந் தவனை அடுத்த நாள் மாலையில் மலம் கழிக்க வந்த இரண்டு பெரியவர்கள் பார்த்துவிட்டு “நேத்து காலை ல இருந்து குடிச்சுக்கிட்டு திரியறான். இங் கியே குடிச்சு செத்துட்டா யாருக்கும் கஷ்டமில்லாம பக்கத்துலயே பொதச்சிரலாம்னு நெனச்சிருப்பான் போல. எல்லாம் காலக்கொடுமய்யா.” என எரிச் சலோடு கடந்து போனார்கள். சுடுகாட்டுக் கூரை பகல் நேர வெயிலில் இருந்தும் இரவின் குளிரில் இருந்தும் அவனைக் கருணையோடு காத்து வந் தது. அங்கு நித்திரையிலிருந்த ஆத்மாக்கள் இவன்

தங்களிடம் வந்து சேர ஏன் இவ்வளவு துடிக் கிறானென புரியாமல் அமைதியாய் கவனித்தார் கள். கதிரின் அம்மா இரண்டு முறை முருகன் வீட்டிற்கு ஆள் அனுப்பி கேட்டுவிட்டாள். அவன் எங்கு சென்றானென்கிற தகவல் எதுவுமில்லா தபோது முருகனும் கொஞ்சம் பதட்டப்பட்டான். ஆட்கள் தகவல் சொல்லி அவன் இடுகாட்டில் போதையில் மயங்கிக் கிடப்பது தெரிய மணியோடு சென்று அவனைத் தூக்கிக் கொண்டு வந்தார் கள். தொடர்ந்து குடியாலும், உணவு எதை யும் எடுத்துக் கொள்ளாததாலும் பலவீனமாகிப் போயிருந்தனுக்கு எலுமிச்சை பழச் சாற்றில் உப் புப் போட்டு அருந்தக் குடுத்தார்கள். அவனால் இரண்டு மிடறுகள் கூட அருந்தமுடியவில்லை. நாக்கும் உணவுக்குழாயும் புண்ணாகிப் போயிருந் தன. போதைக் கொஞ்சமாய் தெளிந்திருந்தாலும் குடல்கள் சுருங்கிப் போய் வயிற்றில் கடுமையான வலி இருந்தது. வலி தாளாமல் அனத்தியவனை வற்புறுத்தி இன்னும் கொஞ்சம் எலுமிச்சை சாறு குடிக்க வைத்தார்கள். சக்தி முருகனின் உடைக ளைக் கொண்டு வந்து கொடுக்க இரண்டு பேராக சேர்ந்து அவனை குளிக்கவைத்து உடையை மாற் றிவிட்டார்கள். எந்த மறுப்புமில்லாமல் கதிர் ஒரு சவத்தைப்போல் அவர்களுக்கு ஒத்துழைத்தான். அவன் அம்மாவிற்குத் தெரிந்தால் சங்கடப்படுவா ளென்பதால் யாரும் அவளுக்குத் தகவல் சொல் லவில்லை. “வெளியூர் வேலைக்குப் பொற நேரத் துல இந்த அண்ணே ஏன் இப்பிடி செய்யிது?” எரிச் சலோடும் வருத்தத்தோடும் சக்தி புலம்பினாள்.

குளித்துவிட்டு வந்தபிறகு கதிருக்கு கொஞ்சம் தெளிச்சியாய் இருப்பது போலிருக்க முருகன் சக்தியிடம் மோர் கொண்டு வரச்சொல் லிக் கொடுத்தான். கதிருக்கு உடலில் தெம்பில்லா மல் விரல்கள் நடுங்கின. கை கால்களில் தோல் வறண்டு போயிருந்தது. முருகனோடுதான் இருக் கிறோமென்கிற சுயநினைவு இருந்தாலும் உடனடி யாக அங்கிருந்து வெளியேற முடியாதளவிற்கு கதி ரின் உடல் அவனை முடக்கியிருந்தது. அவன் வீட் டிலேயே சுருண்டு படுத்துக் கொண்டான். முருகன் கிளம்பிப் போய் கதிரின் வீட்டில் அவன் காலை யில் வருவதாக தகவல் மட்டும் சொல்லிவிட்டு வந் தான். இரவும் பகலும் தொடர்ந்து உறங்கியிருந்த தால் கதிருக்கு உறக்கம் பிடிக்கவில்லை. பசி உட லின் சகல செல்களையும் சூழத் துவங்கியது. ஆகா ரம் எடுத்துக் கொள்ள முடியாதபடி வருத்தும் இந்த வலியை என்ன செய்வதென்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. சக்தியிடம் கொஞ்சம் தயிர் சாதம் கேட்டு வாங்கிச் சாப்பிட்டான். ஆறுதலாய் இருந் தது. குடித்துச் செத்திருக்கலாம். மீண்டு வாழ்வது எல்லாவற்றையும் கிளறிவிடுமோ என நினைக்க வைத்தது. யாரோடும் எதுவும் பேசாமல் பழையபடி தனது இடத்தில் படுத்துக் கொண்டவன் நள்ளிர வில் முருகனும் சக்தியும் அவனுக்குக் கேட்டுவிடக் கூடாதென்கிற எச்சரிக்கையோடு சன்னமான குர லில் சண்டையிட்டுக் கொள்வதைக் கேட்டு விழித் துப் பார்த்தான். “நீ எதும் சொன்னியா? எதுக்கு அந்தண்ணெ இப்பிடி சாகற மாதிரி குடிச்சிருக்கு? எனக்கு ஒன்னும் சரியாப் படல.” அவள் கோவமும் சந்தேகமும் சேர்ந்து அழுதாள். “ஏய் இல்லடி. அவ

னுக்கு இன்னும் வெளிநாட்டு வேலைக்குப் போற துக்கு முழு விருப்பம் இல்ல. அதுக்காகத்தான் இப் பிடி செஞ்சுட்டு இருக்கான்." முருகன் தனக்குத் தெரிந்த எல்லா சமாதானங்களையும் சொல்லிப் பார்த்தான்.

"பிடிக்கலைன்னா எதுக்கு இவ்ளோ காசு செலவு பண்ணி கூட்டிட்டுப் போற? பேசாம இங்கியே விட் டுட்டுப் போ."

"இங்க இருந்தான்னா நாசமாப் போயிருவான். மறுபடியும் பொட்டலம், டவுன்ஹால் ரோட்னு போனான்னு நல்லா இருக்காது. அதுக்காகத்தான் இவ்வளவும் செஞ்சுட்டு இருக்கேன்."

"அது வாழ்க்கை ல அதுக்கே அக்கற இல்ல. அப்ப றம் நாம என்ன செஞ்சு என்ன?"

சக்திக்கு கதிரின் மீதிருந்த அன்பெல்லாம் வெறுப் பாக மாறிக் கொண்டிருந்தது.

"எல்லாம் சீக்கிரமே சரியாப் போயிரும். நீ அவங் கிட்ட எதையும் கேக்காம இரு." பேசியவாறே முரு கன் அடிக்கொருதரம் இவன் படுத்திருக்கிறானா எழுந்துவிட்டான என கவனித்துக் கொண்டான்.

"போதும் மாமா, நம்மளுக்கும் தேவைகள் இருக்கு. பாப்பா வளந்துட்டு இருக்கா. நம்ம வாழ்க்கைய கவனிப்போம். நீ காலாகாலத்துல மலேசியாவுக்கு கெளம்பப் பாரு." அவள் பேச்சை வளர்க்காமல் படுக்கச் சென்றுவிட்டாள். அவ்வளவையும் கேட் டுக் கொண்டிருந்த கதிர் எந்த முடிவுகளையும் எடுக்க முடியாத குழப்பத்தோடு கண் கலங்கி னான். தனக்காக எந்த எல்லைவரை உடன் நிற்க முருகன் துணிந்திருக்கிறான் என்பது கதிருக்கும்

புரிந்தது, ஆனால் தன்னோடு பகையில்லாத அப் பாவி ஜீவன்களை கொல்ல வைத்ததை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. இன்னொரு வகையில் அவன் சொன்னதும் சரிதான். தான் இப்போது பாவங்களுக்கு பழக்கப்பட்ட ஒருவன். கொலை மட்டுந்தான் பாவமா என்ன? எத்தனை மனங் களை நோகடித்திருப்போம்? எத்தனை துரோ கங்களை சாதாரணமாக செய்திருப்போம்? இத் தனை பாவங்களை செய்ய முடியுமென்றால் ஒரு கொலையை செய்ய என்ன தயக்கம்? ஒருவேளை கொல்லப்படுகிறவன் தன் தகப்பன் என்பதால் நேரும் அச்சமா இது? இல்லை அந்த மனி தன் அதற்கான தகுதியை ஒருநாளும் கொண் டிருந்ததில்லை. காரணங்களைக் கண்டடையும் நிலையில் அவனில்லை. ஆனால் அவரை இனி கொலை செய்துவிடமுடியுமென களைத்துப் போன அவனது மனது உறுதியாய் இப்போது நம்பி யது.

யாரோடும் பிணைத்துக் கொள்ள முடியாத தனிமை கதிரை நிதானப்படுத்தியது. தகப்பன்க ளின் துரோகங்களால் உருவாகும் பகையை குற் றவுணர்ச்சிகள் வென்றுவிடக் கூடாது. இயற்கை யிடமும் கடவுளர்களிடமும் இந்த ஒன்றைத்தவிர எதையும் தனக்கென வேண்டியிருக்காதவனுக்கு அதை முழுமையாக அடைவதற்கு முழு உரிமைக ளும் உள்ளதாக நம்பினான். ஒருவனை கொலை செய்வதாக நினைக்கும் ஒவ்வொரு முறையும் சம்பந்தப்பட்டவன் கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கிறான். மனம் அதைத்தான் விரும்புகிற தென்றால் அது நிஜம். கொல்லப்பட்ட மனிதன்

ஏதோவொரு வகையில் கொன்றவனின் அகத்தில் ரணங்களையும் வடுக்களையும் உருவாக்கி இருந்தால் அந்த ரணத்திற்கான மருந்து வெறுப்புதான். அன்பு செய்வதன் மூலம் ஒரு மனிதன் தன்னை முழுமையானவனாய் மாற்றிக்கொள்ள முடியுமென்பதெல்லாம் எல்லா பொய்களை விடவும் பெரிதான பொய். சிலரை வெறுப்பதுதான் அவர்களுக்கு செய்யும் மரியாத. சற்றே தணிந்திருந்த அழகர்சாமியின் மீதான வெறுப்பு இவனுக்குள் மீண்டும் அக்கினிக் குழம்புகளாய்க் கொப்பளித்தன. விஜி அண்ணனின் அப்பாவும், கொல்லப்பட்ட இருபத்தி நான்கு நாய்களும் சாக முடியுமென்றால் அழகர்சாமி ஏன் சாகக்கூடாது. சொல்லப் போனால் உயிர்வாழத்தான் ஏதாவதொரு காரணம் தேவையாய் இருக்கிறது. சாவதற்கு எந்தத் தேவைகளும் இல்லை. முருகனின் மீதிருந்த கோவமெல்லாம் மறைந்து போயிருந்தாலும் அவன் முன்னைப் போலவே இப்போதும் தனக்கு பக்கபலமாய் இருப்பானா என கதிருக்கு சந்தேகம். அவனாக எதுவும் இதுவரை பேசவும் இல்லை. அன்று காலை சக்தி பார்க்க வந்திருந்தாள். அவள் சொல்லித்தான் முருகன் முழு வீச்சில் தன்னை வேலைக்குத் தயார் செய்து கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்டான். “எல்லாத்தையும் விட்டுட்டு காலகாலத்துல கெளம்புண்ணே. நல்லாத்தான இருக்க. திடீர் திடீர்னு உனக்கு கிறுக்கு புடிச்சிக்கிருமா?” என இவன் தலையில் அடித்தாள். “இனிமே எந்தக் கிறுக்கும் பிடிக்காது. அவன எல்லா ஏற்பாடும் பண்ணச் சொல்லு. நான் பொழுசாயமா வீட்டுக்கு வாரேன்.” என சொல்லியனுப்பினான்.

மூன்று நாட்களுக்குப்பிறகு கதிருக்கு உடலும் முகமும் பழைய நிலைக்கு திரும்பியிருந்தது. எந்த உணர்ச்சிகளையும் பிரதிபலிக்காத நிதானமான கண்கள். முருகன் எளிதில் அவனை நம்புவதாய் இல்லை. "வேணாம்டா கதிரு. இப்போ எங்கூட கிளம்பி வா. அடுத்த வாட்டி வரும்போது பாத்துக்கலாம். " என மாற்று வழிகளைச் சொன்னான். "இல்லடா முருகா. நான் தெளிவா இருக்கேன். சில வேலைக்கு பலம் மட்டும் போதாது சூதும் வேணும்னு இப்பதான் புரியுது. இந்தவாட்டி பிசிறடிக்காது." உறுதியாகச் சொன்னான். "சரி அப்ப என்ன செய்யலாம்னு நீயே சொல்லு." இந்தமுறை எல்லாவற்றையும் அவன் பொறுப்பில் விட்டுவிட நினைத்தான். "நீ நாம ரெண்டு பேரும் கெளம்பறதுக்கான ஏற்பாட செய்யி. ஊருக்குப் போறதுக்கு மொத நா ராத்திரி முடிச்சு விட்றலாம்." இதைச் சொன்னபோது கதிரால் சின்னதாய் சிரிக்கக் கூட முடிந்தது. தனக்கு எது தேவை என்பதில் அவன் தெளிவான முடிவுகளை எடுத்திருக்கலாம். முருகனுக்கு அவனின் மனவுறுதியைப் பார்க்க மகிழ்ச்சியாய் இருந்தது.

பத்து நாட்களில் அவர்கள் திருச்சி விமான நிலையத்திலிருந்து கிளம்புவதாக ஏற்பாடு. பயணத்திற்கான எல்லாம் தயாராகி இருந்தது. இப்போதைக்கு இந்த உலகில் தனக்கு செய்வதற்கு இருக்கும் வேலை ஒன்று மட்டுந்தான் என்பதால் அந்த நாட்களின் ஒவ்வொரு நிமிடமும் அதை எப்படியெல்லாம் செய்வதென ஒத்திகை பார்க்கத் துவங்கினான். நூறாயிரம் குறுங்கத்திகளும், அரிவாள்களும் கொண்டு வெட்டலாமா?

அவன் முன்னால் அழகர்சாமியின் உரு எப்போ தும் இவன் வெட்டுவதற்காகவே சுற்றிக் கொண்டி ருந்தது. அவன் ஒவ்வொரு முறையும் அந்த உரு வத்தின் ஒவ்வொரு பாகத்தை வெட்டினான். கை கால்கள் இல்லாமல் தலை இல்லாமல் அந்த உடலைப் பார்க்கும் போதெல்லாம் எழுந்த பரவ சம் அலாதியானது. முழு மனதோடு வெறுக்கும் ஒரு மனிதனை கொல்வதாக கற்பனை செய்வதே இத்தனை பரவசமானதென்றால் கொல்கிற அனு பவம் எத்தனை அலாதியானது? ஒரு மனிதனைக் கொல்வதிலிருந்து பின் வாங்கினாலும் அவனைக் கொல்வதாகத் தோன்றும் நினைப்பிலிருந்து ஒரு போதும் பின் வாங்க முடியாது. தன் கற்பனையில் சதாவும் ஒருவனை கொலை செய்து கொண்டே இருப்பவனுக்குத்தான் அந்த அனுபவத்தின் சுவா ரஸ்யம் புரியும். கதிர் தனியாக பாண்டி கோவிலுக் குச் சென்று சேவல் ஒன்றை பலி கொடுத்துவிட்டு வந்தான். "என்னடா எப்பப் பாத்தாலும் எதாச் சும் சாமிக்கு சேவலக் குடுக்கறேன், கெடா குட்டி குடுக்கறேன்னு போயிக்கிட்டு இருக்க?" அம்மா குழப்பமாய்க் கேட்டாள். "போற இடத்துல எல்லாம் நல்லபடியா இருக்கனும் அதுக்காகத்தான்" என கதிர் சிரித்தான். மதுவருந்துவதை தற்காலிகமாக நிறுத்தியிருந்ததால் சரியான உணவும் உறக்கமும் அவன் உடலிலும் முகத்திலும் நல்ல பொலிவை யும் தெளிச்சியையும் கொடுத்திருந்தது. முருக னின் பாப்பாவுக்கு கதிர் சேமித்திருந்த காசில் தங்கக் கொலுசொன்றை வாங்கிக் போட்டுவிட் டான். அவனைச் சூழ்ந்த எல்லோரின் சந்தோச மும் போதுமானதாய் இருந்ததால் இனி தன்னால்

எல்லோரிடமிருந்தும் சாதாரணமாக துண்டித்துக் கொள்ள முடியுமென நம்பினான். சேமிப்பிலிருந்த பணத்தை விடவும் இந்த உலகம் பிரம்மாண்டமானது. அதன் கதவுகளைத் திறந்து கண்ணுக்கெட்டிய தூரல் வரை எல்லைகளைக் கடந்து இனி அலைந்து திரிய வேண்டும். ஆகாயத்திலிருந்து பூமிக்கு பாயும் நீர் வெள்ளம் நதியாகி கடல் சேர்ந்து பின் மீண்டும் வானில் கலந்து மழையாவது போல் கதிர் நீரின் முகமாக விரும்பினான். எல்லாவற்றிலிருந்தும் துண்டித்துக் கொள்ளப் பழகியவன் நீரின் சாட்சி. நீர் எல்லோருக்குமானது. யாரோடும் நிரந்தரமாய் இல்லாதது. கதிரும் அப்படித்தான். அலைந்து திரியும் நீர்வெளியாய் தன்னை உருமாற்றிக் கொள்ளத் துவங்கியிருந்தான்.

பயணத்திற்கு முந்தைய நாள் மாலையில், சக்தி தனம் கதிரின் அம்மா மூவரும் திருச்சிக்கு கிளம்பிச் சென்றார்கள். கதிரும் முருகனும் அழகர்சாமியிடம் சொல்லிக் கொண்டு வருவதற்காக மேலூர் சென்றார்கள். இருவருக்கும் பயணப்பை முதுகில் கனத்தது. கதிர் கூடுதலாக பகையையும் சுமந்து கொண்டிருந்ததால் அவன் சுமை இரு மடங்கானதாய்த் தெரிந்தது. வழியில் ஆயாவிடம் தகவல் சொல்வதற்காக சென்றார்கள். ஆயாவுக்கு இவன் அழகர்சாமியைப் போலில்லாமல் நல்ல முறையில் பிழைக்கப் போகிறான் என்பதில் சந்தோசம். திருநீரு பூசிவிட்டு ஆசிர்வாதம் செய்தது. என்ன தொழிலுக்குப் போனாலும் நல்லா வருவடா. உங்க தாத்தன் திறமசாலி ஆனா கோழ. உங்கப்பனுக்குத் திறம இல்ல ஆனா முரடன். உங்கிட்ட தேவையான எல்லாம் இருக்கு.

எங்க போனாலும் மனுஷ மக்கள அனுசரிச்சு இருந்துக்க.” மனப்பூர்வமாய் அனுப்பி வைத்தாள். பறவைகள் பறக்காத வானின் திசையில் அவர்கள் அழகர்சாமியின் வீட்டை நோக்கி நடந்தார்கள். மரங்களின் அசைவில்லை. இதமான காற்றோ, குளிர்ச்சியோ எதுவுமில்லாத வறண்ட நாளின் இரவு. சோம்பேறித்தனத்தில் நாய்கள் கூட அமைதியாய் இருந்தன. தங்களின் வருகையை முன்பே முருகன் அவரிடம் சொல்லி இருந்ததால் அழகர்சாமியும் அவர்களுக்காக காத்துக் கொண்டிருந்தார். கதிருக்கு அந்த வீடு இந்தமுறை புதிதாகத் தோற்றமளித்தது. அழகர்சாமியோடு வாழ்ந்து கொண்டிருந்த பெண்ணை தயக்கமில்லாமல் சின்னமா என்று அவனால் கூப்பிட முடிந்தது. முருகனுக்கு இவன் ஒருவேளை சமாதானமாய்ப் போய் விடுவானோ என்கிற சந்தேகம். அந்தப் பெண்ணிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டபோது அவளுக்கு சந்தோசத்தில் கண்ணீர்த் துளிகள் பெருக்கெடுத்தன. சாமி படத்திற்கு முன்னால் இருந்து செலவுக்கு வைத்துக் கொள்ளச் சொல்லி நூறு ருபாயக் கொடுத்தாள். மறுக்காமல் வாங்கிக் கொண்டான். “அப்பா நாங்க ஒன்னும் வாங்கிட்டு வரல. பஸ்ஸுக்கு நேரம் இருக்கு. எங்களோட வந்திங்கன்னா சாப்ட்டுட்டு நாங்க அப்டியே கௌம்புவோம். நீங்க வீட்டுக்கு வரத் தோதா இருக்கும்.” வெளியில் அழகர்சாமியிடம் பேசிக் கொண்டிருந்த முருகன் சத்தமில்லாமல் அவரிடம் சொன்னான். சரியென சொன்ன அழகர்சாமி “இந்தாம்மா நான் பயகல போயி வழியனுப்பி விட்டுட்டு வாரேன். நீ படுத்துக்க. அத்த வீட்ல ஒரு சின்ன வேல இருக்கு,

நான் அங்க போயிட்டு வர லேட்டாயிரும். நீ கதவ சாத்திட்டு படுத்துக்க." வீட்டிற்குள்ளிருந்த அந்தப் பெண்ணிடம் சொன்னார். வாசலில் இருந்த தனது பையை எடுத்துக் கொண்ட கதிர் அவர்களோடு சேர்ந்து கொள்ள அந்தப் பெண் மூவரும் இருளில் சென்று மறைவதை வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

மதுக்கடையின் கூட்டத்தில் இவர்களுக்கு அமர இடமில்லை. "நாம பக்கத்துல தோப்புக்கு போயிருவம்யா." அழகர்சாமி தான் யோசனையைச் சொன்னார். "லேட் ஆகிருமேப்பா." முருகன் தயங்க. "அட அதெல்லாம் ஆகாதுய்யா. பத்து நிமிச தூரம் தான்." என சிரித்தார். மதுக்குப்பியையும், தண்ணீர், பிளாஸ்டிக் டம்ளர்கள், கோழி இரைச்சி என எல்லாவற்றையும் பெரிய பையில் அவர் எடுத்துக் கொண்டு முன்னால் நடக்க இவர்கள் நிதானமாகத் தொடர்ந்து சென்றார்கள். சிவகங்கை செல்லும் சாலையில் கொஞ்ச தூரம் நடக்க அவர்களைச் சூழ்ந்திருந்த வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து இப்பொழுது முழுக்க இருள் மட்டுமே சூழ்ந்திருந்தது. பையைத் தூக்கிக் கொண்டு நடந்த இருவருக்கும் வியர்த்தது. சில நிமிடங்களில் வயல் வெளியோடு இறங்கிச் சென்ற ஒரு பாதையில் அவர்கள் இறங்கி நடந்தார்கள். ஆளற்ற தென்னந்தோப்பில் மோட்டார் ரூமில் ஒரேயொரு மஞ்சள் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. விளக்கு வெளிச்சத்தின் கீழ் தங்களுக்கான இடத்தை அமைத்துக் கொண்டு மூவரும் அமர்ந்து மதுவருந்தத் துவங்கினார்கள். "எங்கப்பன் தான் கடல் தாண்டிப்போயி வெளங்காம போனான். என்

புள்ள நல்லா வரட்டும். ஒரு நா பொழுதுன்னாலும் கடல் தாண்டிப் போகனுங்கறது குடும்பத்தோட ராசி. அதான் அவனுக்கும் வாச்சிருக்கு." அழகர் சாமி தன்னை நோக்கி சிரிப்பதையும் பேசுவதை யும் பார்க்க கதிருக்கு எரிச்சலாய் இருந்தது. மூன் றாவது சுற்றுக்குப் பிறகு அவர் எழுந்து சிறுநீர் கழிக்க கிணற்றின் பக்கமாய் நடந்தான். நீண்ட நேர மாய் அமைதி காத்துக் கொண்டிருந்த கதிர் பொறுக்க முடியாமல் எழுந்து கொண்டான். எழுந்த வேகத்தில் மோட்டார் ரூம் வாசலில் ஓரமாய்க் கிடந்த மண்வெட்டியை எடுத்துக் கொள்ள மறக்க வில்லை. கிணற்றிற்கு புறமுதுகு காட்டி தென்னம ரத்திடியில் நின்று சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த அழகர்சாமியின் தலையில் ஓங்கி அடி விழுந்த போது அவர் நிதானிக்க முடியாமல் மரத்தொடு சரிந்தார். திரும்பிப் பார்க்கும் அவகாசம் கூட கொடுக்காமல் கதிர் அடுத்தடுத்தென அடித்துக் கொண்டே இருந்தான். அவரின் தலையிலிருந்து குருதி கொப்பளிக்க வலியை வெளிப்படுத்தும் திராணியின்றி கீழே விழுந்து கிடந்த அவர் ஸ்தம் பித்துப் போய் அவனைப் பார்த்துக் கொண்டிருந் தார். வாழ்நாள் முழுக்க அவமானப்படுத்தப்பட்டவ னின் இருதயம் எத்தனை குரூரமானதென்பதை அழகர்சாமி பல காலம் மற்றவர்களுக்கு காட்டிக் கொண்டிருந்தார். இப்பொழுது அவரது மகன் அவ ருக்குக் காட்டிக் கொண்டிருந்தான். அடிப்பதை நிறுத்திவிட்டு அவரை பிடித்து இழுத்தான். கனத்த அவரின் உடலை இழுக்க சிரமமாய் இருக்க, அழ கர்சாமி சுதாரித்து அவனை இழுத்து கழுத்தை நெறிக்கப் பார்த்தார். சத்தம் கேட்டு ஓடிவந்த முரு

கன் தாமதிக்காமல் கத்தியை அவரின் கழுத்தில் இறக்கினான். அவருக்கு நரம்புகள் இழுத்துக் கொண்டன. கதிர் அவரிடமிருந்து தன்னை விடு வித்துக் கொண்டு எழுந்தான். இருவருமாகச் சேர்ந்து அவரை கிணற்று மேட்டில் இழுத்துப் போட்டார்கள். அழகர்சாமியின் உடல் வெட்டி வெட்டி இழுத்தது. கதிர் அவரின் கழுத்திலிருந்து கத்தியை உருவி இருதயத்தில் குத்தினான். ஒரு நொடி சகல இயக்கமும் நின்று அவரின் உடல் அமைதியானது. உடலின் வெவ்வேறு பாகங்களில் இருந்து குருதி கசிந்து வெளியேற அவரின் மூச் சின் வேகம் மட்டும் சீராகக் குறைந்து கொண்டிருந் தது. கதிர் நடந்து போய் தன் பையிலிருந்து இன் னொரு பெரிய கத்தியை எடுத்துக் கொண்டு வந் தான். கறிக்கடையில் ஆட்டிறைச்சியை வெட்டப் பயன்படுத்தும் கத்தி. எத்தனையோ ஆடுகளின் உடல்களை துண்டு துண்டாய் வெட்டி குருதிக்குப் பழக்கப்பட்ட அந்தக் கத்தி பெரும் பசியோடு அவன் கையில் இறுகிக் கொண்டது. திரும்பி வந்த கதிர் இருதயத்திலிருந்த கத்தியை உருவ அவர் ஒருமுறை நீண்ட மூச்சை இழுத்து விழுந்தார். கண் கள் மட்டும் இப்போது திறந்திருந்தன. கையிலி ருந்த பெரிய கத்தியால் அவரின் ஒரு கையை வெட் டினான். ஒன்று இரண்டென வெட்ட வெட்ட அவ னது இத்தனை கால வெறுப்பும் விஸ்வரூபமெடுக் கத் துவங்கியது, ஆயிரம் கைகளும், பல நூறு தலை களும் கொண்ட அசுரனாய் ஒவ்வொரு கைக்கும் ஒவ்வொரு வெட்டு என்கிற மூர்க்கத்தோடு வெட்டி னான். அந்தக் கை துண்டான போது இன்னொரு கையை வெட்டத் துவங்கினான். முருகனுக்கு அவ

னது அந்தத் தோற்றத்தைப் பார்க்க உடலெங்கும் அச்சம் ஊர்ந்து எலிகள் சதைகளைப் பிய்த்து தின்பது போலிருந்தது. தடுக்கும் தைர்யமில்லாமல் ஓடிப்போய் மோட்டார் ரூமிற்குள் ஒளிந்து கொண்டான். கதிர் இரண்டாவது கையையும் வெட்டி எடுத்து ஒவ்வொரு கையையும் திசைக்கொன்றாக தூக்கி எறிந்தான். திறந்திருந்த கண்களின் வழியாய் துண்டாடப்படும் தன்னுடலை சலனமின்றி பார்த்துக் கொண்டிருந்த அழகர்சாமியின் கழுத்தில் கத்தியை வைத்தபோது சொரக்காபட்டி பாறச்சாமியின் கோயிலில் பலி கொடுக்கப்பட்ட ஆடுகளின் நினைவு வந்தது. இதுவும் ஒருவித நேர்த்திக்கடன் தான். வாழ்நாள் முழுமைக்குமான நேர்த்திக்கடன். தன்னை வாழ்வின் துயரங்களில் இருந்து நிரந்தரமாக விடுவிக்கப்போகும் அத்தனை கடவுகளர்களுக்கான பலி. அழகர்சாமியின் கண்களைப் பார்த்தபடியே வேக வேகமாய் அறுத்தான். சில நிமிடங்களில் அவரின் தலை அவன் கையோடு வந்தது. அந்தப் பகுதி முழுக்க கொலை செய்யப்பட்டுக் கிடந்தவரின் சூடான குருதி கசிந்து ஓடிக் கொண்டிருந்தது. கையிலிடுத்த தலையைத் தூக்கி எறிந்தான். இன்னும் ஒன்று மிச்சமிருக்கிறது. தனது இந்த பிறப்பிற்கும் இந்த இழிவுகளுக்கும் காரணமான அந்த ஒன்று. அதை அப்படியே விட்டுவிட்டுச் செல்வதா? கதிர் பள்ளத்தில் கிடந்த மண்வெட்டியை எடுத்தான். இறப்பை நோக்கி நகரும் போதே அழகர்சாமியின் குறி விரைப்பேறியிருந்தது. அவரின் வேஷ்டியை விலக்கியவன் ஓங்கி அடித்தான். ஒன்று இரண்டென பதினைந்து இருபது அடிகளுக்குப் பிறகு அந்த சின்னஞ்சிறிய வஸ்து முழுவதுமாக

நசுங்கிப் போனது. சத்தமாக ஆன்மாவின் அடியா ழத்திலிருந்து கத்த வேண்டும் போலிருந்தது. கத் தியை கிணற்றுக்குள் தூக்கிப் போட்டுவிட்டு தண் ணீர் தொட்டியிலிருந்து நீரள்ளி தன்னை சுத்தப்ப டுத்திக் கொண்டான். அவன் தூக்கி எறிந்த கத்தி குருதியின் தடயங்களை கொஞ்சம் கொஞ்சமாய் அழித்துக் கொண்டு ஆழம் நோக்கி நீந்தியது. நீண்ட கால பகை குடித்த குருதியின் சின்னஞ்சிறு அடையாளங்கள் விடுபட முடியாமல் அப்போதும் கைப்பிடியிலு நுனியிலும் உறைந்திருக்க 'இனி தனக்கான தேவை இருக்கப் போவதில்லை என் கிற விடுதலை உணர்வோடு அந்த கத்தி தரைதட் டியது. குருதிக்கறை படிந்த உடையைக் களைந்து நிர்வாணமாய் முருகனைத் தேடி வந்த கதிர் பயந்து மோட்டார் ரூமிற்குள் ஒடுங்கியிருந்தவனை இழுத் தணைத்துக் கொண்டான். அவன் இதழ்களில் சந் தோசமாய் முத்தமிட்டான். இந்த உலகில் தனக் கான அன்பை காதலை விடுதலையை எல்லாவற் றையும் தயக்கமின்றி தந்த அவன் மீதான அன்பு பொங்கி வழிந்தது. இப்படியானதொரு முத்தத் திற்கு நீண்ட காலம் காத்திருந்த முருகன் அவ னோடு கலந்து உருகினான். தென்ன மரக் காற் றின் பெருஞ் சத்தமும் குளுமையும் சேர முருக னின் உடல் இப்பொழுது கதிருக்கு தேவையாய் இருந்தது. தன் நாவுகளால் கதிரின் நரம்புகள் ஒவ் வொன்றினுள்ளும் ஒளிந்து கிடந்த காமத்தைத் தேடித்தேடி தூண்டியபின் நெருப்பில் குழைந்த அக்கினிக் கட்டியை சுவைக்கத் துவங்கினான். கதி ருக்கு வெறுப்பும் வன்மமும் பகையும் இப்பொழுது வியர்வையாய் கசிந்து வெளியேறியது. உடல் தனது

அத்தனைக் கண்களையும் திறந்து உலகைப் பார்க்கத் துவங்கியது. சுவைத்துக் கொண்டிருந்தவனை விலக்கி அவனது கொழுத்த பின்புறங்களில் புணரத்துவங்கினான். நூறு பெண்களின் மார்புகளும் யோனியும் ஒரு சேர தரும் பரவசத்தை முருகனுடனான அந்தப் புணர்ச்சி அவனுக்குத் தந்தது. தன்னால் இந்த நெருப்புத் தீண்டலில் இருந்து ஒருபோதும் விடுபட முடியாதென முருகன் ஆழ்ந்து அவனோடு கரைந்தான். எல்லாம் முடித்துக் கொண்டு முருகனின் முதுகில் களைத்து ஓய்ந்தபோது கதிருக்கு இனி தான் செய்வதற்கு எதுவுமில்லை என்கிற விடுதலையுணர்வு பெரும் இளைப்பாறுதலைத் தந்தது. கொலை செய்யப்பட்ட உடலை அப்படியே விட்டுவிட்டு அவர்கள் உடைமாற்றிக் கொண்டு புத்தம் புது மனிதர்களாய் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர். வயல் வெளியிலிருந்த எலிகள் இருளில் குருதி வாடை தேடி அழகர்சாமியின் உடலைத் தேடி வந்தன. கதிரும் முருகனும் அந்த தேசத்திலிருந்த பறந்து போயிருந்த அடுத்த நாளின் அதிகாலையில் மேலூரிலிருந்து சிவகங்கை செல்லும் சாலையில், ஊரின் புறநகர்ப் பகுதியில் தெரு நாய்கள் கண்கள் இல்லாத ஒரு மனிதனின் தலையை உருட்டிக் கொண்டு ஆவேசமாய் விளையாடியதை ஊர்க்காரர்கள் அச்சத்தோடு பார்த்தார்கள்.

மஹா

நிர்வாணம்.

அகந்தை விலகிய கதிரின் மனம் தன்னைத்தானே காலி செய்து கொள்ளத் துவங் கியிருந்தது. ஆசைகளின் ஆயிரம் ரெக்கைகள் அவனிலிருந்து விலகியபின் பறக்கவே விரும்பாத பறவையாய் அவன் நதிக்கரை ஒன்றின் மரத்தில் அமர்ந்து நிதானமாய் உலகைப் பார்க்க நினைத் தான். உலகைக் கவனித்தலும் பார்த்தலும் வேறு வேறு. கவனிக்கும் போது ஒருவனது சிந்தனை யில் ஆசை அறிவு இலக்குகள் என நிறையத்து வங்குகிறது. வெறுமனே பார்க்கும் ஒருவன் எல்லா வற்றையும் கடக்கிறான், ஆனால் எதையும் எடுத் துக் கொள்வதில்லை. “எல்லாமே சுழற்சிதாண்டா கதிர். துவங்கின இடத்துக்கு திரும்பவும் வரனும்னு தோணும்போது யோசிக்காம என்னத்தேடி வா.” மலேசியாவிலிருந்து முருகன் இவனுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தான். அந்த சுழற்சி யில் அவனுக்குத் தற்காலிகமாக விருப்பமில்லை. நோம்ப்பென் நகர இதமான வெயில் அவனுக் குப் புதிதானதாய் இருந்தும் அந்த ஊரோடு சடா ரென ஒரு நெருக்கத்தை உணர முடிந்தது. தனது வருகைக்காக, தன்னை ஒருபோதும் பார்த்திராத

சிலர் காத்திருக்கிறார்கள் என்கிற உள்ளுணர்வு. மீகாங்க் ஆற்றைப் பார்த்தபடி இருக்கும் ஒரு இந்திய உணவகத்தின் மாடியில் தங்கிக் கொண்டான். நீரற்ற சின்னஞ்சிறிய ஆறுகளை மட்டுமே ஊரில் பார்த்துப் பழக்கப்பட்டவனுக்கு சமுத்திரத்தை ஒத்த இந்த பிரம்மாண்டமான ஆற்றைக் கவனிக்க வியப்பாய் இருந்தது. நீரின் பரப்பு பெருக பெருக அதன் பிரம்மாண்டம் அபூர்வமான அழகோடு மிளிரக்கூடியது. இரவும் பகலும் அவன் அந்த பிரம்மாண்டத்தில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்கும் எவரும் வெளியூர்க்காரனாக நினைக்க முடியாது. இரண்டு நாட்களுக்குப்பிறகு சென்றல் மார்க்கெட்டை ஒட்டியிருக்கும் பழைய செட்டித் தெருவிற்குச் சென்றான். அந்த வீதி முழுமையாய் மாறிப்போயிருந்தது. ஹோட்டல் இந்தியா என்ற பெயர் கூட ஒருவருக்கும் நினைவிருந்திருக்கவில்லை. காலம் நல்ல விஷயங்களை அடித்துக் கொண்டு போய்விட படுகொலைகளும் வன்முறையும் மட்டும் நினைத்துப் பார்க்கப்படுவது என்ன மாதிரியான முரண்? எந்த சிக்கல்களும் இல்லாமல் போயிருந்தால் ஒருவேளை தான் வாழ்ந்திருக்கவேண்டிய இடம் இதுவாகத்தான் இருந்திருக்குமோ என நினைத்தான். அந்த வீதியிலிருந்த எல்லோரும் தனக்கு உறவினர்கள் என்பதை அங்கிருக்கும் யாராவது ஒருவருக்கு புரிய வைத்துவிட துடித்தான். எல்லோரும் அவனைக் கடந்து சென்றார்கள். டுக்டுக் ஒன்று எடுத்துக் கொண்டு சில வீதிகள் தள்ளியிருந்த யோல் ஸ்ல்ங்கிற்குச் சென்றவனுக்கு

அது சிறைச்சாலை என்று மட்டுந்தான் இதுவ
ரையிலும் தெரிந்திருந்தது. அந்தப் பழைய கட்டி
டத்தை சுற்றி நகரின் முக்கிய பிரமுகர்களும் வணிக
மையங்களும் சூழ்ந்திருந்தன. அணுதிச் சீட்டையும்,
ஒருவர் மட்டுமே கேட்கும்படி வடிவமைக்கப்பட்ட
மொபைலோடு சேர்ந்த ஹெட்ஃபோனையும் வாங்
கிக் கொண்டு நுழைந்தான். கையிலிருந்த வரை
படமும் எந்த வரிசையில் செல்ல வேண்டுமென
அந்தக் கட்டிடம் முழுக்க போடப்பட்டிந்த எண்க
ளையும் தொடர்ந்து நடந்தான். "உங்கள் மனதை
தொந்தரவு செய்யும் பட்சத்தில் எந்த நிமிடத்திலும்
இதை நீங்கள் நிறுத்திவிடலாம்" என்னும் அறிவு
றுத்தலோடு குரல் அந்த வளாகத்திற்குள் நிகழ்ந்த
பல நூறு துயர் கதைகளை சொல்லத் துவங்
கியது. முதல் ப்ளோக்கை கடப்பதற்கு முன்பா
கவே கதிர் நிலைகுலைந்து போகத் துவங்கினான்.
தான் வன்முறையென நம்பிக் கொண்டிருந்தவை
களுக்கும் இங்கு நிகழ்ந்த வன்முறைகளுக்குமான
தூரம் அசாதாரணமானது. இதன் ஏதோவொரு
அறையில் தாத்தாவும் பாட்டியும் துன்புறுத்தப்பட்
டிருப்பார்கள், அல்லது இங்கேயே கொல்லப்பட்
டிருக்கலாம். அவன் காலடி வைத்த ஒவ்வொரு
அடியிலும் மனித சதைகள் சிதறிக் கிடக்கிற
பதட்டத்தை உணர்ந்தான். கொல்லப்பட்ட மனித
உடல்களின் மீது நடக்கிறோமென உடல் பதறியது.
ஏராளமான மனிதர்கள் எந்த பாவனைகளும் இல்
லாமல் ஒரு கதையைக் கேட்பது போல் நகர்ந்து
போய்க் கொண்டிருந்தார்கள். கதிரால் இரண்டா
வது ப்ளோக்கைக் கூட முழுதாக கடக்க முடிய
வில்லை. பாதியிலேயே அங்கிருந்து வெளியேறி

விட்டான். கொல்லப்பட்ட மனிதர்கள் அவனைத் தொடர்ந்து வருவது போலிருக்க திரும்பிப் பார்த்து அவ்வப்போது அவர்களை கையசைத்து துரத்தி விட்டான். சாலையில் யாருமில்லா வெளியில் ஒரு இளைஞன் தன்னைத் தொடர வேண்டாமெனச் சொல்லி கையசைத்து திரும்பிப் போகச் சொல் வதை நிறைய பேர் கவலையோடு பார்த்தார்கள்.

இரண்டு நாட்கள் அவன் அறையை விட்டு எங்கும் சென்றிருக்கவில்லை. மீகாங் ஆற் றைக்கூட பார்க்கும் திராணியில்லாமல் சுருண்டு கிடந்தான். உணவகத்திலிருந்த சுரேந்தர் இவ னுக்கு நேரந்தவறாமல் உணவளித்தார். திருச் சூர்க்காரர். நீண்ட நாட்களுக்குப் பிறகு புதிய ஆள் ஒருவன் தங்களோடு வந்து தங்கியிருக்கும் சந் தோசம் அவருக்கு. அவனுக்கும் உணவக அனு பவம் இருப்பதால் கடையில் வைத்துக் கொள் ளலாமென நினைத்தார். கதிர் எல்லாவற்றிலிருந் தும் விடுபட்டு வந்தது இன்னொன்றில் பிணைத் துக் கொள்வதற்காக அல்ல என்பதில் தெளிவாய் இருந்தான். சாலைகள் செல்லும் திசையெல்லாம் பயணம் என்பது மட்டுந்தான் அவன் இலக்கு. நிழ லுக்கும் ஓய்வுக்கும் ஒதுங்கலாம், ஆனால் தங்கிவி டக் கூடாது. இங்கிருந்தும் பயணம் செல்ல வேண் டும். ஆனால் அதற்கு முன்பு இன்னொரு வேலை மிச்சமிருந்தது. மூன்று நாட்களுக்குப்பின் நோம்ப் பென் நகருக்கு வெளியே இருந்த கொலைக் களத்தைப் பார்த்துவரக் கிளம்பினான். முன்னி லும் அதிர்ச்சிதரக் கூடிய இடமென சுரேந்தர் எவ் வளவோ எச்சரித்துப் பார்த்தார். அவன் அந்த வலிகளுக்கு தன்னை ஒப்புக் கொடுக்க விரும்

பினான். தன் முன்னோர்களின் குருதி குடித்த அந்த மண்ணை தவிர்க்கவோ விலகவோ தன்னால் முடியாதென உறுதியாய் இருந்தான். இங்கும் அதே முன் தயாரிப்புகள். அதே எச்சரிக்கை. வரைபடத்திலிருந்த கோட்டையும் எண்களையும் பார்த்து நடந்தபடி காதில் ஒலித்த கதைகளைத் தொடர்ந்தவனுக்கு ஒவ்வொரு இடத்தை தாண்டும் போதும் இருதயம் சுக்கு நூறாய் உடைந்தது. இந்த மனிதர்களின் ஆன்மா இன்னும் எத்தனை நூற்றாண்டிற்கு இந்தத் துயரிலிருந்து மீளப் போராடும். தன் சகோதரர்களைக் கொல்லும் எவர் ஒருவரும் சாத்தானை விடவும் கொடியவர்களே. ஒவ்வொரு சின்னஞ்சிறிய இடத்திலும் முன்னூறு பேர் நானூறு பேர் தோண்டி எடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட கணக்குகள் இறந்தபின் மனிதன் வெறும் எண்ணிக்கையாவென விரக்தியாய் நினைக்கச் செய்தது. சோர்ந்து போய் ஒரு மர பெஞ்சில் உட்கார்ந்தவன் தொடர்ந்து கதைகளைக் கேட்க முடியாமல் காதிலிருந்து ஹெட்ஃபோனைக் கழற்றி வைத்தான். அந்த இடம் இப்பொழுது சாதாரண பூங்காவைப் போல் தோன்றியது. இன்னொருமுறை கதைகளைத் தொடரும் துணிவில்லை. நுழையும் இடத்திற்கு அருகிலிருந்த உயரமான கண்ணாடி கோபுரத்தின் முன்னால் வந்து நின்றான். மனம் கலங்கி குருதி கண்ணீராய்க் கசிந்தது. கொல்லப்பட்ட லட்சக்கணக்கான மனிதர்களின் மண்டை ஓடுகள் ஆறேழு அடுக்குகளில் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. கொலை செய்யப்பட்ட எல்லோருக்காகவும் அழுதான். ஒரு நிமிடம் அழகர்சாமியின் நினைவு வர, அவருக்காக பரிதாபப்

பட்டான். அவரின் வாழ்க்கையில் காதல் இடம் பெறவில்லை: நம்பிக்கை இல்லை; வேறு எதுவும் இல்லை; ஆனால் கொலையில் கருணை இருந்தது, கருணை என்னும் ஒரு மாயவெள்ளம் அவரின் ஆன்மாவை நிறைத்தது.

இப்பொழுது அவரின் மீது வெறுப்போ பகையோ எதுவுமில்லை. கொஞ்சம் மஞ்சள் நிற மலர்களை வாங்கி அந்த கோபுரத்தில் பிரார்த்தனைக்கு வைத்துவிட்டு கண் மூடி பிரார்த்தித்தான். காதுகளுக்குள் கொலை செய்யப்பட்டவர்களின் மரண ஓலமும் கெமெர் ரோஜின் புரட்சிப் பாடல்களும் எதிரொலிக்க அவசரமாய்க் கண்களைத் திறந்து கொண்டான்.

சின்னதொரு ஓய்விற்குப்பின் திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டு நோம்ப் பென்னிலிருந்து கிளம்பிய கதிர் மீகாங் ஆற்றின் வழியாய் ஷியாம் ரீப் நோக்கிப் பயணித்தான். ஆட்கள் நிரம்பிட பழைய மோட்டார் படகு. நீரைக் கிழித்துக் கொண்டு சென்ற அதன் வேகத்தில் படகின் முடிவில் அமர்ந்திருந்த கதிரின் மீதும் இன்னும் சிலரின் மீதும் நீர் தெறித்தது. எல்லா நினைவுகளில் இருந்தும் அவனைக் காப்பாற்றிக் கொண்டு நதி இழுத்துச் சென்றது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை சூழ்ந்திருந்த நீர் எல்லாவற்றையும் மறக்கடிக்கச் செய்தது. நீரென்னும் பேருருவிற்குள் முழுமையாய்த் தொலைந்து போகத் துவங்கிய கதிர் ஊரிலிருந்து கிளம்பிய மனிதனாய் மாறினான். இந்த நீர் இப்படியே மேலெழுந்து தன்னைச் சூழ்ந்து கொண்டால் அது சந்தோசம் மட்டுமல்ல விடுதலை. ஆனால் நீர் எழுந்து வந்து தீண்டியதே ஒழிய

அவனை ஸ்வீகரித்துக் கொள்ளவில்லை. ஏழு மணி நேரங்களுக்குப்பின் ஷியாம் ரீப்பில் ஒதுங்கிய படகிலிருந்து ஆட்கள் இறங்கினார்கள். ஏராளமான் படகுகள் நிறுத்தப்பட்டிருந்த அந்த இடத்திலிருந்து பார்க்க மீகாங் ஆறு அந்த தேசத்தையே சூழ்ந்திருப்பது போலிருந்தது. சாலையை நோக்கிச் செல்வதற்காக திரும்பியவனின் காலடியில் எதிர் பாரத விதமாய் மீனொன்று மிதிபட்டு துடித்தது. அவசரமாய் கால்களை எடுத்துக் கொண்டவன் துடிக்கும் மீனையை சில நொடிகள் பார்த்தான். யாரும் தன்னை கவனிக்கவில்லை என்பதை ஒரு முறை உறுதி செய்துகொண்டபின் அந்தக் குட்டி மீனை ஓங்கி மிதித்துக் கொன்றான்.

இறக்கும் நேரம் (ஒரு ஜென் கதை)

ஜென் குரு இக்யூ சின்னப் பையனாக இருந்த போதே ரொம்பப் புத்திசாலியாக இருந் தார். அவருடைய ஆசிரியர் விலையுயர்ந்த தேநீர்க் கோப்பையை வைத்திருந்தார். அது அரிதான கலைப் பொருள். எதேச்சையாக இக்யூ அந்தக் கோப்பையை உடைத்து விட, அவர் பெரும் குழப் பத்தில் ஆழ்ந்தார். அப்போது ஆசிரியரின் காலடி ஓசைக் கேட்க, இக்யூ உடைந்துபோனச் கோப்பை யின் துண்டுகளைப் பின்னால் மறைத்துக் கொண் டார். அங்கு ஆசிரியர் வந்தபோது, இக்யூ கேட்டார் ; மக்கள் எதற்காக இறக்க வேண்டும்?"

"அது இயற்கை" என்ற வயதானவர் "ஒவ்வொன் றும் இரு கால அளவு வாழ்வது போல் இறக்கவும் வேண்டும்," என்றார். நொறுங்கிப்போன கோப்பை யைக் காட்டி, "உங்களுடைய கோப்பை இறப்பதற் கான நேரம் வந்தது. அது இறந்தும்விட்டது" என் றார் இக்யூ.